சுவாமி விவேகானந்தரின்
ஞான தீபம்

சுவாமிகள் பேசியும் எழுதியும்
அருளியவற்றின்
தமிழாக்கம்

சுவாமி விவேகானந்தரின்
ஞான தீபம்

சுவாமிகளின் நூற்றாண்டு விழாப் பதிப்பு

சுடர்-5

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் :: சென்னை-4

சென்னையில் மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண
மடத்துத் தலைவரால் வெளியிடப்பட்டது.

1847-ம் ஆண்டுச் சட்டப் பிரிவு XX-ன் படி
உரிமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

மை பதிப்பாளர்க்கே

XXII—5-65

சாதாரண பைண்டு ரூ. 5-00

அச்சிட்டோர்:
அம்ரா பிரஸ், சென்னை-6.

முன்னுரை

திருவளர்ந்தோங்கும் பரத மாநாட்டிலே அவதரித்து, குரு வருளும் திருவருளும் பெற்று, ஆணையால் ஊரையும் நாட்டையும் உலகத்தையும் தம்மைப் போலாக்கும் ஞான ஒளி பரப்பி உய் விக்கக் கருதினர் வீரமா குரவர் சுவாமி விவேகானந்தர். அவர் பரம் பொருளொடு மன்னிக் கிடந்து யோகத் துயிலில் அமர்ந்து அறிவுற்று விழித்தபின் மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு வேதாந்தச் சிங்கம்போல் மேலை நாடும் கீழை நாடும் திரிந்தார். சென்னையிலிருந்து சிக்காகோ பல்சமயப் பெருமன்றத்திற்குச் சென்று தொண்டாற்றத் தொடங்கிய காலை, இறைமைப் பண் பாம் அமுத ஆழியுட் புகுந்து முகந்துகொண்டு, நா வீறுடைய ஆசாரிய பதத்தில் ஏறினர். அருட்காளமுகில் வடிவாய் மெய்ப் போத ஒளியினை மின்னலென வீசினர். அகப்பகைகள் அஞ்சி நடுங்கி யொழியும்படி அம்முகில்போல் அதிர்ந்து, சார்ங்கம் உதைத்த சரமழை போலச் சொன்மாரியை அமெரிக்க நாட் டிலும் ஏனைய நாடுகளிலும் பொழிந்து மக்களை விழிக்கச் செய்து, சென்றவிடமெல்லாம் ஞான நற்பயிர் தழைக்கச் செய்து வந்தனர்.

அப்பெரியார் தமது மாபெருங் குரவரின் திருவடிக்கு இவ் வாறு ஞானச் சுடர் விளக்கேற்றும் பணியினில் ஈடுபட்டிருந்த போது அவரது திருவாயினின்றும் திருக்கரத்தினின்றும் வெளி வந்த ஞான மொழிகள் அத்தனையையும் திரட்டிப் பத்துத் தொகுதிகளாக்கித் தமிழ் உலகம் தழைக்குமாறு தமிழாக்கம் செய்து 'விவேகானந்தரின் ஞான தீபம்' எனப் பெயரிட்டுப் பத்துச் சுடர்களாக வெளியிடும் நோக்கம் பூணலானோம்.

மேலை நாட்டு விஜயத்திற்குப்பின் சுவாமிகள் தாய் நாடு மீண்டபொழுது அன்பர்களோடு அவர் நிகழ்த்திய சம்பாஷணை களும் நிருபரொடு அவர் பேசிய பேச்சுக்களும் ஐந்தாம் சுடராய் மிளிர்கின்றன. இவ்விரு பகுதிகளையும் மொழிபெயர்த்து உதவியவர் முறையே ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தரும், ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகனும் ஆவார். "பௌத்தச் சார்புள்ள இந்தியா" என்ற பகுதியை ஸ்ரீ ரா. ராமகிருஷ்ணன் என்பவர் மொழி பெயர்த்து உதவினர்.

இந்நூலைத் தமிழ்த் தாயின் தாளிணையிலே ஆர்வத்தோடு சமர்ப்பிக்கின்றோம். விழிப்புற்ற தமிழகத்தார் இதனை மன முவந்தேற்று, சிரத்தையுடன் பயின்று, திருவருள் பெற்று இன்புறுவாராக.

பதிப்பாளர்.

பொருளடக்கம்

பக்கம்

I சம்பாஷணைகள் (சிஷ்யர்களால் எழுதி வைக்கப்பட்டவை)

1. சிஷ்யர் ஸ்ரீ சரத் சந்திர சக்கரவர்த்தி எழுதி வைத்த நாட்குறிப்பினின்று ... 1
2. ஸ்ரீ பிரியநாத் சிங்கர் 254
3. ஸ்ரீ சுரேந்திர நாத சேன் 290
4. ஸ்ரீ சுரேந்திர நாத தாஸ் குப்தர் ... 306
5. (அயல் நாட்டிலிருந்து)
   (1) ரயிட்டின் மனைவியார் 309
   (2) 'அப்பீல் அவலாஞ்'சிலிருந்து ... 314
   (3) 'டெட்ராய்ட்டு பிரீ பிரஸ்' ... 319
   (4) 'டெட்ராய்ட்டு டிரிபியூன்' ... 324

II நிருபரொடு பேசியவை

1. அற்புதங்கள் 329
2. லண்டன் மாநகரில் ஓர் இந்து யோகியார் ... 331
3. இந்தியாவின் ஞானப் பணி 335
4. இந்தியாவும் இங்கிலாந்தும் 342
5. இங்கிலாந்திற்கு இந்திய நாட்டுச் சமயத் தொண்டர் பணி 351
6. சுவாமி விவேகானந்தரோடு மதுரையில் ... 354
7. வெளிநாடும் உள்நாட்டுப் பிரச்சினைகளும் ... 359
8. மேலை நாட்டிற்கு முதன் முதல் ஓர் இந்திய சந்நியாசியார் புரிந்த ஞானப் பணியும், இந்தியாவிற்குப் புத்துயிரளிக்க அவர் கண்ட திட்டமும்... ... 369
9. நாட்டியல் அஸ்திவாரத்தின் மீது இந்துமத மறுமலர்ச்சி 377
10. இந்தியப் பெண்டிரின் பண்டைய, நிகழ் கால, எதிர்கால வாழ்க்கை ... 379
11. இந்து மதத்தின் வரம்புகளைப் பற்றிய பொருள் 384

III பௌத்தச் சார்புள்ள இந்தியா 388

IV பொருட் குறிப்பகராதி 421

சுவாமி விவேகான
சம்பாஷணைகள்

---

(1)

[இடம்: கல்கத்தாவிலே, பாக்பஜாரிலே, காலஞ்சென்ற பாபு பிரியநாத்து முகோபாத்தியாயருடைய வீடு. காலம் : 1897-ஆம் ஆண்டு.]

சுவாமிஜி மேலை நாட்டிலிருந்து திரும்பி வந்து கல்கத்தாவிலே தம் திருவடிகளை வைத்து மூன்று நான்கு நாட்களாகின்றன. நீண்ட காலத்துக்குப் பின்னர் அவருடைய திருமுன்னிலையிலே இருக்கப்பெற்ற பேற்றினாலே, ஸ்ரீராமகிருஷ்ணருடைய பத்தர்கள் அளவிறந்த ஆனந்தமுற்றிருந்தார்கள். அவர்களுள்ளே பொருள் படைத்தவர்கள் சுவாமிஜியைத் தங்களுடைய வீடுகளுக்கு அழைத்து விருந்து அருந்துவிக்கும் பாக்கியத்தைப் பெற நினைத்தார்கள். பாக்பஜாரிலே ராஜபல்லப்பாரா என்னும் இடத்திலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண பத்தராகிய ஸ்ரீயுத பிரியநாத்துமுகோபாத்தியாயருடைய வீட்டுக்கு இன்று பின்னேரம் சுவாமிஜி விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். இந்தச் செய்தி கேட்டு அனேக பத்தர்கள் அந்த வீட்டுக்கு வந்திருந்தார்கள். சிஷ்யரும் ஒருவாறாக அதனை அறிந்து, பிற்பகல் இரண்டரை மணியளவில் ஸ்ரீயுத முக்கர்ஜியினுடைய வீட்டை அடைந்தார். அவர் இதற்கு முன்பு சுவாமிஜியைக் கண்டறிந்ததில்லை. ஆதலினால், இதுவே அவர் சுவாமிஜியை முதல் முதல் சந்தித்த தருணமாகும்.

சிஷ்யர் வந்ததும் சுவாமி துரியானந்தர் அவரை அழைத்துச் சென்று சுவாமிஜிக்கு அறிமுகம் செய்துவைத்தார். சிஷ்யர் ஸ்ரீராமகிருஷ்ண தோத்திரமாக எழுதிய ஒரு பாடலைச் சுவாமிஜி கண்டிருந்தபடியால், முன்னமே பேலூர்த் திருமடத்திலே அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். மேலும், சிஷ்யர் ஸ்ரீராமகிருஷ்ணருடைய பேரன்பராகிய நாகமஹாசயருக்கு* அறிமுகமானவர் என்பதையும் சுவாமிஜி அறிந்திருந்தார்.

சிஷ்யர் சுவாமிஜியினுடைய திருமுன்னிலையிலே உடல் முழுதும் நிலத்திற் படிய வணங்கி ஆசனத்தமர்ந்தபின், சுவாமிஜி சம்ஸ்கிருத பாஷையிலே அவரோடு உரையாடி நாகமஹாசயருடைய

---

* துர்க்காசரண நாகமஹாசயர் என்னும் பெரியார், இல்வாழ்க்கையில் வாழ்ந்து தமது வாழ்க்கையிலே குருநாதராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மகத்துவத்தைப் பல வழிகளிலே மிக அற்புதமாக விளக்கிக் காட்டினார்.

சுகத்தைப்பற்றி விசாரித்தார்; மஹாசயருடைய அரும்பெருந்துற வையும் அவருக்கு ஆண்டவனிடத்துள்ள அளவிறந்த பத்தியையும் பணிவையும் குறித்துப் பேசும் பொழுது,

வயம் தத்வான்வேஷாத் ஹதா:
மதுகர த்வம் கலுக்ருதி*

[''வண்டே, நாங்கள் உண்மைப் பொருளைத் தேடி வீணுயி னோம். நீயோ, சித்தி எய்தும் பாக்கியத்தைப் பெற்ருய்.'']

என்று கூறி, இந்த வாக்கியத்தை எழுதி நாகமஹாசயருக்கு அனுப்பும்படி பணித்தனர்; பின்பு பெரிய மக்கட்கூட்டத்திலே சிஷ்யரோடு சம்பாஷிப்பது வசதியில்லாதிருப்பதைக் கண்டு அவ ரையும் துரியானந்தரையும் மேற்குப் பக்கத்திலிருக்கின்ற ஓர் அறைக்கு அழைத்துச் சென்று, சிஷ்யரை நோக்கி, விவேக சூடா மணியிலிருந்து பின் வரும் சுலோகத்தை எடுத்துச் சொன்ஞர்:

மா பைஷ்ட வித்வன்தவ நாஸ்த்யபாய:
ஸம்ஸார ஸிந்தோஸ்தரணே அஸ்த்யுபாய:
ஏனைவ யாதா யதயோஸ்ய பாரம்
தமேவ மார்க்கம் தவ நிர்திசாமி.

[''அறிஞனே, பயப்படாதே! நீ அழிய வேண்டுவதில்லை; பிறப்பிறப்பு வடிவமாகிய கடலைக் கடப்பதற்கு வழிகளிருக் கின்றன. தியாகிகளாகிய பெரியோர்கள் இந்தச் சமுத்திரத் தைத் தாண்டிய மார்க்கத்தை நான் உனக்குக் காட்டுவேன்.'']

ஆசாரிய சங்கரர் இயற்றிய விவேக சூடாமணி என்னும் நூலைப் படிக்கும்படி சுவாமிஜி சிஷ்யருக்குக் கூறினர்.

இந்தச் சொற்கள் செவியிற்படுதலும், ''முறைப்படி தீக்ஷை பெற்றுக்கொள்வது நலம் என்பதைப்பற்றிச் சுவாமிஜி குறிப்பாகச் சொல்லுகிருரோ!'' எனச் சிஷ்யர் தம்முள்ளே ஆலோசித்தார். சிஷ்யர் வாழ்க்கையிலே வைதிக ஒழுக்கம் வாய்ந்தவர்; வேதாந்த சாத்திரம் வாசித்தவர்; வருணுசிரம தருமத்தில் மிகுதியும் பற் றுள்ளவர்; ஒரு குருவை வரித்துக்கொள்வதைப்பற்றித் தம்முடைய மனத்திலே இன்னும் ஒரு தீர்மானம் எய்தப் பெருதவர்.

வேறு வேறு விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது 'தரிசனி' என்னும் பத்திரிகையின் ஆசிரியராகிய நரேந்திரநாத சேனர் என்பவர் சுவாமிஜியைக் காண வந்திருப்பதாக ஒருவன் தெரிவித்தான். சுவாமிஜி அவரை அந்தச் சிறிய அறையினுள்

* சகுந்தலையினுடைய முகத்திலே அமர வந்த வண்டினை நோக்கி, துஷ்யந்த மகாராஜன் கூறுவதாகக் காளிதாசருடைய சாகுந்தலத்தில் காண்கிறது.

அழைத்து வரும்படி கட்டளையிட்டார். நரேந்திர பாபு உள்ளே புகுந்து, ஆசனத்தமர்ந்து, இங்கிலாந்தையும் அமெரிக்காவையும் பற்றிப் பலவேறு விஷயங்களைக் குறித்து விசாரித்தார். அவருடைய வினாக்களுக்கு விடையாகச் சுவாமிஜி பின் வருமாறு சொல்லுவாராயினார்:

''அமெரிக்கரைப் போன்ற அகன்ற சிந்தையும், விருந்தினரை ஓம்பும் குணமும், புதிய கருத்துகளை ஏற்றுக்கொள்ளும் உண்மை ஆவலும் உடைய மற்றொரு ஜாதியாரை உலகத்தில் எவ்விடத்திலும் காண முடியாது. எங்கெங்கு அமெரிக்காவிலே நான் வேலைகள் செய்தேனோ, அவ்வேலைகள் எல்லாம் என்னுடைய ஆற்றலினால் நிறைவேறின அல்ல. அமெரிக்காத் தேசத்து மக்கள் நல்ல சிந்தனையை உடையவர்கள். ஆதலினால், அவர்கள் வேதாந்தக் கருத்துகளை ஏற்றுக்கொண்டார்கள். ஆங்கிலேயரைப்போல நிலைப்போக்கான ஜாதியார் உலகத்திற் பிறர் எவருமில்லை. ஒரு புதுக்கருத்தை ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் எளிதிலே விரும்புவதில்லை. ஆனால், இடைவிடாது முயன்று ஒரு புதுக்கருத்தை அவர்களுடைய உள்ளத்திலே புகுத்திவிட்டால், அவர்கள் எவ்வழியாகவும் அதனை விட்டுவிடமாட்டார்கள். அத்தகைய நிலையான கடைப்பிடியை மற்றொரு ஜாதியாரிடத்துக் காண முடியாது. ஆதலினாலன்றோ வல்லமையிலும் நாகரிகத்திலும் அவர்கள் இவ்வுலகத்திலே மிகவுயர்ந்த பதவியை அடைந்திருக்கின்றார்கள் ?

''பயிற்றப்பட்ட போதகாசிரியர்கள் கிடைப்பார்களாயின், அமெரிக்காவைவிட இங்கிலாந்திலே வேதாந்தத்தை நிலைபெறுக நிறுவுவது வாய்ப்புடையதாகாதோ ?'' என வினவ, அதற்கு மறுமொழியாக, ''நான் வேலைக்கு அஸ்திவாரம் போட்டிருக்கிறேன். எதிர்காலத்திலே போதகாசிரியர்கள் நான் சென்ற வழியே சென்றால், நாளடைவிலே எவ்வளவோ வேலை முற்றுப்பெறும்'' என்று சுவாமிஜி சொன்னார்.

''இவ்வாறு சமய போதனை செய்வதனால் நமக்கு எதிர்காலத்தில் விளையக்கூடிய நன்மை எது ?'' என நரேந்திர பாபு வினவுதலும், அதற்கு மறுமொழியாகச் சுவாமிஜி பின்வருமாறு சொல்வாராயினார்:

''நமது நாட்டிலோ, வேதாந்த மார்க்கமாகிய பெரும்பொருள் ஒன்று மாத்திரமே இருக்கின்றது. மேலைத்தேச நாகரிகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, நம்மிடத்தில் வேறொன்றும் இல்லை என்றே சொல்லலாம். ஆனால், சமரச தர்மமாய் விளங்குவதும் எல்லா வகைக் கொள்கைகளையும் சமய சாதனைகளையும் பின்பற்றி நடக்கின்ற மக்களுக்கெல்லாம் சமத்துவ உரிமையை அளிப்பதுமாகிய இந்த வேதாந்த சாத்திரத்தை நாம் போதிப்போமானால், நாகரிகம் படைத்த மேலை நாடானது இந்தியாவிலே முன்

ளிலும் இந்நாளிலும் உள்ள அற்புதமாகிய ஆன்மிக வாழ்க்கையைப்பற்றி அறியும். இந்தச் சமயத்தை ஆராய்ந்து படிப்பதனுல், மேலை நாட்டினருக்கு நம்மீதுள்ள மதிப்பும் அநுதாபமும் அதிகரிக்கும்—இப்பொழுதே ஓரளவுக்கு இது நிகழ்ந்திருக்கின்றது. இவ்வழியில் நாம் அவர்களது மதிப்பையும் அநுதாபத்தையும் பெறுவோமாயின், அவர்களிடமிருந்து உலக வாழ்க்கைக்கு உபயோகமாகிய கலைகள் பலவற்றைப் பயின்றுகொள்ளலாம். அதனுல், வாழ்க்கைப் போராட்டத்துக்கு நம்மை மிகுதியும் தகுதியுள்ளவர்கள் ஆக்கிக்கொள்ள முடியும். அவர்கள் நம்மிடமிருந்து வேதாந்தத்தைப் பயில்வதனுல், தங்களது ஆன்மிக நன்மையை அடையக்கூடியவர்கள் ஆவார்கள்.''

''இத்தகைய கொடுக்கல் வாங்கல்களினுல் அரசியல் முன்னேற்றம் அடைவதற்கு ஏதாவது நம்பிக்கை உண்டா ?'' என நரேந்திர பாபு கேட்டார். அதற்குச் சுவாமிஜி பின் வருமாறு சொல்லுவாராயினர்:

''மேல் நாட்டார் விரோசனன்* என்னும் பெரிய வீரனுடைய மக்கள். அவர்கள் தங்களுடைய வலிமையினுலே பஞ்சபூதங்களையும் பாவைபோலக் கையில் வைத்து ஆட்டுகின்றுர்கள். அன்னுரோடு எதிர்த்துப் போராடும் பொழுது அத்தகைய பூத சத்திகளைக் கொண்டு நீங்கள் வெல்ல நினைப்பீர்களாயின், அவ்வெண்ணம் பெரும்பிழையாகும். ஒரு சிறு சிலை உருவம் ஹிமாலயத்தின் முன்னர் வைக்கப்படின் எவ்வாறு தோற்றுமோ, அவ்வாறு பூதசத்திகளை உபயோகப்படுத்துகின்ற நமது ஆற்றல் அவர்கள் முன்னிலையில் மிகச் சிறிதாகத் தோற்றும். என்னுடைய கருத்து என்னவென்று எண்ணுகிருயோ ? வேதாந்தத்திலுள்ள ஆழ்ந்த இரகசியங்களை மேலை நாட்டுக்குக் கற்பிப்பதனுல் நாம் வலிமை பொருந்திய அந்த ஜாதியாருடைய மதிப்பையும் அநுதாபத்தையும் பெறுவோம். ஆன்மிக சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் நாம் அவர்களுக்கு ஆசிரியர்களாய் இருப்போம். சடப்பொருள் சம்பந்தமான விஷயங்களில் அவர்கள் நமக்கு ஆசிரியர்களாய் இருப்பார்கள். இஃதன்றி, நம் மக்கள் தங்களுடைய ஆன்மிக வாழ்க்கையை அவர்கள் கையில் கொடுத்து, மேனுட்டாருடைய பாதத்தண்டை இருந்து சமய சாத்திரம் பயில நினைப்பார்களாயின், தோல்வியுற்றிருக்கின்ற நமது நாட்டு மக்கள் முற்றிலும் தோற்று

*விரோசனன் என்பவன் அசுரருடைய முதல் வேந்தன் என்பதும் உயர்ந்த வல்லமைகளை உடையவனுயிருந்தான் என்பதும் பழைய இந்திய கர்ண பரம்பரைச்செய்தி. ஆசுரிய தேசத்துப் புராணக் கதைகளைச் சமீபத்திலே ஆராய்ச்சி செய்தோர், ஆசுரிய சரித்திரத்திலே பழைய வமிசாவளிகளிலே 'விரோசுஸ்' என்னும் ஒரு மன்னன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கண்டுபிடித்திருக்கின்றனர்.

உயிர் துறந்தவராவார்கள். இரவு பகலாக 'இதனைத்தா; அதனைத் தா,' என்று அழுது புலம்புவதில் ஒரு நலமும் இல்லை. இரண்டு ஜாதியாருக்கும் இடையே இத்தகைய கொடுக்கல் வாங்கலினால் மதிப்பு அநுதாபம் என்னும் தொடர்பு வளர்ச்சியெய்துமாயின், அழுது புலம்பவேண்டியிராது; எல்லாம் தாமாகவே நடைபெறும். இவ்வண்ணம் சமயத்தை வளர்ப்பதனாலும் வேதாந்தத்தை அகலப் பரப்புவதனாலும் இந்த நாடும் மேலை நாடும் மிகவும் நன்மையை அடையும் என்பது எனது நம்பிக்கை. இதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அரசியல் வாதம் முக்கியமன்று என்பது எனக்குப் புலப்படுகின்றது. இந்த நம்பிக்கையைத் தொழிற்படுத்துவதற்கு என் வாழ்நாளைக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். இந்தியாவினுடைய நலத்தைப் பெறுவதற்கு வேறேதாவது வழி இருக்கிறதென நீ நினைத்தால், உன் இஷ்டப்படி செய்யலாம்.''

நரேந்திரபாபு சுவாமிஜியினுடைய கருத்துகள் யாவற்றையும் தாமும் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லிப் போய்விட்டார். சுவாமிஜியினுடைய வாக்கிலிருந்து வந்த மொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்த சிஷ்யர் ஆச்சரிய வயத்தராய், நோக்கிய கண் இமையாமல் சுவாமிஜியினுடைய ஒளி விளங்குகின்ற திருமேனியைப் பார்த்த வண்ணமாய் இருந்தார்.

நரேந்திரபாபு போன பின்னர், பசுக்களைப் பரிபாலிக்கிற சபை ஒன்றினுக்குரிய ஊக்கமுள்ள பிரசாரகர் ஒருவர் சுவாமிஜியைக் காணும்பொருட்டு வந்தார். அவர் தலையிலே காஷாயத் தலைப்பாகை அணிந்திருந்தார்; தோற்றத்தில் வடநாட்டினரைப் போலக் காணப்பட்டார். அவரது உடை ஏறக்குறையச் சந்நியாசிகளுடைய உடைபோன்றிருந்தது. அந்தப் பசு பரிபாலன சபைப் பிரசாரகர் வந்தார் என்று கேள்விப்பட்டதும் சுவாமிஜி சாலை அறைக்கு வந்தார். பிரசாரகர் சுவாமிஜியை வணங்கிப் பசுத்தாயினுடைய படம் ஒன்றினைச் சுவாமிஜிக்குக் கொடுத்தார். சுவாமிஜி படத்தைப் பெற்று அருகில் நின்ற ஒருவர் கையில் கொடுத்த பின்னர், பின் வரும் சம்பாஷணை நிகழ்ந்தது:

சுவாமி: உங்களுடைய சங்கத்தின் நோக்கம் என்ன?

பிரசாரகர்: நமது நாட்டிலுள்ள பசுத்தாய்களைக் கசாப்புக்காரரிடமிருந்து நாங்கள் பாதுகாக்கிறோம். நோயுற்ற பசுக்களும் வலியிழந்தனவும் கசாப்புக்காரர்களிடமிருந்து வாங்கப்பட்டனவும் பரிபாலிக்கப்படுவதற்காகப் பசு வைத்தியசாலைகளை ஏற்படுத்தியிருக்கிறோம்.

சுவா: அது மிக நல்லது. உங்கள் வருவாய்க்கு வழி என்ன?

பிர: உங்களைப் போன்ற பெரிய மனிதர் அன்போடு கொடுக்கின்ற கொடைகளைக்கொண்டே சபையின் வேலை நடந்து வருகின்றது.

சுவா: இப்பொழுது எவ்வளவு பணம் சேர்த்துவைத்திருக்கிறீர்கள் ?

பிர: இந்த முயற்சிக்கு மார்வாடி வணிகர் கூட்டம் சிறந்த உதவி புரிகின்றது. இந்த நன்முயற்சிக்காக அவர்கள் பெருந்தொகை கொடுத்திருக்கின்றார்கள்.

சுவா: மத்திய இந்தியாவிலே ஒரு கொடிய பஞ்சம் எழுந்து விட்டது. ஒன்பது லக்ஷம் மக்கள் பட்டினியால் இறந்தார்கள் என்று இந்திய அரசாங்கத்தார் செய்தி வெளியிட்டிருக்கின்றனர். இதற்கு உதவி புரிவதற்கு உங்களுடைய சபை ஏதாவது செய்திருக்கின்றதா ?

பிர: பஞ்சம் முதலிய துன்பம் வரும்பொழுது நாங்கள் உதவி புரிவதில்லை. எங்கள் சபை பசுத்தாய்களைப் பரிபாலிக்கும் பொருட்டே ஏற்படுத்தப்பட்டது.

சுவா: உங்களுடைய சொந்தச் சகோதர சகோதரிகளாகிய லக்ஷக் கணக்கான மக்கள் பஞ்சத்தினால் துன்பம் அடைந்து மரணத்தின் வாயில் விழும்பொழுது அவர்களுக்கு எவ்வழியிலாவது உணவளித்துக் காப்பாற்ற வேண்டுவது உங்கள் கடமை என நீங்கள் நினைக்கவில்லையா ?

பிர: இல்லை. இந்தப் பஞ்சம் மக்களுடைய பாவகருமத்தினாலே ஏற்பட்டது. கருமம் எப்படியோ, பயனும் அப்படியே.

பிரசாரகர் இந்த வார்த்தைகளைக் கூற, இவற்றைக் கேட்டுச் சுவாமிஜியினுடைய கண்களிலிருந்து நெருப்புப்பொறி பறப்பது போன்றிருந்தது; முகம் சிவந்தது. அவர் தம் சினத்தை அடக்கிக்கொண்டு, பின் வருமாறு சொல்லுவாராயினர்:

''தம்முடைய சொந்தச் சகோதரர் பட்டினியினால் இறக்க அவர்களுடைய உயிரைக் காப்பாற்றும்பொருட்டு ஒரு பிடி அரிசி கொடாமல், மனிதர்மேல் அநுதாபமின்றிப் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் குவியல் குவியலாக உணவைக் கொடுக்கின்ற இத்தகைய சபைகளில் நான் புகுவதில்லை. மக்கட்சங்கம் இவற்றினால் நன்மை அடைகிறதென நான் எண்ணவில்லை. மனிதர் தம் கருமத்தினால் இறக்கின்றனரென்று நீர் வாதிப்பீராயின், இவ்வுலகத்திலே எதைக் கருதியும் முயல வேண்டுவதில்லை என்பது தீர்மானமாகின்றது. விலங்குகளைப் பரிபாலிப்பதற்காக நீர் செய்கிற வேலையும் இவ்விதிக்குப் புறம்பாகாது. பசுத் தாய்களும் தம்முடைய கருமத்தினால் கசாப்புக்காரருடைய கையிலகப்பட்டு இறக்கின்றனவென்று சொல்லிவிட்டுச் சும்மா இருக்கலாமே ?''

பிரசாரகர் சிறிது நாணி, ''ஆம், நீங்கள் சொல்வது உண்மை. ஆனால், பசு நம் அன்னை என்று சாத்திரங்கள் சொல்லுகின்றனவே ?'' என்றார்.

சுவாமிஜி நகைத்துக்கொண்டே, ''ஆம், பசு நம் அன்னை

என்பதை நான் அறிந்துகொண்டேன்; இத்தகைய புத்திசாலி களான பிள்ளைகளை வேறு யார்தான் பெறுதல்கூடும்!'' என்றார்.

வடநாட்டுப் பிரசாரகர் அந்த விஷயத்தைப்பற்றிப் பின்பு ஒன்றும் பேசவில்லை. சுவாமிஜி கேலி பண்ணிய கருத்தை அவர் அறிந்துகொள்ளவில்லை போலும்! தமது சபைக்காக ஏதாவது உதவ வேண்டுமென்று அவர் சுவாமிஜியைக் கேட்டார்.

சுவா: நான் ஒரு சந்நியாசி; பக்கிரி; உமக்கு உதவி செய்ய எங்குப் பணம் பெறுவேன்? பணம் பெற்றாலும், முதலிலே மனித ருடைய சேவைக்காகச் செலவழிப்பேன். முதலிலே மனிதனுக்கு உணவு, கல்வி, ஆன்மிக வாழ்க்கை என்னும் இவற்றைத் தந்து காப்பாற்ற வேண்டும். அதற்குப் பின்பு ஏதாவது மிகுந்திருந்தால், உம்முடைய சபைக்குக் கொடுக்கலாம்.

இந்த வார்த்தைகளைக் கேட்டுப் பிரசாரகர் சுவாமிஜியை வணங்கிவிட்டுப் போய்விட்டார். பின்பு சுவாமிஜி எங்களை நோக்கிச் சொல்லுகிறார்:

''அந்த மனிதனுடைய சொற்களைப் பாருங்கள்! மனிதர் தமது கருமத்தினால் இறக்கிறார்கள் என்று சொல்லுகிறான். அவர் களுக்கு உதவுவதனால் என்ன பயன் என்கிறான். நாடு நாச மாய்ப் போய்விட்டதென்பதற்கு இது ஒரு தக்க சான்று. இந்துக் களுடைய கரும விசாரணை எவ்வளவு பழுதடைந்துவிட்டதென் பதைப் பாருங்கள்! மனிதருக்கு இரங்காத இதயமுள்ளவர்கள் இவர்கள். இத்தகையோரை மனிதர் என்று எண்ணலாமா?''

இந்த வார்த்தைகளைச் சொல்லும் பொழுது சுவாமிஜியி னுடைய உடல் துன்பத்தினாலே நடுங்கியது.

பின்பு புகை குடித்துக்கொண்டிருக்கும் பொழுது சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''நல்லது, நீ என்னை மறுபடி பார்'' என்றார்.

சிஷ்: ஐய, தேவரீர் எங்கே தங்குவீர்? ஒரு வேளை யாராவது பணக்காரருடைய வீட்டிலே தங்கலாம். என்னை அங்கே உட்புக விடுவார்களா?

சுவா: இப்பொழுது ஆலம்பஜார் மடத்திலாவது, காசிப் பூரிலே கோபால லால் சீலர் என்பவருடைய பூஞ்சோலை வீட்டிலா வது நான் இருப்பேன். இரண்டிடத்துக்கும் நீ வரலாம்.

சிஷ்: ஐய, தேவரீரோடு தனித்துப் பேசப் பெரிதும் விரும்பு கிறேன்.

சுவா: நல்லது, ஓர் இரவு வா; வேண்டுமட்டும் வேதாந்தம் பேசுவோம்.

சிஷ்: ஐய, சில ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் தேவரீ ரோடு வந்திருப்பதாக அறிந்தேன். என்னுடைய பேச்சையும் உடையையும் பார்த்து அவர்கள் வெறுப்படைய மாட்டார்களா?

சுவா: ஏன்? அவர்களும் மனிதர்கள்தாம்; வேதாந்த சாத்

திரத்திலே மிகுந்த பற்றுள்ளவர்கள்; உன்னோடு உரையாட விரும்புவார்கள்.

சிஷ்: ஐய, வேதாந்த சாத்திரத்திலே அதனைக் கற்பதற்குரிய அதிகாரிகளது இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறதே; இது தேவரீருடைய மேலை நாட்டு மாணவரிடத்து எப்படிக் காணக்கூடும்? 'வேத வேதாந்தங்களைக் கற்றவனாய், பாவங்களிலிருந்து நீங்கியவனாய், சாத்திரங்களிலே சொல்லப்பட்ட நித்திய நைமித்திக கருமங்களைச் செய்பவனாய், ஒழுக்கத்திலும் உணவிலும் தன்னடக்கமுடையவனாய், சாதன சதுஷ்டயங்கள் நிறைவெய்தியவனாய் உள்ளவன் மாத்திரமே வேதாந்த சாத்திரங்களைப் பயில உரிமை உடையவன்' என்று சாத்திரங்கள் மொழிகின்றன. தேவரீருடைய மேலை நாட்டு மாணவர்கள் முதலிலே பிராமணரல்லர்; உணவு உடை விஷயத்திலே கட்டுப்பாடு இல்லாதவர். அவர்கள் வேதாந்தத்தை எப்படி அறிந்துகொள்ள முடியும்?

சுவா: நீ அவர்களோடு உரையாடும் பொழுது, அவர்கள் வேதாந்தத்தை அறிந்திருக்கிறார்களா இல்லையா என்பதை உடனே உணர்ந்துகொள்ளலாம்.

சிஷ்யர் வைதிக மார்க்கத்தின் புற ஒழுக்கங்களை மாறுபாடின்றிக் கடைப்பிடித்து ஒழுகுபவர் என்பதைச் சுவாமிஜி ஒருவேளை இது வரையில் அறிந்திருக்கலாம். அதன் பின் சுவாமிஜி ஸ்ரீராமகிருஷ்ணருடைய பத்தர் குழாம் தம்மைப் புடை சூழ்ந்துவர, பாக்பஜாரிலே ஸ்ரீமத் பலராம் வசுவினுடைய மனைக்குப் போனார். சிஷ்யர் பத்தலம் என்னும் இடத்திலே விவேக சூடாமணி என்னும் புத்தகம் ஒன்றினை வாங்கிக்கொண்டு தார்ஜிப்பராவிலிருக்கும் தமது வீட்டை நோக்கி நடந்தார்.

(2)

[இடம்: கல்கத்தாவிலிருந்து காசிப்பூருக்குப் போகும் வழியும், காலஞ் சென்ற கோபாலலால் சீலருடைய பூஞ்சோலையும். காலம்: 1897-ஆம் ஆண்டு.]

இன்று நடுப்பகலில் சுவாமிஜி ஸ்ரீயுத கிரீஷ் சந்திரகோஷருடைய* வீட்டிலே இளைப்பாறிக்கொண்டிருக்கிறார். சிஷ்யர் வந்து அவரை வணங்கிய பொழுது, சுவாமிஜி கோபாலலால்சீலருடைய பூஞ்சோலை வீட்டிற்குப் போக ஆயத்தப்படுவதைக் கண்டார். வெளியே ஒரு வண்டி காத்து நின்றது. அவர் சிஷ்யரை நோக்கி, "நல்லது, என்னோடு வருகிறாயா?" என்றார். சிஷ்யர் சம்மதித்து, சுவாமிஜியோடு வண்டியிலேற, வண்டி புறப்பட்டது. அது சித்பூர்

---

* இவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பெரிய பத்தரும் வங்காள நாட்டிலே கீர்த்தி வாய்ந்த நாடக ஆசிரியரும் ஆவர்.

வழியாகப் போகும்பொழுது சுவாமிஜி உள் நோக்கிய சிந்தைய ராய், கங்கா நதியைப் பார்த்து,

'கங்காதரங்க ரமணீய ஜடாகலாபம்'†

எனத் தொடங்குகிற கீதத்தைப் பாடினார். சிஷ்யர் இசையினாலே வியப்புற்று மௌனமாகச் செவி சாய்த்துக்கொண்டிருந்தனர். சிறிது நேரம் கழித்துச் சுவாமிஜி, சித்பூர்ப் பாலத்தை நோக்கிச் செல்லுகிற ஒரு புகை வண்டியைப் பார்த்து, ''பாராய், சிங்கம் போல எவ்வளவு மேன்மையாக அது போகின்றது!'' என்றார். சிஷ்யர் மறுமொழியாக, ''அது சடப்பொருள். அதற்குப் பின் மனிதனுடைய அறிவு இருந்து இயக்குகிறபடியால் அஃது இயங்கு கின்றது; அப்படி இயங்குவதனால் அதற்கு ஏற்பட்ட பெருமை என்ன?'' என்றார்.

சுவா: நல்லது. அப்படியானால், அறிவுக்கு அடையாள மென்ன?

சிஷ்: ஏன், ஐயா, எது புத்தியினால் தொழில் செய்கின்றதோ, அது அறிவுள்ளது.

சுவா: எது இயற்கையை எதிர்த்துப் போராடுகின்றதோ, அது அறிவுள்ளது. அங்கே அறிவுக் குணம் தோற்றமாகிறது. ஒரு சிற்றெறும்பைக் கொல்ல முயல்வாயாயின், அது தானும் தனது உயிரைக் காப்பாற்ற வேண்டி உடனே எதிர்த்து நிற்பதைக் காண் பாய். எங்குப் போராட்டமுண்டோ, எங்கு எதிர்ப்பு இருக்கிறதோ அங்கு உயிரின் அடையாளமுண்டு. அங்கு அறிவுத்தன்மை வெளிப்பட்டுத் தோன்றுகின்றது.

சிஷ்: ஐய, மனிதனிடத்தும் மக்கட் சமுதாயத்தினிடத்தும் இந்தச் சோதனை பொருந்துமோ?

சுவா: அது பொருந்துமோ பொருந்தாதோ என்பதை அறிய வேண்டுமாயின், உலக சரித்திரத்தைப் படித்துப் பார். உங்கள் ஜாதியாரைவிட மற்றெல்லோருக்கும் அது பொருத்தமாக இருப் பதை நீ காண்பாய். நீங்கள் மாத்திரந்தான் இவ்வுலகத்திலே சடப் பொருளைப் போலக் குப்புற விழுந்து கிடக்கின்றீர்கள். நீங்கள் மயக்க நித்திரையிலிருக்கிறீர்கள். பழைய காலந்தொட்டுப் பிறர் உங்களை நோக்கி, ''நீங்கள் பலவீனர்கள். உங்களுக்கு ஆற்ற லில்லை'' என்று கூறினார்கள். நீங்களோ, அதனை ஏற்றுக்கொண்டு, சென்ற ஆயிர வருட காலமாக, ''நாங்கள் வறியவர்கள்; ஒன்றுக் கும் உதவாதவர்கள்'' என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். (தம்முடைய உடலைச் சுட்டிக்காட்டி) இந்த உடலும் உங்க ளுடைய நாட்டு மண்ணிலிருந்துதான் பிறந்தது! ஆனால், நான்

† இது ''கங்கை நீரின் அலைகள் விளையாடுகின்ற அழகிய சடாபாரத்தை உடையவர்'' என விசுவநாதரைக் குறித்து வியாசர் பாடிய கீதம்.

ஒரு பொழுதும் அத்தகைய எண்ணங்களைக் கொள்ளவில்லை. ஆதலினலே, ஆண்டவனுடைய அருளினுல் உங்களைக் கீழானவர், வலியற்றவர் என்று சொல்லுகின்ற மாந்தரும் என்னைத் தெய்வம் போல மதித்துப் போற்றினர்; இன்னும் போற்றுகின்றனர். எல்லையற்ற வலிமையும், எல்லையற்ற ஞானமும், வெல்ல முடியாத ஆற்றலும் உன்னுள்ளே இருப்பதாக நீ நினைப்பாயாயின், அந்த வலிமையை நீயும் வெளிப்படுத்தலாம்; நீயும் என்னைப்போலாகலாம்.

சிஷ்: ஐய, அவ்வண்ணம் நினைப்பதற்கு எங்களால் முடியுமா? குழந்தைப்பருவம் முதல் எங்களுக்கு அவ்வண்ணம் கூறி நாங்கள் தெளிந்துகொள்ளும்படி செய்யும் ஆசிரியன் எங்கே? நாங்கள் இது வரையிற் கேட்டதும், கற்றதும், கல்வி பயிலுவதற்கு நோக்கமாகக் கொண்டதும் ஏதாவது நல்ல வேலையைப் பெறுகின்ற எண்ணந்தான்.

சுவா: ஆதலினலேதான் மற்ருெரு போதனையோடும் முன் மாதிரியோடும் நாங்கள் முன் வந்திருக்கிறேம். ஆதலினலே, உண்மையை எங்களிடமிருந்து கேட்டுச் சிந்தித்துத் தெளிவாயாக; பின்பு அவ்வுண்மையை நகரங்களிலும், கிராமங்களிலும், எவ்விடத்திலும் பரப்புவாயாக; ''எழுந்திருங்கள், விழித்துக்கொள்ளுங்கள், இனிமேல் உறக்கம் கொள்ளாதீர்கள்; உங்களுடைய வறுமைகளையும் துன்பங்களையும் நீக்குதற்குரிய பெரிய சத்தி உங்கள் உள்ளே இருக்கிறது; இதை நம்புங்கள். அப்பொழுது அந்தப் பெரிய சத்தி உங்களிடத்தில் வெளிப்பட்டுத் தோற்றும்'' என்னும் இந்த உண்மையை எவ்விடத்துக்கும் போய் எல்லோருக்கும் போதிப்பாயாக; இதனைப் போதிப்பதோடு எளிய மொழியிலே பொது மக்களுக்கு விஞ்ஞான சாத்திரம், தத்துவ சாத்திரம், பூகோள சாத்திரம், இதிகாசம் என்னும் இவற்றின் உள்ளுறை உண்மைகளைப் பரப்புவாயாக. மணமாகாத வாலிபர்களைக் கூட்டி இதற்கென ஒரு நிலையத்தை ஏற்படுத்தலாம் என்று நான் எண்ணியிருக்கிறேன். முதலிலே நான் அவர்களுக்குக் கற்பிப்பேன். பின்பு அவர்கள் மூலமாக இந்த வேலை நடக்கும்.

சிஷ்: இதற்குப் பெருந்தொகையான பணம் வேண்டுமே! பணம் எங்கிருந்து கிடைக்கும்?

சுவா: நீ என்ன பேசுகிருய்? மனிதனே பணத்தை உண்டு பண்ணுகிருன். பணம் மனிதனை உண்டுபண்ணியதென்று எங்கேயாவது கேள்விப்பட்டாயா? உன்னுடைய எண்ணங்களையும் சொற்களையும் பூரணமாக ஒன்றுபடுத்துவாயாயின், அவ்வண்ணமே சொல்லையும் செயலையும் ஒன்றுபடுத்துவாயாயின், பணம் சோனுமாரியாக உன் காலண்டை வந்து விழும்.

சிஷ்: நல்லது ஐயா, பணம் வருகிறதென்று வைத்துக்கொள்வோம். தேவரீர் அந்த நன்முயற்சியைத் தொடங்கிவிட்டீர்-

ஆனால், அதனால் ஆவது என்ன? இதற்கு முன்பு எத்தனையோ பெரிய மனிதர்கள் எத்தனையோ நன்முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இப்பொழுது எங்கே? தேவரீர் தொடங்கப் போகின்ற வேலைக்கும் நிச்சயமாக அந்த முடிவுதான் வரும். ஆதலால் அத்தகைய முயற்சியினால் வருகின்ற நன்மை என்ன?

சுவா: எதிர்காலத்தில் என்ன நேருமென்று கணக்கிட்டுக் கொண்டிருப்பவன் ஒன்றையும் செய்து முடிக்கமாட்டான். எது உண்மையானது, எது நல்லது எனத் தெளிந்துகொண்டாயோ, அதனை உடனே செய். எதிர்காலத்திலே எது நேரும் எது நேராது என்று கணக்கிட்டுக்கொண்டிருப்பதனால் வருகிற நன்மை என்ன? வாழ்க்கையோ, மிகச் சுருங்கியது. பலனைப்பற்றிக் கணக்கிட்டுச் சோதிடம் பார்த்துக்கொண்டிருந்தால், ஏதாவது செய்து நிறைவேற்றக்கூடுமா? ஆண்டவன் ஒருவனே பலனை அளிப்பவன். அதை அவன் கையில் விட்டுவிடு. உனக்கு அதைப்பற்றி ஏன் கவலை? அந்தப் பக்கமே பார்க்க வேண்டா. செய்யவேண்டுவதைச் செய்துகொண்டு போ.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போது வண்டி பூஞ்சோலை வீட்டிற்கு வந்துவிட்டது. கல்கத்தாவிலிருந்து அநேகர் சுவாமிஜியைப் பார்க்கும் நோக்கமாகச் சோலைக்கு வந்திருந்தனர். சுவாமி வண்டியிலிருந்து இறங்கி வீட்டினுள்ளே சென்று ஆசனத்திலமர்ந்து எல்லாரோடும் உரையாடத் தொடங்கினார். சுவாமிஜியினுடைய மேல் நாட்டுச் சீடராகிய **குட்வின்** அண்டையில் வர, இருவரும் சுவாமிஜியைப்பற்றிப் பல திறப்பட்ட உரையாடல்களை நடத்திக்கொண்டிருந்தனர்.

மாலையிலே சுவாமிஜி சிஷ்யரை அழைத்து, ''கடோபநிஷதத்தை மனப்பாடம் பண்ணியிருக்கிறாயா?'' என்றார்.

சிஷ்: இல்லை ஐயா, அதனைச் சங்கரபாஷியத்தோடு வாசித்து மாத்திரமிருக்கிறேன்.

சுவா: உபநிடதங்களுக்குள்ளே அதைவிட அழகான நூலைக் காணமுடியாது. நீங்கள் எல்லோரும் அதனை மனப்பாடம் பண்ணவேண்டுமென்று நான் விரும்புகிறேன். வீணில் வாசிப்பதனால் ஆவது என்ன? உங்களுடைய வாழ்க்கையிலே நசிகேதனுடைய சிரத்தை, தைரியம், விவேகம், துறவு என்னும் இவற்றைக் கொண்டுவர வேண்டும்.

சிஷ்: இவற்றை யான் பெறும்பொருட்டுத் தேவரீர் என்னை ஆசீர்வதிப்பீராக!

சுவா: ''கருணையின் காற்று வீசுகின்றது. நீங்கள் உங்கள் கப்பலின் பாயை விரிக்கவேண்டுவதுதான்,'' என ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லியதை நீ கேள்விப்பட்டதில்லையா? இளைஞனே, உண்மை அநுபவத்தை ஒருவர் மற்றொருவரிடத்துப் புகுத்துதல்

கூடுமா? அவனவன் விதி அவனவன் கையிலே இருக்கின்றது. விதையின் வலிமையினுல் மரம் வளருகிறது. காற்றும் தண்ணீரும் துணை புரிகின்றன.

சிஷ்: ஆனுல் ஐய, வெளியிலுள்ள உதவியும் தேவைப்படு கின்றதே?

சுவா: ஆம், தேவைப்படுகின்றது. ஆனுல், உள்ளே பொருள் இல்லாவிட்டால், புறத்துணை எவ்வளவு இருப்பினும் ஒரு பயனும் எய்தாது என்பதை அறிந்துகொள்வாயாக. ஒவ்வொருவருக்கும் ஆன்ம ஞானத்தை அடைவதற்குரிய காலம் வருகிறது. ஏனெ னில், ஒவ்வொருவரும் பிரம்மமாயிருக்கின்றனர். அந்தப் பிரம்மம் வெளிப்பட்டுத் தோன்றுகிற அளவைக் குறித்தே ஏற்றத் தாழ்ச்சி ஆகிய வேறுபாடு ஏற்படுகின்றது. காலப்போக்கிலே ஒவ்வொருவரும் பூரணத்தை அடைவர். ஆதலினுலன்றே சாத்திரங்கள் ''**காலே ஞத்மனி விந்ததி**'' [''காலகதியிலே, அது உள்ளத்திலே அடையப் படுகின்றது,''] எனக் கூறுகின்றன?

சிஷ்: ஆனுல், ஐயா, அது எப்பொழுது நிகழப் போகின் றது? எத்தனையோ பிறவிகளை அஞ்ஞானத்திற் கழித்தோம் என்று சாத்திரங்கள் கூறுகின்றனவே?

சுவா: அச்சம் எதற்கு? இம்முறை நீ இங்கு வந்திருக்கின் ருய். ஆதலினுல், எய்தவேண்டிய பெரும்பேற்றினை இந்த வாழ்க் கையிலேயே அடைவாய். மோக்ஷம் அல்லது சமாதி பிரம்மத்தை வெளிப்படுத்துவதற்கு ஏற்பட்ட தடைகளை நீக்கிவிடுவதிலே தங்கி யிருக்கின்றது. ஆன்மா ஞாயிறுபோல என்றும் ஒளிவிட்டுக்கொண் டிருக்கிறது. அஞ்ஞானம் என்னும் திரை அதனை மறைத்திருக் கிறது. '**பித்யதே ஹ்ருதய க்ரந்தி**—இருதயத்தின் முடிச்சுகள் அறுந்துபோகின்றன' என்பது முதலாகச் சொல்லப்படும் நிலை வந்து எய்துகின்றது. நீ காண்கின்ற பல்வேறு வழிகள் எல்லாம் வழியிலுள்ள தடைகளை நீக்கிவிடும்படி சொல்லுகின்றன. ஒருவன் தான் ஆன்ம ஞானத்தை அடைந்த வழியினை அனை வருக்கும் போதிக்கின்ருன். ஆனுல், எல்லோரும் அடைய விரும்பு கின்ற இலக்கு ஆன்மஞானமே. எல்லா மனிதரும், எல்லாப் பிராணிகளும் அதற்குச் சம உரிமையுடையராய் இருக்கின்றனர். இந்தக் கருத்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவது.

சிஷ்: ஐய, இந்த வார்த்தைகளைக் கேட்கும் பொழுதும், சாத்திரங்களிலே வாசிக்கும் பொழுதும், 'ஆன்ம ஞானத்தை நாம் அடைந்திலமே!' என்னும் எண்ணமானது மனத்திற்குத் துயரத் தைத் தருகின்றது.

சுவா: இதுதான் 'முத்தியை விரும்பும் அவா' என்று சொல்லுவது. இது எவ்வளவுக்கு வளருகின்றதோ, அவ்வளவுக் குத் தடைகள் நீங்குகின்றன; நம்பிக்கை உறுதியாக நிலைக்கின்

றது; படிப்படியாக ஆன்மஞானம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல எய்தப்படுகின்றது. இத்தகைய ஞானமே சமய அநுஷ்டானத்துக்கு உயிர் போன்றது. வெளி அநுஷ்டானங்களை யாருங் கடைப்பிடித்து ஒழுகலாம். விதி விலக்குகளை எல்லோரும் நிறைவேற்றலாம். ஆனல், முத்தி அடையவேண்டும் என்னும் அவா எத்தனை பேருக்கு உண்டு? ஆன்மஞானத்தை அடைவதற்கும், ஆண்டவனுடைய அடியிணைகளைப் பெறுவதற்கும் விரும்பிப் பித்தராகும் ஆழ்ந்த இச்சையே உண்மையான ஆன்மிக வாழ்க்கையாகும். ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமாவிடத்துக் கோபிகள் வைத்திருந்த அளவிறந்த உன்மத்தம் போன்ற ஆசையைப்பற்றி நீ கேள்விப்பட்டதில்லையா? ஆன்மஞானத்தை அடைவதற்கும் அத்தகைய ஆழ்ந்த அவா வேண்டும். கோபிகளுடைய உள்ளத்திலும் ஆண் பெண் என்னும் வேறுபாடு தோற்றியது. உண்மை ஆன்மஞானத்தில் பால் வேறுபாடு சிறிதுமில்லை.

இப்படிப் பேசும்பொழுது சுவாமிஜி 'கீத கோவிந்தம்' என்னும் நூலைப்பற்றி சொல்லுவாராயினர்:

''ஜயதேவர் வடமொழிக்கவிவாணர்களுக்குள்ளே காலத்தினல் மிகப் பிற்பட்டவர். சுவையின் ஆழத்தைவிடச் சொல்லின்பத்தை மிகுதியும் கவனித்தார் எனினும், அவர் உண்மைக் கவிஞர். **'பததி பதத்ரே'*** எனத் தொடங்குகிற சுலோகத்திலே வரவு காத்திருக்கும் ஆர்வத்தையும், அன்பின் நிறைவையும், கவிஞர் எவ்வளவு கவின் பெறச் சொல்லுகிறர் என்று பார். உண்மையை உணர்வதற்கு அவ்வளவு அன்பு வேண்டியிருக்கின்றது. மனத்திலே நீடு நினைந்து இரங்குகிற ஆற்ருமை ஏற்பட வேண்டும். பிருந்தாவனத்திலே ஆடல் புரிந்த கண்ணனைப் பார்த்துவிட்டுக் குரு க்ஷேத்திரத்திலே நிற்கின்ற கண்ணனைப் பார். அதுவும் உள்ளத்திற்கு எவ்வளவு வியப்பைத் தருகின்றது! போர்க்களத்திலே நிகழுகின்ற பேரொலிகளுக்கிடையே கண்ணன் சாந்தத்தோடும் பொறுமையோடும் அசைவற்றிருக்கின்ருன்.

''போர்க்களத்திலே கண்ணன் அர்ஜுனனுக்கு க்ஷத்திரிய தருமமாகிய கீதையை உபதேசித்துப் போர் செய்யும்படி செய்கின்ருன். இந்தக் கொடிய யுத்தத்திற்குத் தான் காரணனுயிருந்தும், கண்ணன் கருமச்சார்பு இன்றி வாளாவிருக்கின்ருன். கண்ணன் ஆயுதமெடுக்கவில்லை. நீ எந்த வழியிலே நோக்கினுலும் கண்ணனுடைய பூரணத்துவத்தைக் காண்பாய். ஞானயோகம், கரும

---

* '' பததி பதத்ரே விசலதி பத்ரே சங்கித பவதுபயானம்
ரசயதி சயனம் ஸசகித நயனம் பச்யதி தவபந்தானம் ''

பறவை பறக்கும் பொழுதும் இலை அசையும் பொழுதும் நீ வருகிருய் என நினைக்கின்ருள்; நீ வரும் வழியைப் பார்த்தவண்ணமாக உனது சயனத்தைச் சீர்படுத்தி வைக்கின்ருள்.

யோகம், பக்தி யோகம் என்னுமிவை எல்லாம் ஓர் உருவெடுத்தாற் போன்று கண்ணன் விளங்குகின்ருன். ஸ்ரீகிருஷ்ணனுடைய இத் தன்மையை இக்காலத்திலே சிறப்புறக் கற்கவேண்டும். பிருந்தா வனத்திலே குழலூதிக்கொண்டிருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணனை இப் பொழுது தியானிக்க வேண்டுவதில்லை. அதனுல் மனிதருக்கு விடுதலை எய்தப் போவதில்லை. சிங்க முழக்கத்தோடு கீதையை உபதேசிக்கின்ற ஸ்ரீகிருஷ்ணன், வில்லும் அம்பும் ஏந்திய இராம சந்திரர், மகாவீரர், காளித்தாய் இவர்களை இப்பொழுது வழிபட வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் ஊக்கத்தோடும் திடபுத்தி யோடும் தொழில் செய்து வலிமை அடைவார்கள். இந்த நாட்களில் இந்த நாட்டிலே சமயத்தைப் போதிப்பவர்களுள்ளும் பேசிக்கொள் பவருள்ளும் பெரும்பாலார் மயக்கம் நிறைந்தவராய், மூளை கலங் கிப் பித்துப் பிடித்தவராய்க் காணப்படுகின்றனர். இந்த விஷ யத்தை நன்கு ஆராய்ந்தே இந்த முடிவுக்கு வந்தேன். ராஜச குணம் மிகவும் விருத்தியடைய வேண்டும். அல்லாவிடின், உங்க ளுக்கு இம்மை மறுமைப்பயன் கிடைக்கப் போவதில்லை. தேசமுற் றும் தாமசத்தினுல் மூடுண்டு கிடக்கின்றது. இம்மையில் அடிமை யும் மறுமையில் நரகமுமே இயற்கையாக இதனுல் ஏற்படும் பலன்கள்.

சிஷ்: மேலை நாட்டவரிடையே ரஜோ குணம் நிறைந்திருப்ப தனுல் அவர்கள் படிப்படியாகச் சத்துவ குணத்தை அடைவார்கள் என்று தேவரீர் எதிர்பார்க்கின்றீரா ?

சுவா: ஆம், நிச்சயமாக. ரஜோ குணம் மிகுந்திருப்ப தனுலே அவர்கள் போக அநுபவங்களிலே மிகுந்த உச்ச நிலையை அடைந்துவிட்டார்கள். வயிற்றுப் பசியாற்றுவதற்காக இங்குமங் கும் அலைந்து திரிகின்ற நீங்கள், யோகத்தை அடையப் போகின் றீர்களா, அல்லது அவர்கள் யோகத்தை அடையப் போகின்ருர் களா ? உள்ளபடி நினைத்துப் பார்.

அவர்களது நாகரிகம் மிகுந்த சுகாநுபவங்களை நினைக்கும் பொழுது **மேக தூத**த்திலே, '**வித்யுத்வந்தம் லலிதவநிதா:**'* என்று தொடங்குகிற வருணனை என் மனத்துக்கு வருகிறது. உங்க ளுடைய போகமோ என்ருல், அழுக்கடைந்த ஓர் அறையிலே கிழிந்த பாயிலே படுத்துக் கிடப்பதும், ஆண்டுதோறும் காட்டுப் பன்றியைப்போலச் சந்ததியைப் பெருக்குவதுந்தான். உணவின் றித் தவிக்கின்ற ஒரு கூட்டத்தை—பிச்சைக்காரரையும் அடிமை களையும்—இவ்வுலகத்தில் தோற்றுவிக்கின்றீர்கள். ஆதலினுலே

* வித்யுத்வந்தம் லலிதவநிதா: ஸேந்த்ரசாபம் ஸசித்ரா:
சங்கீதாய ப்ரஹ்ருத முரஜா: ஸ்நிக்த கம்பீரகோஷம்
அந்தஸ்தோயம் மணிமய புவஸ்துங்கமப்ரம் லிஹாக்ரா:
ப்ரஸாதாஸ்த்வாம் துலயிதுமலம் யத்ரதைஸ்தைர் விசிஷ்டை: ||

ரஜோ குணத்தை விருத்தி செய்து மக்களை ஊக்கத்தோடு தொழில் புரியும் தன்மையராக்குதல் வேண்டும். தொழில் செய், தொழில் செய், தொழில் செய். 'நான்ய:பந்தா வித்யதே அயனுய—மோக்ஷம் அடைவதற்கு இதைவிட வேறு வழி இல்லை.'

''ஓ மேகமே, அந்த நகரத்தின் மாளிகைகள், உன்னோடு ஒப்பிடத் தக்கன. இலட்சணங்களில் ஒற்றுமை இருக்கின்றது. மின்னற்கொடி உன்னிடையே தோன்றுகிறதென்றால், அழகிய ஆபரணம் அணிந்த கன்னியர்கள் அவற்றினிடையே உலவுகின்றார்கள். உன்னிடத்தே இந்திர வில் உண்டு, எழுதப்பட்ட சித்திரங்கள் அவற்றிடையே உண்டு. அதிருகின்ற இடி முழக்கம் உன்னிடத்தே உண்டு; ஒலிக்கின்ற முரசங்கள் அவற்றிடையே உண்டு. தெளிந்த நீர் உன்னிடத்தே உண்டு; தெளிந்த இரத்தினங்களினால் அவற்றின் உட்புறம் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. நீ உயர இயங்குகின்றாய்; அவற்றின் மாடங்களும் விண்ணை அளாவுகின்றன.''

காளிதாசன் அளகாபுரியின் சுகானுபவங்களைப்பற்றி இவ்வண்ணம் சித்திரிக்கத் தொடங்குகிறான். முழு வருணனையும் இங்கு ஏற்புடைத்தாதலால், இதன்மேல் வருகின்ற சுலோகங்களையும் இக்குறிப்புச் சாரும்.

சிஷ்: ஐய, நம் முன்னோர்கள் இப்படிப்பட்ட ரஜோகுணத்தை உடையவர்களாய் இருந்தார்களா?

சுவா: ஏன், இல்லை? அவர்கள் எத்தனையோ பல நாடுகளிலே குடியேறினார்கள் எனவும், திபேத்து, சீனு, சுமத்திரா, தூரத்திலுள்ள ஜப்பான் முதலிய இடங்களுக்குச் சமய போதனை செய்யும் ஆசிரியர்களை அனுப்பினார்கள் எனவும் சரித்திரம் கூறுகின்றதே! ரஜோ குணத்தின் மூலமாக அன்றி முன்னேற்றத்தை அடைவதற்கு வேறு வழி உண்டென்று எண்ணுகிறாயா?

இங்ஙனம் உரையாடல் நடந்துகொண்டிருந்த பொழுது மாலைக் காலம் அணுகியது. அப்பொழுது **மிஸ் முல்லர்** என்னும் ஆங்கிலேய மாது அவ்விடத்துக்கு வந்தாள். அந்த அம்மை சுவாமிஜியைப் பெரிதும் மதிப்பவள். சுவாமிஜி சிஷ்யரை அவளுக்கு அறிமுகப்படுத்தி வைக்கச் சிறிது பேசிய பின்பு, மிஸ் முல்லர் மேன்மாடிக்குப் போய்விட்டாள்.

சுவா: அந்த அம்மை எவ்வளவு வீரம் பொருந்திய சமுதாயத்தில்இருக்கிறாள்பார்த்தாயா? அவளுடைய இல்லம் எவ்வளவோ தூரத்திலிருக்கிறது. அவள் ஒரு பணக்காரனுடைய புதல்வி. அப்படி இருந்தும், ஆன்ம ஞானத்தை அடையவேண்டும் என்ற ஒரு விருப்பத்தோடு எவ்வளவு தூரம் வந்திருக்கிறாள் பார்த்தாயா?

சிஷ்: ஆம், ஐயா, ஆனாலும் தேவரீர் செய்கின்ற முயற்சிகள் இதைவிட மிகச் சிறந்தன, எத்தனை மேல் நாட்டுத் துரைமார்களும்

துரைசானிகளும் தேவரீருக்குத் தொண்டு புரியும் விருப்பத்தோடு வந்து நிற்கின்றார்கள்? இந்தக் காலத்துக்கு இது மிகவும் அதிசயமே.

சுவா: (தம்முடலைச் சுட்டிக்காட்டி) இந்த உடல் நீடித்திருக்குமாயின், இன்னும் எத்தனையோ பல விஷயங்களைக் காண்பாய். நன்மனமும் ஊக்கமும் உடைய இளைஞர் சிலர் அகப்படுவராயின், நாடு முழுவதையும் புரட்டிவிடுவேன். அத்தகைய இளைஞர் சிலர் சென்னையிலிருக்கின்றனர் என்றால், எனக்கு வங்காளத்தில் பின்னும் அதிக நம்பிக்கையுண்டு. இத்தகைய தெளிந்த அறிவுடையவர்கள் மற்ற நாடுகளில் கிடைப்பதருமை. என்றாலும், தசைக் கட்டுகளிலே இவர்களுக்குப் பலமில்லை. மூளையும் தசைக் கட்டும் ஒன்றாக விருத்தி அடைய வேண்டும். இரும்பு போன்ற நரம்புகளும் கூரிய மூளையும் இருக்குமாயின், உலகம் முற்றும் உன்னடி பணிந்து நிற்கும்.

இரவு உணவு ஆயத்தமாகிவிட்டது என்னும் செய்தி சுவாமிஜிக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் சிஷ்யரை நோக்கி, ''எனது உணவை வந்து பார்,'' என்றார்; சாப்பிட்டுக்கொண்டிருக்கும் பொழுது சிஷ்யரைநோக்கி ''எண்ணெய் கொழுப்புப் பதார்த்தங்களை அதிகமாக உண்ணுவது நல்லதன்று. ரொட்டி, லூச்சியைவிட நல்லது. லூச்சி, நோயாளருடைய உணவு. மீனையும், நல்ல தாவரப் பொருள்களையும் உண்ணலாம். இனிப்புப் பண்டங்களைக் குறைவாகவே உண்ண வேண்டும்,'' என்றார். இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவர் சிஷ்யரைநோக்கி ''நான் எத்தனை ரொட்டி சாப்பிட்டேன்? இன்னும் சாப்பிட வேண்டுமா?'' என வினவினர். எத்தனை சாப்பிட்டாரென்ற ஞாபகம் அவருக்கு இல்லை; பசி தாகம் இருப்பதாகவும் தோற்றவில்லை. பேசிக்கொண்டிருக்கும் பொழுது தேக புத்தி குறைந்து போயிற்று. இன்னும் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு உணவை முடித்தார்.

சிஷ்யரும் விடைபெற்றுக்கொண்டு கல்கத்தாவுக்குத் திரும்பினர். வாடகைக்கு வண்டி கிடையாதபடியால் அவர் நடக்கவேண்டியிருந்தது. நடந்துபோகும் பொழுது அடுத்தநாள் எவ்வளவு விரைவாகச் சுவாமிஜியை வந்து பார்க்கலாம் என்னும் எண்ணமே சிஷ்யருடைய சிந்தனையில் பதிந்திருந்தது.

(3)

[இடம்: காசிப்பூரில் காலம் சென்ற கோபால லால சீலரின் பூஞ்சோலை வீடு.
காலம்: 1897-ஆம் ஆண்டு.]

முதல் முதல் மேல் நாட்டிலிருந்து திரும்பிய பின்பு சுவாமிஜி சில காலம் காசிக்பூரிலே காலம் சென்ற கோபால லால சீல

ருடைய வீட்டிலே வசித்தார். கல்கத்தாவில் படபஜாரில் வசிக்கும் பண்டிதர் சிலர் சுவாமிஜியோடு வாதம் புரியும் கருத்துடையவராய் ஒரு நாள் சோலைக்கு வந்தனர். அத்தருணத்தில் சிஷ்யரும் அவரோடு இருந்தார்.

பண்டிதர் எல்லோரும் நன்றாகச் சம்ஸ்கிருதம் பேசக் கூடியவராயிருந்தனர். தரிசனத்திற்கு வந்தோர் பலர் சூழவிருக்கும் சுவாமிஜியைக் கண்டு வந்தனை கூறிய பின் பண்டிதர்கள் சம்ஸ்கிருதத்திலே பேச ஆரம்பித்தார்கள். சுவாமிஜியும் இனிமையான சம்ஸ்கிருதத்திலே மறுமொழி கூறினார். பண்டிதர்கள் அன்று பேசிய விஷயம் இன்னது எனச் சிஷ்யருக்கு இப்பொழுது ஞாபகம் இல்லை. பண்டிதர் அனைவரும் ஒரே குரலாகத் தத்துவ சாத்திரங்களிலே மிக நுணுகிய வினாக்களைச் சுவாமிஜியிடத்தில் சம்ஸ்கிருதத்திலே வினவியதும், அவர் இவ்வினாக்களைப் பற்றி நன்கு ஆராய்ந்த முடிபுகளை உறுதியோடும் அமைதியாகவும் சொல்லிக் கொண்டிருந்ததும் சிஷ்யருடைய ஞாபகத்துக்கு வருகின்றன.

இந்த வாதத்திலே சுவாமிஜி முடிபுகளை நிலை நிறுத்துவதாகிய சித்தாந்த பக்ஷத்தையும், பண்டிதர்கள் வினாக்களை வினவுவதாகிய பூர்வ பக்ஷத்தையும் சார்ந்தவர்களாயிருந்தார்கள். வாதம் நடந்து கொண்டிருக்கும் பொழுது சுவாமிஜி ஓரிடத்தில் 'சுவஸ்தி' என்பதற்குப் பதிலாக 'அஸ்தி' என்னும் சொல்லை வழங்கினார். இதைக் கேட்ட பண்டிதர்கள் நகைத்தார்கள். சுவாமிஜி பணிவோடு, '**பண்டிதானாம் தாஸோஹம் க்ஷந்தவ்யமேதத் ஸ்கலனம்**—நான் பண்டிதர்களுக்குத் தாசன்; இந்தப் பிழையைத் தயவு செய்து பொறுக்க வேண்டும்,' என்றார். சுவாமிஜியினுடைய பணிவினைக் கண்டு பண்டிதர்கள் உவகையோடு வியப்புற்றார்கள். நெடுநேரம் வாதித்த பின்பு பண்டிதர்கள், சித்தாந்த பக்ஷத்துக்குக் காட்டிய முடிபுகள் பொருத்தமுடையன எனக்கூறி, சுவாமிஜியை வணங்கி வெளியே சென்றார்கள்.

பண்டிதர்கள் போன பின்னர், பூர்வ பக்ஷத்தைச் சாதித்தவர்களாகிய அவர்கள் பூர்வ மீமாம்சைச் சாத்திரங்களை நன்கு கற்றுத் தேறியவர்கள் என்பதைச் சிஷ்யர் சுவாமிஜியினிடமிருந்து அறிந்துகொண்டார். சுவாமிஜி வேதாந்தமாகிய உத்தர மீமாம்சைச் சாத்திரத்தின் முடிபுகளைப் பேசி ஞான மார்க்கமே சிறந்தது எனப் பல சான்றுகள் கொண்டு விளக்கினார். பண்டிதர்கள் அவர் காட்டிய முடிபுகளை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

பண்டிதர்கள் ஓர் இலக்கணப் பிழையை அறிந்து நகைத்ததைக் குறித்துச் சொல்லும் பொழுது அது தாம் பல வருஷம் சம்ஸ்கிருத பாஷையைப் பேசாத காரணத்தினால் ஆகியது எனச் சுவாமிஜி கூறினார். இதற்காக அவர் பண்டிதர்களை ஒரு சிறிதேனும் குறை கூறவில்லை; ஆயினும், எதிர்க் கட்சியார் வாதிக்

கின்ற விஷயத்திலிருந்து விலகிப் பாஷையளவிலே ஒரு குற்றத்தைக் காட்ட முயல்வதை, மேலே நாட்டில் உள்ளவர்கள் பெரிய ஒழுக்கக் குறைவாகப் கொள்ளுவார்கள் என்பதை எடுத்துக் காட்டினர். நாகரிகம் படைத்த சபையார்கள் கருத்தை நோக்குவார்களே யன்றிப் பாஷை வழுவை நோக்கமாட்டார்கள். ''உங்களுடைய நாட்டிலே, உள்ளேயிருக்கும் நென்மணியைக் கருதாது உமியைக் குறித்துச் சண்டைபோடுவது வழக்கம்,'' என்று சொல்லி, சுவாமி சிஷ்யரோடு சம்ஸ்கிருதத்திலே பேச ஆரம்பித்தார். சிஷ்யரும் ஓரளவு சம்ஸ்கிருதத்திலே மறுமொழி கூறினர்; ஆயினும், அவரைப் புகழ்ந்து கூறினர். அன்று முதல் சுவாமிஜியினுடைய கேள்விப்படி சிஷ்யர் சுவாமிஜியோடு இடையிடையே சம்ஸ்கிருதத் தில் பேசுவார்.

'நாகரிகமென்பது என்ன?' என்னும் வினவுக்கு மறுமொழி யாக அன்றைய தினம் சுவாமிஜி பின் வருமாறு கூறினர்:

''ஆன்மிக ஞானத்திலே ஒரு மக்கட்கூட்டத்தினர் அல்லது ஒரு தேசத்தார் எவ்வளவு முற்பட்டிருக்கிறர்களோ, அவ்வளவு அவர்கள் நாகரிகம் உள்ளவர்களாகக் கருதப்படுவார்கள். பல திறப்பட்ட இயந்திரங்களையும் அவை போன்ற பிறவற்றையும் ஆக்கி, அதனுல் உலகியல் வாழ்க்கைக்கு வேண்டிய வசதி களைப் பெருக்கிக்கொண்ட காரணத்தினுலே எந்நாட்டினரையும் நாகரிகம் படைத்தவர்கள் என்று சொல்லக் கூடாது. இக்காலத்து மேலே நாட்டு நாகரிகமானது மக்களுடைய துன்பங்களையும் குறைவுகளையும் நாளுக்கு நாள் பெருக்கிக்கொண்டு போகிறது. பழைய இந்திய நாகரிகமோவென்ருல், மக்களுக்கு ஆன்மிக முன் னேற்றத்திற்கு உரிய வழிகளைக் காட்டி அவர்களுக்கு ஏற்பட்ட லௌகிகக் குறைவுகளைக் குறையச் செய்தோ, முற்றிலும் நீக்கியோ, அவர்களது வாழ்க்கையைச் செம்மைப்படுத்தியது. இக்காலத்திலே இவ்விரு வகை நாகரிகத்தையும் ஒன்றுபடுத்துவதற்காகவே பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருவவதாரஞ்செய்தார். இக்காலத் திலே மக்கள் கருமஞ்செய்வதில் மிகுதியும் வல்லவர்களாய் இருப்ப தோடு ஆழ்ந்த ஆன்மிக ஞானத்தையும் அடைய வேண்டியவர்கள். இந்திய நாகரிகமானது மேலேத்தேச நாகரிகத்தோடு பொருந்துவத ஞலே உலகத்திலே ஒரு புதுயுகம் தோற்றும்'' என்பதைச் சுவாமிஜி எங்களுக்குத் தெளிவுபெற விளக்கினர். அந்த விஷயத்தைப் பற்றிப் பேசும்பொழுது ஓரிடத்திலே பின் வருமாறு கூறுவராயினர்:

''நல்லது; மற்ருெரு விஷயம்: ஒரு மனிதன் சமய வாழ்க்கை யிலே உயர்வடையும் பொழுது அவனுடைய புற ஒழுக்கங்கள் மிகு தியும் அடங்கியிருக்க வேண்டுமென்றும், பிற விஷயங்களைப்பற்றி அவனுடைய வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வருதல் கூடாதென் றும் மேலே நாட்டு மக்கள் நினைக்கிருர்கள். மேலே நாட்டி

லுள்ள குருக்கள்மார் என்னுடைய சமயப் பிரசங்கங்களிலே தாங்கள் கண்ட அகன்ற கருத்துக்களை நோக்கி ஆச்சரியப்படுவார்கள்; பிரசங்க முடிவிலே நண்பர்களோடு நகைமொழி பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு மலைவுறுவார்கள்; சில வேளை என்னை நேராக நோக்கி, 'சுவாமி, நீர் ஒரு குரு; சாதாரண மனிதரைப்போலப் பரிகாச வார்த்தையாடுவதும் சிரிப்பதும் சரியல்ல. இத்தகைய விளையாட்டு உம்மிடத்திலே பொருத்தமாகக் காணப்படவில்லை,' எனக் கூறுவார்கள். அதற்கு நான் மறுமொழியாக, 'நாங்கள் ஆனந்தத்தின் புதல்வர்கள்; எதற்காக நகையில்லாத சோர்ந்த முகத்தோடு இருக்க வேண்டும்?' என்பேன். எனது வார்த்தைகளின் பொருளை அவர்கள் சரியாக உணர்ந்துகொண்டார்களோ என ஐயுறுகின்றேன்.''

அன்று சுவாமிஜி பாவ சமாதியைப் பற்றியும் நிர்விகற்ப சமாதியைப் பற்றியும் எத்தனையோ விஷயங்களைப் பேசினர். இயன்ற வரை அவற்றை இங்குத் தருகின்றேன்:

ஒரு மனிதன் ஹநுமானைப்போன்ற கடவுட்பத்தியை விருத்தி செய்கிருன் என்று வைத்துக்கொள்வோம். சாதகனுடைய மன நிலை சாதனையிலே அதிகரித்துக்கொண்டு வரும்பொழுது, அவனுடைய இருக்கையும் நடவடிக்கையும், சரீர உருவமும் தியானிக்கப் படும் பொருளின் உருவாக மாறும். வேறு வேறு இனங்கள் பரிணமிக்கின்ற முறையும் இதுவே ஆகும். சாதகன் கொண்ட உள்ளத் துணர்ச்சிக்கு ஏற்ப, அவனது இஷ்டத்தின் வடிவமாக அவன் படிப் படியாக உருவம் மாறுகின்ருன். அத்தகைய அன்பின் முடிவான நிலையே பாவ சமாதி என்று சொல்வது. ஞான மார்க்கத்தில் நிற்கும் சாதகன், 'நேதி, நேதி' என்னும் முறையினலே, 'நான் இந்தச் சரீரமல்ல; மனமல்ல; புத்தியல்ல,' என்று இவ்வாறு பயின்று நிர்விகற்ப சமாதியை அடைகின்ருன். அப்பொழுது அவனது அறிவு பூரணத்திலே நிலைபெறுகிறது. பத்தியோடு கூடிய இந்த மார்க்கங்களில் யாதாயினும் ஒன்றில் முற்றிய நிறைவை அடைவதற்கு எத்தனையோ பிறவி எடுத்து முயல வேண்டும். ஞான பூமிக்கு அரசராகிய ஸ்ரீராமகிருஷ்ணரோவென்ருல், பதினெட்டு வகையாகிய பத்தி முறைகளிலே பூரணத்துவத்தை அடைந்திருந்தார். சமய சாதனையாகிய தெய்வ லீலையிலே காலங்கழிக்காது இருந்தால், தம்முடைய சரீரம் நிலைபெற்றிருந்திராது என அவர் சொல்வது வழக்கம்.

அன்று சிஷ்யர் சுவாமிஜியை நோக்கி, ''ஐயா, மேலை நாட்டிலிருக்கும்பொழுது எவ்வகையாகிய உணவு உட்கொண்டீர்கள்?'' என்ருர்.

சுவா: அங்குள்ளோர் உண்ணுகிற உணவுதான் உண்டேன். சந்நியாசிகளாகிய எங்களுக்கு ஒரு வகையிலும் ஜாதி அழிந்து போகாது.

'இந்த நாட்டிலே எதிர்காலத்திலே என்ன வகையாகச் சுவாமிஜி யினுடைய வேலை நடைபெறப் போகிறது?' என்னும் வினவுக்கு மறுமொழியாகச் சுவாமிஜி பின் வருமாறு கூறுவாராயினர்:

''சென்னையிலும் கல்கத்தாவிலும் இரண்டு நிலையங்களை ஆரம் பிப்போம். எல்லாத்துறைகளிலும் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய புது மாதிரியாகிய துறவிகளை விருத்தியாக்குவோம். உள் ளதை அழிக்கின்ற முறையினலே மக்களோ, நாடோ, முன் னேற்றம் அடைவதில்லை. எப்பொழுதும் ஒன்று சேர்த்துக் கட்டு கின்ற முறையிலேதான் முன்னேற்றம் உண்டாகின்றது. பழைய வழக்கங்களுக்கு ஒரு புத்துருவம் கொடுக்கவேண்டும். பண்டைக் காலத்திலே இந்தியாவில் தோன்றிய சமயப் பிரசாரகர் எல்லோ ரும் அம்முறையிலேயே முயன்றுர்கள். பகவான் புத்தருடைய சமயம் மாத்திரம் அழிவு முறையைக் கைக்கொண்டது. ஆதலி னலேதான் அந்தச் சமயம் இந்தியாவிலிருந்து வெளியே அகற்றப் பட்டது.''

இங்ஙனம் பேசிக்கொண்டிருந்த பொழுது சுவாமிஜி பின் வரு வனவற்றையும் குறிப்பிட்டுக் கூறியதாகச் சிஷ்யருக்கு நினைவிருக் கிறது:

''பிரம்மம் ஒரு மனிதனிடத்திலே விளக்கமுறுமாயின், அந்த ஒளியினலே வழியைக் கண்டறிந்து, ஆயிரக்கணக்கானேர் முன்னேற் றம் அடைவர். பிரம்மஞானம் அடைந்தவர்களே மக்களுக்கு ஞான சிரியராகும் தகைமை வாய்ந்தவர்கள். மக்களுடைய அறிவும் சாத் திரங்களும் இதற்குச் சான்று பகருகின்றன. தமது சொந்த நலத் தைக் கருதிய பிராமணர்கள் இந்த நாட்டிலே 'குருகுல முறை'யை ஏற்படுத்தினர்கள்; இது வேதங்களுக்கும் சாத்திரங்களுக்கும் விரோதமானது. ஆனபடியாற்றான் மனிதர் சமய சாதனை செய் தும் பிரம்மஞானத்தை அடைந்து தம்மைப் பூரணப்படுத்திக்கொள் ளுவதற்கு இயலாதவர்களாயிருக்கிறுர்கள். சமயத்திலே ஏற்பட்ட இந்தக் குறைவுகளை நீக்கும்பொருட்டே இக்காலத்திலே, நில வுலகிலே ஸ்ரீராமகிருஷ்ணராய்ப் பகவான் திருவவதாரம் செய் தருளினர். அவர் போதித்த சமரசக் கொள்கைகள் உலகமுற்றும் பரவுமாயின், அதனல் மக்கட்கூட்டத்தினருக்குப் பெரும்பயன் உண்டாகும். இவ்வளவு அற்புதமாகச் சமய சமரசத்தை நிலைநாட் டிய ஞானசிரியரை இந்திய நாடு கடந்த பல நூற்றுண்டுகளுக்குத் தரவில்லை.''

சுவாமிஜியினுடைய சகோதர சந்நியாசியார் ஒருவர் அவரை நோக்கி, ''மேலை நாட்டிலே ஸ்ரீராமகிருஷ்ணரை அவதார புருஷ ரென விரிவாகப் பிரசாரஞ் செய்யாதது ஏன்?'' என வினவினர்.

சுவா: அங்குள்ளவர்கள் தங்களது விஞ்ஞான சாத்திரத் தைப் பற்றியும் தத்துவ சாத்திரத்தைப் பற்றியும் பெருகக்கூறிப்

பறையடிக்கின்றார்கள். நியாயத்தினுலும், சாத்திரியமான தர்க்கத்தினுலும், தத்துவ ஆராய்ச்சியினுலும், அவர்களது அறிவுப் பெருமையை முதலிலே தகர்த்து எறிந்தாலன்றி, அங்கு ஒன்றனையும் கட்ட முடியாது. உலகியல் அறிவினைக்கொண்டு கூடிய வரை ஆராய்ந்தும் தமக்கொரு நிலைக்களம் காணுதவராய் உண்மை உணரவேண்டுமென்னும் ஆவலோடு என்னிடம் தனித்து வருவோருக்கு மாத்திரம் ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி நான் சொல்லுவேன். அஃதன்றி, தெய்வ அவதாரங்களைப்பற்றி நான் உடனே பேசத் தொடங்கினுல், 'நீர் சொல்வதில் ஒன்றும் புதியது இல்லை; எங்களுடைய இயேசுகிறிஸ்துவும் அப்படிப்பட்டவரே,' என்று கூறிவிடுவார்கள்.

இவ்வண்ணம் மிகுந்த உவகையோடு மூன்று நான்கு மணி நேரம் கழிந்த பிறகு சிஷ்யரும் மற்றவர்களும் விடை பெற்றுக் கொண்டு கல்கத்தாவுக்குத் திரும்பினுர்கள்.

(4)

[இடம் : தக்ஷிணேஸ்வரத்திலுள்ள காளி கோயிலும், ஆலம்பஜார் மடமும்.
காலம் : 1897-ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம்.]

சுவாமிஜி முதல் முறை இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்த பொழுது இராமகிருஷ்ண மடம் ஆலம்பஜாரில் நிறுவப்பட்டிருந்தது. இவ்வருடம் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பிறந்ததினக் கொண்டாட்டம் தக்ஷிணேஸ்வரத்திலே ராணி ராசமணி அமைத்த காளிகோயிலிலே நடைபெற்றது. சுவாமிஜியும் சில சகோதர சந்நியாசிகளும் ஆலம்பஜார் மடத்திலிருந்து புறப்பட்டு, அங்கே காலை 9, 10 மணியளவில் வந்து சேர்ந்தார்கள். சுவாமிஜி பாதரக்ஷை அணியவில்லை; தலையிலே மஞ்சள் தலைப்பாகை அணிந்திருந்தார். அவரைத் தரிசிக்கவும், அவர் மொழிகளைக் கேட்கவும் கூட்டமாக மக்கள் காத்திருந்தார்கள். காளித்தாயினுடைய கோயிலின் முன்பு போய், சுவாமிஜி உலகமாதாவின் சந்நிதானத்திலே உடல் முழுதும் நிலத்திற்படிய விழுந்துவணங்கினுர். அவரைப்பின்பற்றி ஆயிரக்கணக்கான மக்கள் தாழ்ந்து வழிபட்டார்கள். இராதாகாந்தருடைய சந்நிதியிலும் வணங்கிய பின்பு சுவாமிஜி ஸ்ரீராமகிருஷ்ணர் வசித்த அறைக்கு வந்தார். அந்த அறையிலே மூச்சுவிட இடமில்லாதபடி மக்கள் நெருங்கியிருந்தார்கள். சுவாமிஜியோடு இந்தியாவுக்கு வந்த இரண்டு ஐரோப்பியப் பெண்களும் விழாக் கொண்டாட்டத்துக்கு வந்திருந்தார்கள். சுவாமிஜி அவர்களை அழைத்துக்கொண்டு பரிசுத்தம் பொருந்திய பஞ்சவடியையும், வில்வ விருட்சத்தையும் காட்டுவதற்குச் சென்றுர். சிஷ்யர் சுவாமிஜியோடு நெருங்கிய அறி

முகம் இல்லாதவராயிருந்தும், அவர்பின் சென்று விழாக் கொண்டாட்டத்தைப்பற்றிச் சம்ஸ்கிருதத்திலே தாமெழுதிய ஒரு கவிதையைக் கரத்திற்கொடுத்தார். பஞ்சவடிக்குப் போகும் வழியில் சுவாமிஜி அதைப் படித்தார். பின்பு வழியிலே ஒரு முறை திரும்பிச் சிஷ்யரைப் பார்த்து, ''ஆம்; இது நன்ருய் இருக்கிறது; இதை போன்று இன்னும் சிலவற்றை எழுதுவாயாக,'' என்ருர்.

பஞ்சவடியில் ஒரு பக்கத்திலே ஸ்ரீராமகிருஷ்ணருடைய இல்லறச் சிஷ்யர் சிலர் குழுமியிருந்தனர். அவர்களுள்ளே பாபு கிரீஷ் சந்திரகோஷரும் இருந்தார். ஒரு கூட்டத்தினர் பின் வர, முன் வந்த சுவாமிஜி கிரீஷ் பாபுவைக் கண்டு, ''ஓகோ ! ஸ்ரீமான் கோஷர் இருக்கின்ருர் !'' எனச் சொல்லி வந்தனை கூறினர். கிரீஷ் பாபுவும் கைகளைக் கூப்பி வணங்கினர். சுவாமிஜி, கிரீஷ் பாபுவுக்குப் பழைய நாட்களை நினைப்பூட்டி, ''கிரீஷரே, அந்நாட்களுக்கும் இந்நாட்களுக்கும் எவ்வளவு வேறுபாடு ! நினைத்துப் பாரும்,'' என்ருர். கிரீஷ் பாபுவும், ''ஆம், உண்மையே ! ஆயினும், இன்னும் அதிகம் காணவேண்டுமென்று மனம் விரும்புகின்றது,'' என்ருர்.

சிறிது நேரம் உரையாடின பின்பு, பஞ்சவடிக்குப் பக்கத்தில் இருக்கும் வில்வமரத்தண்டை சுவாமிஜி சென்ருர். அங்கே கூடியிருந்த பெருந்திரளான மக்கள் சுவாமிஜியினுடைய திருவாயிலிருந்து ஒரு பிரசங்கத்தைக் கேட்க ஆவல் கொண்டார்கள். மக்களுடைய ஆரவாரம் மிகுதியாயிருந்தபடியால், சுவாமிஜி பிரசங்கம் பண்ண இருந்ததை நிறுத்திவிட்டு, இரண்டு ஐரோப்பியப் பெண்களையும் அழைத்துக்கொண்டுபோய் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய சமய சாதனைகளோடு தொடர்புள்ள இடங்களைக் காட்டினர்; பகவானுடைய பத்தர் சிலரை அவர்களுக்கு அறிமுகஞ் செய்துவைத்தார்.

மூன்று மணிக்குப் பின்பு சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''இப்பொழுது மடத்துக்குப் போகவேண்டும்; தயை செய்து ஒரு வண்டி கொண்டு வா,'' என்ருர். சிஷ்யரும் அப்படியே செய்தார். சுவாமி ஒரு புறத்தில் இருந்துகொண்டு, சிஷ்யரையும் சுவாமி நிரஞ்சனனந்தரையும் மறுபுறத்திலே இருக்கச் செய்ய, வண்டி ஆலம்பஜார் மடத்தை நோக்கிச் சென்றது. வழியிலே சுவாமிஜி சிஷ்யரை நோக்கிப் பின் வருமாறு கூறுவாராயினர்:

''எண்ணங்களை மாத்திரம் வாயாற் பேசிக்கொண்டு உயிர் வாழ்தல் கூடாது. இந்த விழாக் கொண்டாட்டமும் இதுபோன்றனவும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன; அப்பொழுது தான் இந்த எண்ணங்கள் பொதுமக்களிடையே சிறிது சிறிதாகப் பரவுதல் கூடும். இவற்றிலே குறைவும் உண்டு. மக்கள் இவற்றின் உட்கருத்தை மறந்து, புறக்கிரியைகளிலே அதிகமாக ஈடுபட்டு, விழாக் கொண்டாட்டம் முடிந்ததும் தங்களுடைய பழைய வாழ்க்கையில் அமிழ்ந்துவிடுகிருர்கள். ஆதலினுல் இவை எல்லாம் உண்

மையான ஆன்மிக வாழ்க்கையையும், ஆன்மஞானத்தையும் மறைக்கின்ற ஒரு வகையான திரைகள் என்று சொல்லுவது உண்மைதான்.

''ஆனால், 'சமயம்', 'ஆன்மா' என்னும் இவற்றை ஆராய்ந்து அறியமாட்டாதவர்கள், இத்தகைய திருவிழாக்களினாலும் கிரியைகளினாலும் படிப்படியாகச் சமய உண்மைகளை உணர முயலுகின்றார்கள். இன்று நடந்த விழாக் கொண்டாட்டத்தை எடுத்துக் கொள்வோம். கூடியிருந்தோர் எல்லோரும் ஒரு முறையாவது ஸ்ரீராமகிருஷ்ணரை நினைத்திருப்பர். இத்தகைய பெருங்கூட்டம் எவருடைய பெயரினால் கூட்டப்பட்டதென்பதும், அவருடைய பெயரைக் குறித்து இத்தனை மக்கள் ஏன் கூடினார்களென்பதும் போன்ற எண்ணங்கள் அவர்களுடைய மனத்திலே எழும். அப்படியும், நினையாதவர்களும் வருடம் ஒரு முறை வந்து பத்தி நிறைந்த ஆடல் பாடல்களைப் பார்த்துப் பிரசாதம் உட்கொண்டு ஸ்ரீராமகிருஷ்ணருடைய தொண்டர்களையும் காண்பார்கள். இதனால் அவர்களுக்கு நன்மை விளையுமேயன்றித் தீமை விளையாது.''

சிஷ்: ஆனால், ஐய, இந்த விழாக்களையும் கொண்டாட்டங்களையும் மாத்திரமே இன்றியமையாதனவென நினைப்பவர்கள் முன்னேற்றம் அடைதல் கூடுமா? நமது நாட்டில் நடந்து வருகின்ற சஷ்டி மங்கள சண்டி முதலிய வழிபாட்டு முறைகளை மாத்திரமே மக்கள் பின்பற்றுவார்கள். வாழ்நாள் வரையும் இத்தகைய கருமங்களையே செய்துகொண்டு வருகிற மக்கள் பலரைக் காண்கிறோம். அவர்களுள் ஒருவரேனும் இத்தகைய கிரியைகள் வழியாகப் பிரம்ம ஞானத்தை அடைந்ததைக் காணவில்லையே?

சுவா: ஏன் இப்படிச் சொல்கின்றாய்? இந்த இந்திய நாட்டிலே ஞான தீரர்கள் எத்தனையோ பேர்கள் பிறந்திருக்கிறார்கள். அவர்கள் உயர்வை அடைவதற்கு இவை கருவியாய் இருக்கவில்லையா? இந்த ஆசார அநுஷ்டானங்களைப் பயின்று ஆன்ம ஞானத்தை அடைந்த பின்னர் இவற்றை அவர்கள் அவ்வளவு பொருட்படுத்துவில்லை. என்றாலும், சமுதாயத்தின் நன்மைக்காக அவதார புருஷர் போன்ற பெரியோர்களும் இந்தக் கருமங்களை மேற்கொண்டு நடக்கிறார்கள்.

சிஷ்: ஆம், அவர்கள் இக்கிரியைகளைத் தோற்றம் அளவிலே செய்தல் கூடும். ஆன்ம ஞானத்தை அடைந்தவனுக்கு இந்த உலகமே இந்திர ஜாலத்தைப் போலப் பொய்யாகிவிடுமாயின், இந்த வெளிக்கிரியைகளை உண்மை என்று அவன் கொள்ளுவது எங்ஙனம்?

சுவா: ஏன் அப்படி இருக்கக் கூடாது? உண்மையைப்பற்றிய எண்ணமும் காலதேச வர்த்தமானங்களால் வேறுபட்டதல்லவா?

எல்லாக் கிரியைகளும் பயனைத் தருவன. ஆயினும், அவற்ருல் எய்துகின்ற பயன், மனிதனுடைய தன்மைக்கேற்ப வேறுபடும். 'ஒரு தாயானவள் புலவு கலியா என்னும் உணவுகளை ஒரு மகனுக்கும், மற்றொருவனுக்கு சாகோக் கஞ்சியையும் ஆயத்தப் படுத்தி வைக்கிருள்,' என ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதுண்டு.

சிஷ்யர் தெளிவாக அறிந்துகொண்டபடியினல் மௌனமா யிருந்தார். வண்டியும் ஆலம்பஜார் மடத்தை வந்து அடைந்தது. சுவாமிஜியும் சிஷ்யரும் திருமடத்துக்குட்புகுந்தார்கள். நீர்வேட்கை யாயிருந்தபடியால் சுவாமிஜி சிறிது தண்ணீர் குடித்தார்; மேலங்கி யைக் கழற்றிவிட்டு நிலத்திலே விரித்திருந்த ஒரு கம்பளத்தின் மேலே சாய்ந்து இளைப்பாறிக்கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் அமர்ந்திருந்த சுவாமி நிரஞ்சனனந்தர், "முந்திய விழாக் கொண் டாட்டம் ஒன்றிலும் இவ்வளவு பெரிய கூட்டம் வந்ததில்லை. கல்கத்தா முழுவதும் திரண்டு வந்தது போன்று இருந்தது," என்ருர்.

சுவா: ஆம், அது இயல்புதான். எதிர்காலத்தில் இன்னும் நூதனமான விஷயங்கள் சம்பவிக்கும்.

சிஷ்: ஐய, எல்லாச் சமய வகுப்பாருள்ளும் ஏதாவது விழாக் கொண்டாட்டம் ஏற்பட்டிருக்கின்றது. ஆனல், இந்த விஷயத்தில் ஒரு வகுப்புக்கும் மற்றொன்றினுக்கும் இடையில் சமாதானம் இருப்பதில்லை. எவ்வளவோ அகன்ற கொள்கைகளையுடைய முகம் மதியர்களிடையேயும் வேறுபாடு நிகழ்வதை நான் டாக்காவிலே கண்டேன். ஷியா, சுன்னி என்னும் இரு வகுப்பினரும் ஒருவ ரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டனர்.

சுவா: வகுப்பு வேறுபாடு எங்கும் உண்டு; அங்கெல்லாம் இத்தகைய நிகழ்ச்சிகள் இயல்பாக நடக்கின்றன. நமக்குள்ளே பெரிதாகக் கொள்ளப்படுகிற கொள்கை எதுவென்பதை அறிவாயா? வகுப்புப் பகைமையின்மையே அது. நம் பகவான் அதற்காகவே திருவவதாரஞ்செய்தார். எல்லா வடிவங்களையும் ஏற் றுக்கொண்டாராயினும், பிரம்மஞானநிலையிலே இருந்துபார்க்கும் பொழுது அவை எல்லாம் மாய வடிவங்களே என அவர் கூறுவார்.

சிஷ்: ஐய, நீங்கள் சொல்வது எனக்குத் தெளிவடவில்லை. இத் தகைய விழாக்களைக் கொண்டாடுவதனல், ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருநாமத்தைச் சார்ந்த மற்றும் ஒரு சமயத்தை நாம் ஆரம்பிப்பது போல எனக்குச் சில வேளை தோன்றுகிறது. ஆனல், ஸ்ரீராம கிருஷ்ணர் வகுப்பு வேறுபாடு இல்லாது இருந்தார் என நாக மஹா சயருடைய வாக்கிலிருந்து நான் கேள்விப்பட்டதுண்டு. சாத்தம், வைணவம், பிரம்மசமாஜம், முகம்மதிய மதம், கிறிஸ்து மதம் ஆகிய அனைத்தினையும் அவர் மிகவும் மதித்து நடந்தார்.

சுவா: இந்தச் சமயபேதங்களை எல்லாம் நாங்கள் மதித்து நடக்கவில்லை என்று நீ எப்படி அறிந்துகொண்டாய்?

இங்ஙனம் கூறி, சுவாமிஜி புன்னகையோடு சுவாமி நிரஞ்சனானந்தரை நோக்கி, "கேட்டாயா இந்த பங்கால்* சொல்லுவதை!" என்றார்.

சிஷ்: ஐய, தேவரீருடைய கருத்தை எனக்குத் தெரியச் செய்யவேண்டும்.

சுவா: நீ என்னுடைய பிரசங்கங்களை வாசித்திருக்கிறாய் என்றெண்ணுகிறேன். ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருநாமத்தை அடிப்படையாகக் கொண்டு நான் என்ன பேசியிருக்கிறேன்? உபநிடதங்களிலுள்ள சுத்தமான சமய உண்மைகளையே நான் உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் பிரசங்கித்தேன்.

சிஷ்: அது உண்மையே. ஆனால், தேவரீரோடு நெருங்கிப் பழகியதனால் தேவரீர் உடல் உயிர் அனைத்தினையும் ஸ்ரீராமகிருஷ்ணருக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டதாகக் கண்டுகொண்டேன். ஆண்டவரே ஸ்ரீராமகிருஷ்ணராக வந்தாரென்பதைத் தேவரீர் தெளிவாக அறிந்திருந்தால் அதனை மக்களுக்கு ஏன் தெரியப்படுத்தக்கூடாது?

சுவா: நல்லது; நான் அறிந்ததை நான் பிரசங்கிக்கிறேன். வேதாந்தத்திலுள்ள அத்வைத உண்மைகள் மேலானவை என்பதாக அறிந்திருந்தால், நீ ஏன் அவற்றை எல்லா மனிதருக்கும் பிரசங்கம் செய்யாமல் இருக்கிறாய்?

சிஷ்: நான் மற்றவருக்குப் பிரசங்கம் செய்யுமுன் என்னுடைய அனுபவத்திலே உண்மையை ஞானக்கண்ணால் உணர வேண்டும். நான் படித்த அத்வைதம் ஏட்டில் உள்ளதுதான்.

சுவா: நல்லது; முதலிலே அனுபூதி வாயிலாக அறிந்து, பின்பு பிரசங்கம் செய். மற்ற மனிதர் தமது வாழ்க்கைக்கு ஆதாரமாக எதன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, அதற்கு எதிராக யாதும் சொல்லுவதற்கு உனக்கு உரிமையில்லை. அத்தகைய நம்பிக்கைகள் சிலவற்றைக் கடைப்பிடித்தேதான் நீயும் வாழ்கின்றாய்.

சிஷ்: உண்மையே; நானும் சிலவற்றை நம்பித்தான் வாழ்கின்றேன். ஆனால், எனக்குச் சாத்திரங்கள் பிரமாணமாயிருக்கின்றன. சாத்திரங்களுக்கு மாறானவற்றிலே நான் நம்பிக்கை வைப்பதில்லை.

சுவா: சாத்திரங்கள் என்பவை என்னவென்று எண்ணுகிறாய்? உபநிடதங்கள் பிரமாண நூல்களாயிருந்தால், விவிலிய

---

* கிழக்கு வங்காளத்திலிருப்போரைப் பரிகாசமாக இப்படி வழங்குவது வழக்கம். இந்தச் சிஷ்யரைச் சார்ந்த வரையில் இம்மொழி இயல்பாகவே அன்பு மொழியாக வழங்கப்பட்டது.

நூலும், **செண்ட் ஆவெஸ்தா** என்னும் நூலும் (கிறிஸ்தவ பார்சிய மத சாத்திரங்கள்) ஏன் பிரமாண நூல்களாக இருக்கக் கூடாது?

சிஷ்: அந்தச் சாத்திரங்களையும் பிரமாண நூலென்று கொண்டாலும் அவை வேதத்தைப்போலவே பழைமை வாய்ந்தவையல்ல. மேலும், வேதத்திற்போல ஆன்மாவைப் பற்றிய முடிவுகள் வேறெங்கும் அவ்வளவு உறுதியாக நிலை நாட்டப்படவில்லை.

சுவா: உனது நியாயத்தை ஏற்றுக்கொண்டாலும், வேதமல்லாத மற்றைய சாத்திரங்களிலே உண்மையைக் காண முடியாது என்று நீ எங்ஙனம் சாதிக்கக் கூடும்?

சிஷ்: வேதமல்லாத சாத்திரங்களிலும் உண்மையிருக்கலாம். அதற்கு மாறாக நான் ஒன்றும் சொல்லவில்லை. உபநிடதங்களிலே சொல்லியிருக்கிற போதனைகளைப் பின்பற்றி நடக்க நான் விரும்புகிறேன். ஏனெனில், அவற்றில் எனக்கு மிகுந்த நம்பிக்கைஉண்டு.

சுவா: நல்லது; நீ அங்ஙனம் செய்யலாம். ஆனால், வேறு சிலர், வேறாகிய கொள்கைகளிலே மிகப் பெரிய நம்பிக்கை வைத்திருந்தால், அவர்கள் தங்கள் கொள்கைகளைப் பின் பற்றி நிற்கும்படி அவர்களை விட்டுவிடுவாய் என்று நான் நினைக்கின்றேன். நீயும் அவர்களும் எய்துகின்ற முடிபு ஒன்று என்பதை நாளடைவிலே உணர்ந்துகொள்வாய். **மஹிம்ன ஸ்தவத்திலே 'த்வமஸி பயஸாமர்ணவ இவ**—ஆறுகள் எல்லாம் ஒன்றுகூடிக் கலக்கின்ற கடல் போன்றவள் நீ,' எனக் கூறியிருப்பதை நீ படித்ததில்லையா?

(5)

[இடம் : ஆலம்பஜார் மடம். காலம் : 1897-ஆம் ஆண்டு, மே மாதம்.]

இன்று வங்காள சகம் 1303-ஆம் ஆண்டு, வைசாக மாதம், 19-ஆம் தேதி. சுவாமிஜி சிஷ்யருக்குத் தீக்ஷை செய்ய உடன்பட்டிருக்கிறார். ஆனபடியால், அவர் அதிகாலையில் ஆலம்பஜார் மடத்தை அடைந்தார். சுவாமிஜி சிஷ்யரை நோக்கிப் பரிகாசமாக, "இன்று நீ பலியாக்கப்படப் போகின்றாய் அல்லவா?" என்றார்.

இந்தக் குறிப்புக்குப் பின்பு சுவாமிஜி புன்னகையோடு அமெரிக்க நாட்டைக் குறித்த விஷயங்களைப் பற்றிப் பிறரோடு பேசிக்கொண்டிருந்தார். அந்தச் சம்பாஷணையிலே ஆன்மிக வாழ்க்கையை வளர்ப்பதற்கு விரும்பும் ஒருவன் பத்தியோடும் முழு மனத்தோடும் இருக்க வேண்டும் என்பதும், குருபத்தியானது எவ்வளவு உறுதி பெற்றிருக்க வேண்டும் என்பதும், குருவினுடைய வார்த்தையிலே ஆழ்ந்த நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதும்,

குருவுக்காக வேண்டுமாயின் உயிரையும் தியாகஞ் செய்ய வேண்டும் என்பதும் பேசப்பட்டன. சிஷ்யருடைய மனத்தைப் பரிசோதிக்கும்பொருட்டுச் சுவாமிஜி சில வினுக்களை வினவினுர்: ''என்ன நேர்ந்தாலும், எதுவாயிருந்தாலும், என்னுடைய கட்டளையை உன்னுல் இயன்றவரை கைக்கொண்டு ஒழுக ஆயத்த மாயிருக்கிருயா? உன்னுடைய நலத்தைக் கருதி உன்னைக் கங்கை யில் குதிக்கச் சொன்னுலும், வீட்டுக் கூரையிலிருந்து கீழே விழச் சொன்னுலும் தடையின்றி அவற்றைச் செய்வாயா? இவற்றை எல்லாம் இப்பொழுது சிந்தித்துப் பார். இந்தக் கணத்தில் உன் உள்ளத்தில் ஏற்பட்ட ஓர் எண்ணத்தினுலே என்னைக் குருவாகக் கொள்ள வேண்டும் என்று அவசரப்படாதே.'' இந்த வினுக்களுக் கெல்லாம் சிஷ்யர் ''ஆம்'' என்று தலையசைத்தார்.

சுவாமிஜி மேலும் சொல்லுவார்: ''முடிவில்லாத பிறப்பிறப் பாகிய மாயையைக் கடக்கும்பொருட்டு ஜீவனுடைய சோகங்களை யும் துன்பங்களையும் கருணையினுல் அழித்துவிடுகின்றவரே உண் மைக் குரு. பழைய காலத்திலே சிஷ்யனுனவன் கையில் சமித்துக் களை எடுத்துக்கொண்டு குருவினுடைய குடிலுக்குப் போவான். குருவும் அவனுடைய தகுதியை அறிந்து, உளம், உரை, செயல் ஆகிய மூன்றனையும் அவன் அடக்கி வைத்திருப்பதற்கு அடை யாளமாக முப்புரியாகிய 'முஞ்சா' என்னும் புல்லினை அவனுடைய இடுப்பிலே கட்டி அவனுக்குத் தீக்ஷை செய்து வேதங்களைப் போதிப் பார். அரையிலே கட்டிய முப்புரியாகிய அப்புல்லிலே சிஷ்யன் கோவணத்தைக் கட்டிக்கொள்ளுவான். முஞ்சா என்னும் அப் புல்லினுல் ஆக்கப்பட்ட கயிற்றுக்குப் பதிலாக முப்புரி நூலை அணிந்துகொள்ளும் வழக்கம் பின்னுளில் ஏற்பட்டது.''

சிஷ்: ஐய, அப்படியானுல் முப்புரி நூலை அணியும் வழக்கம் வைதிக வழக்கமன்று எனச் சொல்லுவீரா?

சுவா: வேதங்களிலே நூலைப்பற்றிய குறிப்பு ஓரிடத்திலும் இல்லை. இக்காலத்து ஸ்மிருதி ஆசாரியராகிய ரகுநந்தன பட்டாசாரி யரும், ''இந்த நிலையிலே எக்ஞோபவீதத்தை (முப்புரி நூலை) அணிய வேண்டும்''* என்கிருர். கோபிலருடைய கிருஹ்ய சூத்திரங்களிலும் உபவீதமானது நூலினுற் செய்யப்பட்டது என்னும் குறிப்புக் காணப்படவில்லை. முதல் வைதிக சம்ஸ்காரமாகிய இது, குருவின் முன்னிலையிலே செய்யப்படும் உபநயனம் என்று சாத்திரங்களில் சொல்லப்படுகிறது; நமது நாடு இப்பொழுது அடைந்திருக்கின்ற பரிதாப நிலையைப் பார். சாத்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்ற உண்மை நெறி அகன்று போய்விடவே, தேசாசாரங்களும் பொது

---

* இது பிராமணனுடைய தீக்ஷையிலே செய்கின்ற வைதிகக் கிரியைகளில் ஒரு படியைக் குறிப்பது.

மக்களின் வழக்கங்களும், பெண்களுக்கு நியமித்தகொள்கைகளும் நாட்டில் நிறைந்திருக்கின்றன. ஆனபடியினுலேதான் பழைய காலங்களிற்போல, 'சாத்திரங்கள் விதிக்கின்ற நெறியிலே நிற்பாயாக !' என்று நான் உனக்குச் சொல்லுகிறேன். தன்னம் பிக்கையோடு அவற்றை மீண்டும் இந்த நாட்டிலே வழங்கச் செய். நசிகேதனைப் போன்ற சிரத்தை உன் உள்ளத்திலே இருப்பதாக ! வேண்டுமானுல், அவனைப்போல எமலோகத்துக்கும் போ. ஆன்மா வினுடைய இரகசியங்களை அறிந்து விடுதலை பெற்று, பிறப்பிறப்பின் மருமத்தை அறிய வேண்டுமானுல், அச்சமற்ற சிந்தையோடு மரணத்தின் வாயிலும் புக வேண்டும். அச்சமே மரணம். நீ அச் சத்திற்கப்பால் போகவேண்டும். இன்று முதல் அச்சமற்றிரு. நீ வீடு பெறும்பொருட்டும், பிறருடைய நலத்துக்காகவும் உயி ரைக் கொடுக்கச் சித்தமாயிரு. எலும்பும் இறைச்சியும் பொருந் திய இந்தச் சுமையைத் தூக்கிக்கொண்டு திரிவதனுல் என்ன பயன் ? ஆண்டவனுக்காக அனைத்தினையும் தியாகஞ் செய்கின்ற மந்திரத்தைப் பெற்று, ததீசி முனியைப்போலப் பிறர்பொருட்டு எலும்பு இறைச்சியாலாகிய இந்த உடலைக் கொடுத்துவிடு. "வேத வேதாந்தங்களை அறிந்தவர்களாய், பிரம்ம ஞானத்தை உடையவர் களாய், அச்சமின்மைக்கு அப்பால் மற்றவர்களை வழிநடத்தக் கூடியவர்களே 'குரு' எனப்படுவார்கள்," என்று சாத்திரங்கள் கூறுகின்றன. அத்தகையோர் அண்மையில் இருக்கும் பொழுது யோசனையை ஒழித்துவிட்டுத் தீக்ஷை பெற்றுக்கொள். இக்காலத் தில் இக்கொள்கையானது சிலரிடத்து, 'குருடரைக் குருடர் வழி நடத்துவது' ஆகிவிட்டது என நீ அறிவாய்.

பூஜை அறையிலே தீக்ஷைக் கிரியை நடைபெற்றது. அதன் பின் சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "எனக்குக் குரு தக்ஷிணை கொடு," என்ருர். அதற்குச் சிஷ்யர், "எதனைக் கொடுப்பேன் ?" எனலும், சுவாமிஜி, 'பண்டசாலையிலிருந்து சில பழங்களைக் கொண்டு வரலாம்,' எனக் குறிப்பிட்டார். சிஷ்யர் களஞ்சியத்துக்கு ஓடிப்போய், பத்துப் பன்னிரண்டு 'லிச்சி'ப் பழங்களைக் கொண்டு வந்தார். சுவாமிஜி அவற்றைக் கைகளில் வாங்கி ஒவ்வொன்ருக உண்டுவிட்டு, "இப்பொழுது குரு தக்ஷிணை நிறைவேறிவிட்டது," என்ருர்.

இத்தருணத்தில் அந்நாளில் பிரம்மசாரியாயிருந்த சுவாமி சுத்தானந்தரும் சுவாமிஜியினிடம் தீக்ஷை பெற்ருர்.

சுவாமிஜி உணவு அருந்திச் சிறிது இளைப்பாறச் சென்ருர். இளைப்பாறிய பின் மேன்மாடியிலிருந்த மண்டபத்திற்கு வந்தார். சிஷ்யர் அத்தருணத்திலே, "ஐயா, நல்லொழுக்கம் தீய ஒழுக்கம் என்னும் எண்ணங்கள் எப்படி உண்டாயின ?" என்று கேட்டார்.

சுவா: 'பல' என்னும் எண்ணத்திலிருந்தே இவை உண்டாயின. ஒன்ருந்தன்மையில் ஒருவன் எவ்வளவுக்கு முன்னேறிச் செல்கின்ருனே, அவ்வளவுக்கு முரண்பட்ட கூட்டங்களாகிய நன்மை-தீமை என்பவற்றுக்குத் தாயகமாகிய, 'நான், நீ' என்னும் வேறுபாட்டெண்ணங்கள் அடங்கிவிடுகின்றன. 'இவர் என்னிலிருந்தும் வேறுபட்டவர்,' என்னும் எண்ணம் உண்டாகும் பொழுது, மற்றைய வேறுபாட்டு எண்ணங்களும் தோற்றுகின்றன. ஒன்ருந்தன்மையை முற்றிலும் உணர்ந்த உடனே மனிதனுக்குச் சோகம், மயக்கம் என்பன இருக்கமாட்டா. '**தத்ரகோமோஹ: க: சோக ஏகத்வ மனுபச்யத**:—ஏகத்துவத்தைக் காண்கின்றவனுக்குச் சோகம் எங்கே, மயக்கம் எங்கே?' எல்லா வகைப் பலவீனங்களிலிருந்தும் தீய உணர்ச்சி உண்டாகின்றது. பலவீனத்திலிருந்து எரிச்சல், பொருமை முதலியன உண்டாகின்றன. பலவீனமே பாவம். உள்ளே இருக்கும் ஆன்மா தன்னெளிகொண்டே எப்பொழுதும் மிளிர்கின்றது. அதனைப் புறக்கணித்துவிட்டு எலும்பு இறைச்சியினுலாகிய இந்த அற்ப ஊன் உடலையே பொருட்படுத்தி மனிதர், 'நான், நான், நான்' என்கின்றனர். எல்லாப் பலவீனத்துக்கும் இதுவே வேர். வாழ்க்கையிலுள்ள பேத உணர்ச்சி எல்லாம் இந்தப் பழக்கத்திலிருந்தே தோன்றின. பூரண உண்மை இத்தகைய இருமைக்கும் அப்பாலானது.

சிஷ்: நல்லது; அப்படியானுல், பேத அனுபவங்கள் எல்லாம் உண்மை அல்லவா?

சுவா: 'நான்' என்னும் எண்ணம் இருக்கும் வரையும் உண்மைதான். ஆன்மாவே நான் எனப்படுவது என்னும் மெய்யுணர்வு எய்திய உடனே, பேத அனுபவங்களுக்கு உரிய உலகம் பொய்ப்பொருள் ஆகின்றது. மக்கள் 'பாவம்' என்று சொல்லுவது பலவீனத்தின் பயனுக எய்தியது—'தேகம் நான்' என்னும் அகங்கார எண்ணத்தின் மற்ருெரு வடிவமாகியது. 'ஆன்மா நான்' என்னும் உண்மையிலே மனம் நிலைபெற்றிருக்கும் பொழுது புண்ணியம், பாவம், நன்மை, தீமை என்னும் இவற்றிற்கு அப்பால் நீ செல்லுவாய், '' 'நான்' செத்தால் எல்லாத் தொல்லையும் முடிந்துபோம்,'' என ஸ்ரீராமகிருஷ்ணர் இயம்புவதுண்டு.

சிஷ்: ஐய, இந்த 'நான்' என்பதற்கு மிகவும் விடாப்பிடியான உயிர் இருக்கிறது. இதைக் கொல்வது மிக அரிது.

சுவா: ஆம், ஒரு வகையில் பார்த்தால் அது மிக அரிதுதான். ஆனுல், மற்ருெரு வகையில் பார்த்தால் அது மிக எளிது. இந்த 'நான்' என்பது எங்கே இருக்கிறதென்று சொல்லுவாயா? ஒரு பொழுதும் இல்லாதிருந்த ஒன்றினைக் கொல்லுவதைப்பற்றி நீ பேசுதல் எங்ஙனம் ஆகும்? 'நான்' என்னும் பொய்யெண்ணத்தினுலே மனிதன் மயக்குண்டு கிடக்கின்ருன். இந்தப்பேய் நம்மை

விட்டு அகன்ருல், எல்லாக் கனவுகளும் அகன்றுவிடுகின்றன. மிக உயர்ந்த ஜீவன் முதல், புல் ஈருக உயிர் வாழ்கின்ற அனைத்திலும் ஒரே ஆன்மாவே நிறைந்திருப்பதாக அப்பொழுது காணுதல் கூடும். இதனை அறிந்து தெளிய வேண்டும். பழக்கங்களும் வழிபாடுகளும் திரையை நீக்குவது போன்றன. இவை போன பின் பூரண ஞானமாகிய சூரியன் தன்னொளியோடு திகழக் காண்பாய். ஆன்மா மாத்திரமே தன்னொளியுடையது. அதனை அதனுலே அறிய வேண்டும்! தன்னுலே தன்னை அறிதற்குரியபொருளினை மற்றப் பொருள்களினது உதவி கொண்டு காண்பது எப்படி? "**விஞ்ஞாதாரமரே கேன விஜானீயாத்**—காண்பானை எந்தக் கருவியினுல் காண்பது?" என்று சுருதி கூறவில்லையா? நீ அறிந்தனவெல்லாம் மனமாகிய கருவியினுல் அறியப்பட்டனவே. மனமோ, ஒரு வகையிற் சடப்பொருள். சுத்தனுகிய ஆன்மா பின்னின்று தொழில் புரிவதனுல் மனம் தொழில் செய்கின்றது. ஆதலினுல், அத்தகைய ஆன்மாவை உன்னுடைய மனத்தின் மூலமாக அறிவது எப்படி? மனமாவது, புத்தியாவது ஆன்மாவை அடைய மாட்டா என்பதை நாம் அறிகின்ருேம். நமது வியவகார புத்தி இவ்வளவோடு நின்றுவிடுகின்றது. மனம் தொழிலற்றிருக்கும் பொழுது, மனம் மறைந்து ஆன்மா வெளிப்படுகிறது. இந்த நிலையை பாஷ்யகாரராகிய சங்கரர் 'அபரோக்ஷாநுபூதி' (புலன்களைக் கடந்த காட்சி) என்பர்.

சிஷ்: ஆனுல், ஐய, 'நான்' எனப்படுவது மனந்தானே? மனம் போய்விட்டால் 'நான்' என்பதும் நிலைத்திராது.

சுவா: ஆம், அந்த நிலை வரும்பொழுது உண்மையில் 'நான்' என்பது எதுவெனப் புலப்படும். அப்பொழுது எஞ்சியிருக்கின்ற 'நான்' என்பது எங்கும் நிறைந்து எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்ற ஆன்மாவாகும். கடாகாசமானது, குடம் உடைந்தவுடன் மஹாகாசம் ஆகின்றது. குடம் உடையும் பொழுது அதனுள்ளே நிறைந்திருந்த ஆகாசம் உடைந்து போவதில்லை. உடலினுள்ளே எல்லைப்படுத்தப்பட்டதென நீ நினைத்திருந்த சிறிய 'நான்', எவ்விடத்தும் பரந்து எங்கும் வியாபித்திருக்கின்ற 'நான்' அல்லது ஆன்மாவின் வடிவமாகக் காணப்படுகின்றது. ஆதலினுலே, உண்மை 'நான்' ஆகிய ஆன்மாவுக்கு மனம் இருந்தாலும் அழிந்தாலும் எய்துவதொன்றில்லை. நான் சொல்லுவதை நாளடைவிலே உணர்ந்துகொள்ளுவாய். "**காலே ஞத்மனி விந்ததி**—நாளடைவிலே அது உள்ளத்திலே உணரப்படுகின்றது." சிரவண மனனங்களைச் செய்துகொண்டு போகும்பொழுது, உரிய காலத்திலே நீ இவற்றைத் தெளிவாக உணர்ந்து மனத்திற்கு அப்பால் போவாய். அப்பொழுது இத்தகைய கேள்விகளுக்கு இடம் இருக்க மாட்டாது.

இவற்றை எல்லாம் கேட்டுச் சிஷ்யர் தம்முடைய ஆசனத்திலே

மௌனமாயிருந்தார். சுவாமிஜி மெதுவாகப் புகை இழுத்துக் கொண்டு மேலும் சொல்லுவராயினர்: ''இந்த இலகுவான காரியத்தைத் தெளிவுபடுத்துவதற்காக எத்தனை சாத்திரங்கள் எழுதப்பட்டன! அப்படி இருந்தும், மனிதர் இதை அறிந்துகொள்ளாமல் இருக்கிறார்களே! சில வெள்ளி நாணயங்களையும், தேய்ந்து போகிற பெண்களின் வனப்பையும், இன்னும் பல சிற்றின்பங்களையும் பொருளாகக் கொண்டு, அரிய மானிட வாழ்க்கையை வீணாக்குகின்றார்களே! மகா மாயையினுடைய ஆற்றல் மிகவும் அற்புதமானது! அம்மா! ஓ அம்மா!''

(6)

[இடம்: கல்கத்தாவிலுள்ள பாக்பஜார். காலம்: 1897-ஆம் ஆண்டு.]

சில நாட்களாகச் சுவாமிஜி காலஞ்சென்ற பலராம் பாபுவினுடைய வீட்டிலே இருக்கின்றார். சுவாமிஜியினுடைய விருப்பப்படி இன்று மாலை மூன்று மணிக்கு ஸ்ரீராமகிருஷ்ணருடைய பத்தர் பலர் அந்த வீட்டிலே கூடியிருக்கின்றனர். சுவாமி யோகானந்தரும் அங்கே அமர்ந்திருக்கிறார். ஒரு சங்கத்தை ஏற்படுத்துவது சுவாமிஜியினுடைய கருத்து. கூடியிருந்தோர் அனைவரும் ஆசனத்தமர்ந்த பின் சுவாமிஜி பின் வருமாறு பேசத் தொடங்கினர்.

''நான் பல நாடுகளிலும் யாத்திரை செய்தேன். அதன் பயனாக எனது மனத்திலே உண்டாகிய துணிபு ஒன்று உண்டு: பெரிய காரியம் ஒன்றைச் செய்யப்புகின், ஒரு சங்கமாகக் கூடி முயன்றாலன்றி, அது அனுகூலப்படுவதில்லை என்பது எனது துணிபு. பொது வாக்குரிமையோடு பொது மக்கள் ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சங்கத்தை உடனே ஆரம்பித்துவிடுவது, நமது நாடு இருக்கின்ற நிலையிலே அவ்வளவு பொருத்தமன்று. இந்த விஷயத்திலே மேனாட்டார் நம்மைவிடப் பயிற்சி உடையவர். நம்மைவிட அவர்களுள்ளே பொறாமை குறைவு; தகுதியை மதிப்பிடுவதற்கு அவர்கள் பயின்றிருக்கிறார்கள். உதாரணமாக, நான் அங்கே சென்ற பொழுதும் சாதாரண மனிதனாகிய என்னை எவ்வளவு பேரன்போடு வரவேற்று உபசரித்தார்கள்! நமது நாட்டிலே கல்வி பரவிப் பொது மக்களினுடைய சிந்தை அகன்று, அவர்களுடைய எண்ணமானது சாதிமத பேதம் என்னும் எல்லையைக் கடந்த அனுதாபத்தோடு கூடியிருக்கும் பொழுது, பொது மக்கள் ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சங்கத்தின் மூலமாக முயற்சி செய்தல் கூடும். இப்பொழுது இந்தச் சங்கத்துக்குப் பூரண அதிகாரமுள்ள தலைவர் ஒருவர்

இருக்க வேண்டுவது இன்றியமையாததாகின்றது. எல்லோரும் அவர் கட்டளைக்கு அடங்கி நடக்க வேண்டும். நாளடைவிலே பொது மக்கள் வாக்குரிமையை ஆதாரமாகக் கொண்டு காரியங்களை நடத்தலாம்.

''யாருடைய திருநாமத்தினுல் நாங்கள் துறவி வாழ்க்கையைக் கைக்கொண்டிருக்கிருேமோ, யாரை இஷ்டதேவதையாகக் கொண்டு நீங்கள் குடும்ப வாழ்க்கையிலிருந்து கருமங்களிலே முயன்று வருகிறீர்களோ, யாருடைய பரிசுத்த நாமமும் மிக உயர்ந்த வாழ்க்கையும், அவ்வாழ்க்கை கழிந்து இருபது வருடத்துக்குள்ளே கீழ் நாட்டிலும் மேலை நாட்டிலும் மிக அற்புதமாகப் பரவி இருக்கின்றனவோ, அவருடைய திருநாமத்தினுல் இந்தச் சங்கம் நிலை பெறுவதாக ! நாங்கள் பகவானுடைய தொண்டர்கள். நீங்கள் அனைவரும் இந்த நன்முயற்சிக்கு உதவியாளர்களாக இருப்பீர்களாக.''

அருகில் அமர்ந்திருந்த ஸ்ரீயுத கிரீஷ் சந்திர கோஷரும் ஏனைய இல்லறச் சீடர்களும் இதனை ஏற்றுக்கொள்ளச் சங்கத்தின் எதிர்கால முயற்சியைப்பற்றிய செயல்கள் ஆராயப்பட்டன. சங்கத்துக்கு '**ஸ்ரீராமகிருஷ்ண சங்கம்**' என்னும் பெயர் இடப்பட்டது.

சுவாமிஜி சங்கத்தின் பொதுத் தலைவரானுர். ஏனைய செயலாளர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலுமணிக்குப் பலராம் பாபுவினுடைய வீட்டிலே சங்கத்தின் கூட்டங்கள் நடப்பதென விதி ஏற்படுத்தப்பட்டது. வசதி உள்ள போது எல்லாம், சுவாமிஜி கூட்டத்தில் விளங்கினுர் என்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை.

கூட்டம் கலைந்து அங்கத்தவர்கள் போன பின்பு சுவாமிஜி சுவாமி யோகானந்தரை நோக்கி, ''வேலை இவ்வண்ணம் தொடங்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருவருளினுலே இது எவ்வளவு தூரம் பயன்படுகிறது என்பதை நோக்குவோம்.

சுவாமி யோகானந்தர்: இந்த விஷயங்களை நீர் மேலை நாட்டு முறைகளைப் பின் பற்றிச் செய்கின்றீர். ஸ்ரீராமகிருஷ்ணர் இத்தகைய கற்பனைகளைச் சொல்லி வைத்ததுண்டா ?

சுவா: இவையெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணருடைய கருத்துக்கு இயைந்தனவல்லவென நீர் எங்ஙனம் அறிவீர் ? அவர் எல்லையற்ற சிந்தையை உடையவர். வாழ்க்கையைப்பற்றி நீர் கொண்டிருக்கிற எல்லைக்குட்பட்ட எண்ணங்களின் உள்ளே அவரைச் சிறைப்படுத்துதல் கூடுமா ? நான் இந்த எல்லைகளை எல்லாம் உடைத்தெறிந்து, அவரது அளவு கடந்த அன்பின் பெருக்கத்தை உலக முற்றிலும் பரப்புவேன். அவருக்கு ஏதாவது வழிபாட்டுச் செயல்களைப் புரியும்படி அவர் எனக்கு ஒரு போதும் உரைத்ததில்லை.

சமய சாதனைகளைப்பற்றியும், பத்தியைப்பற்றியும், யோகத்தைப் பற்றியும், தியானத்தைப்பற்றியும், இவை போன்ற உயர்ந்த எண்ணங்களையும் உண்மைகளையும்பற்றியும், அவர் நமக்குத் தந்த போதனைகளை வாழ்க்கையிலே கண்டறிந்து, அவற்றை எல்லா மக்களிடையும் பரப்புதல் வேண்டும். சமய பேதங்கள் எல்லாம் உண்மையை அடையும் பலநெறிகளே. சமயங்களினுல் நிறைந்து கிடக்கின்ற இவ்வுலகத்திலே மற்றுமொரு சமயத்தை ஏற்படுத்துவதற்காக நான் பிறக்கவில்லை. பகவானுடைய திருவடிகளிலே தஞ்சம் அடையும் பேற்றை நாம் எய்தினேம். அவருடைய திருமொழியை மூவுலகத்தோர்க்கும் பரப்புவதற்காக நாம் பிறந்திருக்கிரேம்.

சுவாமி யோகானந்தர் இதை மறுத்து ஒன்றும் கூறவில்லை. சுவாமிஜி மேலும் சொல்லுவார்: ''இந்த வாழ்க்கையிலே பல முறை அவருடைய அருளை நான் பெற்றிருக்கின்றேன். அவர் பின்னின்று இந்த வேலைகளை எல்லாம் என்னைக்கொண்டு செய்விக்கின்ருர். பட்டினியினுலே வருந்தி ஒரு மரத்தடியிலே உதவுவாரற்றுக் கிடந்த பொழுதும், கோவணத்துக்கு ஒரு சிறு துணியும் இல்லாது நான் இருந்த பொழுதும், கையில் காசில்லாமல் உலகத்தைச் சுற்றி யாத்திரை செய்யத் தீர்மானித்த பொழுதும், ஸ்ரீராம கிருஷ்ணருடைய திருவருளினுலே பல வழிகளிலுமிருந்து உதவி கிடைத்தது. அதன் பின்பு சிக்காகோ நகரத் தெருவிலே, இந்த விவேகானந்தனைக் காணும்பொருட்டு மக்கள் ஒருவரை ஒருவர் நெருக்கிக்கொண்டு வந்த பொழுதும், எனக்கு ஏற்பட்ட கௌரவம் அனைத்தினையும், அவருடைய கருணையினுலே ஒருபுறம் தள்ளி வைக்கக்கூடியவனுயிருந்தேன். சாதாரண மனிதர்கள் இந்தக் கௌரவத்தில் நூற்றில் ஒரு பாகத்தைப் பெற்ருலும், நிலை குலைந்து உன்மத்தராய்விடுவார்கள். அவருடைய அருளினுலே நான் சென்றவிடமெல்லாம் எனக்கு வெற்றி கிடைத்தது. இந்நாட்டிலே சில முயற்சிகளைச் செய்து நான் என் வாழ்க்கையை முடிக்க வேண்டும். ஆதலால், ஐயங்களை விட்டுவிட்டு எனக்கு உதவி புரிவீர்களாக; அவருடைய திருவருளினுலே எல்லாம் நிறைவேறக் காண்பீர்கள்.''

சுவாமி யோகானந்தர்: ஆம், நீங்கள் விரும்புகிறபடியே அனைத்தும் நிறைவேறுவனவாக! நாங்கள் அனைவரும் உம்முடைய கட்டளைக்குப் பணிந்து நடக்கின்ருேம் அல்லவா? இந்தக் கருமங்களை எல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணர் தங்கள் மூலமாகச் செய்கின்றனர் என்பதை நான் இடையிடையே தெளிவாகக் காண்கின்றேன். ஆயினும், உண்மையைச் சொல்லுமிடத்துச் சிற்சில காலங்களிலே எனக்கு ஐயம் நிகழ்கின்றது. அவர் எவ்வண்ணம் செய்தாரோ, அதினின்று வேறுபட்டு நாம் நடப்பது போலக் காணப்படும்

பொழுது, ஸ்ரீராமகிருஷ்ணருடைய போதனையினின்று நாம் விலகாமல் ஒழுகுகின்றோம் என்பது நிச்சயமா என்னும் வினா என் உள்ளத்தில் எழுகின்றது—அப்பொழுது எதிர்ப்பது போல நின்று உங்களுக்கு எச்சரிக்கை செய்கின்றேன்.

சுவா: உண்மையிலே ஸ்ரீராமகிருஷ்ணருடைய சாதாரண பக்தர்கள் அவரை எவ்வாறு எண்ணினார்களோ, அவ்வாறு அவ்வெண்ணத்தினுள்ளே அவர் கட்டுப்பட்டு நிற்பவரல்லர். எல்லையற்ற குணங்கள் அவரிடத்தில் அமைந்திருந்தன. பிரம்ம ஞானத்தின் எல்லையை ஒருவாறு அளவிடலாம். ஆனால், அவருடைய மனத்தின் ஆழத்தை அளவிடுதல் முடியாத காரியம். அவருடைய கடைக்கண்ணோக்கத்தினால் ஆயிரம் விவேகானந்தர்கள் தோன்றக் கூடும். அப்படிச் செய்யாமல், இம்முறை என்னையே தனித்த கருவியாகக் கொண்டார். இந்த விஷயத்தில் நான் என்ன செய்யலாம்? நினைத்துப் பாரும்.

இதனைச் சொல்லிவிட்டு, சுவாமிஜி வேறொரு காரியத்தின் பொருட்டு வெளியே போனார். சுவாமி யோகானந்தர் சுவாமிஜியினுடைய பல்வேறு வகைப்பட்ட ஆற்றல்களைக் குறித்துப் புகழ்ந்து கொண்டிருந்தார்.

சுவாமிஜி திரும்பி வந்து சிஷ்யரை நோக்கி, ''உங்கள் பக்கங்களிலே ஸ்ரீராமகிருஷ்ணரைக் குறித்து மக்கள் அதிகம் அறிவார்களா?'' என்றார்.

சிஷ்: எங்கள் பக்கத்திலிருந்து நாகமஹர்சயர் மாத்திரமே ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்தார்; அவரிடமிருந்து பலர் ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி அறிந்தனர்; இன்னும் அறிய ஆவல் கொண்டனர். ஆனால், ஸ்ரீராமகிருஷ்ணர் ஆண்டவனுடைய அவதாரம் என்பதை அங்குள்ள மக்கள் அறிந்துகொள்ளவில்லை; என்ன சொன்னாலும் நம்பமாட்டார்கள்.

சுவா: அங்ஙனம் நம்புவது எளிதான காரியம் என்று எண்ணுகிறாயா? எல்லா விஷயங்களிலும் அவரோடு உடனிருந்து முயன்றவர்களும், இந்த உண்மையை அவருடைய திருவாயினின்று பல முறை கேள்விப்பட்டவர்களும், நாளின் இருபத்து நான்கு மணி நேரமும் அவரோடு உடன் உறைந்தவர்களும் ஆகிய நாங்களே இடையிடையே சந்தேகப்படும்பொழுது, மற்றவர்களைப்பற்றிப் பேசுவானேன்?

சிஷ்: ஸ்ரீராமகிருஷ்ணர் தாம் பரிபூரண பிரம்மமெனவும், கடவுளெனவும் தாமாகவே எப்பொழுதாவது சொன்னதுண்டா?

சுவா: ஆம், பல முறை சொல்லியிருக்கின்றார்; எங்கள் எல்லோருக்கும் சொல்லியிருக்கின்றார். ஒரு நாள் காசிப்பூர்ச் சோலையிலே அவரிருக்கும் பொழுது அவருடைய திருமேனி சிதைந்து போகின்ற நிலையிலிருந்தது. அவருடைய படுக்கைக்குச் சமீபத்தி

லிருந்த நான் எனது மனத்திலே, ''இப்பொழுது இவர் தாம் கடவுள் என்பதை வெளியிட்டுச் சொல்வாராயின், இவர் கடவுளென்பதை உண்மையில் நான் நம்புவேன்,'' என்று எண்ணினேன். இது அவர் இவ்வுலக வாழ்வை நீக்கியதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு நிகழ்ந்தது. அவர் உடனே என்னை நிமிர்ந்து பார்த்து, 'எவன் இராமனுயிருந்தானே, எவன் கிருஷ்ணனுயிருந்தானே, உண்மையில் அவனே இவ்வுடலில் இராமகிருஷ்ணனுய் இருக்கின்ருன்; இது வெறுமையாக உனது வேதாந்தக் கருத்தை நோக்கிச் சொல்லியதன்று,'* என்ருர். நான் மௌனமானேன். பகவானுடைய திருவாயிலிருந்து இந்த உண்மையைப் பல முறை கேள்வியுற்றும், எங்களுக்கு இன்னும் முழு நம்பிக்கை வரவில்லை. ஐயத்தினுலும் அல்லலினுலும் எங்கள் நெஞ்சம் கலங்குகின்றது. ஏனைய மக்கள் விரைந்து நம்பவில்லை என்பதைப்பற்றி நாங்கள் என்ன சொல்லலாம்? நம்மைப்போன்று உடலோடு கூடி இருக்கின்ற ஒருவரைக் கடவுளென்று சொல்லுவதும் நம்புவதும் கஷ்டந்தான். 'பரிபூரண நிலையை அடைந்தவர்', 'பிரம்மஞானி' என்ற வரையில் நாம் சொல்லலாம். அவரைக் குறித்துப் 'பிரம்மஞானி' என்ருவது, பெரியோரென்ருவது, மற்றெவ்வகையாகவாவது நீ நினைக்கலாம். அதிலொன்றுமில்லை. ஆனுல், ஸ்ரீராமகிருஷ்ணரைப்போல் எல்லா நிறைவுகளையும் உடைய மனிதர் இவ்வுலகத்தில் வந்ததில்லை என்பதை நீ என்னிடமிருந்து அறிந்துகொள்வாயாக. இக்காலத்திலே இவ்வுலகத்தின் பேரந்தகாரத்திலே இந்தப் பெரியார் பேரொளிச் சுடர் விளக்கமாகக் காணப்படுகிருர். இந்த வெளிச்சத்தினைப் பற்றியே மனிதர்கள் பிறவிக்கடலைக் கடக்கவேண்டியவர்களாயிருக்கின்ருர்கள்.

சிஷ்: ஐய, கண்டும் கேட்டும் அறிந்தாற்ருன் உண்மையான நம்பிக்கை வரும் என்பது எனக்குப் புலப்படுகின்றது. மதுர பாபு ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி எத்தனையோ விஷயங்களை நேரிலே கண்டார் எனக் கேள்விப்பட்டேன். அதனுல், அவருக்கு அதிக அற்புதமான ஒரு நம்பிக்கை இருந்தது.

சுவா: நம்பமாட்டாதவன் கண்ட பின்பும் நம்பமாட்டான்; தான் கண்டது கனவோ மயக்கமோ என்று எண்ணிவிடுவான். கிருஷ்ணருடைய விசுவரூப தரிசனத்தைத் துரியோதனனும் அர்ஜுனனும் கண்டார்கள். அர்ஜுனன் நம்பினுன். துரியோதனன் மந்திர வித்தை என்றெண்ணினுன். ஆண்டவன் நமக்கு உணர்த்தினுலன்றி நாம் ஒன்றையும் உணரமாட்டோம். காணுமலும் கேளாமலும் சிலர் பூரண நம்பிக்கையை அடைகின்றனர்.

---

* பிரம்மத்தை உணர்ந்த பெரியோர் மநுமுதலாக எவரோடும் தம்மை ஒன்றுபடுத்திக் கூறலாம் என வேதாந்த சூத்திரத்தில் (1.1. 30ல்) கூறப்பட்டிருக்கிறது.

வேறு சிலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு அவருடைய எல்லையற்ற ஆற்றல்களைக் கண்ணினாற் கண்டும் ஐயத்தில் ஆழ்ந்திருக்கின்றனர். அவருடைய அருளே இதன் மருமம். அந்த அருளைப் பெறும்பொருட்டு ஒருவன் இடைவிடாமல் முயல வேண்டும்.

சிஷ்: ஐய, அருளைக் குறித்து ஏதாவது விதி உண்டா?

சுவா: உண்டு என்றும் சொல்லலாம்; இல்லை என்றும் சொல்லலாம்.

சிஷ்: அஃது எப்படி?

சுவா: மனம் வாக்குக் காயங்களிலே எப்பொழுதும் தூய்மை உடையவர்களாய், நிறைந்த பத்தி உடையவர்களாய், நித்திய அநித்திய வஸ்து விவேகமுடையவர்களாய், தியானத்திலும் சமாதியிலும் இடையறாது முயன்றுகொண்டிருப்பவர்கள்மீது, ஆண்டவனுடைய கருணை விழுகின்றது. ஆண்டவன் இயற்கையின் விதிகளுக்கு அப்பாலாகி நிற்கின்றான். எவ்வகைச் சட்டங்களுக்கும் அவன் கட்டுப்பட வேண்டுவதில்லை; ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லுவது போலச் சிறு குழந்தையினது தன்மை ஆண்டவனுக்கு உண்டு; பல்லாயிரம் பிறப்புக்களிலே ஆண்டவனை நோக்கி அழைத்தோர் பலருக்கு அவன் தோற்றாதிருப்பதையும், நம்பிக்கையற்ற பாவிகள் என்று நாம் நினைக்கக்கூடியவர்களுக்குக் கணப்பொழுதிலே ஞானம் வந்து எய்துவதையும் காண்கின்றோம். பின்னர்க் கூறப்பட்டவர்களுக்கு ஆண்டவனுடைய கருணை கேளாமலே வந்து எய்துகின்றது. அத்தகைய மனிதன் பழம் பிறப்புகளிலே புண்ணியங்களைச் சேர்த்துவைத்தான் என்று நீ சொல்வாயெனினும், இந்த இரகசியத்தை உணர்ந்துகொள்வது உண்மையில் அரிது தான். ''ஆண்டவனிடத்தில் நம்பிக்கை வை, காற்றிலகப்பட்ட சருகைப்போல அவனுடைய கருணையின் முன்னே நீ இருப்பாயாக,'' எனவும், ''அவனுடைய கருணையாம் காற்றானது எப்பொழுதும் வீசுகின்றது; நீ உன் பாய்களை விரித்துக்கொள்வாயாக,'' எனவும் ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதுண்டு.

சிஷ்: ஐய, இது மிகுந்த அபாயமான கூற்றாய் இருக்கின்றது. இங்கே ஆராய்ச்சிக்கு இடமில்லை என நான் காண்கின்றேன்.

சுவா: துருவி ஆராய்தலும், வாதித்தலும், காலம், தேசம், நியதி என்னும் இவற்றினுட்பட்ட எல்லைக்கீழ் இருக்கின்றன; மாயையின் ஆட்சியின் இருக்கின்றன. மாயா ராஜ்யத்தின் எல்லையினுள்ளே நிற்கின்றான். ஆண்டவன் இவ்வரம்புகளுக்கு அப்பாலாகி அவனுடைய விதி என்று நாம் பேசுகின்றோமாயினும், அவன் எல்லா விதிகளையும் கடந்து நிற்கின்றான். இயற்கையின் விதிகளென நாம் கூறுவன அனைத்தினையும் அவன் படைத்துத் தானே அவையாகி நிற்கின்றான். ஆனால், அவன் அவற்றுக்கு எல்லாம் அப்பாலாகி நிற்கின்றான். யார்மீது அவ

னுடைய கருணை தங்குகிறதோ, அவர் ஒரு கணத்திலே எல்லா விதிகளுக்கும் அப்பாலாகிவிடுகின்றார். ஆதலினாலே, அருளுக்கு ஒரு நியதியில்லை. அது அவனுடைய லீலை, விளையாட்டு. படைக்கப்பட்ட இவ்வுலகம் அனைத்தும் அவனுடைய லீலையே. "**லோகவத்து லீலா கைவல்யம்**—மக்களுள் இருப்பது போல, அது கலப்பற்ற உவகையோடு இணைந்த விளையாட்டு.'' விளையாட்டாக இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து அழிக்கின்றவன், பெரும்பாவிக்கும் தனது கருணையினாலே மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டாதவனா? ஒரு சிலரைச் சமய சாதனை மூலமாகவும், வேறு சிலரை அஃது இன்றியும் மோக்ஷம் அடையப் பண்ணுதல் அவனுடைய திருவுள்ளத்துக்கு இசைந்தவாறு நடக்கின்றது; அது அவனது லீலை.

சிஷ்: ஐய, இது எனக்கு விளங்கவில்லை.

சுவா: நீ இதை விளங்கிக்கொள்ள வேண்டுவதுமில்லை. உன்னுடைய மனமானது இயன்ற வரை அவனைப் பற்றி நிற்பதாக. அப்பொழுதுதான் உலகமாகிய இந்தப் பெரிய மாயா வித்தை தானே பிரிந்து போய்விடும். ஆனால், நீ உறுதியோடு இருக்க வேண்டும்; மனத்தினின்று பொன்னாசை பெண்ணாசைகளை அகற்றிவிட வேண்டும்; பகுத்தறிவால் நித்தியப் பொருளையும் அநித்தியப் பொருளையும் வேறுபடுத்தி நோக்க வேண்டும்—நீ இந்தத் தேகமில்லை என்னும் எண்ணத்திலே சிந்தனை செய்து நிலை பெற்றிருக்க வேண்டும். எங்கும் பரந்திருக்கின்ற ஆன்மாவே நீ என்னும் எண்ணம் எப்பொழுதும் மனத்திலே மாறாதிருக்க வேண்டும். இங்ஙனம் இடையறாது பழகி வரவேண்டும். இதனைப் 'புருஷகாரம்' என்பர். தன் முயற்சியினால் ஆகின்ற இது அவனுடைய அருளின் வேறுபட்டது. இத்தகைய தன் முயற்சியினால் அவனிடத்து உண்மையான நம்பிக்கை உண்டாகும். இதுவே மனித முயற்சியினாலே அடையக்கூடிய உயர்ந்த குறிக்கோள்.

சிறிது நேரம் தாமதித்து, சுவாமிஜி மீட்டும் சொல்லுவார்: ''நீ ஆண்டவனுடைய அருளைப் பெற்றிராவிட்டால், இவ்விடத்துக்கு எப்படி வந்திருத்தல் கூடும்? ஆண்டவனுடைய அருளைப் பெற்றவர்கள் இங்கு வாராமலிருக்க இயலாது,'' எனவும், "அவர்கள் யாராயிருந்தாலும் என்ன செய்துகொண்டிருந்தாலும் இங்கிருந்து வெளிப்பட்ட எண்ணங்களினாலும்,* மொழிகளினாலும் நிச்சயமாகவே கவரப்படுவார்கள்'' எனவும் ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதுண்டு. உன்னுடைய சொந்த உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். ஆண்டவனுடைய அருள் நோக்கமில்லாமல் நாகமஹா

---

* உலக மாதாவினுடைய எண்ணத்திலே முற்றிலும் அமிழ்ந்திருந்த பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், 'இங்கே' என்று கூறியது, 'தேறி வெளிப்பட்டுத் தோன்றிய இந்த நிலையத்தில்' என்னும் கருத்தினது.

சயருடைய கூட்டுறவாகிய பெரும்பாக்கியத்தை நீ அடைந் திருத்தல் கூடுமா? நாகமஹாசயர் ஆண்டவனுடைய அருள் வலி யினுலே ஆன்மிக வாழ்க்கை நிறைவை அடைந்தவர்; "அநேக ஜன்ம ஸம்ஸித்தஸ் ததோயாதி பராங்கதிம்—பல பிறவிகளிலே செய்த சாதனைகளின் நிறைவினுலே ஒருவன் மிக உயர்ந்த படியை அடைகின்ருன்,'' எனக் கீதையில் சொல்லியபடி அடைந் தவர். ஆண்டவனுடைய அருள் இதுவென்று முழுதும் அறிந்தவர். எத்தனையோ பிறவிகளிற்செய்த பெரும்புண்ணியத்திஞலே அவர் போன்ற பெரியாரைக் காணும் பாக்கியம் கிடைக்கின்றது. பத்தி யிலே மிக உயர்ந்தபடிக்குச் சாத்திரங்கள் கூறுகிற இலட்சணங் களெல்லாம் நாகமஹாசயரிடத்திலே வெளிப்பட்டுத் தோன்றின. 'த்ருணுதபி ஸுநீசேன'* எனப் பல முறை நாம் எடுத்துக் கூறுகிற வாக்கியமானது அவரிடத்திலே நிறைவுபெற்றுக் காணப்பட்டது. நாகமஹாசயருடைய திருவடி படிந்த காரணத்திஞலே உங் களுடைய கிழக்கு வங்காளம் உண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டிருக் கிறது.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது மஹா கவியாகிய பாபு கிரீஷ் சந்திரகோஷரைப் போய்ப் பார்க்கக் கருதிச் சுவாமிஜி எழுந்தார். கிரீஷ் பாபுவினுடைய வீட்டினை அடைந்து சுவாமிஜி ஆசனத்தில் அமர்ந்து சொல்லுவாராயினர்: ''கிரீஷ் சந்திரரே, எனது உள்ளத்திலே, இந்நாட்களில் இதனைச் செய்ய வேண்டுமென்றும், அதனைச் செய்ய வேண்டுமென்றும், ஸ்ரீராம கிருஷ்ணர் உரைத்த போதனையை உலகிற்பரப்ப வேண்டு மென்றும், இத்தகைய எண்ணங்கள் அலை மோதிக்கொண் டிருக்கின்றன. இவை இந்தியாவிலே இன்னுமொரு சமய பேதத்தை உண்டாக்கிவிடுமோ என்பதையும் சிந்திக்க வேண்டி யிருக்கிறது. ஆதலினுலே, மிகுந்த ஆராய்ச்சியோடு செயலாற்ற வேண்டியவனுயிருக்கின்றேன். சில வேளை, 'சமயப் பிளவு ஒன்று உண்டுபண்ணப்பட்டாலும் என்ன?' என எண்ணுகின்றேன். ஸ்ரீராமகிருஷ்ணர் ஒருவருடைய ஆன்மிக வாழ்க்கையையும் நிலை குலைக்கவில்லை என்னும் எண்ணம் என்னுடைய உள்ளத்தில் எழு கின்றது; அவர் உள்ளே இருக்கின்ற ஒற்றுமையை நோக்கினுர். இந்த எண்ணத்திஞலே நான் கட்டுண்டு நிற்கின்றேன். இதற் கெல்லாம் நீர் என்ன சொல்லுகிறீர்?''

கிரீஷ் பாபு: இதற்கு நான் என்ன சொல்லலாம்? நீர் அவர் கையிலுள்ள கருவி. அவர் உம்மை எது செய்யும்படி ஏவுகிருரோ, அதனை நீர் செய்ய வேண்டும். இந்த விஷயங்களைப் பற்றி நான் சிந்திப்பதில்லை. பகவானுடைய வலிமையானது உம்மைக்கொண்டு

* "புல்லினுங் கடைப்பட்ட."

தொழில் புரிவிக்கிறது என்பதை நான் தெளிவாகக் காண்கிறேன். அது எனக்குப் பட்டப்பகல் போலத் தெளிவாயிருக்கிறது.

சுவா: நாங்கள் எங்கள் சித்தப்படி காரியங்களைச் செய்கின்றோம். ஆனால், துன்பம், கவலை, மிடி, வறுமை என்னுமிவை எய்தும் பொழுது அவன் தன்னை வெளியிட்டுக் காட்டி நம்மை உண்மைப் பாதையில் வழி நடத்துகிறான். இதனை நான் உணர்ந்து கொண்டேன். அப்படி இருந்தும், அவருடைய பெருமையை நான் அறிந்துகொள்ளாமல் இருக்கின்றேன்.

கி. பா: ஆம், அவருடைய திருவாக்கின்படி "நீர் அதனை முற்றும் அறிவீராயின், அனைத்தும் மறைந்துவிடும்; பின்பு யார் வேலை செய்வார், யார் செய்விப்பார்?"

இதன் பின்பு உரையாடல் அமெரிக்காவைப்பற்றி நிகழ்ந்தது. சுவாமிஜி மிகுந்த ஆர்வத்தோடு அந்த நாட்டின் அற்புதமான செல்வத்தைப்பற்றியும் அங்குள்ள ஆடவர் பெண்டிரின் நன்மை தீமைகளைப்பற்றியும், அவர்களது இன்ப வாழ்க்கையைப்பற்றியும் பேசினார்.

(7)

[இடம்: கல்கத்தா. காலம்: 1897-ஆம் ஆண்டு.]

சில நாட்களாகச் சுவாமிஜி பாக்பஜாரிலே பலராம் வசுவினுடைய வீட்டிலே இருக்கிறார். இன்று ஒரு பூரண சூரிய கிரகணம் நிகழப் போகின்றது. இன்று காலை சிஷ்யர் சுவாமிஜிக்குச் சமையல் செய்ய வேண்டியவர். அதற்காக வந்தபொழுது சுவாமிஜி அவரை நோக்கி, "நல்லது; சமையல் கிழக்கு வங்காள முறையில் இருக்கட்டும். கிரகணம் வருவதற்கு முன்னர் நாமெல்லோரும் உணவை அருந்திவிட வேண்டும்," என்றார்.

வீட்டில் உட்பக்கத்து அறைகள் காலியாய் இருந்தன. சிஷ்யர் அடுக்களைக்குப் போய்ச் சமையல் செய்யத் தொடங்கினார். சுவாமிஜி இடையிடையே நோக்கி உற்சாகமான வார்த்தைகளைக் கூறி, "சாறு கிழக்கு வங்காள முறையிலிருக்கட்டும்," என்று கூறி நகையாடினார்.

சமையல் ஏறக்குறைய முடிந்துவிட்டது. சுவாமிஜி நீராடிய பிறகு திருவமுது செய்ய வந்தார்; தமது ஆசனத்தையும் வட்டிலையும் எடுத்து வைத்துக்கொண்டு, "ஏதாவது முடிந்ததைக் கொண்டு வா; பசிபொறுக்கவில்லை; தாமதிக்கக்கூடாது," என்றார். உண்ணும் சுவாமிஜி கசப்பு உள்ள கறியைப் பெரிதும் விரும்பி, "இதைப்போல நேர்த்தியான பண்டத்தை நான் முன்பு உண்டதில்லை. ஆனால், உறைப்பளவில் உன்னுடைய சாற்றுக்கு நிகராக வேறொன்றும்

இல்லை,'' என்றார். புளிக்கறியை உண்ணும் பொழுது, ''இது பர்த்துவான் நாட்டு முறையாய் இருக்கிறது,'' என்றார்; உண்டு கையலம்பிய பின்னர் அறையினுள்ளே கட்டிலின்மீது உட்கார்ந் திருந்தார். உணவுக்குப் பின்னர்ப் புகை குடித்துக்கொண்டிருக்கும் பொழுது சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''நன்றாய்ச் சமைக்க முடியாதவன் நல்ல சாதுவாதல் இயலாது; மனம் தூய்மையாயிருந் தாலன்றி, இனிய சுவையுள்ள உணவை அமைத்தல் இயலாது,'' என்றார்.

இதன் பின்பு எத்திசையிலுமிருந்து மணியோசையும் சங்க நாதமும் முழங்கின. சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''இப்பொழுது கிரகணம் ஆரம்பித்துவிட்டது; நான் சிறிது நேரம் கண் வளர் கின்றேன்; நீ என் கால்களை வருடுவாயாக,'' என்றார். சிறிது சிறி தாகச் சூரியப்பிம்பம் முழுவதும் கிரகணத்தினால் மறைக்கப்பட்டது. எப்பக்கத்திலும் மாலைக்காலம் போன்ற இருள் பரவிவிட்டது.

கிரகணம் கழிவதற்கு இன்னும் பதினைந்து இருபது நிமிஷம் இருக்கும்பொழுது, சுவாமிஜி படுக்கையினின்றெழுந்து, கைகால் களைக் கழுவிக்கொண்டு, புகை குடிக்கும் பொழுது சிஷ்யரை நோக்கி, நகைமொழியாகப் பின்வருமாறு சொல்லுவாராயினர்:

''கிரகணகாலத்திலே ஒருவன் எதனைச் செய்கிறானே, அவன் அதனை மேல் வருங்காலத்தில் ஒன்று கோடியாகப் பெறுவான் என்று சொல்லுகிறார்கள்; இந்த உடல் நல்ல நித்திரை பெறும்படி உலக மாதாவாகிய மகாமாயை கற்பிக்கவில்லை; கிரகண காலத் திலே சிறிது துயின்றால் எதிர்காலத்தில் அதிகமாகத் துயிலைப் பெற லாம் என்று நினைத்தேன். ஆனால், காரியம் கைகூடவில்லை; பதி னைந்து நிமிஷந்தான் துயின்றேன்.''

இதன் பின்பு சுவாமிஜியினுடைய கட்டளைப்படி சில சுருக்க மான பிரசங்கங்கள் நிகழ்ந்தன. மாலைக்காலத்துக்கு இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. எல்லோரும் மண்டபத்திலே கூடி யிருந்தனர். சுவாமிஜி அவர்களை நோக்கி, ''விரும்பிய வினாவைக் கேட்கலாம்,'' என்று சொன்னார்.

அப்பொழுது சுவாமி சுத்தானந்தர் எழுந்து, ''ஐய, தியானத் தின் உண்மைத் தன்மை என்ன?'' என்று வினவினர்.

சுவா: தியானம் என்பது ஏதாவது ஒரு பொருளைக் குறித்து மனத்தை ஒரு வழிப்படுத்தி நிறுத்துவது. எப்பொருளாயினும் ஒரு பொருளின்மீது மனம் குவிந்து நிற்குமாயின், மற்றெப்பொருளின் மீதும் அதனை ஒரு வழிப்படுத்துவது இயல்வதாகும்.

சிஷ்: சாத்திரங்களிலே 'பொருளைக் குறித்த தியானம், ஒரு பொருளையும் குறியாத தியானம்' என இரு வகையாகக் கூறப்பட் டிருக்கின்றனவே! இவற்றின் கருத்தென்ன? இவற்றினுள் மிக்கது எது?

சுவா: முதலிலே மனத்தின் முன்னிலையில் யாதாயினும் ஒரு பொருளை வைத்துத் தியானம் செய்யப் பயிலவேண்டும். ஒரு காலத்திலே நான் ஒரு கரிய புள்ளியை மனத்தின் முன்னே வைத்துத் தியானிப்பதுண்டு. அந்நாட்களின் இறுதியில் முன்னிருந்த புள்ளி தோற்றுமல் போய்விட்டது. மனமானது காற்றுச் சிறிதுமில்லாத கடலைப் போல அலையின்றி விருத்திகளிலிருந்து ஒழிந்தது; மனமே இல்லாமற் போய்விட்டது. அந்த நிலையில் உரை உணர்வு கடந்த உண்மையை நான் சிறிது நுகர்வது உண்டு. எந்த அற்பப்பொருளைப் பற்றியாயினும் மனத்தைச் சிந்திக்கப்பழக்குவது ஒருமுகமாய சித்தத்துக்கு வழியாகுமென நான் எண்ணுகிறேன்; ஒருவனுடைய மனம், எளிதில் எதனைப்பற்றக்கூடுமோ, அதனைப்பற்றித் தியானித்துப் பழகுதலினுல் விரைவில் அமைதி நிலையை அடைகின்றதென்பது உண்மையே. இந்த நாட்டிலே தேவதைகளின் உருவங்களை வைத்து வழிபடுவது இந்தக் கருத்தினுலேதான். அத்தகைய வழிபாட்டிலிருந்து அற்புதமான ஓவியக்கலை ஓங்கிற்று. அவை எல்லாம் இப்பொழுது இல்லை. தியானத்துக்கு உரிய பொருள் எல்லா மனிதருக்கும் ஒன்றுயிருத்தல் கூடாது. பெரியோர்கள் தாங்கள் எந்தப் புறப்பொருளைத் தியானித்துப் பூரண நிலையை அடைந்தார்களோ, அதனையே உலகுக்குப் போதித்தார்கள். பூரணமாகிய மனச் சாந்தத்தை அடைவதற்கு இந்தத் தியான உருவங்கள் உதவியாக இருப்பன என்னும் உண்மையை மறந்து, மனிதர் இவற்றை அளவு கடந்து போற்றினுர்கள். முழுக்கருத்தையும் கருவிகளிலே செலுத்தினுர்களன்றி, அவற்றுல் எய்தும் பயனை முற்றிலும் மறந்துவிட்டார்கள். மனத்தைத் தொழிலின்றி அசைவற்றிருக்கச் செய்வதே உண்மையான நோக்கம்; யாதாயினும் ஒரு பொருளிலே முற்றிலும் ஆழ்ந்து இருந்தாலன்றி இதனைப் பெறுவது அரிதாகும்.

சிஷ்: மனமானது யாதாயினும் ஒரு பொருளோடு சம்பந்தப்பட்டு முற்றிலும் அமிழ்ந்து இருக்குமாயின், அது எங்களுக்குப் பிரம்ம ஞானத்தைத் தருதல் எவ்வாறு?

சுவா: மனமானது முதலிலே தியானிக்கின்ற பொருளின் வடிவத்தைக் கொள்ளுகின்றதெனினும், பின்பு அதனைப்பற்றிய எண்ணமே அகன்றுவிடுகின்றது. சுத்தமாகிய ‘உள்ளது’ என்னும் அனுபவமே எஞ்சியிருக்கின்றது.

சிஷ்: ஐய, மனம் தியானத்தில் நிலைபெற்ற பின்பும் இச்சைகள் எழுகின்றனவே?

சுவா: இவை பூர்வ சம்ஸ்காரங்களிலிருந்து தோன்றுகின்றன. புத்ததேவர் சமாதியிலே ஆழ்ந்து போகின்ற சமயத்தில் மாரன் வெளிப்பட்டான். மனத்திற்குப் புறம்பே உண்மையில்

மாரன் இல்லை. மனத்தினுடைய பூர்வ சம்ஸ்காரங்களே அவ்வண்ணம் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன.

சிஷ்: பூரண நிலையை அடைவதற்கு முன்பு பயங்கரமான அனுபவங்கள் பல உண்டாகின்றனவெனக் கேள்விப்படுகின்றேமே! அவை எல்லாம் மனத் தோற்றங்கள்தாமா?

சுவா: வேறு என்ன? சாதகன் அக்காலத்தில் அவற்றைத் தன் மனத்தின் புறத்தோற்றங்களென அறிந்துகொள்வதில்லை. ஆயினும், மனத்துக்கு வெளியே வேறொன்றும் இல்லை. நீ உலகம் எனக் காண்கின்ற இதுவும் மனத்துக்கு வெளியே இல்லை. யாவும் மனத்தின் புறத்தோற்றமே. மனம் செயலற்று இருக்கும் பொழுது பிரம்மஞானம் பிறக்கின்றது. அப்பொழுது எல்லா உலகங்களையும் காண்கின்ற அனுபவம் கிடைக்கலாம். "**யம் யம்லோகம் மனஸா ஸம்விபாதி**—எந்த எந்த உலகத்தை ஒருவன் மனத்திலே விரும்பி அழைப்பினும்'' என்றபடி, எது நிச்சயிக்கப்படுகிறதோ, அது உடனே கைகூடும். இத்தகைய பொய்யற்ற சுயேச்சை நிலையை அடைந்த பின்பும், ஒருவன் விழிப்போடு இச்சையறுத்து இருப்பானாயின், அவன் உண்மையாகவே பிரம்மஞானத்தை அடைவான். இந்த நிலையை அடைந்த பின்பும் நெறியினின்று தவறியவன், பல சித்திகளைப் பெறுவான். ஆனால், அடைதற்கரிய பேரின்ப வீட்டை எய்துதல் அரிதாம்.

சுவாமிஜி, 'சிவ சிவ' என்று உச்சரித்து மேலும் சொல்லுவாராயினர்: ''வாழ்க்கையின் பரம ரகசியத்தை அறிவதற்குத் தியாகத்தைவிட வேறு வழியில்லை.—தியாகம், தியாகம், தியாகம்! இது உங்கள் வாழ்க்கையின் நோக்கமாயிருப்பதாக. "**ஸர்வம் வஸ்து பயான்விதம் புவி ந்ருணும் வைராக்ய மேவாபயம்**—உலகத்திலுள்ள எல்லாப்பொருள்களும் மக்களுக்கு அச்சத்தை விளைவிக்கின்றன; வைராக்கியம் மாத்திரமே அச்சமின்மையோடு கூடியிருக்கின்றது.''

(8)

[இடம்: கல்கத்தா. காலம்: 1897-ஆம் ஆண்டு, மார்ச்சு அல்லது ஏப்பிரல் மாதம்.]

சிஷ்யர் இன்று சுவாமிஜியைச் சந்திக்கும் நோக்கமாகப் பாக்பஜாருக்கு வந்த போது சுவாமிஜி வெளியே போக ஆயத்தமாயிருக்கக் கண்டார். மேன்மாடியிலிருந்து கீழே இறங்கி வந்த சுவாமிஜி, சிஷ்யரை நோக்கி, 'என்னோடு வா' என்றார். சிஷ்யரும் பின் தொடர்ந்தார். இருவரும் வாடகை வண்டி ஒன்றில் ஏறித் தெற்கு நோக்கிச் சென்றனர்.

சிஷ்: ஐய, தேவரீர் எங்கே செல்கின்றீர்? தயை செய்து சொல்ல வேண்டும்.

சுவா: நல்லது, என்னோடு வா; தெரிந்துகொள்ளலாம்.

போகுமிடத்தைச் சிஷ்யருக்குத் தெரிவிக்காமல் செல்ல, வண்டியும் பீடன் தெருவை அடைந்தது. சுவாமிஜி பின் வருமாறு சொல்லுவாராயினர்: "உங்களுடைய நாட்டிலே பெண்களுக்குக் கல்வி பயிற்றுவதைக் குறித்து உண்மையான முயற்சி செய்பவரை யான் காணவில்லை. ஆடவர்களாகிய நீங்கள் உங்களது ஆண்மையை விருத்தி செய்யக் கற்றுக்கொள்ளுகிறீர்கள். உங்களுடைய நன்மையிலும் தீமையிலும் பங்கு பெற்று உங்கள் வீட்டிலே உங்களுக்குத் தொண்டு செய்வதற்காகத் தங்கள் உயிரைக் கொடுக்கின்ற பெண்களுடைய கல்விக்காக நீங்கள் என்ன செய்கின்றீர்கள்?"

சிஷ்: ஏன் ஐயா, இந்த நாட்களில் பெண்களுக்கென எத்தனை பள்ளிகளும், கல்லூரிகளும் ஏற்பட்டிருக்கின்றன! அவைகளில் எத்தனை பேர் பி.ஏ., எம்.ஏ. பட்டம் பெறுகின்றனர்!

சுவா: ஆனால், அவை எல்லாம் மேலை நாட்டு முறையிலிருக்கின்றன. உங்களுடைய சமய சாத்திரங்களுக்கு இணங்கத் தேசிய முறையிலே எத்தனை பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன? உங்களுடைய நாட்டிலே பெண்களைப்பற்றிப் பேசுவானேன்? ஆடவர்களுக்கும் தேசிய முறைக் கல்வி கிடைப்பதில்லை. அரசியல் அறிக்கைப் பத்திரங்களின்படி இந்திய நாட்டிலே நூற்றுக்கு மூன்று வீதமோ நான்கு வீதமோதான் கல்வி பெறுகிறார்கள். அதிலும், பெண்டிர் நூற்றுவருள் ஒருவர்தாம்.

அப்படி இல்லாதிருப்பின், நாடு இவ்வளவு கீழான நிலைமை அடைந்ததெப்படி? அறிவு உதித்துக் கல்வி பரவாவிடில், நாட்டிலே எப்படி முன்னேற்றம் உண்டாகும்? எதிர்காலத்துக்கு நலம் புரிபவர்களாகிக் கல்வி என்னும் பாக்கியத்தை இந்த நாட்டிற் பெற்ற ஒரு சிலருள்ளும் இக்கருமத்திலேயே உண்மையாகிய முயற்சி உடையவர்களைக் காண்பது அரிது. பெண்களிடையிலும் பொது மக்களிடையிலும் கல்வி பரவினாலன்றி, இப்பொழுது இருக்கின்ற நிலையைச் சீர்திருத்துவது முடியாதென்பதை நிச்சயமாக அறிந்து கொள்! சில பிரம்மசாரிகளையும், பிரம்மசாரிணிகளையும் பயிற்ற வேண்டுமென்னும் எண்ணம் எனக்கு உண்டு. பிரம்மசாரிகள் நாளடைவிலே சந்நியாசம்பெற்றுக்கொண்டு, கிராமங்கிராமமாக நாடெங்கும் சென்று, பொது மக்களிடையே கல்வி ஒளியைப் பரப்புவதற்கு முயலுவார்கள். பிரம்மசாரிணிகளும் பெண்களினிடையே அவ்வண்ணம் செய்வார்கள். முழு வேலையும் நம் நாட்டு முறையிற் செய்யப்படல் வேண்டும். ஆண் பிள்ளைகளைப் பயிற்றுவதற்கு நிலையங்கள் தொடங்குவது போலப் பெண் பிள்ளைகளைப் பயிற்றுவதற்கும் தொடங்குதல் வேண்டும். நல்லொழுக்கமும் கல்வியுமுள்ள பிரம்மசாரிணிகள் இந்த நிலையங்களிலே கல்வி பயிற்றுந் தொழிலைக் கைக்கொள்ள வேண்டும். இதிகாச புராணங்களும், கலை

நூல்களும், வீட்டுக் கடமைகளும், நல்லொழுக்கத்துக்குரிய முறைகளும் கற்பிக்கப்படல் வேண்டும். இவையெல்லாம் இக்கால விஞ்ஞான சாத்திரத்தை உதவியாகக் கொண்டு கற்பிக்கப்படல் வேண்டும். நல்லொழுக்கத்திலும், ஆன்மிக வாழ்க்கையிலும் பெண்களைப் பயிற்றுதல் வேண்டும். நாளடைவிலே அவர்களை நல்ல வீட்டுத் தாய்மார்களாக வளரச் செய்யவேண்டும். அத்தகைய தாய்மார்களுடைய பிள்ளைகள் சிறப்பினைத் தருகின்ற நல்லொழுக்கத்திலே மேன்மேலும் முன்னேற்றம் அடைவார்கள். கடவுட்பத்தியும் கல்வியுமுள்ள தாய்மார் வாழ்கின்ற மனைகளிலே பெரிய மனிதர் பிறக்கின்றனர். நீங்களோ, பெண்களைக் குழந்தை உண்டாக்கும் இயந்திரமாக்கிவிட்டீர்கள்; ஐயோ ! இதுதானா உங்கள் கல்வியினால் பெறும்பேறு ? பெண்களின் உயர்வு, பொது மக்கள் விழிப்பு ஆகிய இவை முன்னேற வேண்டும். அப்பொழுதுதான் இந்தியாவான நமது நாட்டுக்கு உண்மையான நன்மை உண்டாகும்.

சோரபாகன் என்னும் இடத்துக்குச் சமீபத்திற் போகும்பொழுது சுவாமிஜி, தம்மை மகாகாளி பாடசாலையை நிறுவிய தபஸ்வினி மாதாஜி, பாடசாலையைப் பார்வையிடும்படி அழைத்திருப்பதாகத் தெரிவித்தார். வண்டி பாடசாலையை அடைந்ததும் மூன்று நான்கு பெருமக்கள் சுவாமிஜிக்கு வந்தனை செய்து அவரை மேல் மாடிக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே தபஸ்வினி மாதா எழுந்து நின்று, சுவாமிஜியை வரவேற்று, ஒரு வகுப்புக்கு அழைத்துச் சென்றார். அங்கே நின்ற கன்னியர்கள் சுவாமிஜிக்கு வந்தனை செய்து மாதாஜியினுடைய கட்டளைப்படி சிவநாம சங்கீர்த்தனமாகிய ஒரு சம்ஸ்கிருத தோத்திரத்தைப் பொருத்தமான இராகத்தோடு பாடினார்கள்; அதன் பின் தங்களுக்குக் கற்பிக்கப்பட்டிருந்த பூஜைக் கருமங்களைக் காட்டினார்கள். அதிக உவகையோடும் ஆர்வத்தோடும் சுவாமிஜி அவற்றையெல்லாம் பார்த்துவிட்டு மற்ற வகுப்புகளையும் பார்வையிட்டார். அதன் பின் மாதாஜி ஒரு சிறுமியை அழைத்துக் காளிதாசர் இரகுவமிசத்திலே மூன்றும் சருக்கத்து முதல் சுலோகத்தைத் தெளிவுபடுத்தும்படி கட்டளையிட்டார். சிறுமியும் அவ்வண்ணமே செய்தாள். மாதாஜி கடைப்பிடியோடும் ஊக்கத்தோடும் பெண்களிடையே கல்வி பரப்புகின்ற காரியத்தில் ஓரளவுக்கு அநுகூலமுற்றிருப்பதைச் சுவாமிஜி சந்தோஷத்தோடு தெரிவித்தார். மாதாஜியும் பணிவோடு, ''இந்தச் சிறுமிகளுக்குச் சேவை செய்வதை உலக மாதாவுக்குச் சேவை செய்வதாகக் கருதுகின்றேன். புகழையோ, பிறிதொன்றையோ விரும்பி நான் இப்பாடசாலையை ஆரம்பிக்கவில்லை,'' என்றார்.

மாதாஜியினுடைய வேண்டுகோளின்படி சுவாமிஜி பாடசாலையைப் பற்றிக் குறிப்புப் புத்தகத்தில் எழுதும்பொழுது, ''இந்த இயக்கம் சரியான வழியிலே நடக்கின்றது,'' என்று எழுதினார்.

மாதாஜிக்கு வணக்கஞ்செய்துவிட்டு, சுவாமிஜி வண்டியிலேறி, பாக்பஜாருக்கு வரும் பொழுது, சுவாமிஜிக்கும் சிஷ்யருக்கும் இடையில் பின் வரும் சம்பாஷணை நிகழ்ந்தது:

சுவா: இந்த மகிமை பொருந்திய அம்மையாரின் பிறப்பிடம் எவ்வளவு தூரத்திலுள்ளது ! உலகியல் வாழ்க்கையிலுள்ள அனைத்தினையும் இவர் தியாகம் செய்துவிட்டார்; ஆயினும், மக்களுக்குச் சேவை செய்யும் விஷயத்தில் எவ்வளவு ஊக்கமாயிருக்கிறார் ! இவர் பெண்பாலராயிராவிட்டால், பெண்களுக்குக் கல்வி பயிற்றுகின்ற வகையில் இவ்வளவு முயலுதல் கூடுமா? இங்கு நான் கண்ட அனைத்தும் செவ்வையாயிருக்கின்றன. இல்லற ஆடவர் சிலரை ஆசிரியர்களாக வைத்திருப்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. கல்வி கற்ற கைம்பெண்களும், கன்னிப் பெண்களுமே இங்கு ஆசிரியர்களாய் இருக்க வேண்டும். இந்த நாட்டிலே பெண் பாடசாலைகளிலே ஆண் பிள்ளைகளுக்குத் தொடர்பு இருப்பது கூடாது.

சிஷ்: ஐய, இந்த நாட்டிலே கார்கி, கனு, லீலாவதி, இன்னும் இவர்களைப் போன்ற கல்வி கற்ற ஒழுக்கம் வாய்ந்த பெண்களைப் பெறுவது எப்படி ?

சுவா: இத்தகைய பெண்கள் இந்த நாட்டிலே இப்பொழுது இல்லையென்று எண்ணுகிறாயா ? சீதையும் சாவித்திரியும் வாழ்ந்த இந்த நாட்டிலே, பரதகண்டமாகிய தூய பூமியிலே, ஒழுக்கம், தொண்டு, அன்பு, கருணை, அக மலர்ச்சி, மட்டு மரியாதை என்னும் இவற்றிலே சிறந்த பெண்களைக் காணலாம். இப்படி உலகத்தின் மற்றப் பாகங்களில் காண்பதற்கில்லை. மேலை நாட்டி லுள்ள பெண்கள், பெண்களைப் போலக் காணப்படுவதில்லை; ஆடவர்களைப் போன்று வண்டியோட்டுவதும், அலுவலகங்களில் வேலை செய்வதும், பாடசாலைக்குப் போவதும், ஆசிரியர் கடமை செய்வதுமாயிருக்கிறார்கள். கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தருவதாகிய பெண் தன்மைக்குரிய நாணம் மடம் என்பனவற்றை இந்தியாவிலேதான் காணலாம். இத்தகைய சிறந்த குணங்கள் வாய்ந்தவர்களை உயர்வடையச் செய்வதற்கு நீங்கள் முயலவில்லை; கல்வி அறிவை இவர்களுக்கு ஊட்ட நினைக்கவில்லை. தக்க கல்வி அறிவு பெற்றால் உலகத்திலே மிகச் சிறந்த பெண்களாக இவர்கள் விளங்குவார்கள்.

சிஷ்: மாதாஜி கல்விச்சாலை நடத்திக்கொண்டு வருகிற முறையில் இங்குள்ள சிறுமிகளும் வளர்ந்து, மணம் முடித்து, மற்றைய பெண்கள்போல ஆகிவிடுவார்கள். இந்தச் சிறுமிகள் பிரம்மசரிய நோன்பைக் கைக்கொள்ளுவார்களாயின், தங்களுடைய நாட்டின் முன்னேற்றத்துக்காக வாழ்க்கையைத் தியாகம்

செய்து, நம்முடைய சாத்திரங்களிலே சொல்லப்பட்டிருக்கிற மிக வுயர்ந்த நிலையை அடைவார்கள்.

சுவா: ஆம், எல்லாம் நாளடைவிலே கைகூடும். மக்கட்சமுதாயத்தினுடைய வார்த்தைக்குச் செவி சாயாது பெண்களுடைய மணத்தை நிறுத்தி வைக்கக்கூடிய கல்வி நிறைந்த மனிதர் இந்நாட்டில் இன்னும் பிறக்கவில்லை. தம்மோடு ஒத்த குலத்தவர்கள் குறை கூறுவதற்கு அஞ்சிப் பெண்களுக்குப் பன்னிரண்டு பதின்மூன்று வயது நிரம்புவதற்கு முன்னர் மணம் முடிப்பது இந்த நாட்டு வழக்கம். சம்மத வயதைப்பற்றிய ஒரு சட்டத்தைக் கொண்டு வந்த பொழுது, சமுதாயத் தலைவர் பலர், பத்து லக்ஷம் மக்களை ஒன்றுகூட்டி, 'இந்தச் சட்டம் வேண்டா,' என ஆரவாரம் செய்வித்தனர். மற்ற நாடுகளிலோவென்றால், சட்டத்திற்கு எதிராகக் கூட்டங்கூடாதிருப்பது மாத்திரமன்றி, அத்தகைய இழிவு சமுதாயத்தில் இருக்கின்றதே என்பதை நினைத்து மக்கள் வெட்கத்தினால் தலை குனிந்துவிடுவார்கள்.

சிஷ்: ஆனால், ஐய, பழைய ஸ்மிருதிக்காரர்கள் இளமையிலே மணத்தலாகிய கொள்கையை நியாயமில்லாமல் ஆதரித்திருப்பார்களா? அவர்களுடைய செய்கையிலே ஏதாவது ஓர் உட்கருத்திருக்கலாம்.

சுவா: என்ன உட்கருத்து? தயை செய்து சொல்லுக.

சிஷ்: உதாரணமாக, முதலிலே பெண்கள் இளம்பருவத்தில் மணம் முடித்துத் தம் கணவருடைய வீட்டுக்கு வந்தால், அந்த வீட்டாருடைய பழக்க வழக்கங்களை இளமையிலே பயின்று கொள்ளுவார்கள். மாமன் மாமியாருடைய ஆதரவினாலே வீட்டுக் கடமைகள் செய்கின்ற விஷயத்தில் அவர்கள் திறன் பெறுவார்கள். பெற்றோருடைய மனையிலே வளர்ந்த பெண்கள், ஒழுக்கம் தவறிப்போதலும் கூடும். இளம்பருவத்திலே மணம் செய்துவிட்டால், அவர்கள் ஒழுக்கந்தவற நேராது. மடம், நாணம், தைரியம் ஊக்கம் முதலிய நற்குணங்கள் அவர்களிடம் வளர்ந்தோங்கும்.

சுவா: மற்றொரு கோணத்தில் நின்று நோக்கும்பொழுது, இளமையிலே மணம் செய்வதனால் இளமையிலே குழந்தைகளைப் பெற நேரிடுகிறது என்பதை உணரலாம். இதனால் நம் பெண்கள் சிலர் இளமையிலேயே இறந்துவிடுகிறார்கள்; அவர்களுடைய குழந்தைகளும் வலிமையற்று, ஊரிலுள்ள பிச்சைக்காரர்கள் தொகையை அதிகப்படுத்துகின்றன. பெற்றோருடைய உடல், நலமும் உரமும் இல்லாததாயிருக்குமாயின், அவர்கள் வலிமையும் சுகமுமுள்ள பிள்ளைகளைப் பெறுவது எப்படி? கல்வி நயத்தோடு வளர்ந்து, சிறிது பிந்தி மணம் செய்துகொள்ளுவார்களாயின், நம் அன்னைமார்கள் நாட்டுக்குப் பெருநலத்தைத் தரத்தக்க நல்ல பிள்ளைகளைப் பெறுவார்கள். இந்த இளமைப் பருவ மணப் பழக்கத்தினாலேதான்

ஒவ்வொரு வீட்டிலும் எத்தனையோ கைம்பெண்கள் இருக்கிருர்கள். இளம்பருவ மணம் குறைந்தால், கைம்பெண்களின் தொகையும் குறையும்.

சிஷ்: ஆனல், ஐய, பெண்களுக்கு வயதேறிய பின் மணம் முடிப்பதாயின், அவர்கள் தங்கள் வீட்டுப் பணிகளைச் செய்யாது இருந்துவிடுதல் கூடும். கல்கத்தாவிலே மாமிமார்களே சமையல் முதலிய எல்லா வேலைகளையும் செய்வதால், கல்வி கற்ற மருகிகள் பாதங்களிலே செஞ்சாயத்தைப் பூசிக்கொண்டு சோம்பேறித்தனமாயிருந்துவிடுகிருர்கள் என்பதை நான் கேள்விப்பட்டேன். கிழக்கு வங்காளத்திலே இப்படி ஒரு பொழுதும் நடவாது.

சுவா: உலகத்திலே எல்லாப் பாகங்களிலும் நன்மையும் தீமையும் கலந்திருக்கக் காணலாம். ஒவ்வொரு நாட்டிலும் சமுதாயமானது தனது சொந்த முயற்சியினலே தன்னை உருப்படுத்திக்கொள்ளுகிறது என்பது எனது கருத்து. ஆதலினலே இளம்பருவ மணத்தை நீக்குதல், கைம்பெண் மணம் செய்வித்தல் முதலிய சமூகச் சீர்திருத்தங்களைப்பற்றி நாம் இப்பொழுது கவலைப்பட வேண்டுவதில்லை. சமுதாயத்திலே எல்லா ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் உண்மைக் கல்வியை வழங்குவது நமது கடமை. அந்தக் கல்வியின் பயனுகத் தமக்கு நல்லது எது, தீயது எது என்பதைத் தாமாகவே உணர்ந்து தீயதை விலக்கிவிடுவார்கள். அப்பொழுது சமுதாயத்திலே எதையாவது நாம் வலிந்து நிறுவவோ, அழித்துவிடவோ வேண்டுவதில்லை.

சிஷ்: நம் பெண்களுக்குப் பொருத்தமான கல்வி எதுவென்று நினைக்கிறீர்கள் ?

சுவா: சமயம், கலை, விஞ்ஞானம், வீட்டுப் பணி, சமையல், தையல், சுகாதாரம் என்றின்னவற்றுள்ளே இன்றியமையாத எளிய விஷயங்களைப் பெண்களுக்குக் கற்பிக்க வேண்டும். பொய்க் கதை, நவீனம் என்னும் இவற்றை அவர்கள் தொடுதல் கூடாது. மகாகாளி பாடசாலை பெரிதும் தக்க வழியிலேயே நடக்கின்றது. ஆனல், பூஜைக் கருமங்களை மாத்திரம் படிப்பிப்பது போதாது. கல்வி எல்லா விஷயத்திலும் கண் திறப்பதாய் இருக்க வேண்டும். தன்னலமற்ற உயர்ந்த கொள்கைகளை அவர்கள் கடைப்பிடித்து நடக்கும்படி பெரியோர்களுடைய வரலாறுகளைக் கற்பிக்க வேண்டும். சீதை, சாவித்திரி, தமயந்தி, லீலாவதி, கானு, மீரா என்பவர்கள் போன்ற லட்சிய மாதர்களைக் காட்டிச் சிறுமிகள் இன்னேரைப் பின்பற்றித் தங்களுடைய வாழ்க்கையை உருப்படுத்தும்படி செய்ய வேண்டும்.

வண்டி பாக்பஜாரிலே பாபு பலராம் வசுவினுடைய வீட்டை அடைந்தது. சுவாமிஜி கீழே இறங்கி மேல் மாடிக்குச் சென்ருர்;

அங்குக் கூடியிருந்தோருக்கு மகாகாளி பாடசாலையிலே தாம் கண்ட அனுபவங்களை எடுத்துச் சொன்னார்.

புதிதாகத் தொடங்கப்பட்ட இராமகிருஷ்ண சங்கத்து உறுப்பினர்கள் செய்ய வேண்டிய வேலையைக் குறித்துப் பேசும்பொழுது, சுவாமிஜிபலநியாயங்களைக்காட்டி,கல்விக்கொடை அறிவுக்கொடை என்பவற்றினுடைய சிறப்பை வலியுறுத்தினார். சிஷ்யரை நோக்கி, 'கல்வி கற்பி; கல்வி கற்பி; **நான்ய: பந்தா வித்யதே அயனாய**—இதனினும் சிறந்தவழி இல்லை,' என்றார். கல்வியைப் பரப்பவேண்டும் என்பதற்குத் தடை கூறுகின்ற பகுதியாரைக் குறிப்பிட்டு, ''பிரகலாதர் பக்கம் போக வேண்டா !'' என்றார். (அதன் கருத்தை விசாரித்த பொழுது சுவாமி பின்வருமாறு சொல்லுவாராயினார்:) ''ஓ ! நீங்கள் கேள்விப்பட்டதில்லையா ? பிரகலாதன் அரிவரி படிக்கத் தொடங்கிய பொழுது 'க' என்னும் எழுத்தைக் கண்டதும் கண்ணனுடைய நினைவு வந்து உள்ளம் குழைந்து கண்ணீர் பெருக்கினான். அதன்மேல் படிப்பு நடக்கவில்லை. பிரகலாதனுடைய கண்களிலுள்ள கண்ணீர் அன்புக் கண்ணீர். இக்காலத்து அறிவிலிகளின் கண்ணீர் அச்சக் கண்ணீர். பல பத்தர்களும் அப்படித்தான்.'' கூடியிருந்த அனைவரும் இதனைக்கேட்டு நகைத்தனர்.

சுவாமி யோகானந்தர் சுவாமிஜியை நோக்கி, ''தேவரீருடைய உள்ளத்தில் எதனையாவது செய்ய வேண்டுமென்னும் உற்சாகம் ஏற்பட்டால், அதனை முற்றிலும் செய்து முடித்த பின்பன்றி ஆறியிருக்கமாட்டீர். இப்பொழுது எதனைச் செய்ய விரும்புகிறீரோ, அது ஐயமின்றி நிறைவேறும்,'' என்றார்.

(9)

[இடம்: கல்கத்தா. காலம்: 1897-ஆம் ஆண்டு.]

சுவாமிஜி பாக்பஜாரிலே காலஞ்சென்ற பாபு பலராம் வசுவினுடைய வீட்டிலே இருக்கிறார். சென்ற பத்து நாட்களாகச் சிஷ்யர் சுவாமிஜியோடு ரிக்குவேத சாயன பாஷ்யத்தை ஆராய்ந்து வருகிறார். மிக்க செல்வம் படைத்தவராகிய ஒரு நண்பரின் நூல் நிலையத்திலிருந்து **மாக்ஸ்முல்லர்** பதிப்பித்த ரிக்குவேதம் கொண்டுவரப்பட்டது. சிஷ்யர் வாசித்துச் செல்லும் பொழுது அவரது உச்சரிப்பிலும் வாக்கிய அமைப்புகளிலும் வருகிற தவறுகளைச் சுவாமிஜி திருத்தினார். வேதங்களின் நித்தியத்துவத்தை நிலை நிறுத்தும்பொருட்டுச் சாயனர் காட்டிய நியாயங்களைச் சுவாமிஜி தெளிவுபடுத்தும் பொழுது உரையாசிரியரின் அற்புதமான அறிவுநுட்பத்தைப் பெரிதும் புகழ்ந்தார்; மேலும் கொள்கைகளின் ஆழ்ந்த கருத்தை நுணுக்கமாக ஆராயும்

போது சிற்சில கருத்து வேற்றுமைகளைக் காட்டிச் சாயனரைப் பற்றித் தீங்கற்ற முறையில் நகைச்சுவை ததும்பப் பேசுவார்.

ஆராய்ச்சி இப்படி நடந்துகொண்டிருக்கும் பொழுது, சுவாமிஜி மாக்ஸ்முல்லரைப்பற்றிப் பின் வருமாறு சொல்லுவாரா யினுர்: ''சாயனர் தாமே தமது வேதபாஷியத்துக்குப் புத்துயிர் தந்து, உலகிற்பரப்பும்பொருட்டு மாக்ஸ்முல்லராய்ப் பிறந்தார் என்னும் எண்ணம் எனக்கு உண்டு. நீண்ட நாளாக இவ்வெண் ணம் இருந்தது. மாக்ஸ்முல்லரைப் பார்த்த பின்பு இவ்வெண்ணம் என்னுள்ளத்தில் உறுதிப்பட்டுவிட்டது. வேத வேதாந்தங்களில் ஆழ்ந்த புலமையும், இடையீடில்லாத முயற்சியுமுடைய ஒரு மகா பண்டிதரை இந்த நாட்டிலேயும் காண்பது அரிது. இதற்கு மேலாக அவரிடத்திலே ஸ்ரீராமகிருஷ்ணரைக் குறித்து அளவு கடந்த அன்பும் மதிப்பும் இருக்கக் கண்டேன். இராமகிருஷ்ணர் தெய்வ அவதாரம் என அவர் நம்புகிறுர். நான் விருந்தினனுய் இருந்த பொழுது என் மாட்டு அவர் அன்புடனிருந்தார். கிழவரையும் அவர் மனைவியாரையும் பார்த்த பொழுது, அவர்கள் மற்றுமொரு வசிஷ் டரையும் அருந்ததியையும் போல இல்லறம் நடத்தி வருகிறுர்கள் என எனக்குப் பட்டது. நான் பிரியும் சமயத்தில் கிழவருடைய கண்ணிலே கண்ணீர் வந்தது.

சிஷ்: ஆனுல் ஐய, சாயனரே மாக்ஸ்முல்லராகப் பிறந்திருந் தால், பரிசுத்தம் பொருந்திய இந்தப் பாரத நாட்டிலே பிறவாமல் மிலேச்ச நாட்டிலே ஏன் பிறந்தார்?

சுவா: 'நான் ஆரியன்; மற்றையோர் மிலேச்சர்,' என்று எண்ணுகிற எண்ணம் அறியாமையிலிருந்து பிறந்தது. அறிவு விளக்கத்தின் வடிவமாய் வேதத்துக்குப் பாஷியகாரராய் விளங்கு கின்றவரிடத்து வருணுச்சிரமப் பிரிவுகள் இருத்தல் கூடுமா? அவை எல்லாம் அவருக்குக் கருத்துடைய பொருள்களாகத் தோற்றமாட்டா. மக்களுக்கு நன்மை பயக்கும்பொருட்டு அவர் விரும்பிய இடத்திலே மனிதப் பிறவி எடுக்கலாம். கல்வியும் செல்வ மும் நிறைந்த நாட்டிலே அவர் பிறந்திராவிட்டால், அத்துணைப் பெரிய நூல்களை வெளியிடுவதற்கு வேண்டிய செலவினை யாவர் கொடுப்பார்? ரிக்கு வேதத்தை வெளியிடும்பொருட்டுக் கிழக் கிந்தியக் கம்பெனியார் ஒன்பது லக்ஷம் ரூபாய் கொடுத்தார்கள் என்பதை நீ கேள்விப்படவில்லையா? இந்தப் பணமும் போதியதா யில்லை. இந்த நாட்டிலே வேதம் அறிந்த பண்டிதர் நூற்றுக் கணக்கானவரை மாதச் சம்பளங் கொடுத்து அமர்த்த வேண்டி யிருந்தது. இந்த நாட்டிலே இக்காலத்திலே அறிவை விரும்பிய மக்களாய், கல்வியின்பொருட்டுப் பெரும்பணத்தைச் செல வழிக்கக் கூடியவர்களை யாராவது கண்டதுண்டா? நூல் முக வுரையிலே கையெழுத்துப் பிரதிகளை ஆயத்தப்படுத்துவதற்கு

இருபத்தைந்து ஆண்டுகள் சென்றன என மாக்ஸ்முல்லரே கூறுகிறார். அச்சிடுவதற்குப் பின்னும் இருபது ஆண்டுகள் கழிந்தன. ஒரு நூலை வெளியிடுவதில் தன் வாழ்நாளில் நாற்பத்தைந்து ஆண்டுகள் இடைவிடாது முயலுவது சாதாரண மனிதன் செய்யக்கூடிய செயலா? நினைத்துப் பார்! அவர் சாயனரே என நான் கூறுவது வீண் மனோபாவனையா?

இவ்வண்ணம் மாக்ஸ்முல்லரைப்பற்றிப் பேசி முடிந்த பிறகு பின்பும் வேத வாசிப்புத் தொடங்கப்பட்டது. வேதங்களிலிருந்தே படைக்கப்பட்ட பொருளனைத்தும் வெளிவந்தன எனும் சாயனர் கொள்கையைச் சுவாமிஜி பலவாறு ஆதரித்துப் பேசினார்: ''வேதமென்பது நித்தியமாகிய உண்மைகளின் தொகுதி; வேதரிஷிகள் இந்த உண்மைகளை அநுபவத்தில் கண்டறிந்தார்கள். இவற்றைப் புலன்களுக்கு அப்பாலாகிய காட்சியை உடைய ரிஷிகள் காணலாமேயன்றி, நம்மையொத்த பாமர மனிதர்கள் காண முடியாது. வேதங்களிலே 'ரிஷி' என்பதற்கு 'மந்திர திரஷ்டா' எனப் பொருள் காணப்பட்டது. அம்மொழி கழுத்திலே பூணூலைத் தாங்கிய அந்தணர்களனைவரையும் குறிப்பதில்லை. வருணப் பிரிவு பின்பு ஏற்பட்டது. வேதம் சத்தத்தின் இயற்கையை உடையது. அது எல்லாச் சத்தங்களது தொகுதியாய் இருக்கின்றது. நுணுகிய கருத்தளவாயிருந்து, பின்பு பருப்பொருள் தன்மையிலே வெளிப்படுவது சத்தம் என்பதை வேதங்களினால் அறிகின்றோம். படைக்கப்பட்ட பொருள்கள் அழிந்து போகும் போது மேல் வரும் படைப்புக்கு வேண்டிய நுண்மையான விதைப் படிவங்கள் வேதத்திலே சேர்ந்துவிடுகின்றன. ஆதலினாலே, புராணங்களிலே முதல் அவதாரமாகிய மச்சாவதார காலத்திலே வேதங்கள் வெளிப்பட்டன எனக் கூறப்பட்டது. இந்த அவதாரத்திலே வேதம் வெளிப்பட்டபடியினால், ஏனைய படைப்புப் பேதங்கள் அதன் பின்பு வெளிப்பட்டன. மற்றொரு வகையாகச் சொல்லுமிடத்து வேத சத்தங்களிலிருந்தே படைக்கப்பட்ட பொருள் அனைத்தும் பருப்பொருள் தன்மையாய்த் தோன்றின என்பதை அறியலாம். பருப்பொருள்களுடைய நுண்ணிய உருவம் சத்தத்திலே தங்கியிருக்கிறது. முந்திய கற்பங்களிலும் படைப்பு இவ்வண்ணமே உண்டாகியது. வேதங்களிலுள்ள சந்தியா மந்திரத்திலே, '**சூர்யா சந்த்ரமஸௌதாதா யதாபூர்வ மகல்பயத் திவஞ்சப்ரிதிவீம் சாந்தரிக்ஷ மதோ** ஸுவ:—ஞாயிறு, மதி, நிலம், காற்று, வானுலகு, கீழுலகு, மேலுலகு என்னும் இவையனைத்தையும் படைப்புக் கடவுள் முந்திய கற்பங்களிலே படைத்த முறையாக வெளிப்படுத்தினார்,' எனச் சொல்லப்பட்டிருக்கிறது. தெரிந்துகொண்டாயா?

சிஷ்: ஆனால் ஐய, உண்மையான பருப்பொருள் இல்லாவிட்டால் சத்தம் எதனைக்குறிக்கும்? பெயர்களை இடுவது எப்படி?

சுவா: ஆம், முதலில் நினைக்கும் பொழுது அத்தகைய இடர்ப்பாடு தோன்றும். ஆனால், இதனை நினைத்துப் பார்: கடம் சிறு துண்டுகளாக உடைந்துபோய்விட்டால், கடம் என்ற சத்தம் இல்லாது போய்விடுகின்றதா? இல்லை. ஏனெனில், கடம் காரியப் பட்ட பருப்பொருள்; 'கடம்' என்னும் சத்தமோ அதனது நுண்ணிய நிலை. இம்மாதிரியே ஒவ்வொரு பொருளும் நுண்ணிய நிலையில் சத்தமாத்திரையா யிருக்கின்றது. நாம் கண்டு, கேட்டு, தொட்டு அறிகின்ற பொருள் அனைத்தும் அந்தச் சத்த நிலை காரியப்பட்டுத் தோன்றுகிற பருப்பொருள் வடிவங்களே. இவற்றிடையே காரண காரியத் தொடர்ச்சி இருக்கிறது. தோற்றும் உலகம் அனைத்தும் அழிந்த பின்பும், தோற்றப் பொருள்களின் நுண்ணிய உண்மையாகிய சத்த வடிவம் காரண நிலையிலே பிரம்மத்தினிடத்தே நிலைபெற்று இருக்கிறது. படைப்புக்காலத்திலே காரண வடிவங்கள் தொழிற்பட்டு இயங்குகின்றன; நித்தியமான நாதவடிவாகிய பிரணவம் வெளிப்படுகின்றது; காரண வடிவங்களின் தொகுதியிலிருந்து ஒவ்வொரு பொருளின் சத்த வடிவமும் தோன்றிப் பருப்பொருளாகக் காரியப்படுகிறது. உலகின் உணர்வாகிய காரண சத்தம் பிரம்மமாயிருக்கிறது; அதுவே வேதம். இது சாயனருடைய கருத்து. இப்பொழுது அறிந்து கொண்டாயா?

சிஷ்: இல்லை. ஐய, நான் தெளிவாக அறிந்துகொள்ளவில்லை.

சுவா: நல்லது; உலகிலுள்ள கடங்கள் எல்லாம் அழிந்து போனாலும், 'கடம்' என்னும் சத்தம் அழியாதிருக்கும். அவ்வண்ணமே உலகிலுள்ள பொருள் அனைத்தும் அணுவணுவாகச் சிதைந்து போனாலும், அவற்றைக் குறிக்கிற சத்தங்கள் அறிவு மாத்திரையாக ஏன் இருத்தல் கூடாது? அவற்றிலிருந்து நாளடைவிலே மற்றொரு படைப்பு வருமென்று ஏன் எண்ணுதல் கூடாது?

சிஷ்: ஆனால், ஐய, ஒருவன் 'கடம்', 'கடம்' என்று ஓலமிட்டாலும் கடம் உண்டாகுமா?

சுவா: நீயாவது, நானாவது அவ்வண்ணம் ஓலமிட்டால் ஒன்றும் உண்டாக மாட்டாது. ஆனால், படைக்கும் உறுதியிலே பூரணமாகிய பிரம்மத்தினிடத்திலிருந்து இந்தச் சத்தம் எழுந்தால் கடம் வெளிப்பட்டே தீர வேண்டும். உறுதி பெற்ற சாதகர்கள் தங்கள் சித்த சத்தியினாலே நிகழ முடியாதனவற்றை நிகழ்த்துகிறார்கள் என்றால், பூரணப்படைப்புச் சத்தி வாய்ந்த பிரம்மத்தைப்பற்றிச் சொல்லுவானேன்? படைப்புக்காலத்திலே பிரம்மம் சத்தமாத்திரையாய்த் தோன்றி, அதன் பின் ஓங்காரமாகிய நாதவடிவத்தைக் கொள்ளுகிறது. அடுத்த படியிலே பூர்வ கற்பங்களிலே இருந்த பூ:, புவ:, ஸ்வ:, பசு, மனிதன் முதலிய சத்தவடிவங்கள் பிரணவத்

திலேயிருந்து வெளிப்படுகின்றன. பூரண சித்த சத்தியையுடைய பிரம்மத்திலிருந்து இந்த எண்ணங்கள் வெளிப்பட, இவற்றோடு பொருந்திய பருப்பொருள்களுந் தோன்றிப் பல்வேறு வகைப் பட்ட உலகமாக உருப்படுகின்றன. சத்தமே படைப்புக்கு வித்து என்பதை இப்பொழுது அறிந்துகொண்டாயா ?

சிஷ்: ஆம், ஐய, ஒரு வகையாக அறிந்துகொண்டேன்; மனத்திலே தெளிந்துகொள்ளவில்லை.

சுவா: உண்மை அனுபவத்தினலே அடைதற்குரியதை, தெளிந்த விளக்கத்தைக்கேட்டு அறிந்துகொள்ளுவது எளிதன்று. மனமானது பிரம்மத்தினிடத்தே இரண்டறக் கலக்கச் செல்லும்போது இந்தப் படிகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்ருகக் கடந்து, இறுதியிலே நிர்விகல்ப சமாதியை அடைதல் வேண்டும். சமாதியுட்புகும் பொழுது உலகம் அனைத்தும் ஒன்று கூடிய சத்த வடிவங் களாகக் காணப்படும். அதன் பின் அனைத்தும் ஆழ்ந்த ஓங்காரத் திலே மறைந்துவிடும். அப்பால் உள் பொருளுக்கும் இல் பொருளுக்கும் இடைநீர்மையாக அது காணப்படும். அதுவே நித்தியநாத அனுபவமாகும். அதன்பின் மனமானது பிரம்ம மாகிய உண்மையிலே ஆழ்ந்து அழிந்துபோம்; அனைத்தும் சாந்தி யாகும்.

சிஷ்யர் மௌனமாய் இருந்தார். சுவாமிஜி தெளிவுபடுத்திய வண்ணமாக எடுத்துச் சொல்லுவது, அனைத்தினையும் அநுபவத் திற் கண்டவர்களுக்கன்றி, பிறருக்கு இயலாத காரியம் என்பதை அவர் அறிந்தார்.

சுவாமிஜி மேலும் சொல்லுவாராயினர்: ''அவதார புருஷரைப் போன்ற பெரியோர் சமாதி நிலையிலிருந்து 'நான்', 'எனது' எனப் படும் எல்லையினுள்ளே வரும் பொழுது முதலிலே தோற்றமில்லாத நாதத்தை அனுபவிக்கின்றனர். அது படிப்படியாகத் தெளிவுபட்டு ஓங்கார ரூபமாகின்றது. அதன் பின் உலகத்தின் சத்த ரூப மாகிய எண்ணங்கள் அனுபவத்துக்கு வருகின்றன. கடைசியிலே அப்பொருளாகிய உலகம் காணப்படுகிறது. சாதாரணமான சாதகர்களோவென்ருல், மிகவும் முயன்று நாதத்துக்கு அப்பால் செல்லுகின்ருர்கள். பிரம்ம தரிசனத்தை அடைந்த பின்பு சடப் பொருட்காட்சியாகிய கீழ்நிலைக்கு வர அவர்களால் முடியாது. '**க்ஷீரே நீரவத்**—பாலில் நீர்போல' பிரம்மத்தினிடையேஒன்றுபட்டுப் போகின்ருர்கள்.''

படைப்பைப் பற்றிய இந்தச் சம்பாஷணை நடந்துகொண் டிருக்கும் பொழுது பெரிய நாடக ஆசிரியராகிய பாபு கிரீஷ் சந்திர கோஷர் அவ்விடம் வந்தார். சுவாமிஜி அவருக்கு அன்போடு வந்தனை கூறிவிட்டுச் சிஷ்யருடைய பாடத்தைத் தொடர்ந்து நடத் திக்கொண்டிருந்தார்.

''சத்தங்களும் இரு வகைப்படும்: அவை, வைதிக சத்தம், சாதாரண மானிட சத்தம் என்பன. 'சத்த சத்திப்பிரகாசிகை' என்னும் நியாய நூலிலே இதனை நான் கண்டேன். அங்குள்ள நியாயங்கள் மிகுந்த மனோசத்தியைக் காட்டுகின்றன. நூலின் பரிபாஷையோ என்றால், மூளைக்கு அலுப்பைப் கொடுக்கின்றது.''

அப்பொழுது சுவாமிஜி கிரீஷ் பாபுவைப் பார்த்து, ''கிரீஷரே, நீர் இந்தத் தெய்வத்தையும் அந்தத் தெய்வத்தையும் வழிபட்டுக் கொண்டு நாட்களைக் கழிக்கின்றீரே ! இவற்றையெல்லாம் படிக்க நினைக்கவில்லையா ?'' என்றார்.

கிரீஷ் பாபு, ''என்னருமைச் சகோதரரே, நான் எதனைப் படிப்பேன் ! இவற்றையெல்லாம் ஆராய்கின்ற மனத்தெளிவும் நேரமும் எனக்கு இல்லை. ஆனாலும், இம்முறை ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருவருளினாலே உங்களுடைய வேத வேதாந்தங்களுக்கு வந்தனை கூறிவிட்டுக் கடந்து சென்று ஒரே பாய்ச்சலாக அப்பாலுக்கப்பாலாகிய பொருளை அடைவேன். உம்மால் எத்தனையோ காரியங்கள் நடக்கவேண்டி இருப்பதால், அவர் இந்தக் கல்விகளையெல்லாம் உமக்குக் கொடுத்திருக்கிறார். எங்களுக்கு இவற்றைப் பற்றிய அவசரமில்லை,'' என்று கூறிப் பெரிய ரிக்குவேதப் புத்தகங்களையெல்லாம் பல முறையும் தம்முடைய தலையிலே தொட்டு, ''வேதவடிவாகிய ஸ்ரீராமகிருஷ்ணருக்கு வெற்றி உண்டாகுக !'' என்றார். ஆலோசனையிலே ஆழ்ந்திருந்த சுவாமிஜியைக் கிரீஷ்பாபு சடுதியாக அழைத்து, ''நான் சொல்வதை இன்னும் கேளும். நீர் எவ்வளவோ வேத வேதாந்தங்களையெல்லாம் படித்திருக்கின்றீர். அவற்றிலே இந்த நாட்டிலுள்ள ஆழ்ந்த துன்பங்களுக்கும், ஓலங்களுக்கும், பட்டினிக்கும், விபசாரம் முதலிய கொடிய பாவங்களுக்குந் தப்பி நாங்கள் வெளியேறுதற்கு ஒரு வழி எங்கேயாவது கூறப்பட்டிருக்கிறதா ?'' என வினவி, சமுதாயத்திலே இருக்கின்ற கொடிய துன்பங்களைப் பல முறையும் விரிவாகக் கூறினார். மக்களுடைய துன்பத்தையும் கவலையையும் நினைத்த மாத்திரத்தே கண்களினின்று நீர் சொரியச் சுவாமிஜி பேச்சற்று மௌனமாயிருந்து தம்முடைய உள்ளக்குறிப்பை எங்களுக்கு மறைப்பவர் போல எழுந்து அவ்விடத்தை விட்டு அகன்றார்.

அப்பொழுது, கிரீஷ் பாபு சிஷ்யரை நோக்கி, ''பார்த்தாயா 'வங்காளி' ? என்ன அன்பு நிறைந்த சிந்தை ! உன்னுடைய சுவாமிஜி வேதங்களிலே வல்ல பண்டிதர் என்பதைக் குறித்து நான் அவரை மரியாதை பண்ணவில்லை; மக்களுடைய துயரத்தைக் கேட்டு அழுதுகொண்டு போனாரே, அந்த உணர்ச்சி ததும்பும் உயர்ந்த உள்ளத்திற்காக நான் அவரை மதிக்கின்றேன்,'' என்றார். அதன் பின் சிஷ்யரும் கிரீஷ் பாபுவும் ஒருவரோடொருவர் உரை

யாடிக்கொண்டிருந்தனர். கிரீஷ் பாபு அறிவும் அன்பும் ஒன்றே யாமெனப் பல சான்றுகள் காட்டி விளக்கினர்.

அப்பொழுது சுவாமிஜி திரும்பி வந்து சிஷ்யரை நோக்கி, ''நீங்கள் பேசிக்கொண்டிருந்தது என்ன?'' என்றார். சிஷ்யர், ''ஐய நாங்கள் வேதங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நம்முடைய கிரீஷ் பாபு இந்தப் புத்தகங்களைப் படிக்கவில்லை. ஆனால், இவற்றினது முடிந்த முடிபாகிய உண்மையைக் கூர்மை யாக அறிந்திருக்கிறார்,'' என்றார்.

சுவா: உள்ளபடி குருபத்தி உள்ளவனுக்கு எல்லா உண்மை களும் தாமாகவே வெளிப்படுகின்றன; அவனுக்குப் படிப்பு வேண் டுவதில்லை. ஆனால், இவ்வுலகிலே அத்தகைய பத்தி சிரத்தையைக் காண்பது மிகவும் அரிது. இங்குள்ள நம் நண்பரைப்போல அவற்றை உடையவர் சாத்திரங்களைப் படிக்க வேண்டுவதில்லை என்றாலும், அவர் செய்கின்ற மாதிரி செய்ய வேண்டுமென்று விரைந்து முற்படுகிறவர்கள் தங்களுடைய அழிவையே தேடு கிறார்கள். அவருடைய புத்தி மதிகளைக் கேட்டு நட; ஆனால், அவர் ஒழுகி வருகின்ற ஒழுக்கத்தைப் பார்த்து நடக்க முயலாதே.

சிஷ்: ஆம், ஐய.

சுவா: ஆம் என்பதில் பயனில்லை; நான் சொல்லும் வார்த் தைகளைத் தெளிவாகப்பற்றிக் கொள்வாயாக. சொல்வன எல்லா வற்றுக்கும் அறிவிலியைப்போல 'ஆம்' என்று தலையசைத்துவிடாதே. நான் ஒன்றைச் சொல்லுகிறேனென்று அதனிடத்து மூட நம் பிக்கை வையாதே. முதலில் விசாரித்துத் தெளிவாகப் பற்றிக் கொள்; பின்பு ஏற்றுக்கொள். ஸ்ரீராமகிருஷ்ணர் தாம் கூறிய வார்த்தைகளுள் ஒவ்வொன்றினையும் தெளிவாக அறிந்துகொண்ட பின்பன்றி அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டுவதில்லையென எப் பொழுதும் சொல்லுவார். எல்லோரும் உண்மையென்று சொல்லு கிற சாத்திரங்களையும், தெளிந்த விசாரிப்பையும், தக்க கொள்கை களையும் கொண்டு நீ எந்தப் பாதையை வகுத்துக்கொண்டாயோ, அதன் வழி நட. இடையறாத ஆராய்ச்சியினால் புத்தி தெளிவடை கின்றது. அப்பொழுதுதான் பிரம்மம் தோன்றும். தெளிந்து கொண்டாயா?

சிஷ்: ஆம், ஐய, வேறுவேறு வகைப்பட்டவர்கள் சொல்லு கின்ற பல்வேறு வகைப்பட்ட கருத்து வேற்றுமைகளினாலே மூளை அலைவுறுகின்றது. இந்தக் கணத்திலேயே கிரீஷ் பாபு என்னை நோக்கி, ''இந்தக் கல்வியினால் செய்யக்கூடியது என்ன?'' என்றார். தேவரீர் வந்து, ''கேட்பவற்றையும் படிப்பவற்றையும் சிந்திப்பா யாக!'' என்கின்றீர். நான் செய்யவேண்டுவது என்ன?

சுவா: அவர் சொன்னதும் நான் சொன்னதும் சரிதான். இரண்டு புத்திமதிகளும் வெவ்வேறு நிலைகளிலிருந்து அளிக்கப்பட்

டன. இஃது ஒன்றே வேறுபாடு. 'மூகாஸ்வாதனவத்—ஊமையன் உண்ட இனிய தின்பண்டம் போல' எல்லா நியாயங்களும் பேச் சற்று அடங்கிப்போகிற ஒரு படி ஆன்மிக வாழ்க்கையில் உண்டு. சாத்திரங்களைக் கற்பதனாலும், ஆராய்வதனாலும் பாடஞ்சொல் லுவதாலும் ஆன்மிக வாழ்க்கை அடைவதற்கு மற்றொரு வழி யுண்டு. கல்வி, ஆராய்ச்சி என்னும் இவை வழியாக நீ செல்லவேண்டும். நீ முத்தி அடைவதற்குரிய வழி அதுவே. அறிந்துகொண்டாயா ?

சுவாமிஜியினிடத்திலிருந்து இந்தக் கட்டளையைப் பெற்றதும் சிஷ்யர், 'இது கிரீஷ் பாபுவினுடைய வார்த்தைக்கு மறுமாற்ற மாகும்,' என்று மூடத்தனமாக நினைத்து, ''பார்த்தீரா ஐயா ! வேத வேதாந்தங்களைக் கற்று ஆராய்ச்சி செய்யும்படி சுவாமிஜி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்; அறிந்துகொண்டீரா ?'' என்றார்.

கிரீஷ் பாபு: நல்லது; நீர் அப்படிச் செய்யலாம்; சுவாமிஜி யினுடைய ஆசீர்வாதத்தினால் அந்த வழியில் நீர் சித்தியடை யலாம்.

இந்தத் தருணத்தில் சுவாமி சதானந்தர் அங்கு வந்தார். சுவாமிஜி அவரை நோக்கி, ''கிரீஷர் நமது நாட்டினுடைய துன்பங் களை விரித்துச்சொல்ல நான் கேட்டேன். அதனால் என் இதயம் மிகவும் கவலையுறுகின்றது ! நமது நாட்டுக்காக நீ ஏதாவது செய் யக்கூடுமா ?'' என்றார்.

சதானந்தர், ''தேவரீருடைய கட்டளை பிறக்கட்டும்; அடிமை எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கின்றேன்,'' என்றார்.

சுவா: முதலிலே சிறிய அளவிலே ஏழைகளுக்கும் துன்புற்றோ ருக்கும் ஆறுதல் அளிப்பதற்கும் நோயுற்றோரைக் குணப்படுத்து வதற்கும் ஒரு நிலையத்தைத்தொடங்குவோம். தேடுவாரற்றுவாடும் மக்கள், சாதி சமய வேறுபாடில்லாமல் இவ்விடத்தில் வைத்துக் காப்பாற்றப்படுவார்கள்.

சதானந்தர்: தேவரீருடைய கட்டளைப்படியே ஆகுக.

சுவா: உயிர்களுக்குத் தொண்டு புரிவதைவிடப் பெரியதோர் அறம் இல்லை. இந்தத் தருமத்தைப் பயின்றால் ஒருவனுக்கு '**முக்திகரபலாயதே**—உள்ளங்கை நெல்லிக்கனிபோல முத்தி வந் தெய்தும்.'

பின்பு சுவாமிஜி கிரீஷ் பாபுவை நோக்கி, ''பார்த்தீரா, கிரீஷரே ! உலகத்தின் துன்பங்களை நீக்கும்பொருட்டு ஆயிரம் பிறவி எடுக்கவேண்டியிருப்பினும் எடுப்பேன் என்னும் எண்ணம் என் மனத்தில் உண்டாகிறது. நான் அங்ஙனம் செய்வதனால் ஓர் ஆன்மாவேனும் துயரத்திலிருந்து சிறிதாவது விடுதலையடையு மாயின், நான் நிச்சயமாக அப்படிச் செய்வேன். தனித்து முத்தி யடைவதால் பயனென்ன ? அவ்வழி அனைவரையும் கொண்டு

செல்லவேண்டும். இப்படிப்பட்ட எண்ணம் எனது மனத்திலேற்பட்டு நிற்பது ஏனென்பதைச் சொல்லுவீரா ?'' என்றார்.

கிரீஷ் பாபு: அல்லாவிட்டால் ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றெவரினும் உம்மைச் சிறந்தவரென்று சொல்வானேன் ?

இதனைச் சொல்லிவிட்டு, கிரீஷ் பாபு வேறு அலுவலின் பொருட்டு விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

(10)

[இடம்: ஆலம் பஜார் மடம். காலம்: 1897-ஆம் ஆண்டு.]

சுவாமிஜி மேலை நாட்டிலிருந்து கல்கத்தாவுக்கு முதன் முறை வந்தபோது, தம்மைப் பணிந்த சிரத்தையுள்ள இளைஞர்களுக்கு மிகவும் உயர்வுடைய துறவொழுக்கக் கொள்கைகளை எந்நேரமும் எடுத்துக் காட்டுவார்; துறவறம் பெற விரும்பினோரை அன்போடு மிகவும் ஊக்கப்படுத்துவார். அவருடைய ஆர்வத்தினாலே மன வெழுச்சி அடைந்த பெரும்பேறு பெற்றவர்களாகிய சில இளைஞர்கள், உலகியல் வாழ்க்கையை ஒழித்துச் சுவாமிஜியினுடைய கையினாலே சந்நியாச தீக்ஷை பெற்றுக்கொண்டார்கள். அவருள் முதல் நால்வர் சுவாமிஜியினிடத்திலிருந்து சந்நியாசம் பெற்ற தினத்தில் சிஷ்யரும் ஆலம்பஜார் திருமடத்திலே அமர்ந்திருந்தார்.

சந்நியாசம் விரும்பி வந்த ஒருவரைச் சேர்த்துக்கொள்ள வேண்டாவெனச் சுவாமிஜியினுடைய துறவிச் சகோதரர்கள் பல முறையும் கேட்டு நின்றதாகவும், அதற்குச் சுவாமிஜி மறுமொழியாக, ''பாவிகளையும், துயரம் சுமந்து தாழ்வடைந்தவர்களையும், வாழ்விலே துன்புற்றவர்களையும், முத்தியங்கரைக்குக் கொண்டு செல்வதற்கு நாம் அஞ்சுவோமெனில், வேறு யார்தான் அவர்களைக் கருதப்போகின்றார்கள் ? ஆதலினால், இந்த விஷயத்தில் எனக்கு எதிரிடையாக நில்லாதீர்கள்,'' எனக்கூறிவிட்டதாகவும், மடத்துச் சந்நியாசிகளிடமிருந்து சிஷ்யர் பல முறையும் 'கேள்வியுற்றார். ஈற்றில் வெற்றி பெற்றது. திக்கற்றவர்களுக்குப் புகலிடமாகிய சுவாமிஜியினுடைய கருத்தே தம்முடைய பேரன்பினாலே மேற்குறித்த மனிதருக்குச் சந்நியாசங் கொடுக்கச் சுவாமிஜி தீர்மானித்தார்.

சிஷ்யர் சென்ற இரண்டு நாட்களாகத் திருமடத்திலே இருந்து வருகிறார். சுவாமிஜி அவரை அழைத்து, ''நீ புரோகித வகுப்பைச் சேர்ந்திருக்கிறாய்; ஆதலினால், நாளை இவர்களுடைய சிரார்த்தக் கிரியைகளைச் செய்து வைப்பாயாக. அடுத்த நாள் நான் இவர்களுக்குச் சந்நியாசங் கொடுப்பேன். கிரியைகளைக் கூறும் நூல்களை இன்றைப் பொழுதே ஆராய்ந்து ஆயத்தமாயிரு,'' என்றார். சிஷ்யரும் சுவாமிஜியின் கட்டளைக்குத் தலை வணங்கினார். குறித்த கிரியையும் முறைப்படி செய்யப்பட்டது.

சந்நியாசத்தினுடைய கடுமையான விதிகளை எண்ணிச் சிஷ்யர் மனத்திலே மிகவும் கவலையுற்றார். சுவாமிஜி அவருடைய மனநிலையை அறிந்து, ''இந்த அனுபவத்தினாலே உன் மனத்தில் ஒரு வகை அச்சமுண்டாகிறதல்லவா ?'' என்றார். சிஷ்யர் 'ஆம்' என்று சொன்னவுடனே, சுவாமிஜி அவரை நோக்கி, 'இன்று முதல் இந் நால்வரும் உலகுக்கு இறந்தவராயினர். நாளை முதற்கொண்டு இவர்கள் புது உடலையும், புதிய எண்ணங்களையும், புதிய உடைகளையும் கொள்ளுவார்கள்; பிரம்ம ஞானத்தின் ஒளியினாலே சுடர் வீசுகின்ற தீயைப் போல வாழ்வார்கள் !

நகர்மணா நப்ரஜயா தனேன
த்யாகே நைகே அமிர்தத்வ மானசு:

[''கருமத்தினாலன்றி, புத்திரராலன்றி, செல்வத்தினாலன்றி, தியாகத்தினால் மாத்திரமே சிலர் அமர வாழ்க்கையை அடைந்தனர்.'']

கிரியைகள் முடிந்த பிறகு, நான்கு பிரம்மசாரிகளும் சுவாமிஜியினுடைய திருவடிகளிலே பணிந்து நின்றார்கள். அவர் அவர்களை ஆசிர்வதித்து, ''மனித வாழ்க்கையில் மிகவுயர்ந்த நோன்பைக் கைக்கொள்ளுவதற்கு ஆர்வமுற்று முன் வந்திருக்கிறீர்கள். உங்கள் பிறவி ஆசிர்வதிக்கப்பட்டது; உங்களுடைய குலம் சிறப்படைந்தது; உங்களைக் கருவிலே தாங்கிப் பெற்ற அன்னைமார்கள் பாக்கியசாலிகளானார்கள் ! **குலம் பவித்ரம் ஜனனீகிருதார்த்தா**—குல முழுவதும் தூய்மையடைகின்றது; பெற்ற தாயார் மிகவுயர்ந்த நிலையை அடைகின்றார் !'' என்று கூறினார்.

அன்று பகலுணவின் பின் சுவாமிஜி சந்நியாசத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்; சந்நியாசத்தைப் பெற விரும்பினவர்களை நோக்கி, ''சந்நியாசத்தினுடைய உண்மை நோக்கம் ஆன்மா மோக்ஷமடைதலும், உலகிற்கு நன்மை புரிதலும் ஆகும்—**ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத்ஹிதாயச**'' சந்நியாசம் பெறாமல் ஒருவரும் பிரம்மஞானி ஆதல் இயலாது. வேத வேதாந்தங்கள் இதனையே வெளியிட்டுக் கூறுகின்றன. ''உலக வாழ்க்கையும் வாழ்வோம், பிரம்மஞானிகளும் ஆவோம்,'' எனக் கூறுகிற மக்களுடைய வார்த்தைக்குச் செவி சாய்க்காதீர்கள். மறைந்து இன்பத்தைத் தேடுகிறவர் தம்மைத்தாமே ஆறுதல் செய்துகொள்ளச் சொல்லுகிற முகத்துதி மொழி அது. உலக இன்பங்களுக்கு எள்ளளவேனும் இச்சையுடையவன், நீங்கள் செல்லப் போகின்ற நெறியில் அச்சமடைவான். தன் மனத்திற்கு ஒரு வகை ஆறுதலளிக்கும்பொருட்டுப் போகத்தையும் தியாகத்தையும் சமரசப்படுத்திக் கூறுகிற இயலாத ஒரு கொள்கையைப் போதிப்பான். இவையனைத்தும் பைத்தியக்காரருடைய பிதற்றல் மொழிகள்;

உன்மத்தருடைய பசப்பு வார்த்தைகள்; சாத்திரங்களுக்குப் பகையாகிய சோம்பற்கொள்கைகள்; வேதச் சான்று இல்லாதவை. தியாகமின்றி விடுதலை இல்லை. தியாகமில்லாமல் கடவுளிடத்துள்ள பரபத்தியை அடைதல் இயலாது. தியாகமே மந்திரம். '**நான்ய: பந்தா வித்யதே அயனுய**—இதைவிட வேறு வழியில்லை.' 'இச்சையை முடிபாக உடைய கருமங்கள் அனைத்தினையும் விட்டுவிடுவது சந்நியாசம்— **காம்யாணும் கர்மணும் ந்யாசம் ஸங்யாஸம் கவயோவிது:**,' எனக் கீதா சாத்திரம் கூறுகின்றது.

''உலகக் கவலைகளாகிய பந்தனைகளை அகற்றிவிட்ட பின்பன்றி ஒருவரும் முத்தியை அடைவதில்லை. ஒருவன் உலக வாழ்க்கையில் வாழ்ந்திருப்பதே அவன் யாதாயினும் ஓர் அவாவுக்கு அடிமையாகக் கட்டுண்டிருக்கிருன் என்பதற்குச் சான்ருகின்றது. அல்லாவிட்டால், அவன் அந்த வாழ்க்கையைப் பற்றிக்கொண்டிருப்பானேன்? சிற்றின்பத்துக்கோ, பொன்னுக்கோ, தொழிலுக்கோ, புகழுக்கோ, கல்விக்கோ, புலமைக்கோ அவன் அடிமையாயிருக்க வேண்டும். இவற்றினின்று தன்னை விடுவித்துக்கொண்ட பின்பே மோக்ஷ மார்க்கத்திலே அவன் செல்லுதல் கூடும். மக்கள் விருப்பப்படி வாதிக்கட்டும். ஆனல், பந்தத்தை விட்டுத் துறவு வாழ்க்கையைக் கைப்பற்றினலன்றி, பிரம்மஞானத்தைப்பெற்று மோக்ஷத்தை அடைதல் இயலாது என்னும் துணிபு எனக்கு உண்டு,'' என்று கூறினர்.

சிஷ்: ஐய, சந்நியாசத்தை மட்டும் பெற்றுக்கொள்வதே நற்கதியை அடைவதற்கு வழியாகும் என்பது உங்களது திருவுளக் கருத்தா?

சுவா: நற்கதியை அடைந்தாலும் சரி, அடையாவிட்டாலும் சரி, அது நம்மால் இப்பொழுது ஆராயப்படுவதன்று. இச்சையின் அடிமைத்தனத்தை நீக்கிப் பிறவிச் சக்கரத்தினின்று விடுபட்டாலன்றி, நீ பத்தியையோ, முத்தியையோ அடைதல் இயலாது. பிரம்மஞானிக்குச் செல்வமும் சித்திகளும் பயனற்ற அற்பப் பொருள்களே.

சிஷ்: ஐய, சந்நியாசத்திற்கு விதிக்கப்பட்ட காலமுண்டா? சந்நியாசத்தில் எத்தனை வகை உள்ளன?

சுவா: சந்நியாசத்திற்குக் குறிக்கப்பட்ட காலமில்லை. "**யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்**—தியாக சிந்தை வந்தவுடனே சந்நியாசத்தைத் தழுவ வேண்டும்,'' எனச் சுருதி கூறுகின்றது.

யுவைவ தர்மசீல : ஸ்யாத் அனித்யம் கலு ஜீவிதம்
கோஹி ஜாஞதி கஸ்யாத்ய ம்ருத்யுகாலோ பவிஷ்யதி.

''வாழ்க்கை நிலையற்றதாகவும் அழிந்து போவதாகவும் இருத்தலினலே, இளமையிலேயே தருமத்திலே பற்றுடையவனய் இருக்க

வேண்டும்; உடல் எப்பொழுது விழுந்து போமென்பதை யாவர் அறிவார்?'' என்று யோகவாஸிஷ்டம் கூறுகிறது. சாத்திரங்களிலே நான்குவகைச் சந்நியாசங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன: (1) வித்வத் (2) விவிதிஷ (3) மர்க்கட (4) ஆதுர சந்நியாசம் என்பன. முந்திய பிறவியிலே வளர்ச்சி எய்திய பலமுள்ள சம்ஸ்காரங்கள் இருந்தாலன்றி, உண்மைத் தியாகத்தினுடைய எழுச்சியும், அதன் மூலமாக உடனே உலக வாழ்க்கையைத் துறந்து சந்நியாசம் பெறுதலும் ஏற்படுவதில்லை. இதுவே 'வித்வத் சந்நியாசம்' எனப்படுவது. ஆன்மஞானத்தை அடையப் பேரவா உடையவன் சாத்திரங்களைக் கேட்டும் பயின்றும் சுருதி உண்மையை உணர்ந்த ஞானியிடம் சென்று சந்நியாசம் பெற்றுக்கொள்வது 'விவிதிஷ சந்நியாசம்' எனப்படும். உற்றார் உறவினருடைய மரணம் என்ற இத்தகைய கவலையினலே உந்தப்பட்டுச் சந்நியாசம் ஏற்றுக்கொள்வது 'மர்க்கட சந்நியாசம்' எனப்படும். இது நீண்டு நிலை பெறுவதில்லை. ''இத்தகைய தியாகத்தோடு ஒருவன் அயல் நாட்டுக்குச் சென்று, நல்ல தொழில் கிடைத்துவிட்டால், தன் மனைவியைத் தன்னிடம் வரச் சொல்வான்; அல்லது புதிய ஒரு மனைவியைத் தேடிக்கொள்வான்,'' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் மொழிவதுண்டு. உயிர் வாழ்க்கையில் நம்பிக்கையற்று மரணப்படுக்கையிலே கிடக்கின்ற மனிதனுக்குச் சாத்திரங்களிலே விதிக்கப்பட்டிருக்கிற சந்நியாசம் 'ஆதுர சந்நியாசம்' எனப்படும். அவன் இறந்தால், மிகத் தூய விரதத்தோடு இறக்கிறான். அதனாலாகிய நற்பலன் மறு பிறவியிலே வந்து எய்தும்; இறவாது பிழைத்துக்கொள்வானாயின், தன்னுடைய பழைய வாழ்க்கையை நாடாது, பிரம்ம ஞானத்தை அடையும் உயர்ந்த முயற்சியிலே தனது எஞ்சிய வாழ்நாளைக் கழிப்பான். சுவாமி சிவானந்தர் உன் மாமனாருக்கு இவ்வகைச் சந்நியாசத்தையே கொடுத்தார். அந்த ஏழைமனிதர் இறந்துவிட்டார்; ஆயினும் இந்தத் தீக்ஷையின் மகிமையினலே உயர்ந்த புதிய பிறவியை அடைவார். சந்நியாசத்தைத் தவிர ஆன்ம ஞானத்துக்கு வேறு வழி இல்லை.

சிஷ்: ஐய, அப்படியாயின், இல்வாழ்வாருடைய கதி என்ன?

சுவா: நற்கருமத்தின் பலனாக மேல் வரும் பிறவியிலே அவர்கள் சந்நியாசத்தை அடைவார்கள். இந்தச் சந்நியாசம் வந்தவுடனே எல்லாக் கவலைகளும் நீங்கிவிடுகின்றன. தாமதமின்றி ஒருவன் பிறப்பு இறப்பு ஆகிய இம்மருமங்களுக்கு அப்பால் செல்லுகிறான். எல்லா விதிகளுக்கும் விலக்கு உண்டு. இல்லறத்திலிருந்து அதனை உண்மையாக நிறைவேற்றி, மிகவுயர்ந்த மோக்ஷத்தை அடைந்தவர் ஒருவர் இருவரைக் காணலாம். நாக மஹாசயர் இதற்கு ஓர் உதாரணமாவர்.

சிஷ்: ஐய, உபநிடதங்களும் துறவு வாழ்க்கையையும் சந்நியாசத்தையும் பற்றித் தெளிவாகச் சொல்லவில்லையே !

சுவா: என்ன, பைத்தியக்காரனைப்போலப் பேசுகிறாய் ! துறவு வாழ்க்கையே உபநிடதங்களின் உயிர்நிலை. விவேகத்தோடு கூடிய ஆராய்ச்சியினாலே அறிவு விளக்கத்தைப் பெறுவது உபநிடத ஞானத்தின் முடிந்த இலக்கு ஆகும். புத்தருடைய காலந்தொட்டு, 'புலனுகர்ச்சிகளை விடுவது சமய வாழ்க்கையின் மிகவுயர்ந்த நோக்கம்,' என்னும் எண்ணமானது பரவத்தொடங்கி, இந்திய நாடு முற்றிலும் சந்நியாச விரதம் போதிக்கப்பட்டது. புத்தருடைய துறவுக்கொள்கையை இந்து சமயம் கவர்ந்துகொண்டது. புத்தரைப் போன்ற துறவு வாழ்க்கையுடைய வேறொரு மனிதன் இவ்வுலகத்திலே பிறக்கவில்லை.

சிஷ்: ஐய, அப்படியாயின், புத்தருடைய வருகைக்கு முன்னர் நாட்டிலே தியாக புத்தி அருகியிருந்ததென்றும், சந்நியாசிகளே இல்லை என்றும் கருதுகிறீர்களா ?

சுவா: யார் அப்படிச் சொன்னார் ? சந்நியாச ஆச்சிரமம் முன்னமே இருந்தது. பொது மக்கள் அதுவே வாழ்க்கையின் நோக்கம் என்பதை அறிந்துகொள்ளவில்லை. அவர்களிடம் அதனைப் பெறுவதற்கு உறுதியான ஊக்கமுமிருக்கவில்லை; ஆன்மிக விவேகம் வேரூன்றி இருக்கவில்லை. புத்தர் பல யோகிகளிடத்தும் சாதுக்களிடத்தும் சென்றபொழுதும், தாம் விரும்பிய பேரமைதியைப் பெறவில்லை. அதுபற்றியே மிக மேலான நிலையை அடைவதற்கு அவர் தமது சொந்த முயற்சியையே பற்றுக்கோடாகக் கொண்டார். 'என்னுடைய உடலானது இந்த ஆசனத்திலேயே இருந்து உலர்ந்து வாடிப் போயினும் போகட்டும்—**இஹாசனே சுஷ்யது மேசரீரம்**' என்ற வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டு ஆசனத்தமர்ந்தார்; அறிவு விளக்கமுற்ற புத்தரான பின்பே ஆசனத்திலிருந்து எழுந்தார். இந்தியாவிலே சந்நியாசிகள் உறைகின்ற எத்தனையோ மடங்கள் ஒரு காலத்தில் புத்த சமயத்தவர்களது ஆட்சியில் இருந்தன. இந்துக்கள் அவற்றைத் தம் முறைப்படி திருத்தி அமைத்துத் தம்முடையனவாக்கிக்கொண்டார்கள். உண்மையைச் சொல்லுமிடத்து, புத்தரோடுதான் சந்நியாச ஆச்சிரமம் பிறந்தது என்னலாம். அழிந்துபோய்க் கிடந்த இதன் எலும்பினுள்ளே புத்துயிர் பெய்தவர் அவரே.

சுவாமிஜியினுடைய துறவிச் சகோதரராகிய சுவாமி ராமகிருஷ்ணனந்தர் இடையில் வந்து, சுவாமிஜியை நோக்கி, "பழைய ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் புத்தர் பிறப்பதற்கு முன்னமே இந்தியாவில் நான்கு ஆச்சிரமங்களும் இருந்தன என்பதற்கு நல்ல பிரமாணம் இருக்கின்றதே !" என்றார். அதற்குச் சுவாமிஜி, "புராணங்களிற் பலவும், மனுதர்ம சாத்திரம் போன்றனவும், மகாபார

தத்தில் பெரும்பாகமும் பிற்காலத்தெழுந்தன. பகவான் புத்தர் அவற்றுக்கு முற்பட்டவர்,'' என்றார்.

''அப்படியாயின், புத்த சமயத்தைப்பற்றிய வாதமானது, வேதம், உபநிடதம், ஸ்மிருதி, புராணம் முதலியவற்றிற் காணப்படவேண்டுமே! இந்தப் பழைய நூல்களில் அத்தகைய வாதங்கள் காணப்படாமையால், புத்தர் அவற்றிற்கு முன்னிருந்தார் எனச் சொல்லுவது எங்ஙனம் பொருந்தும்? சில பழைய புராணங்களிலே பௌத்தக் கொள்கைகளை ஓரளவு காணலாம். ஆனால், இவற்றிலிருந்து ஸ்மிருதி, புராணம் முதலிய இந்துக்களின் சமய சாத்திரங்கள் அண்மையில் எழுந்தனவென்று சொல்லுதல் இயலாது,'' என்றார் சுவாமி ராமகிருஷ்ணானந்தர்.

சுவா: தயை செய்து வரலாற்று நூல்களை வாசிப்பாயாக;* அப்படிச் செய்வாயாயின், புத்த சமயக் கொள்கைகளைத் தன்னகத்து ஒன்றுபடுத்திய காரணத்தினாலே இந்து சமயம் பெரிதாயிற்று என்பதை அறிவாய்.

சுவாமி ராமகிருஷ்ணானந்தர்: துறவு, பற்றறுத்தல் முதலாகிய சிறந்த கொள்கைகளைத் தமது வாழ்க்கையிலே செவ்வனே காட்டி இந்து சமயத்தின் உயர்ந்த கொள்கைகளுக்குப் புத்துயிர் அளித்தது மாத்திரமே புத்த தேவருடைய செயல் என எனக்குத் தோன்றுகிறது.

சுவா: இந்த முடிபினைத் தக்க சான்றுகள் கொண்டு விளக்குவதற்கு இயலாது. புத்ததேவர் பிறப்பதற்கு முன்னுள்ள சரித்திரம் நமக்கு அகப்படுவதில்லை. சரித்திரத்தை மாத்திரமே சான்றாகக் கொள்வோமெனின், பழைய காலத்திலுள்ள அந்தகாரத்தின் நடுவே அறிவுச் சுடரோடு விளங்குகிறவர் புத்த தேவரே என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்.

இதன்மேல் சந்நியாசத்தைப்பற்றிய சம்பாஷணை மீண்டும் தொடங்கப்பட்டது. சுவாமிஜி பின் வருமாறு சொல்லுவாராயினர்: ''சந்நியாசத்தினுடைய உற்பத்தி எங்கிருந்தாலுஞ் சரியே. இந்தத் தியாக விரதத்தைக் கைக்கொண்டு பிரம்மஞானியாவதே மனித வாழ்க்கையின் உயர்ந்த நோக்கம். சந்நியாச வாழ்க்கையைத் தழுவுவதே வாழ்வின் மேலான முடிபு. தியாக சிந்தையினாலே உலகியல் வாழ்க்கையை விட்டவர்கள் உண்மையிலேயே பாக்கியவான்கள்.''

* இந்த வாதத்திலே சுவாமிஜி இக்காலத்துச் சரித்திர ஆராய்ச்சியாளர்க்கு ஆதாரமாகவும் அவர்தம் முயற்சிக்கு ஊக்கம் அளிக்கும்பொருட்டும் இவ்வகையாகச் சொல்லுகின்றார். ஆனால், பின்பு சுவாமி சொரூபானந்தருக்கு எழுதிய ஒரு கடிதத்திலே இக்காலப் பண்டிதர்களுடைய முறையிலிருந்து வேறுபட்டு இப்பொழுதுள்ள இந்து சமயக் கொள்கைகள் புத்தருக்கு முன்பு ஆயின என்பதைக் காட்டியிருக்கின்றார். இக்கொள்கைகளைப் பண்டிதர்கள் புத்த சமயத்துக்குச் சார்பாகப் பேச விரும்புவார்கள்.

சிஷ்: ஐய, நாட்டிலே அலைந்து திரிகிற சந்நியாசிகளின் தொகை கூடுவதனுல் நாட்டின் செல்வ நிலைக்குப் பெருந்தடை ஏற்பட்டது என இந்நாட்களில் பலர் கருதுகின்றனர். இந்தச் சந்நியாசிகள் தங்கள் பிழைப்புக்கு இல்வாழ்வாரை ஆதாரமாகக்கொண்டு ஒன்றும் செய்யாது சோம்பராய் அலைந்து திரிகிருர்கள் என்றும், சமுதாய வாழ்க்கைக்கு இவர்களால் எய்தும் பயன் யாதொன்றும் இல்லை என்றும் பலர் கருதுவதுண்டு.

சுவா: உலக முன்னேற்றம் என்பதனுல் நீ கருதுவது என்ன என்பதை முதலிலே எனக்குத் தெளிவுபடுத்துவாயா?

சிஷ்: ஆம், அது, மேலைநாட்டு மக்கள் செய்வது போலக் கல்விப் பயிற்சியினுலே வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைத் தேடிக்கொள்வதும், விஞ்ஞான நூல் வழியாக வாணிபம், கைத்தொழில், பிரயாண வசதி என்ற இத்தகைய வாழ்க்கைக்குரிய ஏற்பாடுகளை வகுத்துக்கொள்ளுவதுமாம்.

சுவா: உண்மையாகிய ராஜச குணம் எழுப்பப்பட்டாலன்றி இவை எல்லாம் கைகூடுமா? இந்தியா முழுவதும் யாத்திரை பண்ணினேன்; ராஜச குணம் வெளிப்பட்டுத் தோன்றுவதை ஓரிடத்திலும் காணவில்லை; எங்கும் தாமச மயமாயிருக்கின்றது. பொது மக்கள் தாமசத்திலே மூழ்கிக் கிடக்கின்றுர்கள்; சந்நியாசிகளிடையே மாத்திரந்தான் ராஜச சத்துவ குணங்களைக் கண்டேன். இவர்கள் இந்நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். உண்மைச் சந்நியாசி இல்வாழ்வார்களுக்கு ஆசிரியன். சந்நியாசிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட அறிவு விளக்கத்தின் உதவியினுலேதான், முன்னுளிலிருந்த இல்வாழ்வார் பலர், வாழ்க்கைப் போராட்டத்திலே பல முறை வெற்றி பெற்றிருக்கின்றனர். இல்வாழ்வார் சாதுக்களிடமிருந்து விலை மதிப்பதற்கரிய அறிவுரையைப் பெற்றுக்கொண்டு, அதற்குப் பதிலாக உணவும் உடையும் கொடுக்கின்றனர். இந்தியாவிலே இத்தகைய கொடுக்கல் வாங்கல் இல்லாதிருந்தால், இந்த நாட்டு மக்களும் அமெரிக்க இந்தியர்களைப் போல இது வரையில் அழிந்து போயிருப்பார்கள். இல்வாழ்வார்கள் சாதுக்களுக்கு இப்பொழுதும் ஒரு பிடி சோறு கொடுத்து வருவதனுலேதான் நற்கதி அடையும் நெறியிலே முன்னேறிச் செல்பவர்களாயிருக்கின்றுர்கள். சந்நியாசிகள் சோம்பலாயிருப்பதில்லை. அவர்களே எல்லாத் தொழிலின் முயற்சிகளுக்கும் ஊற்றுய்த் திகழ்கின்றுர்கள். உயர்ந்த கொள்கைகள் சாதுக்களுடைய வாழ்க்கையில் உருவாகி வருகின்றதை இல்வாழ்வார் காண்கின்றனர்; ஆதலினுலே, அத்தகைய கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுகின்றனர். இங்ஙனம் நிகழ்கின்ற படியாலன்றே இந்நாள் வரையும் கரும மார்க்கத்திலே வாழ்க்கைப் போராட்டத்தைச் செவ்வனே நடத்துவதற்கு அவர்களால் முடிந்

தது ? தூய சாதுக்களின் லட்சிய வாழ்க்கையில் தூய கொள்கைகளைத் தொழிற்படுத்தவும், தொழில் செய்வதற்கு உண்மை வலிமையைப் பெற்றுக்கொள்ளவும் இயல்கின்றது. அனைத்தினையும் கடவுளுக்காகவும் உலகத்தின் நன்மைக்காகவும் துறந்து தமது வாழ்க்கையிலே மிகவுயர்ந்த கொள்கைகளை மேற்கொண்டு ஒழுகுகின்ற சந்நியாசிகள் எல்லா நற்கருமங்களிலும் இல்வாழ்வாருக்கு ஊக்கங் கொடுப்பவர்களாயிருக்கின்றார்கள். இதற்குக் கைம்மாருக இல்வாழ்வார் சாதுக்களுக்குப் பிடிசோறு அளிக்கின்றனர். யாவற்றையும் துறந்து சந்நியாசிகளினுடைய ஆசீர்வாதத்தினாலும், நல்லெண்ணங்களினாலும் மக்களுக்கு எல்லா வகையாகிய வலிமைகளும் உண்டாகின்றன. உணவுப்பொருளைப் படைக்கும் ஆற்றலும் சாதுக்களினுடைய ஆசீர்வாதத்தினால் வந்ததே. இந்த ஆழ்ந்த கருத்துக்களை அறிந்து கொள்ளாத காரணத்தினால், மக்கள் துறவு வாழ்க்கையைக் குறை கூறுகின்றார்கள். மற்ற நாடுகளின் நடவடிக்கை எப்படியாயினும் ஆகுக. இந்நாட்டில் சந்நியாசிகள் மரக்கலத்தை ஓட்டும் மாலுமிகள் போல நமக்கு நன்னெறியைக் காட்டுகின்ற காரணத்தால், இல்வாழ்வான் ஏறிச்செல்லும் வாழ்க்கைக் கப்பல் நீரில் கவிழ்ந்து ஆழ்ந்து போகாமல் துறைமுகம் நோக்கிச் செல்கின்றது.

சிஷ்: ஆனால், ஐய, மக்களுடைய நலத்திற்காக வாழ்கின்ற சந்நியாசிகள் எத்தனை பேர் ?

சுவா: ஆயிரம் வருஷத்திற்கொருமுறை ஸ்ரீராமகிருஷ்ணரைப் போன்ற பெரிய சந்நியாசி ஒருவர் உதித்தலும் போதுமானதே. அவர் வந்து ஆயிரம் வருஷம் கழியும் வரையும், மக்கள் அவருடைய கொள்கைகளையும் கருத்துகளையும் பின்பற்றி நடக்கலாம். துறவு ஆச்சிரமம் இந்த நாட்டில் இருக்கின்றதனாலேதான் இத்தகைய பெரிய மனிதர் இங்குப் பிறக்கின்றனர். வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் ஏற்றத் தாழ்வுகளாகிய குறைகளுண்டு. எத்தனையோ பிழைகளிருந்தும், இந்த மேன்மை பொருந்திய ஆச்சிரமம் மற்றெல்லா ஆச்சிரமங்களையும்விட உயர்வுடையதாய் இருக்கக் காரணமென்ன ? உண்மைச் சந்நியாசிகள் உலகத்துக்கு நன்மை செய்வதற்காகத் தங்களுடைய சொந்த ஈடேற்றத்தையும் இழந்துவிட ஆயத்தராயிருக்கின்றார்கள். இத்தகைய மேன்மை பொருந்திய ஆச்சிரமத்திற்கு நீ நன்றி பாராட்டாதிருந்தால், உனது நிலை மிக இழிந்ததாகும்.

இந்தச் சொற்களை இயம்பும்பொழுது சுவாமிஜியினுடைய திருமுகமண்டலமானது சுடர் விட்டு விளங்கியது. சிஷ்யருடைய கண்களின் முன்னே அவர் சந்நியாசமே உருவெடுத்ததுபோலத் திகழ்ந்தார்.

தம்முடைய திருவுள்ளத்திலே இந்த ஆச்சிரமத்தின் பெருமையை உணருகின்ற தன்மையாலே உண்ணேக்கி நின்று சுவாமிஜி இனிய குரலிலே பின் வருமாறு பாடுவாராயினர்:

வேதாந்த வாக்யேஷு ஸதா ரமந்தோ
பிக்ஷான்ன மாத்ரேண ச துஷ்டி மந்த:
அசோக மந்த: கரணே சரந்த:
கௌபீனவந்த: கலுபாக்யவந்த:

[''வேதாந்த வாக்கியங்களிலே எப்பொழுதும் மனமானது உவகையோடு நிலைபெற்றிருக்க, பிக்ஷையிஞலே கிடைக்கின்ற உணவினை மனத் திருத்தியோடு உண்டு, அந்தக் கரணங்களிலே சோகமின்றி, கோவணமாகிய உடையினைத் தரித்திருக்கும் சந்நியாசிகள் பெரிய பாக்கியசாலிகள்.'']

மீட்டும் சுவாமிஜி சம்பாஷணையைத் தொடங்கிப் பின் வருமாறு மொழிவாராயினர்:

''பலருடைய நன்மைக்காகவும், பலருடைய மகிழ்ச்சிக்காகவும், சந்நியாசி இவ்வுலகத்திலே பிறக்கிருன். சந்நியாசம் பெற்றுக்கொண்டும் இந்த உயர்ந்த கொள்கையை மறந்து போகின்ற துறவியினுடைய வாழ்க்கை பயனற்றதாகின்றது. பிறர் வாழும் பொருட்டுத் தனது உயிரைக் கொடுக்கவும், மக்களுடைய துயரை அகற்றவும், கைம்பெண்ணின் கண்ணீரைத் துடைக்கவும், குழந்தையை இழந்த தாயினுடைய மனத்திற்கு ஆறுதலளிக்கவும், அறிவில்லாத பொது மக்களுக்கு அறிவினை அளித்து நல்வாழ்க்கை நடத்தச் செய்யவும், சமய போதனையினலே எல்லோருக்கும் உலகியல், ஆன்மிகம் இவற்றின் நன்மையை அளிக்கவும், அறிவுச் சுடரினைக் காட்டித் துயில் புரிகின்ற பிரம்மமாகிய சிங்கத்தைத் தட்டி எழுப்பவும் சந்நியாசி இவ்வுலகத்திலே பிறக்கின்ருன்.''

பின்பு சுவாமிஜி தம் துறவிச் சகோதரர்களை நோக்கி, ''நமது வாழ்க்கை **'ஆத்மனே மோக்ஷார்த்தம் ஜகத்ஹிதாயச'**—ஆன்மாவுக்கு விடுதலையளிப்பதற்கும், உலகத்திற்கு நலனை நல்குவதற்கும் அமைந்துள்ளது.' எதற்காகச் சோம்பியிருக்கின்றீர்கள்? எழுந்திருங்கள்! விழித்திருங்கள்! நீங்களும் விழித்து மற்றவர்களையும் விழிக்கச் செய்யுங்கள்! இவ்வுலக வாழ்க்கை முடிவடைவதற்கு முன் இதனல் எய்துதற்கு உரிய பெரிய நன்மையை அடையுங்கள்! எழுந்திருங்கள்! விழித்துக்கொள்ளுங்கள்! கருதிய குறிக்கோள் கைகூடும்வரை நில்லாமல் முன் செல்லுங்கள்!'' என்று கூறினர்.

(11)

[இடம்: ஹௌராவிலே, இராமகிருஷ்ண புரத்திலே, காலஞ்சென்ற நவகோபால கோஷ் பாபுவினுடைய வீடு. காலம்: 1898-ஆம் ஆண்டு, பிப்பிரவரி மாதம், 6-ஆம் தேதி.]

ஹௌராவிலே, இராமகிருஷ்ண புரத்திலே, பாபு நவகோபால கோஷருடைய வீட்டிலே, ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருவுருவத்தை நிறுவும் விழா இன்று நடைபெறுகின்றது. திரு மடத்துச் சந்நியாசிகளும் ஸ்ரீராமகிருஷ்ணருடைய இல்லறப் பத்தர்களும் இவ்விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

சுவாமிஜியின் சிஷ்யர்களும் இராமகிருஷ்ண புரத்திலே உள்ள நீராடு துறையை அடைந்தார்கள். சுவாமிஜி காவி உடை தரித்துத் தலையிலே தலைப்பாகை அணிந்திருந்தார். அவர் கால்களில் பாதரட்சை இல்லை. வீதியின் இரு மருங்கிலும் அவரைப் பார்க்கும்பொருட்டுப் பெருந் திரளான மக்கள் நின்றுகொண்டிருந்தார்கள். சுவாமிஜி ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருவவதாரத்தைச் சிறப்பித்துக் கூறும், ''ஏழைப்பிராம்மணியின் மடியிற் கிடக்கும் இவராரோ ?'' என்று தொடங்குகிற பேர் பெற்ற கீதத்தைப் பாடிக்கொண்டும், தாமே மத்தளத்தை அடித்துக் கொண்டும், திருக்கூட்டத்தின் முன்னே நடந்து சென்றார். குழுமி யிருந்த பத்தர்களெல்லாம் அவரோடு சேர்ந்து கீதத்தின் பல்லவி யைப் பாடினார்கள்.

திருக்கூட்டமானது குறிப்பிட்ட இடத்தை அடைந்தவுடனே சுவாமிஜி கோயிலின் அமைப்பைப் பார்ப்பதற்காக மேன்மாடிக் குச் சென்றார். கோயிலின் தளமானது சலவைக் கற்கள் பாவப் பட்டிருந்தது. நடுவிலே ஓர் அரியணைமீது ஸ்ரீராமகிருஷ்ண ருடைய திருவுருவம் வைக்கப்பட்டிருந்தது. பொருள்களெல்லாம் திரட்டி வைக்கப்பட்டிருந்த ஒழுங்கு நன்கு அமைந்திருந்தது. சுவாமிஜி அதனைக்கண்டு மகிழ்ச்சியுற்றார்.

நவகோபால் பாபுவினுடைய மனைவியார், வீட்டிலிருந்த ஏனைய பெண்களோடு சுவாமிஜியை வணங்கிக் கையிலே விசிறியை எடுத்து வீசத்தொடங்கினர். சுவாமிஜி எல்லா ஏற்பாடுகளையும்பற்றி நயந்து பேச, அந்த அம்மையார் சுவாமிஜியை நோக்கி, ''இந்த வறிய இல்லத்திலே பகவானை வைத்துப் பூசனை புரிவதற்கு எங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது ? தேவரீருடைய பெருங்கருணையினால் இங்கே பகவானைப் பிரதிஷ்டை செய்து எங்களை ஆசீர்வதித்தருள வேண்டும்,'' என்றார்.

சுவாமிஜி, நகை மொழியாக, ''உங்களுடைய பகவானுக்கு இத் தகைய சலவைக்கல் பதித்த வீடு பதினான்கு தலைமுறையிலும் கிடைத்ததில்லை. அவர் கிராமத்திலேயுள்ள ஒரு கூரை வீட்டில்

பிறந்து, ஒரு வகையாகக் காலங்கழித்தார். இவ்வளவு கருத்துடன் நீங்கள் சேவை செய்யும்பொழுது அவர் இங்கு வசிக்காமல் வேறு எங்கு வசிப்பது?'' என்றார். இதனைக்கேட்ட அனைவரும் நகைத்தனர்.

பின்பு சுவாமிஜி திருமேனி முழுதும் திருவெண்ணீறு அணிந்து கொண்டு, ஆசனத்தமர்ந்து, சுவாமி பிரகாசானந்தருடைய உதவியோடு பூசையை முடித்தனர். பூசை முடிந்த பின்னர், பூசை அறையிலிருக்கும் பொழுதே பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருமுன்னிலையில் விழுந்து வணங்குவதற்கு உரிய பின்வரும் மந்திரத்தை அத்தருணத்திலே இயற்றித் திருவாய் மலர்ந்தருளினர்.

ஸ்தாபகாயச தர்மஸ்ய ஸர்வதர்ம ஸ்வரூபிணே
அவதார வரிஷ்டாய ராமகிருஷ்ணாயதேநம:

[''எல்லாத் தருமங்களும் ஓர் உருவெடுத்ததென்ன, தெய்விக அவதாரங்களனைத்தினும் சிறந்த அவதாரமாய் உலகிலே தோன்றி, சமயத்தை நிலைநிறுத்திய ஸ்ரீராமகிருஷ்ணரை வணங்குகின்றேன்!'']

இந்த மந்திரத்தை நவின்றுகொண்டே அனைவரும் ஸ்ரீராமகிருஷ்ணருடைய முன்னிலையில் விழுந்து வணங்கினர்கள். அன்று மாலை சுவாமிஜி பாக்பஜாருக்குத் திரும்பிச் சென்றார்.

(12)

[இடம்: கல்கத்தா, பலராம் பாபுவின் வீடு. காலம்: 1898-ஆம் ஆண்டு]

கடந்த இரண்டு நாட்களாகச் சுவாமிஜி பாக்பஜாரிலே பலராம் பாபுவினுடைய வீட்டிலே வசித்து வருகின்றார். வீட்டின் மேன் மாடியிலே அவர் உலாவிக்கொண்டிருக்கும்போது சிஷ்யரும் இன்னும் நாலைந்து பேரும் அவர் பின் சென்றனர். உலாவிக் கொண்டிருக்கும்பொழுது சுவாமிஜி குரு கோவிந்த சிங்கினுடைய சரித்திரத்தைத் தொடங்கி, அதிலுள்ள பொருள் பலவற்றை மிகுந்த ஆர்வத்தோடு எடுத்துரைத்தார். அளவு கடந்த தியாகத்தினாலும், தவத்தினாலும், தைரியத்தினாலும், முயற்சியினாலும் சீக்கிய மதத்திற்கு அவர் புத்துயிர் அளித்தமையும், முகம்மதிய சமயத்தில் புகுந்திருந்தவர்களை மீட்டும் இந்துக்களாக்கிச் சீக்கிய வகுப்பினுள்ளே சேர்த்துக்கொண்டமையும், ஈற்றிலே நர்மதை நதியின் கரையிலே அவருடைய அற்புதமான வாழ்க்கை முடிவெய்தியதும் ஆகிய இவற்றை எல்லாம் குறித்துச் சுவாமிஜி பேசினர். குரு கோவிந்தரிடத்தில் தீக்ஷை பெற்றுக்கொண்டவர்கள் மிகுந்த

வலிமை படைத்திருந்த விஷயத்தைக் குறித்துச் சொல்லும் பொழுது சுவாமிஜி பின் வரும் சீக்கியப்பாடலை எடுத்துரைத்தார்:

ஸவா லாக் பர் ஏக சடாம்உ
ஜப குரு கோவிந்த நாம ஸுனும்உ

'குரு கோவிந்த சிங் தீக்ஷை செய்தால், ஒரு மனிதன் ஒன்றே கால் லக்ஷம் பகைவரை வெல்ல வல்லமையுள்ளவனுவான்,' என்பது இப்பாடலின் கருத்து. குருவினுடைய சத்தியினுலே சிஷ்யர் ஒவ்வொருவரும் உள்ளத்திலே அற்புதமான தைரியம் பொருந்திய எண்ணங்களினுல் நிறைக்கப்படுவர். இங்ஙனம் சமய வாழ்க்கையின் மகிமையை எடுத்துச் சொல்லும் பொழுது சுவாமிஜியினுடைய விழிகள் அகன்று சுடர் விட்டு விளங்கின. இந்த அதிசயக் காட்சியைக் கண்டவர்கள் மௌனமாகி அவருடைய திருமுக மண்டலத்தைப் பார்த்த வண்ணமாய் இருந்தார்கள்.

சிறிது நேரம் கழித்துச் சிஷ்யர் சுவாமிஜியை நோக்கி, "ஐய, குரு கோவிந்தர் இந்துக்களையும் முஸ்லீம்களையும் தம்முடைய சமயத்தினுள்ளே ஒன்று கூட்டி ஒரு வழிப்படுத்திச் சென்றது மிகவும் அற்புதமாகும்! இந்திய சரித்திரத்திலே இதைப்போன்ற உதாரணம் வேறு இல்லை," என்றுர்.

சுவா: அனைவருக்கும் பொதுவாகிய யாதாயினும் ஒரு தொடர்பு இருந்தாலன்றி, மனிதர் ஒன்று கூடுவதில்லை. கூட்டங்கூட்டியும், சங்கம் நிறுவியும், சொற்பொழிவாற்றியும் பலபடி முயன்றுலும், ஒரே கருத்தில்லாத மக்களை ஒன்று கூட்டுதல் இயலாத காரியம். குருகோவிந்தர் தமது காலத்திலே வாழ்ந்த மக்கள் இந்துக்களாயினும்சரி, முஸ்லீம்களாயினுஞ்சரி, அனைவரும் ஒழுங்கற்றதும் இன்னல் தருவதுமான அரசியலின்கீழே வாழ்ந்து வருவதை எடுத்துக் காட்டினுர். அனைவருக்கும் பொதுவாகிய ஓர் உணர்ச்சியை அவர் தாமாக உண்டுபண்ணவில்லை; இருந்ததனைப் பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டினுர். அதனுல், இந்துக்களும் முஸ்லீம்களும் அவரைப் பின்பற்றி நடந்தார்கள். அவர் பெரிய சத்தி வழிபாட்டினர். இந்திய சரித்திரத்திலே அவர் போன்றவர் மிக அரியர் என்பது உண்மையே.

மாலைக் காலம் அணுகியதும், சுவாமிஜியும் மற்றவர்களும் மேன்மாடியிலுள்ள மண்டபத்துக்கு வந்தார்கள். அப்பொழுது சித்திகளைப்பற்றிய பின் வரும் சம்பாஷணை நிகழ்ந்தது:

"மனத்தை ஒருவழிப்படுத்தி ஓரளவுக்குப் பயிற்சி செய்வதனுலே, சில சித்திகளைப்பெறுதல் கூடும்," எனச் சுவாமிஜி சொல்லி அருகில் நின்ற சிஷ்யரை நோக்கி, "பிறருடைய உள்ளத்தில் உற்றதனை உணர்கின்ற முறைகளைக் கற்றுக்கொள்ள விரும்புகிறுயா? நான் அதனை உனக்கு நாலைந்து நாட்களில் சொல்லி வைக்கிறேன்," என்றுர்.

சிஷ்: ஐய, அதனால் எனக்கு எய்தக்கூடிய பயன் என்ன?

சுவா: பிறருடைய உள்ளத்தில் நிகழ்வனவற்றை அறிந்து கொள்வாய்.

சிஷ்: அதனால் பிரம்ம ஞானத்தை அடைவதற்கு உதவி ஏற்படுமா?

சுவா: சிறிதேனும் இல்லை.

சிஷ்: அப்படியாயின், அந்தச் சாத்திரத்தை நான் படிக்க வேண்டா. ஆயினும், ஐய, சித்து வலிமைகளைப்பற்றித் தேவரீர் நேரிலே கண்டறிந்த விஷயங்களைக் குறித்துத் தேவரீருடைய திருவாக்கினின்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

சுவா: இமயமலைச் சாரலிலே நான் யாத்திரை செய்து வருகின்ற காலத்தில் ஒரு நாளிரவு குறவர் ஊர் ஒன்றில் தங்க நேரிட்டது. மாலைக்காலம் கழித்துச் சிறிது நேரம் சென்ற பின், கிராமத்திலிருந்து பறையொலி கேட்டது. உசாவிய பொழுது கிராமத்திலுள்ள மனிதன் ஒருவனைத் தேவதை பற்றி இருப்பதாக எனக்குப் பணிவிடை செய்தவன் உரைத்தான். அவன் வருந்திக் கேட்டுக்கொண்டதனாலும், விஷயம் என்னவென்று அறியும் விருப்பத்தினாலும் நான் அவ்விடத்துக்குப் போனேன். அங்குப் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். விரித்த தலை மயிரோடு கூடிய நெட்டை மனிதன் ஒருவனைக் காட்டி அவனையே தேவதை பற்றியிருப்பதாகச் சொன்னார்கள். சமீபத்திலே நெருப்பின்மீது ஒரு கோடரியானது பழுக்கக் காய்ச்சப்பட்டிருந்தது. தீப் பிழம்பாயிருந்த அந்த இரும்புக் கோடரியை எடுத்து அந்த மனிதனுடைய அவயவங்களிலும் தலை மயிரிலும் வைத்தார்கள். பழுக்கக் காய்ச்சிய இரும்பு பட்டும், அவனுடைய உடலோ, மயிரோ, சிறிதேனும் எரியவில்லை. அவனுடைய முகத்திலே சிறிதேனும் துன்பக் குறி காணப்படவில்லை. இவ்வதிசயத்தைக் கண்டு நான் பேச்சற்று மௌனமாய் நின்றேன். கிராமத்துத் தலையாரி என்னிடம் வந்து, ''மஹராஜ், கருணைகூர்ந்து இந்த மனிதனுடைய தேவதையை அகற்றிவிட வேண்டும்,'' என்றான். மறுத்துரைக்க முடியாமல், ஏதாவது செய்யவேண்டும் என்றெண்ணி, அந்த மனிதன் அருகிற் சென்றேன். காய்ச்சின கோடரியைப் பரீட்சை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தினால், கருநிறமாய் ஆறிக்கிடந்த அதனை விரலினால் தொட்டேன். அது என் விரலைச் சுட்டுவிட்டது. கையிலே நோவுண்டாக, மாயக் கோடரியைப்பற்றி உள்ளத்திலே எண்ணிய எண்ணங்களெல்லாம் அகன்று போயின. சூடுண்ட விரல் நோவுற்றிருக்க, நான் அந்த மனிதனுடைய சென்னிமீது கையை வைத்து, மந்திரத்தை உச்சரித்தேன். பத்துப் பன்னிரண்டு நிமிடங்களுக்குள் அந்தமனிதன் யாவரும் வியப்புறக் குணமடைந்து விட்டான். அப்பொழுது கிராமத்து மக்கள் என்னை மிகவும் அற்

புதமான மனிதன் என்று நினைத்து, வணக்கம் செலுத்தினுர்கள். எனக்கோ, இந்த விஷயத்தின் அடி முடி ஒன்றும் தெரியவில்லை. நான் ஒன்றும் பேசாமல் என்னை அழைத்து வந்த மனிதனேடு திரும்பிப்போய் அவனுடைய குடிசையை அடைந்தேன். நள்ளிர வாயிற்று. நான் படுக்கச் சென்றேன். நிகழ்ந்தவற்றைப் பற்றி நினைத்த எண்ணத்தினுலும் கைவிரலிலுள்ள நோவினுலும் தூக்கம் வரவில்லை. பழுக்கக் காய்ச்சிய கோடரி பட்டும் அவன் உடல் சுடு படாமல் இருந்ததை எண்ணி, 'ஹொரேஷியோவே ! உன்னுடைய தத்துவ சாத்திரத்தினுல் கனவிலும் காணக்கூடாத எத்தனையோ விஷயங்கள் விண்ணகத்திலும் மண்ணகத்திலும் இருக்கின்றன !' என்னும் புலவர் வாக்குப் பல முறை என் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

சிஷ்: ஐய, இந்த இரகசியத்தின் விளக்கத்தைத் தேவரீர் பின்பாவது உணர்ந்துகொள்ளவில்லையா ?

சுவா: இல்லை. இந்த விஷயத்தின் நினைவு இப்பொழுது வந்தமையினுல், நான் இதனை உனக்கு எடுத்துரைத்தேன்.

இங்ஙனம் சொல்லிப் பின்னும் கூறுவாராயினுர்: ''ஸ்ரீராம கிருஷ்ணர் இத்தகைய சித்திகளை இழித்துக் கூறுவது வழக்கம்; மனமானது இவற்றின் வழிச் சென்ருல், மிகவுயர்ந்த உண்மையை அறிதல் இயலாது என்பது அவரது போதனை. மனிதனுடைய சித்தமானது மிகவும் குறைபாடு உடையது. இல்வாழ்வார் மாத்திர மன்றிச் சாதுக்களிலும் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இந்தச் சித்திகளை அவாவி நிற்கின்றனர். மேலை நாட்டிலே இத்தகைய அற் புதச் சத்திகளைக் கண்டால், மனிதர் மிகவும் வியப்படைவர். ஸ்ரீராமகிருஷ்ணர் தமது பெருங்கருணையினுலே இவை ஆன்மிக வாழ்க்கைக்குத் தடையாயிருக்கின்றன என எடுத்துக்காட்டிய படியால், நாங்கள் இவற்றை மதியாது விடவேண்டியவர்களாய் இருக்கின்ருேம். ஸ்ரீராமகிருஷ்ணருடைய சிஷ்யர்கள் இது காரணத் தால் இத்தகைய அற்புதச் சத்திகளைப் பொருட்படுத்தாதிருப்பதை நீ கண்டிருக்கிருய் அல்லவா ?''

இத்தருணத்தில் சுவாமி யோகானந்தர் சுவாமிஜியை நோக்கி, ''சென்னையிலே தேவரீர் சந்தித்த கீர்த்தி வாய்ந்த பேயோட்டி யைப் பற்றிய செய்தியை நம் வங்காளிக்குச் (சிஷ்யருக்கு) சொல்லக் கூடாதா ?'' என்ருர்.

சிஷ்யர் பெரிதும் பரிந்து கேட்க, சுவாமிஜி பின் வருமாறு சொல்லுவாராயினர்:

''சென்னையிலே - மன்மதநாத பட்டாசாரியருடைய வீட்டிலே நான் இருக்கும் பொழுது, ஓர் இரவு என் தாயார் இறந்து போனதா கக் கனவு கண்டேன். எனது மனம் மிகவும் கவலையுற்றது. நான் அந்த நாட்களில் வீட்டிலுள்ளோருக்குக் கடிதம் எழுதுவதில்லை;

மடத்துக்கும் கடிதம் எழுதுவதில்லை. கனவில் நிகழ்ந்தனவற்றை நான் மன்மதருக்குத் தெரிவித்தவுடனே, அவர் விஷயத்தைப் பற்றிய உண்மைகளை விசாரிக்கும் நோக்கமாகக் கல்கத்தாவுக்குத் தந்திச் செய்தி அனுப்பினார். ஒரு புறத்தில் கனவு என் உள்ளத்தைக் கலக்கியது; மற்றொரு புறத்தில் என் சென்னை நண்பர்கள் நான் அமெரிக்காவுக்குப் போவதற்கு உரிய ஏற்பாடுகள் பலவற்றையும் செய்து உடனே புறப்பட வேண்டும் என்றார்கள். என் அன்னையாரைப்பற்றிய செய்தியை அறிந்துகொள்ளும்வரை எனக்கு இவ்விடம் விட்டுச் செல்வதில் விருப்பம் இல்லை. எனது மனநிலையை அறிந்த மன்மதநாதர், முக்கால நிகழ்ச்சிகளையும் அறிந்து சொல்லகூடிய ஒரு மனிதன் பட்டணத்திலிருந்து சிறிது தூரத்தில் உறைவதாகவும் அவனிடம் போகவேண்டும் என்றும் சொன்னார். மன்மதருடைய வேண்டுகோளுக்கு இணங்கியும் மனத்திலுள்ள அல்லலை நீக்கும்பொருட்டும் அந்த மனிதனிடம் போவதற்குச் சம்மதித்தேன். ஒரு பாகம் புகை வண்டியிலும், மற்றொரு பாகம் நடந்தும் சென்று நானும், மன்மதரும், அழகியசிங்கரும், மற்றொருவரும் குறிப்பிட்ட இடத்தை அடைந்தோம். மயானத்துக்கு அருகில் கரிய நிறமும் மெலிந்த பேய் போன்ற தோற்றமும் உள்ள ஒரு மனிதன் இருக்கக் கண்டோம். அவனோடு நின்றோர் பேய்களை அடக்கி ஆளத்தக்க முழு வலிமை வாய்ந்த மனிதன் அவனே என்று அவர்கள் பேசும் மொழிகளிலே சொன்னார்கள். தொடக்கத்தில் அந்த மனிதன் எங்களைத் திரும்பியும் பார்க்குவில்லை. நாங்கள் வீட்டுக்குத் திரும்ப ஆயத்தப்படும்பொழுது சற்று நிற்கும்படி அவன் எங்களை வேண்டினான். அழகியசிங்கர் அவனுடைய வார்த்தையை எங்களுக்கு விளக்கிச் சொன்னார். அதன் பின் அந்த மனிதன் எழுதுகோலினாலே சில உருவங்களைக் கீறி, சிறிது நேரத்துக்குள் தியானத்திலே அசைவற்றிருந்தான். அப்பொழுது அவன் எனது பெயர், குலம், கோத்திரம், முன்னோர் என்னும் இவற்றைப்பற்றிய செய்திகள் பலவற்றை மொழிந்து, நான் செல்லுமிடங்களிலெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணர் என்னோடு இருப்பதையும் கூறி, என் தாயார் சுகத்தோடு இருப்பதாகவும் பகர்ந்தான்; நான் சமய போதனை செய்வதற்காகத் தொலைநாடுகளுக்குப் போகப் போகிறேன் என்பதையும் செப்பினான். அன்னையாரைப் பற்றி நல்ல செய்தி அறிந்துகொண்டு பட்டணத்துக்குத் திரும்பி வந்தோம். கல்கத்தாவிலிருந்து அன்னையாரின் சுகத்தைக் குறித்து வந்த தந்திச் செய்தியும் அப்பொழுது கிடைத்தது.''

பின்பு சுவாமிஜி, சுவாமி யோகானந்தரை நோக்கி, ''அந்த மனிதன் சொல்லியவை யாவும் சரியாக நடந்தேறின. அதைப் பற்றி நீ எதனைச் சொன்னாலும் சொல்லலாம்,'' எனக் கூறினார்.

சுவாமி யோகானந்தர், ''நீங்கள் இவற்றை எல்லாம்

முன்னமே நம்பாதபடியால் இந்த அனுபவங்களெல்லாம் வேண்டியிருந்தன,'' என மறுமொழி பகர்ந்தார்.

சுவா: தக்க சான்றில்லாமல் எதனையும் நம்புவது மூடத்தனமாகும். மகாமாயையினுடைய இராச்சியத்திலே பிரபஞ்சமாகிய இந்த இந்திர ஜாலத்தோடு இன்னும் எத்தனை மந்திர ஜாலங்களை நான் கண்டேன்! மாயை! அனைத்தும் மாயை! இன்று நெடுநேரம் எத்தனை வீண் வார்த்தைகளெல்லாம் பேசிக்கொண்டிருந்துவிட்டோம்! பேய்களைப்பற்றி நினைத்தால், மனிதர்கள் பேயாய் விடுவார்கள். இரவும் பகலும் அறிந்தோ, அறியாமலோ, 'நித்த சுத்த, முத்த, சுயம்பிரகாசமாகிய ஆன்மா நானே,' என்று நினைப்பவன் பிரம்மஞானி ஆகிறான்.

இதனைச் சொல்லிச் சுவாமிஜி அன்போடு சிஷ்யரை நோக்கி, ''இத்தகைய பயனற்ற எண்ணங்கள் உன் மனத்திலிராவண்ணம் அகற்றிவிடு; நித்தியாநித்தியப் பொருள்களுக்கு இடையேயுள்ள வேறுபாட்டினை விவேகத்தினாலே ஆராய்ந்து பார்; ஆன்மாவை அடைய வேண்டும் என்று முழு மனத்தோடு முயல். ஆன்ம ஞானத்தைவிட உயர்ந்தது பிறிதொன்றில்லை. மற்றவை எல்லாம் மாயை; வெற்று ஜாலம். ஆன்மா மாத்திரமே மாறுபடாத உண்மை. இதனை நான் தெளிந்துகொண்டேன்; ஆனபடியால், மற்றவர்களுக்கும் இதை உணர்த்த முயல்கின்றேன். **"ஏகமே வாத்வயம் பிரம்ம நேஹ நானாஸ்தி கிஞ்சன**—பிரம்மம் ஒன்றே; இரண்டாவது ஒரு பொருளில்லை. இருக்கும் பொருள்கள் பல எனக் கொள்ளப் பட மாட்டா,'' என்றார்.

இரவு பதினொரு மணி வரையும் இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. அதன் பின் உணவருந்தி சுவாமிஜி படுக்கச் சென்றார். சிஷ்யர் அவருடைய அடிகளை வணங்கி விடை பெற்றுக் கொள்ள, சுவாமிஜி அவரை நோக்கி, ''நாளை வருகிறாயா?'' என்றார்.

சிஷ்: ஆம், ஐய, நிச்சயம் வருவேன். பொழுது கழியு முன்னர்த் தேவரீரை ஒரு முறையாவது காண என் மனம் விழைகின்றது.

சுவா: நேரமாய்விட்டது, இப்பொழுது போய் வருவாயாக.

(13)

[இடம்: பேலூரில் வாடகை மடம். காலம்: 1898-ஆம் ஆண்டு.]

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் திதி பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகள் சிறப்புற நிறைவேறியிருந்தன. மங்களகரமாகிய அந்நாளிலே ஆராதனைக்கு வேண்டிய அமைப்புகளை

யெல்லாம் நேரிலே பார்வையிட்ட பின்னர்ச் சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''புனிதம் பொருந்திய முப்புரி நூல்கள் பல கொண்டுவந்து வைத்திருக்கிறாயா ?'' என்றார்.

சிஷ்: ஆம் ஐய, வைத்திருக்கிறேன். தேவரீருடைய திருவுள்ளக் கருத்துப்படி யாவும் ஆயத்தமாயிருக்கின்றன. ஆயினும், இத்தனை முப்புரி நூல்கள் எதற்காக என்பது ஏழையேனுக்குப் புலப்படவில்லை.

சுவா: இருபிறப்பாளர் அனைவருக்கும் முப்புரி நூல் அணிந்துகொள்ளும் உரிமையுண்டு. இவ்விஷயத்துக்கு வேதங்களே பிரமாணமாயிருக்கின்றன. ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜனன தினமாகிய இப்புண்ணிய நாளிலே யார் வருகின்றார்களோ, அவர்களுக்கு நான் முப்புரி நூல் கொடுப்பேன். இம்மக்கள் தங்கள் சொந்த நிலைமையிலிருந்து தாழ்ந்துவிட்டார்கள்; தக்க கழுவாய் செய்து கொண்ட பின்னர் உபநயன உரிமை இவர்களுக்கு உண்டு என்பது சாத்திரங்களின் முடிபு. இப்பெருந்தினம் ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஜனன தினம். அவருடைய திருநாமத்தை உச்சரிப்பவர் தூய்மை உள்ளவர் ஆகின்றனர். இங்குக் கூடியிருக்கின்ற பத்தர்களுக்குத் தூய்மை பொருந்திய முப்புரி நூல் அணிவிப்பது எனது நோக்கம். இப்பொழுது உனக்குத் தெளிவாயிற்றா ?

சிஷ்: தேவரீருடைய கட்டளைப்படி அநேக முப்புரிநூல்களைச் சேகரித்து வைத்திருக்கிறேன். ஆராதனை முடிந்த பின்னர்த் தேவரீருடைய அனுமதியோடு இங்குள்ள பத்தர்களுக்கு இந்தப் பூணூல்களை வழங்கி அணியும்படி செய்வேன்.

சுவா: பிராம்மணரல்லாத பத்தர்களுக்கு இந்தக் காயத்திரி மந்திரத்தை உபதேசிப்பாயாக. (இத்தருணத்தில் சுவாமிஜி ஏற்புடைத்தாகிய ஒரு மந்திரத்தைச் சிஷ்யருக்குத் தெரிவித்தார்.) படிப்படியாக ஸ்ரீராமகிருஷ்ணருடைய பத்தரை மாத்திரமன்றி இந்நாட்டிலுள்ள எல்லா மக்களையுமே பிராம்மணத்துவத்திற்கு உயர்த்தி வைத்தல் வேண்டும். இந்துக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரர் என்பதை நான் திண்ணமாகச் சொல்லுகிறேன். ''தீண்டாதே ! தீண்டாதே !'' என்னும் பெருங்கூச்சலால் நாம் அவர்களைக் கீழ்மைப்படுத்திவிட்டோம். நாடு முழுவதும் கயமை, கோழைத் தனம், பேதைமை என்னும் இவற்றில் மூழ்கிக் கிடக்கின்றது. இந்த மக்களை உயர்த்த வேண்டும். நம்பிக்கையோடும் சிரத்தையோடும் கூடிய வார்த்தைகளை இவர்களுக்கு விரிவாகச் சொல்ல வேண்டும். ''நீங்களும் எங்களைப் போன்ற மனிதர்களே. எங்களுக்குள்ள உரிமை உங்களுக்குமுண்டு,'' என்று நாம் இவர்களுக்கு உரைக்கவேண்டும். அறிந்துகொண்டாயா ?

சிஷ்: ஆம் ஐய, அப்படியே செய்யவேண்டும்.

சுவா: தூய்மை பொருந்திய முப்புரி நூல் அணிவோர்

அனைவரையும் கங்கையிலே நீராடி வரும்படி இயம்புவாயாக. அதன் பின்னர் ஸ்ரீராமகிருஷ்ணர் முன்னிலையில் அவர்கள் மேனி தரையிற்படிய வணங்குவார்களாக. அதன் பின் அவர்களுடைய உபநயனச் சடங்கு நடைபெறும்.

நாற்பது ஐம்பது பக்தர்கள் குறித்த சிஷ்யரிடமிருந்து காயத்திரி மந்திரத்தையும் பூணூலையும் முறைப்படி பெற்றுக் கொண்டார்கள். அத்தருணத்தில் சுவாமிஜியினுடைய திருமுக மண்டலமானது பேருவகையினால் பொலிவுற்று விளங்கியது.

இதற்குச் சற்று நேரத்திற்குப் பின்னர், கல்கத்தாவிலிருந்து ஸ்ரீஜத் கிரீஷ்சந்திர கோஷர் திருமடத்திற்கு வந்து சேர்ந்தார்.

சுவாமிஜியினுடைய திருவுள்ளப் பாங்கின் வண்ணம் சங்கீதத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றன. திருமடத்துச் சந்நியாசிகள் சுவாமிஜியைச் சிவயோகி போல அலங்கரித்தார்கள்.

மெல்லிய இனிய குரலிலே தம்பூராவோடு ''குசலம் ராம ராமேதி'' எனத் தொடங்குகிற பாடலைச் சுவாமிஜி பாடினார். பாடல் முடிந்ததும், ''ராம, ராம, ஸ்ரீராம, ராம'' என்னும் தூய நாமத்தை உளங்கவர் வனப்பினோடு இசைத்து அருளினார். அவருடைய கண்கள் பாதி மூடியிருந்தன. அவருக்கு இயல்பாகவே உள்ள முகப்பொலிவு இன்று நூறு மடங்கு அதிகமாய்த் தோன்றியது. அரை மணி நேரம் அனைவரும் பரவசப்பட்டிருந்தனர்.

ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம் முடிந்த பின்னர், நிலைபெற்ற உள்ளக்கிளர்ச்சியோடு ஸ்ரீராமசந்திர தோத்திரமாகத் துளசிதாஸர் இயற்றிய ஒரு செய்யுளைச் சுவாமிஜி பாடினார். அதன்மேல் வேறு சங்கீதம் நடைபெற்றது.

இது முடிந்ததும் சுவாமிஜி தமது திருமேனியிலிருந்த மலர் மாலை முதலியவற்றை எடுத்து, கிரீஷ் பாபுவை அலங்கரிக்கத் தொடங்கினார். ''நமது சகோதரராகிய இவர் பைரவருடைய அவதாரமென்று பரமஹம்ஸ தேவர் சொல்லுவதுண்டு. இவருக்கும் நமக்கும் ஒரு வகை வேறுபாடும் இல்லை,'' என்று சுவாமிஜி அருளினார். கிரீஷ் பாபு மௌனமாய் இருந்தார். ஒரு காவி உடை அவர் மேனியில் அணியப் பெற்றது: அதை அவர் மறுக்கவில்லை. இன்று அவர் தம் சகோதர சிஷ்யர் வயப்பட்டவராகிச் செயலற்றிருந்தார். சுவாமிஜி அவரை நோக்கி, ''அன்பரே, இன்று நீர் நம் குருநாதரைப்பற்றிச் சொல்லியருளவேண்டும். நாங்களெல்லோரும் அமைதியாயிருந்து கேட்போம்,'' என்றார். கிரீஷ் பாபு, கற்சிலை போல அசைவற்றுப் பேருவகையில் மூழ்கிப் பேச்சொழிந்திருந்தார். பின்பு அவர் வாயைத் திறந்து, ''ஏழையேனாகிய சிறியேன் நம் ஆண்டவருடைய அளவற்ற பெருங்கருணையை என்னென்று எடுத்துச்சொல்வேன்! இளமை முதல் பொன்னாசை பெண்ணாசையைத் துறந்து தூய்மையுள்ளவர்களாயிருக்கின்ற சாதுக்க

ளாகிய உங்கள் இடையில் கீழ்மையுடைய சிறியேன் இருந்து கலந்து உறவாடும் இந்த நிலைமை ஒன்றே குருநாதருடைய பெருங்கருணையைக் காட்டி நிற்கின்றது.'' இவ்வாறு மொழியும்பொழுது அவர் நாத்தழும்பேறி உரை குழறி மேலொன்றும் பேசவொண்ணுது மௌனமானுர்.

இதன் பின்னர்ச் சுவாமிஜி சில ஹிந்திப் பாடல்களைப் பாடினுர். பத்தர்கள் பிரசாதம் உட்கொண்டார்கள். பின்னர்க் கீழ்த் தலத்திலுள்ள சாலையில் ஓர் ஆசனத்தின்மீது சுவாமிகள் எழுந்தருளியிருக்க, அன்பர் பலர் அவரைச் சூழ இருந்தனர். அத்தினத்தில் பூணூலைப் பெற்றுக்கொண்ட இல்லற நண்பர் ஒருவரை நோக்கிச் சுவாமிஜி, ''உண்மையில் நீவிர் எல்லீரும் இருபிறப்பாளரே; நீண்ட நாளாக உமது உரிமையை இழந்திருந்தீர்; இந்நாள் முதலாக மீட்டும் இரு பிறப்பாளராயினீர். காயத்திரி மந்திரத்தை தினம் ஒன்றுக்கு நூறு முறையாவது நவில்வீரன்றே?'' என்றுர். இதற்கு அந்நண்பர் 'ஆம்' என்றுர்.

இத்தருணத்தில் ஸ்ரீஜத் மகேந்திரநாத குத்தர் வந்தனர். சுவாமிஜி அவரை அன்போடு அழைத்து ஆசனத்திருத்தி, ''மஹாசயரே, இன்று ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஜனன தினமாகும். அவரைப்பற்றி எங்களுக்கு ஏதாவது சொல்லியருளல் வேண்டும்,'' என்றுர். மஹேந்திரநாதர் புன்னகை பூத்துத் தலை வணங்கி இருந்தார்.

அப்பொழுது மூர்ஷிதாபாதிலிருந்து சுவாமி அகண்டானந்தர் வந்திருப்பதாகவும் ஒன்றரை மணங்கு நிறையுடைய இரண்டு பெரிய பந்துவாக்களைக்* கொண்டு வந்திருப்பதாகவும் செய்தி வந்தது. அவற்றைப்பார்க்கநாங்களனைவரும் விரைந்து சென்றேம். அவற்றை நைவேத்தியத்தின்பொருட்டு ஆலயத்திற்குக் கொண்டு செல்லச் சுவாமிஜி கட்டளையிட்டார்.

சுவாமி அகண்டானந்தரைத் தம் பேச்சிற்குப் பொருளாகக் கொண்டு சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''பார்த்தாயா, தொண்டு செய்வதில் இவர் எத்துணைப் பெரிய வீரராய் இருக்கின்றுர்! அச்சம் மரணம் என்பவற்றைப்பற்றி இவர் சிறிதேனும் பொருட்படுத்துவதில்லை; எல்லோரும் இன்புற்றிருக்கும் வண்ணம் இடையருது முயன்று தொழில் புரிகின்றுர்,'' என்றுர்.

சிஷ்: ஐய, இத்தகைய ஆற்றல் இவருக்கு அளவிறந்த தவத்தின் பயனுகக் கிடைத்திருக்க வேண்டும்.

சுவா: ஆம்; தவத்தின் பயனுகவே வலிமை ஏற்படுகிறது.

* **பந்துவா** என்னும் தின்பண்டமானது சாதாரணமாக இரண்டங்குல நீளமுடையது; பாற்கட்டியாற்செய்து நெய்யிற்பொரித்துச் சீனிப்பாகிற் சேமித்து வைக்கப்படுவது.

பிறருக்காக முயலுவதும் ஒரு வகைத் தவமே. தொழில் புரிதல் தவத்திற்கு அங்கமென்பது கருமயோகிகளின் முடிபு. தவமுயற்சி யானது பத்தனுடைய உள்ளத்தில் பிறர் நலத்திற்காக உழைக் கின்ற நல்ல எண்ணத்தை உண்டு பண்ணிச் சித்தத்தைச் சுத்தி செய்து முடிவில் பரமபதத்தையும் அருளுகின்றது.

சிஷ்: ஆனாலும், ஐய, தொடக்கம் முதலாகப் பிறர்பொருட்டு முழுமனத்தோடும் உழைக்க வல்லவர் எம்முள் எத்தனை பேர் உளர்? தமது நலத்துக்காக விளைகின்ற வினைவினை அகற்றித் தமது வாழ்நாளைப் பிறருடைய பணிக்கென நல்கும் அகன்ற சிந்தையைப் பெறுவது எவ்வளவு கடினம்!

சுவா: தவத்தின்பாற் செல்லும் சிந்தையையுடையோர் எத் தனை பேர் உளர்? பொன்னாசை பெண்ணாசை ஒரு புறம் பற்றி இழுக்க, ஆண்டவனை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் ஈடுபட்டிருப்போர் எத்தனை பேர்! தன்னலம் விழையாத முயற்சி, உண்மையில் தவத்தினை நிகர்த்ததே. ஆதலால், பிறர் நலங்கருதி முயல்வோர்க்கு மறுதலையாய் இருப்பது தகுதியாகாது. தவத்தின் மேல் உனக்கு ஆர்வம் உண்டாகில், நீ அதனைப் புரிவாயாக. பிறர் நலங் கருதித் தொண்டு புரிவது மற்றொருவனுடைய உள்ளத்திற்கு விருப்பத்தைத் தருவதாயிருக்லாம். அதற்குத் தடை கூறும் உரிமை உனக்கில்லை. தொண்டு தவமாக மாட்டாதென்னும் எண் ணம் உன்னுடைய உள்ளத்தில் நிலை பெற்றிருப்பதாகத் தோன்று கிறது.

சிஷ்: ஆம், ஐய, இதற்கு முன்பு தவத்தைப்பற்றி நான் மாறு பட்ட எண்ணமுடையவனாய் இருந்தேன்.

சுவா: சமய சாதனைகளை நீண்ட காலம் பயில்வதனால் ஒரு வகை நிலைமை படிப்படியாக விருத்தியடைவது போல, விருப்பின்றி யேனும் தன்னலங் கருதாத நன்முயற்சிகளை மீட்டும் மீட்டும் செய் வதனால் சித்தமானது அத்தகைய முயற்சியின்பால் செல்கின்றது. மன விருப்பில்லாதிருப்பினும், அத்தகைய முயற்சியைச் சில நாட் கள் மேற்கொண்டு அது வழியாகத் தவப்பயன் கிடைக்கின்றதா இல்லையா என்பதை ஆராய்ந்து பார்ப்பாயாக. பிறர்பொருட்டு உழைப்பதனால் மனிதனுடைய மனத்தின் கோணல்கள் நேர்மை யுற்றுப் பிறருக்காக உண்மையில் தியாகம் செய்யும் நீர்மையை அவன் அடைகின்றான்.

சிஷ்: ஆயினும், ஐய, பிறருக்கு எதற்காக நன்மை புரிய வேண்டும்?

சுவா: நமது நலத்தின்பொருட்டே பிறர் நலங்கருதி உழைக்க வேண்டும். பிறருடைய சேவைக்காக இவ்வுடல் அர்ப்பணம் பண் ணப்பட்டதென்பதை அறிவோமாகில், உடலோடு பொருந்த வைத்து எண்ணுகிற 'நான்' என்னும் எண்ணம் நம்மை விட்டு

அகன்று விடும். நாளடைவில் 'விதேக' உணர்வு ஏற்படும். பிறர் நலத்தை எவ்வளவு ஊன்றி நினைக்கின்றாயோ, அவ்வளவுக்கு 'நான்' என்னும் எண்ணம் அகன்றுவிடும். இவ்வாறு உளம் தூய்மை அடையவே, 'எல்லாப்பொருள்களிலும் ஊடுருவியிருக்கின்ற ஆன்மா நானே,' என்னும் எண்ணம் உள்ளத்தில் நிலைபெறும். தன்னைத்தான் உணர்வதற்குப் பிறர் நலங்கருதித் தொண்டு புரிவது ஒரு வழியாகும். இதுவும் முத்தியை அடைவதற்கு ஒரு நெறி என்பதை உணர்ந்துகொள்வாயாக. கருமத்தின் நோக்கமும் ஆன்ம ஞானமே என்று அறிந்துகொள்க. ஞானத்தினாலும் பத்தியினாலும் அடைகின்ற பேறு பிறர் நலங்கருதிய கருமத்தினாலும் பெறப்படும்.

சிஷ்: ஆனால், இரவு பகலாகப் பிறரைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பதாயின், ஆன்மாவைப்பற்றித் தியானிப்பது எப்பொழுது? குறித்த பொருள்களைச் சிந்திப்பதே பொருளாகக் கொண்டால் குறியிறந்த ஆன்மாவை அடைவது எப்படி?

சுவா: ஆன்ம ஞானத்தைப் பெறுவதே சமய சாதனைகள் அனைத்திற்கும் பெரிய முடிபாய் அமைந்தது. பிறருடைய தொண்டில் ஈடுபட்டுச் சித்த சுத்தி எய்தப்பெற்று எல்லா உயிர்களிடத்தும் ஆன்ம தரிசனம் செய்வாயாகில், நீ எய்த வேண்டிய பேறு வேறு யாதுளது? மரத்தைப் போலவும் சுவரைப் போலவும் சடப்பொருளாகிக் கிடப்பது ஆன்ம ஞானமெனப்படுமா?

சிஷ்: அது கருத்தன்றாயினும், ஆன்மாவை அதனது உண்மை நிலையில் நிறுத்துவதெனச் சாத்திரங்களால் கூறப்படுவது மனத்தினது தொழிலைக் கட்டுப்படுத்திச் செயலற்றிருக்கும் நிலைமையன்றோ?

சுவா. ஆம், சாத்திரங்களிலே கூறப்படுகிற சமாதி நிலை எளிதில் அடையப்படுவதன்று. அது அரிதில் ஒருவரிடத்துத் தோற்றும் பொழுது நெடிது நிலை பெற்றிருக்கும் நீர்மையதன்று. சாத்திரத்தில் சொல்லப்பட்ட இந்நிலையை அடைந்த பின் தவம் புரிந்த பெரியோன் எல்லா உயிர்களிலும் ஆன்ம விளக்கத்தைக் காண்கின்றான்; இவ்வுணர்ச்சியினால் பிறருடைய தொண்டிலே ஈடுபட்டு எஞ்சியிருக்கின்ற கரும பலனை ஒழிக்கும்பொருட்டு உடலை வருத்தித் தொண்டு புரிகின்றான். இத்தகையவனே சாத்திரங்களிலே 'ஜீவன் முத்தன்' எனப்படுவான்.

சிஷ்: அஃது அங்ஙனமாயின், ஜீவன் முத்தி நிலையை அடைந்த பின்பன்றோ உண்மையிலே பிறர்பொருட்டு உழைக்கின்ற முயற்சியில் ஈடுபடுதல் அமையும்?

சுவா: ஆம். சாத்திரங்கள் சொல்வதும் அதுவே. ஆயினும், பிறர்பொருட்டு முயலுவதால் ஜீவன் முத்தி வந்தெய்தும் எனவும் சாத்திரங்கள் கூறுகின்றன. அஃதில்லையாயின், கரும யோக

மென்று தனியாகிய ஒரு நெறியை எடுத்து உபதேசிப்பது சாத்திரங்களின் அங்கமாக அமைந்திருப்பது பொருந்தாது.

சிஷ்யர் இந்த உண்மையை உணர்ந்து மௌனமானார். சுவாமிஜி இனிய தெய்விகக் குரலிலே ஸ்ரீராமகிருஷ்ணவதாரத்தைச் சிறப்பித்துக் கூறுவதும் பாபு கிரீஷ்சந்திர கோஷரால் இயற்றப்பட்டதுமான ''ஏழைப் பிராம்மணியின் மடியிற் கிடக்குமிவர் யாரோ ?'' என்னும் கீதத்தைப் பாடினார்.

(14)

[இடம்: பேலூரில் வாடகை மடம். 1898-ஆம் ஆண்டு.]

புதியதாய் அமைக்கப்பட்ட திருமடத்திலே இன்று சுவாமிஜி வேத வேள்வி இயற்றி ஸ்ரீராமகிருஷ்ணரைப் பிரதிஷ்டை செய்யப் போகின்றார். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. பிரதிஷ்டைக் கிரியைகளைக் காணும் நோக்கமாகச் சிஷ்யர் முதல் நாளிரவிலிருந்தே திருமடத்திலேயே தங்கியிருக்கின்றார்.

காலையிலே சுவாமிஜி கங்கையில் நீராடி, பூஜை மண்டபத்தினுள்ளே நுழைந்து, ஸ்ரீராமகிருஷ்ணரது புனிதமான பாதுகைக்கு வழிபாடியற்றித் தியானத்தில் அமருவாராயினார்.

தியானமும் பூஜையும் முடிந்த பின்னர், புதிய மடாலயக் கட்டடத்தினுள்ளே புகுதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்தேறின. ஸ்ரீராமகிருஷ்ண தேவரது திருமேனிச் சாம்பர் வைக்கப்பட்டிருந்த செப்புப் பேழை ஒன்றினைத் தோள்மேல் ஏந்திக்கொண்டு சுவாமிஜி முன்னே நடந்தார். சாதுக்களின் கூட்டத்தோடு வந்த சிஷ்யர் பின்னே நடந்தார். மணியோசையும் சங்கநாதமும் யாங்கணும் ஒலித்தன. வழியிலே சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், யான் என் தோள்மீது தம்மை ஏந்திக்கொண்டு எவ்விடத்துக்குச் செல்கின்றேனோ, அது மரத்தடியாயிருப்பினும், குடிசையாயிருப்பினும் அவ்விடத்தில் எழுந்தருளியிருப்பதாக எனக்குச் சொல்லியிருக்கின்றார். ஆதலினாலன்றோ, புதிய மடாலயத்துக்கு அவரை என் தோள்களிலே ஏந்திச் செல்கின்றேன்? பலருடைய நலத்திற்காக மிக நீண்ட காலத்திற்கு அவர் இவ்விடத்தில் எழுந்தருளியிருப்பார் என்பதை நீ திண்ணமாக நம்புவாயாக,'' என்றார்.

சிஷ்: குரு தேவர் எப்பொழுது இதனைத் தேவரீருக்குத் தெரிவித்தார்?

சுவா: (மடத்துச் சாதுக்களைச் சுட்டிக்காட்டி) நீ இவர்களிடமிருந்து கேள்விப்படவில்லையா? அது நிகழ்ந்தது காசிப்பூர் நந்தவனத்தில்.

சிஷ்: ஆம்; அறிந்துகொண்டேன். ஸ்ரீராமகிருஷ்ணருடைய துறவிச் சிஷ்யர்களுக்கும் இல்லறச் சிஷ்யர்களுக்குமிடையே குரு தேவருடைய பூஜா கைங்கரியத்தை யார் செய்வதென்பதைப்பற்றி ஒரு விவாதம் நடந்ததே, அத்தருணத்திலா?

சுவா: ஆம்; உண்மையில் அது ஒரு விவாதமன்று; வேறு பட்ட கருத்திருந்தது, அவ்வளவுதான். ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தொண்டர்களாய் உண்மையில் அவருடைய அருளைப்பெற்றவர்கள் இல்லறத்தாராயினும் சரி, சாதுக்களாயிருப்பினும் சரி; அவர்க ளிடையே பிரிவினை இருக்கமாட்டாது; வேறுபட்ட கருத்து சிறிது இருந்தது என்றால், அது எதனாலாயிற்று என்பதை நீ அறி வாயா? ஒவ்வொரு தொண்டனும் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தன் னுடைய விளக்கத்திற்குப் புலப்பட்ட வண்ணம் தனது நிலையிலே, தன் மனதிற்பட்ட கருத்தின்படி, உருப்படுத்தி நோக்குகின்றான். அவர் பெரியதொரு சூரியனை ஒத்தவர். நாம் ஒவ்வொருவரும் அவரை வேறு வேறு நிறங்கொண்ட படிகத்தினூடே பார்க்கின் றோம். ஒரே கதிரவன் வேறுபட்ட நிறத்தினன் என்னும் எண்ணம் நம் உள்ளத்தில் உண்டாகின்றது. நாளடைவில் இது வழியாகக் கருத்துவேற்றுமை உண்டாகலாம். ஆனால், அவதார புருஷரை நேரிலே கண்டறிந்த பேறு பெற்றவர்களுடைய வாழ்நாளிலே வேறு பாடு நிகழ்வதில்லை. தானாக தன்மையிலே ஆனந்தம் மேலிட்டிருக் கும் அவதார புருஷர்களின் தெய்வ ஒளியானது மக்களுடைய கண் களைக் கவர, அது வழியாக அவர்கள் உள்ளத்திலுள்ள வீண் பெருமை, அகங்காரம், கயமை என்னும் இவை பெருங்காற்றிலகப் பட்ட இலவம்பஞ்சுபோல இருந்தவிடம் தெரியாது நீங்கிப் போகின் றன. மக்களுள் ஒவ்வொருவரும் தாம் தாம் வரித்துக்கொண்ட முறைப்படி, உள்ளங்குளிர்ந்த வழிபாடு இயற்றுவதையே பெரி தாகக் கொள்வார்கள்.

சிஷ்: ஐய, அங்ஙனமாயின், அவதார புருஷருடைய பத்தர் கள் அவரைத் தெய்வமென்று அறிந்திருந்தும் வேறுவேறு தன்மை யுடையவர்களாகக் காண்கின்றார்களா? வழி முறையாக அவருக்கு பின் வரும் தொண்டர்கள் குறுகிய எல்லையுள் நின்று மதப்பிளவு களை உண்டாக்குகின்றார்களா?

சுவா: ஆம், அப்படியே, நாளடைவிலே மத வேறுபாடுகள் உண்டாவது இயல்புதான். **சைதன்ய தேவருடைய** வழி வந்தோர் இருநூறு முந்நூறு பிரிவினராகப் பிரிந்துவிட்டனரன்றோ? இயேசு மதத்தோர் ஆயிரம் பிரிவினராயினரன்றோ? அங்ஙனமாயினும், வேறுபட்ட பிரிவினர் யாவரும் மாற்றம் இன்றிச் சைதன்ய தேவரையும் இயேசுவையுமே வழிபடுகின்றனர்.

சிஷ்: அங்ஙனமாயின், ஸ்ரீராமகிருஷ்ணருடைய வழி நிற் போரும் நாளடைவில் பல்வேறு பிரிவினராகப் பிரிவரன்றோ?

சுவா: ஆம். ஆயினும், நாங்கள் கட்டுகிற இந்தத் திருமடமானது, மத வேறுபாடுகள் யாவற்றையும் சமரச நோக்கினுலே ஒன்றுபடுத்தும். ஸ்ரீராமகிருஷ்ணர் உயர்ந்த விரிவான நோக்கங்களை உடையவராயிருந்தார்; இந்தத் திருமடமும் அத்தகைய நோக்கங்களைப் பரப்புவதற்குரிய நிலையமாகும். இங்கிருந்து பாய்கின்ற சமரசச் சுடர்வெள்ளம் உலகனைத்தினும் பொங்கிப் பரவும்.

இவையெல்லாம் நிகழ்ந்துகொண்டிருக்கத் திருக்கூட்டமானது மடாலயத்தை அடைந்தது. சுவாமிஜி செப்புப் பேழையைத்தோளினின்றும் இறக்கி, நிலத்தில் விரித்திருந்த கம்பளத்தின்மேல் வைத்து, அதன் முன் தம் திருமேனி முழுதும் தரையிற்பட வணங்கினர். மற்றவர்களும் அவ்வண்ணமே செய்தார்கள்.

அதன்பின் சுவாமிஜி பூஜையை முடித்து, வேள்வித் தீயை வளர்த்து, அதனிடையே ஆகுதி பெய்து, சகோதர சிஷ்யர்களினுடைய உதவியோடு தமது கையினுற் சமைத்த பாயசத்தை ஸ்ரீ ராமகிருஷ்ண தேவருக்குப் படைத்தார். அத்தினத்திலேஅவ்விடத்திலே சில இல்லறத்தாருக்குத் தீக்ஷையும் நடந்திருக்கலாம். இந்தக் கருமங்களெல்லாம் முடிந்ததும், சுவாமிஜி அவையிற் குழுமியிருந்த பெருமக்களை நோக்கி, ''பற்பலருடைய நன்மைக்காகவும் இன்பத்துக்காகவும் இந்த யுகத்திலேமகத்துவம் பொருந்திய அவதார புருஷராய்த் தோன்றிய ஸ்ரீராமகிருஷ்ணர், இந்தத் தூய இடத்திலே இன்று முதல் நீண்ட காலத்திற்கு வீற்றிருந்தருளவும், எல்லா மதத்தினர்களுக்கும் சமரசத்தை உணர்த்துவதற்கு இது ஒரு சிறந்த நிலையமாய் விளங்கவும் கருணைக்கடலாகிய ஸ்ரீராமகிருஷ்ணரது திருவடிகளை நீங்களெல்லோரும் முழு மனத்தோடும் வழிபடுவீர்களாக!'' என்ருர். எல்லோரும் கை குவித்துத் தொழுது வழிபட்டனர். சுவாமிஜி சிஷ்யரை விளித்து, ''ஸ்ரீராமகிருஷ்ணரை நாங்கள் இன்று இவ்விடத்தில் பிரதிஷ்டை செய்துவிட்டோமாகையால், துறவிகளாகிய நாங்கள், இந்தத் திருப்பேழையை மறுபடியும் எடுத்துச் செல்வதற்கு உரிமையுடையோம் அல்லோம்; இதனைச் சென்னியில் தாங்கி(பழைய மடமிருக்கும்) நீலாம்பர பாபுவினுடைய உத்தியானவனத்திற்கு எடுத்துச் செல்வது நின்னுல் ஆக வேண்டுவது,' என்ருர். சிஷ்யர் பேழையைத் தொடுவதற்கு அஞ்சி நிற்பதைக் கண்டு, சுவாமிஜி, ''அஞ்சாதே! இது என் கட்டளை; தூய்மை பொருந்தியஇப்பேழையை நீதொடலாம்,'' என்ருர். சிஷ்யர் மிகுந்த மகிழ்ச்சியுடன் அக்கட்டளைக்கியைந்து பேழையைத் தமது தலையில் தாங்கி முன்னே நடந்தார். அவருக்குப் பின் சுவாமிஜியும் ஏனையோரும் தொடர்ந்து வந்தனர். வழியிலே சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''இன்று ஸ்ரீராமகிருஷ்ணர் உன்சென்னியின்மேலே வீற்றிருந்தருளி உன்னை ஆசீர்வதிக்கின்ருர்! இந்நாள் முதலாக, மாய்ந்து போகிற பொருள்களின்மீது உனது சிந்தையைச் செலவிடாதே,'' என்ருர்.

ஒரு சிறு பாலத்தைக் கடக்கு முன்பு சுவாமிஜி மீட்டும் சிஷ்யரை நோக்கி, ''இப்பொழுது மிகக் கவனமாக நடப்பாயாக,'' என்றார்.

எல்லோரும் திருமடத்திற்கு வந்து சேர்ந்து உவகையோடிருந்தனர். சுவாமிஜி சிஷ்யரை நோக்கிப் பின் வருமாறு சொல்லுவாராயினர்.

''ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருவுள்ளப்படியே அவருடைய தரும க்ஷேத்திரமானது இன்று நிறுவப்பட்டிருக்கின்றது. பன்னீராண்டு எனது உள்ளத்திலிருந்த கவலை, இன்று நீங்கிப் போய்விட்டது. இந்தக் கணத்திலே நான் என்ன சிந்திக்கிறேனென்பதை அறிவாயா? இந்தத் திருமடம் கல்விப் பயிற்சிக்கும் ஆன்ம இலாபதிற்குரிய சாதனைகளுக்கும் உரிய நிலையமாகும். உன்னையொத்த நன்மனமுடைய இல் வாழ்வார், சமீபத்திலிருக்கும் நிலங்களில் வீடுகளமைத்துக்கொண்டு வாழ்வார்கள். திருமடத்திலே துறவொழுக்கம் பூண்ட சந்நியாசிகள் உறைவார்கள். மடத்திற்குத் தெற்கே இருக்கின்ற நிலத்திலே ஆங்கிலேய அமெரிக்க சிஷ்யர்கள் வசிப்பதற்கு உரிய கட்டடங்கள் அமைக்கப்படும். இந்தக் கருத்து உனக்கு எப்படித் தோன்றுகிறது?''

சிஷ்: ஐய, இது தேவரீருடைய அற்புதமான பேரார்வமே!

சுவா: ஆர்வம் என்று சொல்லுகிறாயா? அன்று; எல்லாம் காலத்திலே நிறைவேறும். நான் செய்யும் முயற்சி அஸ்திவாரம் போன்றது. எதிர் காலத்தில் பல துறைப்பட்ட விருத்திகள் ஏற்படும். என் வாழ்நாளிலேயே சில பகுதிகள் நிறைவு பெறுதல் கூடும். உங்களுடைய உள்ளத்தில் உயர்ந்த கருத்துகள் பலவற்றைப் பதித்து வைப்பேன். எதிர்காலத்தில் நீங்கள் அவற்றை நிறைவேற்றுவீர்கள். உயர்ந்த கொள்கைகளைக் கேட்பது மாத்திரம் போதாது. இடைவிடாத உழைப்பினால் அவற்றை வாழ்க்கையிலே அமைத்துக் காட்ட வேண்டும். சாத்திரங்களிலே உள்ள உயர்ந்த முடிபுகளை ஓசையளவாக மனத்தினுள்ளே நிரப்பி வைப்பதனால் உண்டாகின்ற பயன் யாது? சாத்திரங்களிற் சொல்லப்பட்டவற்றைத் தெளிவு பெற மனத்திலே வாங்கிக்கொள்ள வேண்டும். பின்னர் அவற்றிற்கு வாழ்க்கையிலே உருக் கொடுக்க வேண்டும். இஃது உனக்குப் புலப்படுகின்றதா? இதுவே 'சமயானுஷ்டானம்' என்பது.

உரையாடல் இவ்வண்ணம் நடந்துகொண்டிருந்தது, சிறிது சிறிதாகச் சங்கராசாரியருடைய கொள்கைகளைக் குறித்து நிகழலாயிற்று. சிஷ்யர் சங்கரர்மேல் மிகுந்த பற்றுடையவர்; சங்கரர் உரைத்த அத்வைத தத்துவ ஞானமே எல்லா ஞானங்களுக்கும் மேலானதென எண்ணுபவர்; சங்கரரை யாரும் குறை கூறினால் மனம் பொறாதவர். சுவாமிஜி, இதனையறிந்து வழக்கம் போலச் சிஷ்யருடைய ஒருபாற்பட்ட சிந்தையைப் பொது நிலைப்படுத்துவதற்குத் திருவுள்ளங் கொண்டார்.

சுவா: சங்கரருடைய புத்தி நாவிதன் கத்தியைப் போல மிகவும் கூர்மையாய் இருந்தது; அவர் வாதம் புரிவதில் வல்லவர்; மஹா பண்டிதர்; அதில் ஐயமில்லை. என்றாலும், அவரிடத்தில் அகன்ற நோக்கமில்லை; அவருடைய இதயமும் அத்தகையதாகவே காணப் பட்டது. மேலும், அவர் தமது பிராம்மணத்துவத்தில் பெருமை பாராட்டுபவர். இக்காலத்துத் தென்னிந்தியபிராம்மணப் புரோகித வகுப்பார்போல,அவர் இயற்றிய வேதாந்த சூத்திர வியாக்கியானத் திற் பிராம்மணர் அல்லாத வகுப்பார் மேலாகிய பிரம்ம ஞானத்தை அடைய மாட்டார் என்று எவ்வளவு வாதாடுகிறார் ! அவர் காட்டும் நியாயங்களோ, எவ்வளவு நகைப்புக்கிடமாகின்றன ! 'விதுரன் பிரம்ம ஞானத்தை அடைந்தான்; அது முற்பிறவியிலே அவன் பிராம்மணத் திருமேனியோடு பிறந்த காரணத்தினால்,' என்கின் றார். நல்லது; இந்நாளில் சூத்திரன் ஒருவன் பிரம்ம ஞானத்தை யடைந்தால், உங்கள் சங்கரர் சொல்லுவது போலவே, அவன் முற் பிறப்பிலே பிராம்மணனாயிருந்த காரணத்தினால் அத்தகைய ஞானத்தை அடைந்தானென்று சொல்ல வேண்டுமா ? ஐயோ ! பாவம் ! பிராம்மணத்துவத்தை இவ்வளவு தூரம் இழுத்து வாதாடு வதில் என்ன பயன் ? உயர்ந்த மூன்று வருணத்தாரும் வேதங்களை ஓதுவதற்கும் பிரம்மத்தை அடைவதற்கும் உரியவரென்று வேதம் கூறவில்லையா ? வேதப் பிரமாணத்திற்கு எதிராகச் சங்கரர், இந்த விஷயத்தில் தமது புத்திசாலித்தனத்தைக் காட்டுவது வேண்டப் படாததொன்று. வாதத்திலே தோல்வியடைந்த எத்தனையோ புத்த சந்நியாசிகளை நெருப்புக்கு இரையாக்கின அவருடைய இத யத்தை என்னவென்று சொல்வது! 'வாதத்திலே தோல்வியுற்றோம்!' என்று நெருப்பிற்புகச் சித்தமாயிருந்த பௌத்தரும் மூடர். சங்கரர் இந்தச் செய்கையைச் செய்தது மூடப் பிடிவாதமன்றி வேறு என்ன ! புத்த தேவருடைய இதயத்தை இதனோடு ஒப்பவைத்து நோக்கு வாயாக. சிறு ஆட்டுக்குட்டியினுடைய உயிரைக் காப்பாற்றத் தமது உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருந்தார் புத்தர்; **பஹுஜன ஹிதாய பஹுஜன ஸுகாய**—பலருடைய இதத்திற்காகவும் பலருடைய நலத்திற்காகவும் வாழ்ந்தார். எவ்வளவு அகன்ற சிந்தை ! எவ் வளவு இரக்கம் !

சிஷ்: ஐய, புத்ததேவர் இப்படிச் செய்ததையும் மற்றொரு வகை மூடப் பிடிவாதமென்று நாம் சொல்லுதல் கூடாதா ? அவர் இழிவான ஒரு விலங்கின்பொருட்டுத் தம்முடைய சொந்த உடலைக் கொடுத்துவிட நினைத்தாரே !

சுவா: ஆனால், இந்த 'மூடப் பிடிவாதத்தினால்' உலகுக்கு எவ்வளவு நன்மை விளைந்ததென்பதை எண்ணிப் பார் ! எத்தனை மடங்கள், எத்தனை பாடசாலைகள், கலாசாலைகள், வைத்தியசாலை கள், விலங்குகளுக்குச் சிகிச்சை புரியும் சாலைகள் ஏற்பட்டன

என்பதை நினைத்துப்பார் ! சிற்பம் எவ்வளவு சிறந்து விளங்கியது ! புத்த தேவருடைய வருகைக்கு முன் இந்த நாட்டில் என்ன இருந்தது ? ஓலைச் சுவடிகளிலே எழுதப்பட்டு ஒரு சிலரால் மாத்திரம் அறியப்பட்டிருந்த சமய உண்மைகள் சில இருந்தன. புத்ததேவர் அவற்றைத் தம் வாழ்க்கையில் மெய்ப்பித்து, மக்களுடைய வாழ்க்கையிலே அவற்றைப் பயன்படுத்தும் நெறிகளைக் காட்டினார். இங்ஙனம் நோக்கும் போது, அவர் உண்மை வேதாந்தம் உருவெடுத்தது போன்றவர் ஆவார்.

சிஷ்: வருணாச்சிரம தருமக் கட்டுப்பாட்டுக்கு மாறாக இந்து சமயத்திலே ஒரு வகைப் புரட்சியைப் புத்த தேவர் உண்டாக்கினாரெனவும் அக்காரணத்தினாலே அவர் போதித்த சமயமானது இந்தியாவின் எல்லையினின்றும் வெளியே துரத்தப்பட்டதெனவும் சொல்வதிலே ஓர் அளவுக்கு உண்மை இருப்பதாகத் தெரிகிறது.

சுவா: அவருடைய போதனையினாலே புத்த மதத்துக்கு இழுக்கு ஏற்படவில்லை; அவர் வழியிலே வந்தவர்களாலே குறைவு ஏற்பட்டது. தத்துவ விசாரத்தில் அதிகம் புகுந்த காரணத்தினால், அன்னார் உள்ளம் விரிவடையவில்லை. (சமயானுஷ்டானத்தின் பேரிற் கட்டுக்காவலின்றிப் பெண்களோடு கலந்துகொள்ளுகிற) வாமாசாரம் உட்புகுந்து, படிப்படியாகப் புத்தமதத்தை அழித்துவிட்டது. அத்தகைய பேய்த்தனமான கிரியைகள் இக்காலத்துத் தந்திர நூல்களிலே காணப்படமாட்டா. பூரி ஜகந்நாதம் புத்த மதத்தின் முக்கியமான இடங்களுள் ஒன்று; அங்குள்ள கோயிற் சுவர்களிலே செதுக்கியிருந்த அருவருப்பான உருவங்களைப் பார்ப்பாயாயின், இவ்வுண்மை புலப்படும். இராமானுஜர் ஸ்ரீசைதன்யருடைய காலம் முதலாகப் பூரி வைஷ்ணவருடைய ஆளுகைக்குள் இருக்கிறது. மேற்குறித்த சான்றோர்களைப் போன்ற நல்லாரின் தொடர்பினாலே அந்த இடத்தில் முன்னிருந்த நிலைமை முற்றிலும் மாறிவிட்டது.

சிஷ்: யாத்திரைக்குரிய இடங்களிலே, பல்வேறு வகைப்பட்ட நன்மைகள் நிலைபெற்றிருப்பதாகச் சாத்திரங்கள் கூறுகின்றனவே ! இஃது எவ்வளவு உண்மையாகும் ?

சுவா: உலகமனைத்துமே ஈசுவரனாகிய நித்திய சுத்த ஆன்மாவின் வியாபக வடிவமாக அமைந்திருக்கும்பொழுது சில இடங்களிலே சிறந்த நன்மைத் தொடர்புண்டு எனக் கூறுவதில் வியப்படைவது எதற்கோ ? ஈசுவரன் தனது திருவுள்ளப்படியாவது, பரிசுத்த ஆன்மாக்களின் சிரத்தை பெருக்கப்பட்டாவது, தன்வடிவை வெளிப்படுத்திய இடங்களுமுண்டு. சாதாரண மனிதன் ஆர்வத்தோடு இவ்விடங்களைத் தரிசிப்பானாயின், கருதிய பயனை எளிதிற் பெறுவான். ஆதலால், தூய்மையான இத்தலங்களைத் தரிசிப்பின் லாபம் உண்டாகும். மனிதனுடைய உடலைக்காட்டிலும் சிறந்த

கோயில் வேறு இல்லை என்பதைத் திண்ணமாக அறிந்துகொள். இவ்விடத்தில் இருப்பது போல மற்றெவ்விடத்திலும் ஆன்மாவின் விளக்கம் காணப்படுவதில்லை. ஜகந்நாதனுடைய இரதம் என்று நீ புறத்தே காண்பது இந்த உடலாகிய இரதத்தினுடைய பருப்பொருள் உருவமே. " ஆத்மானம் ரதினம் வித்தி — ஆன்மாவை இரதத்தில் ஆரோகணித்திருப்பதாக அறிவாயாக. மத்யே வாமனமாஸீனம் விஸ்வே தேவா உபாஸதே—''உடல் நடுவிலே இருக்கையிலிருக்கின்ற வாமனரை எல்லாத் தேவர்களும் வழிபடுகின்றார்கள்.' ஆன்ம தரிசனந்தான் உண்மையில் ஜகந்நாத தரிசனம். "ரதேச வாமனம் த்ருஷ்ட்வா புனர்ஜன்ம நவித்யதே...இரதத்திலுள்ள வாமனரைக் கண்டோர் மீட்டும் பிறப்பதில்லை,'' என்பதன் கருத்து என்னவெனின், சடப்பொருளாகிய தேகத்தை நீ என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற நீ, அதனை மறந்து, உன்னுள்ளே இருக்கின்ற ஆன்மாவைக்காண்பாயாயின் உனக்கு மறுபிறப்பு இல்லை என்பது. மரத்தில் செதுக்கப்பட்ட பகவானுடைய உருவத்தைக் கண்டவர்களுக்கு முத்தி சித்திக்குமாயின், ஆண்டுதோறும் கோடிக்கணக்கான பேர் முத்தி அடைவார்களல்லவா? புகைவண்டி போக்குவரத்து மிகுதியாகிய இக்காலத்தில் இது மிக எளிதாகுமன்றோ? ஆனால், பத்தராயினோர் ஸ்ரீஜகந்நாதன்பாற்கொண்டிருக்கின்ற கொள்கை தப்பென்றாவது, பயனற்றதென்றாவது, நான் கருதவில்லை. அத்திருவுருவத்தின் உதவியினாலே மேலும் மேலும் உயர்ந்த உண்மைகளை அடைகின்ற ஒரு வகுப்பு மக்கள் இருக்கிறார்கள். அந்தத் திருவுருவத்தின் மூலமாகப் பகவானுடைய தோற்றம் சிறப்புற விளங்குகிறதென்பதற்கு ஐயமில்லை.

சிஷ்: ஐய, அப்படியாயின், பண்டிதர்க்கும் பாமரர்க்கும் வேறு வேறு சமயங்கள் உண்டா?

சுவா: ஆம்; உண்டு. அங்ஙனம் இல்லாவிடின், ஆகம சாத்திரங்கள் அதிகாரியினுடைய இலட்சணத்தை விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? எல்லாம் உண்மையே ஆயினும் அளவினால் வேறுபட்ட படிப்படியாகிய உண்மைகளுண்டு. மனிதன் உண்மை என்று காண்பனவெல்லாம் ஒரே தன்மையன. சில, குறைந்த உண்மைகள்; இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது வேறு சில உயர்ந்த உண்மைகள். ஆண்டவன் ஒருவனே முடிந்த உண்மை. இவ்வான்மா சடப்பொருளிலே முற்றிலும் மறைந்திருக்கிறது; உயிர்ப்பொருளாகிய மனிதனிடத்தே ஓர் அளவுக்குத் தோற்றுகிறது; ஸ்ரீகிருஷ்ணர், புத்தர், சங்கரர் முதலிய பெரியாரிடத்து இவ்வான்மா அறிவுக்கு அப்பாலாகிய நிலையை அடைந்திருக்கிறது. இதற்கும் அப்பாலாகிய ஒரு நிலை உண்டு. அது வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதது; 'அவாங் மனஸ கோசரம்' எனப்படுவது.

சிஷ்: ஐய, பத்திமார்க்கத்தில் நிற்போர் கடவுள்பால் ஏதாவது ஒரு வகைத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு பத்தி பண்ண வேண்டும் என்கிறார்களே? ஆன்மாவின் பெருமை முதலியவற்றைப் பற்றிப் பொருட்படுத்தாது பத்தியையே என்றும் பயிலும்படி சொல்லுகிறார்களே?

சுவா: அவர்கள் சொல்லுவது அவர்கள் அளவில் உண்மையே. இடைவிடாத பயிற்சியால் அவர்களும் பிரம்மத்தினுடைய விளக்கத்தைத் தம்முள்ளே கண்டு உணர்வார்கள். சந்நியாசிகளாகிய நாங்கள் செய்வது மற்றொரு வகைப் பயிற்சி. நாங்கள் உலகத்தைத் துறந்துவிட்டோம். ஆதலால், தந்தை, தாய், மனைவி மைந்தன் என்ற இத்தகைய உலகத் தொடர்புகளாற் கடவுளைக் காணப் பயில்வது எங்களுக்கு எப்படிப் பொருந்தும்? இவையெல்லாம் மிகக் குறுகியவை என்று எங்களுக்குக் காணப்படுகின்றன. நியதியற்ற சுத்த உருவத்திலே கடவுளைக் கண்டு வழிபாடு இயற்றத் தகுதி உடையவராதல் மிகக்கடினம். அங்ஙனமாயினும், அமுதம் கிடைக்கவில்லை என்று விஷத்தைத் தேடலாமா? எப்பொழுதும் இந்த ஆன்மாவைப் பற்றிப் பேசவேண்டும்; கேட்கவேண்டும்; ஆராய்ச்சி செய்யவேண்டும். இவ்வாறு தொடர்ந்து பயில்வதனால் நாளடைவிலே உன்னிடத்திலும் பிரம்மமாகிய சிங்கம் எழுந்திருக்கக் காண்பாய். மனத்தின் லீலைகளாகிய சம்பந்தங்களுக்கு அப்பாற்செல்வாயாக. கடோபநிஷதத்திலே யமன் சொல்லுகிற வார்த்தையைக் கேள்: "**உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வரான் நிபோதத**—எழுந்திரு; விழித்துக்கொள்; கருதிய குறிக்கோள் கைகூடும் வரை முயன்று நில்."

இவ்வளவோடு எடுத்துக்கொண்ட விஷயம் முடிந்தது. பிரசாதத்துக்கு மணி அடித்தமையினால், சுவாமிஜி சிஷ்யரையும் உடன் அழைத்துக்கொண்டு சென்றார்.

(15)

[இடம்: பேலூரில் வாடகைத் திருமடம். காலம்: பிப்பிரவரி, 1898.]

ஆலம்பஜாரிலிருந்த திருமடமானது பேலூரில் நீலாம்பர பாபுவினுடைய பூஞ்சோலைக்கு மாற்றப்பட்டது. இது சுவாமிஜியினுடைய கட்டளையினால் ஆனது. புதிய இடத்திற்கு வந்தது பற்றிப் பெருமகிழ்வுடையவராய் இருந்த சுவாமிஜி, அங்கு வந்த சிஷ்யரை நோக்கி, "அதோ பார்! கங்காநதி விரிந்து பரந்து பாய்கின்றது; என்ன அழகான கட்டடம்! நான் இவ்விடத்தை விரும்புகிறேன்; திருமடத்திற்கு இது தகுதியான இடம்," என்றார். அப்பொழுது அந்திநேரம்.

மாலை வந்ததும் சுவாமிஜி மேன்மாடியிலே தனித்திருக்கக் கண்ட சிஷ்யர், அவரோடு பல திறப்பட்ட விஷயங்களையும் பேசிச் சுவாமிஜியினுடைய இளமைப்பருவ நிகழ்ச்சிகளைப்பற்றி வினவுவாராயினர். சுவாமிஜி அவரைப் பார்த்து, ''நான் சிறுவனாய் இருந்த காலம் முதல் யாதுக்கும் அஞ்சாத முரட்டுத்தன்மை உடையவனாய் இருந்தேன். அல்லாவிடின், மடியிலே காற்காசும் இல்லாமல் உலகை வலம் வர நினைத்திருப்பேனா ?'' என்றார்.

இளம் பருவத்திலே பாடகர்கள் இராமாயணம் பாடுவதைக் கேட்கச் சுவாமிஜிக்கு மிகுந்த விருப்பம்; அண்டை அயலிலே இராமாயணப் பிரசங்கம் நடப்பதாய் இருந்தால், விளையாட்டையும் பிறவற்றையும் விட்டெறிந்துவிட்டுப் பிரசங்கம் நடக்கும் இடத்துக்குப் போவார். சில பொழுது தம்மை மறந்து, வீட்டெண்ணம் அற்று, விஷயத்திலே ஆழ்ந்து, நேரங்கழிந்ததையும் அறியாது இருந்த தம்முடைய இளமை நிகழ்ச்சிகளைச் சுவாமிஜி எடுத்துக் கூறினார்; ஒரு நாள் வானரத் தெய்வம் ஆகிய ஹநுமான் வாழைத் தோட்டத்தில் இருந்த விஷயம் செவிப்படலும் அன்றிரவு வீட்டுக்குப் போகாது அருகிலிருந்த ஒரு வாழைத் தோட்டத்திற்குப் போய், இரவில் பல நாழிகை கழியும் வரையும் ஹநுமானுடைய தரிசனம் கிடைக்குமா எனத் தாமதித்து நின்ற செய்தியையும் எடுத்து இயம்பினார்.

மாணவராய் இருந்த காலத்தில் பகல் முழுவதையும் மாணவ நண்பரோடு விளையாடுவதிலும் பொழுது போக்குவதிலும் கழித்து விட்டு, இரவில் கதவைத் தாழிட்டுக்கொண்டு உள்ளே இருந்து படிப்பார். இவர் எப்பொழுது பாடங்களை ஆயத்தம் செய்தார் என்பது பிறருக்குத் தெரிய வாராது.

சிஷ்: ஐய, தேவரீர் பள்ளிக்கூடத்திற் படிக்கும் பொழுது ஏதாவது தரிசனம் கண்டதுண்டா ?

சுவா: பள்ளிக்கூடத்திலிருக்கும் பொழுது ஒரு நாளிரவு கதவைத் தாழிட்டுக்கொண்டு தியானத்திலிருந்தேன்; மனம் ஒரு வழிப்பட்டு ஓரளவாகிய ஆழ்ந்த தியான நிலையிலிருந்தது. எவ்வளவு நேரம் அப்படி இருந்தேனோ, தெரியவில்லை. தியானம் முடிந்ததும் நான் எனது ஆசனத்தை விட்டு எழவில்லை. அத்தருணத்தில் நானிருந்த அறையின் தெற்குச் சுவரிலிருந்து ஒளி மயமான ஒரு வடிவம் புறப்பட்டு, என் கண்முன் நின்றது. அதனுடைய முக மண்டலத்திலே அற்புதமான ஒரு சுடர் காணப்பட்டது. அங்ஙனமாயினும், விருப்பத்தின் வழி எய்தும் உணர்ச்சி வேறுபாடு ஒன்றும் காணப்படவில்லை. கையில் தண்டமும் கமண்டலமும் ஏந்தித் தலை முற்றிலும் முண்டிதமாய்ச் சாந்த வதனத்தோடு நின்ற அச் சந்நியாச வடிவம் என்னைக் கூர்ந்து நோக்கி, என்னோடு உரையாட வருவது போல என் முன்னே நின்றது. நான் பேராச்சரியத்

துடனே அவ்வுருவத்தை நோக்கினேன். பின்பு உள்ளத்திலே ஒருவகை அச்சம் உண்டாகக் கதவைத் திறந்து ஓடிவிட்டேன். ஓடியது பிழை என்பது பின்பு என் மனத்திற்குப்பட்டது. ஒரு வேளை அங்ஙனம் தோற்றியவர் எனக்கு ஏதாவது சொல்லியிருக்கலாம். ஆனால் அவ்வுருவத்தைப் பின்பு நான் ஒருபொழுதும் காணவில்லை. கண்டால் அஞ்சாது நின்று உரையாடுவேனென்று நான் பல நாள் எண்ணியதுண்டு. ஆனால், அவ்வுருவத்தில் தோன்றியவரை நான் பின் ஒரு பொழுதும் காணவில்லை.

சிஷ்: இந்த விஷயத்தைப்பற்றிப் பின்பு நீங்கள் நினைத்ததுண்டா ?

சுவா: ஆம். ஆனால், ஒருவகை முடிபும் காண முடியவில்லை. நான் கண்டவர் புத்த தேவராயிருக்கலாம் என்று நான் இப்பொழுது நினைக்கிறேன்.

சிறிது நேரம் தாமதித்துச் சுவாமிஜி பின்னும் சொல்லுகிறார்: ''மனம் தூய்மையடைந்து பெண்ணாசை பொன்னாசை இவற்றிலிருந்து விடுபட்ட பின்னர், அதியற்புதமான பல தரிசனங்களைக் காண்கின்றது. ஆனால், சாதனை செய்வோன் அவற்றிடையே தனது சிந்தையைச் செலுத்துதல் கூடாது; செலுத்துவானாயின், உயர் நிலையை அடைய மாட்டான். 'என் அன்புக்குரிய பகவானுடைய வீட்டின் வெளி வீதிகளிலே எண்ணற்ற இரத்தினக் குவியல்கள் தேடுவாரற்றுக் கிடக்கின்றன !' என ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியதை நீ கேட்டதில்லையா ? அற்பப் பொருள்களின்மீது சிந்தை செலுத்துவதனால் ஆகின்ற பயன் என்ன ? ஆன்மாவை நேருக்கு நேராகத் தரிசிக்க முயல வேண்டும்.''

இங்ஙனம் சொல்லிய பின்பு சுவாமிஜி எதையோ ஆழ்ந்து சிந்திப்பவர் போலத் தம்மை மறந்திருந்தார். அதன் பின்னர், பின் வருமாறு சொல்லுவாராயினர்:

''நான் அமெரிக்காவிலிருந்த காலத்திலே சில அற்புதச் சத்திகள் என்னிடத்தில் உண்டாயின. நான் மக்களுடைய கண்களை உற்று நோக்கி அவர்களுடைய மனத்திலுள்ள விஷயங்களைக் கணப்பொழுதிலே எடுத்துச் சொல்லிவிடுவேன். மக்களுடைய உள்ளத்தில் நிகழும் நிகழ்ச்சி, கைத்தலத்து நெல்லிக்கனி போல எனக்குத் தெளிவாகப் புலப்படும். இவ்விஷயங்களைச் சிலருக்கு எடுத்துச் சொல்லுவேன். அவருட்பலர் எனக்குச் சிஷ்யராயினர்; பொருத்தமில்லாத நோக்கத்தோடு வந்து கலந்திருந்தவர்கள் இத்தகைய சத்தி என்னிடமிருப்பதைக் கண்ட மாத்திரத்தே என் முன் வாராது அகன்று போனார்கள்.

''சிக்காகோ முதலிய நகரங்களிலே நான் சொற்பொழிவு செய்த காலத்திற் சில வேளைகளில் ஒரு வாரத்திற்குப் பன்னிரண்டு பதினைந்து சொற்பொழிவுகளும் செய்ய நேரிடும். இதனால், உடலிலும்

மனத்திலும் இளைப்பு மிகுதியாய் இருக்கும். பேசுவதற்குரிய விஷயங்கள் பேசித் தொலைந்தன எனக் கண்டு, அடுத்த தினம் புதியதாக என்ன விஷயத்தைப்பற்றிப் பேசலாம் என்று இவ்வாறு எண்ணவேண்டியிருந்தது. புதுக் கருத்துகளுக்கு உள்ளமானது வறுமைப்படுவதாகக் காணப்பட்டது. இப்படி இருக்கின்ற காலத்தில் ஒரு நாள் என்ன செய்யலாமென்று எண்ணிக்கொண்டு படுக்கையிற் படுத்திருந்தேன். ஒருவாறு அயர்ந்து நித்திரை போகிற சமயத்திலே, என் பக்கலில் ஒருவர் நிற்பது போலவும், பிரசங்கம் செய்வது போலவும் எனக்குப் புலப்பட்டது. நான் முன்பு கேட்டிராதனவும் கருதியிராதனவுமாகிய பல புதிய செய்திகள் என் செவியிற் பட்டன. விழித்துக்கொண்ட பிறகு அவற்றை நினைவு கூர்ந்து பிரசங்கத்தில் எடுத்துக் கூறினேன். இப்படி எத்தனை முறை நிகழ்ந்ததென்பது சொல்லுவதற்கில்லை. படுக்கையிற் படுத்திருக்கும் பொழுது பலப்பல நாள் இத்தகைய பிரசங்கங்களைக் கேட்டேன். சில வேளைகளில் இவை உரத்த குரலிலே சொல்லப்பட, அடுத்த அறைகளிலே இருந்தவர்கள் அவ்வொலியைக்கேட்டு, 'சுவாமிஜி, நேற்றிரவு யாரோடு உரத்துப் பேசிக்கொண்டிருந்தீர்கள்' என வினவுவார்கள். நான் ஒரு வகையாக இந்த வினாக்களுக்குப் பதிலளிக்காமல் விட்டுவிடுவேன். நினைக்குமிடத்து நான் கண்ட தோற்றம் பேராச்சரியத்திற்குரியதே.''

சுவாமிஜியினுடைய வார்த்தைகளைக் கேட்ட சிஷ்யர் மிகவும் அதிசயப்பட்டு, ஊன்றி ஆலோசித்து, ''ஐய, தேவரீருடைய சூக்கும சரீரம் இங்ஙனம் பிரசங்கம் செய்திருக்கலாம்; தூல சரீரத்திலே பிரதி ஒலி கேட்டிருக்கலாம்,'' என்றார்.

சுவாமிஜி இதற்குச் செவி சாய்த்து, ''ஆம்; இருக்கலாம்,'' என்றார்.

சுவாமிஜியினுடைய அமெரிக்க அனுபவங்களைப் பற்றிப் பின்பு சம்பாஷணை நடந்தது.

சுவா: அமெரிக்க தேசத்துப் பெண்கள் ஆடவரைவிட நன்றாகக் கல்வி கற்றவர்கள். விஞ்ஞான சாத்திரத்திலும் தத்துவ சாத்திரத்திலும் நன்றாகப் பயின்றிருக்கிற காரணத்தினால், அவர்கள் என்னை மதித்துப் கௌரவப்படுத்தினார்கள். ஆடவர்கள் பகல் முழுதும் தங்கள் தொழிலே கருத்தாக இருப்பதனாலே, அவர்களுக்கு ஓய்வு மிகச் சொற்பம். பெண்களோ, கல்விச்சாலைகளிலும் கல்லூரிகளிலும் நன்றாகக் கல்வி கற்றும் கற்பித்தும் உயர்ந்த புலமை அடைந்திருக்கிறார்கள். அமெரிக்காவிலே எத்திசை நோக்கித் திரும்பினாலும் அத்திசையெல்லாம் அமெரிக்கப் பெண்களது ஆற்றலையும் செல்வாக்கையும் காணலாகும்.

சிஷ்: ஐய, மதவெறி பிடித்த கிறிஸ்தவர்கள் உங்களுக்கு எதிரிடையாய் இருந்ததில்லையா?

சுவா: ஆம்; இருந்தார்கள். மக்கள் என்னைக் கௌரவப் படுத்தியதால் பாதிரிகளுடைய பொறாமை என்னைப் பின் தொடர ஆரம்பித்தது. தினசரிப் பத்திரிகைகளிலே என்னைப்பற்றிப் பொய் யாகிய பழி வார்த்தைகளை வெளியிட்டுப் பரப்பினார்கள். அவற்றை மறுத்துரைக்கும்படி பலர் என்னைத் தூண்டினராயினும், நான் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. நேர்மையற்ற அறிவால் இவ்வுலகிற் பெரிய கருமம் ஒன்றும் நடந்தேறாதென்னும் நிச்சய நம்பிக்கை எனக்கு உண்டு. ஆதலினாலே, கயவர் கூறும் பழி மொழி யைப் பொருட்படுத்தாது, எனது கருமமே கண்ணாக முயன்றேன். இதனால், என்மேற் பழி தூற்றியவர்கள் பின்பு மனந்திரும்பி, என் அண்டை வந்து மன்னிப்புக் கேட்டதோடு, பத்திரிகைகளிலே தாங்கள் முன் எழுதியது பிழையென்றும் வெளியிட்டார்கள். சில வேளைகளில், யாவர் ஒருவருடைய மனைக்கு யான் விருந்தாக அழைக்கப்பட்டேனோ, அன்னவரைக் கண்டு கோளுரைப்பார்கள். அவர் அதனைக்கேட்டுவாயிற்கதவைப் பூட்டிவிட்டுப்போய்விடுவார். அழைப்புக்கு இணங்கி யான் அங்கே சென்று வீடு மூடப்பட்டிருப் பதையும் யாருமில்லாதிருப்பதையும் கண்டு திரும்புவேன். சிலநாள் கழித்துத் தாமே உண்மையை உணர்ந்து, தாம் முன்பு நடந்து கொண்டதற்காக வருத்தமடைந்து, தம்மைச் சிஷ்யராக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டி நிற்பர் ஒரு சிலர். என் மைந்தனே, இவ் வுலகம் முழுவதுமே உலோகாயதத்தையடுத்த எளிய எண்ணங் களால் நிறைந்துள்ளது. அங்ஙனமாயினும், உண்மைத் தைரியத் தோடு கூடிய ஒழுக்கமும் விவேகமுமுடையார், இவற்றால் ஒரு பொழுதும் வஞ்சிக்கப்படுவதில்லை. 'உலகம் தான் விரும்பியதைச் சொல்லட்டும்; நான் செல்ல வேண்டிய கடப்பாட்டின் வழிச் செல்லுவேன்,' என்று இருப்பதே ஒரு வீரன் ஒழுகவேண்டியமுறை. அங்ஙனமின்றி, இரவும் பகலும், 'இந்த மனிதன் என்ன சொல்லு கிறான்? அவன் என்ன எழுதுகிறான்?' என்ற நினைவோடிருந்தால் பெருங்கருமம் ஒன்றும் நடந்தேறாது. 'அறநூல் வல்லோர் தன்னைப் புகழினும் புகழுக; இகழினும் இகழுக; இலக்குமி தேவி வரினும் வருக; விரும்பிய இடத்துச் செல்லினும் சென்று விடுக; மரணம் இன்று வரினும் வருக; ஒரு நூற்றாண்டு கழிந்து வரினும் வருக; அறிவுடையோன் செல்லுதற்குரிய நேர் வழியினின்று சிறிதும் பிறழமாட்டான்,' எனக் கூறுகின்ற சம்ஸ்கிருத சுலோகத்தை நீ அறிவாயா? மக்கள் உன்னைப் புகழினும் புகழுக; இகழினும் இகழுக. திருமகள் அருள் புரியினும் புரிக; புரியாதொழியினும் ஒழிக. உடல் இன்று வீழினும் வீழுக; ஒரு யுகங்கழிந்து வீழினும் வீழுக. உண்மை வழியிலிருந்து அணுவளவேனும் வழுவாதிருப் பாயாக. சாந்தமாகிய துறையை அடைகிற வரையும் எத்தனை பெரும்புயல்களையும் அலைகளையும் கடந்து செல்லுதல் வேண்டும்!

உயர்வடைந்தோன் மிகக் கொடிய இடுக்கண்களினூடாகச் சென்றிருத்தல் வேண்டும். பெரியோருடைய சரித்திரங்கள் வாழ்க்கையாம் உரைகல்லிலே உரைத்துச் சோதிக்கப்பட்டு நல்லதென்று கண்ட பின்பேதான் உலகம் அவர்களைப் பெரியோர் என மதிக்கின்றது. ஏழைமை படைத்த கோழை நெஞ்சினர், திரைகடலுக்கஞ்சித் தமது கப்பலைக் கரையிற்கவிழ்த்துவிடும் நீர்மையர். ஒரு வீரன் இவற்றைப் பொருட்படுத்துவது இல்லை. 'வருவது வருக; நான் கருதிய நோக்கத்தை அடைவேன்,' என ஆண்மையோடு முயலுவது மனிதத்தன்மையாகும். இத்தகைய ஆண்மை உன்னிடம் இல்லாவிடின், உனது சோம்பலை நீக்குவதற்குத் தெய்வத்தினுலும் ஆகாது.

சிஷ்: அப்படியாயின், தெய்வத்தின் உதவியை நாடுதல் ஆற்றல் இன்மைக்கு அடையாளமாகுமோ ?

சுவா: ஆன்மார்ப்பணமும் ஆண்டவனிடத்து நம்பிக்கையும் மனிதனுல் அடையக்கூடிய மிக உயர்ந்த நிலையெனச் சாத்திரங்கள் கூறும். ஆனுல், இந்த நாட்டிலே இக்காலத்தில் மக்கள் 'தெய்வம்', 'தெய்வம்' என்று சொல்வதைப் பார்த்தால், அது பெரிய கோழைத்தனத்தின் வழி வந்த மரணக் குறிபோலக் காணப்படுகிறது. தங்களுடைய குற்றங்குறைகள் எல்லாவற்றையும் சுமத்துவதற்குப் பெரிய உருவம் ஒன்றினை நியமித்துக்கொள்ளுவது போலக் காணப்படுகிறது. 'பசுவைக் கொன்ற பாவம்'* என்பதைப் பற்றி ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதையை நீ கேள்விப்பட்டதில்லையா ? ஈற்றிலே தோட்டக்காரன் பசுவைக் கொன்ற பாவத்துக்காகத் துன்பப்பட வேண்டியவனுயினுன். தன்னுடைய நன்மை தீமைகளைக் கடவுள் மேற்சுமத்தி 'ஆண்டவனுடைய அருட்படி நான் நடக்கிறேன்; என்னுலாவதொன்றில்லை,' எனக் கூறித் தாமரையிலைத் தண்ணீரெனத் தன்னை நினைப்போன், உள்ளபடி அந்த நிலையிலே நிற்பானுயின், முத்த புருஷனுகலாம். ஆனுல், நடப்பதென்னவெனின், 'நன்மை எல்லாம் எனக்கு; தீமைக்கு ஆண்டவன் பொறுப்பு,' என்பது. இத்தகைய தெய்வ நம்பிக்கை இருந்தவாறென்ன ! ஞானத்தின் நிறைவு, ஆண்டவன்பால் அன்பு

* ஒரு மனிதன் அழகாய் அமைத்திருந்த ஒரு தோட்டத்தினுள்ளே பசுவொன்று புகுந்து மிகக் கெடுதி செய்துவிட்டது. அம்மனிதன் வெகுண்டு பசுவை நன்ருக அடித்துக் கொன்றுவிட்டான்; பசுக் கொலையினுல் வந்த கொடிய பாவத்தினின்று தன்னை நீக்கிக்கொள்வதற்கு ஒரு சூழ்ச்சி செய்தான்: கையைக் காப்பாற்றும் தெய்வம் இந்திரன் என அறிந்தமையினுற் குற்றத்தை இந்திரன்மீது சுமத்த முயன்ருன். அவனுடைய சூழ்ச்சியை அறிந்த இந்திரன், ஒரு கிழப் பிராம்மண வடிவத்தோடு அவனிடம் வந்து, தோட்டத்தில் நடந்திருந்த நற்செய்கைகள் பலவற்றைப் பற்றி விசாரித்தான். ஒவ்வொன்றும் தன் முயற்சியினுலே முடிந்ததெனத் தோட்டக்காரன் கூறினுன். "ஆம், இங்குள்ள எல்லாம் உன்னுலாகியவை; பசுக்கொலை மாத்திரம் இந்திரனுக்குரியதோ?" எனக்கூறி இந்திரன் மறைந்தனன்.

என்ற இவை கைகூடிய பின்பு அன்றிக் கடவுளிடத்துப் பூரண நம்பிக்கை உண்டாக மாட்டாது. மெய்ம்மையிலே கடவுளிடத்து உண்மையான நம்பிக்கை உடையவன் நன்மை தீமை என்னும் எண்ணத்திற்கு அப்பாற்பட்டவன் ஆகிறான். இக்காலத்திலே நம்மிடையே இத்தகைய நிலைக்குச் சிறந்த உதாரணமானவர் நாக மஹாசயர்.

பின்னர்ச் சம்பாஷணை நாகமஹாசயரைப்பற்றி நடந்தது. ''அவரைப் போன்ற சிறந்த பக்தர் பிறர் ஒருவரில்லை. ஆ ! அவரை நான் என்று காண்பேன் !'' எனச் சுவாமிஜி கூறினார்.

சிஷ்: தேவரீரைத் தரிசிக்கும்பொருட்டு அவர் விரைவிலே கல்கத்தாவுக்கு வருவாரென அவர் மனைவியாராகிய அம்மையார் எனக்கு எழுதியிருக்கின்றார்.

சுவா: ஸ்ரீராமகிருஷ்ணர் அவரை ஜனக மன்னருடன் ஒப்பிட்டுப் பேசுவதுண்டு. அவரைப் போன்று புலன்களை அடக்கிய மனிதனைக் காண்பதும் அரிது; கேட்பதும் அரிது. நீ இயன்ற வரை அவரோடு பழகுதல் வேண்டும். அவர் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு மிகவும் நெருங்கிய சிஷ்யர்களுள் ஒருவர்.

சிஷ்: எங்கள் ஊரிலே பலர் அவரைப் பைத்தியக்காரரெனச் சொல்வதுண்டு. ஆனால், நான் கண்ட நாள் முதலாக அவர் ஒரு பெரிய மகாத்துமா என்பதை அறிந்திருக்கிறேன். அவர் என்மேல் மிகுந்த அன்பு பாராட்டுகிறார். அவருடைய நல்லாசீர்வாதம் எனக்குண்டு.

சுவா: அத்தகைய மஹா புருஷருடைய அன்பினை நீ பெற்றிருக்கின்றாய். ஆதலினால், நீ அஞ்ச வேண்டுவது எதற்கோ ? எத்தனையோ பிறவிகளில் செய்த தவத்தின் பயனாக அத்தகைய பெரியோருடைய நட்பு ஒருவனுக்குக் கிடைக்கின்றது. அவர் வீட்டிலே எவ்வாறு வாழ்கின்றார் ?

சிஷ்: அவர் தம் வீட்டுக்கு வருகின்ற விருந்தினருக்கு உபசாரம் செய்வதையே தமக்குரிய தொழிலாகக் கொண்டவர்; வேறு எவ்வகை முயற்சியும் அவருக்கில்லை. பால் பாபு குடும்பத்தார் அவருக்குக் கொடுக்கின்ற சிறு தொகைப்பணம் அன்றி வேறு எவ்வித வருவாயும் அவருக்கு இல்லை. வீட்டிற்செலவோ, செல்வக் குடும்பங்களின் செலவை நிகர்த்தது. அவர் தம் இன்பநுகர்ச்சிக்கெனக் காற்காசுகூடச் செலவழிக்க மாட்டார்; எல்லாச் செலவும் பிறர் பொருட்டே; தொண்டு புரிவதையே தமது வாழ்க்கையின் பெருநோக்கமாகக் கொண்டிருக்கிறார். எல்லாப் பிராணிகளிடத்தும் நிலைபெற்றிருக்கும் ஆன்மாவை அறிந்துகொண்டமையினால், அனைத்து உலகையும் தாமாகவோ தம்மிடத்து உள்ளதாகவோ எண்ணி உயிர்களுக்குத் தொண்டு செய்வதிலே அவர் ஈடுபட்டிருக்கின்றார் என்பது எனக்குப் புலப்படுகின்றது. பிறருடைய தொண்டென்றால்

அவர் தம் உடலையும் மறந்து, இடையீடின்றி முயலுவார். ஐய, உரை உணர்வு கடந்த நிலையெனத் தேவரீர் பேசிய நிலையில் அவர் என்றும் வாழ்கின்றார் என நான் நினைக்கிறேன்.

சுவா: ஏன் அப்படி இருக்கக்கூடாது? அவர் ஸ்ரீராமகிருஷ்ணரால் பெரிதும் நேசிக்கப்பட்டவரல்லரோ? ஸ்ரீராமகிருஷ்ணருடைய தெய்விகத் தோழர்களுள் ஒருவர் நாகமஹாசயர் என்னும் பெயரோடு உங்களுடைய கிழக்கு வங்காளத்தில் பிறந்தனர். அவருடைய ஞான ஒளியினால் கிழக்கு வங்காளம் பொலிவுற்றுத் திகழ்கின்றது.

(16)

[இடம்: பேலூரில் வாடகைத் திருமடம். காலம்: 1898-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம்.

காஷ்மீரத்திலிருந்து சுவாமிஜி திரும்பி வந்து இரண்டு மூன்று தினங்களாய்விட்டன. அவருடைய உடல் நலம் சற்றுக் குன்றியிருந்தது. சிஷ்யர் திருமடத்திற்குவந்தவுடன் சுவாமி பிரமானந்தர் அவரை நோக்கி, "காஷ்மீரத்திலிருந்து திரும்பிய பிறகு சுவாமிஜி யாருடனும் பேசுவதில்லை. சிந்தனையில் ஆழ்ந்து ஓரிடத்திலே இருந்துகொண்டிருக்கிறார்; அவரைப் போய்க் கண்டு உரையாடி அவருடைய உள்ளத்தை உலகப் பொருள்களின்மீது சிறிது சாரும்படி செய்வாயாக," என்றார்.

சிஷ்யர் சுவாமிஜியினுடைய அறைக்கு வந்து மேல் மாடியிலே ஆழ்ந்த தியானத்தில் இருப்பவராகத் தோன்றிய சுவாமிஜியைக் கண்டார். அவருடைய முகத்திலே புன்னகை இல்லை. ஒளி பொருந்திய அவருடைய கண்கள் புறநோக்கமில்லாது ஏதோ அகத்திலுள்ள ஒன்றை நோக்கிக்கொண்டிருக்கும் தன்மையவாய்க் காணப்பட்டன. அவர் சிஷ்யரைக் கண்டதும், "மகனே, வந்துவிட்டாயா? ஆசனத்திலிரு," என்று சொல்லிவிட்டு மீண்டும் மௌனமாயினார். அவருடைய இடக்கண்ணின் உட்புறம் சிவந்திருப்பதைக் கண்ட சிஷ்யர், "தேவரீருடைய கண்கள் சிவந்திருப்பது ஏனோ?" என வினவினார். அவர், "ஒன்றுமில்லை," என்று சொல்லிவிட்டு மீண்டும் மௌனமானார். நெடுநேரம் கழிந்தும் சுவாமிஜி பேசாதிருப்பதைக் கண்ட சிஷ்யர், உள்ளத்தில் கவலையுற்று, சுவாமிஜியினுடைய திருவடிகளைப்பற்றி, "அமரநாத்திலே தேவரீர் கண்டவற்றை எனக்குச் சொல்லத் திருவுள்ளம் இல்லையோ?" என்றார். சுவாமிஜி, சிஷ்யர் தம் கால்களைத் தொட்ட மாத்திரத்தே தியான நிலையினின்று சிறிது விலகி, உள்ளத்தை ஒரு சிறிது புறத்தே நோக்க விட்ட தன்மையினராய், "மகனே, அமரநாத்தைத் தரிசித்த காலம் முதல் அல்லும்

பகலும் இருபத்து நான்கு மணி நேரமும் சிவபெருமான் என்னுடைய சிரத்தின்மீது அமர்ந்திருப்பது போல எனக்குக் காணப்படுகிறது,'' என்ருர். இதனைக் கேட்ட சிஷ்யர் ஆச்சரியத்தினுல் மௌனமானுர்.

சுவா: அமரநாத்திலும் க்ஷீரபவானியிலும் பல விதத் தவங்களைப் புரிந்தேன். புகையிலை கொஞ்சம் தயார் செய்துகொண்டு வா; நிகழ்ந்தனவெல்லாம் உனக்குத் தெரிவிக்கிறேன்.

சிஷ்யர் சுவாமிஜியினுடைய கட்டளையைச் சென்னிமேற்கொண்டு அதனை உவகையோடு செய்து முடித்தார். சுவாமிஜி புகையைச் சிறிதாக இழுத்துக்கொண்டே சொல்லுவாராயினர்: ''அமரநாத்துக்குப் போகும் பாதையிலே மலையில் மிகுதியும் செங்குத்தான ஓரிடத்தில் ஏறிச்சென்றேன். யாத்திரிகர்கள் பொதுவாக அவ்வழிச் செல்வதில்லை. அவ்வழியே செல்ல வேண்டுமென்னும் எண்ணம் என்னுள்ளத்தில் உதித்ததால், அங்ஙனம் செய்தேன். செங்குத்தான மலையின்மீது ஏறியது உடலுக்கு அயர்வை உண்டாக்கியது. அங்குள்ள குளிர் தாங்கொண்ணுதது; ஊசியினுலே குத்தினுல் எவ்விதம் இருக்குமோ, அவ்வித உணர்ச்சியைத் தருவது.

சிஷ்: அமரநாத்திலுள்ள திருவுருவத்தைத் தரிசிக்கும்பொழுது உடையின்றி உட்செல்வது வழக்கம் என்கிருர்களே! அஃது அப்படித்தானு?

சுவா: ஆம், நான் குகையினுள்ளே போகும்பொழுது கோவணத்தோடுதான் போனேன்; உடல் முற்றிலும் விபூதி அணிந்திருந்தேன். குளிரோ, அனலோ தோற்றவில்லை. வெளியே வந்த பின்னர்க் குளிரினுல் உடல் விறைத்துப் போயிற்று.

சிஷ்: தூய்மையான புருக்களைத் தேவரீர் கண்டதுண்டா? அந்தக் குளிரிலே மற்ரெரு பிராணியும் உயிர் வாழாதிருக்கச் சில புருக்கள் மாத்திரம் எங்கேயோ இருந்து இடையிடையே அங்கே வருகின்றனவென்று நான் கேள்விப்பட்டேன்.

சுவா: ஆம்; நான் மூன்று நான்கு வெள்ளைப் புருக்களைக் கண்டேன். அவை குகையினுள் இருக்கின்றனவா, அன்றேல் அணித்தேயுள்ள மலையில் இருக்கின்றனவா என்பதை என்னுல் நிச்சயிக்க இயலவில்லை.

சிஷ்: ஐய, ஆலயத்தினின்று புறத்திலே வரும்பொழுது புருக்களைத் தரிசித்தால், சிவபெருமானுடைய தரிசனத்தைப்பெற்றதற்கு அஃது ஓர் அடையாளமாகும் என மக்கள் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

சுவா: புருக்களினுடைய தரிசனத்தினுல் இஷ்ட சித்தி உண்டாகுமென நான் கேள்விப்பட்டேன்.

ஸ்ரீநகருக்குத் திரும்பி வரும் பொழுது யாத்திரிகர்கள் வழக்கமாக வருகின்ற பாதையில் சுவாமிஜியும் வந்தார். ஸ்ரீநகருக்குத்

திரும்பி வந்து சில நாட்களாயின பின் க்ஷீர்பவானி தேவியைத் தரிசிக்கும் நோக்கத்துடன் சென்று, ஏழுநாள் தேவியை வழிபட்டு, பாலினுலே ஹோமமும் செய்தார்; தினம் ஒரு மணங்குப் பாலை நைவேத்தியம் செய்வார். ஒரு நாள் தேவியை வழிபட்டுக்கொண்டிருக்கும் பொழுது சுவாமிஜியின் உள்ளத்திலே ஓர் எண்ணம் தோன்றியது: "எண்ணற்ற ஆண்டுகளாக அன்னையாகிய பவானி இவ்விடத்திலே தன் தெய்வ விளக்கத்தை வெளிப்படுத்தியிருக்கின்றாள். முகம்மதியர் வந்து அன்னையின் ஆலயத்தை அழித்த பொழுது இங்கிருந்தவர் அதனைத் தடுப்பதற்கு ஒன்றும் செய்திலரே! அந்நாட்களில் நான் இருந்திருந்தால், சும்மா விட்டிருப்பேனே?" என்னும் எண்ணம் எழுதலும், சிந்தை துன்பத்தினுல் நைந்து உருகியது. அப்பொழுது அன்னையினுடைய தெய்வ வாக்குத் தெளிவாகச் சுவாமியினுடைய செவியிலே இவ்வண்ணம் பட்டது: "என் விருப்பத்தின்படியே முகம்மதியர் இந்த ஆலயத்தை அழித்தார்கள். பாழாகிய கோயிலிலே வாழவேண்டுமென்பது எனது விருப்பம். அல்லாவிடின் தங்கத்தினுலே ஏழடுக்கு மாளிகையாய் விளங்குகிற ஆலயம் ஒன்றினை அமைத்துக்கொள்ளுதல் எனக்கு இயலாததொன்ரு? உன்னுல் என்ன முடியும்? நான் உன்னைக் காப்பாற்றுகின்றேனு, நீ என்னைக் காப்பாற்றுகின்ருயா?"

சுவாமிஜி மேலும் சொல்வார்: "அந்தத் தெய்வச் சொல் என் செவியில் பட்ட நாள் முதல் நான் ஏற்பாடுகள் அமைக்கும் எண்ணத்தை விட்டுவிட்டேன். மடாலயங்கள் அமைக்க வேண்டும் என்பது போன்ற எண்ணங்கள் என்னுள்ளத்தை விட்டகன்றுவிட்டன. அன்னைக்கு எது சித்தமோ, அதுவே ஆகக்கடவது."

இதனைக் கேட்ட சிஷ்யர் ஆச்சரிய வயத்தராகி, 'காண்பதும் கேட்பதும் உள்ளத்திலுள்ள ஆன்மாவினுடைய எதிரொலியே யன்றிப் புறத்தே யாதுமில்லை,' எனச் சுவாமிஜி தமக்கு ஒரு நாள் சொன்னதை நினைத்து, அச்சமின்றிச் சுவாமிஜியை நோக்கி, "ஐய, தேவரீர் இத்தெய்வ ஒலிகள் உள்ளே இருக்கின்ற எண்ணங்கள், உணர்ச்சிகளின் எதிரொலியே எனக் கூறியதுண்டல்லவா?" என்ருர். சுவாமிஜி அவரை நோக்கி, "உள்ளிருந்தெழினும், புறத்தே தோன்றினும், என் செவியிற்பட்டது போல அத்தெய்வ ஒலிகள் செவியிற்படுமாயின், அவற்றைப் பொய்யென மறுத்தல் கூடுமா? நீயும் நானும் உரையாடுவது போலத் தெய்வ ஒலிகளும் கேட்கப்படுகின்றன," என்ருர்.

சுவாமிஜியினுடைய திருவாக்கு உள்ளத்துக்குத் துணிவைத் தருவதாதலின், மறுத்துரை கூருது சிஷ்யர் சுவாமிஜியினுடைய மொழிகளை ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்பு இறந்து போன மக்கள் பேய் வடிவத்தோடு அலைந்து திரிவதைப்பற்றி விசாரித்து, சிஷ்யர், "ஐய, பூத பிரேத

பேய் வடிவங்களைப்பற்றிச் சாத்திரங்களும் கூறுகின்றனவே! இது உண்மையா, பொய்யா?'' என்றார்.

சுவா: அது உண்மைதான். நீ காணாத பொருள்களெல்லாம் பொய்யென்று எண்ணுகிறாயா? உன்னுடைய காட்சிக்கு அப்பால் மிகுந்த தூரத்திலே கோடிக்கணக்கான அண்டங்கள் சுழல்கின்றன. அவற்றை நீ காண்பதில்லை. ஆதலினால், அவை இல்லை என்பது முடிபாகுமோ? பூதங்களைப்பற்றியும் பேய்களைப்பற்றியும் சிந்தை செய்யாதே. அவற்றைப்பற்றி நினையாமலிருப்பதே முறை. இந்த உடலினுள்ளே இருக்கின்ற ஆன்மாவைக் காண்பதே உன் கடமை. ஆன்மதரிசனம் பண்ணிய பின் பூதங்களும் பிறவும் உனக்கு அடிமையாகக் காண்பாய்.

சிஷ்: ஆனால், ஐய, இவற்றைக் கண்டால் மேல்வரும் பிறவியைப்பற்றி நம்பிக்கை உண்டாகும். அதனால், ஐயங்கள் ஒழிந்துவிடும்.

சுவா: நீங்கள் வீரர்களாயிருக்கிறீர்கள். மேல் வரும் வாழ்வைப்பற்றிய உண்மைகளை அறிந்து மனம் உறுதிப்படுவதற்குப் பூதங்களையும் பேய்களையும் பார்க்கவேண்டுமா? எத்தனையோ விஞ்ஞான சாத்திரங்களையும் சமய சாத்திரங்களையும் நீ விசாரித்து அறிந்திருக்கிறாய்; இடம் அகன்ற இப்பிரபஞ்சத்தின் இரகசியங்களை எல்லாம் படித்திருக்கிறாய். இந்த அறிவோடு ஆன்மஞானம் பெறுவதற்குப் பூதங்களையும் பேய்களையும் காணவேண்டுமென்று சொல்லுவது எவ்வளவு வெட்கப்படத் தக்கது!

சிஷ்: நல்லது ஐய, தேவரீர் பூதங்களையும் பேய்களையும் கண்டதுண்டா?

தம் இறந்துபோன உறவினரொருவர் ஆவி ரூபமாகப் பல முறை தம்மிடம் வந்த செய்தியைச் சுவாமிஜி எடுத்துக் கூறினார். சில வேளை மேல் நடக்கப் போகின்ற விஷயங்களைப்பற்றி அந்த ஆவி உருவம் தெரிவிக்கும். ஆனால், அந்நிகழ்ச்சிகள் ஒரே வழி தவறிப் போவதுமுண்டு. சுவாமிஜி யாத்திரை செய்யும் பொழுது ஒரு புனிதத் தலத்திலே, 'இந்த ஆவி உருவத்துக்கு விடுதலை கிடைக்க வேண்டும்,' என்று பகவானை வேண்டிக்கொண்டார். அதன் பின்பு அவ்வுருவம் அவரிடம் வரவில்லை.

சிஷ்யர் சுவாமிஜியை நோக்கி, 'சிராத்தம் முதலிய கிரியைகள் இறந்துபோனவர்களுடைய ஆவிகளுக்கு நலத்தை அளிப்பனவா?' என வினவினார். அதற்குச் சுவாமிஜி, 'அங்ஙனம் ஆதல் கூடும்,' என்றார். 'நம்புதற்கு ஆதாரங்கள் எவை?' எனச் சிஷ்யர் வினவியபொழுது, ''இவ்விஷயத்தைப்பற்றி மற்றொரு தினம் விரிவாகச் சொல்லுகிறேன். சிராத்தக் கிரியைகளினால் இறந்துபோனவர்களுடைய உயிருக்கு நன்மையுண்டு என்பதை மறுக்கொணா நியாயங்களினால் நிலை நாட்டலாம். இன்று எனக்கு உடல் நல

மில்லை; மற்றொரு தினம் சொல்லுகிறேன்,'' எனச் சுவாமிஜி கூறினார். இந்த விஷயத்தைப்பற்றிச் சுவாமிஜியிடம் வினவுதற்கு மற்றொரு தருணம் வாய்க்கவில்லை.

(17)

[இடம்: பேலூரில் வாடகைத் திருமடம். காலம்: 1898-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம்.]

திருமடமானது இப்பொழுது பேலூரிலே நீலாம்பர பாபுவினுடைய பூஞ்சோலை வீட்டிலேஅமைக்கப்பட்டிருக்கிறது. கார்த்திகை மாதம்; சுவாமிஜி சம்ஸ்கிருத பாஷையிலே சாத்திரங்களைக் கற்பதிலும் ஆராய்வதிலும் மிகவும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்; இக்காலத்திலேதான் **"ஆசண்டாளப் பிரதிஹதரய:"** எனத் தொடங்குகிற பாடலை எழுதினார். இன்று, ''ஓம் ஹ்ரீம் ரிதம்'' எனத் தொடங்கும் பாட்டை எழுதி அதனைச் சிஷ்யரிடம் கொடுத்து, ''இச்செய்யுளில் ஏதாவது யாப்புக் குற்றம் இருக்கிறதா ? பார்,'' என்று கூறினார். சிஷ்யர் அதன்பொருட்டுக் குறித்த செய்யுளைப் பிரதி செய்துகொண்டார்.

இத்தினத்திலே கலைமகள் சுவாமிஜி நாவிலே நடனமாடுவது போலத் திகழ்ந்தாள். அவர் சிஷ்யரோடு இரண்டு மணி நேரம் வரை மிகவும் அழகிய இன்னோசையுடைய வடமொழியிலே பேசினார்.

சிஷ்யர் கீதத்தைப் பிரதி செய்த பின்பு சுவாமிஜி அவரை நோக்கி, ''இதோ பார் ! எனது சிந்தனையானது கருத்திலே ஆழ்ந்திருப்பதால் சில சமயங்களில் இலக்கணப் பிழைகள் நேரிடக்கூடும்; ஆதலால் இவற்றை ஆராய்ந்து பார்க்கும்படி உங்கள் எல்லாரையும் கேட்கிறேன்,'' என்றார்.

சிஷ்: ஐய, இவை குற்றங்களாகா. விதிகளைக் கடந்து அழகுற உரைக்கும் புதுநெறிகள் என யான் இவற்றைக் கொள்ளுகிறேன்.

சுவா: நீ அப்படிச் சொல்லலாம்; ஆனால், மற்றையோர் அதனை ஏற்றுக்கொள்வாரா ? சில தினங்களுக்கு முன்பு, 'இந்து சமயம் என்பது யாது ?' என்னும் பொருள்மேல் யான் ஒரு கட்டுரை எழுதினேன்; உங்களுட்சிலரும் அது மிகவும் கடினமான நடையுள்ள வங்காளியிலே எழுதப்பட்டதென முறையிட்டீர்கள். நாளடைவிலே மற்றப் பொருள்களைப்போல மொழியும் எண்ணமும் உயிரற்றுச் சிறப்பியல்பு குன்றிப் போகின்றன. அத்தகைய நிலை இந்நாட்டிலே ஏற்பட்டுவிட்டது தெரிகிறது. ஸ்ரீராமகிருஷ்ணருடைய வருகையோடு எண்ணத்திலும் மொழியிலும் புதியதோர் ஆற்றல் உண்டாகியிருக்கிறது. அனைத்தினையும் புத்துருவங்களிலே இயைத்துப் புதுமுறையிலே பரப்ப வேண்டும். பழைய சந்நியாச

ஆச்சிரம முறைகள் சிறிது சிறிதாகத் தேய்ந்துபோகப் புதிய முறைகள் சில நிலைபெறுவதைக் காண்பாயாக. மக்கட் சமுதாயமானது இதற்கு எதிரிடையாய் இருக்கின்றது. ஆயினும், பயனில்லை. நாங்கள் அச்சமுறப் போவதில்லை. இக்காலத்துச் சந்நியாசிகள் தொலை நாடுகளுக்குப் போய்ப் பிரசங்கம் செய்ய வேண்டியவர்கள். பழைய சாதுக்களைப்போல நீறு பூசிய அரை நிருவாண மேனியோடு போகப் புறப்பட்டால், கப்பலிலே இடங்கிடையாது; அந்நிய நாட்டை அடைந்தவுடன் சிறையிலிருக்க வேண்டி நேரிடும். காலம் இடம், நாகரிக வளர்ச்சி என்பவற்றிற்கேற்ப ஒவ்வொரு கருமத்திலும் சிறிது வேறுபாடு ஏற்பட வேண்டுவது அவசியம். வங்காள மொழியிலே சில கட்டுரைகள் எழுதலாம் என்று எண்ணுகிறேன். பண்டிதர்கள் ஒரு வேளை அவற்றைப் பார்த்துக் குறை கூறுதல் கூடும். பாதகமில்லை. வங்காளி மொழிக்கு ஒரு புத்துருவங் கொடுக்க முயலுவேன். இந்நாட்களில் வங்காளி மொழியில் எழுதுவோர் வினைச் சொற்களை மிகுதியாய் வழங்குகின்றனர். இதனால், மொழியினுடைய ஆற்றல் குறைகின்றது. வினைமுற்றுச் சொற்களாற் சொல்லப்படும் கருத்தினைப் பெயரெச்சங்களால் புலப்படுத்தினால் மொழிக்கு ஆற்றல் கூடும். இனிமேல் அந்த நடையிலே எழுத முயல்வாயாக. '**உத்போதன்**' பத்திரிகையிலே அந்நடையில் சில கட்டுரைகள் எழுத முயல்வாயாக. மொழியிலே வினைகளை வழங்குவதன் கருத்து எதுவென்பது உனக்குத் தெரியுமா? முற்றுவினை கருத்தினை நிறுத்துகிறது; வினைமுற்றுக்களை அதிகமாக வழங்கினால், அது விரைந்து மூச்சு விடுவதுபோலப் பலவீனத்துக்கு ஓர் அடையாளமாகும். ஆதலினாலன்றோ, வங்காளி மொழியில் நன்றாகச் சொற்பொழிவாற்றல் இயலாததாகின்றது? சொல் வன்மையுடையோன் இடையிடையேதடைப்பட்டுமொழிதலைவிரும்பான். வெறுஞ் சோறும் பருப்பும் உண்டு உங்கள் உடல் வலியற்றது போல, மொழியும் வலியற்றுப் போய்விட்டது. உணவிலும் வாழ்க்கை முறையிலும் எண்ணத்திலும் மொழியிலும் சத்தி நிரம்பும்படி செய்ய வேண்டும். எல்லா விஷயங்களிலும் சக்தி நிரம்பப்பெற்று நாடி நரம்புகளில் இரத்தம் பரவி எல்லாக் கருமங்களிலும் புத்துணர்ச்சியும் புதிய உற்சாகமும் ஏற்படுமாகில், இந்நாட்டு மக்கள் இக்காலத்தில் ஏற்பட்டிருக்கும் வாழ்க்கை இன்னலிலிருந்து நீங்கி நிலைபெற்றிருப்பார்கள்; அல்லாவிடின், இந்நாடும் இந்த மக்களும் விரைவில் அழிவெய்தி மறைந்துவிட நேரும்.

சிஷ்: ஐய, இந்நாட்டு மக்களுடைய உடல்கள் நெடுநாட்களாக ஓர் அமைப்பைப்பற்றி வளர்ந்து வந்திருக்கின்றன. அத்தகைய அமைப்பினைச் சொற்ப காலத்துக்குள்ளே மாற்றுதல் கூடுமா?

சுவா: பழைய வழக்கங்கள் பிழை என்று கண்டால், நீ ஏன் அவற்றை மாற்றி நல்வழியிலே வாழ்க்கை நடத்தக் கூடாது? உன்னுடைய இலட்சியத்தைப் பத்துப்பேர் பின்பற்றி நடப்பர். அதைக் கண்டு ஐம்பது பேர் நல்வழிப்படுவர். இம்மாதிரி நடந்துகொண்டு போனால், நாளடைவிலே புதுக்கருத்துகள் எல்லா மக்களிடத்திலும் தோற்றிவிடுதல் கூடும். காரியத்தை அறிந்துகொண்ட பிறகும் அதன்படி நடவாவிட்டால், நீங்கள் சொல்லளவில் அறிவுள்ளவர்கள், செயலளவில் மூடர்கள் என்பதை நான் அறிந்துகொள்வேன்.

சிஷ்: ஐய, தேவரீருடைய திருமொழிகள் உற்சாகத்தையும், தைரியத்தையும், உடல் ஆற்றலையும், மனவலிமையையும் தருகின்றன.

சுவா: படிப்படியாக மனத்தினை வலிமைப்படுத்த வேண்டும். ஆற்றலுள்ள ஓர் ஆடவனை உண்டாக்குதல், நூறுயிரம் பிரசங்கம் செய்தற்குச் சமமாகும். மனமும் வாக்கும் ஒருமித்து நிற்க, நல்ல எண்ணங்களை எண்ண வாழ்க்கையிலே பயில வேண்டும். 'உள்ளமாகிய தனியறையினுள்ளே கள்ளமிருத்தல் கூடாது,' என ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னதன் கருத்து இதுவே. எல்லா வகை முயற்சிகளிலும் சாதனமுறை அமைந்திருக்க வேண்டும். தனிப்போதனை முறைகளினாலே நாடு முற்றிலும் நாசமடைந்து போய்விட்டது. சமய உண்மைகளின் சாதனை முறையை வெளிப்படுத்தி, மனிதரோ, மக்கட்சமுதாயமோ, சொல்லுகிற வீண் பசப்பு வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காது, ஒருவழிப்பட்ட சிந்தையோடு யாவன் ஒருவன் நன்முயற்சிகளைச் செய்கின்றானோ, அவனே ஸ்ரீராமகிருஷ்ணருடைய உண்மை மகன் எனப்படுவான். 'யானையானது கடைத்தெரு வழியே நடந்து செல்லுகிறது. ஆயிரம் நாய்கள் அதனைப் பார்த்துக் குரைக்கின்றன. அது போலவே உலகத்து மக்கள் பழி தூற்றுமிடத்தும் சாதுக்கள் அவரைச் சினவாது நடந்து செல்வார்கள்,' எனத் துளசிதாசர் எழுதியதை நீ கேள்விப்படவில்லையா? நீ இம்மாதிரி நடப்பாயாக; மக்களுடைய வார்த்தையைப் பொருட்படுத்தாதே. அவர்களுடைய புகழ்ச்சி மொழிக்கோ, இகழ்ச்சி மொழிக்கோ செவிசாய்த்தால், வாழ்க்கையிலே பெருங்கருமம் ஒன்றுஞ் செய்து முடிக்க இயலாது. **"நாயமாத்மா பலஹீனேனலப்ய:**— இந்த ஆன்மன் வலியற்றவர்களால் அடையப்பட மாட்டான்." முதலிலே உடலை நன்றாய் வளர்க்கக் கூடிய உணவினை உட்கொண்டு அதைச் செம்மையாக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் மனம் வலிமையடையும். மனமானது உடலினுடைய சூக்கும பாகம். மனத்திலே பெருவலி படைத்திருக்க வேண்டும். "நான் கீழ்மைப்பட்டவன்", "நான் கீழ்மைப்பட்டவன்" என்று சொல்லுவதனால், மனிதன் தன்னைத்தானே கீழ்மைப்படுத்திக்கொள்ளுகின்றான். ஆதலினாலன்றோ சாத்திரங்களிலே,

முக்தாபிமானீ முக்தோ ஹி பத்தோ பத்தாபிமான்யபி
கிம்வதந்தீதி ஸத்யேயம் யாமதி: ஸாகதிர்பவேத்

''தன்னை விடுதலையடைந்தவனாக நினைப்பவன் விடுதலையடைகின்றான், பந்தம் உற்றவனாக நினைப்பவன் பந்தம் உறுகின்றான்; உலக வழக்கிலே அறியப்பட்ட இந்த வாக்கியம் உண்மையானது; ஒருவன் தன்னை எவ்வாறு நினைக்கின்றானோ, அந்தநிலையை அடைகின்றான்'' என்று கூறப்படுகிறது? எப்பொழுதும் விழிப்புடனே விடுதலையிற் கருத்து வைத்திருப்பவன், விடுதலை அடைகிறான். தான் கட்டுண்டோனென்று எண்ணுகிறவன், பல பிறவிகளிலே பந்தத்தினின்று நீங்காது அலைவுறுகிறான். இது உண்மை. இவ்வுண்மை ஆன்மிக விஷயங்களைப்போலவே உலக விஷயங்களிலும் பொருத்தமுடையதாய் இருக்கிறது.

மனவலியிழந்து ஊக்கமற்றிருப்போர் கருமத்தையும் செய்து முடிப்பதில்லை. அவர்கள் அழுது ஓலமிட்டுக்கொண்டு பிறவிதோறும் உழலுகிறார்கள். இவ்வுலகம் வீரர்களுக்கு இன்ப நிலைக்களமானது; இது மாறா உண்மை. வீரனாய் இரு; ''அச்சமில்லை'' என்று எப்பொழுதும் சொல்லு; ''அச்சமில்லை'' என்று எல்லோருக்கும் சொல்வாயாக. அச்சமே மரணம்; அச்சமே பாவம்; அச்சமே நரகம்; அச்சமே இழுக்கம்; அச்சமே பிழையான வாழ்க்கை. உலகத்திலுள்ள எதிர்மறை எண்ணங்களும் கருத்துகளும் கேடாகிய அச்சத்திலிருந்தே தோன்றின. சூரியன், காற்று, மரணம் என்னும் இவை எல்லாம் தத்தம் இடத்தில் நின்று தத்தமக்குரிய தொழிலைச் செய்வது அச்சத்தினாலே ஆகின்றது. அது தனது பந்தத்தினின்றும் யாரையும் விடுவதில்லை. இதனாலன்றோ சுருதியில்,

பயாதஸ்யா க்னிஸ்தபதி பயாத்தபதி ஸூர்ய:
பயாதிந்திரஸ்ச வாயுஸ்ச ம்ருத்யுர்தாவதி பஞ்சம:

''இதன் அச்சத்தினால் நெருப்பு எரிகிறது. சூரியன் வெப்பத்தைத் தருகிறான். இந்திரனும் வாயுவும் தத்தம் தொழிலைச் செய்கின்றனர். மரணம் உலகத்திலே உலாவுகின்றது,'' எனக் கூறப்பட்டிருக்கின்றது? இந்திரனும், மதியும், காற்றும், வருணனும் அச்சமின்மையை அடையும் பொழுது பிரம்மத்தோடு ஒன்றுவர். அப்பொழுது உலகம் என்னும் இம்மாயைத் தோற்றம் மறைந்துவிடும். ஆதலினால், ''அச்சமற்றிரு, அச்சமற்றிரு,'' என்று நான் சொல்லுகிறேன்.

இவ்வார்த்தைகளைச் சொல்லும் போது சுவாமிஜி சிஷ்யருடைய கண்ணுக்கு முன்னே அச்சமின்மையே ஓருருவெடுத்தாற்போன்று காணப்பட்டார். இங்ஙனம் கண்ட சிஷ்யர் தமக்குள்ளே, ''ஏது, இந்தப் பெரியவருடைய முன்னிலையிலே மரண பயமும் அகன்று மறைந்து போகிறதே!'', என நினைத்தார்.

சுவாமிஜி மேலும் சொல்லுவார்: ''உடலெடுத்த இப்பிறவியிலே இன்ப துன்பம், செல்வம் வறுமை என்னும் அலைகளிலே அகப் பட்டு நீ ஏற்றப்படுகின்றாய்; இவை கணந்தோன்றிக் கணம் மறைவனவென அறிந்துகொள்; இவற்றைப் பொருட்படுத்தாதே. பிறப்பும் இறப்புமில்லாது ஞான வடிவமாய் இருக்கிற ஆன் மன் நான்,'' என்னும் எண்ணம் உன் மனத்தில் நன்றாகப் பதிந்திருக்க உன்னுடைய வாழ் நாட்களைக் கழிப்பாயாக. 'எனக்குப் பிறப்பில்லை; இறப்புமில்லை; யாதொன்றினாலும் தீண்டப்படாத ஆன்மா நான்,' என்னும் இந்த எண்ணத்திலே முற்றிலும் ஆழ்ந்திருப்பாயாக. இந்த எண்ணத்தோடு ஒரு முறையாவது ஒன்றுபடுவாயானால், துன்பமும் மிடியும் வந்த காலத்து இவ்வெண் ணம் உன் உள்ளத்தில் எழும்; இதனைக் கொண்டுவருவதற்கு நீ முயல வேண்டுவதில்லை. வைத்தியநாதத்திலே பாபு பிரியநாத முகோபாத்தியாயருக்கு நான் விருந்தினனாய் இருந்த ஒரு நாளில் மிகவும் துன்பமான ஈழை வியாதி என்னைப் பீடித்தது. சாவாரைப் போலத் துன்புற்றேன். ஒவ்வொரு மூச்சினோடும் 'ஸோஹம்', 'ஸோஹம்' என்னும் ஆழ்ந்த ஒலியானது எழுந்தது. தலையணை யிலே தலையைச் சாய்த்துக்கொண்டு பிராணன் நீங்குவதை எதிர் பார்த்துக்கொண்டிருப்பார் போல இருந்தேன். ஆயினும், உள் ளிருந்து எழுந்த 'ஸோஹம்', 'ஸோஹம்'—'நான் அவனாய் இருக்கிறேன்' என்னும் ஒலி இடைவிடாது கேட்டது.

ஏகமே வாத்வயம் பிரம்ம நேஹநாநாஸ்தி கிஞ்சன

'ஒன்றாய் இரண்டற்றதாய் இருக்கும் பிரம்மம் மாத்திரமே உண்மைப் பொருள்; வேறில்லை,' என்னும் ஒலி என் காதில் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

சிஷ்யர் அதிசயமுற்று, ''ஐய, தேவரீருடனே பேசித் தேவரீ ருடைய அநுபவங்களை மனங்கொள்ளின் சாத்திரக் கல்வி வேண் டுவதில்லையென நான் நினைக்கின்றேன்,'' என்றார்.

சுவா: அப்படியன்று. சாத்திர ஆராய்ச்சியும் வேண்டுவது தான். ஞானத்தை அடைவதற்குச் சாத்திரங்களைக் கற்றல் இன்றி யமையாதது. அந்நோக்கத்துடன் மடத்திலே சில வகுப்புகளைத் தொடங்க எண்ணியிருக்கிறேன். வேதங்கள், உபநிடதங்கள், கீதை, பாகவதம் என்னும் இவைகள் இவ்வகுப்புகளிலே படிக்கப்பட வேண்டும். பாணினி இயற்றிய **அஷ்டாத்தியாயியை** நான் பாடம் சொல்லுவேன்.

சிஷ்: தேவரீர் பாணினி இயற்றிய அஷ்டாத்தியாயியை ஆராய்ந்து கற்றதுண்டா?

சுவா: நான் ஜெய்ப்பூரில் இருந்த பொழுது ஒரு பெரிய வியா கரண வித்துவானைக் கண்டு அவரோடு சம்ஸ்கிருத வியாகரணத்தை

ஆராய வேண்டுமென விரும்பினேன். அவர் அத்துறையிற் பெரிய வித்துவானாய் இருப்பினும், கற்பிக்கும் ஆற்றல் அவருக்கு அமையவில்லை. அவர் முதற்சூத்திரத்து வியாக்கியானத்தை மூன்று நாள் தொடர்பாகப் பாடஞ்சொன்னார்; எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. நான்காம் நாள் அவர் மிகவும் சிரமப்பட்டவராய் என்னை நோக்கி, "சுவாமிஜி, மூன்றுநாள் ஆகியும் ஒரு சூத்திரத்தின் பொருளை நான் உங்களுக்குத் தெளிவுபடுத்தக் கூடாமற்போயிற்று; நான் பாடஞ்சொல்லுவதனால் நீங்கள் பெரும்பயனடையப் போவதில்லை என்றஞ்சுகிறேன்!" என்றார். இவ்வார்த்தைகள் என் செவியிற் பட்டதும், நான் ஊண் உறக்கங்களை ஒருபால் ஒதுக்கி வைத்துவிட்டுச் சூத்திரப் பொருள் ஆராய்வதையே கருமமாகக் கொண்டேன். மூன்று மணி நேரத்திற்குள்ளே வியாக்கியானம் முழுவதும் தெளிவாயிற்று. நான் ஆசிரியரிடத்துப் போய் முழு வியாக்கியானத்தின் பொருளையும் எடுத்து இயம்பினேன். அவர் அதனைக் கேட்டு, "நான் மூன்று நாள் வருந்தியும் தெளிவுபடுத்தக் கூடாத பொருளை, மூன்று மணி நேரத்துக்குள்ளே நீங்கள் இவ்வளவு தெளிவாக அறிந்து கொண்டதெப்படி?" என வினவினார். அதன் பின்பு நாள்தோறும் அதிகாரம் அதிகாரமாக மிகவும் எளிதில் வியாக்கியானம் முழுதையும் படித்து முடித்தேன். மனத்தை ஒரு வழிப்படுத்துவதனால் எதனையும் செய்து முடிக்கலாம்; மலைகளையும் அணுவாக்கி விடலாம்.

சிஷ்: ஐய, தேவரீருடைய செயல்கள் எல்லாம் அற்புதமாகவே இருக்கின்றன.

சுவா: இப்பிரபஞ்சத்திலே அற்புதம் என்பது ஒன்றில்லை. அஞ்ஞான இருள் மூடியிருப்பதனாலே, பொருள்களிடத்தே அறிவதற்கரிய சில தன்மைகள் காணப்படுகின்றன. அறிவு விளக்கம் எய்தியபோது, பொருள்களினின்று அறிவதற்கரிய நீர்மை அனைத்தும் அகன்று போகும்; ஆகாதவற்றையும் ஆகச் செய்யும் மாயையும் அகன்றுவிடும். எவனை அறிவதனால் யாவும் அறியப்படுகின்றனவோ, அவனை அறிவாயாக; அவனையே தியானிப்பாயாக. அந்த ஆன்மாவை அடைவாய் எனில், எல்லாச் சாத்திரங்களினுடைய கருத்தும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெள்ளிதிற் புலப்படும். பண்டை நாளில் இருந்த ரிஷிகள் இவ்வுயர்நிலையை அடைந்திருந்தார்கள். நாம் இதனை அடையாது விடுவோமா? நாமும் ஆண்மக்களே. ஒரு காலத்தில் ஒருவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்தது, தக்க முயற்சியினாலே மற்றொருவருடைய வாழ்க்கையிலே வந்தெய்துதல் வேண்டும். சரித்திர நிகழ்ச்சியில் முன் நடந்தன பின் நடப்பது இயல்பு. எல்லோரிடத்திலும் நிலைபெற்ற ஆன்மா ஒன்றே. வெளிப்பட்டுத் தோற்றுகிற தன்மை வேறு வேறு மக்களிடையே வேறு வேறாய் இருக்கும். இந்த ஆன்மாவை ஒளியுறச் செய்வா

யாக; அப்பொழுது உன்னுடைய புத்தி எல்லாவற்றையும் கூர்ந்து நோக்கும் ஆற்றலுடையதாகும். ஆன்ம தரிசனம் செய்யாதவனுடைய புத்தி, ஒரு துறைப்பட்டுச் சிறியதாய் இருக்கும்; ஆன்ம தரிசனம் செய்தவனுடைய அறிவோ, அனைத்தையும் தன்னுள்ளே அடக்கியதாய் இருக்கும். ஆன்மா ஒளிவிடத் தொடங்கினால், விஞ்ஞான சாத்திரம் தத்துவ சாத்திரம் என்பனவற்றை எல்லாம் எளிதாக அறிந்துகொள்வாய். சிங்க முழக்கத்தோடு ஆன்மாவுடைய மகிமையை உலகிற்கு வெளிப்படுத்துவாயாக; எல்லாப் பிராணிகளுக்கும் அச்சமின்மையை உண்டாக்கும்பொருட்டு, "எழுமின்! விழிமின்! கருதிய குறிக்கோள் கைகூடும் வரை ஓய்வின்றி உழைமின்!" எனச் சொல்லுவாயாக.

(18)

[இடம்: பேலூரில் வாடகைத் திருமடம். காலம்: 1898-ஆம் ஆண்டு.]

கடந்த இரண்டு நாட்களாகச் சிஷ்யர் பேலூரிலே நீலாம்பர பாபுவினுடைய பூஞ்சோலை வீட்டிலே சுவாமிஜியோடு உறைகின்றார். இன்று தமது அறையிலே இரவுப் பொழுதைக் கழிப்பதற்குச் சுவாமிஜி சிஷ்யருக்கு உத்தரவு கொடுத்தார். சிஷ்யர் சுவாமிஜியினுடைய கால்களைப் பிடித்துச் சேவை செய்துகொண்டிருக்கும் பொழுது, சுவாமிஜி அவரை நோக்கி, "என்ன பேதைமை! இத்தகைய இடத்தை விட்டுவிட்டுக் கல்கத்தாவுக்குப் போவதாகச் சொல்லுகிறாயே! இந்த இடத்தின் தூய்மையை உற்று நோக்கிப் பார்—கங்கையிற் படிந்து வரும் புனிதமான காற்று—சாதுக்களின் கூட்டம்—இத்தகைய இடம் பிறிதொன்றினை நீ எவ்விடத்தாகிலும் காணுதல் கூடுமா?

சிஷ்: ஐய, முன் பிறவிகளிலே செய்த பெருந்தவத்தின் பயனாகத் தேவரீருடைய கூட்டுறவைப் பெற்றேன். நான் அறிவின்மையால் பற்றப்படாமலும் மயக்கத்தை அடையாமலும் இருக்க என்னை ஆசீர்வதிப்பீராக. என் உள்ளம் நேரில் ஏதாவது உண்மையை அறிந்துகொள்ளப் பெரிதும் விரும்புகிறது.

சுவா: நானும் பல முறை அத்தகைய உணர்ச்சியைப் பெற்றேன். ஒரு நாள் காசிப்பூர்த் தோட்டத்திலே மிகவும் ஆர்வத்தோடு ஸ்ரீராமகிருஷ்ணருக்கு எனது வேண்டுகோளைத் தெரிவித்தேன். மாலையிலே, தியான வேளையிலே, நான் உடம்பைப்பற்றிய உணர்ச்சியை முற்றிலும் இழந்தேன். அது முற்றிலும் இல்லை என்னும் உணர்வு மேற்பட்டிருந்தது. சூரியன், சந்திரன், வெளியிடம், காலம், விசும்பு என்னும் இவையெல்லாம் வேறுபாடற்ற ஒரே திரளாக அறிவினைக் கடந்த ஒரு நிலையிலே உருகி மறைந்துபோக,

உடலினைப்பற்றிய எண்ணமும் ஏறக்குறைய முற்றிலும் மறைந்து விட்டது; பரமான்மாவில் ஆழ்ந்துபோன தன்மையாகவே இருந்தது. ஆனுல், 'நான்' என்னும் உணர்வு ஒரு சிறிது இருந்தது. அதனுல், அச்சமாதி நிலையிலிருந்து மீட்டும் சாதாரண நிலைக்கு வர முடிந்தது. சமாதி நிலையிலே 'நான்', 'பிரம்மம்' என்னும் இவற்றிடையே உள்ள வேறுபாடு அற்றுப் போகிறது. கரை கடந்த கடலிலே எவ்விடத்திலும் நீரேயன்றிப் பிறிதொன்றும் இல்லை. அது போல, வாக்குக்கும் மனத்துக்கும் எட்டவொண்ணுதது அந்நிலை. வாக்கு மனம் கடந்த நிலையிலே மெய்யுணர்வு வந்தெய்துகிறது. சாதகன், 'நான் பிரம்மம்,' என்று எண்ணுகிற வரையில், 'நான்' என்றும், 'பிரம்மம்' என்றும் இரண்டு பொருள்கள் ஏற்பட்டுவிடுகின்றன. நான் மேலே குறித்த அனுபவத்தைப் பெற்ற பின்னர், திரும்பவும் அச்சமாதி நிலையைப் பெறும்படி பல நாள் முயன்றேன். கைகூடவில்லை. இதனைப்பற்றி ஸ்ரீராமகிருஷ்ணருக்குச் சொன்னேன். அவர் என்னை நோக்கி, "நீ இரவு பகலாக அந்த அனுபவத்திலே மூழ்கிக் கிடப்பாயாயின், அன்னையினுடைய கருமங்களைப் பின் யார் தாம் செய்வார்? உன்னுடைய வேலை நிறைவேறிய பின் அந்நிலை உன் உள்ளத்துத் தானே வந்து அடையும்," என்ருர்.

சிஷ்: அப்பாலுக்கப்பாலாகிய நிர்விகற்ப சமாதியை அடைந்த பின்னர், 'நான்' என்னும் உணர்ச்சியினுலே மீட்டும் உலக சிந்தனைக்கு வருதல் கூடாதா?

சுவா: 'உலகத்தின் நன்மைக்காக அவதார புருஷர்கள் மாத்திரம் சமாதி நிலையிலிருந்து சாதாரண நிலைக்கு வருதல் கூடும்,' என ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லியிருக்கிருர். ஏனைய ஜீவர்கள் அங்ஙனம் வருதல் இல்லை; அந்நிலையிலே ஆழ்ந்து கிடக்கும் தன்மையராய் இருபத்தொரு தினம் உயிரோடிருந்ததன் பின்னர்ப் பழுத்த இலை விழுவது போலச் சமுசாரமாம் மரத்திலிருந்து அவர்களுடைய உடம்பு விழுந்துவிடும்.

சிஷ்: சமாதியிலே மனமானது அழுந்தி, உணர்விலிருந்து எழுகின்ற அலைகள் அற்றுப் போனுல், மன முயற்சி எங்கே? 'நான்' என்னும் உணர்விஞலே உலகுக்குத் திரும்பி வருவது யாங்ஙனம்? மனம் நாசமடைந்த பொழுது சமாதி நிலையிலிருந்து உலக சிந்தனைக்கு வருபவர் யாவர்? வருவதற்குரிய கருவி யாது?

சுவா: பூரண சமாதியிலே எல்லா விருத்திகளும் அடங்கிப் போக, அந்நிலையிலிருந்து மீளுதல் இல்லை என்பது வேதாந்தத்தின் முடிபு. "**அனுவ்ருத்தி சப்தாத்**—ஆகமத்தினின்று மீளுதலில்லை," என வேதாந்த சூத்திரஞ் சொல்லுகிறது. உலகத்தின் நன்மைக்காக அவதார புருஷர்கள் உள்ளத்திலே சில விருப்பங்களை வைத்

திருப்பார்கள். அவற்றைப்பற்றிச் சமாதி நிலையினின்று சாதாரண நிலைக்கு வந்துவிடுவார்கள்.

சிஷ்: ஐய, இரண்டொரு விருப்பங்கள் உள்ளத்திருக்கு மாயின், அந்நிலையை யாவையும் கடந்த சமாதி நிலையென்று எப்படிச் சொல்லலாம்? அந்நிலையிலே மனத்தின் விருத்திகள் எல்லாம் போய்விடுகின்றனவென்றும் எல்லா விருப்பங்களும் அழிந்துவிடுகின்றனவென்றும் சமய சாத்திரங்கள் சொல்ல வில்லையா?

சுவா: மஹாபிரளயத்தின் பின்னர்ப் பிரபஞ்சம் தோற்றுவ தெப்படி? மஹாபிரளய காலத்தில் யாவும் பிரம்மத்தினிடையே கரைந்து போகின்றனவல்லவா? ஆனால், படைப்பு உண்டென் பதைச் சமய சாத்திரங்களால் அறிகின்றோம்; பிரபஞ்சத்தி னுடைய தோற்றமும் ஒடுக்கமும் அலைகள் போல மாறி மாறி வரு கின்றன. புதிய படைப்பைப் போலவும் மஹாபிரளய காலத்திலே பிரபஞ்சம் ஒடுங்கிவிடுவதைப்போலவும் அவதார புருஷருடைய அதீத நிலையும் சாக்கிர நிலையும் அமைந்திருக்கின்றனவென்று கூறுவது பொருத்தமாகும்.

சிஷ்: பிரளய காலத்திலே படைப்புக்கு வேண்டிய வித்துகள் முற்றிலும் அழிந்து போகாது பிரம்மத்தினிடத்தே அமிழ்ந்திருக் கின்றனவென்றும், ஆதலினால் அது முற்றும் நாசமாகிய நிர்விகற்ப சமாதியோ மஹாபிரளயமோ ஆகாதென்றும் வாதிக்கலாமே!

சுவா: அப்படியானால், 'ஒரு வகை விசேடணமில்லாததும் ஒன்றினாலும் பற்றப்படாததும் ஆகிய பிரம்மத்தினிடத்திலிருந்து பிரபஞ்சத் தோற்றம் எப்படி உண்டாதல் கூடும்?' என்னும் வினு வுக்கு விடையளிக்க வேண்டுமே?

சிஷ்: 'பாலை நிலத்திலே தோற்றுகின்ற கானல் நீரைப் போலப் படைப்பு என்பது பிரம்மத்தினிடத்திற் காணப்படுகிற தோற்றமேயன்றிப் பிறிதொன்றில்லை,' எனச் சாத்திரங்கள் இவ் வினுவுக்கு விடை தருகின்றன. இத்தோற்றம் மாயையினால் ஆனது; நித்தியப் பொருளாகிய பிரம்மத்துக்கு மறுதலை ஆயினமையால், மாயை பொய்ப்பொருள்.

சுவா: படைப்புப் பொய்யாயின், ஜீவன் அடைகின்ற நிர் விகற்ப சமாதியையும் அந்நிலையிலிருந்து திரும்புவதையும் தோற்ற மளவாகக் கருதலாமே? ஜீவன் இயற்கையிலே பிரம்மமாய் இருக் கிறான். அவன் பந்தத்தை அனுபவிப்பது எப்படி? நீ பிரம்மம் என்னும் உண்மையை அடைய விரும்பும் விருப்பமும் மயக்கமே யாம். ஏனெனில், 'நீ அதுவாய் இருக்கிறாய்,' எனச் சாத்திரங்கள் கூறுகின்றன. " **அயமேவஹி தே பந்த: சமாதிமனுதிஷ்டஸி**—நீ சமா தியையடைய முயலுகின்ற முயற்சியும் பந்தமே."

சிஷ்: இஃது இரு வழியிலும் முடிவு காணவொண்ணாத

விசாரணையாயிருக்கின்றதே ! நான் பிரம்மமாயிருந்தால், ஏன் எப்பொழுதும் அந்த மெய்யுணர்விலே நிலைத்திருத்தல் கூடாது ?

சுவா: மெய்யுணர்வினை அடைவதற்குச் சில கருவிகள் இன்றியமையாதன. மனம் நம்மிடத்துள்ள ஒரு கருவி. ஆனால், அது தானாக அறியும் தரத்ததன்று; ஆன்மாவுடைய விளக்கத்தினாலே அறிவுடையது போலத் தோற்றுவது. 'பஞ்சதசி, என்னும் நூலின் ஆசிரியர், **சிச்சாயாவேசத: சக்திச் சேதனேவ விபாதிஸா**—ஆன்மாவுடைய அறிவுப் பிரகாசத்தின் பிரதிபிம்பத்தினாலே சத்தி அறிவோடு கூடிய தன்மையாய்க் காணப்படுகிறது,'' என்றார். ஆதலால், மனமும் அறிவோடு கூடிய பொருள் போலத் தோற்றுகிறது. மனத்தின் மூலமாக அறிவு வடிவாகிய ஆன்மாவைக் காணுதல் கூடாதென்பது நிச்சயம். மனத்துக்கு அப்பாற்போதல் வேண்டும். மனத்துக்கு அப்பாலாகிய கருவி பிறிதொன்றில்லை—அங்கு ஆன்மாவே உள்ளது—ஆதலினாலே, அப்பாலாகிய நிலையில் அறிவுப் பொருளும், அறிவுக்கருவியும் ஒன்றுகின்றன; காண்பானும், காட்சியும், காணும் கருவியும் வேறுபாடற்று ஒன்றுகின்றன. ஆதலினாலன்றோ, சுருதியும் '' **விக்ஞாதாரமரே கேன விஜானீயாத்**—நித்தியமாக அறிபவனை அறிவது எதனைக் கொண்டு ?'' என விளம்பிற்று. சாதாரண அறிவுக்கு அப்பாலாகி அறிவோன், அறிவு, அறிவுக் கருவி என்னும் இவற்றிடையே வேறுபாடு தோன்றாத நிலைமை ஒன்று உண்டு. மனம் அறிவிலே ஒடுங்குங்கால், அந்த நிலை தோற்றும். 'தோற்றும்' என்று ஒருவாறு சொல்லலாமேயன்றி, இதனை எடுத்துரைப்பதற்கு வேறு வழியில்லை. இதனை மொழியினாற் சொல்லுதல் கூடாது. சங்கராசாரியார் இதனை 'அபரோக்ஷானுபூதி' என்பர். இந்நிலையை அடைந்த பின்னரும் அவதார புருஷர்கள் சாதாரண நிலைக்கு வந்து தம்முடைய அனுபவத்தை ஓரளவு சொல்லுவார்கள். வேதம் முதலாகிய சாத்திரங்கள் இத்தகைய அறிஞரிடத்திருந்து உதித்தன. சாதாரண ஜீவர்களோவென்றால், கடல் ஆழம் பார்க்கப்போன உப்புப் பதுமையைப்போல அந்நிலையினின்று மீளமாட்டார்கள். தொகுத்துச் சொல்லுமிடத்து, நித்தியமாகிய பிரம்மம் நீயே என்னும் உண்மையினை நீ அறிந்துகொள்ளுதல் போதுமானது.

நீ அதுவாய் இருக்கிறாய். அறிவற்ற மனமொன்று இடையே நின்று அவ்வறிவினை மறைக்கின்றது. சமய சாத்திரங்கள் இதனையே மாயை என்கின்றன. சூக்குமப் பொருள்களாலான மனமானது ஒடுக்கப்பட்டால், ஆன்மா தன் சொந்த ஒளியினால் விளக்கமடையும். மாயை அல்லது மனம் பொய்ப்பொருள் என்பதற்கு ஒரு சான்று எதுவெனில், மனமானது தன்னளவிலே அறிவற்றிருப்பதும், இருளினியல்பாய் இருப்பதும், ஆன்மாவுடைய விளக்கத்தினாலே அறிவுள்ளதாகத் தோன்றுவதுமேயாம். இதனை

நீ தெளியும்பொழுது, மனமானது அறிவுக் கடலிலே அமிழ்ந்து விடும். அப்பொழுது, **அயமாத்மா பிரம்ஹ**—இந்த ஆன்மா பிரம்மம்,'' என்னும் உண்மையை உணர்ந்துகொள்வாய்.

பின்பு சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''உனக்குத் தூக்கம் வருகிறதுபோல இருக்கிறது. நீ போய்ப் படுப்பாயாக,'' என்றார்.

* * * * *

இரவில் சிஷ்யர் ஓர் அற்புதமான கனவு கண்டார். அதன் பயனாகச் சுவாமிஜிக்குப் பூஜை செய்து வழிபட உத்தரவு தரும்படி சிஷ்யர் சிரத்தையோடு பணிந்து நின்றார். சுவாமிஜி உடன்பட வேண்டியதாயிற்று. பூஜை முடிந்ததும் அவர் சிஷ்யரை நோக்கி, ''நல்லது; நீ செய்ய விரும்பிய பூஜையை முடித்துக்கொண்டாய். ஆனால், ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஆராதனைக்கு உரிய மலர்த் தட்டைக் கொண்டு என்னுடைய பாதங்களுக்குப் பூஜை செய்தாய். செய்யத்தகாத இச்செயலைக் கண்டால், பிரேமானந்தர் மிகவும் சீற்றங்கொள்வார்,'' என்றார். இம்மொழிகளைச் சொல்லி முடிக்கு முன்னர், சுவாமி பிரேமானந்தர் அவ்விடம் வந்தார். சுவாமிஜி அவரை நோக்கி, ''பார்த்தீர்களா இவர் செய்த அபராதச் செயலை! ஸ்ரீராமகிருஷ்ணருடைய பூஜைக்குரிய பாத்திரங்களைக்கொண்டு இவர் எனக்கு வழிபாடியற்றினார்,'' என்றார். சுவாமி பிரேமானந்தர் புன்னகை புரிந்து, ''அவர் செய்தது நன்று; நீங்களும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேறா?'' என்றார். இதனைக் கேட்ட சிஷ்யர் மனத்தில் ஆறுதலடைந்தார்.

சிஷ்யர் வைதிக ஒழுக்கமுள்ளவர்; விலக்கப்பட்ட உணவை மாத்திரமன்றி, பிறர் தொட்ட உணவு எதனையுமே உண்ணமாட்டார். ஆதலால், சுவாமிஜி அவரைச் சிலவேளைகளிற் 'புரோகிதர்' என்று வழங்குவது வழக்கம். காலை உணவோடும் சுவாமிஜி சில பிஸ்கோத்துகளை உண்டுகொண்டிருக்கும் பொழுது, சுவாமி சதானந்தரை அழைத்து, ''புரோகிதரை இங்கே வரச்செய்,'' என்றார். சிஷ்யர் வந்ததும் சுவாமிஜி தம்முணவில் ஒரு பாகத்தை அவரிடம் கொடுத்து, உண்ணும்படி சொன்னார். சிஷ்யர் மறுமாற்றமின்றிப் பெற்று உண்டதைக் கண்டு சுவாமிஜி அவரை நோக்கி, ''நீ இப்பொழுது உண்டது என்னவென்பதை அறிவாயா? அது கோழி முட்டை சேர்த்துச் செய்யப்பட்டது,'' என்றார். அதனைக் கேட்ட சிஷ்யர், ''அது எதுவாயினும் ஆகுக. நான் அதனை அறிய வேண்டுவதில்லை. இந்தப் பிரசாதத்தை உட்கொண்டு நான் அமிர்த முண்டவனாயினேன்,'' என்றார். அப்பொழுது சுவாமிஜி அவரை நோக்கி, ''இன்று முதலாக என்றும் உன் உள்ளத்திலிருந்து சாதி, வருணம், உயர்குடிப் பிறப்பு, நல்வினை, தீவினை என்னும்

இவற்ருல் எழுந்த அகந்தை யாவும் அழிந்து போகும்படி நான் உன்னை ஆசீர்வதிக்கின்றேன்,'' என்ருர்.

(19)

[இடம்: பேலூரில் வாடகைத் திருமடம். காலம்: 1898-ஆம் ஆண்டு.]

இன்று காலை சிஷ்யர் மடத்துக்கு வந்தார். சுவாமிஜியினுடைய திருவடிகளை வணங்கிய பின்னர், சுவாமிஜி அவரை நோக்கி, ''நீ பிறருடைய சேவையிலே இருப்பதனுல் எய்திய பயனென்? ஏதாவது சொந்த முயற்சி செய்யலாகாதா?'' என்ருர். அந் நாட்களிலே சிஷ்யர் ஒரு குடும்பத்தில் சிறுவர்களுக்குப் பாடஞ் சொல்லும் சட்டாம்பிள்ளையாயிருந்தார். கல்வி கற்பிக்கும் தொழிலைப்பற்றி வினவிய போது சுவாமிஜி பின் வருமாறு சொல்வார்: ''நீண்ட காலத்துக்கு ஒருவன் சிறுவர்களுக்குப் பாடஞ் சொல்லும் வேலையைச் செய்தால், அவனுடைய புத்தி மழுங்கிப் போகின்றது. இரவு பகலாகச் சிறுவர் கூட்டத்தினுள்ளே ஒருவன் நிற்பானுயின், அவனுடைய புத்தி படிப்படியாக மந்தமாய்ப் போய்விடுகின்றது. ஆதலால், சிறுவர்களுக்குப் பாடஞ்சொல்லும் தொழிலை விட்டுவிடுவாயாக.''

சிஷ்: அப்படியானுல் நான் என்ன செய்வது?

சுவா: ஏன்? நீ உலக வாழ்க்கையில் வாழ்ந்து பொருள் சேர்த்துவைக்க விரும்பினுல், அமெரிக்காவுக்குப் போவாயாக. தொழில் முறை செய்வதற்குரிய வழிகளை நான் காட்டித் தருவேன். ஐந்து வருடங்களிலே பெருந்தொகையான பணத்தைத் திரட்டிக் கொள்ளுவாய்.

சிஷ்: நான் என்ன தொழில் செய்வேன்? பணம் எங்கிருந்து வரும்?

சுவா: என்ன வீண் கதை பேசுகிருய்? உன்னுள்ளே அபாரமான சத்தி இருக்கிறது. ''நான் ஒன்றுமில்லாதவன்'', ''நான் ஒன்றுமில்லாதவன்'' என நினைத்ததனுல் நீ வலியிழந்து போய் விட்டாய். ஏன், நீ மாத்திரமா! இந்த ஜாதி முற்றுமே அவ்வண்ணம் ஆகிவிட்டது. ஒரு முறை உலகத்தைச் சுற்றிப்பார்; மற்ற ஜாதியாருடைய நாடி நரம்புகளிலே எவ்வளவு இரத்தவுறுதி இருக்கிறதென்பதைக் காண்பாய். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? எவ்வளவோ கல்வி கற்ற பின்பும் பிறருடைய வாயிலண்டை போய், ''எங்களுக்கு வேலை கொடுங்கள்!'' என்று அழுது ஓலமிடுகின்றீர்கள்; மற்றவர்களுடைய காலினுல் மிதிப்புண்டு பிறருக்கு அடிமை பூண்டிருக்கின்றீர்கள். நீங்களும் மனிதரா! ஒரு குண்டூசித் தலையளவுக்கு இருக்கும் மதிப்புக்கூட உங்களுக்கில்லை. நீர் வளம் நிறைந்த இந்தச் செழிப்பான நாட்டிலே மற்றவிடங்களைவிட நில

மானது ஆயிரமடங்கு பயனைத் தருகிற இந்த நாட்டிலே, உண்ணு தற்கு உணவும் உடுப்பதற்கு உடையுமின்றி வருந்துகிறீர்கள். இந்நாடு வளமுடையது. இதன் வருவாய் பிற நாடுகளிலே நாகரிகம் பரவுவதற்குக் காரணமாயிருந்தது. இந்த நாட்டிலே உங்களுடைய நிலைமை எவ்வாறு இருக்கிறது? உங்கள் வாழ்க்கை நாயினுடைய வாழ்க்கையிலும் இழிவானது. வேத வேதாந்தங்கள் உண்டென்று பெருமிதம் பேசிக்கொள்ளுகிறீர்கள். உணவுக்கும் உடைக்கும் ஏற்பாடு செய்துகொள்ள மாட்டாது பிறருடைய தயவை எதிர் பார்த்து நிற்கும் ஜாதியார், பெருமிதம் பேசுவது எதனைக் குறித்து? உங்களுடைய சமயசாதனைகளை எல்லாம் ஒரு புறம் எறிந்துவிட்டு, மனித வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய முயற்சியை முத லிலே செய்வீர்களாக. உங்களுடைய நாட்டிலே உண்டாகிற பொருள்களைக் கொண்டு பிற நாட்டார் நிறைந்த பயனைப் பெறு கிறார்கள். நீங்கள் பொதி சுமக்கிற கழுதைகளைப் போல, அவர்க ளுடைய சுமையைத் தாங்கிச் செல்லுகிறீர்கள். இந்தியாவில் இயற்கையாய் விளைகின்ற பொருள்களை அயல் நாட்டார் இறக்கு மதி செய்து, தங்களுடைய புத்திக் கூர்மையினாலே அவற்றைப் பண்படுத்திப் பெருமையை அடைகின்றார்கள். நீங்களோ, உங்க ளுடைய புத்தியை அறையில் பூட்டி வைத்துவிட்டு, முன்னோர் வைத்துப் போன பொருளைப் பிறருக்குக் கொடுத்துவிட்டு, உண வுக்கு வருந்தி அலைந்து திரிகின்றீர்கள்.

சிஷ்: ஐய, வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய பொருளைச் சம்பாதிக்க வழி யாது?

சுவா: கருவிகள் உன் கையிலேயே இருக்கின்றன. நீயோ, கண்ணைக் கட்டிக்கொண்டு, ''நான் குருடன், எனக்கு ஒன்றுந் தெரியவில்லை,'' என்கிறாய். கண்ணைக் கட்டியிருக்கும் துணிகளைக் கிழித்தெறி; நடுப்பகல் சூரியன் தன் கதிர்களால் உலக முற்றிலும் ஒளி பரப்புவதைக் காண்பாய். பிற நாட்டுக்குப் போவதற்குப் பொருள் கிடையாவிடின், கப்பலிலே கூலிவேலை செய்துகொண்டா யினும் போய்ச்சேர். 'இந்தியாவில் நெசவு செய்யப்பட்ட துணி, மூங்கிலாற் செய்யப்பட்ட பொருள்கள்,' என்னும் இத்தகைய நம் நாட்டுப் பொருள்களைக் கொண்டுசென்று ஐரோப்பிய அமெரிக்க வீதிகளிலே விற்பாயாக. வெளிநாட்டு வர்த்தக நிலையங்களிலே இந்திய தேசத்துப்பொருள்கள் இப்பொழுதும் எவ்வளவு நன்கு மதிக்கப்படுகின்றன என்பதை நீ காண்பாய். அமெரிக்காவிலே நமது ஹுக்ளி நாட்டு முகம்மதியர் சிலர் இவ்வண்ணம் வியாபா ரஞ்செய்து பெரும்பணம் தேடியதை நான் கண்டேன். அவர்களை விட நீ புத்தி குறைந்தவனா? இந்தியாவிலே செய்யப்படுவதும் உல கத்தில் மற்றொரு பாகத்திலும் தனக்கு இணையில்லாததுமாகிய காசிப்பட்டுப் புடைவை என்னும் அழகிய துணியை எடுத்துக் கொண்டு அமெரிக்காவுக்குப் போ. அந்தத் துணியினாலே அங்கி

களைத் தைப்பித்து விற்றுப்பார். எவ்வளவு லாபம் வருகிறதென் பதை அப்பொழுது அறிந்துகொள்ளுவாய்.

சிஷ்: ஐய, காசிப் புடைவையினுற் செய்யப்பட்ட உடைகளை அங்குள்ளவர்கள் அணிவார்களா? பல வர்ணமான துணிகள் அந்த நாட்டுப் பெண்களுடைய மனத்திற்கு இயைந்தனவாகா எனக் கேள்வியுற்றேன்.

சுவா: அவர்கள் அவற்றைக் கொள்ளுவார்களோ மாட்டார் களோ என்பதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நீ முயன்று அவ்வூருக்குச் செல்வாயாக. எனக்கு அந்த நாட்டில் அநேக நண் பருண்டு. நான் உன்னை அவர்களுக்கு அறிமுகஞ்செய்து வைப் பேன். முதலிலே அந்த ஆடைகளை அவர்களே உபயோகப்படுத் தும்பொருட்டு நான் அவர்களைக் கேட்பேன். அவர்களைப் பின் பற்றி வேறு பலர் விலைப்படுத்தும் துணிகளை வாங்க வருவார்கள். அவர்களுக்குக் கொடுக்கச் சரக்கில்லாதபடி உன்னுடைய வியா பாரம் பெருகிவிடும்.

சிஷ்: வியாபாரம் நடத்துவதென்றுல் முதல் வேண்டுமே? அதற்கு யான் என்ன செய்வேன்?

சுவா: தொடக்கத்தில் நான் உனக்கு உதவி செய்வேன். பின்பு உன்னுடைய முயற்சியினுலே நீ பார்த்துக்கொள்ள வேண் டும். ''தோற்றுயெனிற் சுவர்க்கத்தை யடைவாய்; வென்றுயெனின் பூலோக இன்பத்தை அனுபவிப்பாய்,'' (கீதை). இம்முயற்சியிலே நீ இறந்து போய்விடினும் அதுவும் நலமாகும். உன்னுடைய இலட் சியத்தைப் பின்பற்றி வேறு பலர் இம்முயற்சியைச் செய்வர். நீ அனுகூலமடைந்தால், பெருஞ்செல்வனுய் வாழ்வாய்.

சிஷ்: ஆம், ஐய, இஃது உண்மையே. ஆயினும், தைரியத் தோடு முன்வர இயலாதவனுயிருக்கிறேன்.

சுவா: என் மகனே, நான் முன்பு குறிப்பிட்டதும் அது தான்—உங்களுக்குச் சிரத்தையில்லை; சுய நம்பிக்கையில்லை. நீங் கள் எக்காரியத்தைச் செய்து முடிப்பீர்கள்? லௌகிக முன்னேற் றமோ, ஆன்மிக முன்னேற்றமோ பெறுதற்கு உங்களுக்குச் சத்தி யில்லை. நான் முன்னர்க் கூறியபடி உனது ஆற்றல் முழுவதை யும் ஒரு வழிப்படுத்தி வாழ்க்கையை அனுகூலப்படுத்து; அல்லா விடில், எல்லாவற்றையும் தியாகஞ்செய்துவிட்டு, நாங்கள் நிற்கிற வழியில் நில். ஆன்ம லாபத்துக்குரிய போதனைகளைச் செய்வதனுலே அனைத்து நாட்டு மக்களுக்கும் தொண்டு புரி. அப்பொழுதுதான் உனக்கு வேண்டிய ஒரு கவளம் உணவைப் பெறுவாய். கொடுக்க லும் வாங்கலும் இல்லாதிருப்பின், ஒருவர் மற்ருெருவரைக் கவனிப் பாரென்று எண்ணுகிருயா? இல்வாழ்வாருக்கு ஆன்மிக ஞான சம் பந்தமான உண்மைகளை நாங்கள் உரைக்கிருேம்; அவர்கள் எங்களுக்குச் சிறிது உணவு கொடுக்கிருர்கள். நீ ஒன்றுஞ்செய்யா

விட்டால், அவர்கள் ஏன் உனக்கு உணவு கொடுக்கவேண்டும்? பிறருக்குத் தொண்டு பூண்டு அடிமைத்தொழில் செய்வதிலுள்ள துன்பத்தை நீ அறிந்திருக்கிறாய். ஆயினும், நீ விழித்துக்கொள்ள வில்லை; உன்னுடைய துன்பமும் தீரவில்லை; இது உண்மையாக மாயையின் மயக்கமே.

மேலைத் தேசத்திலே இராஜமந்திரி சபைகளிலே, பின்னணியி லுள்ள ஆசனங்கள் பிறரிடத்தில் தொழில் செய்பவர்களுக்கும், முன்னணியிலுள்ள ஆசனங்கள் கல்வியினாலும் புத்திக் கூர்மை யினாலும் சொந்த முயற்சியினாலும் புகழ் படைத்தவர்களுக்கும் என அமைக்கப்பெற்றிருப்பதை நான் கண்டேன். மேலைத் தேசங் களில் ஜாதிக் கஷ்டமில்லை. எவர்கள் முயற்சியினாலும் உழைப்பி னாலும் திருமகளுடைய அருளினைப் பெறுகின்றார்களோ, அவர் களே நாட்டின் தலைவர்களாகவும், நாட்டின் எதிர்காலத்தை வழி நடத்துபவர்களாகவும் கருதப்படுகின்றார்கள். உங்கள் தேசத்தில் ஜாதி உயர்வைப்பற்றி வீண் வம்பு வார்த்தை பேசுகிறீர்கள். ஈற் றிலே ஒரு பிடி உணவு உங்களுக்குக் கிடைப்பதில்லை. ஓர் ஊசி செய்யத் தெரியாத நீங்கள், ஆங்கிலேயரை இழித்துக்கூறத் துணி கின்றீர்கள். என்ன மடமை! அவர்களுடைய காலடியிலிருந்து கைத்தொழிலையும் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்செய் முறை களையும் கற்றுக்கொள்வீர்களாக. நீங்கள் தகுதி உடையவர்களா னால், பின்னும் ஒரு முறை நன்மதிப்பைப் பெறுவீர்கள். அப் பொழுது அவர்கள் உங்கள் வாக்குக்குச் செவி சாய்ப்பார்கள். வேண்டும் ஆயத்தமின்றிக் காங்கிரஸ் மஹாசபையில் வீண் வார்த்தை பேசுவதனால் எய்தும் பயனென்?

சிஷ்: ஆனால், ஐய, இந்நாட்டிலுள்ள கல்வியாளர்களெல்லாம் அந்தச் சபையிற் சேர்கிறார்களே?

சுவா: சில பரீட்சைகளிற் சித்தி எய்தி நல்ல பிரசங்கங்கள் செய் யக்கூடியவர்களைக் கற்று வல்லவர்களென்று நீங்கள் எண்ணுகிறீர் கள். சாதாரண மக்களைத் தங்களது வாழ்க்கைக்குத் தகுதியுடைய வர்கள் ஆக்காத கல்வி, ஒழுக்கத்தின் வலிமையை வழிப்படுத்தாத கல்வி, பிறர்க்கு உதவும் மனத்தினை உண்டாக்காத கல்வி, சிங்கத் தைப் போன்ற மனவுறுதியைத் தாராத கல்வி—இதனையும் கல்வி என்று சொல்லலாமா? ஒருவருக்குத் தம் கருமத்தைப் பார்க்கக் கூடிய ஆற்றலைத் தருதல் உண்மைக் கல்விக்கு இலக்கணம். இக் காலத்துள்ள பள்ளிக்கூடங்களிலும் உயர்தரக் கலைக் கழகங்களிலும் பெறுகின்ற கல்வி, உங்கள் அனைவரையும் குன்ம வியாதி பிடித்த ஒரு வகுப்பாராக்கிவிட்டது. நீங்கள் இயந்திரங்களைப்போலக் கருத் தில்லாமல் இயங்கித் திரிகிறீர்கள்; எலும்பில்லா நீர்வாழ் உயிர் களைப்போல வாழ்கின்றீர்கள். உழவர், சக்கிலியர், புலையர் என் னும் ஏழை ஜாதியருக்குள்ளே தொழில் செய்யும் ஆற்றல் இருக்

கிறது. உங்களைவிட அவர்களுக்குச் சுயநம்பிக்கை அதிகம் உண்டு. நீண்ட காலமாக ஒரு வார்த்தையும் பேசாது முயன்று தேசத்தி லுள்ள செல்வமனைத்தினையும் அவர்கள் திரட்டி வைத்தார்கள். தங்களுடைய குறையைப்பற்றி அவர்கள் முறையிடவில்லை. விரை விலே அவர்கள் உங்களைவிட உயர்ந்த நிலையை அடைவார்கள். படிப்படியாக அவர்கள் கையிலே முதல் கூடிக்கொண்டு போகிறது. உங்களைப்போல அவர்களுக்கு அதிகச் செலவில்லை. இக்கால நாக ரிகம் உங்களுடைய பழக்க வழக்கங்களை மாற்றிவிட்டது. பொருள் தேடுவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. புது முறைகளைப் பின்பற்றுபவர்கள் இன்மையால், அவ்வழிகள் திறக்கப்படாது இருக்கின்றன. அமைதியோடு பொறுத்துக்கொண்டிருந்த மக்களை நீண்ட காலமாக நீங்கள் நெருக்கினீர்கள். தங்கள் வலிமையை அவர்கள் காட்டுதற்குரிய காலம் வந்துவிட்டது. பிழைப்புத் தேடு வதே வாழ்க்கையின் முழு நோக்கமாகக்கொண்ட நீங்கள் அழிந்து போவீர்கள்.

சிஷ்: ஐய, மற்ற நாட்டவர்களைப்போலப் புது முறைகளைப் பின்பற்றும் ஆற்றல் எங்களுக்கு இல்லாவிடினும், இந்தியாவிலுள்ள தாழ்ந்த வகுப்பார் எங்களுடைய புத்திக் கூர்மையினுலே வழி நடத்தப்படுகிருர்கள். வாழ்க்கைப் போராட்டத்திலே உயர்ந்த வகுப்பாரை வெல்வதற்கு வேண்டிய ஆற்றலும் கல்வியறிவும் அவர் களுக்கு எங்கிருந்து வரும் ?

சுவா: உங்களைப்போலச் சில நூல்களை அவர்கள் வாசித்தறிய வில்லையென்றும், உடையளவிலுள்ள நாகரிகத்தை வளர்த்துக் கொள்ளவில்லையென்றும் நினைத்துவிடாதீர்கள். இவற்ருலாகும் பயன் என்? எல்லா நாடுகளிலும் மக்கட்கூட்டத்திற்கு ஆதார மாக உள்ளவர்கள் தொழில் செய்யும் மக்களே. தாழ்ந்த வகுப்பா ரென்று நீங்கள் கருதுகிற இவர்கள், தொழில் செய்வதை நிறுத்தி விட்டால், உங்களுக்கு உணவும் உடையும் எங்கிருந்து வரும்? கல்கத்தா நகரத்திலுள்ள தோட்டிகள் ஒரு நாளைக்கு வேலை நிறுத்தி விட்டால் எல்லோருக்கும் அச்சமேற்படுகிறது; மூன்று நாட்களுக்கு வேலை நிறுத்திவிட்டாலோ, தொத்துவியாதிகள் தோன்றி நகரமுழு வதையும் அழித்துவிடும். தொழில் செய்யும் மக்கள் தொழிலை நிறுத்திவிட்டால், உங்களுக்கு வேண்டிய உணவும் உடையும் ஒழிந்துபோகும். இத்தகையோரைத் தாழ்ந்த வகுப்பார் எனக் கூறி உங்களுடைய நாகரிக உணர்ச்சியைப் பாராட்டுகிறீர்களே!

வாழ்க்கைப் போராட்டத்தில் இரவு பகல் ஈடுபட்டிருந்தபடி யால் கல்வியறிவை வளர்த்தற்குரிய சௌகரியங்கள் அவர்களுக்கு இல்லாது போயின. மனித அறிவினுல் இயக்கப்படுகிற இயந்திரங் களைப்போல இடையீடின்றி நீண்ட காலம் அவர்கள் வேலை செய் தார்கள். அவர்களுடைய வேலையினுல் எய்திய பயனின் பெரும்

பாகத்தைக் கல்வி கற்ற வகுப்பார் நுகர்ந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சி எல்லா நாடுகளிலும் உள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பார் இவ்வுண்மையை உணர்ந்து கண் விழித்து எழுகின்றார்கள்; அனைவரும் ஒன்று கூடி இத்தகைய நிலைமையை எதிர்த்துத் தம் உரிமையைப்பெற முயலுகிறார்கள். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உள்ள பொதுமக்களே முதலிற் கண்விழித்தெழுந்து இவ்வெதிர்ப்பைத் தொடங்கினார்கள். இத்தகைய விழிப்பு இந்தியாவிலும் இருக்கிறது என்பதற்குப் பல அறிகுறிகள் காணப்படுகின்றன. இந்நாட்களில் தாழ்ந்த வகுப்பார் வேலை நிறுத்தம் செய்யும் இயக்கம் எவ்விடத்தும் பரவி வருவது இதற்கு ஒரு சான்றாகும். உயர்ந்த வகுப்பார் எவ்வளவு முயன்று பார்ப்பினும், தாழ்ந்த வகுப்பாரை இனிமேல் அடக்கி வைத்தல் முடியாது. தாழ்ந்த வகுப்பாருக்கு உரிமையாகிய நலங்களை அவர்கள் அடையச் செய்வதே உயர்ந்த வகுப்பார் தாமும் நன்மையடைவதற்குத் தகுந்த நெறியாகும்.

ஆதலால், பொது மக்களிடத்துக் கல்வியறிவைப் பரப்புவதற்கு நீங்களெல்லாம் முயல்வீர்களாக; அவர்களை நோக்கி, "நீங்கள் எங்களுக்கு உடன் பிறந்தவர்கள்; எங்கள் குருதியும் உங்கள் குருதியும் ஒன்று. நாங்கள் உங்கள்மீது அன்பு பாராட்டுகிறோம்; ஒரு பொழுதும் மாறுபட மாட்டோம்," என்று சொல்லுவீர்களாக; இவ்வுண்மையை அவர்கள் உணர்ந்துகொள்ளும்படி செய்வீர்களாக. இத்தகைய இரக்கத்தை நீங்கள் காட்டுவீர்களாயின், தொழில் செய்வதற்கு அவர்கள் உள்ளத்திலே உள்ள ஊக்கம் நூறு மடங்கு அதிகப்படும். பௌதிக சாத்திர நூல்களின் உதவியைக்கொண்டு அவர்களுடைய அறிவை வளர்ப்பீர்களாக; உலக சரித்திரம், பூகோள சாத்திரம், பௌதிக சாத்திரம், இலக்கியம் என்னும் இவற்றை அவர்களுக்குக் கற்பிப்பீர்களாக; இவற்றோடுகூட ஆழ்ந்த சமய உண்மைகளையும் அறிவிப்பீர்களாக. இத்தகைய கல்விக்குக் கைம்மாறுமுண்டு. இதனால் ஆசிரியருடைய வறுமை அகன்று போகும். இங்ஙனம் கொடுக்கல் வாங்கல் செய்வதனால் இரு பாலார்க்கும் நட்புத் தொடர்பு ஏற்படும்.

சிஷ்: ஆனால், ஐய, கல்வியறிவு பரவுவதோடு நாளடைவிலே அவர்களும் எங்களைப்போல மூளையுள்ளவர்களாகித் தொழில் செய்யாது சோம்பலுற்றுத் தமக்கு அடுத்தபடியாக இருக்கின்றவர்களுடைய தொழிலினால் எய்தும் பயனைக்கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் ஆவார்களே ?

சுவா: ஏன் அப்படியாக வேண்டும்? அறிவு மேம்படினும், குயவன் குயவனாகவும், செம்படவன் செம்படவனாகவும், உழுதுண்போன் உழுதுண்போனாகவும் இருத்தல் கூடுமே ! தங்களுடைய குலத் தொழிலை அவர்கள் ஏன் விடவேண்டும்? "**ஸஹஜம் கர்மகௌந்**

தேய ஸதோஷமபி நத்யஜேத்—நீ எந்தத் தொழிலுக்கு உரியவனாய்ப் பிறந்தாயோ, அந்தத் தொழில் குற்றத்தோடு கூடியிருப்பினும் அதனை விட்டுவிடாதே.'' இவ்வண்ணம் அவர்களைப் பயிற்றினால் அவர்களேன் தங்களுடைய குலத்தொழிலை விடுகிறார்கள்? தங்கள் குலத்தொழிலைச் செம்மையாகச் செய்வதற்கு அறிவைப் பயன் படுத்துவார்கள். நாளடைவிலே அவர்களுக்குள்ளே ஞான வீரர் பலர் தோற்றுவர். உயர்ந்த வகுப்பாராகிய நீங்கள் அவர்களை உங்களோடு சேர்த்துக்கொள்வீர்கள். வீரம் படைத்த அரசராகிய விசுவாமித்திரரைப்பிராம்மணர்பிரம்மரிஷியாகக்கொண்டார்கள். இந்தச் செயலுக்காக க்ஷத்திரிய வமிசம் முழுவதும் பிராம்மண ரிடத்து எவ்வளவோ நன்றி பாராட்டுகிறது. அத்தகைய இரக்கத் தினாலும் கூட்டுறவினாலும் பறவைகளும் விலங்குகளும் அன்புடை யானுக்கு உரிமையாகின்றன—மனிதர்களைப் பற்றிப் பேசுவா னேன்?

சிஷ்: ஐய, தேவரீர் சொல்லுவது உண்மையே. அங்ஙனமாயி னும், உயர்ந்த வகுப்பாருக்கும் தாழ்ந்த வகுப்பாருக்குமிடையே பெரியதொரு பிளவு இருப்பதுபோலத் தோன்றுகிறது. நமது இந் தியா நாட்டிலே உயர்ந்த வகுப்பாரைத் தாழ்ந்த வகுப்பாரிடத்து இரக்கங் காட்டும்படி செய்வது கடினமான காரியம்போலக் காணப் படுகிறது.

சுவா: அங்ஙனம் செய்யாவிடின், உயர்ந்த வகுப்பாராகிய நீங்கள் நலமடைவதற்கு வழியில்லை; இதுகாறும் நடந்து வந்தது போலவே வகுப்புச் சச்சரவுகளினாலும் சண்டைகளினாலும் நாச மடைவீர்கள். பொதுமக்கள் விழித்தெழுந்தவுடன், இதுகாறும் நீங்கள் அவர்களை நெருக்கினீர்கள் என்பதையறிந்து, பஞ்சுத் திரளைப்போல உங்களை ஊதி அகற்றிவிடுவார்கள். உங்களுடைய நாகரிகத்தை அமைத்தவர்கள் அவர்கள்; அவர்களே அந்த நாக ரிகத்தை இழுத்து ஒரு புறமாக அகற்றிவிடுவார்கள். பழமையாகிய ரோமாபுரத்து நாகரிகம் 'கோல்' என்னும் ஜாதியாருடைய எதிர்ப் பினாலே தாக்குண்டு துகளாய்ப் போய்விட்டதை எண்ணிப்பார்! ஆதலினாலே, தாழ்ந்த வகுப்பாருக்குக் கல்வியையும் நாகரிகத்தை யும் தந்து தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளும்படி செய்வீர்க ளாக. அவர்கள் விழித்துக்கொள்ளும் நாள் எப்பொழுதாவது அவ சியமாக வந்தே தீரும். அங்ஙனம் விழித்துக்கொள்ளும் போது நீங்கள் செய்த நன்மையை மறந்து போகாது எப்பொழுதும் உங் களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள்.

இங்ஙனம் உரையாடிய பின்னர். சுவாமிஜி சிஷ்யரை நோக் கிப் பின் வருமாறு சொல்வார்: ''இவையெல்லாம் ஒரு புறம் இருக் கட்டும். நீ எவ்வகையான தீர்மானங் கொண்டிருக்கிறாய் என்பதை எனக்குச் சொல். ஏதாவது செய்; அஃது எதுவாயினும் ஆகுக.

ஒன்று, ஒரு தொழில் பார்; அல்லாவிடில், **ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதாயச'** என்றபடி, உலகத்தின் நலத்துக்காகவும் நீ முத்தியடைவதன்பொருட்டும் உண்மைச் சந்நியாச மார்க்கத்திலே எங்களைப்போலப் புகுவாயாக. பின்பு கூறப்பட்ட மார்க்கந்தான் யாவற்றினும் சிறந்தது. பயனற்ற இல்வாழ்வானாய் வாழ்வதனால் வந்த நன்மையென்ன? வாழ்வில் யாவும் மடிந்துபோகும் தன்மையன என்பதனை நீ உணர்ந்துகொண்டாய். "**நளினீதளகத ஜலமதிதரலம் தத்வஜ்ஜீவன மதிஸய சபலம்**—வாழ்க்கையோ, தாமரையிலையில் தண்ணீர் போல் நிலையற்றது.'' ஆதலினாலே, ஆன்ம ஞானத்தைப் பெறவேண்டுமெனும் ஊக்கம் உனக்கு இருந்தால், தாமதப்படாது உடனே முன் வருவாயாக. "**யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்**—எந்த நாளில் உனக்கு வெறுப்புத் தோன்றுகிறதோ, அந்த நாளிலே உலகத்தைத் துறந்து சந்நியாசம் பெற்றுக்கொள்வாயாக.''* உன்னுடைய உயிரை அர்ப்பணம் செய்து, மக்களுடைய நலத்தைக் கருதி, ஒவ்வொருவருடைய வீட்டண்டையும் போய், "**உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வரான் நிபோதத**—எழுந்திருங்கள்! விழிப்படையுங்கள்! கருதிய குறிக்கோள் கைகூடும் வரை ஓயாது உழையுங்கள்!'' என்னும் அச்சமின்மையோடு கூடிய இந் நற்செய்தியைப் பரப்புவாயாக.

(20)

[இடம்: கல்கத்தா. காலம்: 1898-ஆம் ஆண்டு]

ஒருநாள் பிற்பகல் சகோதரி நிவேதிதையும் சுவாமி யோகானந்தரும் தம்மோடு வரச் சுவாமிஜி அலிப்பூரிலுள்ள விலங்கு வாழ் காட்சிப் பூஞ்சோலைக்கு வந்தனர். பூஞ்சோலை அதிபராகிய ராய் ராம்பிரம சந்யால் பகதூர் அனைவரையும் அன்போடு வரவேற்று, சோலையைச் சுற்றி அழைத்துச் சென்றனர். பல்வேறு வகையான மிருகங்களையும் பார்த்துக்கொண்டு, செல்லும்பொழுது சுவாமிஜி டார்வின் என்னும் சாத்திர பண்டிதர் வகுத்துக் கூறிய பரிணாமவாதக் கொள்கையைப் பற்றிப் பேச நேர்ந்தது. பாம்புகள் உறைந்த சாலைக்குச் சென்ற பொழுது அங்கிருந்த பெரியதொரு மலைப்பாம்பைச் சுட்டிக் காட்டி, ''உடலிலே கங்கணம் போன்ற புள்ளிகளையுடைய சர்ப்பத்திலிருந்து நாளடைவிலே ஆமை உண்டானது. இப்பாம்பு அசைவின்றி நீண்ட காலம் ஒரே இடத்தில் இருந்தமையினால், இதனுடைய முதுகிலே தடித்த ஓடு உண்டாகிவிட்டது,'' என்றார். பின்னும் நகைக் குறிப்போடு சிஷ்யரை நோக்கி, ''நீ ஆமையை உண்கிறாய் அல்லவா? டார்வின் பண்டித

* ஜாபாலோபநிஷத்து.

ருடைய கொள்கைப்படி இந்தப் பாம்பே நாளடைவில் உருத் திரிந்து ஆமையாய்விட்டது. ஆதலால், நீ பாம்பு தின்கின்றவன்,'' என்றார். சிஷ்யர் மறு மாற்றமாக, ''ஐய, ஒரு பிராணி மற்றென்றாகப் பரிணமித்தால் அது தனது முந்திய உருவத்தையும் பழக்க வழக்கங்களையும் இழந்து போகின்றது. ஆதலால், ஆமை உண்பது பாம்பு உண்பதற்குச் சரியாகும் என்று தேவரீர் சொல்லுவது எங்ஙனம் பொருத்தமாகும்?'' என்றார்.

இந்த மறு மாற்றத்தைக் கேட்டோரனைவரும் நகைத்தனர். இன்னும் சில காட்சிகளைப் பார்த்துவிட்டுச் சுவாமிஜி சோலையினுள்ளே ராம்பிரம பாபுவின் இல்லத்துக்குச் சென்று உடன் வந்தாரோடு தேநீர் அருந்தினர். சிஷ்யர் சகோதரி நிவேதிதை தொட்ட சிற்றுண்டியையும் தேநீரையும் அருந்துவதற்கும் ஒரே பலகையில் அமர்வதற்கும் சிறிது கூசி நிற்பதைக்கண்டு, சுவாமிஜி அமர்ந்து அருந்துமாறு பலமுறையும் பணித்து, ஒரு பாத்திரத்தில் இருந்த நீரைத் தாம் சிறிது அருந்திவிட்டு, எஞ்சியதை அருந்துமாறு சிஷ்யரிடம் கொடுத்தார். அதன் பின் டார்வின் பண்டிதருடைய பரிணமவாதக் கொள்கையைப் பற்றிச் சம்பாஷணை நடந்தது.

ராம்பிரம பாபு: டார்வின் பண்டிதருடைய பரிணம வாதக் கொள்கையைப் பற்றியும் அவர் காட்டுகிற நியாயங்களைப்பற்றியும் தேவரீருடைய கருத்தென்ன?

சுவா: டார்வின் பண்டிதருடைய கொள்கை சரியென வைத்துக்கொண்டாலும், உருத் திரிவதற்கு அவர் காட்டுகிற காரணங்கள் முடிந்த தன்மையனவெனக் கொள்ளுவதற்கில்லை.

ராம்பிரம பாபு: பண்டைய நாளிலிருந்த நம் அறிஞர்கள் இந்த விஷயத்தை ஆராய்ந்திருக்கிறார்களா?

சுவா: சாங்கிய தரிசனத்திலே இந்த விஷயம் நன்றாக ஆராயப்பட்டிருக்கிறது. பண்டை நாளிலிருந்த பாரத நாட்டுத் தத்துவ சாத்திரிகள் பரிணம வாதத்தைப்பற்றி முடிந்த முடிபாகிய கொள்கைகளை உரைத்திருக்கிறார்கள்.

ராம்பிரம பாபு: சில சொற்களிலே அம்முடிபு சொல்லப்படுவதாயின், அதனைக் கேட்க நான் பெரிதும் விரும்புகிறேன்.

சுவா: 'வாழ்க்கைப் போராட்டம்', 'தகுதி மிக்கது தப்பிப் பிழைத்தல்', 'இயற்கைத் தெரிவு' என்னும் இத்தகைய கூறுபாடுகளாக மேலைத்தேச சாத்திர பண்டிதர்கள், கீழாகிய ஓரினப் பிராணி மேலாகிய ஓரினத்தை அடைவதைக் குறித்துக் காட்டியிருக்கிற காரணங்களை நீ வாசித்திருக்கிறாய் என்று எண்ணுகிறேன். அவற்றுள் எதுவும் காரணம் எனப் **பதஞ்சலி** முனிவர் நூலிலே கூறப்படவில்லை. ஓரினம் மற்றோரினமாக மாறுதலடைவது '**ப்ரக்ருத்யா பூராத்**'—இயற்கையினது நிரம்புதலினால் ஆகிற

தெனப் பதஞ்சலி முனிவர் கூறுவர். தடைகளுக்கு எதிராக இடையீடின்றிப் போராடுவதனுல், இஃது எய்துவதில்லை. போட்டியும் போராட்டமும் உயிர் தனக்குரிய பரிபூரண நிலையை அடைவதற்குத் தடையாயிருக்கின்றன என்பது எனது கருத்து. ஒரு பிராணியினுடைய உயர்வு, ஆயிரம் பிராணிகளை அழிப்பதனுல் உண்டாவதெனின், இத்தகைய மாற்றம் உலகத்துக்கு ஒரு சிறிதும் நலம் பயவாததெனக் கொள்ளல் வேண்டும். உடல் நலத்துக்கு இது வாய்ப்புடையது என ஒருவாறு கொண்டாலும் ஆன்ம வளர்ச்சிக்கு இஃது ஒரு பெருந்தடையாம் எனக் கொள்ள வேண்டுவது அவசியமாகின்றது. நமது நாட்டுத் தத்துவ சாத்திரிகளின் கொள்கைப்படி ஒவ்வோர் உயிரும் பரிபூரண ஆன்ம சொரூபமாகும். பல்வேறு உருவமாக இயற்கையில் காணப்படுவது இவ்வான்ம சொரூபத்தின் விளக்க வேறுபாட்டினுல் ஆகின்றது. உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்குத் தடையாயிருப்பனவற்றை நீக்கிய அக்கணத்தே, ஆன்ம சொரூபம் பரிபூரணமாக வெளிப்பட்டுத் தோன்றும். இயற்கையினுடைய பரிணமிப்பிலே கீழாகிய படிகளிலே நேரிடுவது எதுவாயினும் ஆகுக. உயர்ந்தபடிகளிலே இடையீடில்லாப் போராட்டத்தினுலே தடைகளைக் கடத்தல் வேண்டுமென்பது உண்மையாகாது; கல்வியினுலும், ஒழுக்கத்தினுலும், மனத்தை ஒரு வழிப்படுத்துவதனுலும், தியானத்தினுலும், இவை யாவற்றினும் மேலாகத் தன்னல மறுப்பினுலும் ஆன்ம சொரூபத்தினுடைய விளக்கமானது நிறைவு பெறுகின்றதென்பதும், தடைகள் நீங்கிப் போகின்றனவென்பதும் வெளிப்படை. ஆதலால், தடைகளை ஆன்ம விளக்கத்தினது காரியம் என்னுது, காரணமெனக் கூறுவதும், இயற்கையினது அற்புத வேறுபாட்டுக்கு அவை உதவியாக இருக்கின்றனவென்பதும் நியாயத்திற்குப் பொருத்தமான முடிபன்று. தீங்கிழைப்போர் ஆயிரவரைக் கொல்வதனுல் உலகிலிருந்து தீங்கை அகற்ற முயலுவது, உலகிலுள்ள தீங்கை மிகுதிப்படுத்துவதாகும். நற்போதனையால் மக்களைத் தீங்கு செய்வதினின்று விலகும்படி செய்தால், உலகினின்று தீங்கு அகன்றுவிடும். மேலைத் தேசத்தார் கூறுகிற வாழ்க்கைப் போராட்டக் கொள்கை எவ்வளவு பயங்கரமானதென்பதைக் கண்டு கொண்டீரா ?

சுவாமிஜியினுடைய மொழிகளைக் கேட்டு வியப்புற்றவராய் ராம்பிரம பாபு பின் வருமாறு சொல்லுவார்: ''தேவரீரைப் போலக் கிழக்குத் தேசத்துக் கலை ஞானங்களிலும் மேற்குத் தேசத்துக் கலை ஞானங்களிலும் புலமை அடைந்தார் நமது நாட்டுக்கு இக்காலத்திலே மிகுதியும் வேண்டப்படுகின்றனர். ஒரே பக்கத்தை மாத்திரம் கண்டு பூசலிடுகின்ற மாணவர்களுடைய பிழையை எடுத்துக்காட்டக்கூடியவர் அத்தகையினரே. பரிணமவாதக் கொள்

கையைப் பற்றித் தேவரீர் சொல்லிய புதிய விளக்கத்தைக் கேட்டு நான் மிகவும் மனமகிழ்ச்சி அடைகின்றேன்!''

சிறிது நேரங்கழித்துச் சுவாமிஜியும் பரிசனர்களும் பாக்பஜாருக்குப் புறப்பட்டு ஏறக்குறைய எட்டு மணியளவிலே பலராம் வசுவுடைய மாளிகையை அடைந்தார்கள்.

சிறிது நேரம் கழித்துச் சுவாமிஜி இளைப்பாறுமண்டபத்துக்கு வந்தார். குழுமியிருந்த அனைவரும் விலங்கு வாழ் காட்சிப் பூஞ்சோலையிலே நடந்த சம்பாஷணையைக் கேட்க ஆவலுற்றவராயிருந்தனர். சுவாமிஜி மண்டபத்துக்குள் வந்தவுடனே குழுமியிருந்தவர்களின் சார்பாகச் சிஷ்யர் இந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லும்படி வேண்டினர்.

சிஷ்: ஐய, விலங்கு வாழ் காட்சிப் பூஞ்சோலையிலே பரிணாம வாதக் கொள்கையைப் பற்றித் தேவரீர் சொல்லியவற்றை நான் முற்றிலும் உணர்ந்துகொள்ளவில்லை. தயை செய்து எளிய மொழிகளினலே மறுபடியும் சொல்லியருள வேண்டும்.

சுவா: நீ, அறிந்துகொள்ள முடியாதிருந்த விஷயங்கள் யாவை?

சிஷ்: புறம்பேயுள்ள சத்திகளை எதிர்த்துப் போராட்டமிடுவது உயிர் வாழ்க்கைக்கு அறிகுறியெனவும், உயர்நிலை அடைவதற்கு முதற்படி எனவும் தேவரீர் எங்களுக்குப் பல முறை சொல்லியதுண்டு. இன்று சொன்ன மொழி அதற்கு நேர் விரோதம் போலக் காணப்படுகின்றது.

சுவா: நான் ஏன் வேறுபாடாகப் பேசவேண்டும்? நான் பேசியவற்றை நீ அறிந்துகொள்ளவில்லை. விலங்கு வர்க்கங்களிடையே 'வாழ்க்கைப் போராட்டம்', 'தகுதியுள்ளவை தப்பிப் பிழைத்தல்,' முதலிய விதிகள் காணப்படுகின்றன. ஆதலால், டார்வின் பண்டிதருடைய கொள்கை ஓர் அளவுக்குச் சரியானதென்னலாம். பகுத்தறிவு விளங்குகின்ற மனிதவர்க்கத்தினிடையே இவற்றுக்கு நேர் விரோதமான விதி நிகழுவதைக் காணலாம். உதாரணமாக, உண்மையிற் பெரியாரென நாம் கொள்ளுகிற ஒழுக்கம் மிக்காரிடத்து வெளிப் போராட்டம் ஒன்றையும் நாம் காண்பதில்லை. விலங்கு இனத்தினிடையே இயற்கையறிவு அமைந்திருக்கின்றது; ஒரு மனிதன் எவ்வளவுக்கு உயர்வடைகிருனே, அவ்வளவுக்கு அவனிடத்திற் பகுத்தறிவு காணப்படும். ஆதலால், பகுத்தறிவுள்ள மனித இனத்தினிடையே பிராணி இனத்தைப் போலப் பிறரை அழித்துவிடுவதனல் உயர்வு வந்தெய்தமாட்டாது. தன்னல மறுப்பாகிய தியாகத்தினல் மாத்திரமே மனிதன் மிக உயர்ந்த நிலையை அடைகின்றான். ஒருவன் பிறர்பொருட்டு எவ்வளவு தியாகத்தைப் புரிகின்றனே, அவ்வளவுக்கு மக்கட்கூட்டத்தாரால் உயர்ந்தவனகக் கருதப்படுவான். விலங்கினங்களும்

மிகக் குறைந்த வருக்கத்தினிடையே எந்த மிருகமானது வேறு பல மிருகங்களை அழித்துவிடும் ஆற்றலுடையதாய் இருக்கின்றதோ, அதுவே வலியுள்ளதெனக் கருதப்படும். வாழ்க்கைப் போராட்ட விதியை மனித இனத்திற்கும் விலங்கு இனத்திற்கும் பொதுவிதியாகக் கொள்ளுதல் கூடாது. மனிதனுடைய போராட்டம் மானத பூமியில் நிகழுவது. மனத்தை அடக்கியாளுகிற அளவே, மனிதனுடைய பெருமைக்கு அளவாகும். மனத்தினுடைய அலுவல்கள் அனைத்தும் அடங்கி மனம் அமைதி நிலையிலிருக்கும்பொழுது ஆன்மா தனது ஒளியை வெளிப்படுத்தும். தூலசரீரத்தைக் காப்பாற்றும்பொருட்டு விலங்கு இனங்களிடையே நிகழ்கின்ற முயற்சிகளனைத்தும் மனிதனால் தனது மனத்தையடக்கியாளுவதற்குப் பயன்படுகின்றன. உயிருள்ள மரத்தையும் குளத்திலே காணப்படுகிற அதன் நிழலையும் போல, விலங்கு இனத்திலும் மனித இனத்திலும் இரு வேறு போராட்டங்கள் நிகழ்கின்றன.

சிஷ்: அப்படியாயின், தேகப்பயிற்சி முதலியவற்றைச் செய்யும்படி தேவரீர் எங்களுக்கு அடிக்கடி சொல்லுவது எதற்காக?

சுவா: நன்று நன்று! நீங்கள் உங்களை மனிதரென்று கருதுகின்றீர்களா? உங்களுக்குச் சிறிதளவு அறிவு உண்டு; அவ்வளவுதான். உடல் வலிமையுடையதாய் இருந்தாலன்றி, மனத்தோடு எப்படிப் போராடுவீர்கள்? 'உலகிலே மிக உன்னத நிலைக்குரிய மனிதன் என்னும் பேருக்கு நீங்கள் தகுதியுடையவர்களா? உண்பதும், உறங்குவதும், புலன் நுகர்ச்சியும் அல்லாது உங்களுக்கு வேறு யாது உளது? நீங்கள் விலங்கின் தன்மை அடையாத வரையில் அதிருஷ்டசாலிகளே. ''தனக்குரிய மதிப்பினை உணர்ந்தவனே மானிடன் எனப்படுவான்,'' எனப் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லுவதுண்டு. மாறிமாறிப் பிறந்திறந்து உழன்று மேற்கதி ஒன்றுக்கும் செல்லாத பிராணிகளெனச் சமய சாத்திரங்கள் சொல்லுகிற ஊர்வன என்னும் உயிர்ப் பேதத்துக்கு நீங்கள் எடுத்துக்காட்டாய் இருக்கின்றீர்கள். ஒருவர்மீதொருவர் பொறுமைப்பட்டு வாழ்கின்றீர்கள். அந்நியர் கண்ணுக்கு அருவருப்பைத் தரும் பொருள்களாயிருக்கின்றீர்கள். நீங்கள் விலங்குகள்; ஆதலால், போராட்டமிடும்படி நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். வீணில் மனப்பால் குடிப்பதை விட்டுவிட்டு ஆறுதலாக நீங்கள் நாடோறும் செய்கிற செயல்களையும் வாழ்க்கை முறைகளையும் சீர்தூக்கிப் பாருங்கள். விலங்கினத்துக்கும் மனித வகுப்புக்கும் இடைப்பட்டது உங்களுடைய நிலை என்பதை அப்பொழுது காண்பீர்கள். முதலிலே உடலை வலுப்படுத்துங்கள். அப்பொழுதுதான் மனத்தை அடக்க உங்களால் முடியும். "**நாயமாத்மா பலஹீனேன லப்ய:**—இந்த ஆன்மா பலமற்றவனால் அடையப்படுவதில்லை.''

சிஷ்: ஆனல், ஐய, பாஷ்யகாரராகிய சங்கரர் 'பலவீனன்' என்பதற்குப் 'பிரம்மசரியம் இல்லாதவன்' என்று பொருள் கூறுகிருரே ?

சுவா: அவர் எதனையாவது கூறட்டும்; உடல் வலியில்லாதவன் ஆன்ம தரிசனத்தை அடையமாட்டான் என்று நான் சொல்கிறேன்.

சிஷ்: ஆனல், மூடர் பலர் வலுவுள்ள உடலையுடையவர்களாய் இருக்கிருர்களே ?

சுவா: நல்ல எண்ணங்களை அவர்களுக்கு ஒரு முறை உண்டாக்கிவிட்டால், உடல் வலியற்றவர்களைவிட விரைவாக அவர்கள் அவற்றை உருவாக்குவார்கள். வலியற்றவன் காமத்தையும் கோபத்தையும் அடக்க முடியாதிருப்பதை நீ காணவில்லையா ? மெலிந்த உடலுள்ளவர்கள் விரைவிலே கோபமுறுவதையும் காமத்தின் வசப்படுவதையும் நீ பார்த்திருக்கலாம்.

சிஷ்: ஆனல், இந்த விதிக்கு விலக்காய் உள்ளவர்களையும் நாம் காண்கின்ருேம்.

சுவா: இல்லையென்று சொன்னவர் யார் ? ஒரு மனிதன் மனத்தையடக்கப் பயின்றுகொண்டானுனல், அதன் பின் அவனுடைய உடல் வலியுள்ளதாயிருப்பினும், மெலிந்து போய்விடினும் ஒன்றே. உடல் நல்ல நிலையில் இருந்தாலன்றி, ஆன்ம ஞானத்தை அடைய முயலுதல் கைகூடாத காரியம் என்பதே நாம் அறிந்துகொள்ள வேண்டுவது. ''உடலிலே சிறிதேனும் குறைபாடுடையவன் நேரில் காண்பதை அடையமாட்டான்,'' என ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லுவதுண்டு.

சுவாமிஜி ஆர்வமற்றிருப்பதைக் கண்டு சிஷ்யர் விஷயத்தைத் தொடர்ந்து பேசாமல், சுவாமிஜியினுடைய முடிவையே முடிபாக ஏற்றுக்கொண்டார். சிறிது நேரம் கழித்துச் சுவாமிஜி பக்கத்திலிருந்தவர்களை நோக்கி, ''கேட்டீர்களா, இன்று நமது 'புரோகிதர்' நிவேதிதை தீண்டிய உணவை உண்டுவிட்டார்; அவள் தீண்டிய தின்பண்டங்களை உண்டதால் பாதகமில்லை,'' என்று கூறி, பின்னர்ச் சிஷ்யரை நோக்கி, ''அவள் தீண்டிய தண்ணீரை நீ எப்படிப் பருகினுய் ?'' என்ருர்.

சிஷ்: ஐய, தேவரீருடைய கட்டளைப்படியே யான் அங்ஙனம் செய்தேன். குருவினுடைய கட்டளைக்கமைந்து யான் எதனையும் செய்வேன். முதலிலே நான் நீரைப்பருக விரும்பவில்லை. தேவரீர் பருகிவிட்டுத் தந்த பொழுது பிரசாதமாக நான் உட்கொண்டேன்.

சுவா: நன்று ! ஆனல், இன்ருேடே உன்னுடைய சாதி போய்விட்டது. இனிமேல் உன்னை ஒருவரும் பிராம்மணனுகக் கருதி மரியாதை செய்யமாட்டார்.

சிஷ்: செய்யாவிட்டாற்போகிறது. தேவரீருடைய கட்டளையாயின், நான் பறையருடைய மனையிலும் உணவு அருந்துவேன்.

சுவாமிஜியினுடைய சொற்களைக் கேட்டு அங்கு இருந்தார் அனைவரும் மகிழ்ச்சியுற்றுச் சிரித்தனர்.

பேச்சு நள்ளிரவு வரையும் நிகழ்ந்தது. சிஷ்யர் தம் முடைய மனையை அடைந்த பொழுது கதவு தாழிடப்பட்டிருப்ப தைக் கண்டு, புறத்திண்ணையிலேயே இராப்பொழுதைக் கழித்தார்.

காலசக்கரத்தின் மாருத இயக்கத்திலே தோன்றுவன யாவும் மறைந்து போகின்றன. சுவாமிஜியும், சுவாமி யோகானந்தரும், சகோதரி நிவேதிதையும் இவ்வுலக வாழ்வினின்று அகன்று போய் விட்டார்கள்; அவர்களுடைய தூய ஞாபகம் மாத்திரம் நம் மிடையே நிலைபெற்றிருக்கிறது; அத்தகைய ஞாபகக் குறிப்புகளை இயன்ற வரை எழுதி வைப்பதனைச் சிஷ்யர் தமக்குப் பெரியதோர் ஆசிர்வாதமாகக் கொள்ளுகிறார்.

(21)

[இடம்: பேலூரில் வாடகைத் திருமடம். காலம்: 1898-ஆம் ஆண்டு]

சிஷ்யர் இன்று மடத்திற்கு வந்திருந்தார். இப்பொழுது மடம் நீலாம்பர பாபுவினுடைய பூஞ்சோலை வீட்டிலே அமைக்கப் பட்டிருந்தது. இப்பொழுதுள்ள திருமடம் நிறுவப்பட்டிருக்கும் நிலமானது சமீபகாலத்தில் விலைக்கு வாங்கப்பட்டிருந்தது. சுவாமி ஏறக்குறைய நான்கு மணியளவிலே சிஷ்யரையும் தம்முடன் அழைத்துக்கொண்டு திருமடத்துக்குரிய புது நிலத்தைப் பார்வை யிடும் நோக்கமாக வெளியே போயிருந்தார். அந்நாட்களில் அந் நிலமானது சிறுகாடு அடர்ந்ததாய், வடபக்கத்திலே செங்கல்லினுற் கட்டப்பட்ட ஓரடுக்கு மாடிவீடொன்றினை உடையதாய் இருந்தது. சுவாமிஜி நடந்துகொண்டே, எதிர்காலத்தில் அமையப்போகிற திருமடத்தினுடைய செய்கை முறைகளைப்பற்றியும் விதி நியமனங் களைப்பற்றியும் உரையாடினர்.

குறித்த வீட்டின் கிழக்குப் பக்கத்து வழித் திண்ணையை அடைந்தவுடனே சுவாமிஜி பின் வருமாறு சொல்லுவாராயினர்:

"சாதுக்கள் உறைவதற்குரிய இ ட ம் இவ்விடமேயாகும். இந்த மடத்தினை ஆன்மலாப சாதனைகளுக்குரிய சிறந்த நிலைய மாகவும் அறிவை வளர்ப்பதற்குரிய கழகமாகவும் செய்தல் வேண் டும் என்பது எனது எண்ணம். இங்கிருந்து பிறக்கின்ற சத்தி வெள்ளமானது உலகனைத்திலும் பரந்து மக்களுடைய வாழ்க் கையை நல்ல வழிகளிலே செலுத்தும். ஞானம், பத்தி, யோகம், கருமம் என்னும் இவற்றைச் சமரசப்படுத்துகின்ற உயர்ந்த கொள்கைகள் இவ்விடத்திலிருந்து உற்பத்தியாகும். இத்திருமடத் திலுள்ள மக்கள் கருதிய மாத்திரத்தே, இங்கிருந்து பூகோளத்தின்

மிகச் சேய்மையாகிய பாகங்களுக்கெல்லாம் உயிர்க்கு உறுதி பயக்கும் வலிமையானது பரவிச் செல்லும். நாளடைவிலே ஆன்மச் செல்வத்தை அடையும் பொருட்டுத்தேடுவார் அனைவரும் இவ்விடத்திற்கு வந்து கூடுவார்கள்—இத்தகைய எண்ணங்கள் ஓராயிரம் என்னுடைய உள்ளத்திலே இப்பொழுது திரண்டெழுகின்றன.

''மடத்திற்குத் தென்பக்கத்திலே, அதோ தோன்றுகின்ற நிலப் பரப்பிருக்கின்றதே அவ்விடத்தில், இலக்கணம், தத்துவ சாத்திரம், விஞ்ஞான சாத்திரம், காவியம், அலங்காரம், சுருதி, பத்தி சாத்திரம், ஆங்கிலம் என்னுமிவற்றைக் கற்பதற்கு உரிய கல்விக் கழகமானது அமைக்கப்படும்; இத்தகைய கல்விச்சாலை முன்னுளிலிருந்த டோல்களை (சம்ஸ்கிருத பாடசாலைகளை)ப் போல அமைக்கப்படும். இளம்பிராயத்திலிருந்து பிரம்மசரியத்தை பின்பற்றிய சிறுவர்கள் இங்கு உறைந்து சமய சாத்திரங்களை ஆராய்வார்கள். அவர்களுக்கு வேண்டிய உணவும் உடையும் மடத்திலிருந்து கொடுக்கப்படும். ஐந்து வருஷம் பிரம்மசரிய வாழ்கையிற் பயின்ற பின்னர், அவர்கள் விரும்பினுல், தங்கள் இல்லத்திற்குச் சென்று இல்வாழ்க்கை நடத்தலாம்; திருமடத்திலுள்ள பெரியோர்களுடைய அனுமதியைப் பெற்றுத் துறவு பூணினும் பூணலாம். ஒழுக்கம் தவறி நடக்கிற பிரம்மசாரிகளை உடனே வெளியில் அனுப்பிவிடுவது திருமடத்துக் காரிய கர்த்தர்களுடைய கடமையாகும். சாதி சமய வேறுபாடின்றி இங்கே அனைவருக்கும் கல்வி கற்பிக்கப்படும். இதற்குத் தடை கூறுவோர் உட்புகுதற்கு அனுமதிக்கப்பெருர். தம்முடைய சாதிக்கியைந்த கொள்கைகளைப் பாதுகாத்துக்கொள்ள விரும்புவோர் உணவு முதலியவற்றிற்கு வேறு ஏற்பாட்டைத் தாமாகவே செய்துகொள்ளுதல் வேண்டும். அவர்கள் மற்றவர்களோடு பாடம்கேட்பதற்கு மாத்திரம்உரிமையுடையவர்களாவார்கள். மடத்துச் செயலாளர்கள் அவர்களுடைய ஒழுக்கத்தையும் விழிப்பாகப் பார்த்து வருவார்கள். இங்குப் பயிற்றப்பட்டவர் மாத்திரமே சந்நியாசம் பெறுவதற்கு உரிமையுடையவராவர். படிப்படியாக இத்திருமடமானது இத்தகைய கைங்கரியத்தைச் செய்யுமாயின், அது பெருநலம் விளைவிக்குமன்றே ?''

சிஷ்: குருவினுடைய மனையிலே பிரம்மசரிய வாழ்க்கை நடத்துகிற பழைய முறையை மீட்டும் இந்நாட்டில் நிறுவுவது தேவரீருடைய கருத்தா ?

சுவா: ஆம், அதுவே என் கருத்து. இக்காலக் கல்வி முறையானது பிரம்ம ஞானத்தை அடைவதற்குரிய சௌகரியங்களைத் தருவதில்லை. முன்னுளிற்போல பிரம்மசரிய ஆச்சிரமங்களை நாம் ஏற்படுத்த வேண்டும். ஆனுலும், அவற்றிற்குச் சற்றே விரிவாக அடிகோலிக்கொள்ளுதல் வேண்டும். அதாவது, இக்காலத்திற்கு இயைந்த வண்ணம் பல திறப்பட்ட மாறுதல்களைச் சேர்த்துக்

கொள்ளுதல வேண்டும். இதைப்பற்றிப் பின்னர்ப் பேசுவேன். மடத்திற்குத் தெற்கே கிடக்கின்ற காணியை நாம் காலந் தாழ்த்தாது விலை கொடுத்து வாங்க வேண்டும். அங்கே ஓர் அன்ன சத்திரத்தைத் தொடங்குவோம். ஆண்டவனுக்குச் செய்யும்சேவை போல, மிகுந்த வறுமையினாலே துன்புறுவோருக்குச் சேவை செய்ய அவ்விடத்தில் ஏற்பாடு செய்வோம். அவ்வன்ன சத்திரம் ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருநாமத்தினாலே வழங்கப்படும். முதலில் அதற்கு வருகின்ற வருவாய்க்குத் தக்கபடி அதனது முயற்சியை அளவுபடுத்திக்கொள்ளலாம். இருவர் மூவரோடு தொடங்கலாம். அவ்வன்ன சத்திரத்தை நடத்துவதற்கு நல்ல ஆற்றல் வாய்ந்த பிரம்மசாரிகளை நாம் பயிற்றுதல் வேண்டும். அதனை விடாது நடத்துவதற்காக வேண்டிய பொருளை அவர்கள் இரந்தாகிலும் திரட்டவேண்டும். இந்த விஷயத்தில் திருமடம் பொருளுதவி செய்ய மாட்டாது. வேண்டும் பணத்தைப் பிரம்மசாரிகளே திரட்டிக் கொள்ளுதல் வேண்டும். இத்தகைய சேவாச்சிரமத்தில் ஐந் தாண்டு பயிற்சி பெற்ற பின்பே பிரம்மசாரிகள் கல்விச்சாலையிற் சேர அனுமதி பெறுவார்கள். சேவாச்சிரமத்தில் ஐந்தும் வித்தியா லயத்தில் ஐந்தும் ஆகப் பத்து வருடம் கழிந்த பின்னரே திருமடத் துப் பெரியோர்களிடத்தில் தீட்சை பெற்றுப் பிரம்மசாரிகள் சந்நி யாச ஆச்சிரமத்தில் புகுவார்கள். சந்நியாச ஆச்சிரமத்தைப் பெற் றுக்கொள்ள வேண்டும் என்னும் விருப்பமுடையோருக்கே திரு மடத்துப் பெரியோர்கள் தகுதியாராய்ந்து தீட்சை செய்து வைப் பார்கள். இவ்விதியைக் கடந்து காலவெல்லை இன்றி மிகத் தகுதி யுள் ளவர்களாகக் காணப்படுகின்ற பிரம்மசாரிகளுக்குச் சந்நியாசம் கொடுக்கும் உரிமை திருமடத்துத் தலைவருக்கு உண்டு. சாதாரண மாக நான் முன் சொல்லிய முறையில் சந்நியாசம் பெறுவதற்குப் படிப்படியாகத் திறமை பெறுவதே வழியாகும். இவ்வெண் ணங்களெல்லாம் என் மனத்திலே இருக்கின்றன.

சிஷ்: ஐய, திருமடத்திலே நீங்கள் மொழிந்தது போல மூன்று வகையாகிய அங்கங்களை ஏற்படுத்துவதன் நோக்க மென்ன?

சுவா: நான் சொன்னது புலப்படவில்லையா? முதலிலே அன்னதானம்; அதற்கடுத்தது வித்தியா தானம்; இவற்றி னும் மேம்பட்டது ஞானதானம். இந்த மூன்றினையும் இத்திரு மடத்திலே நாம் சமரசப்படுத்தவேண்டும். பிரம்மசாரிகள் அன்ன தான கைங்கரியத்திலே தொடர்ச்சியாக ஈடுபடுவதனால் அவர்களு டைய உள்ளத்திலே பிறர் நலத்துக்காக உழைக்க வேண்டுமென் னும் கருத்தும், மன்னுயிர்க்குத் தொண்டு புரிவது ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாகும் என்னும் எண்ணமும் உறுதியாக நிலை பெறும். இத்தகைய கைங்கரியத்தினால் அவர்களுடைய சித்தம்

கழுவப்பட்டுத் தூய்மையான சாத்துவிக எண்ணங்களை வெளிப் படுத்தும். இதனால், நாள் செல்லச் செல்லப் பிரம்ம ஞானத்தை அடைவதற்குத் தகுதியுள்ளவர்களாகிய பிரம்மசாரிகள் சந்நியாச ஆச்சிரமத்தைப் பெறுவதற்கு உரிமையுடையவர்களாவார்கள்.

சிஷ்: ஐய, தேவரீருடைய திருவாக்கின்படி ஞானதானமே மிக உயர்ந்ததாயின், அன்னதான வித்தியாதானங்களைத் தொடங்க வேண்டுவது எதற்கு?

சுவா: இதனை இது வரையும் நீ தெரிந்துகொள்ளவில்லையா? கேட்பாயாக: உணவுக்குப் பஞ்சமாய் இருக்கின்ற இந்த நாட் களிலே நீ தன்னலமற்ற தொண்டு செய்யும் வழியிலே நின்று, இரந்தோ, வேறு எம்முறையினாலோ கொஞ்சம் உணவுப் பொருள் களைச் சம்பாதித்து, அவற்றை வறுமையினாலே துன்புறுகின்றவர் களுக்குக் கொடுத்தால், அது உனக்கும் உலகத்துக்கும் நன்மை யைச் செய்வதோடு அமையாது இந்த நன்முயற்சிக்கு எல்லாருடைய அனுதாபத்தையும் பெறுகின்ற வழியுமாகும். பெண்ணாசை பொன் னாசை இவற்றால் கட்டுப்பட்டுக் கிடக்கின்ற உலகறிவுள்ள மனிதர், இந்தக் காருணியத் தொண்டினுக்காக உன்னிடத்தில் நம்பிக்கை வைத்து, உனக்கு உதவி செய்ய முன் வருவார்கள். வித்தியா தானத்தினாலும் ஞான தானத்தினாலும் கவரப்படுகின்ற மனிதரைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு அதிகமானவர்கள் கேளாமற்செய் கின்ற உதவியாகிய இவ்வன்ன தானத்தினாலே கவரப்படுவார்கள். இதனாற்பெறுகின்ற அனுதாபத்தைப்போல, மற்றெவ்விதக்கைங்கரி யத்தினாலும் பெறுதல் இயலாது. உண்மையிலேயே உயர்ந்த நோக்கமுடைய தொண்டினாலே மனிதர் மாத்திரமன்றி, ஆண்ட வனும் தொண்டியற்றுபவனுக்கு நண்பாதல் கூடும். இவ்வண்ணம் மக்கள் மனம் கவரப்பட்ட பின்னர், வித்தையிலும் ஞானத்திலும் அவர்களுக்கு விருப்பமுண்டாக்குதல் எளிதாகும். ஆதலால், அன்னதானம் முதலாவதாக வைத்தெண்ணப்படுவதாகின்றது.

சிஷ்: ஐய, அன்ன சத்திரங்களை ஆரம்பிப்பதற்கு முதலிலே இடம் வேண்டும்; பின்பு கட்டடங்கள் வேண்டும்; அடுத்து நடத்து வதற்குப் பொருள் வேண்டும். இவையெல்லாம் எங்கிருந்து வரும்?

சுவா: இந்தத் திருமடத்தின் தெற்குப் பாகம் முழுவதையும் உன்னுடைய பொறுப்பிலே உடனே தருகின்றேன். அந்த வில்வ மரத்தின் கீழே புல்லினால் வேய்ந்த குடிசையை நான் அமைத்துக் கொள்ளுகிறேன். இரண்டொரு குருடர் நோயாளிகளை நீ கொண்டு வந்து அவர்களுடைய தொண்டிலே முயன்று நிற்பாயாக. வெளியே போய்ப் பிச்சை எடுத்து வந்து, உன் கையினாலே உணவைச் சமைத்து, அவர்களுக்கு ஊட்டு. இடை விடாமற் சில நாட்களுக்கு இவ்வண்ணம் செய்வாயானால், எத்தனையோ மக்கள் பெருந்தொகை யான பணத்தோடு உனக்கு உதவி செய்ய வருவதைக் காண்பாய்.

"நஹி கல்யாணக்ருத் கஸ்சித் துர்கதிம் தாத கச்சதி—மைந்தனே, நற்கருமங்களைச் செய்பவன் ஒரு பொழுதும் துன்பத்தை அடைவதில்லை.'' (கீதை).

சிஷ்: ஆம், உண்மையே. ஆனால், அத்தகைய இடையறாத முயற்சி, ஈற்றிலே பந்தத்திற்கு வாயிலாகாதோ?

சுவா: நீ கருமத்தினால் எய்துகின்ற பயனை விரும்பாமல் எல்லா வகையாகிய தன்னல விருப்பத்தையும் கடந்து அப்பாற் செல்லுகின்ற ஊக்கத்தோடு இருப்பாயானால், அந்தக் கருமங்களனைத்தும் உன்னுடைய பாசத்தளையை அறுப்பதற்கு உதவியாகும் என நான் உனக்குச் சொல்லுகிறேன். இத்தகைய நன்முயற்சி பந்தத்திற்கு ஏதுவாமென நீ ஆராயாது கூறினாய். தன்னலங் கருதிச் செய்கின்ற முயற்சியினாலே ஏற்பட்ட கர்ம பந்தத்தை விடுவிப்பதற்குப் பயன் கருதாத முயற்சியேவழியாய் ஏற்பட்டிருக்கிறது "நான்யப்பந்தா வித்யதே அயனாய—வேறு வழியில்லை.''

சிஷ்: அன்ன சத்திரத்தைப் பற்றியும் சேவாச்சிரமத்தைப் பற்றியும் தேவரீர் சொல்லுகிற வார்த்தைகள் அவற்றைப் பற்றிய விவரங்களை அறிவதற்கு என்னுள்ளத்தைத் தூண்டுகின்றன.

சுவா: ஏழைகள் உறைவதற்காகச் சிறிய காற்றோட்டமுள்ள அறைகளை அமைக்க வேண்டும். ஒவ்வோர் அறையிலும் இருவரோ மூவரோ வசித்து வருதல் வேண்டும். நல்ல படுக்கையும் சுத்தமான உடைகளும் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஒரு வாரத்தில் வசதிப்படி ஒரு முறையோ, இரு முறையோ, அவர்களை வந்து பார்வையிடுவதற்கு ஒரு வைத்தியர் இருக்க வேண்டும். நோயாளிகளைப் பரிபாலிப்பதற்காக உள்ள சேவாச்சிரமம் அன்ன சத்திரத்தின் சார்பாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அன்ன சத்திரமானது உணவு கொடுப்போருடைய ஆரவாரமும் உண்போருடைய ஒலியும் ஆகிய இவற்றால் அல்லும் பகலும் முழங்கிக்கொண்டிருக்க வேண்டும். அன்னத்திலிருந்து வடித்த கஞ்சியானது கங்கா நதியின் உள்ளே ஓடி அதன் நீரினை வெண்மையாக்க வேண்டும். அத்தகைய அன்ன சத்திரம் ஆரம்பித்து நடப்பதைக் காணும்பொழுது தான் என்னுடைய உள்ளத்துக்கு ஆறுதல் உண்டாகும்.

சிஷ்: தேவரீருக்கு இத்தகைய விருப்பமிருப்பதனால் இது நாளடைவிலே தொழிற்படுமென்பது நிச்சயம்.

சிஷ்யர் இவ்வாறுரைக்க, இதனைக் கேட்டுச் சுவாமிஜி சிறிது பொழுது கங்கையைப் பார்த்த வண்ணம் அசைவற்று இருந்தார்; பின்பு பொலிவெய்திய திருமுகத்தோடு சிஷ்யரை நோக்கிப் பின்வருமாறு கூறத் தொடங்கினார்:

''உறங்குகின்ற சிங்கம் யாரிடத்தில் விழித்துக்கொள்ளும் என்பதையும், எப்பொழுது விழிக்கும் என்பதையும் யார் அறிவார்? உங்களில் ஒருவரிடத்திலே அன்னை தன் அக்கினிப் பிழம்பாகிய

ஆற்றலை வைத்துவிடுவாளானுல், நூற்றுக்கணக்கான அன்ன சத்திரங்கள் ஏற்படுதல் கூடும். ஞானம், வலிமை, பத்தி என்னும் இவையெல்லாம் எல்லா உயிர்களிடத்திலும் பூரணமாக அமைந்திருக்கின்றன. ஆற்றல் வெளிப்பாட்டின் ஏற்றத் தாழ்ச்சியை நாம் கண்டு ஒருவரைப் பெரியவரெனவும் மற்றொருவரைச் சிறியவரெனவும் சொல்லுகிறோம். எல்லாப் பிராணிகளினுடைய உள்ளத்திலும் பரிபூரண நிலையை மறைக்கின்ற ஒரு திரை இருக்கின்றது. அது அகன்ற கணத்திலே, யாவும் செம்மையாகும்; உனக்கு எது வேண்டுமோ, நீ எதனை விரும்புகிருயோ, அது சித்திக்கும்.''

மேலும் சுவாமிஜி சொல்லுவார்: ''பகவானுக்குச் சித்தமானுல், இந்தத் திருமடத்தை நாம் பெரியதொரு சமரச நிலையம் ஆக்குவோம். நம் பகவான் உயர்ந்த கொள்கைகள் எல்லாவற்றையும் ஒன்றுபடுத்திய சமரசமே வடிவெடுத்தாற்போன்று விளங்கினுர். நாம் அத்தகைய சமரச நோக்கத்தை நிலைபெறச் செய்வோமாகில், அவருடைய போதனையை உலகத்திலே நிறுவியவர்களாவோம்.'' பிராம்மணர் முதல் சண்டாளர் இறுதியாக எல்லா வகுப்பார்களும் எல்லா மதத்தவர்களும் இவ்விடத்திற்கு வந்து தத்தமது உயர்ந்த கொள்கைகள் இவ்விடத்தில் விளங்குவதைக் காணும்படி செய்தல் வேண்டும். இந்தத் திருமடத்திலே ஸ்ரீராமகிருஷ்ணரைப் பிரதிஷ்டை செய்த தினத்திலே அவருடைய போதனைகள் இங்கிருந்து ஆரம்பித்து, சேதனுசேதனப் பிரபஞ்சம் அனைத்தினும் பெருக்கெடுத்தோடுவது போல எனக்குப் புலப்பட்டது. நான் என்னுல் இயன்ற வரை முயலுவேன்; நீவிர் எல்லீரும் முயன்று, ஸ்ரீராமகிருஷ்ணருடைய பரந்த நோக்கங்களை மக்களுக்குத் தெளிவுறுத்துவீர்களாக; வேதாந்தத்தைப் படிப்பதனுல்மட்டும் ஆகின்ற பயனென்ன? சுத்த அத்வைதத்தின் உண்மைகளை வாழ்க்கையிலே உருவாக்கவேண்டும். சங்கரர் இந்த அத்வைத ஞானத்தை மலையிலும் வனத்திலும் விட்டுச் சென்ருர். அவற்றை அவ்விடங்களிலிருந்து கொண்டுவந்து, மக்கள் தொழில்செய்து உயிர் வாழ்கின்ற இடங்களிலும் மக்கட்சமுதாயத்திலும் பரப்புவதற்காக நான் வந்தேன். இல்லங்களிலும், உறைவிடங்களிலும், பசும்புற்றரைகளிலும், சோலைகளிலும், மலைகளிலும், சமநிலங்களிலும் அத்வைதத்தின் சிங்கக் கர்ச்சனையானது முழங்குதல் வேண்டும். நீவிர் யாவிரும் எனக்கு உதவியாய் வந்து இந்த முயற்சியிலே சேர்ந்து உழைப்பீர்களாக.''

சிஷ்: ஐய, இந்த நிலையைக் கருமத்திலே தோற்றுவிப்பதை விட, தியானத்திலே அடைவது நல்லதென என்னுள்ளத்துக்குப் படுகின்றது.

சுவா: இலாகிரி வஸ்துக்களை உண்டவர்களைப் போன்ற ஒரு மூட நிலையில் செயலற்றுக் கிடப்பதனுல் பயனென்ன? அத்வைத

உண்மையைத் தரிசிக்க ஆர்வத்தினாலே நீ சில வேளை குதித்துக் கூத்தாடுதல் வேண்டும். சில போது வெளியுணர்ச்சியற்று வாளா கிடக்க வேண்டும். நல்ல பொருளைக் கண்டவன் அதைத் தனித்துண்பதில் இன்புறுவானோ? அதனை மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பான் அன்றோ? அத்வைத தரிசனையினாலே நீ மோக்ஷத்தை அடைந்துவிட்டாயென்று வைத்துக்கொள்ளுவோம். அதனால், உலகத்துக்கு ஆவதென்ன? இந்த உடலை விடுவதற்கு முன்னமே பிரபஞ்சம் அனைத்தினையும் நீ விடுதலைப் படுத்தத் தான் வேண்டும். அப்படிச் செய்தால், நீ நித்தியமாகிய உண்மையிலே நிலைபெற்றவனாவாய். என் மைந்தனே, அந்த ஆனந்தத்திற்கு இணையுண்டோ? விண்ணைப் போன்று அகன்று விரிந்த எல்லையற்ற ஆனந்தத்திலே நீ நிலைபெற்றிருப்பாய். உயிர்ப் பொருள் சடப்பொருள் ஆகிய அனைத்திலும் எல்லா இடங்களிலும் நீ ஊடுருவியிருப்பதைக் கண்டு அதிசயத்தினாலே பேச்சொழிந்திருப்பாய்; சேதனாசேதனப் பிரபஞ்சம் அனைத்தும் நீயே என்பதை நேரிலே உணர்ந்துகொள்ளுவாய். அப்பொழுது நீ உன்னிடத்தில் காட்டுகின்ற கருணையைப்போலவே யாவற்றையும் கருணையோடு நடத்துவது இன்றியமையாததாகும். இதுவே அனுஷ்டான வேதாந்தம். நான் சொல்வது உனக்குத் தெளிவாகின்றதா? பிரம்மன் ஒன்றே. ஆயினும், வியவகார நிலையில் அது நமக்குப் பலவாகத் தோன்றுகின்றது. இது நாம ரூபத்தினால் ஆகின்றது. ஒரு கடத்திலிருந்து அதனுடைய நாமத்தையும் ரூபத்தையும் நீக்கிவிட்டால், என்ன எஞ்சியிருக்கின்றது? அதன் சத்தாகிய மண் மாத்திரமே. அவ்வண்ணமே மயக்கத்தினாலே கடம் படம் மடம் என்னுமிவற்றைக் காணுவதும் நினைப்பதும் செய்கின்றாய். அறிவினை மறைப்பதும், உண்மை இயல்பு அல்லாததுமாகிய அஞ்ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு பிரபஞ்சத் தோற்றம் வெளிப்படுகின்றது. மனைவி என்றும், மக்களென்றும், உடலென்றும், மனமென்றும் வேறுபட்ட பலவற்றை, அஞ்ஞானத்தினாலே ஆக்கப்பட்ட பிரபஞ்சத்திலே, நாம ரூப வேறுபாடு காரணமாக ஒருவன் காண்கின்றான். இந்த அஞ்ஞானம் அகன்ற உடனே, நித்தியமாக நிலைபெற்றிருக்கின்ற பிரம்மத்தினை நேரில்காணுதல் இயல்வதாகும்.

சிஷ்: இந்த அஞ்ஞானம் எங்கிருந்து வந்தது?

சுவா: இது எங்கிருந்து வந்ததென்பதைப் பின்னர்ச் சொல்லுவேன். பழுதையைப் பாம்பென்று நினைத்து நீ ஓடிய பொழுது பழுதை பாம்பாயிற்றா, அன்றேல் உன்னை ஓடப்பண்ணியது உன்னுடைய அஞ்ஞானந்தானா?

சிஷ்: அஞ்ஞானத்தினாலேயே நான் அங்ஙனம் செய்தேன்.

சுவா: நல்லது, ஆராய்ந்து பார். பின்பு நீ கயிற்றைக் கயிறாகக் காணும் பொழுது உன்னுடைய முந்திய அஞ்ஞானத்தை

நினைத்து நகைப்பாயல்லவா ? நாம ரூப பேதங்கள் மயக்கமாகு மென்பதை நீ காண்பாயல்லவா ?

சிஷ்: ஆம், காண்பேன்.

சுவா: அஃது அப்படியாயின், நாம ரூப பேதங்கள் பொய்யாகின்றன. நித்தியப் பொருளாகிய பிரம்மம் ஒன்று மாத்திரமே உண்மையாகும். அறியாமையென்னும் மங்கிய ஒளியினூடே இது உன் மனைவி, இது உன் குழந்தை, இது உனக்குரியது, இது உனக்கில்லாதது என்று இவ்வாறு நினைத்து யாவற்றையும் ஒளிர்வுறச் செய்கின்ற ஆன்மாவுடைய உண்மையை அறியாது போகின்றாய். குருவினுடைய உபதேசத்தினாலும் உன்னுடைய நிச்சய புத்தியினாலும் இந்த நாம ரூபப் பிரபஞ்சத்தைக் கடந்து, இதற்கு ஆதாரமாய் இருக்கின்ற உண்மைப் பொருளைக் காண்பாயாயின், படைத்தற் கடவுள் முதல் புல்லீறாக எல்லாப் பொருள்களிலும் நீ ஒன்றாகி இருக்கின்ற தன்மையை உணர்ந்து கொள்ளுவாய். அப்பொழுதே "**பித்யதேஹ்ருதயக்ரந்திஸ் சித்யந்தே ஸர்வ ஸம்சயா:—** இதயத்திலுள்ள எல்லா முடிச்சுகளும் அறுக்கப்படுகின்றன; ஐயங்களனைத்தும் அகன்றுவிடுகின்றன," என்று சொல்லப்பட்டிருக்கிற நிலைமையை நீ அடைவாய்.

சிஷ்: ஐய, இந்த அஞ்ஞானத்தின் உற்பத்தியும் முடிவும் இவையென அறிய விரும்புகிறேன்.

சுவா: இருந்தது போலக் காணப்பட்டுப் பின்பு இல்லாது ஒழிந்து போகின்ற பொருள், தோற்றம் மாத்திரையாய் உள்ள பொய்ப்பொருள் என்பதை அறிந்துகொண்டாயென்று எண்ணுகிறேன். உண்மையிலே பிரம்ம ஞானத்தை அடைந்தவன், 'அஞ்ஞானம் எங்குள்ளது ?' என்னான். அவன் பழுதையைப் பழுதையாகக் காண்பானேயன்றி, ஒரு பொழுதும் பாம்பாகக் காண்பதில்லை. இக்காரணத்தினால், அவித்தையானது பாரமார்த்திக நிலையிலே உண்மைப் பொருளாக மாட்டாது. அவித்தையை உண்மையென்றாவது பொய்யென்றாவது சொல்ல முடியாது. "**சன்னாப்யஸன்னாப் யுபயாத்மிகானோ—**உண்மையுமன்று, பொய்யுமன்று; இரண்டினது கலப்புமன்று." பொய்யெனச் சான்றுகொண்டு காட்டப்பட்ட பொருளைப்பற்றி வினா நிகழாது; விடையும் பயனற்றதாகும். மேலும், அத்தகைய பொருளைப்பற்றிய வினா நியாய விரோதமுமாகும். எப்படியெனில், சொல்லுகிறேன்; கேட்பாயாக: வினாவும் விடையும் நாம ரூப நிலையினின்றும் தேச கால சம்பந்தமாக ஏற்பட்டன அல்லவா ? காலதேச வரம்பிற்கு அப்பாலாகிய பிரம்மத்தினை வினா விடைகளினால் விலக்குதல் கூடுமா ? ஆதலால், சாத்திரங்களும், மந்திரங்களும், பிறவும் சார்பு நிலையில் உண்மைகளாகின்றனவேயன்றி, தனி நிலையிலே உண்மைகளெனக் கருதப்படா. தனக்கென்று சொல்லுதற்குரிய தன்மை யாதும் அவித்

தைக்கு இல்லை. ஆதலால், அதனை அறிந்துகொள்ளுவது எப்படி? பிரம்மத்தினுடைய விளக்கம் தோற்றும் பொழுது இத்தகைய கேள்விகளுக்கு இடமில்லை. ஸ்ரீராமகிருஷ்ண பகவான் சொல்லிய சக்கிலியக் கூலிக்காரனுடைய கதையை* நீ கேள்விப்பட்டதில்லையா? அவித்தையை அறிந்தவுடனே அது மறைந்துவிடுகிறது.

சிஷ்: ஆனால், ஐய, அவித்தை எங்கிருந்து வந்தது?

சுவா: இல்லாதது எங்கிருந்து வரும்? முதலில் இருந்தாலல்லவோ, வந்த செய்தியைப்பற்றி ஆராயலாம்?

சிஷ்: அப்படியாயின், உயிருள்ள பொருள்களாகவும் சடப் பொருளாகவும் உள்ள இப்பிரபஞ்சம் எங்கிருந்து தோற்றியது?

சுவா: உள்ளது ஒன்றே. அது பிரம்மம். பொய்யாகிய நாம ரூபமென்னும் திரையினூடே அந்த ஒரு பொருளையே வேறு வேறு நாமங்களோடும் ரூபங்களோடும் நீ காண்கின்றாய்.

சிஷ்: அப்படியாயின், பொய்யாகிய நாம ரூபங்கள் ஏன் இருக்கின்றன? அவை எங்கிருந்து வந்தன?

சுவா: அவித்தையென அழுந்திக் கிடக்கின்ற எண்ணமானது ஏறக்குறையச் சங்கிலித் தொடர் போல முடிவற்றதெனச் சாத்திரங்கள் பேசுகின்றன. ஆயினும், அதற்கொரு முடிவுண்டு. ஆனால், பிரம்மமோ, பாம்பென்னும் மயக்கக் காட்சியைத் தருகிற பழுதையைப் போல, ஒரு சிறிதும் வேறுபாடின்றி எப்பொழுதும் தன்னியல்பிலே நிலைபெற்றிருக்கிறது. ஆதலால், ஜாலக்காரனுடைய வித்தையைப் போலப் பிரபஞ்சமனைத்தும் பிரம்மத்தினிடத்திலே வெளித்தோற்றமாகக் காணப்படுகின்றன என்பது வேதாந்தத்தின் முடிபு. இது பிரம்மத்தினுடைய சொந்தப் பண்பிலிருந்து அதனைச் சிறிதேனும் அசைத்துவிடவில்லை. நான் சொல்லுகிறது உனக்குத் தெளிவாகிறதா?

சிஷ்: ஒன்று மாத்திரம் எனக்கு இன்னும் தெளிவுபடவில்லை.

---

* ஒரு நாள் ஒரு பிராம்மணன் தன் சிஷ்யனுடைய வீட்டுக்குப்போக விரும்பித் தனது சுமையைக் கொண்டுபோக ஒரு கூலிக்காரனைத் தேடினான். நல்ல சாதியான் அகப்படாத காரணத்தினாலே, அத்தொழிலைச் செய்யும்படி ஒரு சக்கிலியனைக் கேட்டான். அந்த மனிதன் தான் தீண்டாச் சாதியானென்ற காரணத்தைக் காட்டி முதலிலே மறுத்துவிட்டான். பிராம்மணன் அவனையே வைத்துக்கொள்ள வேண்டுமென்று கருதி, 'நீ மௌனமாயிருந்தால், அதை யாரும் அறிந்துகொள்ளப் போவதில்லை,' என்று சொன்னான். ஈற்றிலே அந்த மனிதன் உடன்பட, இருவரும் குறித்த இடத்தைச் சேர்ந்தனர். அங்குள்ள ஒரு மனிதர் அச்சக்கிலிய வேலைக்காரனை நோக்கி ஒரு சோடி செருப்பை எடுத்து வேறோர் இடத்தில் வைக்கும்படி சொன்னார். வேலைக்காரன் மௌனமாயிருப்பது முறையென்றெண்ணி, கட்டளையைக் கேளாதவன்போல் இருந்துவிட்டான். அந்த மனிதன் வெருண்டு, "ஏனடா, நான் சொல்லுவது கேட்கவில்லையா? நீ என்ன சக்கிலியனா?" என்றார். அச்சமுற்ற சக்கிலியன், "எசமானே, என்னைக் கண்டு பிடித்துவிட்டார்கள்? நான் இனி இங்கு நிற்றல் கூடாது?" என்று சொல்லிக்கொண்டே உடனே ஓட்டம் பிடித்தான்.

சுவா: அஃதென்ன?

சிஷ்: படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய இவை எல்லாம் தம்மளவிலே இல்லாதனவாய்ப்பிரம்மத்தினிடத்திலேதோற்றமாத் திரையாய்க் காணப்படுகின்றன என்று தேவரீர் இப்பொழுது சொன்னது ஞாபகமிருக்கிறது. ஆனுல், அது எப்படியாகும்? தான் நுகராத ஒரு பொருளைப் பற்றிய மயக்கத்தோற்றம் ஒரு பொழுதும் ஏற்படுவதில்லை. பாம்பை ஒரு நாளும் காணுதவன் பழுதையைப் பாம்பென்று நினைப்பது எவ்வாருகும்? அது போலவே, இந்தச் சிருஷ்டியை உணராதவன் பிரம்மத்தைச் சிருஷ்டியாகப் பிழையுற நினைப்பதெப்படி? ஆதலால், சிருஷ்டி என்னும் மயக்கம் தோற்று வதற்குச் சிருஷ்டியானது முன்னதாகவே இருந்திருக்க வேண்டும்; அன்றேல், இப்பொழுது இருக்கவேண்டும். ஆனுல், இது நம்மைத் துவித மதத்துக்கு இழுத்துவிடுகிறது.

சுவா: உண்மையை உணர்ந்த மனிதன் உன்னுடைய தடைக்கு விடையாகத் தனது கண் முன்னே படைப்பு முதலாகிய பொருள்களெல்லாம் காணப்படவில்லை என்று கூறுவான். அவன், பிரம்மத்தைக் காண்கிருன்; பிரம்மத்தை மாத்திரமே காண்கிருன். அவன் பழுதையைக் காண்கிருன்; பாம்பைக் காணவில்லை. உன்னைப் பொறுத்தமட்டில் இந்தச் சிருஷ்டியை அல்லது பாம்பைக் காண்பதாக நீ வாதிப்பாயானுல், அவன் உனது பிழை பொருந்திய காட்சியைக் குணமாக்கும்பொருட்டுப் பழுதையினது உண்மைத் தன்மையைத் தெளிவுபடுத்த முயலுவான். அவனுடைய போதனை யினுலும் உனது விசாரணையினுலும் பழுதையைப் பற்றிய, அன் றேல் பிரம்மத்தைப்பற்றிய, உண்மையை நீ கண்டுகொண்டால் பாம்பைப் பற்றியும் சிருஷ்டியைப் பற்றியும் உள்ள மயக்க உணர்வு உடனே அகன்றுவிடும். அப்பொழுது படைத்தல், காத்தல், அழித் தல் என நின்ற மயக்க உணர்வுகளெல்லாம் பிரம்மத்தினிடத்திலே ஆரோபித்திருக்கின்றனவென்று சொல்வாயேயன்றி வேறென்ன சொல்லுவாய்? சிருஷ்டி முதலாகிய தோற்றம் ஆதி இன்றித் தொடர்ந்து வந்தது என்னின், அஃது அங்ஙனமாகட்டும்; அந்த வினுவுக்கு ஆராய்ந்து முடிவு காண்பதனுல் ஒரு வகைப் பயனும் எய்தப் போவதில்லை. உள்ளங்கை நெல்லிக்கனி போலப் பிரம் மத்தைக் காணின் அல்லாது, இந்தக் கேள்விக்கு முடிவான பதில் அளித்தல் இயலாது. அதன் பின் கேள்வி எழப்போவதுமில்லை; விடை தேட வேண்டிய அவசியமுமில்லை. பிரம்மத்தை அடைந்து அனுபவிப்போர் இனிய தின்பண்டத்தைச் சுவைக்கின்ற ஊமை யனைப் போலத் தம்முடைய அனுபவத்தை வெளியிட்டுரைக்க மாட் டாது மௌனமாயிருப்பர்.

சிஷ்: அப்படியாயின், அதனைப் பற்றி இவ்வளவு ஆராய் வதனுல் எய்துகின்ற பயன் யாது?

சுவா: அறிவினாலே விஷயத்தை உணர்ந்துகொள்ளுவதற்கு வாதம் இன்றியமையாதது. ஆனால், உண்மைப்பொருள், வாதம் கடந்து நிற்பது. "நைஷா தர்க்கேண மதிராபநேயா—இந்த முடிபு தருக்கத்தால் அறியப்படுவதில்லை.''

இங்ஙனம் உரையாடிக்கொண்டே போய், சுவாமிஜியும் சிஷ்யரும் திருமடத்தை அடைந்தனர். ஆங்குக் குழுமியிருந்த சந்நியாசிகளுக்கும் பிரம்மசாரிகளுக்கும் பிரம்மத்தைப்பற்றிய அவ்வாதத்தின் சாரத்தைச் சுவாமிஜி எடுத்து விளக்கினார்; மேன்மாடிக்குப் போகும்போது சிஷ்யரை நோக்கி, "நாயமாத்மா பலஹீனேன லப்ய: இந்த ஆன்மா பலவீனர்களால் அடையப்படுவதில்லை,'' என்றார்.

(22)

[இடம்: பேலூரில் வாடகைத் திருமடம். காலம்: 1899-ஆம் ஆண்டு.]

ஸ்ரீராமகிருஷ்ணர் போதித்த சமய உண்மைகளைப் பொது மக்களிடையே பரப்பும் நோக்கத்துடன் சுவாமிஜியினுடைய கட்டளைப்படி சுவாமி திரிகுணாதீதரால் வங்காளி பாஷையிலே இரண்டு வாரத்திற்கு ஒரு முறை வெளியிடப்பட்டு வருகிற 'உத்போதன்' என்னும் பத்திரிகை இப்பொழுதுதான் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. அதனுடைய முதலிதழ் வெளியானபின்னர் ஒரு நாள் சிஷ்யர் நீலாம்பர பாபுவினுடையசோலை வீட்டினுள்ளே இருக்கும் திருமடத்திற்கு வந்தார். சுவாமிஜி அவரோடு உத்போதன் பத்திரிகையைப் பற்றிப் பின் வருமாறு கூறுவாராயினர்:

சுவா: (நகைச் சுவையோடு பத்திரிகையினுடைய பேரை வேறுபடுத்திக் கூறி) நீ உத்பந்தனைக்* கண்டதுண்டா ?

சிஷ்: ஆம், ஐய, அது ஒரு நல்ல பத்திரிகை.

சுவா: பொருளையும் மொழி நடையையும் இந்தப் பத்திரிகைக்குரிய யாவற்றையும் ஒரு புது முறையாக உருப்படுத்த வேண்டும்.

சிஷ்: எப்படி ?

சுவா: ஸ்ரீராமகிருஷ்ணருடைய எண்ணங்களை எல்லா மக்களுக்கும் பரப்புவதோடு வங்காளி மொழிக்கு ஒரு புதிய வலிமையையும் உண்டாக்க வேண்டும். உதாரணமாக, வினைச்சொற்களை அடுத்தடுத்து வழங்குவது மொழியின் வலிமையைக் குறைத்துவிடுவதாகும். வினைமுற்றுகளை உபயோகிப்பதைக் குறைத்துப் பெயரெச்சங்களை உபயோகிக்க வேண்டும். அவ்வண்ணம் சில கட்டுரைகளை எழுதி அவற்றை உத்போதனில் வெளியிடு முன்பு எனக்குக் காட்டுவாயாக.

* உத்பந்தன் - தூக்கிட்டுத் தற்கொலை புரிந்துகொள்வது.

சிஷ்: ஐய, சுவாமி திரிகுணதீதர் இந்தப் பத்திரிகைக்காக மேற்கொள்ளுகிற உழைப்பைப்போல வேறு யாரும் செய்ய முடியாது.

சுவா: ஸ்ரீராமகிருஷ்ணருடைய சந்நியாச மக்கள் தீயை வளர்த்துக்கொண்டு மரத்தின் கீழே உட்கார்ந்திருப்பதற்குப் பிறந்தவர்களென்று நீ நினைக்கிறாயா? அவர்களில் யாரேனும் ஏதாவது வேலையைச் செய்யத் தொடங்கினால், மக்கள் அவர்களுடைய வலிமையைக் கண்டு வியப்புறுவார்கள். வேலை செய்வதெப்படி என்று அவர்களிடம் கற்றுக்கொள்வாயாக. திரிகுணதீதர் என்னுடைய கட்டளையை நிறைவேற்றுவதற்காகத் தம்முடைய ஜபம் தவம் முதலிய யாவற்றையும் விடுத்துக் கருமமே கண்ணாய் இருப்பதைக் கண்டுகொண்டனையா? இத்தகைய தியாகம் அற்பமானதா? அவர் செய்கிற முயற்சியிலே அடிப்படையாக என்மீது இருக்கின்ற அன்பு எவ்வளவு என்பதைக் கண்டுகொண்டனையா? பயனடையாமல் அவர் தாம் செய்யும் கருமத்தை நிறுத்தப் போவதில்லை. இல் வாழ்வாராகிய உங்களுக்கு இத்தகைய உறுதியுண்டா?

சிஷ்: ஆனால், ஐய, காவி அணிந்த ஒரு சந்நியாசி, சுவாமி திரிகுணதீதரைப் போல வீடு வீடாக அலைவதைப் பார்க்கும் பொழுது எங்கள் கண்ணுக்கு எல்லாம் வியப்பாகவே தோன்றுகின்றன.

சுவா: ஏன்? பத்திரிகையைப் பரப்புவது இல்வாழ்வாருடைய நன்மையின்பொருட்டே. நாட்டிலே புதுக் கருத்துகளைப் பரப்புவதனால் மக்கள் பெரிதும் நன்மை அடைவார்கள். இத்தகைய தன்னலமற்ற வேலை பத்தியோடு கூடிய சமய அநுஷ்டானங்களுக்கு எவ்வாற்றாலும் குறைந்ததென்று எண்ணுகிறாயா? மக்களுக்கு நன்மை செய்வதே எங்களுடைய நோக்கம். இப்பத்திரிகையின் வருவாயினால் பொருள் திரட்ட வேண்டுமென்பது எங்களுடைய கருத்தன்று. நாங்கள் யாவற்றையும் துறந்துவிட்டோம்; மரணத்தின் பின் மனைவி மக்களுக்குப் பொருள் வைத்துச் செல்லவேண்டும் என்னும் அவசியம் எங்களுக்கு இல்லை. பத்திரிகை சித்திபெற நடக்குமாயின், அதனால் வருகின்ற வருவாய் முழுவதும் மக்களுடைய சேவைக்காகச் செலவிடப்படும். அதில் ஏதும் ஆதாயம் இருந்தால் மடாலயங்களும் சேவாச்சிரமங்களும் பலவிடங்களில் ஏற்படுத்துவதற்கும், பொது மக்களுக்கு நன்மையைத் தருகின்ற பல நன்முயற்சிகளைச் செய்வதற்கும் அஃது பயன்படும். எங்கள் மடியிலே பணம் நிறைக்கும் நோக்கமாக இல் வாழ்வார்களைப் போல நாங்கள் முயலவில்லை. எங்களுடைய முயற்சிகளனைத்தும் பிறருடைய நலத்துக்கே என்பதை நிச்சயமாக அறிந்துகொள்வாயாக.

சிஷ்: அப்படியாயினும், எல்லோரும் இந்த நல்ல நோக்கத்தை அறிந்துகொள்ள மாட்டார்கள்.

சுவா: அறியாவிட்டால் என்ன? அதனுல் எங்களுக்கு உள்ளது நிறையப்போவதுமில்லை, குறையப்போவதுமில்லை. பிறர் குற்றங் காண்பார் என்னும் எண்ணத்தோடு நாங்கள் ஒரு முயற்சியைச் செய்யப் போவதில்லை.

சிஷ்: ஐய, அந்தப் பத்திரிகை இரண்டு வாரத்துக்கொரு முறை வெளி வருகிறது. அது வாரப் பத்திரிகையாய் இருக்க வேண்டும் என்று நாங்கள் பெரிதும் விரும்புகிறோம்.

சுவா: ஆம்; அதற்கு வேண்டிய பொருள் எங்கே? ஸ்ரீராமகிருஷ்ணருடைய அருளினுல் வேண்டிய பொருளைச் சேர்த்தால், எதிர்காலத்திலே இதனைத் தினப்பத்திரிகை ஆக்குதலும் கூடும். நாடோறும் ஒருலக்ஷம் பிரதிகளை அச்சிட்டுக் கல்கத்தா நகரிலுள்ள ஒவ்வொரு தெருவிலும் சந்திலும் இனமாகக் கொடுக்கும்படி செய்யலாம்.

சிஷ்: தேவரீர் கொண்டுள்ள இவ்வெண்ணம் மிகச்சிறந்தது.

சுவா: முதலிலே பத்திரிகையை நஷ்டமில்லாமல் நடக்கச் செய்து, பின்பு உன்னைப் பதிப்பாசிரியராக வைக்கலாம் என்று நான் எண்ணியிருக்கிறேன். எடுத்துக்கொண்ட கருமத்தைப் பிறர் உதவியின்றிச் செம்மையாக நடக்கச் செய்யும் ஆற்றல் உங்களுக்கு இல்லை. யாவற்றையும் துறந்த சந்நியாசிகளுக்கே அவ்வாற்றல் உண்டு. அவர்கள் உயிர் போம் வரை உழைப்பார்கள்; ஆனுல், மனம் தளர மாட்டார்கள். உங்களுக்கோ, ஒரு சிறிய தடை, அல்லது பிறர் கூறும் குறை மொழி, உள்ளத்தை நிலை குலைத்துவிடும்.

சிஷ்: ஐய, அன்றைத் தினத்தில் சுவாமி திரிகுணுதீதர் அச்சியந்திரசாலையிலே காரியத்தை ஆரம்பிக்குமுன்னர் ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருவுருவத்தை வழிபட்டுக் காரிய சித்திக்காகத் தேவரீருடைய ஆசீர்வாதத்தையும் வேண்டி நின்றதை நான் கண்டேன்.

சுவா: நல்லது; ஸ்ரீராமகிருஷ்ணர் எங்களுக்கு நடுநாயகமானவர். நாங்கள் ஒவ்வொருவரும் அவரிடத்திலிருந்து புறப்படுகிற ஒளிக்கதிர். காரியத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர்த் திரிகுணுதீதர் ஸ்ரீராமகிருஷ்ணரை வழிபட்டாரா? அது மிக நல்லது. எனக்கு அவர் அதைப்பற்றி யாதும் சொல்லவில்லை.

சிஷ்: ஐய, அவர் தேவரீருக்கு மிகவும் அஞ்சுகிருர். நேற்று என்னைக் கண்டு தேவரீரிடம் போய்ப் பத்திரிகையின் முதல் இதழைப்பற்றிய கருத்தை அறிந்து வரும்படியும், பின்பு தாம் வந்து தேவரீரைக் காண்பதாகவும் எனக்குச் சொன்னுர்.

சுவா: அவர் செய்த வேலையைக் குறித்து நான் அளவிறந்த மகிழ்ச்சியடைகின்றேன் என்று அவருக்குச் சொல்லுவாயாக.

எனது அன்பு கனிந்த ஆசீர்வாதத்தை அவருக்கு அளிப்பாயாக. நீங்கள் எல்லோரும் இயன்ற வரை அவருக்கு உதவி புரிய வேண்டும். அங்ஙனம் செய்வதனுல், ஸ்ரீராமகிருஷ்ணருடைய வேலையைச் செய்தவர்களாவீர்கள்.

இம்மொழிகளைச் சொன்ன பின்னர், சுவாமிஜி சுவாமி பிரம்மானந்தரை அழைத்து உத்போதன்பொருட்டுப் பணம் தேவைப்படுமாயின், சுவாமி திரிகுணுதீதருக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்குமாறு கட்டளையிட்டார்.

அன்று மாலையில் உண்டி முடிந்த பின்னர், சுவாமிஜி உத்போதன் சார்பாகப் பின் வருமாறு கூறினுர்:

''உத்போதன் பத்திரிகை மூலமாக நாம் மக்களிடையே உறுதியோடு கூடிய உடன்பாட்டுக் கொள்கைகளைப் பரப்பவேண்டும். உறுதியற்ற எதிர்மறைக் கொள்கைகள் மனிதரைப் பலவீனராக்குவன. பெற்றோர் தம் மக்களை இடைவிடாது தொல்லைப் படுத்தி, அவர்கள் ஒன்றும் படிக்க இயலாதவர்கள் என்றும், மட்டிகள் என்றும் சொல்லி வருவதனுல் உண்மையிற் பிள்ளைகள் அவ்வண்ணம் ஆகிவிடுவதை நாம் காண்கின்ருேம் அல்லவா? சிறுவர்களிடம் நயமாகிய மொழிகளைப் பேசி உற்சாகப்படுத்தினுல், நாளடைவிலே அவர்கள் திருத்தம் அடைவார்கள். சிறுவர்களுக்கு எம்முறை நலமாக இருக்கின்றதோ, அம்முறையானது உயர்நோக்கங்களிற் சிறுவராயிருக்கின்ற வளர்ந்தவர்களுக்கும் பொருந்துவதாகும். உறுதியோடுகூடிய உடன்பாட்டு எண்ணங்களைப் போதித்தால், மக்கள் மனிதப்பண்போடு வளர்ந்து பிறர் உதவியின்றி நிலையினில் நிற்கப் பயின்றுகொள்ளுவார்கள். மொழியிலும், இலக்கியத்திலும், பாடலிலும், ஏனைய கருமங்களிலும் மக்கள் தங்கள் எண்ணத்திலும் செயலிலும் செய்கின்ற பிழைகளை எடுத்துக் காட்டுவது சரியன்று; இவற்றை எல்லாம் படிப்படியாகத் திருத்தமுற எவ்வண்ணம் செய்யலாம் என்பதை அறிவுறுத்த வேண்டும். குற்றங்களை எடுத்துக்காட்டுவது ஒரு மனிதனுடைய மனத்திற்கு நோவைத் தருவதாகும். தாங்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என எண்ணியவர்களைப் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் எவ்வண்ணம் தைரியப்படுத்தினுர் என்பதையும், அதனுல் அவர்களது வாழ்க்கைப் போக்கே வேறுபட்டு நன்மையுற்றதையும் நாங்கள் நேரிலே கண்டிருக்கிருேம். அவர் போதிக்கும் முறை மிகச் சிறப்பு வாய்ந்தது.''

சுவாமிஜி சற்று நேரம் தாமதித்துப் பின்னும் சொல்லுவார்: ''யாவற்றிலும் யாவரிடத்திலும் முகத்தைச் சுளித்துக்கொள்வதே சமய போதனை செய்வது என ஒரு பொழுதும் நினைத்துவிடாதே. உடலைப்பற்றிய, மனத்தைப்பற்றிய, ஆன்மாவைப்பற்றிய எல்லா விஷயங்களிலும் மக்களுக்கு நாங்கள் உறுதியான எண்ணங்களை அளிக்கவேண்டும். ஒரு பொழுதாவது எவர் மேலும் வெறுப்புக்

காட்டுவது கூடாது. ஒருவரை ஒருவர் வெறுத்தமையினாலேதான் நீங்கள் இந்தக் கீழான நிலையை அடைந்துவிட்டீர்கள். இப்பொழுது உறுதி பயக்கும் உடன்பாட்டெண்ணங்களை எல்லோரிடையிலும் பரப்பி மக்களை நாம் உயர்த்துதல் வேண்டும். முதலிலே இந்து சமயத்தாரனைவரையும் இம்மாதிரி உயர்த்துதல் வேண்டும். அதன் பின்பு உலகம் முழுவதையும் உயர்த்துதல் நலமாம். இதற்காகவே ஸ்ரீராமகிருஷ்ணர் திருவவதாரம் செய்தார். அவர் ஒரு மனிதனுடைய விருப்பத்திற்கு இயைந்த போக்கினை ஒரு பொழுதாவது அழித்ததில்லை; மிகவும் கீழான நிலையிலுள்ள மக்களுக்கும் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் தருகின்ற மொழிகளைக் கூறி, அவர்கள் உயர்வுபடுத்தினார். நாமும் அவர் வழி நின்று மக்களை விழிப்புறச் செய்து உயர்த்த வேண்டும். இது உனக்குத் தெளிவாகிறதா?

"உங்களுடைய இதிகாசம், காவியம், புராணம் மற்றுமுள்ள சாத்திரங்கள் ஆகிய யாவும் மக்களைப் பயமுறுத்தும் தன்மையனவே. 'நீங்கள் நரகத்துக்குப் போவீர்கள்; உங்களுக்கு உய்வில்லை,' என அவைகள் முழங்குகின்றன. இதனால், இந்தியாவில் உயிர்ச் சத்தியிலேயே சோம்பல் நுழைந்துவிட்டது. ஆதலால், எளிய மொழிகளிலே வேத வேதாந்தத்தின் உயர்ந்த கருத்துகளை எல்லாம் நாம் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். நல்லொழுக்க முறைகளைப் போதிப்பதனாலும், நன்னடையினாலும், கல்வியினாலும் சண்டாளனைப் பிராம்மண நிலைக்கு உயர்த்த வேண்டும். இந்த விஷயங்களை எல்லாம் உத்போதன் பத்திரிகையிலே எழுதி, இளைஞர் முதியோர், ஆண் பெண் ஆகிய அனைவரையும் விழிக்கச் செய்வாயாக. அப்பொழுதுதான் நீ கற்ற வேத வேதாந்தத்தினாற் பயனுண்டென நான் அறிந்துகொள்ளுவேன். என்ன சொல்லுகிறாய்? இது செய்ய உன்னால் முடியுமா?"

சிஷ்: தேவரீருடைய கட்டளையினாலும், ஆசீர்வாதத்தினாலும் நான் எதிலும் நன்மை அடைவேன் என்று எண்ணுகிறேன்.

சுவா: மற்றொன்று: நீ உடலை வலிமைப்படுத்தும் முறைகளைப் பயின்றுகொள்ள வேண்டும்; பிறருக்கும் பயிற்ற வேண்டும். நான் தினந்தோறும் தேகப் பயிற்சி செய்து வருவதை நீ பார்க்கவில்லையா? காலையிலும் மாலையிலும் நெடுந்தூரம் உலாவு. உடலினால் நன்றாக உழை. உடலும் மனமும் ஒன்றுக்கொன்று பின்னடையாமல் வளர்ச்சியடைய வேண்டும். எல்லாக் கருமங்களுக்கும் பிறருடைய உதவியை வேண்டி நிற்பது தக்கதன்று. உடலை வலுப்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் மக்களுடைய உள்ளத்தில் புகுமாயின், தாமாகவே அந்த விஷயத்தில் அவர்கள் முயலுவார்கள். அவசியம் என்பதை உணர்விக்கும்பொருட்டே இப்பொழுது நாங்கள் அவர்களுக்குக் கல்வியறிவுறுத்த வேண்டும்.

(23)

[இடம்: கட்டடவேலை நடைபெறும் பேலூர்த் திருமடம். காலம்: 1898-ஆம் ஆண்டு.]

சிஷ்: சுவாமி, நீங்கள் இந்த நாட்டில் உபந்நியாசஞ் செய்யாதிருப்ப தேன்? ஐரோப்பாவும், அமெரிக்காவும் உங்களது சொற் பொழிவாம் பெரும்புயலால் அசைவுற்றிருக்கின்றனவே! இங்கு வந்து மௌனம் சாதித்துக்கொண்டிருக்கக் காரணம் யாதோ?

சுவா: இந்த நாட்டில் முதற்கண் நிலத்தைப் பண்படுத்த வேண்டும்; பின்னர் விதையைத் தூவினுல், அது முளைத்து நன்ருக வளரும். ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய மேலை நாடுகளில், நிலம் செழிப்பாகவும் விதை விதைக்கத்தக்க தன்மையினதாகவும் இருக் கிறது. ஆங்குள்ளார் உலக இன்பங்களில் வேண்டியமட்டும் திளைத்து, அவ்வனுபவங்கள் தங்கள் உள்ளத்திற்கு அமைதியைத் தாரா என்னும் உண்மையினை நன்ருக உணர்ந்து, அவற்றை விடுத்துப் பிறிதொன்றை நாடுதல் தகுதி என்னும் எண்ணம் கொண்டவர்களாயிருக்கின்ருர்கள். இந்த நாட்டிலோ, போகமு மில்லை; யோகமுமில்லை. போகத்தின்மேற் செல்லாது அடங்கிய மனத்தினையுடையவனன்ரே யோக நூலைக் கேட்டு உணரத் தகுதி யுடையவனுவான்? நோய், இன்னல், துன்பம் இவற்றுக்கு உறை விடமாகிய இந்த நாட்டில் உண்ண உணவின்றி, உடல் மெலிந்து, மனவுறுதியற்றிருக்கிற மனிதருக்கு உபந்நியாசம் புரிவதால் விளை யக்கூடிய பயன் என்ன?

சிஷ்: அஃதெப்படியாகும்? நமது நாடு மற்றெப்பொருளையும் விடச் சமயத்தை மேலாகக் கொள்ளுகிற நாடு அன்ரே? ஏனை யோரினும் நம்மவர் சமய உண்மைகளை எளிதில் அறிந்துகொள் ளக்கூடியவர்கள் அல்லவா? ஆதலினுல், இத்தேசத்தார் உள்ளங் கவர்ந்து உயிர்க்குறுதி பயப்பனவாகிய உங்கள் மொழிகளைக் கேட்டு அவற்ருல் அடையவேண்டிய பயனைமுற்றிலும் அடைவார்க ளென்பது எனது எண்ணம்.

சுவா: சமயநெறி இன்னதென்று சொல்லுகிறேன்; கேட்பா யாக: பசிப்பேயை அகற்ற வழியறியாது நமது நாடு தத்தளிக் கின்றது. ஆதலால், முதலிலே, கூர்மாவதாரமாகிய சாமிக்கு, அதாவது வயிற்றுச் சாமிக்கு உணவைப் படைத்துச் சாந்தப் படுத்த வேண்டும். இது செய்தாலன்றி வெற்று வார்த்தையினுற் பயனுண்டாகாது. அயலார் இந்நாட்டிலுள்ள செழுமையாகிய பொருள்களையெல்லாம் கொள்ளை கொண்டு போகிருர்கள்; வரம்பு கடந்து உணவுப் பொருள்கள் முதலியன ஏற்றுமதி செய்யப்படு கின்றன. இவையெல்லாவற்றிற்கும், மேலாக, அடிமைகளுக்கு இயல்பாயுள்ள எரிச்சலானது நம்மவர்களை எலும்பு வரையும் உறிஞ்சி உட்கொண்டுவிட்டது. ஆதலால், மக்கள் உணவே எண்

ணமாக உலைவுறாமல், முதற்கண் பசிப்பிணியை அகற்ற வேண்டும். பின்னர்ப் பிரசங்கம் முதலியன பயன்படுவனவாகும்.

சிஷ்: அதற்கு நாம் செய்ய வேண்டுவது என்ன ?

சுவா: தங்களுடைய இன்பத்தை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், பிறருடைய நன்மைக்காகத் தங்களுயிரையும் கொடுக்க முன்னிற்பவர்களாய்த் துறவு என்னும் பூரணத்தினுல் நிறைந்தவர்களாயுள்ள இளைஞர் சிலர் முன்வரவேண்டும். அவர்களை வாலிப சந்நியாசிகளாகப் பயிற்றுவதற்காக நான் ஒரு மடம் ஏற்படுத்த எண்ணியிருக்கிறேன். பயிற்றப்பட்ட பின்னர், அவர்கள் வீடு வீடாகப் போய், ஏழை மக்களோடு ஊடாடி, மக்கள் மேனிலைக்கு வருவதற்காகச் செய்து முடித்தற்குரிய முயற்சிகள் இவையிவை, செல்ல வேண்டிய வழியிது என்று தெரியப்படுத்துவதோடு, மென்மொழிகளாகவே தெளிவாக நம் சமய உண்மைகளை உணர்த்தி வைக்க வேண்டும். மக்களுட்பெரும்பாலார் செயலிழந்து தூங்குகிற நிலையிலிருக்கின்றனர். பல்கலைக்கழகம் மூலம் கற்பிக்கப்படுகிற கல்வியானது, மொத்த மக்களில் நூற்றில் ஒன்று இரண்டு வீதத்தினருக்காவது கிட்டுவதில்லை; அப்படிக் கல்வி பெற்ற ஒருவர் இருவர் கூடத் தமது நாட்டுக்கு நன்மை செய்ய முற்படும் முயற்சிகளிச் சித்தியடைவதில்லை. பாவம் ! என்ன செய்வார்கள் ! அவர்கள் மீதுந் தவறில்லை. படிப்பு முடிந்து வந்ததும் தாம் எத்தனையோ குழந்தைகளுக்குத் தந்தையராய் இருக்கிறதைக் கண்டு எப்படியோ கெஞ்சி ஒரு குமாஸ்தா வேலையோ, மிஞ்சினுல் ஓர் உதவி நீதிபதி வேலையோ ஏதாவது ஒன்று பெற்றுக்கொண்டு அமர்ந்துவிடுகிறுர்கள். இதுவே அவர்கள் கல்வியாற்பெற்ற பெரும்பேறு. குடும்பப் பாரஞ்சுமத்தப்பட்ட அவர்கள் அரும்பெருங்காரியங்களைச் செய்து முடிக்கவாவது, உயர்ந்த எண்ணங்களை எண்ணவாவது இயலாதவர்களாய் அலைகிறுர்கள். தங்களுடைய தேவைக்கே பணமில்லாத அவர்கள் பிறர்க்குதவி செய்ய முன் வருவதெப்படி ?

சிஷ்: பின்னர் நம்மவர் உயர்வதற்கு வழியில்லையா ?

சுவா: ஏனில்லை ? இது சநாதன தருமத்துக்கு உறைவிடமாகிய நாடு. இது இக்காலம் தாழ்வடைந்திருக்கிறதென்பது உண்மையே எனினும், உலகத்தார் வியப்புறத்தக்க உன்னத நிலையை அடையுமென்பதற்கு ஐயமில்லை. கடல் அலையானது எவ்வளவுக்குத் தாழ்கிறதோ, அவ்வளவுக்கு உயரவும் வேண்டுமன்றோ ?

சிஷ்: இந்நாடு எவ்வாறு உயர்ச்சியை அடையும் ?

சுவா: உன் கண்களுக்குத் தோற்றவில்லையா ? கீழ் வானம் வெளுத்துவிட்டது; இன்னுஞ்சிறிது நேரத்தில் கதிரவன் உதயமாய் விடுவான். நீங்களெல்லாரும் ஒருங்கு சேர்ந்து தோள் கொடுக்க வேண்டும்; உலக சுகமே அனைத்துமென்று நினைத்து, ''எனது குடும்பம்'', ''எனது குடும்பம்'' என்று எண்ணிக்கொண்டிருப்பதில்

உள்ள சுகமென்ன ?நாட்டில் எவ்விடத்திற்கும் ஊர் ஊராய்ப்போய் மக்களைப் பார்த்துச் 'சோம்பலொழிந்து எழுந்திருங்கள் !' என்று சொல்லவேண்டும். அவர்களுடைய நிலையை அவர்களுக்கு உணர்த்தி ''சகோதரர்களே, விழியுங்கள்; எழுந்திருங்கள்; இன்னும் எத்தனை காலம் தூக்கத்திலிருக்கப்போகிறீர்கள் ?'' என்று கூறுதல் வேண்டும். அவர்கள் தங்களுடைய நிலைமையைத் தாங்களே எவ்வாறு சீர்படுத்திக்கொள்ளலாமென்று அவர்களுக்கு அறிவு புகட்ட வேண்டும். சாத்திரங்களில் மொழியப்பட்டிருக்கிற மேலான உண்மைகளை எவரும் எளிதில் உணரத்தக்க எளிய நடையிலெடுத்து உரைக்க வேண்டும். இதுகாறும் பிராம்மணர்கள் சமய உண்மைகளைத் தங்களுக்கே உரிய பொருளாக வைத்திருந்து விட்டார்கள்; காலாந்தரத்தில் வருகிற கிளர்ச்சியைத் தடைப்படுத்த அவர்களால் முடியாது. ஆதலால், பிராம்மணரைப்போலவே ஏனையோருக்கும் சமயானுஷ்டானமும் சமய உண்மைகளும் உரியனவென்பதை வலியுறுத்திச் சொல்ல வேண்டும். சண்டாளர் முதல் அனைவருக்கும் தீட்சை செய்து எல்லா அசுத்தங்களையுஞ் சுட்டெரிக்கும் வலிமை வாய்ந்த மந்திரங்களை அனைவருக்கும் உபதேசிக்க வேண்டும். இன்னும் வாழ்க்கை உயர்வுக்கு வேண்டிய வாணிபம், கைத்தொழில் முதலிய தொழிற்றுறைகளைப் பற்றி எளிதில் உணர்ந்துகொள்ளக்கூடிய நடையில் அறிவுறுத்த வேண்டும். இவ்வளவுஞ் செய்யமாட்டீர்களாயின், உங்களுடைய கல்வி கேள்விகளும், வேத வேதாந்த உணர்வும் குப்பையில் எறியத் தக்கனவேயாம்.

சிஷ்: இதையெல்லாம் செய்ய எங்களிடம் வலி இல்லையே சுவாமி ! உங்களிடத்துள்ள சத்தியில் நூற்றிலொரு பகுதி எனக்கு உளதாயின், எனது பிறவி கடைத்தேறியது என்று கருதுவேன்.

சுவா: என்ன பேதைமை ! சத்தியும் பிறவும் தாமே வந்தடையும். வேலையில் இறங்குவாயாயின், தாங்கொணா அபார சத்தி உன்னிடம் வந்தடைவதைக் காண்பாய். பிறர்க்காகத் தினையளவு உழைப்பினும், பிறரது நன்மையைக் கருதினாலுங்கூடச் சிங்க ஏற்றின் ஆற்றல் இதயத்திலுண்டாகுமன்றோ ? நான் உங்கள் எல்லாரிடமும் அன்பு பாராட்டுகிறேன். ஆயினும், பிறர்க்கு உரைப்பதனால் உங்களுக்கு மரணம் நேரிடினும், நான் அதை மகிழ்ச்சியோடு நோக்குவேனேயன்றி, அவலப்படேன்.

சிஷ்: அப்படியாயின், எங்களுடைய ஆதரவின் கீழிருக்கிறவர்கள் பாடு என்னவாகும் ?

சுவா: நீங்கள் பிறர்க்காக உயிரை விட ஆயத்தமாயிருப்பீர்களாயின், உங்களுடைய ஆதரவின் கீழிருப்பவர்களைக் கடவுள் கைவிட மாட்டார். 'நன்மை புரிவோன் இன்னலடையான்,' என்று

கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் உபதேசித்திருப்பதைப் படித்ததில்லையா? துறவு இன்றியமையாதது. துறவு இல்லாமல் ஒருவன் தன்னுடைய முழு இதயத்தோடும் பிறர்க்காகப் பாடுபடமாட்டான். துறவி, எவரையும் ஒப்ப நோக்கி, எல்லோரையும் சேவிப்பதே தன் கடமையென்று கொள்ளும் இயல்பினையுடையவன். எவரையும் ஒப்ப நோக்க வேண்டுமென்று நமது வேதாந்த சாத்திரம் உணர்த்தவில்லையா? அப்படியாயின், ஏனையரினும் மனைவி மக்கள் உரியவர்கள் என்னும் எண்ணம் உன் உள்ளத்திலிருக்கக் காரணமென்ன? உன்னுடைய வாயிற் கடையிலே நாராயணனே ஓர் ஏழைப் பிச்சைக்காரன் உருவத்தோடு பசியினால் வருந்திச் சாகுந்தறுவாயிலிருக்க, அவனுக்கு ஒரு பிடி உணவுங் கொடாது உன் மனைவி மக்களுக்குச் சுவைமிக்க தின்பண்டங்களைக் கொடுத்தல் தகுதியாகுமா? ஏன்? இது விலங்கியல்பாயிற்றே!

சிஷ்: பிறர்க்கு உதவி புரிய ஏராளமான பொருள் வேண்டுமே! அதற்கு நான் எங்குப் போவேன்?

சுவா: ஏன்? இயன்ற அளவிற் செய்யலாகாதா? வறியவர்க்கு வழங்கப் பொருளில்லாவிடின், அவர்களுடைய செவியில் ஓர் இனிய மொழியுரைத்தல் கூடாதா? அறிவாகிய பொருளில் ஒரு சிறிது கொடுத்தல் கூடாதா? இதற்கும் பணம் வேண்டுமா?

சிஷ்: ஆம், சுவாமி, அப்படிச் செய்தல் கூடும்.

சுவா: "கூடும்" என்று வெற்று வார்த்தை சொல்வது போதாது. நீ செய்யக் கூடியது இதுவென்று செய்கையினாலே செய்து காட்டுவாயாயின், என்னிடம் வந்ததனாலே சிறிது நன்மை விளைந்ததென்பதை நான் உணர்ந்துகொள்ளுவேன். எழுந்திரு; கருமம் நிறைவேறுவதற்கு உதவியாகத் தோள் கொடுத்து நில். உயிர் எத்தனை நாளைக்கு நிலைபெறப்போகிறது? உலகிற் பிறவியெடுத்ததற்கு ஏற்ப ஓர் அறிகுறி விட்டுச் செல்ல வேண்டாவா? அல்லாவிடில், மரம், கல் முதலியவற்றுக்கும் உனக்குமுள்ள பேதந்தான் என்ன? அவையும் பிறந்து, அழிந்து மாய்கின்றன. அவற்றைப் போலப் பிறப்பதும் இறப்பதுமே தொழிலாயிருக்க விரும்பினால், அப்படிச் செய்துகொண்டிருக்கலாம். வேதாந்த உணர்வினால் வந்த மேலான பயனைச் செய்கையினாலன்றோ காட்ட வேண்டும்? "எல்லாரிடத்தும் அநாதியான சத்தி இருக்கிறதென்பதை எவர்க்கும் உணர்த்தி, அதனை எழுப்பிவிடப் பார்ப்போம்; நீ மாத்திரம் முத்தியடைந்து என்ன செய்வாய்? அது சுயநலங் கருதலாகுமன்றோ? தியானத்தையும் முத்தியையும் வீசியெறி. நான் எந்த முயற்சியைச் செய்து முடிக்க உன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறேனோ, அந்த முயற்சியில் உன் உள்ளத்தையும் உயிரையும் முற்றிலுஞ் செலுத்து.

இவ்வாறு சுவாமி மொழிந்த உயிர்க்குறுதி பயக்கும் மொழிகளைச் சிஷ்யர் அசைவற்று மூச்சு விடாது கேட்டுக்கொண்டிருக்க,

சுவாமிஜி சொல்வன்மையோடு உள்ளத்தைப் பிணிக்கும் உறுதி மொழிகளைப் பின்னும் பகரலாயினர்: ''முதற்கண் நிலத்தைப் பண் படுத்து. அதன் பின் அறநெறியைப்பற்றி உபந்நியாசஞ்செய்ய ஆயிரக்கணக்கான விவேகானந்தர்கள் பிறப்பார்கள். அதைப் பற்றி நீ கவலைப்பட வேண்டுவதில்லை. நான் அநாதைப் பிள்ளைகள் விடுதி, பஞ்சநீக்க முயற்சி முதலிய கைங்கரியங்களில் தலையிடுவ தைப் பார்க்கவில்லையா? ஆங்கிலக் கன்னிகையாகிய நிவேதிதை சகோதரி இந்தியர்களுக்கு அளவிறந்த அன்பினோடும் எவ்வளவு சேவை புரிந்து வருகிறாள்! இந்தியர்களாகிய நீங்கள் உங்கள் நாட் டிற்காகப் பாடுபடுதல் கூடாதா? எங்கேயாகிலும் கொள்ளை நோயா வது பஞ்சமாவது சம்பவிக்குமாயின், அங்குச் சென்று மக்களு டைய துன்பத்தை நீக்க முயல வேண்டும். எஞ்சிப் போனால் நன் முயற்சி செய்வதில் உயிரிழக்க வேண்டிவரும். அதனாலென்ன? உன்னைப்போல எத்தனை பேர் தினந்தோறும் புழுக்களைப் போல இறப்பதும் பிறப்பதுமாயிருக்கிறார்கள்? அதனால் உலகத்துக்கு வந்த ஏற்றத்தாழ்வென்ன? சாவே நிச்சயம். ஆதலால், மேலான நோக் கம் ஒன்றுக்காகச் சாவதன்றோ பெருமை? இந்த உண்மையை வீடு வீடாகச் சென்று உணர்த்துவாயாயின், உனக்கும் நன்மை யுண்டு; தேசத்துக்கும் நன்மை புரிபவனாவாய். இனி வருங்காலத் தில், தேசம் முன்னேற்றமடைவது உங்களைப் பொறுத்திருக்கின் றது. நீங்கள் எல்லாரும் முயற்சியின்றிச் சும்மாவிருப்பதைப் பார்க்க என் மனம் வருந்துகின்றது! முழு மூச்சாக வேலை செய் யுங்கள். தாமதியாதீர்கள். தினந்தோறும் மரணம் நெருங்கி வரு கின்றது. 'எல்லாம் தாமாக நடந்தேறிவிடும்,' என்று நினைத்துக் கொண்டு வாளா இருந்துவிடாதீர்கள். வாளா இருப்பதனால் ஒன்றும் நடந்தேறாதென்பதை மறந்துவிடாதீர்கள்.

(24)

[இடம்: கட்டட வேலை நடைபெறும் பேலூர்த் திருமடம். காலம்: 1898-ஆம் ஆண்டு.]

சிஷ்: அருட்செல்வராகிய அண்ணலீர், ஞான மார்க்கத்துக்கும் பத்தி மார்க்கத்துக்கும் எவ்வாறு ஒற்றுமை காணுதல் கூடும்? பத்தி மார்க்கத்திற்செல்வோர், சங்கராசாரியார் என்னும்பெயரைக் கேட்ட மாத்திரத்தே காதைப் பொத்திக்கொள்வதையும், ஞான மார்க்கத்திற்செல்வோர் பத்தர்கள் கண்ணீர் சொரிந்து இறைவ னுடைய நாமத்தைச் சொல்லி ஆடுவதும் பாடுவதும் கண்டு அவர் களை மூடரென்றும் முரடரென்றும் சொல்வதையும் நாம் காண் கின்றோமல்லவா?

சுவா: ஞான மார்க்கம், பத்தி மார்க்கம் ஆகிய இரண்டுக்கும்

இவ்வாறு வேற்றுமை தோன்றுவது ஆரம்பத்திலேதான். சிவபிரானுடைய பூத கணங்களுக்கும் இராமபிரானுடைய வானர கணங்களுக்கும் இடையில் நடந்த ஒரு சச்சரவைப் பற்றிய ஒரு கதையை* ஸ்ரீராமகிருஷ்ண பகவான் சொல்லக் கேட்டதில்லையா?

சிஷ்: ஆம், கேட்டிருக்கிறேன், சுவாமி.

சுவா: மேலான பத்திக்கும் மேலான ஞானத்துக்கும் வேற்றுமை இல்லை. கடவுளை அன்புருவமாகக் காண்டலே மேலான பத்தியாகும். இறைவனுடைய அன்பாகிய உருவத்தை எல்லாவிடத்தும் எல்லாப் பொருளிலும் காண்பவன் பிறர்க்குத் தீங்கிழைத்தல் எங்ஙனமாகும்? இந்த நிலையை அடைவதற்குக் காம காஞ்சனத்தின் (பெண் பொன்னின்) மேலுள்ள பற்று முற்றிலும் அகன்றுவிட வேண்டுமென்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லியிருக்கிறார். மேலான பத்தி நிலையில் ஒருவன் தனது உடலையுங்கூட மறந்து போகிறான். பரஞான நிலையில் ஒருவன் எப்பொருளையுந் தானாகக் காண்கிறான். நான் என்ற அகங்காரம் முற்றிலும் ஒழிந்தாலன்றி, இந்த நிலை கைகூடாது.

சிஷ்: அப்படியாயின், அன்பு நிலையே அறிவு நிலையாகின்றதன்றோ?

சுவா: ஆம், உண்மை ஞானமடைந்தவனுக்கன்றி ஏனையோருக்கு அன்பு நிலை கைகூடாது.

'பிரம்ம சொரூபம் சச்சிதானந்தம்', என வேதாந்த சாத்திரங்கள் கூறுகின்றனவன்றோ?

சிஷ்: ஆம், சுவாமி.

சுவா: 'சச்சிதாநந்தம்' என்னும் மொழிக்கு உண்மை-யறிவு-இன்பமென்பது பொருள். 'சத்' என்பது உண்மை, உளதாந்தன்மை 'சித்' என்பது அறிவு; 'ஆனந்தம்' என்பது இன்பம். பிரம்மம் 'சத்' என்பதைப்பற்றிப் பத்தர், ஞானியர் ஆகிய இருபாலருக்கும் கொள்கை வேற்றுமையில்லை. பின்னர் எஞ்சிய இரண்டனுள் ஞானிகள், 'சித்' உருவத்தைப் பாராட்டிக்கொள்கிறார்கள். பத்தர் 'ஆனந்த' உருவத்தைப்பாராட்டிக்கொள்கின்றனர். சித்தைக்கண்ட மாத்திரத்தே ஆனந்தமும் காணப்பட்டதாகின்றது. ஏனெனில், சித்தாவது ஆனந்த ரூபமாகிய அதுவே.

சிஷ்: அப்படியாயின், நம் பரதகண்டத்தில் மாறுபடுகொள்கையினரிருப்பதும், பத்தி மார்க்க நூல்களுக்கும் ஞானமார்க்க நூல்

---

* சிவபிரானுக்கும் இராமபிரானுக்குமிடையில் ஒரு சிறு சண்டை ஏற்பட்டது. "சிவபிரான் இராமபிரானுக்குக் குருவோ, அன்றேல் இராமபிரான் சிவபிரானுக்குக் குருவோ? என்ற வாக்குவாதமே சண்டைக்குக் காரணம். அவர்கள் சண்டையொழிந்து சீக்கிரத்திற் சிநேகிதராய்விட்டார்கள். சிவபிரானுடைய பூதகணங்களும் இராமபிரானுடைய வானரகணங்களுமோ, சண்டையை விடாமல், தொடர்பாகச் சச்சரவுப்பட்டுக் கொண்டேயிருந்தன.

களுக்குமிடையில் வேறுபாடு கண்டு சண்டையிட்டுக்கொள்வதும் எதனுலே ?

சுவா: உண்மையான ஞானத்தையும் உண்மையான பத்தியையும் அடைவதற்கு ஆரம்பத்திலே அனுஷ்டிக்க வேண்டிய முறைகளிருக்கின்றனவே, அவற்றுள்ளே வேற்றுமையுண்டு; அதனுலே தான் பூசல் நிகழ்கின்றது. ஆனுல், நன்முக ஆலோசித்துப் பார். கருவி பெரிதா, அன்றேல் காரியம் பெரிதா ? கருவியைவிட முடிபாகிய காரியமே பெரிதென்பதிற் சந்தேகமில்லை. குணத்தாலும் மனவலிமையாலும் மனிதருக்கிடையேவேற்றுமை இருக்கின்றபடியால், ஒரே காரியத்தைச் செய்து முடிக்கக் கருவியாகிய முறைகள் பல இருத்தல் கூடும். செபமாலை கைக்கொள்ளுதல், தியானித்தல், ஆலயந்தொழுதல், யாகம் புரிதல் இன்னும் இவை போன்றனவெல்லாம் முடிபல்ல; கருவிகளே; மேலான முடிபோ, பரபத்தியாகிய பிரம்மஞானத்தைஅடைவது.ஆழ்ந்துயோசித்துப்பார்ப்பாயாகில், இவர்கள் எதைப்பற்றிச் சண்டை போட்டுக்கொள்கிருர்கள் என்பது புலப்படும். ஒரு சாரார், ''கிழக்குத் திசையை நோக்கியிருந்து கடவுளைத் தியானிப்பின், அவரைக் கண்டடைவாய்,'' என்று கூற, மற்ெருரு சாரார், ''மேற்குத் திசையை நோக்கியிருந்து தியானித்தாலன்றி, அவரைக் காணுதல் கூடாது,'' என மறுப்பர். இவர்களுள், கிழக்குத்திசைக் கொள்கையாளரின் முன்னேரொருவர் பல ஆண்டுகளுக்கு முன்பு அத்திசை நோக்கியிருந்து தியானித்துக்கொண்டிருத்தல் கூடும். அவர் வழி வந்த மாணுக்கர் இதனைப் பரவச் செய்வாராய் மற்ெருரு வழியாலுங் காரியம் நடந்தேருதென்றுசொல்வாராயினுர். மேற்குத் திசைக் கொள்கையாளர் முற்பட்டு, ''அஃதெங்ஙனமாகும் ? இன்னுர் மேற்குத் திசை நோக்கியிருந்து தியானித்துக் கடவுளைக் கண்டார்; நாங்கள் கண்ணுற்கண்ட விஷயம் இது,'' என்பர். இவ்வாறு மாறுபடு கட்சியினர் பலர் உற்பத்தியாவர். 'ஹரி' என்னும் நாமத்தை உச்சரித்துப் பரபத்தியை அடைந்தவரொருவர் உளர். அவர் வாய்ச் சொல்லாக எழுந்த இச்சுலோகம் சாஸ்திரங்களிற் காணப்படுகிறது:

> **ஹரேர் நாம ஹரேர் நாம ஹரேர் நாமைவ கேவலம்**
> **கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ கதிரன்யதா.**
> 'அரியி னுமம் அரியி னுமம அரியி னுமம் அன்றியே
> வருக திக்குக் கலியில் வேறு வழிக ளில்லை யில்லையே.'

பின்னர் அல்லா என்னும் நாமத்தை உச்சரித்து மேனிலையை அடைந்தாரொருவர் என்று வைத்துக்கொள்ளுவோம். அவரது கொள்கையாகிய மதம் பரவத் தொடங்கும்; பிறவும் இவ்வாறே. இவ்வித வணக்கங்களாலும் சமயானுஷ்டானங்களாலும் பெறப்படும் பயன் எதுவெது என்பதை நாம் ஆராயவேண்டும்.இவற்ருலாவது சிரத்தை

பெறுவதே. நசிகேதனுடைய உள்ளத்திற் சிரத்தை உண்டாயிற் றென்று உபநிஷதம் கூறும். சிரத்தை என்னும் மொழியின் பொருளை ஆராயுங்கால், 'ஏகாக்கிரதா' என்னும் பதம் சிரத்தை என் பதை முற்றிலுங்குறிக்காது; 'ஏகாக்கிர நிஷ்டை' என்பது ஓரளவுக் குக் குறிக்கும். மனத்தை ஒரு வழிப்படுத்தி நிலைகுலையாது அன்போடு ஏதாவதோர் உண்மையைப் பற்றித் தியானம் செய்வாயாயின், அந் தத் தியானமானது ஏகமாம் சச்சிதானந்தமாய் நின்ற நிலையை நோக்கிப் படிப்படியாக ஈர்த்துச் செல்வதைக் காண்பாய். ஆதலின் இவ்வாறாகியநிஷ்டைகளுள் ஒன்றைக்கைக்கொள்ளவேண்டுமென்று ஞானமார்க்க பத்திமார்க்க நூல்கள் அறிவுறுத்துகின்றன. காலாந் தரத்தில் இவ்வுண்மைகள் உருவம் மாறுபட்டுத் தேசாசாரங்களா கின்றன. இது பரதகண்டத்தில் மாத்திரமன்றி, உலகிலுள்ள மக்கட் சமூகங்கள் அனைத்திலும் நேரிட்டிருக்கின்றது. சாதாரண மக்கள் விவேகமின்மையினால் இவ்வேறுபாடுகளை மேற்கொண்டு சண்டை யிடலாயினார்கள். அவர்கள் முடிபையறியார்கள்; இதனால் மதபேத முண்டாயிற்று. சண்டையுஞ் சச்சரவும் நடந்துகொண்டேயிருக் கின்றன.

சிஷ்: அப்படியாயின், உய்யும் வழிதான் எது, சுவாமி?

சுவா: முன்னாளிலிருந்த உண்மைச் சிரத்தையைத் திரும்பக் கொண்டுவருதல் வேண்டும். களைகளை வேரோடு களைய வேண்டும். பல சமயங்களிலும் பல மார்க்கங்களிலும் காலதேச எல்லை கடந்த உண்மைகள் சிலவுள; அவற்றை மூடி உளுத்த சரக்குகளாம் கொள்கைகள் பல நிறைவு பெற்றிருக்கின்றன; இக்கொள்கைகளை யொழித்து, நித்தியமான உண்மைகளை மக்களுக்குக்காட்டுதல் வேண்டும். அங்ஙனஞ்செய்யின், நமது சமயமும் நமது நாடும் மிகுந்த நன்மையை அடையும்.

சிஷ்: இதனை எவ்வாறு செய்து முடிக்கலாம்?

சுவா: ஏன்? எல்லாவற்றுக்கும் முதலிலே பெரியோர் வழி பாட்டைக் கொண்டுவருதல் வேண்டும். அழியா உண்மைகளை அனு பவத்திற் கண்டுணர்ந்த மகா புருஷர்களுடைய சரிதங்களை மக்களுக் குத்தெரிவித்து, அவர்களைப் பின்பற்றியொழுக வேண்டுமென்பதை உணர்த்த வேண்டும். ஸ்ரீராமசந்திரர், ஸ்ரீகிருஷ்ணர், மகா வீரர், ஸ்ரீராமகிருஷ்ணர் இன்னோரன்னோரே இத்தேயத்திற்குரிய மகா புருஷராவார். இந்நாட்டில் ஸ்ரீராமசந்திரர், மகா வீரர் இவர்களு டைய வழிபாட்டைக் கொண்டுவர முயல்வாயா? ஸ்ரீகிருஷ்ணரை வழிபடுமிடத்து, பிருந்தாவன லீலா நிலையைப் புறக்கணித்துவிட்டு, சிங்கமுழக்கத்தோடு கீதையை உபதேசித்த நிலையைக் கைக்கொண்டு வழிபடுதல் வேண்டும். இனி, எல்லா வல்லமைக்கும் முதலாயிருக்கும் ஜகன்மாதாவாகிய சத்தியைத் தினந்தோறும் வழிபடுகிற வழக்கத் தைக் கொண்டுவருதல் வேண்டும்.

சிஷ்: அப்படியாயின், ஸ்ரீகிருஷ்ணர் பிருந்தாவனத்தில் கோபிகளோடு புரிந்த தெய்வ லீலை நல்லதன்றா ?

சுவா: இக்காலத்திலிருக்கிற நிலையில் அந்த வழிபாடு உனக்கு ஒரு பயனையுந் தாராது; வேய்ங்குழலிசை முதலியன தேசத்தை மேலோங்கச் செய்யமாட்டா. உள்ளங்காலிலிருந்து உச்சி வரையில் ரஜோ குணம் நிறைந்த வீரன்—சத்தியத்தை நிலை நிறுத்துவதற்காகத் தன்னுயிரையும் விடவல்ல வீரன்—துறவாகிய கவசத்தோடு ஞானமாகிய வாளை ஏந்திய வீரன்—ஆகிய இத்தகைய வீரனுடைய நிலையே இப்பொழுது வேண்டப்படுவது. வாழ்க்கையாம் போர்க்களத்தில் அஞ்சாது எதிர்த்து நின்று போர்புரிகிற வீரர்களாவோம் வாழ்க்கையை இன்பம் துய்க்கிற பூஞ்சோலை என்றெண்ணி, காதல் மேற்கொண்டு உருகுங் காதலன் நிலையை விரும்போம்.

சிஷ்: அப்படியாயின், கோபிகள் கைக்கொண்ட மதுரநிலை குற்றமுடையதா ?

சுவா: நான் அப்படிச் சொல்லவில்லை. அது மிகவும் மேலான சாதனையே; ஆயினும் புலனுகர்ச்சியிலும் பொருள் குவிப்பதிலும் ஈடுபட்டுத் திரிகிற இக்காலத்தில் அம்மேலான நிலையை உணர வல்லவர் ஒரு சிலரேயாவர்.

சிஷ்: அப்படியாயின், இறைவனை நாயகனாகக்கொள்ளும் மதுர பாவனைக் கொள்கையினர் செல்லும் மார்க்கம் சரியானதன்றோ ?

சுவா: ''அன்று'' என்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். அவர்களுட் சிலர் தக்கவராயிருத்தல் கூடும். ஆனால், பெரும்பாலார் தாமச குணத்தினர்; சோம்பல் நிறைந்து பலமற்றிருப்பவர். இத்தேசத்தை எழுப்புதல் வேண்டும். மகா வீரருடைய வழிபாட்டைக் கொண்டாடி வருதல் வேண்டும்; சத்தி பூஜை நித்தியானுஷ்டானத்துக்கு வரவேண்டும்; ஸ்ரீராமசந்திரரை ஒவ்வொரு வீட்டிலும் வழிபட வேண்டும். இதுவே நன்மையடையும் மார்க்கம்; நாட்டு நன்மைக்கு உகந்த வழியிதுவே; பிறிதொன்றில்லை.

சிஷ்: பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் இறைவனது நாமத்தைப் பல முறையும் பாடிக்கொண்டிருப்பார் என்பதைக் கேள்விப்பட்டேனே !

சுவா: ஆம், அவருடைய விஷயம் வேறு. அவருக்கும் சாதாரண மனிதருக்கும் ஒப்புமை உண்டா ? எல்லாம் ஒரே முடிவுக்கு வருவன என்பதைக் காட்டுவதற்காக அவர் பல கொள்கைகளைச் சாதனை பண்ணிக் காட்டியிருக்கிறார். நீ அல்லது நான் அவர் செய்த செயல்களெல்லாவற்றையுஞ்செய்தல் கூடுமா ? எங்களுள் ஒருவரும் முற்றிலும் உணர்ந்துகொள்ளவில்லை. ஆதலினாலேதான் நான் அவருடைய மகிமைகளை எடுத்துரைக்க முன் வருவதில்லை. அவர் உண்மையில் என்னவாய் இருந்தார் என்பதை அவரே அறிவார்;

அவரது உடல் மனித உடலே; ஆனால், ஏனைய குணங்களெல்லாம் வேறுபாடாகவே தோன்றின.

சிஷ்: சுவாமி, நீங்கள் அவரை ஓர் அவதார புருஷரென நம்புகிறீர்களா?

சுவா: முதற்கண், அவதார புருஷர் என்பதனால் நீ அறிந்து கொள்வதென்ன என்பதைச்சொல்.

சிஷ்: ஸ்ரீராமசந்திரர், ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீகௌரங்கர், புத்தர், இயேசுநாதர் இன்னோரன்னோரே அவதார புருஷர் என்று எண்ணுகிறேன்.

சுவா: நீ குறிப்பிட்டுச் சொன்ன இவர் அனைவரினும் ஸ்ரீராமகிருஷ்ணர் உயர்ந்தவர் என்பதை நான் அறிவேன். வாளா நம்புவது பெரிதன்று—நிச்சயமாக அறிவேன். (சற்றுத் தாமதித்துப் பின்பு சுவாமி சொல்லுவாராயினர்:) தருமத்தின் நிலை நிறுத்தும் பொருட்டுக் காலத்துக்குஞ் சமுதாய நிலைக்குந் தக்கபடி மகா புருஷர்கள் தோன்றுவார்கள். இவர்களை மகா புருஷர்களென்றாவது அவதார புருஷர்களென்றாவது சொல்லலாம். இவர்கள் தங்கள் தூய வாழ்க்கையால் உயர்வான நிலையை உணர்த்துவார்கள். இவர்களைப் பின்பற்றிப் பல வகையான உயர்குணங்களையுடைய ஆண் மக்கள் தோன்றுவார்கள். மத பேதங்களுண்டாகிப் பரவும் காலாந்தரத்தில் இவை மாசுற, வேறு மகா புருஷர்கள் தோன்றுவார்கள். இப்படி ஆற்றோட்டம் போலக் காலந்தோறும் நடந்துகொண்டிருப்பது இயல்பு.

சிஷ்: நீங்கள் ஸ்ரீராமகிருஷ்ணர் ஓர் அவதார புருஷர் என்பதை உலகுக்கு ஏன் வெளியிட்டுப் பிரசங்கிப்பதில்லை? அதற்கு வேண்டிய சத்தியும் வாக்கு வல்லமையும் உங்களிடமிருக்கின்றனவே!

சுவா: மெய்தான்; ஆயினும், உண்மையை உரைக்குமிடத்து, நான் அவருடைய பெருமையில் ஒரு சிறிதே உணர்வேன். அவரைப்பற்றிப் பேசப் புகுமிடத்து நான் அறிந்த அளவில் அவரைப் புகழ்ந்து, எல்லையில்லாத அவருடைய பெருமைக்குக் குறைபாடு செய்துவிடுவேனோ என்று அஞ்சுகிறேன்!

சிஷ்: பலர் அவர் அவதார புருஷர் எனச் சாற்றுகின்றனரே!

சுவா: அப்படிச் செய்பவர்கள் தாங்களுணர்ந்த வரையில் செய்யட்டும். நீயும் அவரை உணர்ந்திருந்தால், அப்படிச் செய்யலாம்!

சிஷ்: நான் உங்கள் பெருமையை அறிய வல்லேனல்லேன். ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி என்ன பேசுவேன்? உங்கள் அருளைச் சிறிது பெற்றால் நான் எடுத்த இந்தப் பிறவி சாபல்யமாயிற்றென்று எண்ணுவேன்.

(25)

[இடம்: கட்டட வேலை நடைபெறும் பேலூர்த் திருமடம். காலம்: 1898-ஆம் ஆண்டு.]

சிஷ்: சுவாமிஜி, ஏகமாகிய பிரம்மமே உண்மைப் பொருள் ஆமாயின், பிரபஞ்சத்தில் இத்தனை பேதங்களிருப்பது ஏனோ?

சுவா: தோற்றப் பொருளாகிய பிரபஞ்சத்தினை நிலைக்களமாகக்கொண்டு நீ வினவை வினவுகிறாயன்றோ? மாயா சொரூப பிரபஞ்சத் தோற்றத்திலிருந்து, விவேகத்தினாலும் விசாரணையினாலும் அத்வைத நிலையை அடைதல் கூடும். இப்பொழுதே அத்வைத நிலையில் நிலைப்பெற்றிருப்பாயானால், பேதக்காட்சி உனக்கு எங்ஙனம் தோற்றும்?

சிஷ்: உண்மையே, நான் அத்வைதத்தில் நிலைபெற்றிருந்தால், 'ஏன்' என்னும் வினா என்னிடத்தில் யாங்ஙனம் பிறக்கும்? நான் இவ்வினாவை வினவுகிறபடியால், பேதக்காட்சி உடையேன் என்பது பெறப்படுகின்றது.

சுவா: மிக நன்று; பேதக்காட்சியோடு கூடிய பிரபஞ்சத் தோற்றம் வழியாக ஒன்றுந்தன்மையை விசாரிப்பது சாத்திரங்களிலே 'வியதிரேக முறையாகிய நியாயம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இல்லாததொன்றினை உள்ளதெனக்கொண்டு தருக்க முறையினாலே அப்பொருள் இல்லாததேயென நிரூபிப்பது இம்முறையாகும். உண்மையல்லாததை உண்மையெனக் கொண்டு பின்பு உண்மையைப் பெறும் முறையைப்பற்றி நீ பேசுகின்றாயல்லவா?

சிஷ்: என்னுடைய மனத்திற்குக் காணப்படுகின்ற இப்பிரபஞ்சமே உண்மை எனப் புலப்படுகின்றது. இதற்கு வேறானது இல்பொருளேயென எண்ணுகிறேன்.

சுவா: 'ஒன்றே உள்ளது; இரண்டாவது இல்லை,' எனச் சுருதி கூறுகின்றதே! என்றுமுள்ள ஒரு பொருளாகிய பிரம்மம் மாத்திரமே உண்மைப் பொருளாயிருந்தால், உன்னுடைய பேதக் காட்சி பொய்யாகுமல்லவா? சுருதிவாக்கியத்தில் உனக்கு நம்பிக்கை உண்டென்று எண்ணுகிறேன்.

சிஷ்: ஆம்; என்னளவில் வேதத்தை மிக மேலான பிரமாணமாகக் கொள்ளுகிறேன். அங்ஙனமாயினும், வாதிக்குமிடத்து ஒருவன் வேதப்பிரமாணத்தைக் கொள்ளானாயின், வேறு வழியால் அவனுக்கு அறிவுறுத்த வேண்டுவது அவசியமாகின்றதே!

சுவா: ஆம்; அங்ஙனம் செய்தல் கூடும். நீ இப்பொழுது சொல்லுகிற பேதக்காட்சி முற்றிலும் மறைந்துவிடுகின்ற ஒரு நிலை உண்டு. அந்த நிலையை நான் என்னுடைய வாழ்க்கையில் அனுபவித்து அறிந்திருக்கிறேன்.

சிஷ்: எப்பொழுது அது நிகழ்ந்தது?

சுவா: தக்ஷிணேசுவரத்திலே, கோவில் நந்தவனத்திலே, ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு நாள்என்னுடையஇதயத்தைத் தொட்டார். உடனே மனைகளும், கதவுகளும், பலகணிகளும், மாடங்களும், மரங்களும், சூரிய சந்திரரும் துகளாய் அணுவணுவாகிப் பிரிந்து போவதையும், அவையெல்லாம் ஆகாசத்திலே ஈற்றில் அமிழ்ந்து விடுவதையும் கண்டேன். அதன் பின் ஆகாசமும் மறைந்துவிட்டது. அதனோடு 'நான்' என்னும் எண்ணமும் மறைந்துவிட்டது; அதன்மேல் யாது நடந்ததென்பது எனக்கு நினைவில்லை. முதலில் நான் அச்சமுற்றேன். அந்த நிலையிலிருந்து மீளுதலும், மனை, கதவு, பலகணி, மாடம் முதலிய பொருள்களெல்லாம் ஒவ்வொன்றுகத் தோன்றத் தொடங்கின. மற்றொரு முறை அமெரிக்காவில் ஒரு குளக்கரையிலே இவ்வகை அனுபவம் நிகழ்ந்தது.

இதனைக் கேட்ட சிஷ்யர் வியப்புற்று, மேலும் வினவலானுர்:

"இத்தகைய நிலை மூளையின் நரம்புகள் கலக்கமுற்றிருப்பதனுல் வந்தெய்த மாட்டாதா? மேலும், இந்நிலையை அடைவதனுல் எய்துதற்குரிய ஆனந்தம் எதுவென்பது எனக்கு விளங்கவில்லை.

சுவா: மூளையின் கலக்கமா? அது நோயிலிருந்து எழுகின்ற பிதற்றல் நிலையன்று; குடிவெறியினுலெய்திய மாருட்ட நிலையுமன்று; பல்வேறு வகையான சுவாசாப்பியாசங்களால் வருகின்ற மயக்கத் தோற்றமுமன்று. சுகமும், அறிவும் பூரணமாக நிறையப் பெற்றிருக்கின்ற மனிதனுலே அந்நிலை அடையப்படுகின்றது. முன்னுளிலிருந்த ஆசாரியர்களும், ரிஷிகளும் அனுபூதியாற் கண்டறிந்த முடிபுகளோடு அது ஒத்திருக்கின்றது.

"இனிப் பிற காரணங்கள் ஒரு பக்கமிருக்க, என்னை அறிவு தடுமாற்றமுற்ற மனிதனென்று எண்ணுகிருயோ?" எனச் சுவாமி புன்முறுவலோடு வினவினுர்.

சிஷ்: இல்லை இல்லை. நான் அவ்வண்ணம் கருதவில்லை. சாத்திரங்களிலே அத்துவித அனுபவத்தைப் பற்றிய உதாரணங்கள் நூற்றுக்கணக்காய் இருக்கின்றன. அவை மாத்திரமன்றித் தேவரீருடைய சொந்த அனுபவமும் சுருதி மொழியோடும் சாத்திரங்களோடும் ஒத்திருக்கிறது. அப்படியிருக்க, அது பொய்யென்று நானெப்படித் துணிந்து கூறுதல் கூடும்? ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகளும் அந்த நிலையை அனுபவத்திலடைந்து, 'பிரபஞ்சம் எங்கோ மறைந்துவிட்டது!' என்று இத்தகைய வாக்கியங்களைக் கூறினுர்.

சுவா: சாத்திரங்களிற் சொல்லப்பட்டிருப்பதும் அச்சத்தை நீக்கிப் பிறப்பிறப்பென்னும் கட்டினை முற்றிலும் உடைத்துவிடுவதுமாகிய பிரம்ம சாக்ஷாத்காரம் இந்த ஒருமை அனுபவ அறிவேயென அறிந்துகொள்வாயாக. இந்தப் பேரானந்தத்தை ஒரு முறையாவது உணர்ந்தவர் இவ்வுலகத்தின் இன்ப துன்பங்களினுலே ஒரு பொழு

தும் அல்லலுறுவதில்லை. கீழான காம காஞ்சனங் (பெண்ணாசை பொன்னாசை)களிலே பந்தமுற்ற மனிதர்கள் இந்தப் பிரம்மானந்தத்தை அனுபவிக்கமாட்டார்கள்.

சிஷ்: நாங்கள் பரப்பிரம்மப் பொருளோடு ஒன்றுந் தன்மையராயின், அந்த அனுபவத்தை அடையாது, வீணே பயனற்ற காம காஞ்சனமென்னும் வலையிற்சிக்குண்டு, மீட்டுமீட்டும் மரணத்தின் வாயிற்படுவதேனோ ?

சுவா: மனிதன் அத்தகைய ஆனந்தத்தை இச்சிக்கவில்லை என்பது போலப் பேசுகிறாய். ஆழ்ந்து ஆலோசித்துப் பார்ப்பாயாயின், யாவர் எதனைச் செய்கின்றாரோ, அது அப்பரமானந்தத்தை அடையும் நோக்கமாகவே அவரால் செய்யப்படுகின்றது. ஆனால், அவர் அதனை உள்ளவாறு உணர்வதில்லை; ஆதலினால், உண்மையைத் தெரிந்துகொள்வதில்லை. பிரம்மா முதலாகப் புல்லிதழ் இறுதியாக எல்லாரிடத்திலும் அந்தப் பரம சுகமானது பூரணமாக நிலைபெற்றிருக்கிறது. நீயும் வேறுபாடற்ற அந்தப் பிரம்மமேயாவாய். உண்மையிலே நீ அதுவே என்பதாக நினைப்பாயாகில், இந்தக் கணமே நீ அந்தப் பேரானந்த நிலையை அடைவாய். பிரத்தியட்சக் காட்சியில்லாமையினாலே குறைவு நேர்கிறது. நீ உத்தியோகம் பார்ப்பதும், உன்னுடைய மனைவியின்பொருட்டுக் கஷ்டப்பட்டு உழைப்பதும், அந்தப் பரம சுகமாகிய பரமானந்தத்தை அடைவதே உன்னோக்கமென்பதைக் காட்டுகின்றன. மீட்டும் மீட்டும் மாயையின் வலையினுட்சிக்கியும், துன்பத்தினாலும் மிடியினாலும் இடர்ப்பட்டும் அலைவுற்றவன் ஒருவன், உள் நோக்கித் தன் உண்மை நிலையை அறிய முயலுவான். இதயத்திலே இந்தப் பரம சுகானந்தம் அமைந்திருக்கிறபடியினாற்றான் மனிதன் ஒன்றன் பின் ஒன்றாக இடருற்ற போது உள்நிறைந்த தனது ஆன்மாவை நோக்குகிறான். ஒவ்வொருவருக்கும் இவ்வண்ணம் நோக்குகிற காலம் வரும். இது சிலருக்கு இப்பிறவியில் வரும்; வேறு சிலருக்கு ஆயிரம் பிறவிகளுக்குப் பின் வரும்.

சிஷ்: குருவினுடைய ஆசீர்வாதத்திலும் ஆண்டவனுடைய அருளிலும் அது தங்கியிருக்கிறது.

சுவா: ஆண்டவனுடைய பேரருளாகிய காற்றானது இடைவிடாமல் வீசிக்கொண்டிருக்கிறது. நீ உன் பாயை விரிப்பாயாக. (பாய் விரிக்கப்பட்ட கப்பலே, அடிக்கும் காற்றினாற் பயன்பெறும் என்பது பற்றி) எத்தொழிலைச் செய்யும்போதும் சிந்தை முழுவதையும் ஒரு வழிப்படுத்தி அத்தொழிலின்மீது கவனம் செலுத்துவாயாக. "நான் சச்சிதானந்த ரூபமாகிய பரம்பொருளோடு ஒன்றுபட்டவன். எனக்கு அச்சமெங்கே, கவலையெங்கே ? இந்த உடலும் மனமும் புத்தியும் அழிந்து போகும் தன்மையன. இவற்

றுக்கெல்லாம் அப்பாலாகி இருக்கின்றவன் நான்,'' என்று இரவு பகல் சிந்திப்பாயாக.

சிஷ்: இப்படிப்பட்ட எண்ணங்கள் எப்போதாவது ஒரு முறை தோற்றுகின்றன. ஆனால், அவை விரைவில் மறைந்துவிடுகின்றன. அதன் பின் மனமானது பலவகைப்பட்ட பயனற்ற காரியங்களைச் சிந்திக்கின்றது.

சுவா: ஆம், ஆரம்பத்தில் அப்படித்தானிருக்கும். ஆனால், வரவர உயர்நிலையை அடையலாம். ஆயினும், முதலிலிருந்து மனத்திலே நிறைந்த ஆர்வமிருக்கவேண்டும். ''நான் என்றும் பரிசுத்தன்; எல்லாம் அறிபவன்; என்றும் பந்தங்களிலிருந்து விடுபட்டவன். இங்கான காரியங்களை நான் எப்படிச் செய்தல் கூடும்? சாதாரண மனிதர்களைப்போல அற்பமான காம காஞ்சனங்களினால் நான் மயக்கப்படுவேனோ?'' என்று இத்தகைய எண்ணங்களினாலே மனத்தை வலிமைப்படுத்துவாயாக. இதனால் உண்மையாகிய நன்மை வந்தெய்தும்.

சிஷ்: ஒவ்வொரு வேளையில் மனவலிமை வருகிறது. என்றாலும், அதன் பின்னர் நீதிபதி உத்தியோகத்துக்குரிய பரீக்ஷைக்குச் செல்லுவேனென்றும், அதன்பின்னர்ச் செல்வத்தோடும் பேரோடும் புகழோடும் மகிழ்ச்சியுடன் வாழ்வேன் என்றும் எண்ணுகிறேன்.

சுவா: இத்தகைய எண்ணங்கள் மனத்தில் வந்தால், விவேகத்தினாலே நித்தியப் பொருளிதுவென்றும், அநித்தியப் பொருளிதுவென்றும் உன்னுள்ளே ஆராய்ந்து பார். நீ வேதாந்த சாத்திரத்தைப் பயிலவில்லையா? நீ நித்திரை செய்யும் பொழுதும் விவேகம் என்னும் வாளை உனது தலையணைக்குச் சமீபத்தில் வைத்துக்கொள். கனவிலும் இச்சை வந்து எய்திவிடக்கூடாது. அத்தகைய வன்மையான எண்ணங்களை அப்பியசித்தால், படிப்படியாகத் துறவு வந்தெய்தும். அப்பொழுது பேரின்பவீட்டின் வாயில்கள் உனக்குத் திறக்கப்படுவனவாகும்.

சிஷ்: அப்படியாயின், சுவாமிஜி, பத்தியைப்பற்றிக் கூறும் வாக்கியங்கள், அளவுகடந்த துறவினாலே இரக்கத்தோடு கூடிய உணர்ச்சிகள் அழிந்துவிடுகின்றனவென்று கூறுகின்றனவே?

சுவா: இப்படிப்பட்ட எண்ணங்களை வெளிப்படுத்துகிற வாக்கியங்களை அகற்றிவிடுவாயாக. புலனுகர்ச்சிப் பொருள்களின் மேல் அருவருப்புண்டாகி வெறுக்கப்பட வேண்டிய காம காஞ்சனங்களை அறவே விட்டொழித்துத் துறவு நிலையில் நின்றாலன்றி, நூறு பிரம்ம கற்பங்களிலும் மோட்சத்தை அடைதல் இயலாது என்பதை அறிந்துகொள்வாயாக. ஆண்டவனுடைய திருநாமத்தைச் சிந்திப்பதும், தியானத்திலிருப்பதும், பூசை செய்வதும், ஓமாக்கினியிலே ஆகுதி செய்வதும், அரிய தவங்களைச் செய்வதும் உண்மை

யாகிய தியாக நிலையை அடையும்பொருட்டேயாம். தியாக நிலையை அடையாதவன், மோக்ஷத்தைப் பெற முயலுவது, நங்கூரம் போடப்பட்டிருக்கிற ஓடத்தின் மீதிருந்து தண்டுகளை வலிப்பவனுடைய செயலுக்கு நிகராகும். மக்கட்பேற்ருலன்றி, செல்வத்திஞலன்றி, தியாகத்திஞல் மாத்திரமே ஒரு சிலர் அழியா இன்பத்தையடைந்தனர்.

சிஷ்: தேவரீர் அப்படிக் கூறுவீராயின், எங்கள் கதி அதோ கதிதான்!

சுவா: நீ எதற்கு அஞ்சுகிருய்? அச்சமற்றிரு! அச்சமற்றிரு! அச்சமற்றிரு! நாகமஹாசயரைக் கண்டதில்லையா? இல்லற வாழ்க்கையிலிருக்கும் பொழுதே அவர் சந்நியாசியினும் மேற்பட்டிருக்கவில்லையா? இது மிக அபூர்வம். அவரைப்போன்றவர்களைக் காண்பதரிது. யாரேனும் ஒருவன் இல்லறவாழ்க்கையில் இருக்க விரும்பிஞுயின், நாகமஹாசயரைப் போல இருப்பாஞக. கிழக்கு வங்காளத்தின் ஆன்மிக விண்ணில் அவர் ஒளி விரிக்கும் சூரியன் போல விளங்குகிருர். அந்தப் பாகங்களிலுள்ளவர்களுக்கு அவரைத் தரிசிக்கும்படி சொல்வாயாக. அதஞல் அவர்களுக்குப் பெரு நன்மை உண்டாகும்.

சிஷ்: ஸ்ரீராமகிருஷ்ண பகவானுடைய பூலோக தெய்வ நாடகத்தில் நாகமஹாசயர் பணிவே உருவாய் விளங்குகிருரென்று எனக்குத் தோற்றுகிறது.

சுவா: ஆம்; அதிற்சந்தேகமில்லை! அவரை ஒரு முறை போய்ப் பார்க்கவேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன். நீ என்ஞேடு வருகின்ருயா? மாரிகாலத்திலே வயல்களிலே நீர் நிறைந்து வெள்ளம் பரவியிருப்பதைப் பார்க்க நான் விரும்புகிறேன். நீ அவருக்குக் கடிதம் எழுதுகிருயா?

சிஷ்: நான் கட்டாயம் எழுதுகிறேன். தேவரீரைப்பற்றிக் கேள்விப்படும் பொழுது அவர் எல்லையற்ற ஆனந்தத்திஞலே உன்மத்தராகின்ருர்; தேவரீருடைய திருப்பாதத்தில் படிந்த துகள் படிவதஞலே, கிழக்கு வங்காளம் புனிதத்தலமாகும் என்று அவர் கூறுகிருர்.

சுவா: ஸ்ரீராமகிருஷ்ணதேவர் 'நாகமஹாசயர் ஒளி வீசுகின்ற அக்கினி,' என்று கூறியதை நீ அறிவாயா?

சிஷ்: ஆம்; கேள்விப்பட்டிருக்கிறேன்.

பின்பு சுவாமிஜியின் கட்டளைப்படி சிஷ்யர் பிரசாதம் உண்டு மாலைக்காலத்தில் கல்கத்தாவுக்குத் திரும்பிச் சென்ருர். போகும் பொழுது அருட்குரவருடைய திருவாயினின்றும் தமது செவியில் விழுந்த ''நான் பந்தமற்றவன்'', ''நான் பந்தமற்றவன்'', என்னும் அஞ்சாமை உபதேசத்தைச் சிந்தித்த வண்ணமே வழிச் சென்ருர்.

(26)

[இடம்: கட்டடவேலை நடைபெறும் பேலூர்த் திருமடம். காலம்: 1898-ஆம் ஆண்டு.]

சிஷ்: சுவாமி, காமகாஞ்சனம் ஆகிய பெண்ணாசை பொன்னாசை இரண்டையும் அகற்றினாலன்றி, சாதகன் உண்மை அனுபவத்தை அடையும் மார்க்கத்திற் சிறிதும் முன்னேற்றமடையான் என்று ஸ்ரீராமகிருஷ்ண பகவான் சொல்லியிருக்கின்றாரே! அங்ஙனமாயின், இல்லறத்தானுடைய கதி என்னாகும்? அவனுடைய முழு மனமும் இவ்விரண்டையும் பற்றியிருக்கின்றதன்றோ?

சுவா: ஒருவன், இல்லறத்தானாயினுஞ் சரி, சந்நியாசியாயினுஞ் சரி, பொன்னாசை பெண்ணாசையாகிய இரண்டினையுங் களைந்திலனேல், அவனுடைய உள்ளம் கடவுள்பாற் செல்லாதென்பது உண்மையே. மனம் இவற்றிற் சிக்குண்டிருப்பின், உண்மைப் பத்தியும், மனத்திடமும், சிரத்தையும் ஒரு போதும் உண்டாக மாட்டா என்பதை உண்மையாக அறிந்துகொள்க.

சிஷ்: அப்படியாயின், இல்லறத்தார் என்னாவர்? அவர்கள் போகும் வழியென்ன?

சுவா: அற்ப ஆசைகளை அனுபவித்துத் தீர்த்தலும், சற்றுப் பெரியனவாயிருப்பனவற்றை விவேகத்தினாற் களைதலுமே வழியாகும். துறவின்றிக் கடவுளை அடைய முடியாது. "**யதி பிரஹ்மா ஸ்வயம் வதேத்**—பிரம்ம தேவனே வேறு விதமாக விதிப்பானாயினும்."

சிஷ்: ஆனால், ஒருவன் சந்நியாசியானவுடனே அவனுக்கு எப்பொருளையுந் துறக்கின்ற துறவு வந்துவிடுகிறதா?

சுவா: சந்நியாசிகள் உண்மைத் துறவை அடைய முயல்கின்றார்கள். இல்லறத்தாரோ, நங்கூரம் போட்டிருக்கிற தோணியை வலித்துக்கொண்டிருக்கும் ஓடக்காரரை ஒத்திருக்கின்றனர். புலனுகர்ச்சியில் விருப்பம் எப்போதாவது குறைகிறதா? "**பூய ஏவாபி வர்த்ததே**—அது வரவரக் கூடுகிறது."

சிஷ்: நெடுங்காலம் புலனுகர்ச்சி செய்த பின்னர் உலக இன்பத்தில் வெறுப்புத் தோன்றாதா?

சுவா: எத்தனை பேருக்கு அப்படி உண்டாகின்றது? புலனுகர்ச்சியில் பொருள்களோடு இடைவிடாது சம்பந்தப்பட்டிருப்பதனால், மனம் அழுக்கடைந்து, அவற்றில் நிலைபெற்ற தன்மையதாய் விடுகிறது. துறவே பிரதானம்; துறவே பரம ரகசியம்; துறவே உண்மை அனுபவத்தை அடைவதற்கு மூலமந்திரம்.

சிஷ்: ஆயினும், "**க்ருகேஷு பஞ்சேந்த்ரிய நிக்ரகஸ்தப:**—மனைவி மக்களோடு இருக்கும்பொழுது பஞ்சேந்திரியங்களை அடக்குவதே தபசு," என்றும், "**நிவ்ருத்த ராகஸ்ய க்ருகம்**

தபோவனம்—இச்சையை அடக்கினவனுக்கு இல்லமே தபோ வனம்,'' என்றும் அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்களே ?

சுவா: தங்களுடைய வீட்டிற் குடும்ப சமேதராயிருந்து கொண்டு காமகாஞ்சனத்தைத் துறக்கிறவர்கள் மகான்களே. ஆனால், அப்படிச் செய்யத்தக்கவர்கள் எத்தனை பேரிருக்கிறார்கள் ?

சிஷ்: ஆனால், சந்நியாசி ஆவாரெல்லாம் காமகாஞ்சனத்தை முற்றிலுந் துறக்கத்தக்கவரா ?

சுவா: நான் சற்று முன்பு சொன்னது போலச் சந்நியாசி யாவார் தாம் அடைய வேண்டிய இலக்கு இதுவென்றறிந்து அதைத் தேடும் துறையில் இறங்கியிருக்கின்றனர். இல்லறத்தாரோ, இவ் விரண்டு ஆசையினாலும் வருகிற தீமையை உணராதாராய் ஆன்ம ஞானத்தை அடைய முயற்சி செய்யாதவராய், ஞானத்தை அடை யப் பொன்னாசையையும் பெண்ணாசையையும் களைய வேண்டும் என்னும் எண்ணமும் இல்லாதவராயிருக்கின்றனர்.

சிஷ்: ஏன், சுவாமி, எத்தனையோ இல்லறத்தார் ஞானத்தை அடைய முயல்கின்றனரே ?

சுவா: ஆம்; அப்படிச் செய்பவர்கள் நாளடைவில் துறவு நிலையைக் கைக்கொள்ளுவார்கள். காமகாஞ்சனத்திலுள்ள பற்று அவர்களுக்கு வரவரக் குறைந்து போம். ''அவசரமென்ன ? உரிய காலத்தில் தானே வரும்,'' என்று பின்வாங்குபவர்களுக்கும் ஆன்ம ஞானத்துக்கும் நெடுந்தூரம். ''இந்த வாழ்விலே இந்த நிமிஷமே உண்மையை உணர்வேன்,'' என்பவனே தீரன். அப்படிப்பட்ட வீரன் அடுத்த நிமிஷமே துறவு கைக்கொள்ள ஆயத்தமாய் இருக் கிறான். அவனைப் பற்றியே **யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ர** ஜேத்—எப்பொழுது உலகத்துப் பொருள்களில் வெறுப்புத் தோன் றுகிறதோ, அந்தக்கணமே அவற்றைத் துறந்து சந்நியாசியாகுக,'' என்று சாத்திரங்கள் மொழிகின்றன.

சுவா: ஒருவன் இறைவனை நோக்கித் தொழுவானாயின், அவ னுடைய கருணையினால் இந்தப் பற்றுகளெல்லாம் அகன்று போம் என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் அருளவில்லையா ?

சுவா: ஆம்; சந்தேகமின்றி, அவருடைய கருணையினால் அப் படியாகும். ஆயினும், அந்தக் கருணையைப் பெறுவதற்கு ஒருவன் திரிகரண சுத்தனாயிருக்க வேண்டும்.

சிஷ்: மனம் வாக்குக் காயம் ஆகிய மூன்றையும் சுத்தி செய் தவனுக்கு இறைவனுடைய கருணைதானெதற்கு ? அவன் தனது ஆற்றலினாலே ஞான மார்க்கத்திற் செல்வானன்றோ ?

சுவா: ஆன்ம ஞான...

...தயடைய உளமொத்து முயலுபவ

...ணை உண்டு. சோம்பலாக முயற்சி

...றவனுடைய கருணை ஒருபோதும்

சிஷ்: எல்லாரும் நன்மார்க்கத்தை விரும்புகின்றனராயினும், மனமானது எக்காரணத்தினுலோ தீமையையே விரும்புகின்றது. எல்லோரும் பூரணத்துவத்தை அடையவும், கடவுளைக் காணவும், நன்மார்க்கத்தில் நடக்கவும் விரும்புகின்றனரல்லவா ?

சுவா: அவ்வித விருப்பமுள்ளவர்கள் மேல் நிலையை அடைய முயலுகிறுர்கள். ஆதலால், இறைவனுடைய கருணையைப் பெறுகிறுர்கள்.

சிஷ்: பெரியோரைப்பற்றிய புராணக் கதைகளில், அவர் தம் வாழ்நாளெல்லாம் சிற்றின்ப நுகர்ச்சியில் கழித்தனர் என்றும், பல பத்தியோ பிறசாதனையோ இன்றி, கஷ்டப்படாது, கடவுளை அடைந்தனர் என்றும் சொல்லியிருக்கிறதே ! இஃதெங்ஙனமாகும் ?

சுவா: இவர்கள் நீண்ட காலஞ் சிற்றின்பங்களில் ஆழ்ந்திருந்தமையின், அவற்றின்மேல் கடுவெறுப்புண்டாகி, மனம் அலைவுற்று, திருவருளாகிய அமைதியின்றி ஒரு கணப்பொழுதும் ஆற்றற்கரியராய்ப் பேரின்பத்தை விழைந்து நின்றமையின், இறைவனும் இவர்களுக்கு அருள் வழங்கினுர். இத்தகையினர் தாமசத்திலிருந்து உடனே சத்துவத்தை அடைந்தனர்.

சிஷ்: ஆதலின், அவர்கள் சென்ற பாதை எதுவாயிருப்பினும், அவர்களும் கடவுளை அடைந்தவர்கள்தாமே ?

சுவா: ஆம்; அதற்கும் சந்தேகமா ? ஆயினும், மாளிகைக்குட் செல்லுவோர் நேர் வாயிலாற்புகுவதன்றிப் பின்புறத்தினுற் போக வேண்டுமோ ?

சிஷ்: இது சந்தேகமின்றி உண்மைதான். ஆயினும், இறைவனுடைய அருளால் மாத்திரமே அவனையடைதல் கூடுமென்னும் உண்மை இதனுல் நிறுவப்படுகிறதன்ருே ?

சுவா: கூடுமென்பது மெய்; ஆனுல், அடைபவர் தொகை எவ்வளவு அற்பம் !

சிஷ்: புலன்களை அடக்கி, காமகாஞ்சன ஆசையைத்துறந்து, கடவுளையடையக் கருதுபவர், தம் முயற்சியை மேற்கொண்ட ஒரு சாரா ரெனவும் இறைவனுடைய திருநாமத்தை மனனம் பண்ணி அவனுடைய அருளினுலே பற்றற்று மேல் நிலையை அடைவார் மற்ருெரு சாராரெனவும் எனக்குத் தோன்றுகிறது.

சுவா: ஆம்; இப்படி இரண்டு விதமாக நோக்கலாம். முன்னையது, ஞானமார்க்கம்; பின்னையது, பத்தி மார்க்கம். இரண்டினும் துறவே வேண்டும் பொருளாய் இருக்கின்றது.

சிஷ்: ஆம்; சந்தேகமில்லை. ஆயினும், இறைவனுடைய கருணைக்கு ஓர் எல்லையிருத்தல் கூடாதெனவும், அதற்கு நியதியின்றெனவும், நியதியுண்டாயின் அது கருணையாகாதெனவும், அருள் நிலை நியதி கடந்ததெனவும் ஸ்ரீ கிரீஷ் சந்திரகோஷர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

சுவா: கிரீஷ் சொன்ன அந்த நிலையில் நாம் உணர்ந்து கொள்ளாத உயர்வான பிரமாணம் இருத்தல் கூடும். கால, தேச, நியதி கடந்த நிலையை உரைப்பன அம்மொழிகள். அந்த நிலையை அடைந்த பின்னர், கருணை புரிபவர் யார், கருணை புரியப்படுபவர் யார் ?நியதி யாது ?பத்தி செய்வோனும் பத்தி செய்யப்படும் பொருளும், தியானிப்போனும் தியானிக்கப்படும் பொருளும், அறிவோனும் அறியப்படும் பொருளும் அந்த நிலையில் ஒன்றுகின்றன. அதை அருளென்றாலுஞ் சரியே, பிரம்மமென்றாலுஞ் சரியே. அது ஏகமாய் வேறுபாடில்லாத பொருள்.

சிஷ்: அருட்செல்வரே, தங்களுடைய திருவாயிலிருந்து இந்த மொழிகளைக் கேட்டு வேத வேதாந்தத்தின் சாரத்தை நன்குணர்ந்து கொண்டேன்; இந்நாள் வரையுங் கேட்டனவெல்லாம் பயனற்ற வெறுஞ்சொற்களேயாயின.

(27)

[இடம்: கட்டட வேலை நடைபெறும் பேலூர்த் திருமடம். காலம்: 1898-ஆம் ஆண்டு.]

சிஷ்: மனிதனிடத்திலே ஆன்மிக வளர்ச்சி உண்டாவதற்கும், அவனுண்ணும் உணவிற்கும் ஏதாவது சம்பந்தமிருந்தால் தெரிவித்தருள வேண்டுமென்று தேவரீரை வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சுவா: ஆம்; அத்தகைய சம்பந்தம் ஏறக்குறைய உண்டு.

சிஷ்: மீனும் மாமிசமும் உண்பது அவசியமா? தகுதியா?

சுவா: ஆம், என் மைந்தனே, அவற்றை உண்பாயாக. அதனாலேதும் தீங்கு விளைவதாயின், நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நமது நாட்டிலுள்ள சாதாரண மக்களைப் பார். அவர்களுடைய முகமானது எவ்வளவு சோர்வடைந்திருக்கிறது பார். இதயத்தில் தைரியமில்லை; ஆர்வமில்லை; வயிறு பருத்திருக்கிறது; கைகால்களில் வலிமையில்லை. அற்ப விஷயத்திற்கும் அஞ்சுகிற கோழை மக்களாகி விட்டார்கள்.

சிஷ்: மீன் மாமிசம் முதலியவற்றை உண்பதனால் வலிமை ஏற்படுமா? 'அஹிம்ஸையே மேலான தருமம்' என்று புத்தமதமும் வைணவ மதமும் போதிக்கின்றனவே?

சுவா: புத்த சமயமும் வைஷ்ணவ சமயமும் இரண்டல்ல. இந்தியாவிலே புத்த மதம் தளர்வடைந்த காலத்திலே அதனுடைய ஒழுக்க நெறிகள் சிலவற்றை இந்து சமயம் தழுவிக்கொண்டது. இதுவே பின்னாளில் வைணவமென வழங்கப்பட்டது. 'அஹிம்

ஸையே மேலான தர்மம்,' என்று கூறும் புத்த மதக்கொள்கை மிக நல்லது. ஆயினும், மக்களுடைய தகுதியை ஆராயாது எல்லாருக்கும் இந்த விதியைச் சுமத்திய காரணத்தினுல் புத்த மதம் இந்தியாவுக்கு அழிவை உண்டாக்கிவிட்டது. இந்தியாவிலே கொக்குப் போலக் கூம்பியிருக்கின்ற உள்ளத்தையுடைய வஞ்சகர் பலரை நான் சந்தித்திருக்கிறேன். அவர்கள் எறும்புகளுக்குச் சர்க்கரை உணவிடுவார்கள்; ஆனுல், தீயவைகளுக்கெல்லாம் வேரான பணத்தின்பொருட்டு, தம்முடன் பிறந்தார்க்கு நஞ்சு வைக்கப் பின்னடைய மாட்டார்கள்.

சிஷ்: வேதங்களிலும் மனுஸ்மிருதி முதலிய சாத்திரங்களிலும் மீன் மாமிசம் இவற்றை உண்ணுவதற்கு விதிகளேற்பட்டிருக்கின்றனவல்லவா ?

சுவா: ஆம்; அவற்ருேடு கொலை மறுத்தலுக்குரிய விதிகளும் கூறப்பட்டிருக்கின்றன. வேதங்களிலே 'ஒருயிருக்கும் துன்பம் விளைக்காதே,' என்றும், மனுதரும சாத்திரத்திலே 'நிவர்த்தியினுல் பெரும்பேறு உண்டாகும்,' என்றும் கூறப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவருடைய தகுதிக்கும் பான்மைக்கும் தக்கவாறு கொல்லுவதோ கொல்லாமையோ கூறப்பட்டிருக்கிறது.

சிஷ்: இந்நாட்களிலே சமயானுஷ்டானம் செய்யத் தொடங்குவோர்மீன்மாமிசம்இவற்றை ஒழித்துவிடுவது வழக்கமாயிருக்கிறது. விபசாரம் முதலிய அதிபாதகங்களைவிட மீனையும் மாமிசத்தையும் உண்பது பெரும்பாதகமென்று பலர் எண்ணுகின்றனர். இத்தகைய எண்ணங்கள் எப்படி உண்டாயின ?

சுவா: இவை எப்படி உண்டாயினவென்று ஆராய்வதனுல் எய்தும் பயனென்ன ?இவை நமதுநாட்டுக்கும் மக்கட்சமுதாயத்திற்கும் பெருங்கெடுதியை விளைவிக்கின்றன என்பது உனக்குத் தெளிவாகத் தோற்றுகிறதல்லவா ? கிழக்கு வங்காளத்திலுள்ளோர் மிகுதியாக மீனுண்பர்; ஆமை முதலியவற்றின் இறைச்சியையும் உண்பர். இந்தப் பாகங்களில் உள்ளவர்களைவிட அவர்கள் நல்ல உடல் நலம் உள்ளவர்களாய் இருக்கிருர்களல்லவா ?கிழக்கு வங்காளத்திலுள்ள செல்வர்களும் இரவிலே ' பூரி சப்பாத்தி ' உண்ணும் வழக்கத்தை வைத்துக்கொள்வதில்லை; அவர்கள் அஜீரணம் குன்மம் முதலிய நோய்களால் வருந்துவதுமில்லை. கிழக்கு வங்காளத்துக் கிராமங்களிலுள்ள மக்கள் குன்ம வியாதியே இன்னதென்று அறியாமல் இருக்கிருர்களென்று நான் கேள்விப்பட்டேன்.

சிஷ்: ஆம் சுவாமிஜி, எங்கள் தேசப்பக்கங்களிலே நாங்கள் குன்மம் முதலியவற்ருல் வருந்துவதில்லை. இந்தப் பக்கங்களுக்கு வந்தபின்புதான் நான் அந்த நோயைப் பற்றிக் கேள்விப்பட்டேன். நாங்கள் காலையிலும் மாலையிலும் சோற்ருேடு மீன் கறியும் உண்போம்.

சுவா: பிறர் வசை கூறுவார் என்று எண்ணுமல் இயன்ற அளவு நீ உண்பாயாக. தாவர உணவு மாத்திரம் உண்கின்ற, குன்ம நோய் பிடித்த பாபாஜிகள் நாட்டில் நிறைந்துவிட்டார்கள். அவர்களிடம் சத்துவ அடையாளங் காணப்படுவதில்லை; மரணத்தின் சாயையான ஆழ்ந்த தமோ குணமே காணப்படுகிறது. முகத்திலே ஒளியும், மனத்திலே எல்லையற்ற ஆர்வமும், மிகுந்த வல்லமையும் சத்துவ குணத்தால் உண்டாகின்றன. சோம்பலும், மந்தமும், அளவு கடந்த இச்சையும், நித்திரையும் தமோ குணத்தின் அடையாளங்கள்.

சிஷ்: ஆனுல், மீனும் மாமிசமும் மனிதனிடத்தில் ரஜோ குணத்தையும் விருத்தி செய்கின்றன அல்லவா?

சுவா: ஆம்; ரஜோ குணந்தான் இப்பொழுது மிகுதியும் வேண்டப்படுவது. இந்நாட்களில் சத்துவ குணத்தர் என்று நீ எண்ணுபவருள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் ஆழ்ந்த தமோ குணத்தில் அழுந்தியிருப்பவரே. அப்படிப்பட்டோரில் பதினறிலொரு பகுதியினராவது உண்மைச் சாத்துவிகராயிருத்தல் பெருங்காரியமாகும். தேசம் முழுவதும் தமோ குணத்தினுல் மூடப்பட்டிருக்கிறது. இப்பொழுது இராஜசிக வல்லமையைப் பெருவாரியாக எழுப்புதல் வேண்டும். இந்நாட்டிலுள்ள மக்கள் உண்டி உடை முதலியனவற்றை நிறையப்பெற்று விழித்தெழுந்து ஆர்வத்தோடு முயலுபவர்களாதல் வேண்டும். அல்லாவிடில் அவர்கள் கற்களையும் மரங்களையும் போல உணர்ச்சியற்றுப் போவார்கள். ஆதலாலே தான், என் மகனே, நிறைய மீன் மாமிசங்களை உண்ணென உனக்குச் சொல்லுகிறேன்.

சிஷ்: சத்துவகுணம் மிகுந்த பின்னர் ஒருவனுடைய உள்ளத்திலே மீன் மாமிசம் முதலியவற்றின்மீது விருப்பம் இருக்குமா?

சுவா: இருக்க மாட்டாது. உண்மைச் சத்துவ குணம் மிகுந்து வளருமிடத்து மீன் மாமிசம் இவற்றின் மேலுள்ள இச்சை போய்விடும்; எல்லாவற்றையும் பிறர் நலத்துக்காகத் தத்தம் செய்தல், பொன்னின் மேலும் பெண்ணின் மேலும் முற்றிலும் ஆசையற்றிருத்தல், செருக்கு அற்றிருத்தல், அகங்காரமற்றிருத்தல் ஆகிய இவையே ஒருவனுடைய ஆன்மாவில் சத்துவகுணமேற்பட்டிருப்பதற்கு உரிய அடையாளங்கள். இத்தகைய அடையாளங்கள் ஒருவரிடத்துக் காணப்பட்டால், மீன் மாமிசம் புசிக்குமிச்சை அறவே ஒழிந்துவிடும். இவ்வடையாளங்கள் இல்லாதானெருவன், அஹிம்ஸை பேசும் கட்சியாரோடு சேர்ந்திருப்பானேல் அவன் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கள்வனென்றும் சமயப் போலி உடையில் வருகிறவனென்றும் அறிந்துகொள். உன்னிடத்திலும் உண்மைச் சத்துவகுணம் ஏற்படும் நிலை வந்தெய்தியபொழுது மீன் மாமிசம் முதலிய உணவுகளை முழுதும் ஒழித்துவிடுவாயாக.

சிஷ்: ஆனால், சாந்தோக்கியோபநிடத்தில் ஆஹார சுத்தௌ சத்வ சுத்தி:—சுத்தமாகிய ஆகாரத்தினாலே சத்துவ குணம் சுத்தமாகின்றது,'' என்று கூறப்பட்டிருக்கின்றதே?

சுவா: ஆம், நான் அறிவேன். சங்கராசாரிய சுவாமிகள் ஆகாரமென்பது ஐம்புலன்களுக்கு நிலைக்களமாயுள்ள பொருளென்று கருதினர். ராமானுஜாசாரியர் ஆகாரமென்பதற்கு உணவு என்று பொருள் தந்தார். இந்த இரண்டு கருத்தையும் ஒன்றித்து நோக்கும் தன்மையது எனது சொந்த அபிப்பிராயம். உண்கின்ற உணவினுடைய சுத்தத்தையும் அசுத்தத்தையும் முழுதும் விசாரித்துக்கொண்டிருப்போமா, அன்றேல், புலன்களை அடக்கும் முறைகளைப் பழகுவோமா? புலன்களை அடக்குவதே முக்கியமான நோக்கமாய் இருக்கவேண்டும். அந்நோக்கத்தை அடைவதற்கு நன்மை தீமையின் பாகுபாடும் சுத்தாசுத்த உணவுகளை வேறுபடுத்தி உணர்வதும் ஒருவனுக்கு ஓரெல்லை வரையும் துணை புரிகின்றன. நம் சமய சாத்திரங்களின்படி உணவை அசுத்தமாக்கும் தோஷங்கள் மூன்று இருக்கின்றன. முதலாவது, சாதி தோஷம்: வெங்காயம் வெள்ளுள்ளி முதலிய உணவுப் பொருள்கள் இயற்கையிலே குற்றமுடையன. இரண்டாவது நிமித்த தோஷம்: இறந்த கொசு முதலியனவும் புழுதி முதலிய அழுக்குகளும் படிந்திருப்பதனால் ஏற்படுகிற குற்றம் இது. கடைகளில் வாங்குகிற இனிப்புத் தின்பண்டங்களுக்கு இக்குற்றமுண்டு. மூன்றாவது, ஆச்ரய தோஷம்: தீங்குள்ள இடங்களிலிருந்து வருவதனாலும் கீழ்மக்களால் தீண்டப்பட்டமையினாலும் உணவுக்கு உண்டாகிற தோஷம் இது. முதலிரண்டு வகைத் தோஷங்களையும் நீக்குவதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். ஆனால், இந்நாட்டிலே மக்கள் முதலிரண்டையும் பற்றிச் சிந்திப்பதில்லை; மூன்றாவதற்கே சண்டை போடுகிறார்கள். இது யோகிகளாலன்றிப் பிறரால் அறிந்துகொள்வதற்கு அரியது. நாடு முற்றிலும் 'தீண்டாதே! தீண்டாதே!' என்னும் தீண்டாமைக் கட்சியாருடைய ஆரவாரமே கேட்கின்றது. அவர்களுடைய குறுகிய வட்டாரத்துக்குள்ளே நன்மக்கள் தீயமக்கள் என்னும் பேதத்தை ஆராய்வதில்லை. கழுத்திலே ஒரு நூலை மாட்டிக்கொண்டு தனக்குப் பிராம்மணனென்று பெயரிட்டுக்கொள்பவனெவனோ, அவன் கையிலிருந்து வாங்கியுண்ணலாம் என்பதே அவர்கள் கண்டறிந்த கொள்கை. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர், மாசுற்றோரது கரத்திலிருந்து வருகின்ற உணவை உண்ண மாட்டாதவராய் இருந்தார். சிற்சிலர் தீண்டிய உணவை அவர் உண்ணாமை கண்டு பின்பு ஆராய்ந்து பார்த்த பொழுது அங்ஙனந் தீண்டினோர் வெளிக்குக் குற்றமற்றவர் போலத் தோற்றினும், உள்ளே குற்றமுள்ளவர்களாய் இருந்தார்களென்பது புலப்பட்டது. இந்நாட்களில் உங்களுடைய சமய ஒழுக்கம் சமையற்பாத்திரத்திற்

குள்ளே அடங்கியிருக்கும் தன்மையதாய்விட்டது. பழத்தை மறந்து விட்டுத் தோலுக்குச் சண்டையிடுவார்போல, உயர்ந்த அறநெறிகளை ஒரு புறத்தில் ஒதுக்கிவிட்டு, அற்ப காரியங்களைப்பற்றி வீண் விவாதமிட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

சிஷ்: அப்படியாயின், எத்தகையினராலும் தீண்டப்பட்ட உணவை நாம் உட்கொள்ள வேண்டுமென்பது தேவரீருடைய கருத்தா ?

சுவா: ஏன் அப்படிக் கூறுகிறாய் ? இதோ பார். நீ பட்டாசாரிய வகுப்பைச் சேர்ந்த ஒரு பிராம்மணன் என்று வைத்துக் கொள்வோம். மற்றைய வகுப்பைச் சேர்ந்த பிராம்மணன் சமைத்த உணவை ஏன் உண்ணக் கூடாது ? ரார்கி வகுப்பைச் சேர்ந்த நீ, பாரேந்திர வகுப்பைச் சேர்ந்த பிராம்மணன் சமைத்த சாதத்தை வேண்டாவென்று தள்ளுவானேன் ? பாரேந்திர வகுப்பைச் சேர்ந்தவனும் அவ்வண்ணம் நடந்துகொள்வதெதற்கு ? தென்னிந்தியாவிலும் மேற்கிந்தியாவிலுமுள்ள சாதி உட்பிரிவினர்கள்—உதாரணமாக, மராட்டியரும், தெலுங்கரும், கனோஜியரும்—ஏன் சமபந்தியில் உண்ணக்கூடாது ? வங்காளத்திலுள்ள பிராம்மணரிலும் காயஸ்தரிலும் நூற்றுக்கணக்கானோர் கள்ளத்தனமாகச் சிற்றுண்டிச் சாலைகளுக்குப்போய்த் தின்பண்டங்களை வாங்கி உண்டுவிட்டுப் பின்பு வந்து மக்கட்சமுதாயத் தலைவர்களாகித் தீண்டாமையை ஆதரிக்கும் விதிகளை உண்டாக்குகிறார்களே ! இத்தகைய கபட நாடகர்கள் ஏற்படுத்திய விதிகளிலேதான் நமது சமுதாயம் நடைபெற வேண்டுமோ ? வேண்டா. இவர்களையெல்லாம் வெளியே துரத்திவிட்டு, நம்முடைய மகரிஷிகளினாலே முற்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட விதிகளை நாம் செயலுக்குக் கொண்டு வர வேண்டும். அப்பொழுதுதான் நமது நாடு நலமடையும்.

சிஷ்: அங்ஙனமாயின், இக்காலத்தில் நம் மக்கள் சமுதாயத்தை ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட விதிகள் ஆண்டு நடத்த வில்லையா ?

சுவா: வீணெண்ணம் எதற்கு ? நான் இந்தியாவில் பல பாகங்களிலும் யாத்திரை செய்யும் பொழுது, எவ்விடத்தும் துருவி ஆராய்தற்பொருட்டு உற்று நோக்கினேன். ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட விதிகள் வழங்குமிடங்களை யாண்டும் கண்டிலேன். குருட்டு நம்பிக்கைகளும், மக்களால் கொள்ளப்பட்ட பயனில்லாத வழக்கங்களும், பெண்களிடையே வழங்குகின்ற முறைகளும் சடங்குகளும், குறுகிய தேசாசாரங்களும் எல்லாவிடத்திலும் காணப்படுகின்றன ! சாத்திரங்களை ஆராயும் முறையில் படிக்க நினைப்போர் யாவர் ?

சிஷ்: அப்படியாயின், நாம் செய்ய வேண்டுவதென்ன ?

சுவா: ரிஷிகளினால் ஏற்படுத்தப்பட்ட பூர்விக விதிகளை நாம்

திரும்பவும் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருதல் வேண்டும். மனுவும் யாஞ்ஞுவல்கியரும் அமைத்த பிரமாணங்களைக் காலத்துக் கேற்ற வேறுபாட்டோடு எல்லா மக்களும் பின்பற்றி நடக்கும்படி செய்யவேண்டும். முன் காலத்தில் விளங்கிய நான்கு வகுப்புச் சாதிகள் மக்கட்சமூகம் இப்பொழுது இந்தியாவில் ஒரு பாகத்தி லும் காணப்படுவதில்லை. இந்து சமுதாயம் முழுவதையும் முன் னுளிற்போல இந்நாளிலும் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வகுப்புகளாகப் பிரித்தமைக்க வேண்டும்; பிராம்மணருள்ளே யுள்ள எண்ணிறந்த உட்பிரிவுகளை யெல்லாம் அகற்றி, எல்லாரை யும் ஒன்று சேர்த்துப் பிராம்மண சாதியென்னும் ஒரே சாதியை உண்டாக்க வேண்டும். வேதகாலத்திலிருந்த முறையை அனு சரித்து, மற்றைய வருணங்களையும் மூன்ருக அமைக்க வேண்டும். இப்படியெல்லாம் செய்யாவிட்டால், நம்முடைய தாய்நாடு எங்ங னம் உண்மையான நன்மையை அடையும்? 'உங்களைத் தீண்ட மாட்டோம்; ஜாதிக்குள் உங்களைச் சேர்த்துக்கொள்ள மாட் டோம்,' என்று இந்நாட்களில் எழுப்புகிற கூக்குரலினுல் ஆவ தென்ன? என் மைந்தனே, இவற்றை அறிந்துகொள்வாயாக.

(28)

[இடம்: கட்டடவேலை நடைபெறும் பேலூர்த் திருமடம். காலம்: 1899-ஆம் ஆண்டு.]

சிஷ்: நமது நாடும் மக்களும் இவ்வளவு இழிவான நிலைமைக்கு வந்ததன் காரணம் யாதோ?

சுவா: இதற்கு நீங்களே பொறுப்பாளிகள்.

சிஷ்: ஐய, அஃதெப்படி? தேவரீருடைய சொல் எனக்கு வியப்பைத் தருகின்றதே!

சுவா: இந்த நாட்டிலுள்ள தாழ்ந்த வகுப்பினரை நீங்கள் நீண்ட காலமாக மிகவும் இழிவாக நடத்தினீர்கள். அதன் பயனுக உலகத்திலுள்ள மக்களுடைய கண்ணுக்கு நீங்கள் இழிந்த பொரு ளாய்விட்டீர்கள்.

சிஷ்: நாங்கள் தாழ்ந்த வகுப்பினரை இழித்து நடத்தி யதைத் தேவரீர் கண்டது எப்பொழுது?

சுவா: ஏன்? புரோகிதராகிய நீங்கள் வேத வேதாந்தங்களை யும், அத்தகைய உயர்வுடைய சாத்திரங்களையும் பிராம்மணரல்லா தார்படித்தல் கூடாதென்றும் தொடுதலுங் கூடாதென்றும்கட்டளை யிட்டுவிட்டீர்கள். நீங்கள் அவர்களை எப்பொழுதும் தாழ்த்தி னீர்கள்; சுயநலத்தைக் கருதி இவ்வண்ணம் செய்தீர்கள். சமய சாத்திரங்கள் உங்களுக்கே தனி உரிமை என்றீர்கள். விதி விலக்கு

கள் உங்கள் கையில் உள்ளவை எனச்சொல்லிவிட்டீர்கள். இந்தியாவிலுள்ள ஏனைய ஜாதியார்களைக் கீழானவர்களென்றும் தீயவர்களென்றும் பல முறை சொல்லி, அவர்கள் தாங்கள் உண்மையில் அத்தகையவர்களே என்று நம்பும்படி செய்துவிட்டீர்கள். ஒரு மனிதனைப் பார்த்து, ''நீ தாழ்ந்தவன்; இழிவுடையவன்,'' எனக் காணும்போதெல்லாம் சொல்லி வருவாயாயின், நாளடைவிலே அவன் அதை நம்பி உண்மையிலே தான் தாழ்ந்தவன் என்று நினைப்பது இயல்பு. இதனை மனோவசியம் என்பர். பிராம்மணரல்லாத வகுப்பார் படிப்படியாகத் துயில் நீங்கி எழுகின்றனர்கள். பிராமணர்களுடைய சாத்திரங்களிலும் மந்திரங்களிலும் அவர்களுக்குள்ள நம்பிக்கை நீங்குகின்றது. மேலைநாட்டுக் கல்வி பரவியதனால் பிராம்மணருடைய தந்திரங்களெல்லாம் மழை காலத்திலே பதுமாநதியினுடைய கரைகள் இடிந்து விழுவது போல அழிந்து போகின்றன. இதை நீ காணவில்லையா?

சிஷ்: ஆம், ஐய, வைதிகர்களுடைய ஆதிக்கம் இந்நாட்களிற் படிப்படியாகக் குறைந்து வருகிறது.

சுவா: நடக்க வேண்டிய முறையே நடக்கிறது. பிராம்மணர் படிப்படியாகச் சிற்றின்ப போகங்களில் ஈடுபட்டுப் பிறரை வாட்டுவதை வழக்கமாகக் கொண்டார்கள். தங்களுடைய சொந்த நிலைமையை உயர்வாக வைத்துக்கொள்ளும்பொருட்டுச் சுயநல விருப்பினாலே நூதனமான அவைதிக, ஒழுங்கற்ற, நியாயமல்லாத கொள்கைகளைப் புகுத்திவிட்டார்கள். அதனால், எய்திய பயனை இப்பொழுது அனுபவிக்கிறார்கள்.

சிஷ்: ஐய, அப்பயன்கள் யாவை?

சுவா: நீ அவற்றை அறியவில்லையா? இந்தியாவிலுள்ள சாதாரண மக்களை அவமதித்த காரணத்தினாலன்றோ ஓராயிரம் ஆண்டுகளாக நீங்கள் அடிமை வாழ்க்கை வாழ்கின்றீர்கள்? இதனாலன்றோ அயலாருடைய கண்களுக்கு நீங்கள் வெறுக்கத்தக்க பொருள்களாகிவிட்டீர்கள்? இதனாலன்றோ உங்களுடைய சொந்த நாட்டு மக்களும் உங்களைப் புறக்கணித்து நடத்துகிறார்கள்?

சிஷ்: ஆனால், ஐய, இப்பொழுதுங்கூட எல்லாச் சமயக் கிரியைகளையும் பிராம்மணர்களே நடத்துவிக்கின்றனர்கள். மக்கள் அவற்றைப் பிராம்மணருடைய கருத்துப்படிதானே செய்து வைக்கின்றனர்கள்? தேவரீர் இப்படிச் சொல்வது ஏன்?

சுவா: நீ சொல்வனவற்றை நான் காணவில்லை. சாத்திரங்கள் விதிக்கின்ற பத்து வகைச் சம்ஸ்காரங்கள் இப்பொழுது எங்கிருக்கின்றன? நான் இந்தியா முற்றிலும் யாத்திரை செய்திருக்கிறேன். சுருதிகளாலும் ஸ்மிருதிகளாலும் தள்ளி ஒதுக்கப்பட்டவை சில தேசாசாரங்களையே மக்கட்கூட்டத்தார் கைக்கொண்டு ஒழுகுவதை எல்லாரிடத்திலுங் கண்டேன். பொது மக்கள் மேற்கொள்ளு

கிற வழக்கங்களும், தேசாசாரங்களும், பெண்களிடையே மாத்திரம் காணப்படுகிற சில கொள்கைகளும் ஆகிய இவை எல்லாவிடத்தும் ஸ்மிருதிகளுக்குப் பதிலாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன அல்லவா? யார் யாருக்கு அடங்கி நடக்கின்றார்கள்? போதிய பணம் செலவழிப்பதாயிருந்தால், நீ விரும்புகிறவண்ணம் விதிவிலக்குகளை எழுதி வைத்தற்குப் புரோகித வகுப்பார் தயாராயிருக்கின்றனர். அவர்களுள் எத்தனை பேர் கல்ப கிருகிய சிரௌத சூத்திரங்களைப் படிக்கின்றனர்? வங்காளத்திலே இரகுநந்தனருடைய முறை பின்பற்றப்படுகிறது; சிறிது தூரத்திற்கு அப்பால் மிதாக்ஷரருடைய முறை வழங்கக் காண்பாய்; பிறிதோரிடத்தில் மனுவினுடைய நூல் ஆதிக்கத்திலிருக்கிறது. ஒரே விதமான சட்டங்கள் எல்லாவிடத்திலும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன என நீ நினைக்கிறாய் போலும்! மக்களுடைய மனத்திலே வேதங்களைப் பற்றிய உயர்வாகிய அபிப்பிராயத்தை உண்டுபண்ணி வேதங்களை ஆராய்ந்து கற்பதை எல்லாவிடத்தும் பரப்பி, வேதம் சொல்லிய விதி விலக்குகளை யாவரும் அறிந்து நடக்கும்படி செய்ய யான் விரும்புகிறேன்.

சிஷ்: ஐய, இந்நாட்களிலே அவ்வண்ணம் செய்தல் கூடுமா?

சுவா: பழமையாகிய வேதப் பிரமாணங்கள் யாவும் ஒருங்கே கைக்கொள்ளப்படமாட்டா என்பதும் உண்மையே. ஆனால், காலத்துக்கேற்ற வண்ணம் சேர்க்கவேண்டுவனவற்றைச் சேர்த்து, மாற்ற வேண்டுவனவற்றை மாற்றி, ஒழுங்குபடுத்தி, மக்கட்சமுதாயத்திற்கு முன்னே அவற்றை வைத்தால், அவை ஏன் ஆட்சிக்கு வரமாட்டா?

சிஷ்: ஐய, இந்தியா தேசமுற்றிலும் இக்காலத்திலும் மனுஸ்மிருதி ஒன்றுவது எவ்விதத்தும் கைக்கொள்ளப்பட்டு வருகிறது என்னும் எண்ணம் எனக்கு இருந்தது.

சுவா: அப்படியில்லை. உன் சொந்த நாட்டையே பார். தந்திரங்களிலே சொல்லப்பட்ட வாமாசாரங்கள் (ஒழுக்கமற்ற அனுஷ்டானங்கள்) மக்களுடைய வாழ்க்கையிலே எவ்வளவு புகுந்துவிட்டன? அழிந்து போன புத்த மதத்தினுடைய எலும்புக் கூடுபோல இருக்கின்ற இக்காலத்து வைணவத்திலும் வாமாசாரம் எவ்வளவு கலந்துவிட்டது! வைதிக முறைக்கு எதிராகிய இந்த வாமாசார வெள்ளத்தை ஓட விடாமல் தடுக்கவேண்டும்.

சிஷ்: ஐய, அழுக்கு மண்டிக்கிடக்கும் இம்மலக் கூடத்தை இப்பொழுது சுத்தப்படுத்துவது இயலுமோ?

சுவா: ஏழை மனம் படைத்த மனிதனே, என்ன வீண் வார்த்தை பேசுகிறாய்? ''முடியாது'', ''முடியாது'' என்று அழுது நாட்டை நாசமாக்கிவிட்டீர்கள். மனிதனுடைய முயற்சியினாலே முடியாத காரியம் என்ன?

சிஷ்: ஆனால், ஐய, மனுவைப்போன்றும் யாஞ்ஞவல்கியரைப்

போன்றும் உள்ள மஹரிஷிகள் மறுபடியும் இந்த நாட்டிற் பிறந்தாலன்றி, இது முடியாத காரியம்போலக் காணப்படுகிறது.

சுவா: ஐயோ ! தெய்வமே ! மனுவையும் யாஞ்ஞவல்கியரையும் ஆக்கி வைத்தது பரிசுத்தமும் தன்னலங் கருதாத முயற்சியுமா, அன்றேல் வேறெதுவேனுமா ? முயன்ருல் நாமும் மனுவையும் யாஞ்ஞவல்கியரையும்விட மிகப் பெரியவர்களாகலாம். அப்பொழுது நம் கொள்கைகள் ஏன் பரவமாட்டா ?

சிஷ்: ஐய, சற்று முன்பாக முற்காலத்திலுள்ள பழக்க வழக்கங்களை நமது நாட்டிலே உயிர்ப்பிக்க வேண்டுமெனத் தேவரீரே உரைத்தீர். அப்படியாயின், மனு முதலாகிய மகரிஷிகளைப்பற்றி எங்ஙனம் குறைவாக மதிக்கலாம் ?

சுவா: என்ன மூடத்தனமான முடிவு ! நான் சொன்ன குறிப்பை நீ சிறிதேனும் அறிந்துகொள்ளவில்லை. பழைய வைதிக ஒழுக்கங்கள் காலத்துக்கும் மக்கள் கூட்டத்துக்கும் தக்கபடி திருத்தி அமைக்கப்பட்டு இந்நாட்டிலே வழக்கிற்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று நான் சொன்னேனல்லவா ?

சிஷ்: ஆம், ஐய.

சுவா: அப்படியானுல், நீ என்ன பேசுகிருய் ? நீ சாத்திரங்களைப் படித்திருக்கிருய். உன்னைப்போன்ற மனிதரிடத்திலே எனக்கு மிகவும் நம்பிக்கை உண்டு. என்னுடைய வார்த்தைகளின் உண்மைக் கருத்தை உணர்ந்து, அவற்றைச் செயற்படுத்துவதற்கு முயல்வாயாக.

சிஷ்: ஆனுல், ஐய, எனது சொல்லுக்குச் செவி சாய்ப்பார் யாவர் ? நம் நாட்டினர் அவற்றை ஏன் பின்பற்றப் போகின்றனர் ?

சுவா: நீ உண்மையில் அவர்கள் மனத்தை உன்வழிப்படுத்திப் போதனை செய்வதைச் சாதனையிலும் காட்டுவாயானுல், அவர்கள் கட்டாயமாக உன் சொல்லுக்குக் கட்டுப்படுவார்கள்; அஃதன்றிக் கோழை நெஞ்சத்தோடு கிளி போல வெறுஞ்சுலோகங்களைச் சொல்லிக் காரியத்திலே காட்டாமல் பேச்சளவிலே சான்று காட்டினுல், யார் உன் வார்த்தைக்குச் செவிசாய்க்கப் போகின்றனர் ?

சிஷ்: மக்கட்சமுதாயத்தைச் சீர்திருத்தும் முறைகளைப் பற்றித் தேவரீர் எனக்குச் சில புத்திமதிகளைக் கற்பித்தருளல் வேண்டும்.

சுவா: ஏன் ! நான் இது வரை சொன்ன புத்திமதி போதாவா ? இப்பொழுது அவற்றில் ஒன்றையாவது செயலுக்குக் கொண்டுவா. சமய சாத்திரங்களைக் கற்றதனுலும், என்னுடைய மொழிகளை கேட்டதனுலும் நீ நற்பயனைப் பெற்ருய் என உலகம் அறிந்துகொள்ளும்படி செய். மனு ஸ்மிருதியையும் இன்னும் பல புத்தகங்களையும் படித்தாயே,—அவற்றிற்கு அடிப்படையாக ஆதார நியாயத்தை வேறுபடாது வைத்துக்கொண்டு பழைய ரிஷிகளுடைய

முறைப்படி இக்காலத்துக்கேற்ற கருத்துக்களையும் உண்மைக்கு வேறுபடாவண்ணம் சேர்த்து, ஒரு நூல் செய்வாயாக. அதனைப் பின்பற்றி நடப்பதனுல் பரதகண்டம் முற்றிலுமுள்ள எல்லா ஜாதியார்களும் எல்லா வகுப்பினரும் பயனடைய வேண்டுமென்பதை மறந்துவிடாதே. அத்தகைய ஸ்மிருதி ஒன்றினை எழுதிக்கொண்டு வா. நான் அதனைப் பிழை திருத்தித் தருகிறேன்.

சிஷ்: ஐய, அது எளிதான கருமமன்று; அத்தகைய ஒரு ஸ்மிருதியை எழுதினுலும் யார் அதனை ஏற்றுக்கொள்ளப் போகிருர்?

சுவா: ஏன் ஏற்றுக்கொள்ளமாட்டார்? நீ முயற்சி செய். "**காலோ ஹ்யயம் நிரவதிர் விபுலாச பிருத்வீ**—காலமோ எல்லையற்றது. பூவுலகம் இடம் பரந்தது." அதைத் தக்க முறையில் எழுதுவாயாயின், அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய நாள் வந்தே தீரும். உன்னிடத்தே நம்பிக்கையுள்ளவனுய் இரு. ஒரு காலத்தில் நீங்கள் வேத ரிஷிகளாய் இருந்தீர்கள். இப்பொழுது வேற்று வடிவமாய் விட்டீர்கள். அவ்வளவுதான். உங்களிடத்தில் எல்லையற்ற சத்தி இருக்கிறதென்பதை சூரியனின் ஒளி போல அவ்வளவு தெளிவாக நான் காண்கிறேன். அந்தச் சத்தியை எழுப்புங்கள்; எழுந்திருங்கள்; செய்யவேண்டுவனவற்றைச் செய்ய ஆயத்தப்படுங்கள். நிலையற்றபொருளையும் புகழையும்கொண்டுஎன்ன செய்யப்போகின்றீர்கள்? நான் என்ன நினைக்கின்றேன் என்பதை அறிந்துகொண்டாயா? நான் முத்தி முதலியவற்றை ஒரு பொருளாகக் கருதவில்லை. உங்கள் எல்லோருடைய உள்ளத்திலும் அத்தகைய எண்ணங்களை எழுப்பிவிடுவதே எனது கடமை. ஒரு மனிதனை நல்வழியில் பயிற்றுவதற்காக நூருயிரம் முறை பிறப்பதற்கும் நான் ஆயத்தமாயிருக்கிறேன்.

சிஷ்: ஆனுல், ஐய, அத்தகைய முயற்சிகளை ஆரம்பித்துப் பயனென்ன? மரணமென்பது நம்மைத் தொடர்ந்து வருகின்றதன்ருே?

சுவா: சீசீ! இது என்ன பேச்சு! சாவென்ருல் ஒரு நாளைக்குத்தானே வரும்? கோழை நெஞ்சனைப் போலச் சாவைப் பற்றி எண்ணி எண்ணி வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் சாக வேண்டிய அவசியமென்ன?

சிஷ்: சரி, ஐய, நான் மரணத்தைப்பற்றி நினைக்காமலிருக்கலாம். ஆனுல், நீரில் குமிழி போல நிலையற்ற இவ்வுலகத்திலே எவ்வகை முயற்சியினுலும் எய்தப்போகின்ற பயனென்ன?

சுவா: என் மகனே, சாவு வருவது திண்ணமாயின், கல்லைப் போலவும் கட்டையைப் போலவும் செத்துப்போவதை ஒழித்து வீரர்களைப் போலச் சாவது நன்றல்லவா? நிலையற்ற இவ்வுலகத்திலே இரண்டொருநாள்கூட வாழ்வதனுல் எய்தப்போகின்ற பய

னென்ன? துருப்பிடித்து அழிந்து போவதைவிடத் தேய்ந்து அழிந்து போவது, பிறருக்குச் சிறிதளவாயினும் உபகாரப்படும் வாழ்க்கையாதலின், எவ்வாற்ருனும் சிறந்ததேயாகும்.

சிஷ்: ஐய, அஃது உண்மையே. தேவரீருக்கு இவ்வளவு சிரமம் கொடுத்ததற்கு அடியேனை மன்னிக்க வேண்டும்.

சுவா: ஆர்வத்தோடு வினவுகின்றவர்களுடனே அடுத்தடுத்து இரண்டிரவு முழுவதும் பேசுவதாயினும் எனக்கு இளைப்புத் தோன்றுவதில்லை; ஊண் உறக்கத்தையும் விடுத்து உரையாடிக் கொண்டேயிருப்பேன். நான் விரும்பினுல் இமயக் குகை ஒன்றிலே சமாதி நிலையிலே இருந்துவிட என்னுல் முடியும். உலக மாதாவினுடைய திருவருளினுலே இந்நாட்களில் நான் உணவைப்பற்றி நினைக்க வேண்டுவதில்லை. அஃதெப்படியாயினும் வந்துவிடுகிறது. பின்னர் நான் ஏன் மலைக்குகையில் இருந்துவிடவில்லை? இங்கே ஏன் இருக்கிறேன்? நாட்டை நலிவு செய்கின்ற துன்பத்தைக் காணுதலும், நாட்டின் எதிர்கால வாழ்வைப்பற்றிய எண்ணமும் என்னைச் சும்மா இருக்க விடவில்லை! சமாதியும் பயனற்றதாகக் காணப்படுகிறது. பேரின்பத்திற்குரிய பிரம்மலோகமும் சுவையற்றதாகக் காணப்படுகிறது. உங்கள் நலத்தைப் பற்றி நினைப்பதே எனது வாழ்க்கையில் யான் கொண்ட விரதம். அது நிறைவுபெறுகின்ற தினத்திலே நான் இவ்வுடலை வீசிவிட்டுப் போக வேண்டிய இடத்திற்கு நேரே போய்விடுவேன்.

சுவாமிஜியினுடைய மொழிகளைக் கேட்டுச் சிஷ்யர் ஆச்சரியமுற்று, அவரைப் பார்த்தவண்ணம் சிறிது நேரம் பேச்சற்று இருந்தார். பின்பு விடை பெற்றுக்கொள்ளும் நேரமாகவே, சுவாமிஜியை வணங்கிவிட்டு உத்தரவு கேட்டார்.

சுவா: நீ ஏன் போக வேண்டும்? இந்தத் திருமடத்திலே ஏன் இருக்கக்கூடாது? உலக சிந்தையுடைய மக்களிடையே போனுல் மீட்டும் உன் உள்ளம் அழுக்கடைந்துவிடுமே! இதோ பார், காற்று எவ்வளவு சுகமாக வீசுகின்றது! அதோ கங்கா நதி ஓடுகின்றது! சாதுக்கள் தியானத்திலும் உயர்ந்த விஷயங்களைப் பேசுவதிலும் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கிருர்கள். நீ கல்கத்தாவுக்குப் போன மாத்திரத்திலே கெட்ட எண்ணங்கள் வந்து உன் உள்ளத்தில் நிறைந்துவிடும்.

சிஷ்: (சந்தோஷமுற்றவராய்) ஐய, தேவரீருடைய திருவுள்ளப்படியே இன்று நான் இத்திருமடத்தில் இருந்துவிட்டுப் போகின்றேன்.

(29)

[இடம்: கட்டடவேலை நடைபெறும் பேலூர்த் திருமடம். காலம்: 1899-ஆம் ஆண்டு.]

இன்று சாயங்காலம் சிஷ்யரோடு சுவாமிஜி புதிய திருமடம் அமைக்கப்படுகிற இடத்தைச் சுற்றி உலாவிக்கொண்டிருக்கிறார். அங்குள்ள ஒரு வில்வமரத்திற்குச் சிறிது தூரத்துக்கப்பால் நின்றுகொண்டு, ''ஓ, ஹிமாலயமே, கணேசர் எனக்கு நன்மையை அருளுகின்றார் !'' என்று ஆரம்பித்து, ''அநேக தண்டி சந்நியாசிகளும் சடாபாரத்தை உடைய யோகிகளும் இங்கே வருகின்றார்கள்'' என முடிகின்ற வங்காளிப் பாட்டைப் பாடினார். இந்தப் பாட்டை பாடும் பொழுது சுவாமிஜி ஈற்று அடியை மீட்டும் ஒரு முறை சொல்லி, ''இது உனக்குத் தெளிவாகிறதா ? நாளடைவிலே அநேக சாதுக்களும் சந்நியாசிகளும் இவ்விடத்திற்கு வருவார்கள்,'' எனச் சொல்லி, வில்வமரத்தின் கீழ் உட்கார்ந்து, ''வில்வமரத்தின் கீழுள்ள மண் மிகத் தூய்மையானது; இவ்விடத்தில் தியானம் செய்பவர் மிக விரைவிலே நல்லுணர்வு எய்தப் பெறுவர் என ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னதுண்டு,'' என்று கூறினார்.

சிஷ்: ஐய, ஆன்மா அனான்மா என்பவற்றிடையே உள்ள வேறுபாட்டினைக் காண்பதற்கு விவேகத்தைக் கொண்டு முயலுகின்றவர்களுக்குக் காலம் இடம் என்பவற்றினது பொருத்தத்தை ஆராய்ச்சி செய்வது அவசியமா ?

சுவா: ஆன்ம ஞானத்தில் நிலைபெற்றிருப்பவர்களுக்குப் பொருந்தாமையைப்பற்றி விசாரிப்பது அவசியமில்லை. ஆனால், அந்த நிலை உடனே அடைவதற்குரிய நிலையன்று; நெடுங்கால அப்பியாசத்தின் பயனாக எய்தப் பெறுவது. ஆதலினாலே, தொடக்கத்தில் ஒருவன் புறத்தேயுள்ள உதவிகளைப் பயன்படுத்தி, அதன் பின் தனித்து நிற்கப் பயின்றுகொள்ளலாம். ஆன்ம ஞானத்திலே நிலை பெற்ற பின்பு புறத்தேயுள்ள உதவி வேண்டுவதில்லை.

சமய சாத்திரங்களிலே சொல்லப்பட்டிருக்கின்ற பல்வேறு வகைப்பட்ட அநுஷ்டான முறைகளெல்லாம் ஆன்ம ஞானத்தை அடைவதற்கே வகுக்கப்பட்டிருக்கின்றன. வேறு வேறு வகைப்பட்ட சாதகர்களுடைய ஆற்றலுக்குத் தகுதியாக அநுஷ்டான முறைகளும் வேறு வேறு வகைப்படும். ஆனால், அவையும் ஒரு வகைக் கருமந்தான். கருமம் இருக்கும் வரையும் ஆன்மாவைக் காண்பதில்லை. சமய சாத்திரங்களில் விதித்திருக்கின்ற அநுஷ்டானங்களினாலே ஆன்ம தரிசனத்திற்குரிய தடைகளை வென்றுவிடலாம். ஆனால், ஆன்மாவை நேரே வெளிப்படுத்துகின்ற ஆற்றல் கருமத்துக்கு இல்லை; ஞானத்தை மறைத்திருக்கின்ற சில திரைகளை அகற்றுவதற்கே அது பயன்படுகிறது. அதன் பின்பு ஆன்மா

தன் தனி ஒளியோடு வெளிப்பட்டுத் தோற்றும். அறிந்துகொண்டனையா? ஆதலால் அன்றோ பாஷ்யகாரராகிய சங்கரர், 'பிரம்மஞானத்திலே சிறிதேனும் கருமமில்லை,' எனக் கூறுகின்றார்?

சிஷ்: ஆனல், ஐய, ஏதோ ஒரு வகைக்கருமத்தினலே ஆன்மவிளக்கத்துக்குத் தடையாயிருப்பனவற்றை வென்றுவிடுதல் வேண்டும் என்றல், கருமமும் ஒரு சார்பாக ஞானத்துக்குக் கருவியாகின்றது.

சுவா: காரண காரியத் தொடர்ச்சியைப் பற்றி நோக்குமிடத்து அங்ஙனம் காணப்படுகின்றது. இதனைக் குறித்தே பூர்வமீமாம்ஸையிலும் யாதொரு பயனைக் குறித்துக் கருமம் செய்யப்படுகின்றதோ, அது அப்பயனை நிச்சயமாகத் தரும் என்பது சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனல், பாரமார்த்திகமாய் உள்ள ஆன்ம தரிசனமானது கருமமாகிய கருவியினலே எல்லைப்படுத்தப்படுவதில்லை. ஆதலினலே, ஆன்மஞானத்தைத் தேடுவோன், சமய அநுஷ்டானங்களைச் செய்தல் வேண்டும்; ஆனல், பயனைக் குறிக்கொள்ளுதல் கூடாது எனச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனது பற்றி இந்த அநுஷ்டானங்கள் சாதகனுடைய மனத்தைச் சுத்தி செய்கின்ற காரணங்களாய் இருக்கின்றன என்பது பெறப்படுகின்றது. கருமங்களின் பயனுக ஆன்ம ஞானத்தை நேரிலே பெறுதல் கூடுமெனின், கருமத்தின் பயனைத் துறந்துவிடுதல் வேண்டுமெனச் சமய சாத்திரங்கள் சாதகனுக்கு விதிக்க மாட்டா. பூர்வ மீமாம்ஸையிலே கூறியபடி கருமமானது பயனை நோக்கிச் செய்யப்படவேண்டும் என்னும் கொள்கையை மறுத்து, பயன் கருதாது கருமத்தைச் செய்யவேண்டுமென்னும் கொள்கை கீதையிலே கூறப்பட்டது. இதனை அறிந்துகொண்டாயா?

சிஷ்: ஆனல், ஐய, கருமத்தின் பயனை ஒருவன் துறந்துவிடவேண்டுமென்றல், என்றும் அல்லலே தருகின்ற கருமத்தைக் கைக்கொள்ளுவதற்கு விரும்புவது எங்ஙனமாகும்?

சுவா: இந்த மனித வாழ்க்கையிலே ஒருவர் ஏதாவது ஒரு வகைக் கருமத்தைச் செய்யாமல் இருத்தல் முடியாது. ஆதலாலே, கருமத்தைச் செய்கின்ற மனிதன் அது வழியாக முத்தி நிலையைத் தருகின்ற ஆன்ம தரிசனத்தைப் பெறுவதற்கு முயல வேண்டுமென்று கருமயோகம் விதிக்கின்றது. கருமம் செய்வதற்கு மக்கள் ஆவல் கொள்ளமாட்டார்களே என நீ சொன்னதற்கு மறுமொழி இதுவாகும்; செய்யும் எந்த வேலையும் ஏதாவது ஒரு பயனை நோக்கியதே; கருமத்தை நீடித்துச் செய்வதனல் ஒரு கருமம் மற்றெரு கருமத்தைத் தூண்டுகிறதென்றும், இதனல் மாறி மாறிப் பிறவி ஏற்படுகிறதென்றும் அறிந்த மனிதன், விவேகமுடையவனுகிச் சங்கிலித் தொடர் போன்ற கருமபந்தத்துக்கு முடிவு எதுவென விசாரிக்கத் தொடங்குவான்; அப்பொழுது தான் கருமத்தின் போக்கை

அறிதல் இயலாது என்று பகவானால் கீதையிலே உபதேசிக்கப்பட்ட மேலான உண்மையை அறிந்துகொள்ளுவான். அப்பொழுது சாதகன் பயன் கருதிய செயலினாலே ஆனந்தம் எய்தப் பெறாது என அறிந்து, கருமத்தைத் துறந்துவிடுவான். மனிதன் அமைக்கப்பட்டிருக்கிற நிலையில் கருமம் செய்வது இன்றியமையாதது. அப்படியாயின், அவன் எவ்வகைக் கருமத்தைக் கைக்கொள்ளுதல் வேண்டும்? அவன் தன்னலமற்ற கருமத்தைக் கைக்கொண்டு, பயன் கருதிய விழைவு முழுவதையும் விட்டுவிடுகிறான்; கருமத்தின் பயனிலே எதிர்காலத்துள்ள பிறப்புக்கும் இறப்புக்கும் உரிய வித்துகள் பல இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ளுகிறான். ஆதலால், பிரம்ம ஞானியானவன், புறத்தோற்றத்தில் ஏதாவது ஒரு கருமத்தைச் செய்ய முயன்றுகொண்டிருப்பானாயினும், அதனிடத்துப் பற்றில்லாதவனாய்க் கருமம் அனைத்தையும் துறந்தவனாய் இருப்பான். இத்தகைய சான்றோர்களைச் சாத்திரங்கள் கரும யோகிகள் எனச் சொல்கின்றன.

சிஷ்: தன்னலமற்ற பிரம்மஞானி செய்கின்ற பயன் கருதாத முயற்சி பைத்தியக்காரனுடைய முயற்சிக்கு ஒப்பானதா?

சுவா: ஏன் அப்படி இருக்க வேண்டும்? கருமத்தின் பயனை விடுவதென்பது தன்னுடைய உடல் மனம் என்னும் இவற்றின் நலத்தைக் கருதித் தொழில் செய்யாமையைக் குறிக்கும். பிரம்மஞானி தன் சுகத்தை ஒரு பொழுதும் நாடுவதில்லை. பிறர் நன்மையைக் கருதி அவன் முயலுவதைத் தடுப்பது யாது? பயன் கருதுதலின்றி அவன் செய்கின்ற வேலை அனைத்தும் உலகத்துக்கு நன்மையையே தருகின்றன. அவை யாவும் பலருடைய நன்மைக்கும் பலருடைய இன்பத்திற்கும்ஏற்பட்டனவே. அத்தகையவன்ஒருபொழுதும்பிழை செய்வதில்லையென ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லியிருக்கிறார். உத்தரராம சரிதையிலே, "ரிஷீணாம் புனராத்யானாம் வாசமர்த்தோ அனுதாவதி—பூர்வத்திலிருந்த ரிஷிகளின் சொல்லை எப்பொழுதும் பொருள் பின் தொடர்கின்றது. அது பொய்யாவதில்லை," எனக் கூறியிருப்பதை நீ வாசித்ததில்லையா? எல்லா வகையாகிய சித்த விருத்திகளையும் ஒடுக்கி ஆன்மனிடையே மனத்தைப் பொருந்த வைக்கும்போது இம்மையிலும் மறுமையிலும் கருமப் பயனை அனுபவிப்பதற்குள்ள விருப்பம் முற்றும் அகன்றுவிடுகிறது. அஃதாவது, மனம் இம்மைச் சுகத்தை நாடுவதில்லை; மரணத்தின் பின்னர்ச் சுவர்க்காதி போகங்களை நாடுவதும் இல்லை. மனத்திலே இச்சையானது தோன்றுவதும் காரியப்படுவதும் இல்லை. ஆனாலும், மனமானது உணர்வு கடந்த அந்த உயர்நிலையினின்று 'நான், எனது' என்னும் உலக நிலைக்கு இறங்கும் பொழுது, பூர்வ கர்மத்தின் இயக்கத்தினாலே, அன்றேல் சம்ஸ்காரங்களாகிய பழக்கத்தினாலே, உடற்கிரியைகள் முன்போல நடக்கின்றன. மனம் அநேகமாக உணர்வு

கடந்த நிலையிலிருக்கிறது. தேக புத்தி ஏறக்குறைய முற்றிலும் அழிந்துபோகிறது. உண்ணுதல் முதலிய உடலின் செயல்கள் தாமாகவே நடைபெறுகின்றன. இத்தகைய துரியாதீத நிலையை அடைந்த பின் செய்கின்ற தொழிலனைத்தும் சரியாகவே செய்யப் படுகின்றன; உலகத்தார் அத்தகைய செயல்களால் உண்மையாகிய நன்மையை அடைகின்றனர்; ஏனெனில், செய்வோனுடைய மன மானது தனக்கு வருகிற லாப நஷ்டங்களைக் கருதுகிற சுயநல விருப் பினாலே அழுக்குப்படுத்தப்படுவதில்லை. துரியாதீத நிலையிலே என்றுமிருந்து ஆண்டவன் இந்த அற்புதமாகிய பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தான். ஆதலால், இவ்வுலகத்தில் பூரணம் அற்றவை எவையும் இல்லை. ஆதலால், பயன் கருதாத பிரம்மஞானி செய் கின்ற தொழில் அனைத்தும் மக்களுக்கும் உலகத்துக்கும் உண்மை யாகிய நன்மையைத் தருவனவேயாம்.

சிஷ்: ஐய, கருமமும் ஞானமும் ஒன்றினுக்கொன்று மறு தலையாயின எனவும், பிரம்மஞானம் உள்ள இடத்தில் கருமத்துக்கு இடமில்லை எனவும், கருமம் கருவியாகப் பிரம்ம ஞானத்தை அடை தல் முடியாதெனவும் இப்பொழுது உரைத்தீர்கள். ராஜச குணத்தை எழுப்பத்தக்க வார்த்தைகளை இடையிடையே எதற்காகச் சொல்லுகி றீர்கள்? 'கருமஞ்செய், கருமஞ்செய், கருமஞ்செய்--இதைவிட வேறு வழியில்லை,' எனச் சிலநாட்களுக்கு முன்பு எனக்குச் சொன்னீர்கள்.

சுவா: நான் உலகத்தைச் சுற்றிப் பார்த்தேன். பிற நாட்டு மக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இந்த நாட்டு மக்கள் நிறைந்த தாமச குணத்திலே அழுந்திக்கிடக்கக் கண்டேன். புறத்தே சாத்துவிக நிலையின் வெளித் தோற்றம் இருக் கிறது; உள்ளே பார்த்தாலோ, கட்டைகள் போலவும் கற்கள் போலவும் உள்ள சடத்தன்மை நிறைந்திருக்கிறது. இப்படிப் பட்ட மக்கள் உலகத்தில் என்ன தொழில் செய்யப்போகின்றார்கள்? செயலற்ற சோம்பேறிகளாய், சிற்றின்பப்பிரியர்களாய் இருக்கின்ற இவர்கள், எவ்வளவு காலத்துக்குப் பூமண்டலத்தில் வாழப்போகின் றார்கள்? மேலைத் தேசங்களுக்கு யாத்திரை செல்; அதன் பின் கூடு மாயின், என் வார்த்தைகளுக்கு எதிர் உரை கூறு. முயற்சியும், செய்யும் தொழிலைச் சீர்பெறச் செய்யும் சிரத்தையும், ஆர்வத்தில் ராஜசகுண விருத்தியும் மேலைத் தேசத்து மக்களுடைய வாழ்க்கையிலே எவ்வளவு நிறைந்திருக்கின்றன என்பதைக் காண் பாய். நம் தேசத்திலோ, குருதி நாடி நரம்புகளிலே சுற்றியோ டாது இதயத்திலே உறைந்து கட்டியாய்விட்டது போலவும், உடல் உணர்ச்சியற்றது போலவும், மக்கள் சோம்பிக் கிடக் கின்றார்கள். ஆதலால், முதலிலே ரஜோ குணத்தை விருத்தி செய்து, நம் மக்களை வாழ்க்கைப் போராட்டத்துக்குத் தகுதி யுள்ளவர்களாக்குவதே எனது கருத்தாகும். உடலிலே வலியற்று,

சிந்தையிலே ஆர்வமற்று, தலையிலே புதிய எண்ணங்களற்று உயிர் நீங்கிய சடப்பொருட்கட்டிகளைப்போலக் கிடக்கின்ற இவர்களால் ஆகக்கூடியது என்ன ? இவர்களை ஊக்கப்படுத்தி உயிர் உண்டாக்குவது எனது நோக்கம். இதற்காக நான் என்னுயிரை அர்ப்பணம் செய்திருக்கிறேன். வேதமந்திரங்களின் குற்றமற்ற வலிமையினலே நான் இவர்களை எழுப்புவேன். 'எழுமின், விழிமின்' என்னும் அச்சமற்ற நற்செய்தியை அறைகூவிச் சொல்வதற்காகவே நான் பிறந்திருக்கிறேன். நீங்கள் எனக்கு இம்முயற்சியில் உதவியாளராக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் போய், நாட்டின் ஒவ்வொருபாகத்திலும் பிராம்மணர் முதல் சண்டாளர் இறுதியான அனைவருக்கும் அச்சமின்மை எனும் இந்நற்செய்தியைப் போதிப்பீராக. எல்லையற்ற சத்தி அவர்களிடம் இருக்கின்றதென்றும், அவகள் அழிவற்ற ஆனந்தத்திற்கு உரிமை பூண்டவர்கள் என்றும் சொல்வீர்களாக. இங்ஙனம் செய்து அவர்களுடைய உள்ளத்தி லுள்ள ராஜச குணத்தையெழுப்பி,வாழ்க்கைப் போராட்டத்துக்கு அவர்களைத் தகுதியுடையவர்களாக்கி,அதன் பின் முத்தியைப்பற்றி அவர்களுக்குச் சொல்வீர்களாக. முதலிலே நாட்டிலுள்ள மக்களுடைய உள்ளத்தில் நிறைந்திருக்கின்ற சத்தியை எழுப்பிச் சுதந்தரராய் நிற்கும் ஆற்றலை அவர்களுக்கு உண்டாக்கவேண்டும். முதலிலே, அவர்கள் நல்ல உணவையும் ஆடை அணிகலன்களையும் இன்பநுகர்ச்சிகளையும் பெறுதற்குரிய மார்க்கங்களைப் பயின்றுகொள்ளுதல் வேண்டும். அதன் பின் கரும பந்தத்தினின்று விடுபடுவதற்குரிய பாதைகளை அவர்களுக்குப் போதிக்கலாம். சோம்பலும், கயமையும், நயவஞ்சகமும் நாடு முற்றிலும் பரந்திருக்கின்றன. அறிவுள்ளவன் இதைப்பார்த்துவிட்டு ஒன்றும் செய்யாதிருக்கலாமா ? கண்களில் நீர் பெருகவில்லையா ? சென்னை, பம்பாய், பஞ்சாபு, வங்காளம் என்னும் எத்திசையை நோக்கினும், உயிருள்ள மக்களது வாழ்க்கையின் அடையாளத்தைக் காண்பதற்கில்லை. உயர்ந்த கல்வி கற்றுவிட்டதாக நினைக்கிறீர்கள். நீங்கள் கற்றது என்ன ? பிறருடைய எண்ணங்களைப் பிறமொழியிலே மனனம் பண்ணித் தலையை நிறைத்துக்கொண்டு பல்கலைக்கழகப் பட்டம் வாங்கிவிட்டால் கல்வி கற்றவர்களென்று உங்களை மதித்துக்கொள்ளுகிறீர்கள்! உங்கள் பேதைமை இருந்தவாறென்னே ! இது என்ன படிப்பு ? உங்கள் படிப்பின் முடிந்த நோக்கம் என்ன ? எழுத்தாளர் வேலை, அன்றேல் வஞ்சனை புரியும் வக்கீல் வேலை, அன்றேல் மற்றொரு வகை எழுத்தாளராகிய உதவி நீதிபதி வேலை என்னும் இவற்றிலொன்றைப் பெறுவது—இவ்வளவுதானே ? இதனல், நாட்டுக்கு உண்டாகக்கூடிய நன்மை என்ன ? பெருஞ்செல்வத்திற்குப் பேர் போன இந்தப் பாரத நாட்டிலே இக்காலத்தில் வாழ்கின்ற மக்கள் உணவுக்காக அழுது ஓலமிடுவதை உங்கள் கண்களைத் திறந்து

பாருங்கள். உங்களுடைய கல்வி இந்தக் குறைவை நிறைவாக்குமா? இல்லை, இல்லை. மேலைத்தேசத்து விஞ்ஞான சாத்திரங்களின் உதவியைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தி உணவுப் பொருள்களை விளையச் செய்யுங்கள். அத்தகைய விஞ்ஞான சாத்திர அறிவோடு உங்கள் சொந்த முயற்சியையும் வைத்து வருவாய்க்குரிய புது வழிகளைக் கண்டுபிடியுங்கள். பிறருக்கு அடிமை வேலை செய்து பொருளீட்ட முயலாதீர்கள். தங்களுக்கு வேண்டிய உணவையும் உடையையும் தாங்களே செய்துகொள்ளத் தொழில் செய்யுமாறு இந்த நாட்டு மக்களுக்கு நான் போதிக்கிறேன். உணவும் உடையும் இல்லாமையாலும், அவற்றைக் குறித்துக் கவலையில் ஆழ்ந்திருப்பதனாலும் நாடு நாசமாய்விட்டது. இதை மாற்றுவதற்கு என்ன செய்யப்போகின்றீர்கள்? உங்கள் சமய சாத்திரங்களை எல்லாம் கங்கை ஆற்றில் எறிந்துவிட்டு, உணவையும் உடையையும் தேடிக்கொள்ளும் நெறிகளை மக்களுக்குப் போதிப்பீர்களாக. அதன் பின்பு சமய சாத்திரங்களை வாசிப்பதற்கு உங்களுக்கு நேரமுண்டாகும்! தொழில் செய்வதில் நிறைந்த ஊக்கத்தை உண்டாக்கி, உடல் நலத்துக்கு வேண்டியவற்றைச் செய்யாவிடில், ஆன்ம லாபத்துக்கு உரியனவென நீங்கள் சொல்லும் வாக்கியங்களை யார் கேட்கப் போகின்றார்கள்? ஆதலாலே, முதலில் உங்களுடைய உள்ளத்திலே அமைந்த ஆன்ம சத்தியை எழுப்பி, அதன் பின் உங்களால் இயன்ற வரை பொது மக்களிடையே இத்தகைய ஆன்ம சத்தியிலுள்ள நம்பிக்கையை எழுப்பி, உணவு தேடும் மார்க்கங்களைக் காட்டி, அதன்பின் சமய சாத்திரங்களைப் பயிற்றுவீர்களாக. செயலற்றிருப்பதற்கு நேரமில்லை. மரணம் என்று வருமென்பதை யாரறிவர்?

இவற்றைச் சொல்லும் பொழுது சுவாமிஜியினுடைய திருமுக மண்டலத்திலே துயரோடு கூடிய இரக்கமும் வலிமையும் ஒன்று சேர்ந்து காணப்பட்டன. இத்தகைய கம்பீரத் தோற்றத்தைக் கண்டு சிஷ்யர் அஞ்சி மௌனமாயினர். சுவாமிஜி சிறிது நேரம் கழித்து மீண்டும் சொல்லுவார்: ''தொழில் செய்யும் ஆற்றலும் சுயநம்பிக்கையும் இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு நாளடைவிலே வரவேண்டும் என்பதை நான் தெளிவாக உணர்கின்றேன். இது பிழைபடாது. அறிவுள்ளவன் அடுத்து வருகின்ற மூன்று யுகங்களிலும் நடக்கப் போவனவற்றைத் தெளிவாகக் காண்பான். ஸ்ரீராமகிருஷ்ணரின் திரு அவதாரம் முதற்கொண்டே கீழ்த்திசையிலே விடியற்கால சூரியனுடைய கதிர்கள் தோன்றிவிட்டன; நாட்கள் செல்லச்செல்ல நடுப்பகல் சூரியனின் சுடரே போல, அந்த ஞான ஒளியானது நாடு முழுவதையும் விளக்கமுறச்செய்யும்.''

(30)

[இடம்: கட்டடவேலை நடைபெறும் பேலூர்த் திருமடம். காலம்: 1899-ஆம் ஆண்டு.]

இப்பொழுதுள்ள திருமடத்துக் கட்டடங்கள் ஏறக்குறைய நிறைவு பெற்ற நிலையில் இருக்கின்றன. சுவாமிஜிக்கு உடல் நலம் குன்றியிருந்தது; ஆதலால், காலையிலும் மாலையிலும் தோணியிலேறிக் கங்கையிலே சென்று வரும்படி வைத்தியர்கள் சொல்லியிருந்தார்கள்.

இன்று ஞாயிற்றுக்கிழமை. சிஷ்யர் சுவாமிஜியினுடைய அறையில் அவரோடு உரையாடிக்கொண்டிருக்கிறார். திருமடத்திலுள்ள சந்நியாசிகளும் பிரம்மசாரிகளும் மேற்கொண்டு ஒழுகுதற்குரிய சில விதிகளைச் சுவாமிஜி இந்நாட்களில் ஏற்படுத்தியிருந்தார். இவற்றின் நோக்கம் துறவொழுக்கத்தில் நிற்போர் உலக வாழ்க்கை நடத்தும் மக்களோடு வரம்பற்று ஒன்று கூடுவதைத் தடுப்பதேயாம். இந்த விஷயத்தைப் பற்றிச் சம்பாஷணை நடந்தது.

சுவா: உலக மக்களுடைய உடை முதலியவற்றிலே கட்டுக்கடங்காத் தன்மையைக் காட்டுகிற ஒரு வகை நாற்றம் வீசுவதை நான் கண்டேன். ஆதலினால், சாதுக்கள் பயன்படுத்துகிற படுக்கை முதலியவற்றிலே இல் வாழ்வார் படுத்தலும் இருத்தலும் கூடா எனத் திருமடத்திலே ஒரு விதி ஏற்படுத்தியிருக்கிறேன். இத்தகைய நாற்றம் உண்டு என்றும், இல் வாழ்வாரிடமிருந்து வரும் அந்த நாற்றத்தைச் சந்நியாசிகள் தாங்க மாட்டார்கள் என்றும் முன்னுளிலே நான் சாத்திரங்களிற் படித்ததுண்டு. அது உண்மை என்பதை இப்பொழுது கண்டுகொண்டேன். ஏற்படுத்தப்பட்ட விதிகளைச் செவ்வனே கைக்கொண்டு ஒழுகுவதனால் பிரம்மசாரிகள் நாளடைவிலே தகுதியுள்ள சந்நியாசிகள் ஆவார்கள். சந்நியாசத்திலே நன்றாக நிலைபெற்ற பின்பு உலக மாந்தரோடு சமத்துவமாகக் கலந்துறவாடுதல் கூடும். அதனால் ஒரு தீங்கும் நேரிடாது. இப்பொழுது கடினமான விதிகளுக்குள்ளே கட்டுப்பட்டிருந்தாலன்றி, அவர்கள் தவறிப் போவார்கள். உயர்வாகிய பிரம்மசரியத்தினுடைய சிறந்த கொள்கையை அடையும்பொருட்டு ஆரம்பத்திலேயே ஐம்புலனடக்கத்தைப் பற்றிய கடினமான விதிகளை வழுவாது கைக்கொண்டொழுக வேண்டும். பெண்களுடைய தொடர்பு சிறிதேனுமில்லாது விலகி இருப்பது மாத்திரமன்றி, விவாகம் முடித்தவர்களுடைய கூட்டுறவையும் முற்றிலும் விலக்குதல் வேண்டும்.

சுவாமிஜி கூறிய இந்த மொழிகளைக் கேட்டு இல்வாழ்வாராகிய சிஷ்யர் உள்ளம் பதறித் தாம் முன்பு போலத் திருமடத்துச் சாதுக்களோடு கலந்துறவாடுவது கூடாதோ என்னும் எண்ணத்தினுல் பிடிக்கப்பட்டுச் சோர்வுடன் சுவாமிஜியை நோக்கி, "ஐய,

என் குடும்பத்திலுள்ளவர்களைக்காட்டிலும் இந்தத் திருமடத்திலுள்ளவர்கள் எனக்குச் சொந்தமானவர்கள் என்னும் உணர்ச்சி எனக்கிருக்கிறது. நீண்ட காலமாக அவர்களை நான் அறிந்து பழகியது போல என் மனம் உணர்கிறது. இந்தத் திருமடத்தில் நான் அனுபவிக்கின்ற எல்லையற்ற சுதந்திரத்தைப்போல நான் உலகில் பிறிதெவ்விடத்தும் அநுபவித்ததில்லை,'' என்று கூறினார்.

சுவா: தூய சிந்தையுடையவர்களெல்லாம் இவ்விடத்திற்கு வந்தால், அவ்வித உணர்ச்சியே பெறுவார்கள். அத்தகைய உணர்ச்சியை அடையாதவர் இந்த மடத்திற்கும் இதனுடைய உயர்ந்த நோக்கங்களுக்கும் உரியவரல்லர். பலர் நவீனத்தைக் கருதி இவ்விடம் வந்து திரும்பி ஓடிப்போய்விடுவதற்குக் காரணம் இதுவே. ஒழுக்கமில்லாதவர்களும், இரவு பகல் பணத்தைத் தேடி அலைபவர்களும் இந்தத் திருமடத்தினுடைய கொள்கைகளை உணர்ந்து கொள்ள மாட்டார்கள்; இங்குள்ள சாதுக்களைத் தமக்குச் சொந்தமாகக் கொள்ளமாட்டார்கள். இங்குள்ள சாதுக்கள் முன்னுளில் இருந்தவர்களைப் போல உடல் முழுதும் விபூதியைப் பூசித் தலையிற் சடைவைத்துக் கையிலே இரும்புக் குறடாவை ஏந்தி நோய்களுக்கு மருந்து சொல்லிக்கொண்டு திரிபவர் போன்றிருக்கமாட்டார்கள். மக்கள் அவர்களிடத்தில் தோற்றுகின்ற புது முறைகளை நோக்கி அவர்களை உள்ளவாறுணர்ந்துகொள்ளமாட்டார்கள். எம் குரு மூர்த்தியினுடைய கொள்கைகளும் செயல்களும் மார்க்கங்களும் சிறப்பியல்பாய் விளங்கின; ஆதலாலே, நாங்களும் ஒரு புதிய முறையுடையவர்களாய்க் காணப்படுகிறோம். சிலபோது துரை மக்களைப் போல ஆடை அணிந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றுவோம்; மற்றும் சில வேளைகளில் யாவற்றையும் எறிந்துவிட்டு, ''ஹர ஹர வியோம் வியோம்'' என்று சொல்லிக்கொண்டு, உடல் முற்றிலும் விபூதி அணிந்து, காடுகளிலும் மலைகளிலும் திரிந்து தவத்திலும் தியானத்திலும் மூழ்கியிருப்போம்.

பழைய நூல்களினுடைய பிரமாணத்தை எடுத்துச் சொல்லுவது போதாது. நாடு முற்றிலும் மேலைத் தேசத்தின் நாகரிகம் பொங்கி எங்கும் கடல் போலப் பரவுகின்றது. தியானத்தினுடைய நன்மையை உணர்ந்துகொள்ளாமல், மலையுச்சியின்மேலே வெறுமனே தியானத்திலிருப்பது போதாது. பகவான் கீதையிலே சொல்லிய வண்ணம், எல்லையற்ற தைரியத்தோடும் வெல்ல முடியாத மனவலிமையோடும் ஆழ்ந்த கருமயோகத்தைச் செய்வதே இப்பொழுது வேண்டப்படுவது. அப்படிச் செய்தால்தான் இந்த நாட்டு மக்கள் விழித்தெழுவார்கள். அல்லாவிடின், உன்னைப்போல இருளிலேயே வாழ்ந்து வருவார்கள்.

பகற்பொழுது ஏறக்குறையக் கழிந்துவிட்டது. கங்கையிலே தோணியிற்செல்வதற்காகச் சுவாமிஜி உடை அணிந்து மேல் மாடி

யிலிருந்து கீழே வந்தார். சுவாமிஜியும் சிஷ்யரும் இன்னுமிருவரும் தோணியிலேறித் தக்ஷிணேச்வர ஆலயத்தைக் கடந்து, பாணிஹாட்டிக்குச் சமீபத்தில் பாபு கோவிந்த குமார் சௌதுரியின் பூஞ்சோலை வீட்டண்டை வந்தார்கள். இந்த வீட்டினைத் திருமடத்தின் உபயோகத்துக்காக வாடகைக்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் முன்னொரு பொழுது இருந்தது. சுவாமிஜி தோணியிலிருந்து இறங்கி, வீட்டையும் பூஞ்சோலையையும் கூர்ந்து நோக்கி, ''நந்தவனம் அழகாய் இருக்கின்றது! ஆனாலும், கல்கத்தாவிலிருந்து இவ்விடம் நெடுந் தூரத்திலுள்ளது. ஸ்ரீராமகிருஷ்ணருடைய பத்தர்கள் கல்கத்தாவிலிருந்து நெடுந்தூரம் நடக்க வேண்டிய கஷ்டத்துக்குள்ளாவார்கள். ஆதலால், திருமடத்தை இவ்விடத்தில் அமைக்காதது நல்ல அதிருஷ்டமே!'', என்றார். எவ்விடத்திலும் கவிந்த இருளினூடே தோணியானது பேலூர்த் திருமடத்திற்குத் திரும்பி வந்தது.

(31)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம் 1899-ஆம் ஆண்டு ஆரம்பம்.]

சிஷ்யர் இன்று நாகமஹாசயரையும் அழைத்துக்கொண்டு திருமடத்துக்கு வந்தார்.

சுவாமிஜி நாகமஹாசயரை நோக்கி வந்தனை செய்துகொண்டே 'சௌக்கியந்தானே?' என்றார்.

நாகமஹாசயர்: இன்று நான் உங்களைத் தரிசிக்க வந்தேன். சங்கரருக்கு மகிமை உண்டாகுக! சங்கரருக்கு மகிமை உண்டாகுக! இன்று நான் சிவபெருமானை நேரிலே காணும் பாக்கியத்தைப் பெற்றேன்!

இம்மொழிகளைக் கூறி நாகமஹாசயர் பணிவோடு கைகளைக் கூப்பிக்கொண்டு நின்றார்.

சுவா: உங்களுடைய சௌக்கியம் எப்படி?

நாகமஹாசயர்: எலும்பும் தோலும் வேய்ந்த மலக்கூடாகிய இந்த அற்ப உடலைப் பற்றித் தேவரீர் வினவ வேண்டுவது எதற்கு? இன்று நான் தேவரீரைக் காணும் பாக்கியத்தைப் பெற்றேன்.

இவ்வார்த்தைகளைச் சொல்லி நாகமஹாசயர் சுவாமிஜியினுடைய திரு முன்னிலையிலே விழுந்து வணங்கினார்.

சுவா: (அவரை வாரித் தழுவி எடுத்து) என் முன்னிலையில் ஏன் இப்படிச் செய்கிறீர்?

நாகமஹாசயர்: இன்று நான் சிவபெருமானுடைய தரிசனத்தைப் பெற்றுப் பாக்கியமுற்றதை என் அகக் கண்ணினால் காண்கின்றேன். இராமகிருஷ்ணருக்கு மகிமை உண்டாகுக!

சுவா: (சிஷ்யரை நோக்கி) பார்த்தாயா? உண்மைப் பத்தி மனிதஇயற்கையை எவ்வளவுவேறுபடுத்துகின்றது! நாகமஹாசயர் தெய்வ வயப்பட்டுத் தம்மை முற்றிலும் இழந்துபோனார். உடலைப் பற்றிய உணர்வு இவருக்குச் சிறிதேனுமில்லை. (சுவாமிஜி பிரே மானந்தரை நோக்கி) நாகமஹாசயருக்குச் சிறிது பிரசாதம் எடுத்துக்கொண்டுவா.

நாகமஹாசயர்: பிரசாதமா! (சுவாமி முன்னிலையில் கைகளைக் கூப்பிக்கொண்டு) தேவரீரைக் கண்டு எனது வயிற்றுப் பசி முழுதும் பறந்து போய்விட்டது.

திருமடத்துச் சந்நியாசிகளும் பிரம்மசாரிகளும் உபநிடதம் வாசித்துக்கொண்டிருந்தார்கள். சுவாமிஜி அவர்களை நோக்கி, ''இன்று ஸ்ரீராமகிருஷ்ணருடைய அடியாராகிய இப்பெரியார் நம் மிடையே வந்திருக்கிறார்; நாகமஹாசயர் இத்திருமடத்துக்கு வந்த காரணத்தினால் இவரைப் பெருமைப்படுத்தும்பொருட்டுஇன்று விடு முறையாயிருக்கட்டும்,'' எனக் கூறினார். எல்லோரும் புத்தகங்களை மூடிவிட்டு, நாகமஹாசயரைச் சுற்றி வட்டமாய் இருந்தார்கள்; சுவாமிஜியும் அவர் முன்னிலையில் உட்கார்ந்தார்.

சுவா: (எல்லோரையும் நோக்கி) பார்த்தீர்களா? நாகமஹாச யரைப் பாருங்கள்; இவர் இல் வாழ்வார்; அங்ஙனமாயினும் இவருக் குத் தேகமிருக்கிறதே என்ற எண்ணமே இல்லை; எப்பொழுதும் தெய்வவயப்பட்டுத் தம்மை மறந்து வாழ்கின்றார். (நாகமஹாச யரை நோக்கி) எங்களுக்கும் இங்கிருக்கும் பிரம்மசாரிகளுக்கும் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லுவீராக.

நாகமஹாசயர்: (வணக்கத்தோடு) என்ன சொன்னீர்கள் ஐயா! நான் என்ன சொல்லுவேன்? ஸ்ரீராமகிருஷ்ணருடைய தெய்வ லீலை யிலே உதவி புரியும் தனிப்பெருந்தலைவராகிய தேவரீரைப் பார்ப் பதற்கு நான் வந்திருக்கிறேன். அவருடைய போதனைகளையும் உரை களையும் மக்கள் இப்பொழுதுதான் செவ்வனே அறிந்துகொள்வார் கள். ஸ்ரீராமகிருஷ்ணருக்கு ஜயம் உண்டாகுக!

சுவா: ஸ்ரீராமகிருஷ்ணரை உள்ளபடி அறிந்துகொண்டவர் நீரே. நாங்கள் பயனற்ற அலைச்சல்களில் வாழ்க்கையைக் கழித்து விட்டோம்.

நாகமஹாசயர்: ஐய, யாது சொல்லுகிறீர்? தேவரீரே ஸ்ரீராம கிருஷ்ணருடைய திருவுருவம். நீங்கள் இருவரும் ஒரு நாணயத்தின் இருபுறத்தையும் போன்றவர்கள். கண்ணுள்ளவர்கள் காண்பார் களாக.

சுவா: இந்தத் திருமடங்கள் ஆச்சிரமங்கள் முதலியவற்றை ஆரம்பித்தது செய்ய வேண்டிய கருமமா, அல்லவா?

நாகமஹாசயர்: நான் ஓர் அற்பப் பிராணி; எனக்கென்ன தெரியும்? தேவரீர் செய்வது எதுவோ, அது திண்ணமாகவே உலகத்

துக்கு நன்மை பயப்பதென நான் அறிவேன்—ஆம்; உலகத்துக்கு நன்மை பயப்பது.

பலர் வணக்கத்தோடு நாகமஹாசயருடைய பாதங்களிற் பணியத் தொடங்கினர். அவர் இதைக் கண்டு மிகவும் பதறினர். சுவாமிஜி எல்லோரையும் நோக்கி, 'நாகமஹாசயருக்குத் துன்பம் வரும்படி நடந்துகொள்ளாதீர்கள்,' என்றார். இதைக் கேட்ட பின் எல்லோரும் சுவாமிஜியின் சொல்வழி நின்றனர்.

சுவா: நீங்கள் தயை செய்து வந்து இந்தத் திருமடத்திலே வாசம் செய்வீர்களாக; இங்குள்ள சிறுவர்களுக்கு நீங்கள் பெரியதொரு லட்சியமாயிருப்பீர்கள்.

நாகமஹாசயர்: நான் ஒரு முறை இதைப்பற்றி ஸ்ரீராமகிருஷ்ணரைக் கேட்டேன். அதற்கு அவர், 'இப்பொழுது இருக்கிற மாதிரி இல் வாழ்க்கையிலே இரு,' என்றார். ஆதலால், நான் அப்படியே வாழ்க்கை நடத்தி வருகிறேன். இடையிடையே வந்து உங்களைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

சுவா: நான் உங்களுடைய வீட்டுக்கு ஒரு முறை வரலாம் என்று எண்ணியிருக்கிறேன்.

நாகமஹாசயர்: ஆனந்த பரவசராய், ''அத்தினம் என்று வந்தெய்தப்பெறும்! நான் வசிக்குமிடம் தேவரீர் திருவடி படுவதனால் காசி க்ஷேத்திரத்தைப் போலப் பரிசுத்தமடையும்; எனக்கு இந்தப் பாக்கியம் கிட்டுமா!'' என்றார்.

சுவா: எனக்கு விருப்பமுண்டு. என்னை அங்குக் கொண்டு செல்வது அன்னையின் கட்டளைப்படி ஆகிறது.

நாகமஹாசயர்: தேவரீரை யார் அறிந்துகொள்ள வல்லார்? அகக்கண் திறந்தாலன்றித் தேவரீரை அறிந்துகொள்ளக்கூடியவர் யாருமில்லை. ஸ்ரீராமகிருஷ்ணர் மாத்திரம் தேவரீரை அறிந்திருந்தார். வேறு யாரும் அறிந்துகொள்ளவில்லை; மற்றவர் எல்லாரும் அவருடைய வார்த்தையிலே சிரத்தையோடு நம்பிக்கை வைத்தனர்.

சுவா: தம்முடைய சத்தியிலே நம்பிக்கையற்று அழைப்போருக்கு மறுமொழி பகராது சோகையரைப் போலத் தூங்கிக் கிடக்கின்ற நம் நாட்டினரை எழுப்ப வேண்டுமென்னும் விருப்பம் எனக்குண்டு. அவர்களை விழிப்புறச் செய்து, சனாதன தர்மத்தினது உண்மையை உணரவைத்தால், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வருகையும் எங்களுடைய பிறப்பும் பயனுள்ளவை என யான் அறிந்துகொள்ளுவேன். இது என்னுள்ளத்து விருப்பம். முத்தி முதலியவற்றை யான் பெரியனவாக மதிக்கவில்லை. யான் இக்காரியத்தில் சித்தியடையும்பொருட்டு உங்களுடைய ஆசீர்வாதத்தைத் தந்தருள வேண்டும்

நாகமஹாசயர்: ஸ்ரீராமகிருஷ்ணர் ஆசீர்வதிப்பர். தேவரீ

ருடைய திருவுள்ளத்தின் போக்கை யார்தான் மாற்ற வல்லவர்? தேவரீர் எதனை எவ்வண்ணம் நிறைவேற வேண்டுமென்கிறீரோ, அது அவ்வண்ணம் நிறைவேறும்.

சுவா: அவருடைய அனுக்கிரகமின்றி ஒன்றும் நடப்பதில்லை.

நாகமஹாசயர்: தேவரீருடைய சித்தமும் அவருடைய சித்தமும் ஒன்ருய்விட்டன. எதனிடத்துத் தேவரீருடைய சித்தம் படிந்திருக்கிறதோ, அதனிடத்து அவருடைய சித்தமும் உண்டு. ஸ்ரீராமகிருஷ்ணருக்கு மங்களமுண்டாகுக!

சுவா: வேலை செய்வதற்கு வலிமையான உடல் வேண்டும். இந்த நாட்டுக்கு வந்த பிறகு என் உடல் நலம் நன்ருயில்லை; மேலை நாட்டில் நான் நல்ல உடல் நலத்தோடு இருந்தேன்.

நாகமஹாசயர்: 'உடலாகிய வீட்டினுள் வசிப்பதற்கு வரிப் பணம் கொடுக்க வேண்டும்,' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதுண்டு. நோயும் கவலையுமே வரிப்பணம் ஆகும். தேவரீர் உடல் தங்க மொஹராக்கள் நிறைந்த பெட்டி. அதனை மிகவும் சாவதானமாகக் காப்பாற்ற வேண்டும். ஆனல், யார் அங்ஙனம் செய்வர்? யாருக்குத் தெரியும்? ஸ்ரீராமகிருஷ்ணர் மாத்திரம் அறிந்திருந்தார். ஸ்ரீராமகிருஷ்ணருக்கு ஜயம் உண்டாகுக!

சுவா: இந்த மடத்திலுள்ளார் அனைவரும் என்னைக் கவனமாகப் பார்த்து வருகின்றனர்.

நாகமஹாசயர்: அவர்கள் அப்படிச் செய்வார்களாயின் அது, அவர்களது நன்மைக்கேயாகும். அவர்கள் அதை அறிந்தாலும் அறியாவிட்டாலும் சரி. தேவரீருடைய உடல் நலத்தைப்பற்றிக் கவனஞ் செலுத்தாவிடின் அது விழுந்து போதல் கூடும்.

சுவா: நாகமஹாசயரே, நான் செய்கின்றது சரியா பிழையா என நான் முற்றிலும் உணர்ந்துகொள்ளுவதில்லை. சில வேளைகளிலே ஒரு குறித்த நெறியிலே நின்று முயல எனக்குப் பெருவிருப்பம் உண்டாகிறது. நான் அவ்வழி நின்று முயல்கிறேன். அதனல் நன்மை விளையுமோ, தீமை விளையுமோ என்பது எனக்குத் தெரியவில்லை.

நாகமஹாசயர்: 'பொக்கிஷச்சாலை இப்பொழுது பூட்டப்பட்டிருக்கிறது,' என ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதுண்டு. ஆதலால், அவர் தேவரீரை எல்லாவற்றையும் அறிந்துகொள்ள விடுவதில்லை. அறிந்த மாத்திரத்தே தேவரீருடையமானிட வாழ்க்கைலீலையானது முடிந்து போய்விடும்.

சுவாமிஜி எதைப்பற்றியோ சிந்தித்து, அசையாத நோக்கத்தோடு இருந்தார். சுவாமி பிரேமானந்தர் நாகமஹாசயருக்குச் சிறிது பிரசாதம் கொண்டுவந்தார்; அவர் அதனல் ஆனந்த பரவசரானர். சிறிது நேரம் கழித்துச் சுவாமிஜி ஒரு குளத்துக்கு அருகில் ஒரு மண்வெட்டியினல் குழி தோண்டிக்கொண்டிருப்பதை நாக

மஹாசயர் கண்டு, விரைந்து சென்று, சுவாமிஜியின் கையைப் பிடித்துக்கொண்டு, "நாங்கள் இருக்கும் பொழுது தேவரீர் இந்த வேலைகளை எல்லாம் ஏன் செய்ய வேண்டும்?" என்றார். சுவாமிஜி மண் வெட்டியைப் போட்டுவிட்டுச் சோலையிலே நடந்துகொண்டிருக்கும்பொழுது ஒரு சிஷ்யரை நோக்கிப் பின் வருமாறு சொல்லுவாராயினர்: "ஸ்ரீராமகிருஷ்ணர் இவ்வுலக வாழ்க்கையை நீத்து அகன்ற பின்பு ஒரு நாள் நாகமஹாசயர் கல்கத்தாவிலுள்ள தமது சிறிய வீட்டிலே பட்டினியாய்ப் படுத்துக்கிடக்கிறாரென்று நாங்கள் கேள்விப்பட்டோம். நானும் சுவாமி துரியானந்தரும் மற்றொருவரும் போய் நாகமஹாசயருடைய குடிசையை அடைந்தோம். நாங்கள் அவரை நோக்கி, 'இன்று நாங்கள் உம்முடைய வீட்டிற் பிக்ஷை பண்ணுவோம்,' எனக் கூறினோம். அவர் உடனே அரிசி, பானை, விறகு முதலியவற்றைக் கடையிலிருந்து கொண்டு வந்து சமைக்கத் தொடங்கினார். நாங்கள் அருந்திய பின்பு நாகமஹாசயரைச் சாப்பிடச் செய்யலாம் என்று நினைத்தோம். சமையல் முடிந்ததும் அவர் எங்களுக்கு உணவளித்தார். நாங்கள் ஒரு பாகத்தை எடுத்து அவருக்காக வைத்துவிட்டு உண்ணுதற்கு உட்கார்ந்தோம். அதன் பின் அவரை உண்ணும்படி வேண்டினோம். அவர் உடனே சோறிருந்த பானையை உடைத்துவிட்டு நெற்றியிலே கையினால் அறைந்து, 'கடவுளைக் கண்டறியாத இந்த உடலுக்கு உணவளிப்பேனோ?' என்றார். இதனைக் கண்டு நாங்கள் பேராச்சரியப்பட்டோம்! அதன் பின்பு அவரை மிகவும் மன்றாடிச் சிறிது உணவு அருந்தும்படி செய்துவிட்டு நாங்கள் திரும்பினோம்."

சுவா: நாகமஹாசயர் இன்றிரவு இவ்விடம் தங்குவாரா?

சிஷ்: அவருக்குச் சிறிது வேலையுண்டு. அவர் இன்றைக்கே திரும்பிப் போகவேண்டும்.

சுவா: நல்லது; ஒரு தோணி பார்த்து ஏற்பாடு செய். இருள்கின்றது.

[தோணி வந்ததும் சிஷ்யரும் நாகமஹாசயரும் சுவாமிஜியை வணங்கிவிட்டுக் கல்கத்தாவுக்குப் புறப்பட்டார்கள்.]

(32)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1899-ஆம் ஆண்டு.]

சுவாமிஜி இப்பொழுது நல்ல உடல் நலமுள்ளவராய் இருக்கிறார். சிஷ்யர் ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமைக் காலை திருமடத்திற்கு வந்திருந்தார். சுவாமிஜியைத் தரிசித்த பிறகு மேல் மாடியிலிருந்து கீழே வந்து சுவாமி நிர்மலானந்தரோடு வேதாந்த சாத்திரங்களைப் பற்றி விசாரணை செய்துகொண்டிருந்தார். இந்தத் தருணத்தில்

சுவாமிஜி கீழே இறங்கி வந்து சிஷ்யரை நோக்கி, ''நிர்மலானந்தரோடு என்ன பேசிக்கொண்டிருந்தாய் ?'' என்றார்.

சிஷ்: ஐய, அவர் என்னை நோக்கி, 'வேதாந்தத்தில் சொல்லப்பட்ட பிரம்மம் உனக்கும் உன்னுடைய சுவாமிஜிக்குந்தான் தெரியும். நாங்கள் **கிருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம்**—கிருஷ்ணன், பகவானுடைய அவதாரம் என்பதையே அறிவோம்,'' என்றார்.

சுவா: நீ அதற்கு என்ன சொன்னாய் ?

சிஷ்: ஆன்மாவே ஏகமாகிய உண்மைப் பொருளென்றும், கிருஷ்ணன் ஆன்ம தரிசனம் பெற்ற ஒரு மனிதனே என்றும் நான் சொன்னேன். சுவாமி நிர்மலானந்தர், உள்ளத்திலே வேதாந்தத்தில் நம்பிக்கை உடையவர்; வெளிக்குத் துவைத வாதிகளுடைய கொள்கையை எடுத்து வாதிக்கிறார்; முதலிலே ஈசுவரனுடைய உருவத் தன்மையை நிறுவி, அதன் பின்னர்ப் படிப்படியாகத் தருக்க முறையில் வேதாந்தத்துக்கு அடிகோலி வலுப்படுத்துகின்றார். ஆனால், அவர் என்னை வைணவனென்று சொன்னவுடனே நான் அவருடைய உண்மைக் கருத்தை மறைத்து, ஆர்வத்தோடு வாதிக்கத் தலைப்பட்டுவிடுகிறேன்.

சுவா: அவர் உன்மேல் அன்புடையவராய் இருக்கிறார். ஆதலால், உன்னோடு வேடிக்கையாகப் பேசுவது அவருக்கு விருப்பம். ஆனால், அவருடைய வார்த்தைகளைக் கேட்டு நீ ஏன் நிலை கலங்க வேண்டும் ? 'ஐய, நீர் நிரீச்சுரவாதி; இன்மையிலே நம்பிக்கை உடையவர்,' என்று நீ ஏன் அவருக்குச் சொல்லக்கூடாது ?

சிஷ்: ஐய, 'ஈசுவரன் சர்வ வல்லமையுள்ள புருஷன்,' என்னும் வாக்கியம் உபநிடதங்களில் எங்கேயாவது உண்டா ? ஆனால், பொதுவாக|மக்கள் அத்தகைய ஈசுவரன்மீது நம்பிக்கை உடையவர்களாயிருக்கிறார்கள்.

சுவா: எல்லாருக்கும் தலைமையாய் இருக்கிற மிக உயர்ந்த பொருள் ஒரு புருஷனாய் இருத்தல் இயலாது. ஜீவன், பலருள்ளே ஒருவன்; எல்லா ஜீவர்களுடைய கூட்டுத்தொகை ஈசுவரன். ஜீவனிடத்து அவித்தையும் அஞ்ஞானமும் மிகுந்திருக்கின்றன. ஈசுவரனோ, அவித்தையும் வித்தையும் ஒன்று கூடிய மாயையைத் தன் வயப்படுத்தி ஆளுகிறான்; இயங்குதிணை நிலைத்திணையாகிய இந்தப் பிரபஞ்ச முழுமையையும் தானாகவே தன்னிடத்திலிருந்து வெளிப்படுத்துகிறான். முறையே தனித்தும் கூடியுமிருக்கிற ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் அப்பாலுள்ளது பிரம்மம். பிரம்மத்திலே பகுதிகளில்லை. அதனை எளிதில் உணர்ந்துகொள்ளும்பொருட்டே பகுதிகளிருப்பதாகப் பாவித்துக்கொள்கிறோம். படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய தொழில்களைச் செய்கின்ற அமிசத்தைச் சமய சாத்திரங்கள் ஈசுவரனென வழங்குகின்றன. துவிதத்தினுள்ளே படாததாய் வேறுபாடற்று இருக்கின்ற பாகத்தையே பிரம்மம் எனக் குறியீடு செய்து

வழங்குகிறேம். ஆனுல், ஜீவன், உலகம் என்ற இவற்றினின்றும் பிரம்மம் முற்றும் வேறுபட்ட பொருளென்றும் நினைத்துவிடாதே. பிரம்மமே ஜீவர்களும்பிரபஞ்சமுமாய்உருத்திரிந்ததெனவிசிஷ்டாத் வைதவாதிகள் சொல்லுவார்கள். அத்வைதிகளோ, பிரம்மம் ஒன்றே உண்மைப் பொருளென்றும், ஜீவர்களும் உலகமும் அதன்மேல் ஆரோபிக்கப்பட்டன எனவும் கூறுவார்கள். உண்மையிலே பிரம மத்தில் ஒரு வகை வேறுபாடும் நிகழ்ந்ததில்லை. பிரபஞ்சம் நாம ரூபத்திலே தங்கியிருக்கிறதென அத்வைதி சொல்லுகிறுன். நாமமும் ரூபமும் எவ்வளவுக்கு நிலைபெற்றிருக்கின்றனவோ, அவ்வளவுக்குப் பிரபஞ்சமும் நிலைபெறும், தியானத்திஞலும் மற்றைய அனுஷ் டானங்களிஞலும் நாம ரூபம் அகன்றுவிடும்பொழுது, உரை யுணர்வுகடந்து பிரம்மம் மாத்திரமே எஞ்சியிருக்கிறது. பிரபஞ்சமும் ஜீவர்களும் அதினின்றும் வேருகிய பொருள்கள் என்னும் உணர்ச்சி இருப்பதில்லை. அப்பொழுது, 'நித்தியமாகிய சுத்த அறிவின் வடிவம் அல்லது பிரம்மம் நான்,' என்னும் உணர்ச்சி உண்டாகிறது. ஜீவ னுடைய உண்மை நிலை பிரம்மம். தியானம் முதலியவற்றிஞலே ரூபத்தின் திரையானது அகன்று போக, அவ்வுண்மை தானே வெளிப்படும். இதுவே சுத்த அத்வைத முறையின் உட்கிடக்கை. இந்தக் கருத்திணையே வேறுவேறு விதமாக வேத வேதாந்தம் முத லான சமய சாத்திரங்களனைத்தும் தெளிவுபடுத்துகின்றன.

சிஷ்: அப்படியாயின், ஈசுவரன் சர்வ வல்லமையுள்ள புருஷன் என்று கூறுவது எங்ஙனம் உண்மையாகும்?

சுவா: வரையறைக்கு உட்பட்ட குணத்திணையுடைய மனத் திணச் சார்ந்து நிற்கும் வரையும் மனிதன் மனிதனுயிருக்கிறுன். யாவற்றையும் மனத்தின் மூலமாக அறிந்து பற்ற வேண்டியவனு யிருக்கிறுன்; ஆதலாலே, அவன் எண்ணுகிற யாவும் மனத்திஞல் வரையறுக்கப்படுகின்றன. தனக்கு உருவுடைமையை நோக்கி அவ்வண்ணமே ஈசுவரனுக்கும் உருவுண்டு என்று வாதிப்பது மனி தனுக்கு இயல்பே. தான், மிகவும் உயர்ந்ததென்று கொள்வதனை மனிதன் மனித வடிவமாகவே கொள்வான். நோய் மரணம் முதலிய துன்பங்களிஞலே அல்லலுற்றுத் துணையின்றித் துயருற்று நிற் கின்ற நிலையில் மனிதன் தனக்கு ஆதரவாக ஒரு பொருளைத் தேடு வது இயல்பே. அப்பொருளினிடத்து அடைக்கலம் புகுந்தால் தனக்கு ஒரு வகைத் தீங்கும் நேரிடாது என்று நினைக்கிறுன். ஆனுல், அத்தகைய புகலிடத்தை எங்குக் காண்பது? எவ்விடத் திலும் வியாபகமாகித் தனக்கு யாதொரு வகை ஆதாரமும் வேண் டாது நிலைத்திருக்கின்ற ஆன்மாவே உண்மையான புகலிடம். மனிதன் அதனைக் கண்டுகொள்வதில்லை. தியானம் முத லிய சமயானுஷ்டானங்களிஞலே விவேக வைராக்கியமேற்பட, அவன் அதனை அறிகின்றுன். ஒருவன் எந்த மார்க்கத்தின் சமயா

னுஷ்டானங்களைக் கைக்கொண்டு முன்னேறிய போதிலும், அவன் அறிந்தோ அறியாமலோ தன்னுள்ளே இருக்கின்ற பிரம்மத்தை எழுப்புகின்றவனாகின்றான். வேறு வேறு வழிகளில் வேறு வேறு வகைப்பட்ட சாதனங்கள் இருக்கலாம். ஈசுவரனிடத்திலே நம் பிக்கையுடையவன் அந்தக் கொள்கையைப்பற்றி அதற்குரிய சமய சாதனையைச் செய்யவேண்டும். மனத்திலே உண்மை நிலை பெற் றிருக்குமாயின், தான் செய்கின்ற சாதனையின் மூலமாக உள்ளே யிருக்கும்பிரம்மமாகியசிங்கத்தைவிழித்தெழச்செய்வான். எல்லாப் பிராணிகளுக்கும் ஒரே படித்தாக இருக்கின்றநோக்கம் பிரம்மஞான மேயாகும். வேறு வேறு வகைப்பட்ட கொள்கைகள் அதனை அடை தற்குரிய வெவ்வேறு மார்க்கங்களேயாம். ஜீவனுடைய உண்மைத் தன்மை பிரம்மமேயாயினும், ஜீவன் குணங்களோடு கூடிய மனத் தினைத் தானென்று நினைத்த தன்மையினால் பல வகைப்பட்ட ஐயத் தினாலும் இடையூற்றினாலும் இன்ப துன்பங்களினாலும் அல்லற்படு கிறான். பிரம்மா முதலாகப் புல்லீறாகவுள்ள உயிர்களனைத்தும் தத்த மது சொந்த நீர்மையை அடைவதற்கு உரிய மார்க்கத்தை மேற் கொண்டிருக்கின்றன. பிரம்மத்தினோடு தான் ஒன்றாந் தன்மையை உணர்ந்துகொள்ளும் வரையும் பிறப்பிறப்பாகிய சக்கரத்தினின்று தப்ப முடியாது. மனிதப் பிறவியை அடைந்தவன், முத்தியடைய வேண்டுமென்னும் விருப்பமானது அதிதீவிரப்பட்டு நிற்கவே, அத னோடு, உண்மை நிலையை அடைந்த சற்குருவினுடைய அனுக்கிர கத்தைப் பெறுகின்றான். அப்பொழுது ஆன்ம ஞானத்தைப் பெற வேண்டுமென்னும் விருப்பமானது மிகுதிப்படுகின்றது. அங்ஙனம் நிகழாவிடின், பொன்னாசை பெண்ணாசையிலேயே பட்டு உழலு கின்ற மனமானது, அவ்வழித் திரும்புகிறதில்லை. குடும்ப வாழ்க் கையினால் வருவனவாகிய இன்பத்தையும் பொருளையும் புகழை யும் நினைத்து, அவற்றிடையே சிக்குண்டு கிடக்கின்ற உள்ளத் திலே, பிரம்மத்தை அடைய வேண்டுமென்னும் விருப்பம் எங்ஙனம் உண்டாகும்? யாவற்றினையும் துறந்து, நன்மை தீமை, இன்ப துன் பம் என இருபாற்பட்ட வாழ்க்கை என்னும் ஆற்றினிடையே அடக் கத்தோடும் நிலையாகிய புத்தியோடும் தனது உயர்தனிக் கொள் கையை அடையவேண்டுமென்று முயலுபவனே ஆன்ம ஞானத்தை யும் அடைகின்றவனாகின்றான். தன்னுடைய சித்த சுத்தியின் வலிமையினால் உலகமென்னும் மாயவலையைக் கிழித்தெறிந்து வீரம் பொருந்திய ஆண் சிங்கத்தைப்போல மாயையினுடைய கட்டி லிருந்து அவன் வெளிப்படுகின்றான்.

சிஷ்: 'சந்நியாசம் பெறாது பிரம்ம ஞானத்தை அடைதல் இயலாது,' என்பது உண்மைதானா?

சுவா: 'ஆம், ஆயிரம் முறை உண்மையே. புறத்துறவு உள்ளத் துறவு ஆகிய இரண்டும் வேண்டும். மனத்திலே வரித்துக்கொண்ட

சந்நியாசமும் புறத்தே கிரியைகளோடு பெற்றுக்கொண்ட சந்நியாசமும் ஆகிய இரண்டும் வேண்டும். ''இன்றியமையாது வேண்டப்படுகிற சாதனங்களின்றிச் செய்கிற தவத்தினுல்'' என்னும் உபநிடத வாக்கியத்துக்கு உரை எழுதும்போது சங்கராசாரிய சுவாமிகள், '(காஷாயம், தண்டு, கமண்டலம் என்கின்ற) சந்நியாசத்துக்குரிய வெளி அடையாளங்களில்லாது செய்கிற சாதனையினுல் பெறற்கரிய பிரம்மம் பெறப்படுவதில்லை,' என்று கூறுகின்றுர். பிரபஞ்சத்தில் வெறுப்பும் இன்பநுகர்ச்சிக்குரிய பொருள்களை நீக்கிவிடுதலாகிய துறவுமின்றி, ஆன்மிக வாழ்க்கையிலே யாதொன்றினையும் அடைதல் கூடாது. ''தந்திரத்தினுல் பறித்துக்கொள்ளக்கூடிய சிறு குழந்தையினுடைய கைத்தின்பண்டம் போன்றதன்று அது !''*

சிஷ்: ஆனுல், ஐய, சமய சாதனைகளைச் செய்து கொண்டு போம்பொழுது துறவு நேர்தல் கூடுமே !

சுவா: அவ்வண்ணம் படிப்படியாக நேருமென்று நினைத்திருப்போர் அவ்வகையில் அதனைப் பெறுவாராக ! ஆனுல், நீயேன் காத்துக்கொண்டு வாளா இருக்க வேண்டும்? உண்மை ஞானப் பெருக்காகிய நீரூற்றினை உன்னுடைய வாழ்க்கையென்னும் நிலத்தில் பரவச் செய்வதற்கு வேண்டிய வாய்க்காலை நீ உடனே வெட்டத்தொடங்குவாயாக. 'அவசரமில்லை; ஆன்மலாபம் படிப்படியாக வரட்டும் !' என்று சொல்லிச் சமய சாதனைகளிற் கருத்தற்றிருப்போரை ஸ்ரீராமகிருஷ்ணர் இழித்துரைப்பதுண்டு. ஒருவனுக்கு நீர் வேட்கை இருந்தால், சும்மா இருப்பானு? தண்ணீரை நாடி உடனே ஓடுவானன்றே? ஞான நீருக்கு உரிய தாகம் உனக்கு இன்னும் வரவில்லை. ஆதலாலே, நீ சோம்பிப்போய் வாளா இருக்கின்றுய். ஞானத்தையறியவேண்டுமென்னும் ஆவலானது முற்றவில்லை. ஆதலால், குடும்ப வாழ்க்கையில் அடைகின்ற சிற்றின்பங்களிலே திளைத்து வாழ்கின்றுய்.

சிஷ்: யாவற்றையும் துறந்துவிட வேண்டுமென்னும் எண்ணம் எனக்கு ஏன் உண்டாகவில்லை என்பதை யான் உள்ளவாறு உணர்ந்துகொள்ளாதிருக்கின்றேன். தயை செய்து அதற்கு ஒரு வழி காட்டியருள வேண்டும்.

சுவா: கருவியும் முடிவும் உன் கையிலே இருக்கின்றன; நான் அவற்றைச் சிறிது விரைவுபடுத்தலாம். நீ எத்தனையோ சாத்திரங்களைப் படித்திருக்கின்றுய். பிரம்ம ஞானிகளாகிய சாதுக்களோடு கலந்துறவாடித்தொண்டு செய்கின்றுய். இதுவும் உனக்குத் துறவுக்குரிய எண்ணங்களைத் தாராவிடின் உன்னுடைய வாழ்க்கை வீண் போவதே; ஆயினும், முற்றிலும் வீண் போகாது.—எப்போதாயினும் ஒரு காலத்தில் இந்தப் பயன் வெளிப்பட்டுத் தோன்றும்.

*இராம பிரசாதுவின் பாட்டு.

மனச் சோர்வடைந்த சிஷ்யர் மறுபடியும் சுவாமிஜியை நோக்கி, ''ஐய, தேவரீருடைய திருவடியைப் புகலிடமாகக் கொண்டேன். இந்த உடல் விழுமுன் நான் உண்மையை உணர்ந்து கொள்ளும்பொருட்டு முத்திக்குரிய வழியினைத் திறந்துவிடுதல் வேண்டும்,'' என்றார்.

சுவா: அஞ்ச வேண்டுவது எதற்கு? எப்பொழுதும் விவேகமுள்ளவனயிரு, உன் உடல், உன் வீடு, இங்கே காணப்படுகிற உயிர்க் கூட்டங்கள் ஆகிய இவையனைத்தும் கனவைப்போலப் பொய்த்தன்மையனவே. இந்த உடல் சடத்தன்மை படைத்த ஒரு கருவியே என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள். இதனுள்ளே இருக்கின்ற புருஷனே உனது உண்மைத் தன்மை என்பதை அறிந்துகொள். மனம் என்பது சூக்கும வடிவமாய் அப்புருஷனை மறைத்திருக்கின்ற அங்கி; இந்த உடல் அவனுக்குப் புறத்தே உள்ள பருப்பொருளாகிய அங்கி. மயக்கத்தைத் தருகிற இந்தத்திரைகளிலே வேறுபாடற்றவனும் அகண்டிதனும் தன்னொளியுடையோனுமாகிய புருஷன் மறைந்து கிடக்கிறான். ஆதலால், உன் உண்மைத் தன்மையை நீ அறிந்துகொள்ளவில்லை. புலன்களை நாடிப் புறத்தே செல்கின்ற மனத்தின் ஓட்டத்தை மாற்றி அகத்தே நோக்கும்படி செய்தல் வேண்டும். மனத்தை வதைத்துவிட வேண்டும். உடல் சடப்பொருளாலானது. அது அழிந்து பஞ்ச பூதங்களிலே கலந்துவிடுகின்றது. எண்ணங்களின் கூட்டமாகிய மனமானது, விரைவில் அழிந்து போவதில்லை. அது சிறிது காலத்துக்கு வித்து வடிவமாய்க் கிடந்து, பின்பு முளைத்து மரமாகின்றது; அதாவது, மற்றொரு தேகத்தையெடுத்துப் பிறப்பிறப்பாகிய சக்கரத்தினுள்ளே இயங்குகின்றது. ஆன்ம ஞானம் உதிக்கும் வரையும் இப்படி நிகழும். ஆதலாலே, தியானத்தினலும் மனத்தை ஒருவழிப்படுத்துவதனலும், ஞானத்திலிருந்து எழுகின்ற விவேகத்தின் வலிமையினலும் சச்சிதானந்தக் கடலினுள்ளே இந்த மனத்தை அமிழ்த்துவாயாக. மனம் அழியும் பொழுது, அதனைச் சார்ந்தன யாவும் மறைந்துபோய்விடுகின்றன; அப்போது நீ பிரம்மத்திலே நிலை பெற்றிருப்பாய்.

சிஷ்: அடக்குதற்குரிய இவ்வுள்ளத்தை, பிரம்மத்தின்பாற் செலுத்துவது மிகவும் கடினமாயிருக்கின்றது.

சுவா: வீரனுக்கு முடியாத காரியமென்ன? வலியிழந்த சிந்தையை உடையவர்களே இவ்வண்ணம் பேசுவார்கள். "**வீராணமேவ கரதலகதா முக்தி: நபுன: காபுருஷாணம்**—முத்தியை அடைவது வீரவானுக்கு எளிது. கோழை நெஞ்சுடையவர்களுக்கு இயலாதது." "**அப்யாசேநது கௌந்தேய வைராக்யேனச க்ருஹ்யதே**—துறவினலும் அப்பியாசத்தினலும் மனத்தைக் கட்டுப்படுத்துவாயாக, ஓ அர்ச்சுனனே!'' எனக் கீதை சொல்லுகிறது. சித்தமானது

தெளிந்த நீர் நிறைந்த குளத்தைப் போன்றது. புலன்களிலே பட்ட பொருள்களின் சேர்க்கையினுலே அதனிடத்திருந்து எழுகின்ற அலைகளே மனம் எனப்படுவது. ஆதலால், ஒன்றின் பின் ஒன்ருகத் தொடர்ந்து வருகின்ற எண்ணங்களின் அலைகளே மனம். இந்த மன அலைகளிலிருந்து வேட்கை உண்டாகிறது. இவ் வேட்கை விருப்பமாகப் பரிணமித்துச் செயலாகி, தூலக்கருவியாகிய உடல் வழியாகத் தொழில் புரிகின்றது. கருமத்துக்கு முடிவில்லை. ஆதலால், கருமத்தின் பயனுக்கும் முடிவில்லை. கருமப் பயனுகிய எண்ணற்ற அலைகளினுலே மனமானது எப்பொழுதும் உந்தப்படுகிறது. மனத்திலுள்ள எல்லா விருத்திகளையும் நீக்கி அதனை மீட்டும் தெளிந்த குளமாக்குதல் வேண்டும். வேறுபாட்டோடு கூடிய எதுவும் அதனிடத்து எஞ்சியிருத்தல் கூடாது. அப்பொழுது பிரம்மம் வெளிப்பட்டுத் தோன்றும். ''உள்ளத்திலுள்ள முடிச்சுகளெல்லாம் அப்பொழுது அறுந்து போகின்றன,'' என்பது முதலாகிய வேத வாக்கியங்கள் இந்த நிலைமையைச் சிறிது காட்டுகின்றன. உனக்குத் தெளிவாயிற்ரு?

சிஷ்: ஆம் ஐய, ஆனுல், தியானமானது தியானிக்கப்படுகிற யாதேனும் ஒரு பொருளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டாவா?

சுவா: உனது தியானத்தின் பொருள் நீயாகவே இருப்பாய். எவ்விடத்தும் பரவியிருக்கின்ற ஆன்மா நீயே என நினைத்துத் தியானிப்பாயாக; ''தேகம் நானன்று; மனம் நானன்று; புத்தி நானன்று; தூல சூக்கும சரீரமும் நானன்று,'' என்று இவ்வாறு ஒவ்வொன்றினையும் அகற்றிவிடுகின்ற முறையினுலே உரையுணர்வு கடந்த ஞானத்திலே உன் உள்ளத்தை அமிழ்த்துவாயாக; அதுவே உனது உண்மை நிலை; மீட்டும் மீட்டும் மனத்தை அங்ஙனம் அமிழ்த்தி அதனை மாய்த்துவிடு. அப்பொழுதுதான் நீ அறிவு வடிவத்தை அடைந்து, உன் சொந்தத் தன்மையிலே நிலைபெற்றிருப்பாய். அறிவானும் அறியப்படும் பொருளும், தியானிப்பானும் தியானிக்கப்படும் பொருளும் ஒன்ருகத் தோற்ற வடிவாகிய ஆரோபமனைத்தும் அகன்று போய்விடும். இதனையே 'திரிபுடி பேத ஞானத்தைக் கடந்து நின்ற நிலை' எனச் சாத்திரங்கள் மொழிகின்றன. அறிவான் ஆன்மாவாய் இருக்கும் பொழுது என்ன கருவியினுல் அதனை அறிதல் கூடும்? ஆன்மாவே ஞானம்; ஆன்மாவே விவேகம்; ஆன்மாவே சச்சிதானந்தம். உள்ளதோ, இல்லதோ எனக் கூற முடியாத அநிர்வசனீயமாகிய மாயையினுடைய காணமுடியாத வல்லமையினுல் பிரம்மமாயுள்ள ஜீவனிடத்துப் பேதபுத்தி ஏற்பட்டுவிட்டது. இதனைப் பொதுவாக 'ஜாக்கிர (விழிப்பு) நிலை' என்பர். இருவேறு வகைப்பட்ட பேத நிலையிலிருந்து நீங்கிச் சுத்தப் பிரம்மத்தோடு ஒன்ருய் நிற்கும் நிலை

யினைச் சாத்திரங்கள் 'துரியாதீத நிலை' எனச் சாற்றுகின்றன. இது "ஸ்திமித ஸலிலராசி ப்ரக்யமாக்யாவிஹீனம்—பேரில்லாததாய்ச் சிறிதேனும் இயக்கமில்லாத கடலைப் போன்றுள்ளது."

பிரம்ம நிலையின் மிகுந்த ஆழத்திலிருந்து வெளிப்படுத்திய மொழிகள் போலவே சுவாமிஜி இந்தச் சொற்களைப் பகர்ந்தார்.

சுவா: ஞான சாத்திரங்களும் சமய சாத்திரங்களும், கருத்தா கருமம் என்னும் வேறுபாடு உளதாகிய வியவகார ஞான நிலையிலே தோற்றியவை. இதற்கு அப்பாலாயிருக்கின்ற உண்மைப் பொருளை மனித மொழியினலோ எண்ணத்தினலோ முற்றிலும் வரையறை செய்தல் இயலாது. விஞ்ஞான சாத்திரம் தத்துவ சாத்திரம் முதலியனவெல்லாம் ஒவ்வொரு பாகமாகிய உண்மைகளே. உரையுணர்வு கடந்த உண்மைப் பொருளை எடுத்துக் கூறுவதற்கு அவை தகுந்த வழிகளாக மாட்டா. பாரமார்த்திக நிலையிலிருந்து பார்க்கும்பொழுது, சமயக்கொள்கைகளும், கருமங்களும், நீயும், நானும், பிரபஞ்சமும், அனைத்தும் பொய்யாகவே காணப்படுகின்றன. அப்பொழுதுதான் 'நான் மாத்திரமே உண்மைப் பொருள்,' என்னும் பேருண்மை புலப்படுகின்றது; எவ்விடத்திலும் வியாபித்திருக்கின்ற ஆன்மா நானே; நான் உளேன் என்பதற்கு நானே சாட்சி. அங்ஙனமிருக்கும் பொழுது நான் உளேன் என்னும் உண்மையை நிலைநாட்டுவதற்கு வேறு சான்று எங்கிருத்தல் கூடும்? சமய சாத்திரங்கள் சொல்லுவது போல, "என்றும் நித்திய சாட்சியாய் இருக்கிற நான் என என்னை அறிந்துகொண்டிருக்கிறேன்—**நித்யமஸ்மத் பிரஸித்தம்.**" நான் அந்த நிலையை உள்ளபடி கண்டு அடைந்தனுபவித்திருக்கிறேன். நீயும் அதனைக் கண்டறிந்து, பிரம்மத்தைப் பற்றிய இந்த உண்மையை யாவருக்கும் போதிப்பாயாக. அப்பொழுதுதான் நீ சாந்தியை அடைவாய்.

இந்தச் சொற்களை இயம்பும் பொழுது ஆழ்ந்த எண்ணத்திலே அழுந்தினவர்போலச் சுவாமிஜியினுடைய திருமுக மண்டலத்திலே ஒரு தோற்றம் காணப்பட்டது. சிறிது நேரம் கழித்து அவர் பின்னும் சொல்லுவார்: "உனது வாழ்க்கையிலே எல்லா உண்மைகளுக்கும் மேலான உண்மையாயும் எல்லா ஞானங்களையும் தன்னுள் அடக்கியதாயும் இருக்கின்ற இந்தப் பிரம்ம ஞானத்தை நேரில் கண்டு உணர்ந்து, இதனை உலகத்துக்குப் போதிப்பாயாக. இதனல் உனக்கும் நன்மையுண்டாகும்; மற்றவர்களுக்கும் நன்மையுண்டாகும். எல்லா உண்மைகளின் சாரமாய் விளங்குகிற இவ்வுண்மையை நான் உனக்கு இன்று தெரிவித்திருக்கிறேன். இதைவிட உயர்ந்ததொன்றில்லை."

சிஷ்: ஐய, தேவரீர் இப்பொழுது ஞானத்தைப்பற்றிப் பேசுகின்றீர். சில வேளைகளில் பத்தியினுடைய சிறப்பையும், சில வேளைகளில் கருமத்தினுடைய உயர்வையும், சில வேளைகளில் யோகத்தி

னுடைய பெருமையையும் விரித்துக் கூறுகின்றீர். இதனால், எங்கள் உள்ளத்துக்குக் கலக்கம் உண்டாகிறது.

சுவா: நல்லது; மனிதன் அடைய வேண்டிய உயர்ந்த பேறு பிரம்ம ஞானமேயாகும். இதுவே உண்மை. ஆனால், முழு நேரமும் மனிதன் பிரம்ம ஞானத்திலே அழுந்திக்கிடத்தல் கூடாது. அதி னின்று வெளிப்பட்டு வரும்பொழுது அவனுக்கு ஏதாவது முயற்சி யிருத்தல் வேண்டும். மக்களுக்கு நன்மையைத் தருகின்ற முயற் சியை அவன் செய்தல் வேண்டும். ஆதலால், அத்வைதமாகிய கொள்கையோடு மன்னுயிர்க்குத் தொண்டு புரி என நான் உனக்கு வற்புறுத்திக் கூறுகிறேன். ஆனால், என் மைந்தனே, கருமத்தி னால் ஏற்படுகின்ற சிக்கலோ, பெரிது. பெரிய மகானுபாவர்களும் அதனிடையே அகப்பட்டு, பந்தமுற்றவர்களாகின்றார்கள். ஆத லால், எத்தொழிலைச் செய்யினும், அதனால் விளைகின்ற பயனை விரும்பாது செய்தல் வேண்டும். இதுவே கீதையின் போதனை. பிரம்ம ஞானத்திலே கருமத்தொடர்பு சிறிதேனும் இல்லை என்பதை அறிந்துகொள்வாயாக. நற்கருமங்கள் சித்தத்தைத் தூய்மைப் படுத்துகின்றன. இது ஒன்றே அவற்றினால் எய்தப்படும் பேறு. ஆதலாலன்றோ பாஷ்யகாரராகிய சங்கரர் ஞானத்தையும் கருமத்தையும் ஒன்று கூட்டிப் பேசுகின்ற கொள்கைகளை மிகவும் கண்டித்து எழுதியிருக்கின்றார்? சுயநலமற்ற கருமத்தைக் கருவி யாகக் கொண்டு ஒரு சிலர் பிரம்ம ஞானத்தை அடைகின்றனர். இது கருவியாகுமேயன்றி, பிரம்மத்தை அடைகின்ற முடிபு ஆகாது. விவேகமாகிய மார்க்கத்திலே செல்வதும், ஏனைய சாதனைகளைச் செய்வதும் பிரம்ம ஞானத்தை அடையும்பொருட்டே என்பதை முற்றிலும் அறிந்துகொள்ளுவாயாக.

சிஷ்: ஐய, தயை செய்து ராஜயோக பத்தியோகங்களினால் விளைகின்ற நலத்தைப்பற்றிச் சொல்லியருளுதல் வேண்டும்.

சுவா: இந்த மார்க்கங்களைப்பற்றி அனுஷ்டிப்பவர்களிற் சிலர் பிரம்ம ஞானத்தை அடைகின்றனர். ஆண்டவனிடத்து அன்பு செலுத்துகின்ற பத்தியென்னும் மார்க்கம் மிகவும் பழமை யானதெனச் சொல்லுதற்குரியது; ஆனால், அனுஷ்டிப்பதற்கு எளி தானது. யோக மார்க்கத்திலோ, பல தடைகள் இருக்கின்றன. மனமானது சித்திகளை விரும்பி, நீ உனது உண்மை நிலையை அடைவதற்கு முன்னேறிச்செல்கின்ற மார்க்கத்திலிருந்து உன்னை விலக்கிவிடுதல் கூடும். ஞான மார்க்கமே அதி தீவிரத்திற் பயனைத் தருவது; எல்லாக் கொள்கைகளுக்கும் காரணம் இதுவெனக் காட்டி நிற்பது. ஆதலால், எல்லாத் தேசங்களிலும் எல்லாக் காலங்களி லும் அது எல்லாராலும் பெரிதும் மதிக்கப்பட்டது. ஞான மார்க்கத் திலும் மனமானது வீண் வாதமென்னும் முதலும் முடிவும் இல் லாத வலையிலே சிக்கிவிடுதல் கூடும். ஆதலாலே, அதனோடுகூட

தியானத்தையும் அனுஷ்டித்தல் வேண்டும். விவேகமும் தியானமும் கருவியாகக் கொண்டு பிரம்மத்தை அடைதல் வேண்டும். இந்த மார்க்கத்திலே தளர்வின்றி முயன்று நிற்பவன் திண்ணமாகவே பிரம்ம ஞானத்தை அடைவான். ஆதலாலே, விரைவாகப்பயனைத் தரத்தக்க எளிய வழி இதுவென்பது எனது கருத்து.

சிஷ்: பகவானுடைய அவதாரங்களைப் பற்றிய கொள்கைகளைக் குறித்துச் சில விஷயங்களைத் தயவு செய்து தெரிவித்தருளல் வேண்டும்.

சுவா: யாவற்றையும் ஒரு நாளையிலேயே பூரணமாக அறிந்து விட வேண்டுமென்று நீ நினைக்கின்றாய் போலக் காணப்படுகின்றது!

சிஷ்: ஐய, என் மனத்திலுள்ள ஐயப்பாடுகளையும் விளக்கக் குறைகளையும் ஒரு நாளிலே தெளிவுபடுத்திவிட்டால் இடையிடையே தேவரீருக்குத் தொல்லை கொடுக்க நேரிடாது.

சுவா: சமய சாத்திரங்களிலே மிக உயர்ந்ததாகக் கூறப்பட்டிருக்கின்ற இந்த ஆன்ம ஞானமானது எவருடைய திருவருளினலே ஒருகணப்பொழுதிலே கைகூடுகின்றதோ, அவரே நடமாடும் கோயிலாவார். அவரே அவதார புருஷர். பிறந்த நாள் முதலே அத்தன்மையோர் பிரம்ம ஞானியராயிருக்கின்றனர். பிரம்மத்துக்கும் பிரம்ம ஞானத்துக்கும் சிறிதேனும் வேறுபாடில்லை. "**பிரம்ம வேத பிரம்மைவ பவதி**—பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமாகின்றான்.'' மனத்தினலே ஆன்மாவை அறிதல் கூடாது. ஏனெனில், ஆன்மாவே அறிபவனாய் இருக்கின்றான். இதனை நான் முன்னர் உனக்குத் தெரிவித்திருக்கின்றேன். ஆதலால், மனிதனுடைய விவகார புத்தியினலே அறிந்துகொள்ளக்கூடிய பேறெல்லை, அவதார புருஷரேயாவர். ஆன்ம ஞானத்திலே எப்பொழுதும் நிலைபெற்றிருக்கின்ற அவதார புருஷரையே மனித உள்ளமானது உயர்ந்த ஈசுவர சொரூபமாகக் காணுதல் கூடும். இதற்கப்பால் விவகார ஞானம் செல்லாது. பிரம்ம ஞானியர் மிக அருமையாகவே இவ்வுலகத்திலே அவதரிக்கின்றனர். ஒரு சிலரே அவர்களை அறிந்துகொள்ளுதல் கூடும். பிரபஞ்சக் கடலிலே சுடரொளி போலத் திகழ்பவர்கள் அவர்களே. சமய சாத்திரங்களின் உண்மைக்குச் சான்றாய் இருப்பவர்கள் அவர்களே. அத்தகைய அவதார புருஷர்களுடைய கூட்டுறவினலும் அருளினலும் மனத்தைச் சூழ்ந்திருக்கின்ற மயக்க இருளானது ஒரு கணப் பொழுதிலே அகன்று போய்விடும்; உண்மையனுபவம் உள்ளத்திலே உதயமாகும். அது எதனலாகின்றது, எவ்வழி நிகழ்கின்றது என்பதை வரையறுத்துச் சொல்லுதல் இயலாது. ஆனல், அப்படி நிகழ்கின்றது; நிகழ்வதை நான் கண்டிருக்கின்றேன். தம்மை ஆன்மாவிலே நிலைபெறச் செய்து அந்நிலையிலிருந்து ஸ்ரீகிருஷ்ணர்

கீதையை உபதேசித்தார். கீதா சாத்திரத்திலே எவ்வெவ்விடங்களில் 'நான்' என்னும் மொழி வருகின்றதோ, அது ஆன்மாவைக் குறிப்பது என்று கொள்ளல் வேண்டும். "என்னை மாத்திரமே புகலிடமாகக் கொள்," என்பதன் கருத்து, "ஆன்மாவிலே நிலை பெற்றிரு," என்பதாம். இந்த ஆன்ம ஞானமே கீதா சாத்திரத்தினுடைய மிக உயர்ந்த நோக்கம். இந்த ஆன்ம ஞானத்தை அடைவதற்குக் கருவியாகவே ஏனைய யோகங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இந்த ஆன்ம ஞானம் இல்லாதவர்கள், உண்மையிலே தற்கொலை புரிந்தவர்கள் ஆவார்கள்; பொய்ப்பொருளைப் பற்றிக் கிடந்து தம்மைத் தாமே கொன்றுவிடுகிறார்கள்; புல நுகர்ச்சியாம் வலையிலே அகப்பட்டு உயிரை இழந்துவிடுகின்றார்கள். நீங்களும் மனிதர்களல்லவா? இரண்டு நாட்களுக்கு நிலைத்திராத சிற்றின்ப அனுபவங்களென்னும் இந்தக் குப்பையை விட்டுவிடுதல் கூடாதா? முழு அஞ்ஞானத்திலே பிறந்து அஞ்ஞானத்திலே இறந்து போகின்ற மக்களுடைய எண்ணிக்கையிலே நீங்களும் சேரவேண்டுமா? 'இனியன' என்பவற்றைத் துறந்து, 'நல்லன' என்பவற்றைக் கைக்கொள்வாயாக; இந்த ஆன்மாவைப்பற்றி எல்லாருக்கும் சொல்லுவாயாக; மிக மிகத் தாழ்ந்தோருக்கும் உரைப்பாயாக. தொடர்ச்சியாக இதனைப்பற்றி மொழிவதில் உன்னுடைய அறிவும் தெளிவடையும். எப்பொழுதும் "தத்வமஸி—அது நீயாகுய்"; "ஸோஹமஸ்மி—நான் அவனாய் இருக்கின்றேன்"; "ஸர்வம் கல்விதம் பிரம்ம—இவை யாவும் பிரம்மம்," என்னும் இந்த மகா மந்திரங்களை எப்பொழுதும் உச்சரித்து இதயத்திலே ஆண் சிங்கம்போன்ற தைரியத்தை உடையவனாய் இருப்பாயாக. எதற்கு அச்சப்பட வேண்டும்? அச்சமே மரணம்; அச்சமே பாவங்களுக்குள் பெரிய பாவம். மானிடனாகிய அருச்சுனன் அச்சத்தினால் தீண்டப்பட்டான். அதனால், ஆன்மாவிடமே நிலைப்பெற்றிருந்த பகவானாகிய ஸ்ரீகிருஷ்ணர், அவனுக்குக் கீதையை உபதேசித்தார். அப்படியிருந்தும், அச்சம் அவனை விடவில்லை. அதன்பின் அருச்சுனன் பகவானுடைய விசுவரூபத்தைக் கண்டு ஆன்மாவிலே நிலைபேறடைந்தான். ஞானத்தீயில் அவனுடைய கருமத்தளைகள் வெந்து போயின. அவன் முனைந்து நின்று போர் செய்தான்.

சிஷ்: ஐய, ஆன்ம தரிசன நிலையை அடைந்த பின்னும் மனிதன் கருமம் செய்தல் கூடுமா?

சுவா: ஆன்ம தரிசனத்தின் பின்பு பொதுவாக நாம் கருமம் என்று சொல்வது நிலைபெற்றிருப்பதில்லை. அதன் தன்மை மாறிவிடுகின்றது. ஞானி செய்கின்ற கருமங்கள் உலகுக்கு உபகாரத்தையே செய்கின்றன. உண்மையை உணர்ந்த மனிதன் செய்வன அனைத்தும், சொல்வன அனைத்தும், எல்லாருடைய நன்மையையும் கருதியனவேயாம். நாங்கள் ஸ்ரீராமகிருஷ்ணரைக்

கண்டிருக்கின்றோம். அவர் "தேஹஸ்தோ அபி நதேஹஸ்த:—தேகத்தோடிருந்தும் தேகத்தோடு ஒன்றாகாதிருந்தார்." அத்தகைய சான்றோர்களுடைய கருமத்தின் நோக்கத்தை ஆராயுமிடத்து, "லோகவத்து லீலா கைவல்யம்—மனிதர்கள் போன்று அவர்கள் செய்கிற கருமங்களெல்லாம், திருவிளையாடல்களாய்த் திகழ்வன," என்று சொல்லலாம்.

(33)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1901-ஆம் ஆண்டு.]

கல்கத்தா நகரிலுள்ள ஜூபிலிச் சித்திரகலாசாலையை நிறுவியவரும் அதன் ஆசிரியரும் ஆகிய ஸ்ரீயுத ரநாதப்பிரசாததாசகுப்தரோடு சிஷ்யர் இன்று மடத்திற்கு வந்தார். ரநாத பாபு ஓவியக்கலையில் மிகத் தேர்ந்தவர்; சிறந்த கல்விமான்; சுவாமிஜியின்மீது மிகுந்த மதிப்புடையவர். க்ஷேமச் செய்தி விசாரித்த பின்பு ரநாத பாபுவோடு சுவாமிஜி சித்திரக்கலையைப் பற்றிப் பல்வேறு விஷயங்களைப் பேச ஆரம்பித்தார்.

சுவா: உலகத்திலே நாகரிகம் படைத்த நாடுகள் எல்லாவற்றிலும் உள்ள சித்திரங்களின் வனப்பைப் பார்வையிடும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது; ஆனால், நமது நாட்டிலே பௌத்த காலத்திலே சித்திரக்கலையானது எய்தியது போன்ற வளர்ச்சியை நான் வேறு எவ்விடத்திலும் காணவில்லை. மொகலாய சக்கரவர்த்திகள் அரசு புரிந்த காலத்திலும் சித்திரக்கலை சிறப்புற வளர்ச்சி எய்தியது. தாஜ்மஹாலும், ஜும்மா மசூதியும் அந்த வளர்ச்சிக்கு அறிகுறியாய் இன்னும் நிலைபெற்றிருக்கின்றன.

மனிதன் யாதொன்றைச் செய்கின்றானோ அதனிடத்து ஒரு கருத்து வெளிப்படும்படியாகச் செய்தலே சித்திரக்கலைக்கு உற்பத்தியாகும். நிறம் முதலியன எவ்வளவாகக் காணப்படினும், ஒரு கருத்தை வெளிப்படுத்தாத ஓவியமானது உண்மைச் சித்திரமெனக் கொள்ளப்படமாட்டாது. நாள்தோறும் பயன்படுதற்குரிய நீர்ச்செம்பு, கிண்ணம், தட்டு முதலியனவும் ஒரு கருத்தை வெளிப்படுத்தும் தன்மையனவாய் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பாரிஸ் நகரத்துப் பல்கலைகழகத்திலே வெள்ளிய சலவைக் கல்லினாற் செய்த அற்புதமான உருவம் ஒன்றினை நான் கண்டேன். அதன் கீழே, "ஓவியக்கலை, இயற்கையினது திரையை நீக்குகிறது," என எழுதப்பட்டிருந்தது; அஃதாவது, இயற்கையிலே மறைந்திருக்கின்ற வனப்பினை நோக்கும்பொருட்டு ஓவியக்கலையானது தன் கைகளாலே இயற்கையை மறைத்திருக்கின்ற திரைகளை அகற்றிவிடுவது என்பது. இயற்கை வனப்பானது முற்றிலும் வெளிப்படுத்

தப்படவில்லை என்பதையும், வெளிப்படுத்தப்பட்ட அழகினைக் கண்டு சிற்பம்வல்லோன் பரவசப்பட்டுவிட்டான் என்பதையுங் காட்டுந் தன்மையாய், அவ்வுருவம் அமைக்கப்பட்டிருந்தது. இத்தகைய அழகிய எண்ணத்தை வெளிப்படுத்த முயன்ற சிற்பியைப் புகழாது இருத்தல் இயலாது. இத்தகைய புதிய கருத்தமைந்த சிற்பத்தைச் செய்வதற்கு நீர் முயலுதல் வேண்டும்.

ரநாத பாபு: ஆம்; காலம் வாய்க்கும் பொழுது புதிய சில அமைப்புச் சிலவற்றைச் செய்யவேண்டும் என்று தான் விரும்புகிறேன். ஆனால், இந்த நாட்டிலே என்னை ஊக்கப்படுத்துவார் யாரும் இல்லை. இது வறுமையுற்ற நாடு. ஆற்றலை மதிக்கும் தன்மை இங்கு இல்லை.

சுவா: முழு மனத்தோடு நீர் செவ்வையாகிய நல்ல வேலை ஒன்றினைச் செய்வீராயின், யாதாயினும் ஓர் எண்ணத்தையாவது சிற்ப மூலமாக வெளிப்படுத்திக் காட்டுவீராயின், நாளடைவில் அது மதிப்பினைப் பெறும். உண்மையாகிய ஒரு பொருள் இவ்வுலகத்திலே மதிப்புப்பெறாது போவதில்லை. ஓவியம் வல்லார் சிலர் இறந்து ஆயிரமாண்டுக்குப் பின்பு மதிப்பையடைந்தனர் என்பதை யான் கேள்விப்பட்டது உண்டு.

ரநாத பாபு: அஃது உண்மையே. ஆனால், காரணமின்றி நேரத்தையும் வல்லமையையும் செலவிடுதற்கு வேண்டிய தைரியம் எங்களிடத்தில்லை. நாங்கள் ஒன்றுக்கும் பற்றாதவர்களாய்ப் போய் விட்டோம். ஐந்து வருடம் முயன்று நான் ஓரளவுக்குப் பயன் அடைந்திருக்கின்றேன். எனது முயற்சி வீண் போகா வண்ணம் தேவரீர் என்னை ஆசிர்வதித்தருள வேண்டும்.

சுவா: நீர் சரியான ஊக்கத்தோடு முயல்வீராகில், திண்ணமாகவே பயனடைவீர். உயிரும் மனமும் ஒருமித்து நிற்பவனொருவன் எந்தக் காரியத்தைச் செய்கின்றானோ, அதில் அவன் பயனடைகின்றான். அதனிடத்து உள்ளமானது பதிந்து ஒரு வழிப்பட்டு நிற்பதனால் பிரம்மமாகிய மிகவுயர்ந்த உண்மைப் பொருளை எய்துகின்றான். முழு மனத்தோடு கருமத்திலே முயன்று நிற்பவன் ஆண்டவனுடைய உதவியையும் பெறுகின்றான்.

ரநாத பாபு: மேலைத் தேசத்துச் சித்திரக் கலைக்கும் இந்திய நாட்டுச் சித்திரக் கலைக்கும் தேவரீர் என்ன வேறுபாட்டினைக் கண்டீர்!

சுவா: எங்கும் ஒருபடித்தாகவே இருக்கிறது. புதிய எண்ணங்களைக் காண்பது அபூர்வம். பல்வேறு வகைப் பொருள்களையும் புகைப்படம் பிடித்து அங்ஙனம் பெற்ற படங்களின் உதவியைக் கொண்டு அத்தேசத்தார் ஓவியங்களை வரைகின்றார்கள். ஆனால், இயந்திரங்களின் உதவியை எப்பொழுது ஒருவன் நாடுகின்றானோ, அப்பொழுது புதுக் கருத்துக்கள் மறைந்துவிடுகின்றன; உள்ளத்

தில் எழுகின்ற எண்ணங்களை வெளிப்படுத்திக் காட்டுதல் இயலாததாகின்றது. பண்டைக் காலத்து ஓவியப் புலவர்கள் புது எண்ணங்களை எண்ணி அவற்றைத் தம் ஓவியங்களிலே வெளிப்படுத்திக் காட்ட முயன்றுர்கள். இப்பொழுதுள்ள படங்கள் புகைப்படங்களை ஒத்தனவாதலின், புதுக் கருத்துக்களும் அவற்றை வளரச் செய்ய முயல்கின்ற முயற்சியும் குறைந்து போகின்றன. ஒவ்வொரு ஜாதியாருக்கும் தத்தமக்குரிய சிறப்பிலக்கணம் ஒன்று உண்டு. பழக்க வழக்கங்களிலும் வாழ்க்கையிலும் சிற்பத்திலும் ஓவியத்திலும் அந்தச் சிறப்பிலக்கணமானது வெளிப்பட்டுத் தோன்றக் காணலாம். உதாரணமாக, மேலை நாட்டிலே இசையும் நடனமும் ஒரு வகை நுட்பத்தோடு வெளிப்பட்டுத் தோன்றக் காணலாம். பரத நாட்டியத்திலே அங்குள்ளோர் தம் அவயவங்களை வீசி எறிபவர் போலக் காணப்படுவர். கருவியாற்பாடுகின்ற இசையிலே சுரங்கள் வாள்போலக் காதில் வந்து தைக்கும்; குரலினுற்பாடும் இசையிலும் அவ்வாறே. இந்நாட்டிலோ, பரதநாட்டியம் அலைகள் போன்ற சுருண்ட பாவனையுடையது. குரலினுல் பாடும் இசையின் பல்வேறு நிலைகளிலும் அத்தகைய பாவனையுளது. கருவியோடு பாடும் இசையும் அது போன்றது. எனவே, கலையிலுங்கூட வேறு வேறு மக்களுக்கிடையே வேறு வேறு இலட்சணங்கள் அமைந்திருக்கக் காணலாம். உலக சிந்தையுடைய மக்கள் இயற்கையை உயர்தனிக் கொள்கையாகக் கொண்டு ஓவியக் கலையிலும் அதனைச் சார்ந்த எண்ணங்களை வெளிப்படுத்த முயல்வார்கள். இயற்கைக்கு அப்பாலாகி இருக்கின்ற உரையுணர்வு கடந்த உண்மைப் பொருளைத் தனிப்பெருங்கொள்கையாகக் கொண்டவர்கள், சித்திரங்களிலே இயற்கைச் சத்திகளின் மூலமாக அந்த உயர் தனிக்கொள்கையை வெளிப்படுத்த முயல்வார்கள். முதலில் கூறப்பட்ட வகுப்பினர்க்கு இயற்கையே ஓவியக் கலையின் மூலாதாரமாய் அமைந்துள்ளது. இரண்டாம் வகுப்பினர்க்கு இயற்கைக்கு அப்பாலாகிய உயர்தனிக் கொள்கைகளே பிரதான நோக்கமாக அமைவன. இங்ஙனம் சித்திரக்கலையின் மூல உற்பத்தி இரு வேறு வகைப்பட்டிருப்பினும், இரண்டும் தத்தம் மார்க்கத்திலே முன்னேற்றம் அடைந்தன. மேலை நாட்டிலே உள்ள நல்ல சில ஓவியங்களைப் பார்த்தால், அவற்றுக்கும் உண்மையாகிய இயற்கைப் பொருள்களுக்கும் வேறுபாடு காணவொண்ணுது நீர் திகைப்பீர். இந்த நாட்டிலும் ஓவியக்கலை பரிபூரண நிலையை அடைந்திருந்த முன்னுளிலே, ஒருருவத்தை நோக்குவீராயின், அது இப்பூவுலகத்தை மறக்கும்படி செய்து, புதியதாகிய ஞான உலகத்துக்கு உம்முடைய உள்ளத்தை ஈர்த்துச் செல்லும். மேலை நாடுகளிலே பண்டைக்காலத்தில் எழுதப்பட்ட சித்திரங்களை ஒத்த திறமை வாய்ந்த சித்திரங்கள் இப்பொழுது எழுதப்படுவதில்லை. இந்த நாட்டிலும் புதுக்கருத்தினை வெளியிடு

கிற சித்திரங்களை வரைய முயல்வாரைக் காண்பது அரிது. உதாரணமாக, உங்களுடைய சித்திரக் கலாசாலையில் இருந்து வருகின்ற படங்களிலே உள்ளக் கருத்தை வெளியிடுந் தன்மை அமையவில்லை. இந்துக்கள் தினந்தோறும் தியானிக்கின்ற திருவுருவங்களைப் பழமையாக அவற்றுக்கு ஏற்பட்ட இலட்சணங்களோடு எழுத முயல்வீராயின் அது மிக நன்ருகும்.

ரநாத பாபு: தேவரீருடைய திருமொழிகள் எனக்கு உற்சாகத்தைத் தருகின்றன. தேவரீர் சொல்லிய குறிக்கோள்களை ஆதாரமாகக் கொண்டு நடப்பதற்கு நான் முயலுவேன்.

சுவா: உதாரணமாக, காளி மாதாவினுடைய திருவுருவத்தை எடுத்துக்கொள்வோம். அதனிடத்தே இன்பத்தோற்றமும் அச்சத்தைத் தரும் தோற்றமும் ஒன்று கூடி அமைந்திருக்கின்றன. இங்ஙனம் இருவகைப்பட்ட தோற்றத்தை எந்தப் படத்திலும் காண்பதற்கில்லை. இரு வேறு வகைத் தோற்றத்தில் ஒன்றையாவது முற்றிலும் வெளிப்படுத்திக்காட்ட முயல்வாரும் இல்லை. 'காளி மாதா' என்னும் பெயரோடு யான் எழுதிய ஆங்கில மொழிச் செய்யுளிலே காளியினுடைய அச்சத்தைத் தருகிற தோற்றத்தைக் குறிப்பிடும் எண்ணங்கள் சிலவற்றை எழுதமுயன்றிருக்கின்றேன்; அவ்வெண்ணங்களை ஒரு படத்திலே அமைத்துத் தர முடியுமா?

ரநாத பாபு: அவற்றைத் தயை செய்து தெரிவிப்பீர்களாக.

சுவாமிஜி நூல்நிலையத்திலிருந்து அச்செய்யுளைக் கொண்டுவரச் செய்து ரநாத பாபுவுக்கு உள்ளத்திற் பதியும்படி அச்செய்யுளைப் பாடிக் காட்டினர். ரநாத பாபு மௌனமாய் இருந்து செவி சாய்த்துச் சிறிது பொழுது கழித்து அகக்கண்ணிலே அத்திருவுருவத்தைக் காண்பவர் போல அச்சமுற்ற தோற்றத்தோடு சுவாமிஜியை நோக்கினர்.

சுவா: இந்தக் கருத்தினை ஒரு படத்திலே அமைத்து எழுதுவீரா?

ரநாத பாபு: ஆம், அங்ஙனம் செய்ய முயல்வேன்*; ஆனல், அதை நினைக்கும் பொழுதே தலை சுழல்கின்றதே!

சுவா: படத்தை எழுதிய பின்பு தயை செய்து எனக்குக் காட்டுவீராக; அதனைப் பூரணப்படுத்துவதற்கு வேண்டிய குறிப்புகளைப் பின்பு யான் சொல்லுவேன்.

அதன் பின் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்து முத்திரைக்காக எழுதிவைத்திருந்த உருவத்தைக் கொண்டுவரச் செய்து சுவாமிஜி அதை ரநாத பாபுவுக்குக் காட்டினர். அதனிடத்தே அலர்ந்த தாமரை மலர் பொருந்திய தடாகமும் அன்னப் பறவையும் காணப்பட்டன. யாவற்றையும் மண்டலித்த வண்ணமாக ஒரு பாம்பு காணப்பட்

---

* ரநாத பாபு அடுத்த நாளே படத்தை எழுத ஆரம்பித்தார். அது முற்றுப் பெறவுமில்லை; சுவாமிஜிக்குக் காட்டப்படவுமில்லை.

டது. முதலிலே ரநாத பாபு படத்தினுடைய கருத்தை உணர்ந்து கொள்ளாது அதனைத் தெளிவுபடுத்தும்படி சுவாமிஜியைக் கேட்டார். சுவாமிஜி பின் வருமாறு சொல்லுவாராயினர்:

''படத்திலே காணப்படுகிற அலை பொருந்திய நீர், கருமத்தைக் குறிப்பது; தாமரை மலர், பத்தியைக் குறிப்பது; எழுகின்ற ஞாயிறு, ஞானத்தைக் குறிப்பது; சூழ இருக்கின்ற பாம்பு, யோகத்தையும் விழித்தெழுந்த குண்டலினிச் சத்தியையும் குறிப்பது; அன்னம், பரமான்மாவைக் குறிப்பது. கருமம், ஞானம், பத்தி, யோகம் என்னும் இவற்றை ஒன்று கூட்டுவதனலே பரமான்மாவினுடைய தரிசனம் கிடைக்கப் பெறுகிறதென்பது படத்தினுற் காட்டப்படுகின்ற உயர்ந்த கருத்து.''

ரநாத பாபு மௌனமாய் இருந்து படத்தினுடைய கருத்தினைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தவராய், ''ஐய,தேவரீரிடமிருந்து சித்திரக் கலையைப்பற்றி நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்,'' என்று கூறினர்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஆலயத்தையும் திருமடத்தையும் அமைக்கப் போகின்ற விதத்தினைக் காட்டும் ஒரு படத்தைக் கொண்டு வந்து சுவாமிஜி ரநாத பாபுவுக்குக் காட்டி, ''இந்த ஆலயத்தையும் மடத்தையும் அமைக்கின்ற அமைப்பிலே கீழை நாட்டுச் சித்திரக்கலையிலும் மேலைத்தேசத்துச் சித்திரக் கலையிலும் சிறந்து நின்ற வனப்புகள் யாவையும் ஒன்று கூட்டிக் காட்ட வேண்டுமென்று யான் விரும்பியிருக்கின்றேன். உலக முற்றிலும் யான் யாத்திரை செய்யும்போது கட்டடங்களின் உருவ அமைப்பைப்பற்றி யான் கண்டறிந்த எண்ணங்கள் யாவற்றையும் இந்த அமைப்பிலே காட்டுவதற்கு முயல்வேன். பல தூண்களை ஆதாரமாகக் கொண்டெழுந்த ஒரு பெரிய தியான மண்டபம் அமைக்கப்படும். அம்மண்டபத்தின் சுவர்களிலே நூற்றுக்கணக்கான தாமரை மலர்கள் முற்றிலும் விரிந்து தோன்றும். அம்மண்டபம் தியானத்தில் அமர்ந்திருக்கின்ற ஆயிரம் மக்களுக்கு இடங் கொடுக்கத்தக்க பரப்புள்ளதாய் இருக்கவேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஆலயமும் தியான மண்டபமும், தூரத்தில் நின்று பார்ப்போருக்கு ஓங்கார வடிவமாகத் தோற்றும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும். ஆலயத்தினுள்ளே அன்னப் பறவையில் ஆரோகணித்த தோற்றமாக ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருவுருவம் அமைக்கப்பட வேண்டும். கதவின் இரு புறத்திலும் உயர்ந்த வலிமையும் சாந்தி நிலையையும் அன்பினுல் ஒன்று கூடியிருக்கின்ற தன்மையைக் காட்டுவதாக ஒன்றினை ஒன்று தழுவி இருக்கின்ற சிங்க உருவமும் ஆட்டுக்குட்டி உருவமும் அமைக்கப்பட வேண்டும். இந்த எண்ணங்கள் என் மனத்திலிருக்கின்றன; நான் வாழ்நாளோடிருப்பேனுயின், இவற்றைச் செய்து முடிப்பேன். அல்

லாவிடின், மேல் வரும் சந்ததியார் படிப்படியாக இவற்றைச் செய்து முடிக்க முயல்வார்கள். எல்லா வகைக் கலைகளையும் நாகரிகக் கொள்கைகளையும் உயிர்ப்பிக்கும்பொருட்டே ஸ்ரீராமகிருஷ்ணர் இந்த நாட்டிலே திருவவதாரம் செய்தார் என்பது எனது கருத்து. சமய உணர்ச்சியும் கருமமும் கல்வியும் ஞானமும் பத்தியும் இவ்விடத்திலிருந்து உலகனைத்தினுக்கும் பரவும் வண்ணம் இந்தத் திருமடமானது அமைக்கப்பட வேண்டும். இந்த முயற்சியில் நீவிர் உதவி புரிவீராக,'' என்று கூறினார்.

அங்குக் கூடியிருந்த சந்நியாசிகளும் பிரம்மசாரிகளும், ரநாத பாபுவும் சுவாமிஜியினுடைய பேச்சைக் கேட்டு வியப்புற்றனர். சிறிது பொழுது கழித்து, சுவாமிஜி ரநாத பாபுவை நோக்கி, ''இந்தத் தொழிலிலே நீர் வல்லவராய் இருக்கின்றபடியால், உம்மோடு நெடுநேரம் இதைப் பற்றி உரையாடினேன்; நீண்ட காலத்துப் பயிற்சியினாலே நீர் ஆராய்ந்தறிந்த சித்திரக் கலையின் மிக உயர்ந்த கொள்கைகளை எனக்குத் தயை செய்து சொல்லுதல் வேண்டும்,'' என்றார்.

ரநாத **பாபு:** புதிதாகத் தேவரீருக்கு யான் என்ன சொல்ல முடியும்? தேவரீரே இந்த விஷயத்தில் என்னுடைய கண்களைத் திறந்திருக்கின்றீர். என் வாழ்நாளிலே ஒரு பொழுதும் சித்திரக் கலையைப்பற்றிய இத்தனை சிறந்த சொற்களை யான் கேட்டதில்லை. யான் பெற்ற எண்ணங்களைத் தொழிற்படுத்தும் வண்ணம் தேவரீர் என்னை ஆசீர்வதித்தருள வேண்டும்.

சுவாமிஜி ஆசனத்திலிருந்து எழுந்து பசும்புற்றரையிலே உலாவிக்கொண்டிருக்கும் பொழுது சிஷ்யரை நோக்கி, ''அவர் மிக்க ஆர்வமுள்ள இளைஞர்,'' என்றார்.

சிஷ்: ஐய, தேவரீருடைய வார்த்தைகளைக் கேட்டு அவர் ஆச்சரியமடைந்தார்.

சுவாமிஜி சிஷ்யருக்கு மறுமொழி கூறாது, ''அடங்கிய சிந்தை, அரியசெல்வம்; விரும்பியதைத் தருகின்ற சிந்தாமணி,'' என ஸ்ரீராமகிருஷ்ணர் பாடுகின்ற ஒரு பாட்டினைத் தமக்குள்ளே பாடினார்.

சிறிது நேரம் உலாவிய பின்பு, சுவாமிஜி முகத்தைக் கழுவிக்கொண்டு சிஷ்யரோடு தம் அறையினுள்ளே புகுந்து, 'பிரித்தானியக் கலைக்களஞ்சியம்' என்னும் நூலிலே சித்திரக் கலையைப்பற்றிய கட்டுரையைச் சிறிது நேரம் படித்தார். அது முடிந்த பின்னர், கிழக்கு வங்காளத்தார் உரையாடுகிற முறையை இழித்துக் கூறிச் சிஷ்யரை ஏளனம் புரிவது போல நகையாடினார்.

(34)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1901-ஆம் ஆண்டு.]

சுவாமிஜி சில தினங்களுக்கு முன்பே கிழக்கு வங்காளம், அஸ்ஸாம் முதலிய இடங்களுக்கு யாத்திரை செய்து திரும்பி வந்திருக்கிறார். அவர் கால்கள் வீங்கியிருக்கின்றன. சிஷ்யர் திருமடத்திற்கு வந்து மேல் மாடிக்குப் போய்ச் சுவாமிஜியினுடைய திருவடிகளிலே வணங்கினர். நோயுற்றிருந்தும், சுவாமிஜியினுடைய திருமுக மண்டலத்திலே வழக்கமான புன்னகையும் அன்பான பார்வையும் மாறாதிருந்தன.

சிஷ்: சுவாமிஜி, தேவரீருடைய உடல் நலம் எப்படி?

சுவா: மகனே, என் சுகத்தைப்பற்றி என்ன சொல்லுவேன்! இந்த உடலானது நாளுக்குநாள் வேலை செய்வதற்குத் தகுதியற்றதாகின்றது. வங்காள பூமியில் பிறந்த காரணத்தினாலே, எப்பொழுதும் ஏதாவது ஒரு நோய் இதனைப் பற்றுகிறது. ஏதாவது கடினமான வேலையைச் செய்வதென்றால், இது பொறுக்க மாட்டாததாய் இருக்கிறது. ஆனால், இந்த உடல் எத்தனை நாளைக்கிருக்கிறதோ, அத்தனை நாளும் உங்களுக்காக வேலை செய்வேன்; வேலை செய்துகொண்டிருக்கும்போதே உடலை விடுவேன்.

சிஷ்: சிறிது காலத்திற்கு வேலையின்றி ஓய்வு கொண்டிருந்தால், தேவரீருடைய உடல் நலம் நன்னிலைக்கு வரும். தேவரீருடைய வாழ்வு உலகத்துக்கு மிகுந்த நன்மையைத் தருவது.

சுவா: மைந்தனே, என்னால் சும்மாவிருக்க இயலுமா? ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்வுலக வாழ்க்கையை நீக்குவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பே, அவர் 'காளி' என்று வழங்குகின்ற அவள் இந்த உடலினுள்ளே பிரவேசித்தாள். அவள் என்னைச் சும்மா இருக்க விடாமலும் என்னுடைய சுகத்தைப் பற்றிக் கருத விடாமலும் என்னை இங்கும் அங்கும் கொண்டு திரிந்து வேலை செய்யும்படிச் செய்கிறாள்.

சிஷ்: தேவரீர் உருவகமாகப் பேசுகின்றீரா?

சுவா: இல்லை, இல்லை. அவர் தேகத்தை விடுவதற்கு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு ஒரு நாள் என்னைத் தம் பக்கலில் அழைத்துத் தம் முன்னிலையிலே என்னை இருக்குமாறு செய்து, என்னை உற்றுப் பார்த்த வண்ணம் சமாதியிலே ஆழ்ந்தார். அப்போது மின்சார சக்தியைப் போன்ற ஒரு நுண்ணிய சக்தி என்னுள்ளே புகுவது போல நான் உணர்ந்தேன்; சிறிது நேரத்தில் மெய்ம்மறந்து அசைவற்றிருந்தேன். எவ்வளவு நேரம் அந்த நிலையில் இருந்தேனென்பது எனக்கு ஞாபகமில்லை. மீட்டும் நான் விழிப்பு நிலைக்கு வரும்போது ஸ்ரீராமகிருஷ்ணர் கண்ணீர் விடுவதைக் கண்டேன். அவரை நான் வினவிய பொழுது, அவர்

என்னை அன்பினோடு நோக்கி, "இன்று நான் எனக்கு உரியன யாவையும் உனக்குக் கொடுத்துவிட்டேன். நான் ஓட்டாண்டி யாய்விட்டேன். நீ திரும்பிப் போவதற்கு முன்னர் இந்த வல்லமையைக்கொண்டு உலகத்தின் நன்மைக்காகப் பல நன்முயற்சிகளைச் செய்வாய்," என்ருர். அந்தச் சத்தியானது என்னை இடைவிடாது வழி நடத்திப் பல வேறு வகைப்பட்ட தொழில்களையும் செய்கின்றது. இந்த உடம்பு வாளா இருப்பதற்கு ஆக்கப்பட்டதன்று.

இந்த வார்த்தைகளைக் கேட்டுச் சிஷ்யர் பேச்சற்று ஆச்சரியமடைந்தார்; 'பொது மக்கள் இவ்வார்த்தைகளை எவ்வாறு அறிந்து கொள்வார்கள் ?' என நினைத்தார். அதன் பின்பு விஷயத்தை மாற்றி, "ஐய, கிழக்கு வங்காளத்தைத் தேவரீர் எவ்வாறு விரும்புகிறீர் ?" என்ருர்.

சுவா: பொதுவாக நான் அதனை விரும்புகிறேன். வயல் நிலங்களிலே விளைவு நன்ருயிருந்தது. நாட்டுச் சீதோஷ்ணநிலையும் நல்லது; மலையடிவாரங்களின் காட்சி மிகவும் மாட்சிமையானது. பிரம்மபுத்திரா நதிக்கரை சொல்லுதற்கரிய அழகு வாய்ந்தது. கிழக்கு வங்காள தேசத்து மக்கள் இங்குள்ளாரினும் சிறிது உடல் வலி படைத்து அதிக சுறுசுறுப்புள்ளவர்களாய் இருக்கிருர்கள். அவர்கள் அதிகமாக மீன் இறைச்சி உண்பது இதற்குக் காரணமாயிருக்கலாம். அவர்கள் செய்வது எதுவோ, அதனை இடைவிடாது ஊக்கத்தோடு செய்கிருர்கள்; உணவோடு அதிகமான எண்ணெய் கொழுப்பு முதலியவற்றைச் சேர்த்துக்கொள்ளுகிருர்கள். அது அவ்வளவு நல்லதன்று; நெய்ப்பதார்த்தங்கள் உடலை வீணுகக் கொழுக்கச் செய்யும்.

சிஷ்: சமய உணர்விலே அவர்கள் எவ்வாறு இருக்கின்ருர்கள் ?

சுவா: சமய விஷயங்களிலே அவர்கள் பழைய வழக்கங்களை அனுசரிப்பவர்கள் போலக் காணப்பட்டார்கள். சமய விஷயங்களிலே விரிந்த நோக்கமுற நினைத்துப் பலர் குறுகிய உன்மத்தராயினர். டாக்காவிலே மோகினி பாபுவின் வீட்டிலே நான் இருக்கும் பொழுது, ஒரு வாலிபன் ஒரு புகைப்படத்தைக் கொண்டு வந்து, "ஐய, இவர் ஓர் அவதார புருஷரா ? தயை செய்து இவர் யாரென எனக்குச் சொல்லியருள வேண்டும்," என்ருன். எனக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று நான் பொறுமையாக அவனுக்குப் பதில் சொன்னேன். மூன்று நான்கு முறை சொல்லியும் அவன் கேளாது, என்னை மீட்டும் மீட்டும் வினவினுன். ஈற்றிலே நான் அவனை நோக்கி, "என் அன்புள்ள சிறுவனே, இனிமேல் நீ சிறிது சத்துள்ள உணவு புசித்தல் வேண்டும். அப்பொழுதுதான் உன் மூளை விருத்தியாகும். உணவுக் குறைவினுலே உனது மூளை

வறண்டு போயிற்று,'' என்றேன். இம்மொழிகளைக் கேட்டு அந்த இளைஞன் அதிக வெறுப்புற்றிருத்தல் கூடும். நான் என்ன செய்யலாம்! அந்தச் சிறுவர்களுக்கு இப்படிக் கற்பித்தாலன்றி நாளடைவில் அவர்கள் பைத்தியக்காரர்களாய்விடுதல் கூடும்.

சிஷ்: எங்களுடைய கிழக்கு வங்காளத்திலே சமீபத்திலே அநேக அவதாரங்கள் தோன்றியிருக்கின்றன.

சுவா: மனிதர் தம் குருவை அவதாரம் என்று சொல்லிக் கொள்ளலாம்; எவ்வண்ணம் வேண்டுமாயினும் எண்ணிக்கொள்ளலாம். ஆனால், கடவுளுடைய அவதாரங்களோ, எல்லா இடத்திலும் எல்லாக் காலங்களிலும் தோற்றுவதில்லை. டாக்காவில் மாத்திரமே மூன்று நான்கு அவதாரங்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

சிஷ்: அப்பக்கங்களிலுள்ள பெண்கள் எப்படிப்பட்டவர்கள்?

சுவா: பெண்கள் ஏறக்குறைய எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாய்த்தான் இருக்கின்றார்கள். டாக்காவிலே வைணவ சமயம் ஓங்கி இருக்கக் கண்டேன். ஹா—என்பவர் மனைவி நல்ல புத்திசாலி. அவள் மிகவும் கருத்தாக உணவு சமைத்து அனுப்பி வைப்பாள்.

சிஷ்: தேவரீர் நாகமஹாசயருடைய வீட்டிற்குப் போனதாகக் கேள்விப்பட்டேன்.

சுவா: அவ்வளவு தூரம் போன நான் அத்தகைய பெரியார் பிறந்த இடத்தைப் பாராது வருவேனோ? அவருடைய மனைவியார் தம் கையினாலேயே பல வகையான இனிய தின்பண்டங்களைச் செய்து எனக்குத் தந்தனர். அந்த வீடு சாந்த நிலையத்தைப்போல விளங்குகின்றது. சமீபத்திலே உள்ள கிராமக் குளத்திலே நான் நீந்தினேன். நாகமஹாசயருடைய மனைவியார் எனக்கு ஓர் உடையைத் தானமாகக் கொடுத்தார். நான் அதைத் தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டு டாக்காவை நோக்கித் திரும்பினேன். அங்கு, நாகமஹாசயருடைய திருவுருவத்தை வழிபடுவதைக் கண்டேன். அவரை அடக்கஞ்செய்த இடத்தைச் செம்மையாக வைத்திருக்க வேண்டும். இப்பொழுதுகூட அது இருக்க வேண்டிய நிலையில் இல்லை.

சிஷ்: அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் நாகமஹாசயருடைய உண்மை மதிப்பினை அறிய மாட்டார்கள்.

சுவா: அத்தகைய பெரியாரைச் சாதாரண மக்கள் எப்படி அறிந்துகொள்ளக் கூடும்? அவருடைய கூட்டுறவு கிடைக்கப் பெற்றவர்கள் உண்மையில் பாக்கியவான்களே.

சிஷ்: காமக்யா க்ஷேத்திரத்திலே என்ன கண்டீர்கள்?

சுவா: ஷில்லாங் மலைத் தொடர்கள் மிகவும் அழகு வாய்ந்தவை. அஸ்ஸாம் தேசத்துப் பிரதான அரசியல் தலைவராகிய ஸர் ஹென்றி காட்டன் துரை அவர்களை அங்குச் சந்தித்தேன். அவர்

என்னை நோக்கி, ''சுவாமிஜி, ஐரோப்பா அமெரிக்கா முதலிய நாடுகளிலே யாத்திரை செய்த நீங்கள் தூரத்திலுள்ள இந்த மலையடிவாரத்திலே என்ன விசேஷத்தைப் பார்க்க வந்தீர்கள்?'' என்ருர். அவரைப் போன்ற நற்குணமமைந்த அன்பான மனிதர்களைக் காண்பது அரிது. அவர் நான் நோய்வாய்ப்பட்டிருப்பதைக் கேள்வியுற்றுத் தம் சொந்த வைத்தியரை என்னிடத்து அனுப்பிக் காலையிலும் மாலையிலும் எனது சுகத்தைப்பற்றி விசாரிப்பார். எனது உடல் நலம் கெட்டுப்போயிருந்தமையால், நான்அங்கு அதிகமாகப் பிரசங்கம் செய்ய முடியவில்லை. வழியிலே நிதாய் எனக்குச் சேவை புரிந்து என்னை நன்கு கவனித்தான்.

சிஷ்: அந்தப் பாகங்களிலுள்ள மக்களுடைய சமயக் கொள்கைகள் எவ்வாறு இருக்கக் கண்டீர்கள்?

சுவா: அது தந்திர மார்க்கம் பரவிய நாடு. அங்கே 'ஹங்கார்' என்ற பெயருடைய தெய்வம் ஒன்றே அவதாரமாகக் கருதிவழிபடப்படுகிறதென்றும், அந்த வழிபாடு மிகப் பரவியிருக்கிறதென்றும் கேள்வியுற்றேன். 'ஹங்கார்' தேவதை சங்கராசாரியாருடைய நாமவேறுபாடோ என்பதை நான் நிச்சயமாக அறிந்துகொள்ளவில்லை.இங்ஙனம் வழிபடுவோர் துறவிகள்;ஒருவேளை தாந்திரிக சந்நியாசிகளாய் இருக்கலாம்; அல்லது சங்கர மதத்தவராயிருக்கலாம்.

சிஷ்: கிழக்கு வங்காளத்து மக்கள் நாகமஹாசயரைப் போலவே உங்களை ஏன் மதிக்கவில்லை?

சுவா: அவர்கள் என்னை மதித்தாலும் சரி; மதிக்காவிட்டாலும் சரி; அந்தப் பாகங்களிலுள்ள மக்கள் சுறுசுறுப்பானவர்களாயும் வல்லமை உடையவர்களாயும் இருக்கிருர்கள்; நாளடைவிலே இன்னும் விருத்தியடைவார்கள். இந்நாட்களிலே நாகரிகமெனக் கொள்ளுகிற பழக்க வழக்கங்கள் அந்தப் பாகங்களிலே பூரணமாகப் பரவவில்லை, நாள் செல்லச் செல்லப் பரவலாம். எல்லாக் காலங்களிலும் பழக்க வழக்கங்கள் பட்டணத்திலிருந்து நாட்டுப்புறத்துக்குப் பரவுகின்றன. இது கிழக்கு வங்காளத்தில் நிகழ்கிறது. நாகமஹாசயரைப் போன்ற பெரியாருக்குப் பிறப்பிடமாகிய இந்நாடு, எதிர்காலத்திலே சிறப்பினையடையும்; அவருடைய அருட்பிரகாசத்தினுலே கிழக்கு வங்காளம் ஒளியுடையதாகும்.

சிஷ்: ஆனுல், ஐய, சாதாரண மக்கள் அவர் ஒரு மகாத்துமா என்பதை அறிந்துகொள்ளவில்லை. அவர் தம்மை மிகுதியும் மறைத்திருந்தார்.

சுவா: அந்தப் பாகங்களிலே என்னுடைய உணவைக் குறித்துச் சிலர் பெரிதும் விசாரிப்பது உண்டு; ''இன்னுருடைய கையினின்று ஏன் உணவு பெற்றுக்கொண்டீர்?'' என்பது முதலாகப் பல கேள்விகளைக் கேட்டார்கள். நான், ''இரந்து உண்கிற சந்

நியாசியாதலாலே உணவு முதலிய விஷயங்களில் வெளியனுஷ்டா னங்களை அவ்வளவாகக் கைக்கொள்வது எதற்கு ?'' என்று மறு மொழி கூறினேன். நமது சமய சாத்திரங்கள், **"சரேன்மதுகரீம் வ்ருத்திமபி ம்லேச்சகுலாதபி**—வீடு வீடாகப்போய் அன்னத்தை இரக்கவேண்டும்; தீண்டப்படாத சாதியாரின் இல்லத்திலுங்கூட,'' என்று சொல்லவில்லையா ? சாத்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் சமய உண்மைகளை வாழ்க்கையிலே ஒன்றுபடுத்திச் சமயத்தின் உட்கருத்தை உணர்ந்துகொள்ளும்பொருட்டு, ஆரம்பத்திலே வெளியனுஷ்டானங்கள் வேண்டப்படுவனவே. ''பஞ்சாங்கத்தைப் பிழிந்தால் தண்ணீர் வருமா ?'' என ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லு கிற கதையை நீ கேட்டதில்லையா ? வெளியனுஷ்டானங்களும் கிரியைகளும் மனிதனுடைய உள்ளத்திலே இருக்கின்ற பெரிய சத் தியை வெளிப்படுத்தும்பொருட்டே ஏற்பட்டிருக்கின்றன. உள்ளே இருக்கின்ற ஆற்றல்களை எழுப்பி மனிதன் தன் சொந்த நிலை மையை அறியும்படி செய்வதே சமய சாத்திரங்களின் நோக்கம். விதி விலக்குகள் இதற்குக் கருவியாய் இருக்கின்றன. காரியத்தை மறந்து கருவிகளைக் குறித்துச் சண்டையிடுவதினால் எய்துகின்ற பயன் யாது ? நான் சென்ற ஒவ்வொரு நாட்டிலும் வழி வகை குறித்து நடைபெறுகிற சண்டையைக் கண்டேன். காரியத்தில் கண்ணில்லாதவர் மிகப்பலர். இவ்வுண்மையை நிலை நிறுத்து வதற்காகவே, ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்தார்.

மெய்ப்பொருளை அடைவதே இன்றியமையாது வேண்டப்படு வது. நீ கங்கையிலே ஓர் ஆயிரம் வருடம் நீராடினாலும், அத் தனை ஆண்டுகளும் காய்கறிகளையே உண்டுகொண்டிருந்தாலும், உள்ளே இருக்கின்ற ஆன்ம சத்தி வெளிப்பட்டு விளங்க உதவினா லன்றி, அவற்றால் எய்திய பயன் யாதுமில்லை என்பதை அறிந்து கொள்வாயாக. ஒருவன் ஒரு வகையான வெளிக் கிரியையுமின்றி ஆன்ம ஞானத்தை அடைவானாயின், அவ்வெளிக்கிரியை அற்று இருப்பதே கருவிகளுள் சிறந்த கருவி எனப்படும். ஆன்ம ஞான மடைந்த பின்பும், மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக, ஆன்ம ஞானியானவன் ஓரளவுக்குப் புறக் கிரியைகளை அனுஷ்டிக்க வேண்டியவனாகிறான். உண்மை எதுவெனில், மனத்தை யாதாயி னும் ஒன்றின்மீது நிலைத்து நிற்கும்படி செய்ய வேண்டுவதே. யாதாயினும் ஒரு பொருளிலே அது நிலைபெற்று இருக்குமாயின், அதனால் ஒன்றையே பற்றும் மன நிலை வந்தெய்தும். ஏனைய செயல்களெல்லாம் ஒடுங்கிப்போக, மனமானது ஒரே வழியிலே இடையறாது ஓடும். அநேகர் வெளிக்கருமங்களிலே முற்றிலும் சிந்தையைச் செலுத்தியவர்களாய், ஆன்ம ஞானத்திலே கருத்து வைக்க மறந்து போகின்றனர். இரவும் பகலும் விதிவிலக்கு என் னும் ஒடுங்கிய வழியிலே நிற்பாயாயின் ஆன்மாவை வெளிப்படுத்து

வது எவ்வாறு கைகூடும்? எவ்வளவுக்கு ஒருவன் ஆன்ம ஞானம் அடைந்திருக்கிறானோ, அவ்வளவுக்கு வெளிக்கிரியைகளிலே பற்றில்லாதவனாகிறான். "நிஸ்த்ரைகுண்யே பதி விசரதாம் கோ விதி: கோ நிஷேத—குணங்களைக் கடந்து அப்பாலாகி நிற்கின்ற சிந்தையை உடையவனுக்கு விதி எது, விலக்கெது?'' எனச் சங்கராசாரியார் சொல்லுகிறார். ஆன்ம ஞானத்தை அடைவதே பிரதானம். அதுவே எய்துவதற்குரிய பேறு என்பதை அறிவாயாக. ஒவ்வொரு சமயமும் இந்த உண்மையை அடைவதற்கு வழியாயிருக்கின்றது. ஒருவன் அடைந்திருக்கின்ற தியாக சிந்தையினளவே அவனுடைய முன்னேற்றத்திற்கு அறிகுறி. பெண், பொன் இவைகளிலுள்ள பற்றானது மிகுதியும் குறைந்திருக்கின்ற ஒருவனைக்கண்டால், அவன் எந்த சமயத்தவனாயினும், அவனுடைய அகத்திலுள்ள ஜீவன் விழித்துவிட்டது என அறிந்துகொள்வாயாக. ஆன்ம ஞானத்தை அடைவதற்குரிய வழி அவனுக்குத்திறக்கப்பட்டு விட்டது. ஆயிரம் அனுஷ்டானங்களைச் செய்தாலும், ஆயிரம் சமய சாத்திரங்களைக் கற்றாலும், உண்மையாகிய தியாக புத்தி உன் உள்ளத்திலே உதிக்காவிட்டால், உனது வாழ்க்கை வீணாகி விட்டதென அறிந்துகொள்வாயாக. ஆன்ம ஞானத்தை அடைகின்ற கருமத்திலே சிரத்தையோடும் முழு மனத்தோடும் முயல்வாயாக. நீ எத்தனையோ சமய சாத்திரங்களைப் படித்திருக்கிறாய். அவற்றால் அடைந்த பயன் என்னவென்று எனக்குச் சொல்லுவாயாக. சிலர் பணத்திலே மனத்தைச் செலுத்தி இலட்சாதிபதிகள் ஆனார்கள். நீ சமய சாத்திரங்களில் மனத்தைச் செலுத்திப் பண்டிதனானாய். இரண்டும் பந்தத்திற்கே ஏதுவாகும். வித்தை அவித்தை இரண்டிற்கும் அப்பால், விவகார ஞானத்திற்கும் அஞ்ஞானத்திற்கும் அப்பால், நிலை பெற்றிருக்கின்ற உண்மை ஞானத்தை அடைவாயாக.

சிஷ்: ஐய, தேவரீருடைய அருளினாலே எனக்கு அனைத்தும் தெளிவாகிறது. ஆனால், இந்தப் போதனைகளை மனத்திலமைத்துக் கொள்ளும்படி என்னுடைய முன் வினை என்னை விடவில்லையே!

சுவா: கருமம் முதலிய பசப்பு வார்த்தைகளை விட்டொழிவாயாக. உன்னுடைய முன்வினையினாலே இந்த உடலைப் பெற்றிருக்கிறாய் என்பது உண்மையாயின், தீய கருமப் பலனை நற்கருமங்களாலே அழித்து இந்தப் பிறப்பிலேயே ஜீவன் முத்தி நிலையை நீ ஏன் அடையக்கூடாது? தன்னையறிதலால் எய்தும் விடுதலை உன் கைகளிலே இருக்கிறதென்பதை அறிவாயாக. உண்மை ஞானத்திலே சமயப்பற்றில்லை. ஆனால், ஜீவன் முத்தரானோர், கருமஞ் செய்யும் பொழுது பிறருடைய நலத்துக்காகவே செய்கின்னர். அவர்கள் தங்கள் கருமப்பயனை நாடுவதில்லை. இச்சையின்

வித்து அவர்களுடைய உள்ளத்தில் இருப்பதில்லை. இல்வாழ்வானுடைய நிலையிலிருந்து இத்தன்மையாக உலகுக்கு உபகாரமாகிய நற்கருமங்கள் செய்தல் இயலாததென்றே சொல்லலாம். இல்வாழ்வாருள் இத்தகையார் ஜனக மன்னர் ஒருவரே. இந்துக்களுடைய சமய சாத்திரங்களனைத்தும் இந்த ஓர் உதாரணத்தையே எடுத்துக் காட்டுகின்றன; வேறொருவரையும் உதாரணமாகக் காட்டவில்லை. இந்நாட்களில் உங்களுள் ஒவ்வொருவரும் தாம்தாம் ஜனகரென நினைத்து நடக்கிறீர்கள்; வருடம் ஒரு குழந்தை பெற்றுவிடுகிறீர்கள் ; ஜனக மன்னரோ, உடலைப்பற்றிய உணர்வே இல்லாதவராயிருந்தார்.

சிஷ்: நான் இந்த வாழ்விலேயே ஆன்ம ஞானத்தை அடையும்படி தேவரீரென்னை ஆசீர்வதித்தருள வேண்டும்.

சுவா: நீ எதற்கு அஞ்சுகிறாய்? உண்மையான சிரத்தை இருக்குமாயின், இந்த வாழ்விலே நிச்சயமாக நீ ஆன்ம ஞானத்தை அடைவாய். ஆனால், ஆண்மையோடு முயலுதல் வேண்டும். எப்படி முயலவேண்டுமென்பதை அறிவாயா? "நான் நிச்சயமாக ஆன்ம ஞானத்தை அடைவேன்; என்ன தடை வரினும் அதனை வென்றுவிடுவேன்," என்னும் துணிவே புருஷகாரமெனப்படும். "என்னுடைய தாய் தந்தையர், நண்பர், சகோதரர் மனைவி, குழந்தை ஆகியோர் இறந்தாலும் சரி; இருந்தாலும் சரி. இந்த உடல் நின்றாலும் சரி; விழுந்தாலும் சரி, ஆன்ம தரிசனம் பெற்றாலன்றி நான் திரும்ப மாட்டேன்!" என்னும் தீர்மானத்தோடு தன்னுடைய இலக்கினை நோக்கி முன்னேறிச் செல்லுதலும் பிற எண்ணங்களைப் பொருட்படுத்தாது விடுதலும் ஆண்மையோடு கூடிய முயற்சியாகும். சுகானுபவங்களுக்காக முயல்கின்ற முயற்சி விலங்குகளிடத்தும் பறவைகளிடத்தும் உளது. மனிதன் ஆன்ம ஞானத்தை அடைவதற்காகவே இந்த உடலைப் பெற்றிருக்கிறான். உலகத்திலுள்ள சாதாரண மக்களைப்போல அவர்கள் செல்லும் வழியே நீயும் போவதாய் இருந்தால், உன் ஆண்மை எங்கே? சாதாரண மக்கள் மரணத்தின் வாயினுள்ளே புகுவதற்கு முற்பட்டுச் செல்கின்றார்கள். நீ மரணத்தை வெல்லுவதற்காக வந்திருக்கிறாய். வீரனைப்போல முன்னேறிச் செல். எது நிகழ்ந்தாலும் நிலையில் திரியாதே. இந்த உடல் எத்தனை நாளைக்கு இருக்கப்போகின்றது? இதனோடு கூடிய இன்பதுன்பங்கள் எத்தனை நாளைக்கு இருக்கப்போகின்றன? மானிட உடல் இருக்கும் பொழுதே உள்ளிருக்கும் ஆன்மாவை எழுப்பி, 'அச்சமில்லாத நிலையை அடைந்துவிட்டேன்!' என்று சொல்லு. 'அகந்தை எதனுள் அமிழ்ந்துவிட்டதோ, அந்த ஆன்மாவை நான்,' என்று சொல்லு. இந்தக் கருத்திலே நிலைத்திரு; உடல் நிலைத்திருக்கும் வரையும், "அது நீ ஆனாய்," என்னும் அச்சமற்ற நற்செய்தியை

யாவருக்கும் தெரிவிப்பாயாக; விழித்தெழுந்து கருதிய குறிக்கோள் கைகூடும் வரை ஓய்வின்றி உழை. இந்த நிலையை நீ அடைவாயா ஞல் உண்மையிலே நீ பிடிவாதமுள்ள கிழக்கு வங்காளத்து ஆண் மகன் என்பதை அறிந்துகொள்வேன்.

(35)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1901-ஆம் ஆண்டு.]

ஷில்லாங் மலையடிவாரத்திலிருந்து திருமடத்துக்குத் திரும்பி வந்த பின்பு சுவாமிஜியின் உடல் நலம் நன்ருயில்லை. அவர் கால்கள் வீங்கிவிட்டன. இதனுல் அவருடைய சகோதர சந்நி யாசிகள் அவருடைய உடல் நிலையைக் குறித்து மிகவும் கவலை உள் ளவர்களாயிருந்தார்கள். நிரஞ்சனனந்த சுவாமியினுடைய வேண்டுகோளின்படி சுவாமிஜி நாட்டு வைத்திய மருந்து அருந்து வதற்குடன்பட்டார். வருகிற செவ்வாய்க்கிழமை மருந்துண்பதைத் தொடங்கப்போகின்ருர். அதன்பொருட்டுப் பத்தியமாக உப்பும் நீரும் உட்கொள்ளாது விடப்போகிருர். இன்று ஞாயிற்றுக்கிழமை. சிஷ்யர் சுவாமிஜியை நோக்கி, ''ஐய, இப்பொழுது மிகவும் வெப்ப மாய் இருக்கின்றதே! இடை இடையே தண்ணீர் குடிக்கின்ற வழக்கம் தேவரீருக்கு உண்டு. இந்த வைத்தியத்தைக் கருதி நீர் பருகாது எங்ஙனம் பொறுத்திருக்கப் போகின்றீர்?'' என்று வினவினுர்.

சுவா: என்ன சொல்லுகிருய்! மருந்துண்ண ஆரம்பிக்கிற தினத்திலே தண்ணீர் குடிப்பதில்லை என்று மனத்திலே திடமாகத் துணிவு கொள்ளுவேன். அதன் பின்பு மூன்று வாரத்துக்கு ஒரு துளித் தண்ணீரும் மிடற்று வழியாகச் செல்ல மாட்டாது. உடல் மனத்துக்கு வெளியே உள்ள சட்டை. மனம் என்ன தீர்மானத் தைச் சொல்லுகிறதோ, அதைச் செய்து முடிக்க வேண்டுவது உடல் செய்ய வேண்டிய பணி. ஆதலால், நீ ஒன்றுக்கும் அஞ்ச வேண்டுவதில்லை. நிரஞ்சனனுடைய வேண்டுதலின்படி நான் மருந்துண்ணப் போகின்றேன். என் சகோதர சந்நியாசிகளுடைய வேண்டுகோளை நான் புறக்கணிப்பது கூடாது.

இப்பொழுது பத்து மணியாய்விட்டது. சுவாமிஜி மிகுந்த மகிழ்ச்சியுடன் பெண்களுக்காக அமைக்கப் போகின்ற திருமடத் தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். கங்கையின் கிழக்குக் கரையிலே மடம் நிறுவப்பட வேண்டுமென்றும், தூய அன்னை யாராகிய ஸ்ரீசாரதா தேவியார் அந்தத் திருமடத்துக்கு அருள் நிலை யமாய் இருப்பார் என்றும், இந்தத் திருமடத்திலே பிரம்மசாரி களும் சாதுக்களும் பயிற்றப்படுவது போலவே அந்தத் திருமடத்தி

லும் பிரம்மசாரிணிகளும் சாத்துவிகளும் பயிற்றப்படுவார்கள் என்றும் சுவாமிஜி சொன்னூர்.

சிஷ்: ஐய, நமது பரதகண்டத்திலே பழைய காலத்திலே பெண்களுக்கு மடாலயங்கள் ஏற்பட்டிருந்ததாகச் சரித்திரத்தில் சொல்லப்படவில்லையே! பௌத்த காலத்தில் பெண்களுக்கென மடங்கள் ஏற்பட்டிருந்ததாக அறிகிறேம்; ஆனுல், நாளடைவிலே அவற்றிலிருந்து அநேக தீமைகள் விளைந்தன. நாடு முற்றிலும் தீய பழக்கங்கள் பல பரவின.

சுவா: வேதாந்த மார்க்கமானது, ஒரே ஆன்மா எல்லா ஜீவர்களிடத்தும் வியாபித்திருக்கிருன் என்று முறையிடுகிறது. அப்படி இருந்தும், இந்த நாட்டிலே ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் மிகுந்த வேறுபாடு பாராட்டுவது எதனுல் என்பதை என்னுல் அறிந்துகொள்ள முடியவில்லை. நீங்கள் பெண்கள்பால் எப்பொழுதும் குற்றம் சுமத்துகிறீர்கள். ஆனுல், அவர்களுடைய உயர்வுக்காக என்ன செய்திருக்கிறீர்கள்? கடினமான விதிகளினுல் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஸ்மிருதி முதலியவற்றை எழுதி ஆடவர் பெண்களை இயந்திரங்கள் ஆக்கிவிட்டார்கள். உலக அன்னையின் தோற்றமாய் விளங்குகின்ற பெண்களை உயர்வடையச் செய்தாலன்றி, நீங்கள் உயர்வதற்கு வேறு வழி இருக்கிறதென்று எண்ணவேண்டா.

சிஷ்: பெண்கள் பந்தத்துக்கு ஏதுவாயிருக்கிருர்கள்; மனிதரைச் சிக்கச் செய்யும் வலையாயிருக்கிருர்கள்; தங்களுடைய மாயையினுல் ஆடவர்களுடைய ஞான வைராக்கியத்தை மறைத்துவிடுகிருர்கள். இதனுலன்றே ஞானத்தையும் பத்தியையும் அடைவது அவர்களுக்கு மிக அரியது என்று சாத்திரத்தை எழுதிய பெரியோர்கள் கூறியிருக்கிருர்கள்?

சுவா: பெண்கள் ஞானத்தையும் பத்தியையும் அடைவதற்குத் தகுதியற்றவர்கள் என்பதை எந்தச் சாத்திரத்திலே கண்டாய்? புரோகிதர்கள் வேதங்களை அத்தியயனம் பண்ணுவதற்கு ஏனைய ஜாதி மக்கள் தகுதியற்றவர்களென்று ஒதுக்கித் தள்ளிய இந்த இழிவான காலத்தில், பெண்களுடைய உரிமைகளையும் நீக்கிவிட்டார்கள். ஆனுல், வேதோபநிடத காலங்களிலே **மைத்திரேயி, கார்க்கி** முதலிய மிக்க சிறப்பு வாய்ந்த பெண்மணிகள், பிரம்மத்தைப் பற்றி வாதிக்கின்ற ஆற்றலிலே மகரிஷிகளுக்கு ஒப்பானவர்களாய் இருந்தார்கள். வேதத்திலே வல்லவர்களாகிய ஆயிரம் பிராம்மணர்கள் கூடியிருந்த மகாசபையிலே கார்க்கி பிரம்மவாதஞ்செய்யும்படி யாஞ்ஞவல்கியரைத் துணிவோடு அறை கூவி அழைத்தார்கள். அத்தகைய பெருந்தகைமை வாய்ந்த பெண்மணிகள் ஆன்ம ஞானத்துக்கு உரிமை பூண்டு விளங்கினுர்கள். ஆதலால், இக்காலத்தும் அந்த உரிமை ஏன் பெண்களுக்கு இருக்கக்

கூடாது? ஒரு முறை நிகழ்ந்தது நிச்சயமாக மறுபடியும் நிகழும். சரித்திர நிகழ்ச்சி மீட்டும் நடக்கும் தன்மையது. பெண்களுக்குத் தக்க மரியாதை கொடுக்கின்ற காரணத்தினுல் எல்லாத் தேசத்து மக்களும் உயர்நிலை அடைந்தார்கள். பெண்களுக்கு மதிப்புக் கொடாத தேசமும் மக்களும் ஒரு பொழுதும் உயர்வடைந்ததில்லை. இனி உயர்வை அடையப் போவதுமில்லை. சத்தியின் உயிருள்ள வடிவங்களாகிய பெண்களுக்கு மதிப்புக் கொடாத பிரதான காரணத்தினுலே உங்கள் ஜாதியார் மிகவும் இழிவடைந்தனர். ''எவ்விடத்தில் பெண்கள் மதிக்கப்படுகிருர்களோ, அவ்விடத்தில் தேவர்கள் உவகை அடைகிருர்கள்; எவ்விடத்தில் மதிக்கப்படவில்லையோ, அவ்விடத்தில் எல்லாக் கருமங்களும் முயற்சிகளும் வீண் ஆகின்றன,''. என்று மனு சொல்கிருர். எந்தக் குடும்பத்தில் அல்லது நாட்டில் பெண்களுக்கு மதிப்பில்லையோ எங்கே அவர்கள் மனத்துயரத்தோடு வாழ்கின்ருர்களோ, அங்கு உயர்வெய்துவதற்கு வழியில்லை. ஆதலால், முன்னம் அவர்களை உயர்த்த வேண்டும். அவர்களுக்கென உயர்ந்த சாதனங்களோடு கூடிய திருமடத்தை ஏற்படுத்தவேண்டும்.

சிஷ்: ஐய, தேவரீர் மேலை நாட்டிலிருந்து திரும்பி வந்த நாட்களில் தாரகை மண்டபத்தில் செய்த பிரசங்கத்திலே தந்திர சாத்திரங்களை மிகவும் இழித்துப் பேசினீர்கள். இப்பொழுது தந்திரங்களில் சொல்லியிருக்கிற முறைப்படி பெண்களுக்கு வழிபாடு செய்வதை ஆதரித்துப் பேசுகிறீர்கள்; அதனுல், முன்னெடு பின் முரணுகிறீர்கள்.

சுவா: தந்திரங்களிலுள்ள இழிந்த வாமாசார முறைகளை இழித்துப் பேசினேன். ஆனுல், தந்திரங்கள் கூறுகிற உலக அன்னையினுடைய வழிபாட்டு முறைகளையாவது உண்மையான வாமாசார முறைகளையாவது நான் குற்றமாகக் கூறவில்லை. தெய்விக முறையாகப் பெண்களுக்கு வழிபாடு இயற்ற வேண்டுமென்பதே தந்திரங்களின் கருத்து. புத்த சமயம் பாழடைந்த காலத்து வாமாசாரம் மிகவும் இழிந்து போயிற்று. அத்தகைய இழிவே இன்றும் நிலைபெற்றிருக்கிறது. இப்பொழுதும் இந்தியாவிலுள்ள தந்திர சாத்திரங்கள் அத்தகைய எண்ணங்களை உடையனவாய் இருக்கின்றன. இழிவான அஞ்சத்தக்க சாதனைகளை நான் வெறுத்துக் கூறினேன்; இப்பொழுதும் கூறுகிறேன். உலக அன்னையின் உயிர் தாங்கிய வடிவங்களான பெண்களை வழிபடுவதை நான் ஒரு பொழுதும் தடுத்துக் கூறவில்லை. அவர்களுடைய புறத்தோற்றமானது ஆடவர்களுடைய புலன்களைக் கவர்ந்து அவர்களை வெறி பிடித்தவர்களாக்கி விடுகின்றது. அகத்தோற்றங்களாகிய ஞானம், பத்தி, விவேகம், வைராக்கியம் என்னுமிவை மானிடனை முற்றறிவுடையவனுக்கித் தப்பின்றி வேண்டிய

இஷ்ட சித்திகளையும் தந்து பிரம்மத்தையும் அறியச் செய்கின்றன. "ஸைஷா ப்ரஸன்ன வரதா ந்ருணாம் பவதி முக்தயே—அவள் உவந்து செய்யும் அனுக்கிரகமே மானிடன் முத்தியை அடைவதற்குக் காரணமாகின்றது.'' வழிபாட்டினாலும் பணிவினாலும் உலக அன்னையினுடைய அருளைப் பெற்றாலன்றி, அவளுடைய கட்டைக் கடந்து மோக்ஷத்தை அடைவது பிரம்ம விஷ்ணுக்களுக்கும் இயலாது. அந்தத் தேவதைகள் தம்முள்ளே இருக்கின்ற பிரம் மத்தை வெளிப்படுத்தும்பொருட்டு அவர்களுக்கு வழிபாடு இயற்று வதற்காகப்பெண்களுக்கென ஒரு மடாலயத்தை நான் அமைப்பேன்.

சிஷ்: இது நல்லெண்ணந்தான். ஆனால், அந்த மடத்தில் இருக்கத்தக்க பெண்கள் எங்கிருந்து வரப்போகின்றார்கள் ? குடும்ப வாழ்க்கையிலே இப்பொழுது கட்டுப்பாடுகள் இருக்கின்றன; யார் தம் வீட்டுப் பெண்களை மடத்திலே சேரும்படி அனுப்பப் போகின் றனர் ?

சுவா: ஏன் அப்படி ? இப்பொழுதுகூட ஸ்ரீராமகிருஷ்ண ருடைய சிஷ்யைகள் பலர் இருக்கின்றனர். அவர்களோடு திரு மடத்தை ஆரம்பிக்கலாம். ஸ்ரீராமகிருஷ்ணருடைய பத்தர்களின் பெண்களும் மனைவிகளும் முதலிலே சேருவார்கள். தூய அன்னையார் அவர்களுக்கு நடுநாயகமாய் எழுந்தருளியிருப்பர். அத்தகைய திருமடத்தின் பயனைப் பத்தர்கள் எளிதில் அறிந்துகொள்ளுவார் கள். அவர்களுடைய குறிக்கோளைப் பின்பற்றி எத்தனையோ இல்லறத்தார்கள் இந்த நன்முயற்சிக்கு உதவி அளிப்பார்கள்.

சிஷ்: ஸ்ரீராமகிருஷ்ணருடைய பத்தர்கள் திண்ணமாகவே உதவி புரிவார்கள். ஆனால், பொது மக்கள் இந்த முயற்சிக்கு உதவு வார்களென்று நான் எண்ணவில்லை.

சுவா: இவ்வுலகத்திலே தன்னல மறுப்பின்றி ஒரு பெரிய காரியமும் செய்து நிறைவேற்றப்படுவதில்லை. ஆலவிதையினுடைய மெல்லிய முளையைக் கண்டவர்கள், அது நாளடைவிலே பெரிய மர மாய் வளர்ந்துவிடுமென்பதை அறிவார்களா ? இப்பொழுது இவ் வாறு மடத்தை ஆரம்பிப்பேன். பின்பு இரண்டொரு சந்ததி கழிந்த பிறகு இந்த நாட்டு மக்கள் மடத்தினுடைய பயனை உள்ள வாறு உணர்வார்கள். என் சிஷ்யைகள் அதற்காகத் தங்களது உயிரையும் கொடுப்பார்கள். அச்சத்தையும் கோழைத்தனத்தை யும் விட்டுவிட்டு, இந்த உயர்ந்த கொள்கையை எல்லார் முன்னிலை யிலும் வைத்து, நீவிரனைவீரும் இந்த நன்முயற்சிக்கு உதவி புரிவீர் களாக. நாளடைவிலே நாடு முற்றிலும் இது ஞான ஒளியைத் தந்து விளங்குவதை நீங்கள் காண்பீர்கள்.

சிஷ்: ஐய, பெண்களுக்கு ஏற்படுத்தப் போகிற இந்தத் திரு மடத்தின் அமைப்பைப் பற்றிய எல்லா விஷயங்களையும் தேவரீர் எனக்குச் சொல்லி அருளுவீராக.

சுவா: கங்கையின் மற்றக் கரையிலே ஒரு பெரிய நிலம் வாங்க வேண்டும். அங்குக் கட்டப்படுகிற திருமடத்திலே விவாக மாகாத சிறுமிகளும் பிரம்மசாரிணிகளாகிய விதவைகளும் வசிக் கலாம். இல் வாழ்க்கையிலுள்ள பெண்களிலும் பத்தி நிறைந்தவர் கள் ஒவ்வொரு காலத்தில் இங்கு வந்து வசிக்க அனுமதி அளிக்கப் படலாம். ஆடவர்களுக்கும் இந்த மடத்துக்கும் ஒரு தொடர்பும் இருக்கமாட்டாது. ஆடவர் திருமடத்திலுள்ள சாதுக்களில் முதி யோர் தூரத்திலிருந்து இந்த மடத்துக் கருமங்களை நடத்துவார்கள். பெண்களுக்குரிய இந்த மடத்திலேடு ஒரு பெண் பாடசாலை அமைக்கப்பட்டிருக்கும். அங்கே சமய சாத்திரங்களும், இலக்கிய இலக்கணக்களும், சம்ஸ்கிருதமும், ஓரளவுக்கு ஆங்கில மொழியும் கற்பிக்கப்படும். தையல், சமையல், வீட்டுப் பணிக்கு வேண்டிய விதி முறைகள், குழந்தைகளை வளர்க்கும் முறை முதலிய பிற கல்விகளும் கற்பிக்கப்படும். ஜபம், தெய்வ வழிபாடு, தியானம் என் பவை எல்லாம் இங்குப் பயிற்றப்படுகிற கல்வியும் இன்றியமையாத பாகங்களாயிருக்கும். இல் வாழ்க்கையையும் குடும்பத் தொடர்பை யும் துறந்துவிட்டு இங்கே நிலையாய் இருப்பவர்களுக்கு இந்த மடத்தி லிருந்து உணவும் உடையும் கொடுக்கப்படும். அங்ஙனம் செய்ய முடியாதவர்கள் தினந்தோறும் வந்து போகிற மாணவிகளாக இங்கே கல்வி கற்க அனுமதி பெறுவார்கள். அவர்களும் ஒவ்வொரு காலத்திலே மடத்துக்குத் தலைவராயிருப்போரது உத்தரவோடு மடத்திலே வசிக்கலாம். அங்ஙனம் வசிக்கும்போது அவர்களையும் மடத்திலிருந்தே பராமரிக்கலாம். வயது முதிர்ந்த பிரம்மசாரிணி கள் மாணவிகளைப் பிரம்மசரியத்திலே பயிற்றுகின்ற கடமையை ஏற்றுக்கொள்ளுவார்கள். இந்த மடத்திலே ஐந்தாறு வருடம் பயிற்சி பெற்ற பின்பு, சிறுமிகளுடைய பாதுகாப்பாளர் அவர் களுக்கு மணமுடித்து வைக்கலாம். யோகத்துக்கும் சமய சாதனைக் கும் அவர்கள் தகுதியுள்ளவர்களாகக் காணப்பட்டால், அவர்களது பாதுகாப்பாளருடைய உத்தரவோடு அவர்களுக்கு உரிய முறை யிலே தீட்சை செய்து மடத்தில் உறையும்படி செய்யலாம். இத் தகைய பிரம்மசாரிணிகள் பிற்காலத்திலே இத்திருமடத்தின் போதகாசிரியைகளாகவும் பிரசங்கிகளாகவும் வருவார்கள்; கிரா மங்களிலும் நகரங்களிலும் நிலையங்களைத் தாபித்துப் பெண் கல்வி யைப் பரப்புவதற்கு முயலுவார்கள். அத்தகைய நல்லொழுக்கம் வாய்ந்த பிரசாரகர்களாலே உண்மைப் பெண்கல்வி தேசமெங்கும் பரவும். மாணவிகள் இந்தத் திருமடத்தோடு சேர்ந்திருக்கும் காலத்தில் திருமடத்து ஆதாரக்கொள்கையாகிய பிரம்மசரியத்தை தவறுது அனுஷ்டிக்க வேண்டும். தெய்விக வாழ்க்கையும், தியாக மும், ஐம்புலன் அடக்கமும் இந்தத் திருமடத்திலுள்ள மாணவிகள் கைக்கொண்டு ஒழுக வேண்டிய கொள்கைகளாகும். சேவையே

அவர்களுடைய வாழ்க்கையின் விரதமாகும். அத்தகைய உயர்ந்த கொள்கையோடு அவர்கள் வாழும் பொழுது யார்தான் அவர்களிடத்து மதிப்பும் நம்பிக்கையும் இல்லாதிருக்கப் போகின்றார்? இந்த நாட்டுப் பெண்களுடைய வாழ்க்கை அந்த மாதிரியாக உருப்பட்டால்தான் சீதை, சாவித்திரி, கார்க்கி போன்ற பெருந்தன்மையுடையோர் மீண்டும் இங்கு அவதரிப்பர். தேசாசாரங்களும் அவற்றால் ஏற்பட்ட கட்டுப்பாடுகளும் இந்த நாட்டுப் பெண்மக்களை எவ்வளவு உயிரற்ற வலியிழந்த பிராணிகள் ஆக்கிவிட்டன என்பதை மேலை நாடுகளில் யாத்திரை புரிந்தாயானால் நீ உணர்ந்து கொள்ளுவாய். பெண்களினுடைய பரிதவிக்கத்தக்க நிலைக்கு நீங்களே பொறுப்பாளிகள். அவர்களை மீண்டும் உயர்த்துகின்ற கடமை உங்களைப் பொறுத்திருக்கிறது. ஆதலினால், 'முயன்று வேலை செய்யுங்கள்,' என்று நான் சொல்லுகிறேன். வேதத்தைப் போன்ற சில சமய சாத்திர நூல்களை மனப்பாடம் பண்ணுவதனால் ஏற்படும் பயனென்ன?

சிஷ்: ஐய, இந்தத் திருமடத்திலே பயிற்றப்பட்ட சிறுமிகள் பின்பு விவாகம் செய்துகொள்ளலாம் என்றால், அவர்களுக்குள்ளே உயர்ந்த கொள்கையோடு வாழ்பவர்களைக் கண்டு பிடித்தல் எப்படி? இந்தத் திருமடத்திலே கல்வி கற்பிக்கப்பட்டவர்கள் விவாகம் செய்யாமலே இருந்துவிட வேண்டுமென்று ஒரு விதியை ஏற்படுத்துவது நன்றாகாதா?

சுவா: எடுத்த உடனே அப்படிச் செய்யலாமா? அவர்களுக்குக் கல்வி அறிவுறுத்திப் பின்பு அவர்கள் விருப்பப்படி விட்டுவிட வேண்டும். அவர்கள் எந்த வழி நல்லதென்று காண்கிறார்களோ, அந்த வழியிலே நிற்கட்டும். மணம் புரிந்து உலக வாழ்க்கையிலே புகுந்த பின்பு தங்களுடைய நாயகர்களுக்கு உயர்ந்த கொள்கைகளை உண்டாக்குவார்கள்; வீரப் புதல்வருக்குத் தாய்மார்கள் ஆவார்கள். சிறுமியருக்குப் பதினைந்து வயது நிரம்புவதற்கு முன் அவர்களை மணமுடித்துக் கொடுப்பதைப் பற்றி நினைத்தலும் கூடாதென மாணவிகளுடைய பாதுகாப்பாளர்களுக்கு ஒரு விதி ஏற்படுத்த வேண்டும்.

சிஷ்: ஐய, அப்படியாயின், அந்தச் சிறுமியர்களுக்கு மக்கட் சமுதாயத்தில் மதிப்பிருக்கமாட்டாது. அவர்களை மணமுடிக்க யாரும் விரும்பமாட்டார்கள்.

சுவா: ஏன் அவர்களை விவாகம் முடிக்காதிருக்கப் போகின்றார்கள்? மக்கட்சமுதாயத்தினுடைய போக்கை நீ இன்னும் முற்றும் உணர்ந்துகொள்ளவில்லை. கல்வியில் வல்ல ஆற்றல் வாய்ந்த பெண்களுக்கு மணமகன் இல்லை என்னும் குறை ஒரு பொழுதும் ஏற்பட மாட்டாது. குழந்தை விவாகத்தைப்பற்றிச் சொல்லுகிற வாக்கியங்களை மக்கட்சமுதாயம் இப்பொழுதும் ஏற்றுக்கொள்ளு

கிறதில்லை. இனிமேல் ஏற்றுக்கொள்ளப்போவதும் இல்லை. இப்பொழுது உனக்குத் தெரியவில்லையா ?

சிஷ்: ஆனால், ஐய, ஆரம்பத்திலே இதற்கு மிகுந்த எதிர்ப்பு நிச்சயமாகவே உண்டாகும்.

சுவா: ஆகட்டும். அதில் அஞ்சவேண்டுவது என்ன இருக்கின்றது ? உண்மை ஆற்றலோடு ஆரம்பிக்கப்பட்ட நன்முயற்சிக்குத் தடை ஏற்படுமாயின் அது ஆரம்பித்தவர்களுடைய மனவலிவை இன்னும் அதிகப்படுத்தும். தடையில்லாது ஏற்படுகிற பாதை, மக்களை உயிரற்ற வழிகளிலே செலுத்திவிடும். முயன்று கருமம் புரிவதே உயிர் வாழ்க்கைக்கு அறிகுறி.

சிஷ்: ஆம் ஐயா.

சுவா: பரப்பிரம்மமெனும் மேலாகிய உண்மையிலே ஆண் பெண் என்ற பால் வேறுபாடு இல்லை. விவகார நிலையிலேதான் இந்த வேறுபாடுகளைக் காண்கின்றோம். மனம் எவ்வளவுக்கு உண்ணோக்குகிறதோ, அவ்வளவுக்கு வேறுபாட்டு எண்ணமானது மறைந்துவிடும். ஈற்றிலே எவ்விடத்தும் ஒரே படித்தாய் வேறுபாடற்று விளங்குகின்ற பிரம்மத்திலே மனமானது முற்றிலும் அமிழ்ந்துவிட்டால், 'இவன் ஆடவன்; இவள் பெண்' என்னும் வேறுபாட்டெண்ணங்களே இருக்கமாட்டா. ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்விலே நாங்கள் இதை நேரில் கண்டோம். ஆகையால் ஆண் பெண்களுக்கிடையே வெளித் தோற்றத்தில் வேறுபாடிருந்தாலும், உண்மையிலே ஒரு வகை வேறுபாடும் இல்லை. ஆதலால், ஓர் ஆண்மகன் பிரம்மஞானியாயிருந்தால், ஒரு பெண்ணும் ஏன் அத்தகைய ஞானத்தை அடையக் கூடாது ? ஆதலாலே, பெண்களுக்குள்ளே ஒருவராவது பிரம்மஞானத்தை அடைவார். ஆனால், அங்ஙனம் அடைந்தவருடைய விளக்கத்தினாலே ஆயிரம் பெண்கள் உண்மையை நாடுவதில் ஊக்கமுடையவர்களாவார்கள். அதனால், நாட்டுக்கும் மக்கள் சமூகத்துக்கும் பெரிய நன்மை உண்டாகும். அது உனக்குப் புலப்படுகிறதா ?

சிஷ்: ஐய, தேவரீருடைய போதனை இன்று என் கண்களைத் திறந்துவிட்டது.

சுவா: இன்னும் முழுவதும் திறக்கப்படவில்லை. ஆன்மாவைப்பற்றிய அனைத்தினையும் ஒளியுறச் செய்யும் உண்மையை நீ உணர்வாயாயின், ஆண் பெண் என்னும் வேறுபாட்டு எண்ணம் உள்ளத்தினின்று அகன்று போக, பெண் மக்கள் அனைவரையும் பிரம்மத் தோற்றமாக நீ காண்பாய். எந்த இனத்தில் பிறந்தாராயினும் சரி, எந்த மதிப்பினை உடையவராயினும் சரி, பெண்களாயினோர் அனைவரையும் உலக அன்னையின் அமிசமாக ஸ்ரீராமகிருஷ்ணர் கொண்டதை நாங்கள் கண்டிருக்கின்றோம். இதனை நான் கண்டபடியினாலேதான் அவ்வண்ணம் நீங்களும் செய்ய

வேண்டுமென்றும் கிராமந்தோறும் பெண்பாடசாலைகளை ஆரம்பித்து அவர்களை உயர்த்த முயலவேண்டுமென்றும் நான் உங்களைக் கேட்கின்றேன். பெண்கள் உயர்த்தப்பட்டால் அவர்களுடைய மக்கள் உயர்ந்த செயல்களைச் செய்து தேசத்தினுடைய பெயரை மகிமைப்படுத்துவார்கள். அப்பொழுதுதான் நல்லொழுக்கமும், ஞானமும், ஆற்றலும், பத்தியும் நாட்டிலே உண்டாகும்.

சிஷ்: ஆனல் ஐய, இக்காலத்துப் பெண் கல்வியினலே இதற்கு நேர் விரோதமான பயன்கள் உண்டாகக் காண்கின்ரேம்? சிறிது கல்வியைக் கற்றுவிட்டு அவர்கள் மேலைநாட்டு வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுகிருர்கள். தியாக புத்தி, ஐம்புலன் அடக்கம், தவம், பிரம்மசரியம் முதலான பிரம்ம ஞானத்துக்கு ஏதுவாகிய நற்குணங்களில் அவர்கள் எவ்வளவுக்கு முன்னேறுகிருர்கள் என்பது தெளிவாகவில்லை.

சுவா: ஆரம்பத்திலே சில பிழைகள் நிகழ்வதை மாற்ற முடியாது. தேசத்திலே ஒரு புது எண்ணத்தைப் போதிக்கும் பொழுது பலர் அதன் உண்மையை உணர்ந்துகொள்ள முடியாமல் பிழைபட நடப்பதுண்டு. மக்கட்சமுதாயத்தினுடைய நன்மையைக் கடைப்பிடிப்பதே செய்ய வேண்டிய கருமமாகும். இப்பொழுது நாட்டிலே உள்ள சிற்றளவாகிய பெண் கல்வியை வளர்ப்பதற்கு முன்வந்தவர்கள் சந்தேகமில்லாமல் அகன்ற சிந்தை உடையவர்களென்றே சொல்ல வேண்டும். சமயானுஷ்டானத்தை ஆதாரமாகக் கொள்கிற கல்வி முறையிலே குறைகள் நேரிடுமென்பது உண்மையே. சமயத்தையே நடு இலக்காகக் கொண்டு பெண் கல்வியைப் பரப்பவேண்டும். மற்றப் பயிற்சிகளெல்லாம் சமயப் பயிற்சிக்குச் சார்பாகவே அமையவேண்டும். சமயப் பயிற்சி, நல்லொழுக்கப் பயிற்சி, பிரம்மசரிய விரதங் காத்தல் என்னும் இவற்றைச் செவ்வனே கவனிக்க வேண்டும். இது வரையும் இந்தியாவிலே நடந்து வருகிற பெண் கல்வி முறைகள் சமய நெறியை முதன்மையாகக் கொண்டனவல்ல. ஆதலினலே, நீ சொன்ன குறைகள் ஏற்பட்டுவிட்டன. ஆனல், பெண்கள்மேல் குற்றமில்லை. பெண் கல்வியை ஆரம்பித்த சீர்திருத்தக்காரர்கள் பிரம்மசரியமில்லாதவர்கள். ஆதலினல், தவருன முறைகளை ஆண்டுவிட்டார்கள். எந்த நற்கருமத்தைச் செய்பவர்களும் தாங்கள் விரும்பிய கருமத்தைத் தொடங்குவதற்கு முன் அடக்கத்தோடு கூடிய சாதனைகளினுலே ஆன்ம ஞானத்தை அடையவேண்டும். அல்லாவிட்டால், அவர்கள் செய்யும் தொழிலிலே பிழைகள் ஏற்பட்டுவிடும்.

சிஷ்: ஆம், ஐய, எத்தனையோ கல்வி கற்ற பெண்கள் நவீன கதைப் புத்தகங்களை வாசிக்கின்ற தொழிலிலே தங்கள் நேரத்தைச் செலவிடுகின்ருர்கள். கிழக்கு வங்காளத்திலோ, கல்வி கற்ற பெண்

களும் தங்களது சமய அனுஷ்டானத்தைக் கைவிடுவதில்லை. இந்தப் பக்கங்களில் அப்படி உண்டா ?

சுவா: ஒவ்வொரு நாட்டிலும் மக்களிடையே நன்மையான அமிசமும் உண்டு, தீமையான அமிசமும் உண்டு. நாம் நம்முடைய வாழ்விலே நன்முயற்சிகளைச் செய்து பிறருக்கு முன் மாதிரியாய் இருக்கவேண்டும். குறை கூறுவதனால் ஒரு முயற்சியும் அனுகூலப்படுவதில்லை. அது மனிதர் மனத்தில் வெறுப்பை உண்டாக்கும். எவனும் விரும்பினதைச் சொல்லட்டும். நீ அவனுக்கு மறுத்துரை கூறிக்கொண்டு நில்லாதே. மாயா ரூபமாகிய இந்த உலகத்திலே நீ எந்த நன்முயற்சியைச் செய்தாலும், அதில் சில குறைகளிருப்பது இயல்பு. "**ஸர்வாரம்பாஹி தோஷேண தூமேனாக்னிரிவாவ்ருதா:**—நெருப்பைப் புகை மூடி இருப்பது போல, எல்லா முயற்சிகளையும் குறைகள் மூடி இருக்கின்றன." எந்த நெருப்பிலும் சிறிது புகை சேர்ந்திருக்கும். ஆனால், அதற்காக நீ சும்மா இருப்பதா ? உன்னால் இயன்றவரை நன்முயற்சிகளைச் செய்.

சிஷ்: நன்முயற்சி என்பது என்ன ?

சுவா: எது பிரம்மத்தினுடைய விளக்கத்துக்கு உதவுகின்றதோ, அது நன்முயற்சி. நேராக இல்லாவிட்டாலும் ஒரு சார்பாகவாவது, ஆன்ம விளக்கத்துக்கு உதவும்படி எந்த முயற்சியையும் செய்யலாம். ஆனால், ரிஷிகளினால் ஏற்படுத்தப்பட்ட வழியைப் பின்பற்றி நடந்தால், ஆன்ம விளக்கம் விரைவிலே வந்து எய்தும். ஆனால், சாத்திரங்களை எழுதினோர் பிழையெனக் காட்டிய கருமங்களைச் செய்வதனால் பந்தமேற்படும். அத்தகைய மயக்கத்துக்கு ஏதுவாகிய பந்தம், பல பிறவிகளிலும் அகலுவதில்லை. எக்காலத்திலும் எத்தேசத்திலும் ஈற்றிலே ஜீவர்கள் விடுதலை அடைவார்கள் என்பது திண்ணம். ஏனெனில், ஆன்ம விளக்கமே ஜீவனுடைய உண்மையாகிய தன்மை. தன்னுடைய சொந்தத் தன்மையை விடுவது யாருக்காவது இயலுமா ? நீ ஆயிர வருட காலத்துக்கு உன்னுடைய நிழலோடு சண்டை இட்டாலும், அது உன்னை விட்டு ஓடிப்போகாது; உன்னுடன் கூடவே இருக்கும்.

சிஷ்: ஆனால் ஐய, சங்கரர் கூறுகிறபடி கருமமானது ஞானத்துக்கு எதிரிடையாயிற்றே ! கருமத்தையும் ஞானத்தையும் ஒன்று கூட்டுவதை அவர் பலவாறாகக் கண்டிக்கின்றாரே ! அப்படியானால், கருமம் ஞானத்துக்கு எப்படி உதவியாகும் ?

சுவா: சங்கரர் அப்படிச் சொல்லிய பின்னர், கருமமானது சித்த சுத்திக்குக் கருவியாகுமென்றும், ஆதலினால் ஞானத்துக்கு ஓரளவு உதவுகிறதென்றும் கூறியிருக்கிறார். ஆனால், பாரமார்த்திக ஞானத்திலே ஒரு வகைக் கருமத் தொடர்பும் இருத்தல் கூடாது என்னும் முடிபை நான் கண்டிக்கவில்லை. மனிதன் விவகார நிலையிலே இருந்து கருமம், கருத்தா, கருமபலன் என்னும்

இவற்றை அறிந்திருக்கும் பொழுது, ஏதாவது ஒரு தொழிலைச் செய்யாது சும்மாவிருக்க அவனால் முடியாது. கருமமானது மனிதனுடைய இயற்கையோடு ஒன்றுபட்டிருக்கும் பொழுது ஆன்ம ஞானத்தை வெளிப்படுத்துவதற்கு உதவியாகிய கருமங்களை நீ ஏன் செய்யக் கூடாது? பாரமார்த்திக நிலையிலே எல்லாக் கருமங்களும் அஞ்ஞானத்தின் காரியம் என்று கூறுவது உண்மையேயாயினும், விவகார நிலையிலே கருமம் மிக்க பயனைத் தருவது. நீ ஆன்ம ஞானத்தை அடைந்துவிட்டால், நீ கருமம் செய்வதும் செய்யாதிருப்பதும் உன்னுடைய இஷ்டப்படி நடப்பனவாம். அந்த நிலையிலே உலகத்து ஜீவர்களுக்கு நன்மையைத் தரத்தக்க நற்கருமங்களையே நீ செய்வாய். பிரம்மஞானம் பெற்ற பின்பு நீ சுவாசிப்பதுங்கூட ஜீவர்களுடைய நன்மைக்கேயாகும். அதன் பின்பு நீ நினைத்துக் கருமம் செய்ய வேண்டுவதில்லை. அறிந்துகொண்டாயா?

சிஷ்: வேதாந்த நிலையிலிருந்து கருமத்தையும் ஞானத்தையும் சமரசப்படுத்திக் கூறும் இந்த முடிபு மிகவும் அழகியது.

இத்தருணத்திலே இரவு உணவுக்கு மணி அடித்தது. உண்ணுதற்குப் போகுமுன்னர், சிஷ்யர் கைகளைக் கூப்பி வணக்கத்தோடு நின்று, ''ஐய, இந்தப் பிறவியிலேயே அடியேன் பிரம்ம ஞானத்தை அடையும்படி தேவரீர் அருட்கண்ணால் நோக்க வேண்டும்,'' என்றார்.

சுவாமிஜி சிஷ்யருடைய சென்னிமேல் கையை வைத்து, ''மகனே, அஞ்ச வேண்டா; நீ உலகத்திலுள்ள சாதாரண மனிதரைப் போன்றவனில்லை; இல் வாழ்வானுமல்ல; முற்றிலும் சந்நியாசியுமில்லை—ஒரு புது மாதிரியாய் இருக்கின்றாய்,'' என்றார்.

(36)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1901-ஆம் ஆண்டு.]

சுவாமிஜி உடல் நலம் இல்லாத நிலையில் இருக்கிறார். சுவாமி நிரஞ்சனானந்தர் வருந்திக் கேட்டபடியால், ஆறேழு நாட்களாக நாட்டு வைத்திய மருந்து உட்கொண்டு வருகிறார். மருந்துக்குரிய பத்தியத்தின்படி தண்ணீர் குடிப்பது விலக்கப்பட்டிருந்தது. தாகத்தைத் தணிப்பதற்காகப் பால் மாத்திரம் குடிக்க வேண்டி இருந்தது.

சிஷ்யர் அதிகாலையில் திருமடத்துக்கு வந்தார். சுவாமிஜி அவரை அன்போடு நோக்கி, ''நீ வந்துவிட்டாயா! மிக நல்லது! உன்னைத்தான் நினைத்துக்கொண்டிருந்தேன்,'' என்றார்.

சிஷ்: தேவரீர் ஆறேழு நாட்களாகப் பால் மாத்திரம் உண்டு வருகின்றீர் என்று கேள்விப்பட்டேன்.

சுவா: ஆம்; நிரஞ்சனருடைய வேண்டுகோளின்படி நான் இந்த மருந்தை உண்கிறேன். நான் அவருடைய வேண்டுகோளை மறுக்கக்கூடாது.

சிஷ்: தேவரீர் அடிக்கடி தண்ணீர் குடிப்பது வழக்கம். அதை முற்றிலும் விட்டொழித்தது எப்படி ?

சுவா: இந்த வைத்திய முறையின்படி, தண்ணீர் குடித்தல் கூடாதென்று நான் கேள்விப்பட்ட உடனே, தண்ணீர் குடிக்க மாட்டேன் என்று ஒரு திடமான கோரிக்கையை மனத்தில் நிறுவிக் கொண்டேன். இப்பொழுது தண்ணீர் குடிக்க வேண்டுமென்னும் எண்ணமே என் மனத்திற் படிவதில்லை.

சிஷ்: இந்த வைத்தியத்தினுலே தேவரீருக்கு நலம் உண்டா கிறதென்று நம்புகிறேன்.

சுவா: அது எனக்குத் தெரியாது. என் சகோதர சந்நியாசி களுடைய கட்டளைக்கு உட்பட்டு நடக்கின்றேன்.

சிஷ்: வைத்தியர்கள் உபயோகிக்கிற உள் நாட்டில் விளைந்த மூலிகைகள் நமது சரீர நிலைக்கு மிகுதியும் பொருத்தமுடையன வென்று நான் நினைக்கின்றேன்.

சுவா: சில வியாதிகளைத் தீர்த்தவர்களாயினும், விஷயத்தைத் தீரத் தெளிய அறிந்துகொள்ளாதவர்களாய், இக்காலத்து சாத்திர முறைகளை ஒரு சிறிதும் அறியாது பழைய ஏட்டுச் சுவடிகளைக் கண்மூடித்தனமாகக் கைக்கொண்டு ஒழுகுகிற அறிவிலிகளுடைய வைத்தியத்தினுற் பிழைப்பதைவிட நல்ல சாத்திர முறைகளை அறிந்த மருத்துவனுடைய வைத்தியத்தினுலே இறந்து போவதும் நல்லதென்பது எனது எண்ணம்.

சுவாமிஜி சில பொருள்களைச் சமைத்தார்; அவற்றிலொன்று சேமியா சேர்த்துச் செய்யப்பட்டிருந்தது. அதனை உண்ட சிஷ்யர் அஃதென்னவென வினவ, சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''நான் லண்டன் பட்டணத்திலிருந்து வரும்பொழுது காயவைத்துக் கொண்டுவந்த சில இங்கிலீஷ் நிலப்புழுக்கள் அவை'' என்றுர். கூடியிருந்தோர் அனைவரும் சிஷ்யரை நோக்கி நகைத்தனர். ஊண் உறக்கம் குறைந்திருந்தும் சுவாமிஜி வேலையில் மிகுந்த ஊக்கமா யிருந்தார். சில தினங்களுக்கு முன்பு திருமடத்துக்குப் பிரித்தானிய கலைக்களஞ்சியப் புத்தகங்களின் தொகுதி வந்திருந்தது. அழகான அந்தப் புத்தகங்களைக் கண்ட சிஷ்யர் சுவாமிஜியை நோக்கி, ''இந்தப் புத்தகங்கள் எல்லாவற்றையும் ஒரு வாழ்வில் வாசித்து முடிப்பது இயலாத காரியம்'' என்றுர். சுவாமிஜி பத்துப் புத்தகங் களை முடித்துவிட்டுப் பதினேராவது புத்தகத்தை வாசித்துக்கொண் டிருக்கிறுர் என்பதைச் சிஷ்யர் அறியவில்லை.

சுவா: நீ என்ன சொல்கிருய்? முதல் பத்துப் புத்தகங்களிலே என்ன கேள்வியாகிலும் கேள். நான் விடை சொல்லுகிறேன்.

சிஷ்யர் ஆச்சரியமடைந்து, ''இந்தப் புத்தகங்களை எல்லாம் வாசித்துவிட்டீர்களா?'' என்ருர்.

சுவா: வாசியாமல் கேள்வி கேட்கச் சொல்வேனு?

சுவாமிஜியைப் பரிசோதித்துப் பார்த்த பொழுது, வினவப் பட்ட அரிய பெரிய விஷயங்களின் கருத்தை உள்ளவாறு சொன்ன தோடு அமையாது, புத்தகங்களிலுள்ள நேர்மொழிகளையுமே ஆங் காங்குச் சொன்னுர். சிஷ்யர் அதிசயப்பட்டுப் புத்தகங்களை வைத்துவிட்டு, ''இது மனித ஆற்றலினுலே முடியாத காரியம்!'' என்ருர்.

சுவா: மாறுபாடில்லாத பிரம்மசரியத்தைக் கைக்கொண்டு ஒழுகுவதனுலே எல்லாக் கலைகளையும் மிக விரைவிலே கற்றுவிட லாம்; ஒருவன் ஒரு முறை கேட்பனவும் பிழையின்றி நிலைத் திருக்கக் கூடிய ஞாபகசத்தி ஏற்படுகின்றது. இத்தகைய பிரம்ம சரியம் இல்லாமையினுலே நமது நாட்டிலே எல்லாம் அழிவடைந்து விட்டன.

சிஷ்: ஐய, மானிடரால் செய்து முடிக்கவொண்ணுத இத் தகைய பேராற்றல் தனித்துப் பிரம்மசரியத்தினுல் மாத்திரம் வந்த தென்று தேவரீர் எப்படிச் சொல்லுதல் கூடும்? வேறேதோ இருக்க வேண்டும்.

சுவாமிஜி மறுமொழியாக ஒன்றும் சொல்லவில்லை.

அதன் பின்பு சுவாமிஜி எல்லாத் தத்துவ சாத்திரங்களிலும் உள்ள பல்வேறு வகைப்பட்ட கடினமான விஷயங்களைப் பற்றிய வாதங்களையும் முடிபுகளையும் சிஷ்யருக்குத் தெளிவுபடுத்திக்கொண் டிருந்தார். இங்ஙனம் உரையாடிக்கொண்டிருக்கும் பொழுது சுவாமி பிரம்மானந்தர் அறையினுள்ளே புகுந்து சிஷ்யரை நோக்கி, ''நீ நல்ல மனிதன். சுவாமிஜிக்குச் சுகமில்லை. எளிய விஷயங்களைப் பேசிச் சுவாமிஜியினுடைய சிந்தையைச் சந்தோஷ மாக வைத்திருப்பதற்குப் பதிலாகக் கடினமான விஷயங்களைப் பற்றி இடைவிடாது பேசுகிருய்,'' என்ருர். சிஷ்யர் நாணினுர். சுவாமிஜி, சுவாமி பிரம்மானந்தரை நோக்கி, ''உங்களது நாட்டு வைத்தியத்துப் பத்திய முறைகளை ஒரு புறம் வைத்துவிடுங்கள்; இவர்கள் என் மக்கள். இவர்களுக்குப் போதிப்பதில் என்னுடல் விழுந்தாலும் நான் அதைப் பொருட்படுத்த மாட்டேன்'' என்ருர். அதன் பின்பு இலகுவான சம்பாஷணை நடந்தது. வங்காளி இலக் கியத்திலே பரத்சந்திரருடைய தகுதி எவ்வளவினது என்பதைப் பற்றி வினு நிகழ்ந்தது. ஆரம்பத்தில் தொடங்கி, சுவாமி பரத்சந்தி ரரைப்பற்றியும் அவர் காலத்திலே இருந்த சமுதாய வாழ்க்கை, பழக்க வழக்கம், விவாக முறைகள் என்னும் இவற்றைப் பற்றியும்

பலவாறாக நகைத்து உரையாடினார். ''பரத்சந்திரர் குழந்தை விவாகத்தை ஆதரித்தவர். அவருடைய கவிகள் பொய் மலிந்து தீய சுவை பொருந்தி இருந்தமையினால், வங்காளத்துக்கு வெளியே நாகரிகமுள்ள வகுப்பார் அவற்றை ஏற்றுக்கொள்ளுவதில்லை. அத்தகைய புத்தகங்கள் சிறுவர்களுடைய கையிலே சேராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்,'' என்று சுவாமிஜி சொன்னார். பின் **மைக்கேல் மதுசூதன தத்தரைப்**பற்றிப் பேச ஆரம்பித்து, ''உங்கள் மாகாணத்தில் பிறந்தவர்களுள் அவர் அற்புதமான கவித்துவம் பொருந்தியவர். **மேகநாத வதம்** என்னும் காவியத்தைப் போல மற்றொரு வீரகாவியம் பிறிதொரு பாஷையிலே இல்லை; இக்காலத்து ஐரோப்பியக் காவியத்துள் பலவற்றினைத் தேடினாலும் அத்தகைய நூலைக் காண்பது அரிது,'' என்றார்.

சிஷ்: ஆனால், ஐய, மைக்கேல் ஆடம்பரமான நடை எழுதுவதில் அதிக விருப்புடையவர் என்று எண்ணுகிறேன்.

சுவா: உங்கள் நாட்டிலே யாராவது ஒருவர் புதியதாக ஒரு கருமத்தைச் செய்தால், நீங்கள் அதை உடனே நிந்திக்கிறீர்கள். ஒருவன் சொல்வதை முதலிலே விசாரித்து நன்மை தீமை காணாமல், பழைய வழக்கங்களுக்குச் சிறிதாவது வேறுபட்டிருப்பதைத் துரத்திவிட முயலுவது இந்த நாட்டு மக்களுடைய வழக்கமாகி விட்டது. வங்காளி இலக்கியத்தில் சிறந்த இரத்தினம் போலக் காணப்படுகிற மேகநாதவத காவியத்தைப் பரிகசிக்கும்பொருட்டுச் சூச்சுந்தரிவத காவியம் (மூஞ்சூறின் மரணம்) என்பதொன்றை யாரோ எழுதினார். நீங்கள் இயன்ற மட்டும் பரிகசிக்கலாம். அதனால் எய்துவதொன்றுமில்லை. ஆனால், மேகநாதவத காவியமோ, புகழிலே இமயத்தைப்போல அசைவற்று நிலைபெறும். அதனிடத்தே பிழை காண முயலுகின்ற, குற்றமே காணுவாருடைய எண்ணங்களும் எழுத்துக்களும் காலவெள்ளத்திலே மாய்ந்து மறைந்து போகும். வீர மொழிகளினால் புதியதாகிய யாப்பிலே அமைத்து மைக்கேல் செய்த வீர காவியத்தைப் பற்றிச் சாதாரண மக்கள் என்ன அறிந்துகொள்ளக் கூடும்? கிரீஷ் பாபு புதிய யாப்பிலே அற்புதமான புத்தகங்களை இப்பொழுது எழுதிக்கொண்டிருக்கிறார். மிக்க புத்திசாலிகளான உங்கள் பண்டிதர்கள் அவற்றிலே வழுக்காட்டிக் குறை கூறுகின்றார்கள். ஆனால், கிரீஷ் பாபு அதைப் பற்றிச் சிந்திக்கிறாரா? வருங்காலத்தில் மக்கள் அந்நூல்களை மதிப்பார்கள்.

மைக்கேல் விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''கீழேயுள்ள நூல் நிலையத்திற்குப் போய் மேகநாதவத காவியத்தை எடுத்துக்கொண்டு வா,'' என்று கட்டளையிட்டார். சிஷ்யர் கொண்டுவந்ததும், ''இப்பொழுது வாசி; நீ எப்படி வாசிக்கிறாய் என்று பார்ப்போம்,'' என்றார்.

சிஷ்யர் புத்தகத்தின் ஒரு பகுதியைப் படித்தார்; படித்தது சுவாமிஜியினுடைய விருப்பத்துக்கு இயைந்திராதபடியால், அவர் புத்தகத்தைக் கையில் எடுத்துத் தாமே படித்துப் பின்பு சிஷ்யரை நோக்கி, ''காவியத்திலே எந்தப் பகுதி மிகவும் நயம் பொருந்தியது எனச் சொல்வாயாக,'' என்றார். சிஷ்யர் மறுமொழி சொல்லாதிருக்கச் சுவாமிஜி அவரை நோக்கிப் பின் வருமாறு சொல்லுவாராயினர்:

இந்திரசித்தன் போர்க்களத்திலே இறந்துவிட்டான்; மண்டோதரி துன்பத்தினால் தன் வயமிழந்து இராவணனை யுத்தத்திற்குப் போகவேண்டா எனத் தடுக்கின்றாள். இராவணன் மகனை நினைத்து ஏற்பட்ட துன்பத்தை மனத்திலிருந்து வலிந்து அகற்றிவிட்டுப் பெரிய வீரனைப்போலப் போர்க்களத்துக்குப் போக முற்படுகிறான்; வெகுளியினாலும் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்னும் வீர எண்ணத்தினாலும் உந்தப்பட்டு, மனைவி மக்களை மறந்து போருக்குச் செல்லுவதற்கு ஆயத்தமாய் நிற்கின்றான். இதுவே அக்காவியத்தில் மிக அழகாக அமைக்கப்பட்ட பாகம். ''எது வரினும் வருக! உலகம் நிலைபெறினும் சரி; அழிந்துவிடினும் சரி; நான் என் கடமையை மறக்கமாட்டேன்.'' இவை சுத்த வீரனுடைய வார்த்தைகள். அத்தகைய உணர்ச்சியுடையவராய் மைக்கேல் அந்தப் பாகத்தை எழுதினர்.

இதனைச் சொன்ன பின்பு சுவாமிஜி குறிப்பிட்ட பாகத்தை எடுத்து நன்கு மனத்திற்பதியத்தக்க வண்ணம் படித்தார்.

(37)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1901-ஆம் ஆண்டு.]

நாட்டு வைத்தியத்தினாலே சுவாமிஜி மிகவும் குணம் அடைந்திருக்கிறார். சிஷ்யர் திருமடத்திற்கு வந்திருக்கிறார். சுவாமிஜிக்குச் சேவை செய்யும் பொழுது சிஷ்யர் அவரை நோக்கி, ''ஆன்மா எங்கும் நிறைந்தது; எல்லா உயிர்களுக்கும் உயிர்; மிகவும் அணியது. அப்படி இருந்தும், அது ஏன் காணப்படுவதில்லை?'' என்றார்.

சுவா: உனக்குக் கண்கள் உண்டென்பதை நீ காண்கின்றாயா? பிறர் உனக்குக் கண்கள் உண்டென்று சொல்லும் பொழுது உனக்குக் கண்கள் உண்டென்று நினைப்பு வருகின்றது. புழுதியோ மணலோ கண்ணினுட்பட்டு எரிப்புண்டாகும்பொழுது உனக்குக் கண்கள் உண்டென்பதை நீ நிச்சயமாய் உணர்ந்துகொள்ளுகிறாய். உள்ளானவற்றுக்கு உள்ளாய் விளங்குகிற சர்வ வியாபியாகிய ஆன்மாவினுடைய தரிசனமும் எளிதாகக் கிடைப்பதில்லை.

சமய சாத்திரங்களைப் படிப்பதனாலும், குருவினுடைய வாய்மொழியைக் கேட்பதனாலும், அதைப்பற்றிச் சில எண்ணங்கள் உண்டாகின்றன; உலகத்திலே வருகிற கடுந்துன்பங்களும் கொடுந்தாக்கல்களும் இதயத்தைப் புண்ணாக்கும் பொழுதும், ஒருவன் தனது அரிய உரிய உறவினர்களை இழக்கும் பொழுதும், தனக்கு யாரும் உதவி இல்லையென்று எண்ணும் பொழுதும், மறுமையைப்பற்றி நோக்க முடியாத இருளடைந்த எண்ணங்களிலே மனமானது சிக்குண்டு அல்லல் உறும் பொழுதும் ஜீவனானவன் ஆன்ம தரிசனத்தை நாடித் தவிக்கின்றான். ஆதலாலே, துன்பமென்பது ஆன்ம ஞானத்துக்குத் துணை புரிவதாகும். ஆனால், அனுபவத்திலே வருகின்ற வேதனையால் எய்தும் போதனைகளை மனிதன் ஞாபகத்திலே வைத்திருக்க வேண்டும். வாழ்க்கையில் வரும் துன்பங்களை அனுபவித்த நாய்கள் பூனைகளைப்போல, வாளா மரித்துப்போகின்ற மனிதரும் மனிதரா? இன்பத்தினாலும் துன்பத்தினாலும் வருகின்ற அசைவினாலே அல்லல் உறும் பொழுதும் விவேகத்தோடு கூடி, இன்ப துன்பங்கள் அழிந்து போகும் தன்மையவை என அறிந்து, ஆன்மாவை ஆர்வத்தோடு பற்றி நிற்பவனே மனிதன் எனப்படுவான். மனிதருக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு இதுவே. எந்தப் பொருள் அணித்தாய் இருக்கின்றதோ, அது அவ்வளவாகக் காணப்படுவதில்லை. ஆன்மா அணித்தான பொருள்களிலே மிகவும் அணித்தாயது. ஆதலாலே, நிலையற்ற மனிதனுடைய மனமானது அதனைக் கண்டுபிடிப்பதில்லை. ஆனால், விழிப்போடும் சாந்தத்தோடும் புலன் அடக்கத்தோடும் விவேகத்தோடும் கூடிய மனிதன், புற உலகத்தைப் புறக்கணித்து, அக உலகத்தினுள்ளே ஆழ்ந்து சென்று, ஆன்மாவினுடைய மகிமையை அறிந்து, பெரியோனாகின்றான். அப்பொழுதுதான் அவன் ஆன்ம ஞானத்தை அடைந்து, "நானே ஆன்மா", "ஓ சுவேதகேது, அது நீ ஆகின்றாய்" என்னும் இத்தகைய சொற்றொடர்களின் பொருள்களை உணர்கின்றான். அறிந்துகொண்டாயா?

சிஷ்: ஆம் ஐய, துன்பம் துயரத்தின் மூலமாக ஆன்ம ஞானத்தை அடைய வேண்டுமென்று ஏற்பட்டிருப்பதேன்? இதற்குப் பதிலாகப் படைப்பே இல்லாதிருந்தால் நன்றாயிருக்குமல்லவா! ஒரு காலத்து நாமெல்லோரும் பிரம்மத்தினோடு ஒன்றுபட்டிருந்தோம். பிரம்மம் சிருஷ்டி செய்வதற்கு இச்சித்ததேன்? பிரம்மத்தினின்று வேறுபடாத ஜீவர்கள் வெளிப்பட்டுப் பிறப்பிறப்பாகிய மார்க்கங்களிலே உழன்று வாழ்க்கையின் இரு வேறு வகைப்பட்ட அல்லல்களிடையே ஊசலாடுவதேன்?

சுவா: ஒரு மனிதன் கள் வெறியுற்றிருக்கும் பொழுது பல வேறு காட்சிகளைக் காண்கிறான்; வெறி நீங்கிய பின்பு, அவை மதுவினால் வெறியுற்ற தனது மூளையினின்றெழுந்த தோற்றங்கள் என்

பதை அறிந்துகொள்கிருன். ஆதியற்றதாய் முடிவுள்ளதாய் அமைந்திருக்கின்ற இந்தச் சிருஷ்டியிலே அமைந்திருப்பனவெல்லாம் வெறியினுல் ஏற்பட்ட மயக்க நிலையின் காரியமாய் அமைந்தன; மயக்கம் கழிந்த பின்பு இதைப்பற்றிய கேள்வி ஒன்றும் எழமாட்டாது.

சிஷ்: பிரபஞ்சத்தின் ஆக்கல் அளித்தல் என்னும் இவற்றில் உண்மை இல்லையா ?

சுவா: ஏன் இல்லை ? நீ உடலோடு ஒன்றுபட்டு, நான் என்னும் எண்ணத்தோடு இருக்கும் பொழுது இவையெல்லாம் நிலை பெற்றிருப்பன. தேகபுத்தி இழந்து ஆன்மாவோடு ஒன்றுபட்டு ஆன்மிகமாகிய வாழ்க்கை வாழும் பொழுது இவற்றுள் ஒன்றும் இராது. சிருஷ்டி பிறப்பு இறப்பு என்னும் இவற்றைப்பற்றிய வினுக்களுக்கும் இடமில்லை.

க்வ கதம் கேன வா நீதம் குத்ர லீனமிதம் ஜகத்
அதுனைவ மயா த்ருஷ்டம் நாஸ்தி கிம் மஹதத்புதம்

''எங்குப் போய்விட்டது ? யார் இதனை எடுத்தார் ? உலகம் எங்கே அழிந்துவிட்டது ! சற்று முன்பாக என்னுற் காணப்பட்டது இப்பொழுது காணப்படவில்லையே ! என்ன அற்புதம் !'' என விவேக சூடாமணியிலே சொல்லிய வண்ணம் நீயும் சொல்லுவாய்.

சிஷ்: பிரபஞ்சத்தினுடைய இருக்கையைப்பற்றிய அறிவு இல்லாமற்போமாயின், ''உலகம் எங்கே அழிந்துவிட்டது ?'' என்று எப்படிச் சொல்லலாம் ?

சுவா: அந்தக் கருத்தை மொழியினுலே சொல்ல வேண்டியிருப்பதால், அவ்வண்ணம் சொல்ல வேண்டியதாயிற்று. உரை உணர்வு கடந்த பெரிய நிலையை எண்ணத்தினுலும் மொழியினுலும் ஆசிரியர் விவரிக்கவேண்டியிருந்தபடியால் முற்றிலும் பொய்யிருளாகிய உலகத்தைப் பற்றி மேலே காட்டியபடி சொல்லவேண்டியிருந்தது. மனம் வாக்குக்கு எட்டாமலிருக்கிற பிரம்மம் ஒன்றே பாரமார்த்திகமான உண்மைப் பொருள். உலகம் அத்தகைய உண்மைப் பொருளன்று. இன்னும் கேட்க வேண்டுவதைக் கேள். இன்றேடே உன்னுடைய வாதங்களுக்கெல்லாம் முடிவு கட்டிவிடுகின்றேன்.

பூஜை அறையிலே மாலைக்கால ஆராதனைக்கு மணி அடித்தது. எல்லோரும் அங்குச் சென்றனர். சிஷ்யர் மாத்திரம் சுவாமிஜியினுடைய அறையில் இருந்துவிட்டார். இதனைச் சுவாமிஜி கண்டு, ''நீ பூஜை அறைக்குப் போகமாட்டாயா ?'' என்ருர்.

சிஷ்: நான் இங்கே இருக்க விரும்புகிறேன்.

சுவா: சரி, நல்லது.

சிறிது நேரம் கழித்துச் சிஷ்யர் அறைக்கு வெளியே நோக்கி, ''இன்று அமாவாசை இரவு; எல்லாத் திசைகளிலும் இருள் பரந்

திருக்கிறது; இது காளித்தாயை வழிபடுவதற்குரிய இரவு,'' என்றார்.

சுவாமிஜி ஒன்றும் பேசாது கீழ்த்திசை வானத்தைச் சிறிது நேரம் நோக்கி, ''பார்த்தாயா இந்த இருளினுடைய அதிரகசியமான அற்புத அழகினை ?'' என்று கூறி, நெருங்கிய இருளின் திரளினைப் பார்த்த வண்ணமாகவே பரவசப்பட்டு நின்றார். சில நிமிஷங் கழிந்ததும் சுவாமிஜி, ''அன்னையே, ஆழ்ந்த இருளிலே நின் உருவில்லாத வனப்பு ஒளி வீசுகின்றதே !'' எனத் தொடங்குகிற வங்காளிப் பாட்டை மெதுவாகப் பாடினர். அதன் பின்பு சுவாமிஜி தம்முடைய அறையின் உள்ளே புகுந்து, '' அம்மா'', '' அம்மா'' ''காளி'', ''காளி'' என்று இடையிடையே சொல்லிக்கொண்டு ஆசனத்தில் அசைவற்றிருந்தார். சுவாமிஜி தம்மை மறந்திருக்கின்ற நிலையினைக் கண்ட சிஷ்யர், பரப்பரப்புற்று, ''ஐய, இப்பொழுது என்னோடு பேசுவீராக,'' என்றார்.

சுவாமிஜி புன்னகையோடு, ''எந்த ஆன்மாவினுடைய வெளித்தோற்றமானது இவ்வளவு அழகும் இனிமையும் தருகின்றதோ, அந்த ஆன்மாவினுடைய அழகினையும் ஆழத்தையும் உன்னால் அளக்க முடியுமா ?'' என்றார். சிஷ்யர் விஷயத்தை வேருக்குவதற்கு விரும்புவதைக் கண்ட சுவாமிஜி, '' ஓ அன்னாய், அமுத தாரையே, எத்தனை உருவமாகவும் வடிவமாகவும் நீ விளையாடுகின்றாய்!'' எனத் தொடங்குகிற மற்றொரு காளிப் பாட்டைப் பாடத் தொடங்கினர். பாட்டு முடிந்த பின்னர், சிஷ்யரை நோக்கி, ''இந்தக் காளி பிரம்மத்தினுடைய தோற்றம்; அசைகின்ற பாம்பு, அசைவற்ற பாம்பு, ஒரே பொருளின் இயக்க நிலையையும் ஸ்திர நிலையையும் குறிப்பனவென ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லியதை நீ கேள்விப்பட்டதில்லையா ?'' என்றார்.

சிஷ்: ஆம் ஐயா.

சுவா: இம்முறை நான் உடல் நலம் அடைந்த பின்பு என்னுடைய இதயத்தின் இரத்தத்தைக் கொண்டு அன்னையை வழிபடுவேன். அப்பொழுதுதான் அவள் மகிழ்ச்சியடைவாள். உங்களுடைய இரகுநந்தனரும் அப்படியே சொல்லுகிறார். அன்னையினுடைய மைந்தன் வீரனாய்த் திகழவேண்டும்; மஹா வீரனாயிருக்க வேண்டும். துன்பத்திலும், துயரத்திலும், மரணத்திலும் வழி தெரியாது அல்லல் உறும்போது அன்னையினுடைய பிள்ளை எப்பொழுதும் அச்சமின்றி இருக்க வேண்டும்.

(38)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம் 1901-ஆம் ஆண்டு.]

சுவாமிஜி இந்நாட்களில் திருமடத்திலே இருந்து வருகின்றார். அவருடைய உடல் நலம் நன்றாயில்லை—ஆனால், காலையிலும் மாலையிலும் வெளியே உலாவப் போவார். சிஷ்யர் சுவாமிஜியினுடைய அடிகளை வணங்கிவிட்டு உடல் நலத்தைப்பற்றி வினவினார்.

சுவா: நல்லது; இந்த உடல் மிகவும் இழிந்த நிலையிலிருக்கிறது. ஆனால், உங்களுள் ஒருவரும் என் முயற்சியிலே எனக்கு உதவி செய்வதற்கு முன் வருகிறீர்களில்லை. நான் தனித்து என்ன செய்யக்கூடும்? இம்முறை இவ்வுடல் வங்காளத்து நிலத்திலிருந்து தோன்றியது. அதிக வேலைப் பொறுப்பை இதனால் தாங்க முடியுமா? இங்கு வருகின்ற நீங்கள் பரிசுத்த ஆன்மாக்களாய் இருக்கின்றீர்கள். இந்த வேளையில் நீங்கள் உதவியாளர்களாய் இராவிட்டால், நான் தனித்து என்ன செய்யலாம்?

சிஷ்: ஐய, தியானவான்களாகிய இந்தப் பிரம்மசாரிகளும் சந்நியாசிகளும் தேவரீருக்குப் பின் நின்று உதவி புரிந்து வருகிறார்கள். அவர்களுள் ஒவ்வொருவரும் தேவரீரின் வேலைக்காக உயிரைக்கொடுக்கத் தயாராய் நிற்கின்றனரென்று எண்ணுகிறேன்—அப்படி இருக்கத் தேவரீர் இப்படிக் கூறுவதேனோ?

சுவா: சரி; இளவங்காளிகள் கூட்டம் ஒன்று எனக்கு வேண்டும். இந்த நாட்டினுடைய நலத்தைப் பற்றிய நம்பிக்கை அவர்களிடத்தேதான் தங்கியிருக்கிறது. நல்லொழுக்கம் உடையவர்களாய், புத்திமான்களாய், பிறருடைய சேவைக்காக எல்லாவற்றையும் தியாகம் பண்ணுபவர்களாய், என் எண்ணங்களைத் தொழிற்படுத்துவதற்குத் தங்களது உயிரையும் அர்ப்பணம் பண்ணுபவர்களாய், அதனால் தங்களுக்கும் தேசத்துக்கும் நலத்தைப் புரிபவர்களாய் உள்ள இளைஞர்களிடத்தே எதிர் காலத்தைப் பற்றிய நம்பிக்கை தங்கியிருக்கின்றது. சாதாரணச் சிறுவர்கள் கூட்டங் கூட்டமாய் வருகிறார்கள், வருவார்கள். அவர்களுடைய முகத்திலே பேதைமை காணப்படுகிறது; இதயத்திலே வலிமை இல்லை; உடல் வலியிழந்து கருமம் செய்யத் தகுதியற்றதாயிருக்கிறது; மனத்திலே தைரியமில்லை. இவர்களால் என்ன செய்ய முடியும்? நசிகேதனைப்போன்ற சிரத்தையுள்ள இளைஞர் பத்துப் பன்னிரண்டு பேர் எனக்குக் கிடைப்பார்களாயின், இந்த நாட்டினுடைய எண்ணங்களையும் செயல்களையும் ஒரு புதிய வழியிலே திருப்பிவிடுவேன்.

சிஷ்: ஐய, எத்தனையோ வாலிபர்கள் தேவரீரிடத்துக்கு வருகிறார்கள். அவர்களுள்ளே அத்தன்மையோர் ஒருவராவது காணப்படவில்லையா?

சுவா: நல்லவர்களாகக் காணப்படுபவர்களுள் சிலர், மண வாழ்க்கை என்னும் கட்டுக்குட்பட்டவர்களாயிருக்கிறார்கள். வேறு சிலர், பணம் புகழ் என்னும் உலகப்பொருள்களைத் தேடுவதற்குத் தம்மை விலைப்படுத்தியவர்களாய் இருக்கிறார்கள். பெருந்தன்மையரான மற்றையோர் உயர்ந்த எண்ணங்களைப் பெற்றுக்கொள்ள மாட்டாதவர்களாயிருக்கின்றனர். நீ உயர்ந்த நோக்கங்களைப் பெறுதற்குத் தகுதி உடையவன். ஆனால், அவற்றைச் செயற்படுத்துவதற்கு உன்னால் முடியாது. இந்த எண்ணங்களினாலே சில பொழுது என்னுடைய உள்ளத்துக்குப் பெரிய கவலை ஏற்படுகிறது. இந்த மானிட உடலை எடுத்தும், அதிருஷ்டமின்மையினாலே செய்ய வேண்டிய அளவு வேலை செய்யக்கூடாமல் இருக்கிறது. ஆனால், நான் முற்றிலும் நம்பிக்கை இழந்துபோய்விடவில்லை. ஆண்டவனுக்குச் சித்தமிருந்தால், ஆன்மிக ஞானத்திலும் கருமத்திலும் சிறந்து எதிர்காலத்திலே என்னுடைய கொள்கைகளைத் தொழிற்படுத்தக்கூடிய பெரிய வீரர்கள் இந்த இளைஞர்களிடையேயிருந்து வருதல் கூடும்.

சிஷ்: தேவரீருடைய விரிந்த சமரசக் கொள்கைகள் எப்பொழுதோ ஒரு காலத்தில் எல்லோராலும் அங்கீகரிக்கப்படும் என்பது எனது திடமான நம்பிக்கை. அவை எத்திசையும் நோக்கினவாய், எண்ணம் செயல் ஆகியவற்றின் எல்லாத் துறைகளுக்கும் புதிய வலிமையைத் தரத்தக்கனவாய் இருக்கின்றன. இந்த நாட்டு மக்கள் தேவரீருடைய எண்ணங்களை வெளியாகவோ மறைவாகவோ ஏற்று மக்களுக்குப் போதிக்கிறார்கள்.

சுவா: எனது பேரை அவர்கள் சொன்னாலென்ன, சொல்லாவிட்டால் என்ன? என் கொள்கைகளை ஏற்றுக்கொள்வார்களாயின் அதுவே போதுமானது. சாதுக்களுக்குள்ளே நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் காம காஞ்சனங்களை வெறுத்துவிட்டார்களாயினும், பெயர் புகழ் என்னும் இவற்றின்மேலுள்ள இச்சையினாலே கட்டுப்பட்டிருக்கிறார்கள். ''புகழாசை என்ற குறைபாட்டிற்குப் பெரியோர்களும் இறுதி வரையில் அடிமையாகின்றனர்,'' என்பதை நீ வாசிக்கவில்லையா? நாங்கள் அனைவரும் வேலை செய்தல் வேண்டும். பயன் குறித்த இச்சையை முற்றிலும் விட்டுவிடவேண்டும். மக்கள் எங்களைக் குறித்து நன்மையாயும் தீமையாயும் பேசுவார்கள். நாங்களோ, சிங்கங்களைப்போல அடைய வேண்டிய இலக்கைக் கண் முன்னே வைத்து, ''அறிவாளிகள் நம்மைப் புகழினும் சரியே, இகழினும் சரியே,'' என்னுங் கருத்தினோடு முயல வேண்டும்.

சிஷ்: இப்பொழுது நாங்கள் பின்பற்றி ஒழுக வேண்டிய பேரிலக்கு எதுவாகும்?

சுவா: மஹா வீரருடைய பெருங்குணங்களை உங்கள் வாழ்க்

கையில் இலக்காக நீங்கள் இப்பொழுது கொள்ள வேண்டும். அவர் இராமசந்திரருடைய கட்டளையை ஏற்றுக் கருங்கடலைத் தாண்டி விட்டார் பார்த்தாயா? அவர் வாழ்வதையோ மரிப்பதையோ பெரிதாகப் பொருட்படுத்தவில்லை; புலன்களை முற்றிலும் அடக்கியாள்பவராய் இருந்தார்; அற்புதமான புத்தி சாதுரியம் படைத்தவராயிருந்தார். சேவைக்கு உயர்ந்த இலக்காகக் காணப்படுகிற இந்த வீரருடைய வாழ்க்கையைப் பற்றுக்கோடாகக் கொண்டு நீங்கள் உங்கள் வாழ்க்கையை இன்று அமைத்தல் வேண்டும். அதுவாயிலாக ஏனைய இலட்சியங்களெல்லாம் உங்கள் வாழ்க்கையிலேயே படிப்படியாக வெளியாகும். வினாவின்றிக் குருவுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலும், தவறாது பிரம்மசரியங் காத்தலும், காரிய சித்தி எய்துவதற்கு வழியாயிருக்கின்றன. அனுமாரை ஒரு கோணத்திலிருந்து நோக்கினால், அவர் சேவை என்னும் உயர்ந்த கொள்கையே உருவானாற்போலக் காணப்படுகிறார். மற்றொரு கோணத்திலிருந்து பார்த்தால் உலகனைத்தினையும் அஞ்சுமாறு செய்கின்ற சிங்கத்தையொத்த பேராற்றல் அவரிடத்துக் காணப்படுகிறது. இராமசந்திரருடைய நன்மைக்காகத் தமது உயிரை அர்ப்பணம் பண்ணச் சிறிதேனும் தடையில்லாதவராயிருக்கிறார். இராம சேவையொழிந்த பிற யாவற்றையும் புறக்கணிக்கின்றார். உலகபாலகராகிய பிரம்மதேவன் சிவபெருமான் என்றின்னோருடைய நிலையை அடைவதையும் அவர் பொருட்படுத்தவில்லை. ஸ்ரீராமருடைய கட்டளையைச் செய்து நிறைவேற்றுவதே அவரது வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரே விரதம். அத்தகைய முழுமனத்தோடு கூடிய பத்தி இன்றியமையாதது. கோல்*, கர்த்தால்† என்னும் வாத்தியங்களை முழக்கி, கீர்த்தனை பாடிக் குதித்துக் கூத்தாடி மக்கள் எல்லாம் நிலையில் இழிந்துவிட்டார்கள். முதலிலே இவர்களோ, குன்ம வியாதி பிடித்த மனிதர்கள். அதனோடு இப்படிக் குதித்துக் கூத்தாடுவதென்றால், அதனால் வரும் தாக்கத்தை எப்படிச் சகிப்பது? முற்றான பரிசுத்தத்தை முதற்படியாகக் கொண்ட, யாவற்றிலும் உயர்ந்த சாதனையை வெளித்தோற்றமட்டிலே கைக்கொள்ளத் தொடங்கி மிகுந்த தாமசத்திலே மூழ்கிவிட்டார்கள். எந்தப் பக்கம் போனாலும், எந்தக் கிராமத்திலும், கோல் கர்த்தால் இவற்றுடைய ஓசைதான் கேட்கப்படுகிறது. இந்த நாட்டிலே பேரிகைப் பறைகள் செய்வதில்லையா? துடிப்பறைகள் இந்தியாவில் அகப்படமாட்டாவா? இத்தகைய வாத்தியங்களினுடைய ஆழ்ந்த ஓசையை நம் சிறுவர்கள் கேட்கும்படி செய்வாயாக. பெண் தன்மை படைத்த இசைக்கருவிகளைப் பாலியமுதல் கேட்டு வந்த காரணத்

* மிருதங்கம் போன்ற வங்காள வாத்தியம்.

† ஜாலர் போன்ற தாளம்.

றினால் இந்த நாடு முற்றிலும் பெண்கள் வசிக்கின்ற நாடாகிவிட்டது. இதைவிட எய்தக்கூடிய இழிவென்ன? இந்தப் படத்தை எழுதிக் காட்டக் கவிஞருடைய கற்பனா சத்தியாலும் முடியாது. கொம்பும் தமருகமும் ஒலிக்கட்டும். பேரிகைப் பறைகள் ஆழ்ந்த போர்க்கள ஓசையோடு முழங்கட்டும். ''மஹா வீர,'' ''மஹா வீர'' என்று நம்முடைய நாடு சொல்லட்டும். ''ஹர, ஹர, வியோம், வியோம்'' என்னும் ஓசையினால் நாற்றிசையும் அதிரட்டும். மனிதனுடைய மெல்லியத் தட்டி ஒலி எழுப்புகின்ற வாத்தியங்களைச் சில காலத்திற்கு நிறுத்தி வைக்கவேண்டும். கேயால், டப்பா இவைபோன்ற மெல்லியல் மெட்டுக்களைச் சில காலத்துக்கு நிறுத்திவிட்டு, மக்களுக்குத் துருபத இசையைப் பயிற்ற வேண்டும். வேத கீதங்களினுடைய உன்னதமான ஒலி முழக்கத்தினாலே இந்த நாட்டுக்குப் புத்துயிர் அளிக்கவேண்டும்; எல்லாவற்றிலும் தவத்தின்பாற்பட்ட ஆண்மையோடு கூடிய வீர வாழ்க்கையை உயிர்ப்பிக்க வேண்டும். அத்தகைய உயர்ந்த கொள்கையைப் பின்பற்றி ஒழுகுவதனால் மக்களுக்கு நலம் உண்டு. உன்னுடைய நீர்மையை அத்தகைய உயர்ந்த கொள்கைகள் வழியாக உருப்படுத்துவாயாயின், ஆயிரம் பேர் உன்னைப் பின்பற்றுவர். ஆனால், உயர்தனிக் கொள்கையிலிருந்து ஓர் அங்குலமாவது வழுவக்கூடாத நிலைமையை உள்ளத்தில் வைத்துக்கொள்ளுவாயாக. ஒருபொழுதும் மனத்தளர்ச்சி அடையவேண்டா. உண்ணும் போதும், உடுக்கும் போதும், கிடக்கும் போதும், பாடும் போதும், ஆடும் போதும், இன்பத்தை நுகரும் போதும், நோயுற்றிருக்கும் போதும் எப்போதும் மிக உயர்ந்த ஒழுக்கத்தோடு கூடிய தைரியத்தை வெளிப்படுத்துவாயாக. அப்பொழுதுதான் உலக மாதாவாகிய மகாசத்தியினுடைய அருளை நீ பெறுவாய்.

சிஷ்: ஐய, சில வேளைகளில் என் மனமானது மிகவும் நலிவடைகின்றது; ஏனோ, தெரியவில்லை!

சுவா: அப்படியானால், இவ்வண்ணம் நினைப்பாயாக: ''யான் யாருடைய பிள்ளை? அவரோடு கலந்து உறவாடுகின்ற யான் வலியற்ற மனத்தோடும் கீழ்மையுற்ற சிந்தையோடும் இருப்பேனா?'' மனத்திலும் இதயத்திலும் உள்ள வலியின்மை அனைத்தினையும் உதறி மிதித்துவிட்டு எழுந்து நின்று, ''நான் வீரத்தோடு கூடியிருக்கின்றேன்; என்னுடைய அறிவு நிலைநாட்டப்பட்டிருக்கிறது; நான் பிரம்மத்தை அறிந்தவன்; என்னுடைய சிந்தை தெளிவானது,'' என்று சொல்வாயாக. காம காஞ்சனத்தை வெற்றி கொண்ட வீரராகிய ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் துணைவராய் இருந்த இன்னாருடைய சிஷ்யன் நான் என்று சொல்லு. இதனால் நல்ல பயன் உண்டாகும். இத்தகைய பெருமையில்லாதவன் பிரம்ம ஞானம் உதயமாகப் பெறாதவனே. ராம பிரசாதருடைய பாட்டை

நீ கேள்விப்பட்டதில்லையா? ''உலக மாதாவைத் தனியரசியாகக் கொண்ட யான் உலகத்தில் யாருக்கு அஞ்ச வேண்டும்,'' என்பார் அவர். அத்தகைய பெருமை எப்பொழுதும் மனத்தில் பொருந்தியிருக்குமாயின், இதயம் மனம் என்னுமிவற்றின் வலியின்மை உன்னை அணுகமாட்டாது. பலவீனமானது உன் மனத்தை எப்பொழுதும் வென்றுவிடாதிருப்பதாக. மஹா வீரரை நினைத்திரு. உலக மாதாவை நினைந்திரு. அப்பொழுது எல்லா வகைப் பலவீனங்களும் கோழைத்தனங்களும் உன்னை விட்டு அகன்றுவிடும்.

இவ்வார்த்தைகளைச் சொல்லிவிட்டுச் சுவாமிஜி மேல் மாடியிலிருந்து இறங்கி, முற்றத்திலே அவர் வழக்கமாக இருக்கிற ஆசனத்திலே வந்திருந்தார். ஆங்குக் குழுமியிருந்த சந்நியாசிகளையும் பிரம்மசாரிகளையும் நோக்கி, ''பிரம்மத்தினுடைய மறைவில்லாத விளக்கம் இங்கே இருக்கிறது; அதனைக் கருதாது வேறு பொருள்களில் உள்ளத்தைச் செலுத்துகிறீர்களே! சீச்சீ! உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல, பிரம்மம் இங்கே இருக்கிறது. நீங்கள் காணவில்லையா? இங்கே,'' என்றார்.

இந்த வார்த்தைகளைச் சொன்ன மாத்திரத்தே எல்லோரும் ஓவியத் திரையில் அலர்ந்த ஒரு சித்திரம் போல, ஆழ்ந்த தியானத்தில் சடுதியாக இழுக்கப்பட்டவர்களைப்போல, ஒரு வகை உணர்ச்சியை அடைந்தனர். *** சிறிது நேரம் கழித்து இந்த உணர்ச்சி போய்விட, எல்லோரும் சாதாரண நிலைக்கு வந்தனர்.

அதன் பின்பு உலாவிக்கொண்டிருக்கும் பொழுது சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''இன்று எல்லோரும் ஒருமுகப்பட்ட நிலையில் நின்றதை நீ கண்டாயா? இவர்கள் எல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணருடைய பிள்ளைகள்; சொற்களை உரைத்த மாத்திரத்தில் உண்மையை உணர்ந்தார்கள்,'' என்றார்.

சிஷ்: ஐய, அவர்களைப் பற்றிப் பேசுவானேன்? என்னுடைய சிந்தையும் தெய்விகமாகிய ஆனந்தத்தினால் நிறைந்தது. இப்பொழுது கனவைப்போல எல்லாம் மறைந்து போய்விட்டன.

சுவா: எல்லாம் காலத்திலே வரும். இப்பொழுது முயலுவாயாக. அஞ்ஞானத்திலும் மயக்கத்திலும் அமிழ்ந்து கிடக்கின்ற மக்களின் நன்மைக்காகச் சில நன்முயற்சிகளைத் செய்து வருவாய். அப்பொழுது இத்தகைய அனுபவங்கள் எல்லாம் தாமே வரக் காண்பாய்.

சிஷ்: ஐய, இத்தகைய வழிகளில் நான் நுழைய அஞ்சுகிறேன்.—எனக்கு வலிமையுமில்லை. ''கரும மார்க்கம் உட்புகுதற்கரியது,'' என்று சமய சாத்திரங்கள் சொல்லுகின்றன.

சுவா: பின் நீ என்ன செய்ய விரும்புகிறாய்?

சிஷ்: தேவரீரைப் போன்ற, கேட்டல் சிந்தித்தல் தெளிதலினாலே சாத்திரங்களிற் கூறப்பட்ட உண்மையை உணர்ந்த பெரி

யாரோடு வாதித்துக் காலங்கழித்து இந்த வாழ்க்கையிலேயே பிரம் மத்தை அடைந்துவிட விரும்புகிறேன். வேறொன்றுக்கும் எனக்கு வலிமையுமில்லை, ஊக்கமுமில்லை.

சுவா: நீ அவ்வண்ணம் விரும்பினால், அப்படியே செய்யலாம். நீ சாத்திரங்களைப் பற்றிக் கொண்டிருக்கிற எண்ணங்களையும் முடிபுகளையும் பிறருக்குச் சொல்வாயாக. அதனால், அவர்கள் நன்மை அடைவார்கள். உடலிருக்கும் வரையும் ஏதாவது ஒரு கருமத்தைச் செய்யாமலிருக்க முடியாது; ஆதலால், பிறருக்கு உப காரமாகிய கருமத்தைச் செய்தல் வேண்டும். சமய சாத்திரங் களைப் பற்றி நீ கேட்ட முடிபுகளும் அனுபவங்களும் உண்மை நாடுவோர் பலருக்குப் பயனைத் தருவன. ஆதலால், பிறருக்கு உதவி செய்யும்பொருட்டு அவற்றை எழுதி வைப்பாயாக.

சிஷ்: முதலிலே நான் உண்மையை உணர்ந்துகொள்வேனாக. "அதிகாரத்துக்குரிய பட்டயம் இல்லாமல் ஒருவரும் உன் சொல் லுக்குச் செவி சாய்க்கமாட்டார்," என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதுண்டு.

சுவா: நீ இப்பொழுது இருக்கின்ற நிலையிலே, தங்களது சமய சாதனையும் ஆராய்ச்சியும் எய்தப்பெற்று அதற்கப்பால் போகமாட் டாது திகைத்து நிற்கின்ற மக்கள் பலர் இவ்வுலகத்தில் இருத்தல் கூடும். உன்னுடைய அனுபவங்களையும் எண்ணங்களையும் எழுதி வைத்தால், அவை அவர்களுக்காவது பயன்படும். இந்தத் திரு மடத்திலுள்ள சாதுக்களோடு நீ புரிகின்ற வாதங்களின் சாரத்தை எழுதி வைப்பாயாயின், அது பலருக்குப் பயனை நல்கும்.

சிஷ்: தேவரீர் அதை விரும்புகிறபடியால், நான் அங்ஙனம் செய்ய முயலுவேன்.

சுவா: பெண்ணாசை மண்ணாசையிலே அழுந்திக் கிடக் கின்ற மக்களுக்குக் கைதந்து உதவாததும், மயக்கத்திலும் அஞ் ஞானத்திலும் ஆழ்ந்தோருக்கு நலத்தைத் தாராததும், பிறர்க்கு எவ்வாற்றானும் உதவாததுமாகிய சமய சாதனையினாலும், சாக்ஷாத் காரத்தினாலும் ஆகின்ற பயனென்ன? ஜீவர்களுள் ஒருவனாவது பந்தமுற்று நையும்போது நீ மோக்ஷத்தை அடைந்துவிடலாம் என்று நினைக்கின்றாயா? மற்றவன் மோக்ஷத்தை அடையாதவரை அவனுக்கு உதவி செய்யும்பொருட்டும், பிரம்மஞானத்தை அடை விக்கும்பொருட்டும், நீ எத்தனையோ பல முறை பிறக்க வேண்டிய வன். ஒவ்வொரு ஜீவனும் உன்னில் ஒரு பாகமாய் இருக்கிறது. பிறர் பொருட்டு நாம் முயல வேண்டுமென்பதற்குக் காரணம் இதுவே. உன்னுடைய மனைவி மக்களை உனக்குச் சொந்தமான வர்கள் என அறிந்து முழுமனத்தோடு அவர்களுடைய நலத்தை நீ எவ்வளவு விரும்புகின்றாயோ, அவ்வளவு அன்பும் கவர்ச்சியும் உனக்கு ஒவ்வோர் உயிரிடத்திலும் உண்டாகுமாயின், உன்னு

-டைய உள்ளத்திலே பிரம்மஞானம் உதிக்கின்றதென்று நான் அறிந்துகொள்ளுவேன்; அதற்கு முன்பு அங்ஙனம் கொள்ளமாட்டேன். சாதி சமய வேறுபாடின்றி எல்லோருடைய நலத்தையும் கருதுகிற எண்ணங்கள் உன்னுடைய உள்ளத்தில் உதிக்குமாகில், நீ உண்மையாகவே உயர்நிலையை நோக்கி முன்னேற்றம் அடைகின்றாய் என்பதை நான் அறிந்துகொள்வேன்.

சிஷ்: ஐய, அனைவரும் மோக்ஷமடைந்தாலன்றி, தனித்தொருவன் மோக்ஷமடைதல் முடியாதென்று சொல்வது மிகவும் நிகரற்ற தீர்மானமாகும். இத்தகைய அற்புதமான கொள்கையை நான் முன்பு கேட்டதில்லை.

சுவா: அத்தகைய கொள்கையை உடைய வேதாந்திகள் ஒரு வகுப்பார் இருக்கின்றனர். தனித்து அடைகின்ற முத்தி உண்மையான, பூரணமான முத்தியன்று என்றும், அனைவரும் ஒன்றுகூடி அடைகின்ற முத்தியே உண்மையான முத்தியென்றும் அன்னார் கூறுகின்றனர். அக்கொள்கையிலே பல நிறைவுகளையும் குறைவுகளையும் எடுத்துக் காட்டலாம்.

சிஷ்: வேதாந்தத்தின்படி தனித்திருக்கின்ற இருக்கை நிலையே பந்தத்துக்கு மூலமாகும். ஆனந்த ஞானவடிவானது இச்சைகளினாலும் கருமப் பயன்களினாலும் எல்லையுட்பட்டுக் கட்டுண்ட நிலையாகக் காணப்படுகிறது. விவேகத்தினாலே, அங்ஙனம் ஏற்பட்ட எல்லையானது மறைந்து போக, ஜீவன் எல்லா வகைக் குணங்களினின்றும் விடுபடுவான். அப்பொழுது உரை உணர்வு கடந்த ஞானவடிவாகிய ஆன்மாவுக்குப் பந்தமேது? ஜீவன், உலகம் என்னும் எண்ணங்கள் யாருக்கு மாறு உண்மைகளாக நிலைபெற்றிருக்கின்றனவோ, அன்னார், அனைவர்க்கும் மோக்ஷம் சித்தித்தாலன்றி, தாம் மோக்ஷத்தை அடைய முடியாதென எண்ணுதல் கூடும். ஆனால், மனமானது தன்னை எல்லையினுட்படுத்துகின்ற குணங்களினின்று விடுபட்டு பிரம்மத்திலே அமிழ்ந்துமாயின், அங்ஙனம் அமிழ்ந்தப்பெற்றோருக்கு என்ன வேறுபாடு தோன்றும்? அவருடைய முத்திக்கு எதுவும் தடையாகாது.

சுவா: ஆம், நீ சொன்னது தக்கதே. வேதாந்திகளுள் பலர் அந்தக் கொள்கையை உடையவர். அதிலும் குற்றமில்லை. அந்தக் கொள்கையின்படி தனித்து முத்தியடைவதற்குத் தடையில்லை. 'அனைத்துப் பிரபஞ்சத்தையும் என்னுடன் கொண்டு முத்தி எய்துவேன்,' என்று நினைக்கிறவனுடைய உள்ளம் எவ்வளவு விரிந்தது, எண்ணிப் பார்!

சிஷ்: ஐய, அது இதயத்தினுடைய தைரியத்திற்கு அடையாளமாய் இருக்கலாம். ஆனால், சாத்திரங்கள் அதனை ஆதரிக்கவில்லை.

சுவாமிஜி தம்மை மறந்த நிலையிலிருந்தாராதலின், இந்தச் சொற்களுக்குச் செவி சாய்க்கவில்லை. சிறிது பொழுது கழித்துப்

பின் வருமாறு சொல்லுவாராயினர்: "பகலும் இரவும் பிரம்மத்தை நினைத்துத் தியானிப்பாயாக; நிறைந்த ஒருமுகப்பட்ட சித்தத்தோடு தியானிப்பாயாக; விழித்திருக்கும் வேளையில் பிறருக்கு நன்மை தரக்கூடிய கைங்கரியம் ஏதாவது ஒன்றினைச் செய்க; இயலாதாயின், 'ஜீவர்களுக்கும் உலகத்துக்கும் நலமுண்டாகுக; எல்லோருடைய சிந்தையும் பிரம்மத்தின் வழி செல்லுக,' என்று நினைப்பாயாக; அத்தகைய இடைவிடாத எண்ணத்தினாலே உலகம் நன்மையை அடையும். செயலாயிருப்பினும், எண்ணமாயிருப்பினும் நலமாயிருப்பது இவ்வுலகிற் பயனற்றுப் போவதில்லை. உன்னுடைய எண்ணங்கள் அமெரிக்காக் கண்டத்திலுள்ள ஒருவருடைய ஆன்மிக உணர்ச்சியை எழுப்பிவிடுதல் கூடும்.

சிஷ்: ஐய, என்னுடைய உள்ளமானது உண்மையிலே ஒன்றுபட்டிருக்கும் வண்ணம் என்னை ஆசீர்வதித்தருளுதல் வேண்டும்.

சுவா: அப்படியே ஆகுக. உனக்குச் சிரத்தையிருக்குமாயின், அது நிச்சயமாகவே கைகூடும்.

(39)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1901-ஆம் ஆண்டு.]

பேலூர்த் திருமடம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே, வைதிகர் பலர் திருமடத்து நடவடிக்கைகளைப் பற்றி மிகவும் குறை கூறுவதுண்டு. இந்த விஷயத்தைச் சிஷ்யர் தெரிவித்த பொழுது சுவாமிஜி, "யானையானது கடை வீதி வழியாக நடந்து செல்லுகிறது. ஆயிரம் நாய்கள் அதன் பின்னர்க் குரைக்கின்றன. அவ்வண்ணமே உலகத்தவர் பழி வார்த்தை கூறும் பொழுதும் சாதுக்கள் அவர்கள்மேல் சீற்றம் கொள்வதில்லை," எனத் துளசிதாசர் கூறிய வாசகத்தை எடுத்துச் சொல்லுவார்; "இடுக்கண் இன்றி நல்ல எண்ணம் ஒன்றுவது மக்கட்சமுதாயத்தினுடைய இதயத்தினுள்ளே புகுந்ததில்லை," என்பார். "கருமப் பலனிலே நாட்டம் வையாமல் வேலையைச் செய்வீர்களாக. ஒரு நாளைக்கு நிச்சயமாகவே பலனைப் பெறுவீர்கள்," என்று சொல்லி யாவரையும் உற்சாகப்படுத்துவார். "என் மைந்தனே, நன்மை புரிபவன் ஒரு நாளும் துயர் அடையமாட்டான்," என்னும் கீதா வாக்கியத்தைச் சுவாமிஜி இடை இடையே சொல்லுவார்.

1901-ஆம் ஆண்டு, மே மாதத்திலோ, ஜூன் மாதத்திலோ, சுவாமிஜி சிஷ்யரைத் திருமடத்தில் கண்டு, "இரகுநந்தனருடைய '**அஷ்ட விம்சதி தத்துவம்**' என்னும் நூலின் ஒரு பிரதியைக் கூடிய விரைவில் கொண்டுவந்து கொடு," என்று பணித்தருளினர்.

சிஷ்: ஆம் ஐய, இக்காலத்துக் கல்வியாளர் குருட்டு நம்பிக்கைக் குப்பை என்று நினைக்கின்ற இரகுநந்தனர் ஸ்மிருதியை என்ன செய்யப் போகின்றீர்கள் ?

சுவா: ஏன் ? இரகுநந்தனர் தம் காலத்திலே மிகவும் சிறந்த படிப்பாளராயிருந்தார்; பழைய ஸ்மிருதிகளில் உள்ள இந்துக்களின் பழக்கவழக்கங்களைத் தொகுத்து அக்காலத்துக்கு வேண்டிய வண்ணம் அமைத்து ஒரு நூலைச் செய்தார். வங்காளம் முழுவதும் அவருடைய விதிகளைப் பின்பற்றி நடக்கிறது. பிறந்த நாள் தொடங்கி இறக்கும் வரையும் இந்தியனுடைய வாழ்க்கையை வகுத்துக் கூறுகிற அவருடைய சட்டங்களின் நெருக்கடியால் மக்கள் கூட்டம் மிகவும் நலிவடைந்துவிட்டது. அவர் ஊண் உறக்கம் முதலாக வாழ்க்கையிலுள்ள சாதாரண விஷயங்களையும், முக்கிய விஷயங்களையும் சட்டங்களினுலே ஒழுங்குபடுத்த முயன்றார். இக்காலத்தின் நிலை வேறுபட்டிருப்பதால், அத்தகைய சட்டங்கள் நிலை பெறவில்லை. எல்லாவிடங்களிலும் எல்லாக் காலங்களிலும் ஆசாரங்களையும் அனுஷ்டானங்களையும் தன்னகத்தடக்கிய கரும காண்டமானது, உருவத்தில் வேறுபடும். உபநிடதமாகிய ஞான காண்டம் மாத்திரமே வேறுபாடற்று நிலைத்திருப்பது; இன்று வரை நிலை பெற்றுள்ளது. உரையாசிரியர்கள் மாத்திரம் பலர் இருந்திருக்கின்றனர்; அவ்வளவுதான்.

சிஷ்: இரகுநந்தனருடைய ஸ்மிருதியைக்கொண்டு என்ன செய்யப் போகின்றீர்கள் ?

சுவா: இம்முறை துர்க்கா பூஜை செய்ய வேண்டும் என்று எனக்குப் பெரிய விருப்பமிருக்கிறது. செலவுக்கு வேண்டும் பணம் வருமாயின், நான் மகாமாயையை வழிபடுவேன். ஆதலாலே, வழிபாட்டிற்குரிய கருமங்களைப் பற்றிய பாகங்களைப் படிக்க விரும்புகிறேன். அடுத்த ஞாயிற்றுக்கிழமை திருமடத்துக்கு வரும் பொழுது ஒரு பிரதியை எடுத்துக்கொண்டுவா.

சிஷ்: சரி ஐயா.

அடுத்த சனிக்கிழமை சிஷ்யர் புத்தகப் பிரதியொன்று கொண்டு வந்தார். சுவாமிஜி அதனை மிகுந்த மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டார்; சிஷ்யரை ஒரு வாரங்கழித்துக் கண்ட பொழுது அவரை நோக்கி, ''நீ தந்த இரகுநந்தனர் ஸ்மிருதி நூலை நான் படித்து முடித்துவிட்டேன். கூடுமானால், உலக மாதாவின் பூஜையை நடைபெறச் செய்வேன்,'' என்றார்.

துர்க்கா பூஜை உரிய காலத்திலே மிகச் சிறப்பாக நடைபெற்றது.

* * * *

இது நிகழ்ந்ததற்குப் பின்பு சுவாமிஜி காளி கட்டத்திலே காளித்தாயின் முன்னிலையிலே ஓர் ஹோமத்தை நடத்தினார்.

இதைக் குறித்துச் சிஷ்யருக்குச் சொல்லும் பொழுது பின் வருமாறு கூறுவாராயினர்:

''காளி கட்டத்திலே விசாலமான கொள்கைகள் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். நான் மேலே நாட்டுக்குப் போய்த் திரும்பியவன் என்பதை அறிந்திருந்தும், கோயில் அதிகாரிகள் நான் கோவிலினுட்புகுவதனைச் சிறிதேனும் தடுத்துக் கூறவில்லை; என்னை மிகுந்த அன்பினோடு பரிசுத்த ஆலயத்தினுள்ளே அழைத்துச் சென்று மனப்பூர்வமாக நான் அன்னையை வழிபடும் வண்ணம் எனக்கு உதவி புரிந்தார்கள்.''

(40)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1902-ஆம் ஆண்டு.]

இன்று ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஆண்டு விழாக் கொண்டாட்டம். இதுவே சுவாமிஜி கடைசியாகக் கண்ட ஆண்டு விழா. சிஷ்யர் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றிய தோத்திர கீதம் ஒன்றைச் சுவாமிஜியினிடம் கொடுத்துவிட்டு, சுவாமிஜியினுடைய பாதங்களை மெல்ல வருடிக்கொண்டிருந்தார். சுவாமிஜி கீதத்தை வாசிக்குமுன் சிஷ்யரை நோக்கி, ''கால்கள் மிகவும் மெலிந்துவிட்டன; ஆதலால் கால்களை மிகவும் மெல்ல வருடலாம்,'' என்றார்.

கீதத்தை வாசித்த பின்பு அது நன்றாய் எழுதப்பட்டிருக்கிறதெனச் சுவாமிஜி சொன்னார்.

சுவாமிஜியினுடைய நோய் மிகவும் அதிகரித்துவிட்டது; இதனைக் கண்டு சிஷ்யர் மனம் புண்ணானர். சுவாமிஜி அவருடைய உள்ளெண்ணத்தை அறிந்து, ''என்ன நினைக்கிறாய்? இந்த உடல் பிறந்தது; இது இறக்க வேண்டுவதே. என்னுடைய கருத்துகள் சிலவற்றை உங்கள் உள்ளத்திலே புகுத்தியிருப்பேனாயின், என் பிறவி வீண் போகவில்லை என நான் கொள்வேன்,'' என்றார்.

சிஷ்: நாங்கள் தேவரீருடைய அருளைப்பெறத் தக்கவர்களா? என்னுடைய தகுதியை நோக்காது தேவரீர் என்னை ஆசீர்வதித்தால் நான் பாக்கியவான் என்று எண்ணுவேன்.

சுவா: எல்லாவற்றிற்கும் துறவு ஆதாரம் என்பதை ஞாபகத்தில் வைப்பாயாக. இந்த எண்ணம் ஒருவருடைய உள்ளத்தில் செல்லாவிட்டால், பிரம்மதேவனாயினும் உலோக பாலகராயினும் முத்தியடையும் வலிமையற்றவரே.

சிஷ்: தேவரீருடைய திருவாயிலிருந்து இந்த வாக்கியத்தை ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் கேட்டேனாயினும், இதன் உண்மையை உணர்ந்துகொள்ளாதிருக்கிறேன் என்பது எனக்குப் பெருங்கவலையைத் தருகின்றது.

சுவா: துறவு வருதல் வேண்டும். ஆனால், அது உரிய காலத்திலேதான் வரும். **"காலேன ஆத்மனி விந்ததி**—உரிய காலத்திலே ஒருவன் தன்னுள்ளே ஞானத்தை அடைவான்; பூர்வ வாழ்க்கையிலே உள்ள சில சம்ஸ்காரங்கள் அழிந்த பின்பு இதயத்திலே துறவு முளைத்தெழுகின்றது.''

சிறிது நேரம் கழித்து, சுவாமிஜி பின்னும் சொல்லுவார்: ''நீ வெளியே போய்ப் பெரிய கூட்டமாயிருக்கிற மக்களைப் பார்க்க வேண்டுவது எதற்கு ? எப்போதும் என்னோடு இருப்பாயாக. இன்று என்னை ஒருவரும் தொல்லைப்படுத்தாமலிருக்கக் கதவை மூடும்படி நிரஞ்சனருக்குச் சொல்லு.''

அதன் பின்பு சுவாமிஜிக்கும் சிஷ்யருக்கும் இடையே சம்பாஷணை நடந்தது.

சுவா: இனிமேல் இந்த ஆண்டு விழா வேறு வகையாகக் கொண்டாடப்படுவது நல்லதென நான் நினைக்கிறேன். இந்தக் கொண்டாட்டம் ஒரு தினத்துக்குப் பதிலாக நான்கு ஐந்து நாட்களுக்கு நடக்க வேண்டும். முதல் நாளிலே சாத்திரங்களைப் படிப்பதும் ஆராய்வதும், இரண்டாம் நாளிலே வேத வேதாந்தங்களைப்பற்றி வாதிப்பதும், மூன்றும் நாளிலே வினாக்கள் வினவுவதும், நான்காம் நாள் பிரசங்கங்களுக்கென்று விடப்படுவதும் நலம். கடைசி நாளில் இப்பொழுது நடக்கின்ற முறையில் கொண்டாட்டம் நடக்கலாம். துர்க்கா பூஜை நான்கு ஐந்து நாட்களுக்கு நடப்பது போல இதுவும் நடக்கலாம்.விழாக்கொண்டாட்டத்தை இப்படிக் கொண்டாடினால் கடைசி நாள் ஒழிந்த மற்றைய நாட்களில் ஸ்ரீராமகிருஷ்ணருடைய பத்தரல்லாத மற்றவர்கள் வர இயலாமல் இருக்கலாம். ஆனால், பாதகமில்லை. பலரும் கலந்த பெருங்கூட்டத்தினால் ஸ்ரீராமகிருஷ்ணருடைய போதனை மிகுதியும் பரவுகிறதென்று கருத வேண்டுவதில்லை.

சிஷ்: ஐய, இவ்வெண்ணம் மிக அழகியது. அடுத்த முறை தேவரீருடைய திருவுள்ளக் குறிப்பின்படியே விழாக் கொண்டாட்டம் நடைபெறலாம்.

சுவா: என் மைந்தனே, நீங்கள் இவற்றை நடத்தி வைப்பீர்கள். இந்த விஷயங்களில் எனக்குக் கவலை இல்லை.

சிஷ்: இவ்வாண்டில் பல கீர்த்தனைக் கூட்டங்கள் வந்திருக்கின்றன.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் சுவாமிஜி எழுந்து நின்று, சாளரத்தின் இரும்புக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, வெளியே கூடி இருக்கும் பத்தர் கூட்டத்தினைப் பார்த்தார்; சிறிது நேரம் கழித்து மீட்டும் உட்கார்ந்தார்.

சுவா: ஸ்ரீராமகிருஷ்ணருடைய தெய்வ லீலையிலே நீங்கள் யாவரும் நடிக்கின்றீர்கள். சிறிது காலத்துக்குப் பின் எங்கள்

பெயரை மாத்திரமன்றி, உங்கள் பெயரையும் மக்கள் சொல்லு வார்கள். நீ எழுதிய இந்தக் கீதங்களைப் பிற்காலத்தில் வருகிற மக்கள் ஞானத்தையும் அன்பையும் பெறுவது கருதி வாசிப்பார்கள். ஆன்ம ஞானம் பெறுவது வாழ்க்கையின் மேலான நோக்கம் என் பதை அறிந்துகொள்வாயாக. உலக குருமாராகிய அவதார புரு ஷர்கள்மீது அன்பிருந்தால், நாளடைவிலே ஞானமானது வெளிப் பட்டுத் தோன்றும்.

சிஷ்: ஐய, நான் அத்தகைய ஞானத்தை அடைவேனு?

சுவா: ஸ்ரீராமகிருஷ்ணருடைய அருளினுலே நீ தெய்விக அன்பையும் ஞானத்தையும் அடைவாய். உலக வாழ்க்கையிலே நீ அதிகமான இன்பம் காணமாட்டாய்.

சிஷ்: ஐய, தேவரீர் ஏழையேனுடைய உள்ளத்திலுள்ள பல வீனங்களை அறியாவிட்டால் எனக்காவதொரு கதியில்லை.

சுவா: ஏன் அச்சம்? நீ இங்கு வந்துவிட்டாய். ஆதலால், நீ விடுதலையை அடைவாய்.

சிஷ்: (மிகுந்த வணக்கத்தோடு) தேவரீர் ஏழையேனைக் காத்து இந்த வாழ்க்கையிலேயே அஞ்ஞானத்திலிருந்து என்னை விடுவிக்க வேண்டும்.

சுவா: யாரால் யாரைக் காப்பாற்ற முடியும்? மூடி இருக் கின்ற திரைகள் சிலவற்றைக் குரு அகற்றிவிடலாம். இவை அகன்ற பின்பு ஆன்மா தன் சொந்த ஒளியோடு ஞாயிறு போலத் திகழும்.

சிஷ்: அப்படியாயின், சமய சாத்திரங்களிலே அருள் குறிக் கப்பட்டிருக்கின்றதே! அது ஏன்?

சுவா: அருள் என்பது யாதெனின், ஆன்ம ஞானம் அடைந் தவர் பெரிய ஆற்றல்களுக்கே ஒரு களஞ்சியமாகின்ருர். அவரை மையமாகக் கொண்டு ஒரு குறித்த பரப்புடைய வட்டமொன்று உண்டாகிறது. அந்த வட்டத்தினுள்ளே 'வந்தவர் யாவராயினும், அன்னூர் அந்தப் பெரியாருடைய எண்ணங்களினுலே நிறைவுற்றுப் புத்துயிர் பெறுகின்றனர்; ஆதலாலே, அதிக சாதனையோடு கூடிய கஷ்டம் இன்றி அற்புதமாகிய ஆன்மிக வாழ்க்கையின் பயனை அனு பவிக்கின்றனர். வேண்டுமானுல், இதனை அருள் என்று சொல்லலாம்.

சிஷ்: இதைவிட அருள் வேறு இல்லையா?

சுவா: ஆம், உண்டு. ஓர் அவதார புருஷர் தோன்றும் பொழுது, அவருடைய உலக லீலையிலே அவருக்கு உதவி புரிய நித் திய சித்தராய் உள்ளோர் வந்து பிறக்கின்றனர். பத்து லக்ஷம் ஜீவர்களுக்கு இருளை அகற்றி இந்த வாழ்க்கையிலே அவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்கும் ஆற்றல் அவதார புருஷருக்கு உண்டு. இது அருள் எனப்படும். அறிந்துகொண்டாயா?

சிஷ்: ஆம், ஐயா. அவரைக் காணும் பாக்கியம் பெருதவர் களுக்கு உய்யும் வழி என்ன?

சுவா: அவருடைய திருநாமத்தைச் சொல்லி அழைப்பதே அவர்களுக்கு வழியாகும். அவரை அழைப்பதனுல், பலர் அவருடைய தரிசனத்தைப் பெறுகின்றனர். நம்மைப்போன்ற மானிட உருவத்திலே அவரைக் கண்டு அவருடைய அருளைப் பெறலாம்.

சிஷ்: ஸ்ரீராமகிருஷ்ணர் இவ்வுலக வாழ்வை நீத்த பின்பு அவருடைய தரிசனம் தேவரீருக்குக் கிடைத்ததுண்டா?

சுவா: அவர் உடலை விட்ட பின்பு நான் காசிப்பூரில் பவஹாரி பாபாவோடு சில காலம் சேர்ந்திருந்தேன். அவருடைய ஆச்சிரமத்துக்கு அண்மையில் உள்ள ஒரு பூஞ்சோலையிலே நான் வசித்தேன். அந்தப் பூஞ்சோலையில் பேய்கள் உண்டென்று மக்கள் சொல்வதுண்டு. நானும் ஒரு வகைப் பேய் என்பதை நீ அறிவாய். ஆதலினுல், பேய்களைப் பற்றி நான் அதிகம் பயப்படுவதில்லை. அந்தப் பூஞ்சோலையிலே நிறைந்த பழங்களையுடைய எலுமிச்சை மரங்கள் பல இருந்தன. அக்காலத்திலே நான் வயிற்றுப் போக்கினுல் வருந்தினேன்; கோதுமை அப்பம் தவிர வேறெவ்வகை உணவும் கொள்ளுவதில்லை; சீரண சத்தியைப் பெருக்கிக்கொள்ளும்பொருட்டு ஏராளமான எலுமிச்சம்பழங்களை உட்கொள்ளுவேன். பவஹாரி பாபாவோடு கலந்து அவரிடத்து மிகுந்த அன்பு வைத்தேன். அவரும் என்னிடத்து ஆழ்ந்த அன்பு காட்டினுர். ஸ்ரீராமகிருஷ்ணரோடு பல ஆண்டுகள் உறைந்தும் பலமற்ற சரீரத்தைப் பலப்படுத்திக்கொள்ளும் வழியை நான் பயின்றுகொள்ளவில்லையே என்று எண்ணினேன். பவஹாரி பாபா ஹடயோக சாத்திரம் அறிந்தவரெனக் கேள்வியுற்றேன். அவரிடமிருந்து ஹடயோக அப்பியாசங்களைப் பயின்று அவற்றின் மூலமாக உடலைப் பலப்படுத்த வேண்டும் என்று எண்ணினேன். நான் பிடிவாதக்காரன் என்பது உனக்குத் தெரியும். எதனை விரும்புகிறேனே, அதனைச் செய்தே தீருவேன். நான் தீட்சை பெறவேண்டுமென்று குறித்த தினத்திற்கு முதலிரவு கட்டிலிற் படுத்துக்கொண்டு ஆலோசனை செய்துகொண்டிருந்தேன். அப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருவுருவம் என்னை உற்று நோக்கிய வண்ணம் கவலையுற்ற தோற்றத்தோடு எனது வலப்புறத்திலே நிற்கக் கண்டேன். நான் என்னை அவருக்கு அர்ப்பணம் செய்திருந்தேன். வேருருவரைக் குருவாகக் கொள்ளப் போகிறேன் என்னும் எண்ணத்தினுல் மிகவும் நாணமுற்று அவரைப் பார்த்த வண்ணம் இருந்தேன். இரண்டு மூன்று மணி நேரம் கழிந்தது. என் வாயிலிருந்து ஒரு சொல்லும் வெளி வரவில்லை. அப்பொழுது அவர் சடுதியாக மறைந்துவிட்டார். ஸ்ரீராமகிருஷ்ணரை அன்றிரவு கண்டதனுல் என் உள்ளம் கரைந்தது. பவஹாரி பாபாவினிடத்திலிருந்து அன்றைய தினம் தீட்சை பெற வேண்டும் என்னும் எண்ணத்தை நிறுத்தி வைத்தேன். இரண்டொரு தினம் கழித்து மீட்

டும் அவ்வெண்ணம் உதித்தது; முன் போலவே பின்னும் ஓரிரவு ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருவுருவத்தைக் கண்டேன். அவ்வண்ணமே அடுத்தடுத்துப் பல இரவு ஸ்ரீராமகிருஷ்ணருடைய தரிசனம் எனக்குக் கிடைத்தது. தீட்சையைப் பற்றித் தீர்மானிக்கும் பொழுதெல்லாம் அந்தத் தரிசனம் தோன்றியபடியால், அத்தகைய தீர்மானத்தினுல் தீமை எய்துமேயன்றி நன்மை எய்தாது என்பதை அறிந்து தீட்சையைப்பற்றிய எண்ணத்தை முற்றிலும் விட்டுவிட்டேன்.

சிறிது நேரம் கழித்து அவர் சிஷ்யரை நோக்கி மீட்டும் சொல்லுவார்: ''ஸ்ரீராமகிருஷ்ணரைக் கண்டவர்கள் உண்மையிலே பாக்கியவான்கள். அதனுலே அவர்களுடைய குடும்பமும் பிறப்பும் தூய்மை அடைந்துவிட்டன. நீங்கள் எல்லோரும் அந்தத் தரிசனத்தைப் பெறுவீர்கள். நீங்கள் இங்கு வந்தமையினுலே அவருக்கு மிகவும் நெருங்கியவர்களாயிருக்கிறீர்கள். உலகத்திலே ஸ்ரீராமகிருஷ்ணராய் வந்தவர் யாரென்பதை ஒருவரும் அறிந்து கொள்ளவில்லை. அவருக்கு மிகவும் நெருங்கிய தொண்டர்களும் இந்த இரகசியத்தின் உண்மையை அறியவில்லை. ஒரு சிலர் மாத்திரம் சிறிது அறிந்திருக்கின்றனர். பின்பு எல்லாரும் அறிவர்.''

சம்பாஷணை நடந்துகொண்டிருக்கும் பொழுது சுவாமி நிரஞ்சனனந்தர் வந்து கதவைத் தட்டினுர். 'யார் வந்திருக்கிறுர்' எனச் சிஷ்யர் வினவ, சகோதரி நிவேதிதையும், சில ஆங்கிலேயப் பெண் மணிகளும் வந்திருப்பதாகச் சுவாமி நிரஞ்சனனந்தர் சொன்னுர். அவர்கள் உள்ளே வந்து தரையிலே உட்கார்ந்து, சுவாமிஜியினுடைய உடல் நலத்தை விசாரித்தார்கள்; சிறிது நேரம் உரையாடி விட்டுப் போய்விட்டார்கள். சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''பார்த்தாயா, அவர்கள் எவ்வளவு பண்பாடு உடையவர்களாய் இருக்கிறுர்கள்! வங்காளிகளோ, நான் நோயுற்றிருப்பதை நோக்காமல் அரை மணி நேரம் நின்று என்னைக் கதை பேசும்படி செய்திருப்பார்கள்,'' என்றுர்.

இப்பொழுது இரண்டரை மணி இருக்கும். வெளியே மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது. சுவாமிஜி சிஷ்யருடைய மனத்தை அறிந்து, ''வெளியே போய்ச் சுற்றிப் பார்த்துக்கொண்டு விரைவில் திரும்பி வா,'' என்றுர்.

(41)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம் 1902-ஆம் ஆண்டு.]

கிழக்கு வங்காளத்திலிருந்து திரும்பி வந்த பிறகு சுவாமிஜி திருமடத்திலேயே இருந்து சிறு குழந்தையைப் போன்று வாழ்க்

கையை நடத்தி வந்தார். ஒவ்வோராண்டிலும் சந்தால் கூலிக்காரர் சிலர் மடத்தில் வந்து வேலை செய்வது வழக்கம். சுவாமிஜி அன்பினோடு அவர்களுடைய இன்ப துன்பங்களைப்பற்றி அவர்கள் சொல்லுகிற கதைகளைக் கேட்டு, நகைச்சுவையுடன் உரையாடிக் கொண்டிருப்பார். ஒரு நாள் கல்கத்தாவிலிருந்து பெயர் பெற்ற பெரியார் சிலர் சுவாமிஜியைக் காணும்பொருட்டுத் திருமடத்திற்கு வந்தனர். சுவாமிஜி அப்பொழுது சந்தால்களோடு ஆர்வத்துடன் வார்த்தையாடிக்கொண்டிருந்தார். பெருமக்களுடைய வரவைப் பற்றி இரண்டொருவர் போய்த் தெரிவித்த பொழுது சுவாமிஜி அவரை நோக்கி, ''நான் இப்பொழுது வரமுடியாது; இந்த மக்களோடு இன்பமாய் இருக்கின்றேன்,'' என்றார். ஏழைகளாகிய சந்தால்களை விட்டுப்போக விரும்பாதபடியால், சுவாமிஜி அன்று வந்த பெருமக்களைக் காணவில்லை.

சந்தால்களுள் ஒருவனுக்கு 'கேஷ்டா' என்பது பெயர். சுவாமிஜி கேஷ்டாவின்மீது மிகுந்த அன்பு பாராட்டுவார். சுவாமி பேச வரும்பொழுது கேஷ்டா அவரை நோக்கி, ''சுவாமி, நாங்கள் வேலை செய்யும் பொழுது எங்களிடம் வர வேண்டா. தேவரீரோடு பேசிக்கொண்டிருப்பதனால், நாங்கள் வேலை செய்யாது நின்றுவிடுகிறோம்; மேற்பார்வை இடுகின்ற சுவாமி பின்பு எங்களை ஏசுவார்,'' என்று சொல்லுவான். இம்மொழிகளைக் கேட்டுச் சுவாமிஜி மனங்கசிந்து, ''இல்லை இல்லை; அவர் ஒன்றும் சொல்லமாட்டார்; உங்களுடைய ஊரைப்பற்றி எனக்குக் கொஞ்சம் சொல்லு,'' என்று கூறி அவர்களுடைய உலக விஷயங்களைப் பற்றி விசாரிப்பார்.

ஒரு நாள் சுவாமிஜி கேஷ்டாவை நோக்கி, ''நல்லது; ஒரு நாள் நீ இங்கு உண்ண வேண்டும்,'' என்றார். அதற்குக் கேஷ்டா, ''நீங்கள் தொட்ட உணவை நாங்கள் சாப்பிடமாட்டோம்; நீங்கள் தருகிற உணவிலே உப்புப் போடப்பட்டிருப்பதால், நாங்கள் அதனைச் சாப்பிடுவதனால் எங்களுடைய ஜாதியை இழந்துவிடுவோம்,'' என்றான். அதற்குச் சுவாமிஜி, ''நீங்கள் ஏன் உப்பு உண்ண வேண்டும்? உப்பில்லாமல் கறி சமைத்து வைப்போம்; உண்ணுவீர்களா?'' என்றார். கேஷ்டா சம்மதித்தான். சுவாமிஜியினுடைய கட்டளைப்படி ரொட்டி, கறி, இனிப்புத் தின்பண்டங்கள், தயிர் முதலியனவெல்லாம் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தன. சந்தால்களைத் தம்மோடு இருந்து உண்ணும்படி சுவாமிஜி ஒழுங்கு செய்திருந்தார். உண்ணும் பொழுது கேஷ்டா அவரை நோக்கி, ''இந்த அருமையான தின்பண்டத்தை எங்கிருந்து பெற்றீர்கள்? நாங்கள் ஒரு பொழுதும் இம்மாதிரி உணவை உண்டதில்லை,'' என்றான். சுவாமிஜி அவர்களுக்குத் திருத்தியாக உணவளித்து, ''நீங்கள் எல்லாம் நாராயணர்கள்; ஆண்டவனுடைய தோற்றம்; இன்று நான் நாராயணனுக்கு உணவளித்தேன்,'' என்றார்.

சுவாமிஜி சொல்லிய 'தரித்திர நாராயண' சேவையைத் தாமே ஒரு தினம் செய்து முடித்தார்.

உணவு முடிந்த பிறகு சந்தால்கள் இளைப்பாறச் சென்றார்கள். சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "உண்மையிலே அவர்களைத் தெய்வ வடிவங்களாக நான் கண்டேன். மாசற்ற நெஞ்சமும், வஞ்சகங் கலவாத அன்பும் அவர்களிடத்து இருக்கக் கண்டது போல, நான் பிறிதெவ்விடத்தும் காணவில்லை," என்றார்; பின்பு மடத்துச் சந்நியாசிகளை நோக்கிப் பின் வருமாறு கூறுவாராயினர்: "இந்த மக்கள் எவ்வளவு மாசற்ற நெஞ்சுடையவர்களாயிருக்கிறார்கள்! இவர்களுடைய துன்பத்தைத் சிறிது குறைக்கக்கூடாதா? அல்லாவிட்டால் நீங்கள் காவியுடை தரித்ததனால் வந்த நன்மை என்ன? பிறருடைய நன்மைக்காக எல்லாவற்றையும் தியாகம் பண்ணுவதே உண்மைச் சந்நியாசம். இவர்கள் தங்கள் வாழ்நாளில் நல்ல உணவு முதலியவற்றை ஒரு நாளும் நுகர்ந்ததில்லை. இந்த மடத்தையும் நமக்கென்றிருக்கும் பிறவற்றையும் விற்று அந்தப்பொருளை ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்னும் விருப்பம் எனக்குச் சில வேளை உண்டாகிறது. நாம் வசிப்பதற்கு மரநிழல் உண்டு. ஐயோ! இந்த நாட்டு மக்கள் உண்பதற்கு ஒன்றுமில்லாதிருக்கும் பொழுது நாம் உணவை அருந்துவதற்கு எவ்வாறு மனம் வருகின்றது? நான் மேலை நாடுகளில் இருந்த பொழுது, உலகமாதாவை நோக்கி, 'அன்னாய்! இங்குள்ள மக்கள் மலர் மெத்தையிலே படுக்கின்றார்கள்; எல்லா வகையான இனிய பண்டங்களையும் உண்கிறார்கள். இவர்கள் நுகராதது ஒன்றுமில்லை. என் நாட்டு மக்கள் பட்டினியால் மடிகின்றார்கள். தாயே, இதை மாற்றுவதற்கு ஒரு வழியில்லையா?' என்று வேண்டிக்கொண்டேன். நம் நாட்டு மக்களுக்கு உணவளிப்பதற்கு ஒரு வழி காணலாம் என்னும் எண்ணம் நான் மேலை நாட்டுக்குச் சமய போதனை செய்வதற்குச் செல்லும்படி என்னை ஏவிய காரணங்களுள் ஒன்று ஆகும்.

"நமது நாட்டு ஏழை மக்கள் உணவின்றிப் பட்டினியாயிருப்பதைக் காணும் பொழுது பூஜை முதலிய கிரியைகளையும், கல்வியையும் எடுத்தெறிந்துவிட்டு, ஊர் ஊராகச் சென்று சாதனையினாலும், ஐம்புலன் அடக்கத்தினால் வந்த ஆற்றலினாலும் பணக்காரருடைய மனத்தைத் திருப்பி, பணம் திரட்டி, ஏழைகளுக்குத் தொண்டு புரிவதில் வாழ்நாள் முழுவதையும் கழிக்க வேண்டுமென்னும் எண்ணம் எனக்கு உண்டாகிறது.

"ஐயோ! இந்நாட்டிலுள்ள ஏழை மக்களைப்பற்றி நினைப்பார் யாருமிலர். இவர்கள் நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர்கள். இந்த ஏழை மக்களுடைய தொழிலினாலே உணவு உண்டாகிறது. சக்கிலியரும் கூலிக்காரரும் ஆகிய இந்த ஏழை மக்கள் ஒரு

நாளைக்கு வேலை நிறுத்துவார்களானல், நகரத்தில் வசிப்போர் திகிலடைவர். ஆனல், இவர்களுக்கு இரங்குவோர் இல்லை; துன்பம் வந்துற்ற போது ஆறுதல் சொல்லுவோர் இல்லை. இந்துக்களுடைய அனுதாபம் இன்மையால், சென்னையிலுள்ள ஆயிரக்கணக்கான பறையர்கள் கிறித்தவர்களாகின்ருர்கள். இது பசிக்கொடுமையினல் மாத்திரம் ஏற்பட்டதன்று; நம்முடைய உள்ளத்தில் இரக்கமின்மையாலும் ஏற்பட்டது. நாம் இரவும் பகலும், 'எங்களைத் தீண்டாதீர்கள் ! தீண்டாதீர்கள் !' என்று கூவிக்கொண்டிருக்கிருேம். இந்த நாட்டிலே இரக்கமில்லையா ? அன்பு இல்லையா ? தீண்டாமை முதலிய வழக்கங்களை உதைத்துத் தள்ளுங்கள். தீண்டாமை முதலிய கட்டுகளை உடைத்தெறிந்துவிட்டு உடனே வெளிச்சென்று, 'வறியவர்களே, துன்புற்றவர்களே, கவலையால் நைந்தவர்களே, தாழ்த்தப்பட்டவர்களே, எல்லாரும் வாருங்கள் !' என்று கூறி ஸ்ரீராமகிருஷ்ணருடைய நாமத்தினலே அனைவரையும் ஒன்று கூட்ட வேண்டும் என்னும் எண்ணம் இடை இடையே என்னுள்ளத்து எழுகின்றது. இத்தகையோர் விழித்தெழுந்தாலன்றிப் பாரத மாதா நித்திரையினின்று எழமாட்டாள். இன்னேருடைய உணவுக்கும் உடைக்கும் ஏற்பாடு செய்யாமல் இருக்கிருேம்—பின்னர் நாம் இவர்களுக்குச் செய்ததென்ன ? ஐயோ ! உலக விஷயங்களைப் பற்றியே இவர்கள் ஒன்றும் அறியார்கள்; இரவு பகலாக வேலை செய்தும், உணவு உடையைத் தேடிக்கொள்ள மாட்டாதவர்களாயிருக்கிருர்கள். இவர்களுடைய கண்களைத் திறப்போமாக—என்னிடத்தும், இவர்களிடத்தும், எல்லாப் பிராணிகளிடத்தும் ஒரே பிரம்மமே வியாபித்திருக்கிறதென்பதை நான் பட்டப்பகல் போலத் தெளிவாகக் காண்கிறேன். ஒரே மகாசத்தி எல்லாரிடத்திலும் வசிக்கின்ருள். தோற்றத்தளவிலேதான் வேறுபாடு காணும். உடல் முழுவதிலும் உதிரம் செறிந்து ஓட வேண்டும். அப்படி அல்லாமல், எக்காலத்திலாவது எந்தத் தேசமாவது உயர்வடைந்ததுண்டா ? ஓர் அவயவம் செயலற்றுப் போனல், ஏனைய அவயவங்களெல்லாம் பூரணமாயிருந்தாலும், அந்த உடலினலே அதிகம் வேலை நடவாது—இதை நிச்சயமாக உணர்ந்துகொள்ளுங்கள்.''

சிஷ்: ஐய, இந்த நாட்டு மக்களிடையே பல்வேறு வகைப்பட்ட சமயக்கொள்கைகளும், எண்ணங்களும் பரவியிருக்கின்றன; அவர்களிடையே சமரசம் ஏற்படுத்துவது மிகவும் அரிதாகும்.

சுவா: (கோபத்தோடு) எந்த வேலையாவது நீ கடினம் என்று நினைப்பாயாயின், இங்கே வரவேண்டா. ஆண்டவனுடைய அருளினலே எல்லா மார்க்கங்களும் இலகுவாகின்றன. ஏழைகளுக்கும் துன்புற்றோர்க்கும், சாதி சமய வேறுபாடின்றித் தொண்டு செய்வது உன் கடமை; பயனைப்பற்றி நீ நினைக்க வேண்டுவதில்லை. இடையருது வேலை செய்வது உனது கடமை; மற்றவை எல்லாம் தாமாக

வந்தெய்தும். கட்டுவதேயன்றி அழித்துவிடுவது எனது முறையன்று. உலக சரித்திரத்தைப் படித்துப் பார். ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு கால எல்லையிலே ஒரு பெரியவர் நடு நாயகமாய் இருக்கக் காண்பாய். அவருடைய கொள்கையினலே புத்துயிர் பெற்று நூற்றுக்கணக்கான மக்கள் உலகிற்கு நன்மை செய்திருக்கிறார்கள். நீங்கள் எல்லாம் அறிவுள்ள வாலிபர்கள்; நெடுநாளாக இவ்விடத்துக்கு வருகிறீர்கள்; என்ன செய்திருக்கிறீர்கள்?— சொல்லுவாயாக. இந்த ஒரு பிறவியை யாவது பிறருடைய தொண்டுக்காகப் பயன்படுத்துதல் கூடாதா? இனி வருகின்ற பிறவிகளிலே வேதாந்தம் முதலிய தத்துவ சாத்திரங்களை வாசிக்கலாமே! இந்த பிறவியைப் பிறருடைய சேவைக்குப் பயன்படுத்துவாயெனின், நீ இவ்விடம் வந்தது வீண் போகவில்லையென நான் அறிவேன்.

இம்மொழிகளைக் கூறி, சுவாமிஜி ஆழ்ந்த யோசனையிலே மௌனமாயிருந்தார்; சிறிது நேரம் கழித்துப் பின்னும் சொல்லுவார்: "எவ்வளவோ தவத்தின் பின் நான் இந்த ஓர் உண்மையை உணர்ந்தேன்—கடவுள் ஒவ்வொரு ஜீவனிடத்தும் வியாபகமாயிருக்கிறார்; அதைவிட வேறு கடவுள் இல்லை; மக்கட்குச் சேவை செய்தவன் கடவுளுக்குச் சேவை செய்தவனாகிறான்." சிறிது தாமதித்துச் சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, "நான் இன்று சொல்லியவற்றை இதயத்திலே எழுதிவை; மறந்துவிடாதே!" என்றார்.

(42)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1902-ஆம் ஆண்டின் தொடக்கம்.]

சனிக்கிழமை, மாலைக் காலத்துக்குச் சிறிது முன்பு சிஷ்யர் திருமடத்துக்கு வந்தார். இப்பொழுது திருமடத்திலே சமய சாதனைகள் மிகவும் கிரமமாகச் செய்யப்பட்டு வந்தன. எல்லாப் பிரம்மசாரிகளும் சந்நியாசிகளும் அதிகாலையில் எழுந்து, ஜபம் தியானம் செய்யவேண்டுமென்று சுவாமிஜி கட்டளையிட்டிருந்தார். இந்நாட்களில் சுவாமிஜிக்கு உறக்கம் மிகச் சொற்பம். அவர் காலையிலே மூன்று மணிக்கு எழுந்துவிடுவார்.

சிஷ்யர் சுவாமிஜியை வணங்கிய பொழுது சுவாமிஜி அவரை நோக்கி, "பார்த்தனையா, இந்நாளில் எல்லோரும் சமய சாதனைகள் செய்கின்றனர்; காலையிலும் மாலையிலும் ஜபத்திலும் தியானத்திலும் ஒவ்வொருவரும் நீண்ட பொழுது கழிக்கின்றனர்; இதோ பார்! எல்லோரையும் துயில் எழுப்ப ஒரு மணி கட்டப்பட்டிருக்கிறது; பொழுது புலருமுன் யாவரும் எழுந்திருக்க வேண்டும்; காலையிலும் மாலையிலும் மனத்தில் தூய எண்ணங்கள் நிறைந்திருக்கின்றன என்றும், அந்த வேளைகளில் ஊக்கத்தோடு தியானம்

செய்ய வேண்டுமென்றும், ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவதுண்டு,'' எனச் சொன்னார்.

சுவாமிஜி மேலும் சொல்லுவார்: ''ஸ்ரீராமகிருஷ்ணர் இவ்வுலக வாழ்வினின்று அகன்ற பின்னர், பாரநாகூர் மடத்திலே நாங்கள் அநேக சமய சாதனைகளைச் செய்தோம். மூன்று மணிக்கு எழுந்து முகத்தை மாத்திரம் கழுவிக்கொண்டோ, அல்லது நீராடிய பிறகோ பூஜை அறையினுட்சென்று ஜபத்திலும் தியானத்திலும் ஆழ்ந்து இருப்போம். அந்நாட்களில் எவ்வளவு வைராக்கியத்தோடு இருந்தோம்! உலகம் இருந்ததா இல்லையா என்ற எண்ணமும் எங்களுக்கு இருந்ததில்லை. ஸ்ரீராமகிருஷ்ணருடைய வழிபாட்டுக்கும் சேவைக்கும் வேண்டுவனவற்றைச் செய்வதில் இராமகிருஷ்ணனந்தர் இரவும் பகலும் ஓய்வின்றி முயலுவார். இல்லாள் குடும்பத் தொழில் செய்வது போலவே, அவர் மடத்துக்கு வேண்டுவதைச் செய்வார்; ஸ்ரீராமகிருஷ்ணருடைய வழிபாட்டுக்கு வேண்டிய பொருள்களை இரந்தாவது தேடிவைப்பார்; காலையில் தொடங்கி மாலை நான்கு ஐந்து மணி வரை ஜபமும் தியானமும் நடந்த நாட்கள் உண்டு. இராமகிருஷ்ணனந்தர் உணவைத் தயார் செய்து வைத்துக்கொண்டு எங்களுக்காகத் காத்துக்கொண்டிருந்து, இறுதியிலே, தியானித்துக்கொண்டிருக்கிற எங்களை வலிதிற் கையைப்பற்றி இழுப்பார். எவ்வளவு அற்புதமான, நிலை கலங்காத பத்தியை அவரிடத்தில் யான் கண்டேன்!''

சிஷ்: ஐய, அந்நாட்களில் மடத்துக்கு வேண்டிய செலவுகளை எவ்வாறு நடத்தினர்கள்?

சுவா: இது என்ன கேள்வி? நாங்கள் சாதுக்கள். பிக்ஷை எடுப்பதனாலும் பிறவற்றாலும் சேர்கின்ற பணத்தைக் கொண்டு மடத்துச் செலவுகளை நடத்தினோம். **சுரேஷ்பாபுவும், பலராம் பாபுவும்** இப்பொழுது இல்லை; உயிரோடு இருந்தால், இந்த மடத்தைக் கண்டு அளவு கடந்த மகிழ்ச்சியுறுவார்கள். நீ சுரேஷ் பாபுவினுடைய பெயரினைக் கேள்விப்பட்டிருப்பாய். ஒரு வகையில் பார்த்தால் இந்த மடத்தை நிறுவியவர் அவரே என்று சொல்லலாம்; பாரநாகூர் மடத்துக்கு உரிய செலவுகளைத் தாமே ஏற்றுக்கொள்வார். அந்த நாட்களிலே சுரேஷ் மித்திரர்தான் எங்களைப் பற்றி அதிகமாக நினைத்தவர். அவருடைய அன்புக்கும் ஊக்கத்துக்கும் ஒப்பில்லை.

சிஷ்: ஐய, அவருடைய மரணப் படுக்கையிலே தேவரீர் அவரை இடையிடையே சென்று பார்க்கவில்லை என்று நான் கேள்விப்பட்டேன்.

சுவா: எங்களை (அவர் சுற்றத்தார்) விட்டிருந்தால் நாங்கள் பார்த்திருப்போம். நல்லது; அது பெருங்கதை. உலகப்பற்றுள்ள மக்களிடையே உற்றார் உறவினர் என்பவர்களுக்கு நீ வாழ்ந்தாலும்

சரியே, இறந்தாலும் சரியே; இதை உண்மையாக அறிந்துகொள். கொஞ்சம் பொருள் விட்டுப் போவதாயின், உன்னுடைய வாழ்வுக் காலத்திலேயே அதைப்பற்றி உன் வீட்டில் சண்டை நடக்கக் காண் பாய். மரணப் படுக்கையிலே உன்னுடைய மனைவி மக்களும், வேறு யாரும், உனக்கு ஆறுதல் சொல்ல வரமாட்டார். இதுதான் உலகப்போக்கு.

மடத்தினுடைய பூர்வ நிலைமையைப் பற்றிச் சுவாமிஜி பின் னும் சொல்லுவார்: ''பொருள் இன்மையால் மடத்தையே முழுவ தும் விட்டுவிடலாம் என்று நான் சில பொழுது நினைத்ததுண்டு. இராமகிருஷ்ணானந்தர் இந்தப் பேச்சினை ஒரு பொழுதும் ஏற்றுக் கொண்டதில்லை. இராமகிருஷ்ணானந்தரே இந்த மடத்துக்கு நடு நாயகம் என்பதை அறிந்துகொள்க. மடத்திலே ஒரு மணி அரிசி யும் இல்லாத நாட்கள் பலவிருந்தன; இரந்து கொஞ்சம் அரிசி கொண்டு வந்தாலும், உப்பு இருப்பதில்லை. சில பொழுது அரிசியும் உப்பும் இருந்தாலும், உண்ண வேண்டும் என்னும் எண்ணம் ஒரு வருக்கும் இருப்பதில்லை. சமய சாதனையின் வெள்ளத்தில் நாங்கள் ஆழ்ந்து போய்க்கொண்டிருந்தோம். அவித்த பிம்பா இலைகளும் அரிசியும் உப்புமே ஒரு மாதத்துக்கு உணவாய் இருந்ததும் உண்டு. அவை மிக அற்புதமான நாட்கள்! அந்த நாட்களில் நாங்கள் செய்த தவம் மனிதரை மாத்திரமன்றி, வானுகலத்தாரையும் வியப் புறச் செய்யும். உண்மையான ஊக்கமிருந்தால், தடைகள் எவ்வளவு அதிகமாக இருக்கின்றனவோ, அவ்வளவுக்கு மனத் திலே உள்ள சத்தி வெளிப்பட்டுத் தோற்றுமென்பதிற் பெரிய உண்மை இருக்கின்றது. இந்நாட்களில் வந்து சேர்கிற சந்நி யாசிகள் எங்களைப் போல அவ்வளவு இடுக்கண்களைச் சகிக்க மாட்டார்கள். ஆதலால், கட்டில் முதலியவற்றையும் ஓர் அளவாகிய உணவு வசதியையும் ஏற்படுத்தியிருக்கிறேன். ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்க்கை எங்கள் கண் முன்னிருந்தது. ஆதலால், நாங்கள் அல்லல் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. இக் காலத்து இளைஞர்கள் அத்தகைய துன்பங்களைச் சகிக்கமாட்டார் கள். ஆதலால், ஒரு வகையாக இடம் உணவு முதலிய வசதிகளைச் செய்துவைத்திருக்கிறேன். வேண்டும் அளவு உணவும் உடையும் இருந்தால், இந்த இளைஞர்கள் சமயசாதனையிலே தங்கள் நேரத் தைக் கழித்து, மக்களுடைய நலத்துக்காகத் தங்கள் உயிரையும் தியாகம் பண்ணப் பழகிக்கொள்ளுவார்கள்.

சிஷ்: ஐய, வெளியிலுள்ள மக்கள் இத்தகைய படுக்கை முத லிய அமைப்பிற்கு எதிராகப் பழிச்சொற் கூறுகிறார்கள்.

சுவா: அவர்கள் கூறட்டும். எள்ளி நகையாடுகின்ற பொழு தாவது இந்த மடத்தைப்பற்றி ஒரு முறை சிந்திப்பார்கள். எதிரி டையாகிய எண்ணத்தோடு இருந்து மோக்ஷத்தை அடைவது எளி

தென்று கூறுகிறார்கள். ''மனிதரைப் புழுக்களாக மதிக்க வேண்டும்,'' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதுண்டு. பிறருடைய வீண் கருத்துகளுக்குத் தக்கபடி நாங்கள் நடந்துகொள்ளவேண்டுமென்று நீ கருதுகிறாயா? சீச் சீ!

சிஷ்: ஐய, சில வேளை ''எல்லோரும் நாராயணர்; ஏழைகளும் வறியவர்களும் நாராயணர்களே,'' என்று கூறுகிறீர்கள். பின்பு, ''மனிதரைப் புழுக்களாக மதிக்க வேண்டும்,'' என்கிறீர்கள். உண்மையில் தேவரீருடைய கருத்தென்ன?

சுவா: நல்லது; எல்லோரும் நாராயணர் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை. ஆனால், எல்லா நாராயணர்களும் மடத்துத் தட்டுமுட்டுச் சாமான்களைப்பற்றிக் குறை கூறவில்லை. நான் மக்களுடைய நன்மைக்காக முயன்று வேலை செய்வேன்; பிறர் கூறும் பழிச்சொல்லைப் பொருட்படுத்தமாட்டேன். அந்தக் கருத்திலேதான் மக்களைப் புழுக்களாக மதிக்க வேண்டும் என்னும் சொற்றொடர் வழங்கப்பட்டது. விடாப்பிடியுள்ள மனிதன் வேண்டுவன எல்லாவற்றையும் பெறுவான். சிலருக்கு விரைவில் கிடைக்கும்; வேறு சிலருக்குத் தாமதப்பட்டுக் கிடைக்கும். அவ்வளவுதான் வேற்றுமை. ஒவ்வொருவனும் கருதிய நோக்கத்தை அடைய வேண்டுபவனே. எங்களுக்கு அத்தகைய உறுதி இருக்கின்றபடியால், எங்களுக்குள்ள சொற்பத்தையாவது நாங்கள் பெற்றோம். நாங்கள் எவ்வளவு இன்னல்களைக் கடக்க வேண்டி இருந்தது! ஒரு நாள் உணவின்மையால் தெரு ஓரத்திலுள்ள ஒரு வீட்டின் புறத் திண்ணையிலே மூர்ச்சையாகி விழுந்தேன். ஒரு பாட்டம் மழை பொழிந்த பிறகுதான் உணர்ச்சி பெற்றெழுந்தேன். ஒரு நாள் பகல் முழுவதும் உணவில்லாமல் கல்கத்தாவிலேயே பல வேலைகளும் செய்து திரிந்துவிட்டு, இரவு பத்து மணிக்கோ, பதினொரு மணிக்கோ மடத்துக்குத் திரும்பி வந்து உணவருந்தினேன். இப்படி ஒரு முறை இரு முறை அல்ல; பல முறை நடந்திருக்கிறது.

இந்த வார்த்தைகளைச் சொல்லிய பின்னர், சுவாமிஜி சிறிது நேரம் ஆலோசனையில் ஆழ்ந்திருந்தார். அவர் பின்னும் சொல்லுவார்: ''உண்மைத் துறவினை அடைவது எளிதன்று; வாழ்க்கையிலே இதனைப்பார்க்கிலும் கடுமையான ஆச்சிரமம் பிறிது ஒன்று இல்லை; சிறிதேனும் தவறினால் மலையின் உச்சியிலிருந்து கீழே விழுந்தவன் போலத் துகளாய்ப் போய்விட நேரும். ஒரு நாள் நான் ஆக்கிராவிலிருந்து பிருந்தாவனத்துக்குக் கால் நடையாகப் போய்க்கொண்டிருந்தேன். என் கையில் ஒரு காசுமில்லை. பிருந்தாவனத்திலிருந்து இரண்டு மைல் தூர எல்லையில் வழியிலே புகை பிடித்துக்கொண்டிருக்கின்ற ஒரு மனிதனைக் கண்டேன். புகை பிடிக்க வேண்டுமென்னும் இச்சை எனக்கு உண்டாகியது. நான் அம்மனிதனை நோக்கி, 'உன்னுடைய ஹுக்காவில் ஒரு முறை

புகை இழுக்கவிடுவாயா ?' என்றேன். அவன் பெரிதும் திகைப்புற்று, 'ஐயா, நான் ஒரு தோட்டி,' என்றான். பழைய சம்ஸ்காரங்கள் வலியுற்றிருந்த காரணத்தினாலே நான் பின்வாங்கிப் புகை குடியாமலே மேலும் பிரயாணம் செய்யத்தொடங்கினேன். சிறிது தூரம் போன பின்பு, நான் ஜாதி குலம் உயர்வு முதலிய யாவற்றையும் துறந்த சந்நியாசியாயிருந்தும், அந்த மனிதன் தான் ஒரு தோட்டி என்று சொன்னவுடனே, அவன் தீண்டிய ஹுக்காவைத் தொடாது பின் வாங்கியதைப் பற்றி நினைத்தேன். அந்த எண்ணம் என் இதயத்தைக் கலக்கியது; அது வரையில் அரை மைல் தூரம் நடத்துபோய்விட்டேன். நான் திரும்பி வந்து அந்தத் தோட்டி அங்கிருக்கக் கண்டேன். நான் விரைந்து அவனை நோக்கி, 'என்னருமை நண்பனே, எனக்காக ஒரு முறை புகையிலை தயார் செய்,' என்றேன். அவன் தடை கூறியும் நான் பொருட்படுத்தாது கட்டாயப்படுத்தினேன். அவன் அப்படியே செய்தான். நான் மகிழ்ச்சியுடன் ஹுக்கா குடித்துவிட்டுப் பிருந்தாவனத்துக்குப் போய்விட்டேன். துறவு பூண்ட ஒருவன் ஜாதி குலம் முதலிய வேறுபாட்டு எண்ணங்களை விட்டுவிடுதல் வேண்டும்; தன்னைத்தானே சோதித்துப் பார்க்க வேண்டும்; துறவு விரதத்தை நேராக அனுஷ்டிப்பது மிகக் கடினம். சொல்லுக்கும் செயலுக்கும் சிறிதேனும் வேறுபாடிருத்தல் கூடாது.''

சிஷ்: ஐய, தேவரீருடைய திருவாக்கினின்று இல் வாழ்க்கையைப்பற்றியும் துறவு வாழ்க்கையைப் பற்றியும் கேள்விப்பட்டேன். நாங்கள் பின்பற்ற வேண்டுவது எது ?

சுவா: நல்லது; எல்லாவற்றையும் செவி சாய்த்துக் கேள். உனக்கு எது நல்லதென்று காணப்படுகிறதோ, அதைக் குரங்குப் பிடியாகப் பிடித்துக்கொள்.

சுவாமிஜி கீழே இறங்கி வந்து சிஷ்யரோடு இந்த வாசகங்களைக் கூறி, முன்னும் பின்னும் உலாவிக்கொண்டிருந்தார்; இடையிடையே சிவநாமத்தைச் சொல்லுவார்; ''அன்னையே, அமுததாரையே, நீ எத்தனை விதமாக விளையாடுகின்றனை !'' என உலகமாதாவுக்கு உரிய ஒரு பாடலை மெல்லப் பாடினார்.

(43)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1902-ஆம் ஆண்டு.]

சிஷ்யர் கடந்த இரவைச் சுவாமிஜியின் அறையிலேயே கழித்தார். அதிகாலையிலே நான்கு மணிக்குச் சுவாமிஜி அவரை எழுப்பி, ''நீ இந்த மணியைக் கொண்டுபோய் அடித்துச் சாதுக்களையும் பிரம்மசாரிகளையும் துயிலிலிருந்து எழுப்புவாயாக,'' என்றார். கட்

டளைப்படி சிஷ்யர் சாதுக்கள் உறங்கும் இடத்திற்குப் போய் மணியை அடித்தார். அவர்களும் எழுந்து தியானம் செய்யும் பொருட்டுப் பூஜை அறைக்கு விரைந்து சென்றனர்கள்.

சுவாமிஜியினுடைய சொற்படி சிஷ்யர் சுவாமி பிரம்மானந்தருடைய படுக்கைக்கு அருகில் மணியை நன்ருக அடித்தார். அவரும், ''இந்த வங்காளி* எங்களை மடத்திலிருக்கவொட்டாமல் தொல்லைப்படுத்துகிருன் !'' என்ருர். இதைச் சிஷ்யர் வந்து சுவாமிஜிக்குச் சொல்ல, அவர் நன்ருகச் சிரித்து, ''மிகவும் நல்லது !'' என்ருர். சுவாமிஜி முகம் கழுவிச் சிஷ்யரையும் அழைத்துக்கொண்டு பூஜை அறைக்குச் சென்ருர்.

சுவாமி பிரம்மானந்தரும் ஏனைய சந்நியாசிகளும் தியானத்துக்காக ஆசனத்து அமர்ந்திருந்தார்கள். சுவாமிஜிக்காகத் தனியாக ஓர் ஆசனம் அமைக்கப்பட்டிருந்தது. அவர் அதன்மேல் கிழக்கு நோக்கி இருந்துகொண்டு, தம் முன்னிலையிலிருந்த மற்ருேர் ஆசனத்தைக் காட்டி, சிஷ்யரைப் பார்த்து, ''நீ அதன்மேலிருந்து தியானிப்பாயாக,'' என்ருர். சுவாமிஜி சிறிது நேரத்தில் பூரண சாந்தியை அடைந்து, சித்திரப் பதுமையைப் போல அசைவற்றிருந்தார். அவருடைய மூச்சும் மிக மெல்ல வந்தது. எல்லோரும் தத்தமது ஆசனத்திலிருந்தனர்.

ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் கழித்துச் சுவாமிஜி, 'சிவ சிவ !' என்று சொல்லிக்கொண்டு தியானத்திலிருந்து எழுந்தார். அவர் கண்கள் சிவந்திருந்தன; தோற்றம் சாந்தியோடு ஆறுதல் அடைந்திருந்தது. ஸ்ரீராமகிருஷ்ணருடைய முன்னிலையிலே வணங்கி எழுந்து மேன்மாடியிலிருந்து கீழிறங்கி மடத்து முற்றத்திலே உலாவுவாராயினர்; சிறிது பொழுது கழித்துச் சிஷ்யரை நோக்கிப் பின் வருமாறு சொல்லுவார்:

''இந்நாட்களிலே சாதுக்கள் தியானம் முதலியவற்றை அப்பியசிப்பதைப் பார்த்தாயா ? தியானத்தில் ஆழ்ந்திருக்கும் பொழுது ஒருவன் அற்புதமாகிய பொருள்களைக் காண்கின்ருன். பாரநாகூர் மடத்திலே தியானிக்கும் பொழுது ஒரு நாள் இடைபிங்கலையாகிய நாடிகளைக் கண்டேன். சிறிது முயன்ருல் ஒருவன் அவற்றைக் காணுதல் கூடும். சுழுமுனையின் தரிசனம் பெற்ருல், ஒருவன் தான் விரும்பியதைக் காணலாம். குருவினிடத்திலே மாருத பத்தி இருந்தால், ஜபம் தியானம் முதலிய சமய சாதனைகள் மிகவும் எளிதில் கைகூடுகின்றன; ஒருவன் அவற்றைப் பெறும்பொருட்டு முயல வேண்டுவதில்லை. குருவே பிரம்மம்; குருவே விஷ்ணு; குருவே பரமசிவன்.''

---

*இது கிழக்கு வங்காளத்திலிருந்து வந்தவராகிய சிஷ்யரைக் குறிக்கும் அன்போடு கூடிய நிந்தை மொழி.

சிஷ்யர் சுவாமிஜிக்காகச் சிறிது புகையிலை தயாரித்துக் கொண்டுவர, சுவாமிஜி புகையை இழுத்துக்கொண்டே பின் வருமாறு சொல்லுவார்:

"உள்ளே சிங்கமிருக்கிறது—நித்திய சுத்தமாய், சுயம்பிரகாசமாய், அமலமாய் விளங்குகின்றது ஆன்மா. தியானத்தினாலும், ஒருமுகப்பட்ட மனத்தினாலும் ஒருவன் ஆன்மாவைத் தரிசித்தால், இந்த மாயை உலகம் மறைந்து போகிறது. அவன் எங்கும் அமர்ந்திருக்கிறான்; ஒருவன் எவ்வளவுக்கு அப்பியசிக்கிறானோ, அவ்வளவுக்கு அடங்கி இருக்கிற குண்டலினி சத்தி அவனுள்ளே விழித்தெழும். இந்தச் சத்தி சிரத்தினை அடைய, காட்சியைத் தடுக்கும் திரைகள் நீங்கிவிடுகின்றன. அவன் ஆன்மாவைக் காண்கின்றான்.

சிஷ்: ஐய, இவற்றைப்பற்றி நான் சாத்திரங்களில் வாசித்திருக்கிறேன். ஆனால், ஒன்றினையும் அனுபவத்தில் காணவில்லை.

சுவா: "**காலேனாத்மனி விந்ததி**:—நாளடைவிலே அது கட்டாயம் வரும்." சிலர் இதனை முந்திப் பெறுகின்றனர்; ஆனால், வேறு சிலர் சற்றுப் பிந்திப் பெறுகின்றனர்; 'ஒரு பொழுதும் விடுகிறதில்லை!' என்னும் தீர்மானத்தோடு இருக்க வேண்டும். இதுவே உண்மை ஆண்மை. இடையறாத தைல தாரை போல மனத்தை ஒரு பொருளிலே பதித்து வைக்கவேண்டும். சாதாரண மனிதனுடைய மனம் பல்வேறு வகைப்பட்ட பொருள்களிலே சிதறுண்டு கிடக்கின்றது. தியான காலத்திலும் ஆரம்பத்திலே மனம் அலைதல் கூடும். மனத்திலே எந்த எண்ணம் எழுந்தாலும் சரி; நீ அமைதியாய் இருந்து எவ்வகையாகிய எண்ணங்கள் வருகின்றன என்று விழிப்போடு நோக்க வேண்டும். தொடர்ந்து இம்முறையில் நோக்குவதனால் மனம் சாந்தமடைகின்றது; எண்ணமாகிய அலைகள் அதனிடத்து எழுவதில்லை. இந்த அலைகள் மனத்தின் எண்ணக் கிரியைகளுக்கு அடையாளமாகும். நீ முன்பு எந்த விஷயங்களைப்பற்றி ஊன்றி ஆலோசித்தாயோ, அவை உன் மனத்தின் ஊற்றாக மாறிக் கிடக்கின்றன; தியான காலத்தில் மேல் எழுகின்றன. அவற்றின் எழுச்சி, தியான காலத்திலே உன்னுடைய மனமானது மேலும் மேலும் ஏகாக்கிர நிலையை அடைகிறதென்பதற்கு அறிகுறியாகும். மனமானது ஒரே வகையாகிய எண்ணங்களைத் தன்னகத்துக் கொண்டு ஒடுங்கி நிற்பதை '**ஸவிகல்ப சமாதி**' என்கின்றோம். ஆனால், இந்த மனமானது, செயல்களினின்று விடுபட்டு அகண்ட ஞானத்தின் உருவாகிய ஆன்மாவோடு ஒன்றாகும் பொழுது தனக்குத் தானே ஆதாரமாகின்றது. இதுவே '**நிர்விகற்ப சமாதி**' எனப்படுவது. இவ்விரு வகைச் சமாதிகளையும் ஸ்ரீராமகிருஷ்ணரிடத்திலே நாங்கள் பல முறையும் கண்டதுண்டு. இவற்றை அடைவதற்கு அவர் சிறிதும் முயலவேண்டி இருக்கவில்லை.

இவை தாமாகவே அவருக்கு வந்தன. அது அற்புதமான நிகழ்ச்சி. அவரைக் கண்டமையாலேதான் இந்த விஷயங்களை நாங்கள் தக்க வாறு அறிந்தோம். ஒவ்வொரு நாளும் தனித்திருந்து, தியானம் செய். அப்பொழுது ஒவ்வொன்றும் தானாகவே திறக்கும். ஞானத்தின் வடிவமாகிய உலக மாதா உள்ளே துயில்கின்ருள். ஆதலால், நீ இதை அறிந்துகொள்ளவில்லை. அவள் குண்டலினி சத்தி. தியானம் செய்யுமுன்பு, நரம்புகளைத் தூய்மைப்படுத்தும் பொழுது, மூலாதாரத்திலுள்ள குண்டலினியிலே மனத்திஞல் உரக் கத் தாக்கி, 'அம்மா, எழுந்திரு, எழுந்திரு,' என்று சொல்ல வேண் டும். இவற்றை எல்லாம் சாவதானமாகப் பயில வேண்டும். தியான காலத்திலே, இச்சையோடு கூடிய மனத்தின் மெய்ப்பாடு களை முற்றிலும் ஒழித்துவிட வேண்டும். அவை பெருங்கெடுதிக் குக் காரணமாவன. மெய்ப்பாடுகளோடு கூடிய மனேபாவங்கள் பெருகியிருக்கும் பொழுது, குண்டலினி சத்தி விரைந்து மேல் நோக்கிச் செல்லும்; அத்தனை விரைவாகவே கீழ் நோக்கியும் வந்து விடும். அது அப்படிக் கீழ்நோக்கி வரும் பொழுது, சாதகன் முற்றிலும் அழிவுற்ற நிலையை அடைவான். ஆதலாலேதான் மெய்ப்பாட்டு மனேபாவங்களது எழுச்சிக்குத் துணையாயிருக்கிற கீர்த்தனைகள் கேட்டிற்குரியனவாகக் கருதப்படுகின்றன. குதித்துக் கூத்தாடுவதனுல், ஒரு கணப்பொழுதுக்கு இந்தச் சத்தியானது மேல் நோக்கிப் போகின்றதெனினும், நிலைத்திருப்பதில்லை; மீட்டும் திரும்பும் பொழுது சாதகனுடைய மனத்திலே கொடிய காம எண் ணங்களை உண்டாக்குகின்றது. அமெரிக்க நாட்டிலே என்னுடைய சொற்பொழிவுகளைக் கேட்போருள், பலர் அந்த வேளையில் ஒரு வகையான பரவச நிலையை அடைந்ததுண்டு. அவருள் சிலர் சித் திரப் பதுமைபோல அசைவற்றிருந்ததும் உண்டு. இதனைக் குறித்து நான் விசாரணை செய்த பொழுது அத்தகையோருள் பலர் அந்த நிலை கலைந்தவுடனே அளவு கடந்த காம விருப்பத்தால் பீடிக் கப்பட்டனர் என அறிந்தேன். தியானத்திலும் ஏகாக்கிர சித்தத் திலும் நிலையான பயிற்சியின்மையினுல், இது உண்டாகின்றது.

சிஷ்: ஐய, சமய சாதனைகளைப்பற்றிய இரகசியங்களை நான் ஒரு சாத்திரத்திலும் படிக்கவில்லை. முற்றிலும் புது விஷயங்கள் பலவற்றை இன்று கேள்வியுற்றேன்.

சுவா: சமய சாதனையைப்பற்றிய இரகசியங்கள் எல்லாம் சாத்திரங்களிலே இருக்கின்றனவென்று எண்ணுகிருயா? இவை குரு சிஷ்ய பரம்பரையிலே இரகசியமாகக் கொடுக்கப்பட்டு வருகின் றன. தியானத்தையும் ஏகாக்கிர சித்தத்தையும் மிகுந்த கருத் தோடு பயிலுவாயாக. நறுமணம் கமழும் மலர்களை வைத்து வாசனைத் திரவியங்களைப் புகைப்பாயாக. ஆரம்பத்திலே மனத் தைப் பரிசுத்தப்படுத்துவதற்கு வேண்டிய புற உதவிகளை ஏற்றுக்

கொள்ளுதல் வேண்டும். குருவினுடைய நாமத்தையும் இஷ்ட தேவதையினுடைய நாமத்தையும் செபிக்கும் பொழுது, 'பிரபஞ் சத்திலுள்ள எல்லாப் பிராணிகளுக்கும் சாந்தமுண்டாகுக!' என்று சொல்லுதல் வேண்டும். எல்லாத் திசைகளிலும் நல்லெண் ணங்களை முதலிலே பரப்பிப் பின்பு தியானத்தில் அமர வேண்டும். ஆரம்பத்திலே ஒருவன் இவ்வாறு செய்யவேண்டும்; அதன் பின் அமைதியாய் இருந்து (எத்திசையினையாவது நோக்கி) நான் தீட்சை காலத்திலே உனக்குக் கற்பித்த முறையைத் தியானம் செய்வாயாக. ஒரு நாளையாவது விட்டுவிடாதே. நெருக்கமான வேலை இருந்தால், கால் மணி நேரமாவது சமய சாதனைகளைச் செய். நியதியான பத்தியின்றி அடைய வேண்டிய நிலையை அடைதல் கூடுமென்று எண்ணுகிறாயா, என் மகனே?

சுவாமிஜி மேன்மாடிக்குப் போகும்பொழுது, பின் வருமாறு சொல்லிக்கொண்டு சென்றார்:

"நீ இங்கு வந்ததனாலே கஷ்டமின்றி ஆன்மிக உணர்ச் சியை எளிதில் பெறுவாய். மோக்ஷமும் பிறவும் உன் கையிலே இருக்கின்றன. தியானம் முதலியவற்றைச் செய்வதோடு துன்பம் நிறைந்த இவ்வுலகத்தில் கவலைகள் நீக்குவதற்காக இரவு பகல் முழு மனத்தோடு முயலுவாயாக. கடிய தவங்களினாலே என் னுடைய உடல் ஏறக்குறைய முற்றிலும் அழிந்து போயிற்று. எலும் பும் தோலுமாய் இருக்கின்ற இக்கூட்டிலே சிறிதேனும் ஆற்றலில்லை. என்னைச் சிறிது நேரம் இருக்க விட்டு, வேலையைச் செய்ய முயலுங் கள். நீ வேறொன்றும் செய்யாவிட்டாலும், இத்தனை நாளும் சமய சாத்திரங்களிலே படித்த உண்மைகளை உலகத்துக்கு எடுத்துச் சொல்லலாம். இதனினும் உயர்ந்த கொடை இல்லை. ஞான தானமே எல்லாத் தானங்களிலும் உயர்ந்தது.

(44)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1902-ஆம் ஆண்டு.]

சுவாமிஜி இப்பொழுது திருமடத்தில் இருந்து வருகிறார். சிஷ்யர் திருமடத்துக்கு வந்து, மாலை வேளையில் உலவுதற்கு வெளியே போன சுவாமிஜியோடும் சுவாமி பிரேமானந்தரோடும் சென்றார். சுவாமிஜி எண்ணத்திலே ஆழ்ந்திருக்கக் கண்ட சிஷ்யர், சுவாமி பிரேமானந்தரோடுசுவாமிஜியினுடையபெருந்தகைமையைப்பற்றி ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன விஷயங்களைக் குறித்து உரையாடத் தொடங்கினார். சிறிது தூரம் நடந்த பின்பு சுவாமிஜி திருமடத்தை நோக்கித் திரும்பினார். சிஷ்யரும் சுவாமி பிரேமானந்தரும் சமீ பத்திலிருப்பதைக் கண்டு, "நல்லது, என்ன பேசினீர்கள்?"

என்ருர். அதற்குச் சிஷ்யர், ''ஸ்ரீராமகிருஷ்ணரையும் அவருடைய மொழிகளையும் பற்றிப் பேசினேம்,'' என்ருர். மறுமொழி செவியிற்பட்டதும் சுவாமிஜி மறுபடியும் எண்ணத்தில் ஆழ்ந்து வழி நடந்து திருமடத்தை அடைந்தார்; மாமரத்தின் கீழே சிறிய கட்டிலிலே சிறிது நேரம் இளைப்பாறி இருந்து, முகத்தைக் கழுவிக்கொண்டு, மேல்மாடிக்குப் போய் வெளிப்புறத்திலே உலவிக்கொண்டிருக்கும் பொழுது சிஷ்யரை நோக்கிப் பின் வருமாறு சொல்லுவார்:

''நீ உன் ஊர்ப்பக்கங்களிலே வேதாந்தத்தை ஏன் பரப்பத் தொடங்கவில்லை? அங்கே தாந்திரிக மதம் மிகவும் அஞ்சத்தக்க அளவுக்குப் பரவி இருக்கிறது. அத்வைத வாதத்தின் சிங்க முழக்கத்திஞல் நாட்டை விழித்தெழும்படி செய். அப்பொழுது நீ ஒரு வேதாந்தி என்பதை நான் அறிந்துகொள்வேன். முதலிலே அறிவுக் கழகம் ஒன்று ஏற்படுத்தி, உபநிடதங்களையும் பிரம்ம சூத்திரத்தையும் கற்பி. இளைஞர்க்குப் பிரம்மசரிய முறையைப் பற்றிப் போதிப்பாயாக. நியாய முறையைப் பற்றி வீண் தருக்கம் பேசுவது உன் ஊரில் அதிகம் உண்டென்று கேள்விப்பட்டேன். அதில் என்ன இருக்கிறது? வியாப்தி, அனுமானம் என்னும் விஷயங்களைப்பற்றி நையாயிக பண்டிதர்கள் மாதக் கணக்காக வாதிப்பார்கள். ஆன்மஞானத்தைப் பெறுவதற்கு அது எங்ஙனம் வழியாகும்? உன் கிராமத்திலோ, நாகமஹாசயருடைய கிராமத்திலோ, ஒரு 'சதுஷ்பதி'ப் பாடசாலையை—நாட்டுக்குரிய பாடசாலையை—ஏற்படுத்தி, அங்கே சமய சாத்திரங்களையும், ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்க்கை வரலாற்றையும், அறிவுரைகளையும் கற்பிப்பாயாக. இம்முறையில் உன்னுடைய நன்மையையும் மக்களுடைய நலத்தையும் முன்னேற்றம் அடையச் செய்வாய். உனது புகழும் நிலைபெறும்.''

சிஷ்: ஐய, பெயரும் புகழும் பற்றிய விருப்பம் முதலியன எனக்கில்லை. தேவரீர் சொல்லுகிறபடி செய்ய வேண்டும் என்னும் விருப்பம் சில வேளை உண்டாகிறது. ஆனல், மணம் புரிந்து கொண்டதால், உலகத்தில் சிக்கிக்கொண்டேன். எனது ஆர்வம் எப்பொழுதும் உருவாகாது மனத்திலேயே கிடந்துவிடுமென்று அஞ்சுகிறேன்.

சுவா: மணம் புரிந்தால் என்ன? உன்னுடைய பெற்ருேருக்கும் உடன் பிறந்தோர்க்கும் உண்டி உடை கொடுத்து ஆதரிப்பது போல உன்னுடைய மனைவியையும் ஆதரிப்பாயாக. அவளையும் சமயபோதனை செய்து உன் வழிக்கு இழுத்துக்கொள். உன் ஆன்மிக வாழ்க்கையிலேயே கலந்து உதவி செய்பவளாகவும் இருக்கிருள் என்று எண்ணிக்கொள். மற்ற வேளைகளில் பொது நோக்குடன் பிறரைப் பார்ப்பது போல அவளையும் பார். அப்படி நினைத்தால்,

மனத்தினது நிலை கலங்கிய தன்மை அழிந்து போய்விடும். எதற்காக அஞ்ச வேண்டும்?

இந்த வார்த்தைகளைக் கேட்டுச் சிஷ்யர் புதிய ஊக்கம் பெற்ருர். உணவு கொண்ட பின்னர், சுவாமிஜி தமது படுக்கையின்மீது அமர்ந்தார். அப்பொழுது சிஷ்யர் அவருக்குச் சில பணிகளைச் செய்துகொண்டிருந்தார்.

சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, மடத்திலுள்ள சாதுக்களிடம் வணக்கமாக நடந்துகொள்ள வேண்டுமென்று கட்டளை இட்டுப் பின் வருமாறு சொல்லுவார்:

"நீ இப்பொழுது காண்கின்ற ஸ்ரீராமகிருஷ்ணருடைய புதல்வர்கள் அற்புதமான தியாகிகள். அவர்களுக்குப் பணிவிடைகள் செய்வதனுலே, நீ சித்த சுத்தி எய்தி ஆன்ம தரிசனம் பெறும் பாக்கியத்தை அடைவாய். 'விசாரத்தினுலும், பெரியோருக்குச் சேவை செய்வதனுலும்' என்னும் கீதா வாக்கியத்தை எப்பொழுதும் நினைத்திரு. ஆதலால், நீ அவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், நீ கருதிய நிலையை அடைவாய். அவர்கள் உன்மீது எவ்வளவு அன்பு பாராட்டுகிருர்கள் என்பதை நீ அறிவாய்."

சிஷ்: அவர்களை அறிந்துகொள்வது எனக்கு மிகவும் கஷ்டமாய் இருக்கின்றது. ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையினராகக் காணப்படுகின்றனர்.

சுவா: ஸ்ரீராமகிருஷ்ணர் ஓர் அற்புதமான தோட்டக்காரர். ஆதலாலே, அவர் தமது சங்கத்தைப் பல வேறு மலர்கள் சேர்த்துக்கட்டிய பூச்செண்டு போல அமைத்தார். பல வேறு வகைப்பட்ட கருத்துக்கள் உடையோர் இதில் சேர்ந்திருக்கின்றனர். இன்னும் பலர் இனிமேல் வருவர். "யார் ஆண்டவனை நோக்கி உண்மை மனத்தோடு ஒரு நாளாவது பிரார்த்திக்கின்றனரோ, அவர் இங்கே கட்டாயம் வர வேண்டும்," என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வது வழக்கம். இங்கிருக்கின்ற ஒவ்வொருவரும் பெரிய ஆன்மிக சக்தியுடையவர் என்பதை அறிந்துகொள்வாயாக. என் முன்னிலையிலே அவர்கள் ஒடுங்கி இருக்கிறபடியால், அவர்களைச் சாதாரண மக்கள் என்று நினைத்துவிடாதே. அவர்கள் எவ்விடம் போனுலும், அவ்விடத்தில் மக்களிடையே ஆன்மிக சத்தியை எழுப்புவதற்குக் காரணமாயிருப்பார்கள். அகண்டமாகிய அறக்கொள்கைகளின் வடிவமாய் விளங்கிய ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மிக வடிவத்தின் பகுதிகளாய் உள்ளவர்கள் அவர்கள் என்பதை அறிந்துகொள். நான் அவர்களை எப்படி நோக்குகின்றேன்? அதோ இருக்கின்ற பிரம்மானந்தரைப் பார். அவருடைய ஆன்மிக சத்தி எனக்குக்கூட இல்லை. ஸ்ரீராமகிருஷ்ணர் அவரைத் தம் ஆன்மிக மைந்தராகக் கருதி, அவரோடு வசித்து, உலவி, உண்டு, உறங்கி

ஞர். அவர் எங்களுடைய மடத்துக்கு ஓர் அணிகலம் போன்றவர் —எங்கள் வேந்தர். அத்தகையவரே பிரேமானந்தர், துரியானந்தர், திரிகுணதீதர், அகண்டானந்தர், சாரதானந்தர், சுபோதானந்தர் என்னும் இன்னேர். நீ உலகத்தைச் சுற்றி வந்தாலும் இத்தகைய ஆன்மிக சத்தியும் தெய்வ நம்பிக்கையும் உடையோரைக் காண மாட்டாய் என்பது திண்ணம். இவர்களுள் ஒவ்வொருவரும் சமய ஆற்றலின் நிலையம். நாள் செல்லச் செல்ல இவர்களுடைய சத்தி வெளிப்படும்.

சிஷ்யர் வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்தார். சுவாமிஜி மேலும் சொல்லுவார்:

''உங்கள் ஊர்ப்பக்கத்திலிருந்து நாகமஹாசயரைத்தவிர வேறு யாரும் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வரவில்லை. ஸ்ரீராமகிருஷ்ணரைக் கண்ட வேறு சிலர் அவரை உண்மையாக அறிந்து கொள்ளவில்லை.'' நாகமஹாசயருடைய எண்ணம் வந்ததும் சுவாமிஜி சிறிது நேரம் மௌனமாயிருந்தார். மஹாசயர் இவ்வுலக வாழ்வினின்று நீங்கி நான்கு ஐந்து மாதங்கள் கழிந்துவிட்டன. நாகமஹாசயருடைய வீட்டிலே ஒரு சமயம் கங்கை நீர் ஊற்றெடுத்ததைப்பற்றிச் சுவாமிஜி கேள்வியுற்றிருந்தார். அது நினைவுக்கு வருதலும், ''அந்தச் செயல் எப்படி நடந்தது? அதைப்பற்றி எனக்குச் சொல்,'' என்றுர்.

சிஷ்: நான் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன்; ஆனல், நேரிலே கண்டதில்லை. ஒரு **மஹாவாருணி யோக**த்திலே நாகமஹாசயர் தம்தந்தையாரோடுகல்கத்தாவுக்குப்புறப்பட்டார். புகை வண்டியிலே இடம் கிடைக்காததால், மூன்று நான்கு நாள் **நாராயன்கஞ்சு** என்னும் இடத்திலே வீணுகத் தங்கிவிட்டு வீட்டுக்குத் திரும்பினர். அப்பொழுது நாகமஹாசயர் தந்தையாரை நோக்கி, 'மனம் பரிசுத்தமாயிருந்தால் கங்கா மாதா இங்கே தோன்றுவாள்,' என்றுர். நீராடுவதற்காகக் குறிப்பிட்ட அந்தத் தெய்வப் புனித வேளையில் அவருடைய வீட்டு முற்றத்தினின்று நிலத்தைக் கிழித்துக்கொண்டு ஒரு நீரருவி எழும்பிப் பாய்ந்தது. அதனைக் கண்டவர் பலர் இப்பொழுதும் இருக்கின்றனர். நான் அவரைக் காண்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு இது நிகழ்ந்தது.

சுவா: இதில் அதிசயம் ஒன்றுமில்லை. அவர் பொய்க்காத திடமான சங்கற்பம் உடைய பெரியார். அவரளவிலே இத்தகைய செய்தி நிகழ்ந்தது புதுமையென்று நான் எண்ணவில்லை.

சுவாமிஜி இதனைச் சொல்லிவிட்டு, உறக்கம் வந்ததால் படுத்து விட்டார். சிஷ்யரும் இரவுணவு அருந்தும்பொருட்டு மேன்மாடியிலிருந்து கீழே வந்தார்.

(45)

[இடம்: கல்கத்தாவிலிருந்து திருமடத்துக்கு வருகிற ஒரு தோணி.
காலம்: 1902-ஆம் ஆண்டு.]

ஒரு நாள் மாலை கல்கத்தாவிலே கங்கை ஆற்றங்கரையில், நடந்து கொண்டிருக்கும்பொழுது அஹீரித்தோலாக் கட்டத்தை நோக்கிச் சிறிது தூரத்திலே நடந்து வருகின்ற ஒரு சந்நியாசியைச் சிஷ்யர் கண்டார். அவர் சமீபத்தில் வந்ததும், குறித்த சந்நியாசி நம் குருவாகிய சுவாமி விவேகானந்தர் என்பதைச் சிஷ்யர் கண்டார். அவரது இடக்கையிலே பொரிக் கடலையுடன் ஒரு தொன்னை இருந்தது. சுவாமிஜி சிறு பையனைப்போலக் கடலை தின்றுகொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் வழி நடந்து வருவாராயினர். சிஷ்யர் அவர் கால்களில் விழுந்து வணங்கி, ''எதிர்பாராத வண்ணம் கல்கத்தாவுக்கு வந்த காரணமென்ன?'' என்று வினவினர்.

சுவா: நான் ஒரு காரியத்தின்பொருட்டு வந்தேன். மடத்துக்குப் போவோம். வருகின்றாயா? கொஞ்சம் கடலை கொறி. இது உப்பும் காரமும் சேர்ந்த நல்ல நேர்த்தியான சுவையுடையதாயிருக்கிறது.

சிஷ்யர் உவகையுடன் கடலையைத் தின்று மடத்துக்குப் போவதற்குச் சம்மதித்தார்.

சுவா: அப்படியானல், ஒரு தோணியை ஏற்பாடு செய்.

சிஷ்யர் விரைந்து ஒரு தோணியைத் தேடிச் சென்றார். தோணிக்காரன் எட்டணு கேட்டான். சிஷ்யர் கூலியைப்பற்றிப் பேசிக்கொண்டு நிற்கும் பொழுது, சுவாமிஜி அவ்விடம் வந்து, ''நீ எதற்காக அவனோடு வாதாடுகிறாய்?'' என்று சிஷ்யருக்குச் சொல்லிவிட்டுத் தோணிக்காரனை நோக்கி, ''நல்லது, உனக்கு எட்டணு தருவோம்,'' என்று சொல்லித் தோணியிலே ஏறினர். தோணியும் நீரோட்டத்துக்கு எதிராக மெல்லச் சென்றது. மடத்தைச் சேர ஒன்றரை மணி நேரம் ஆயிற்று. சுவாமிஜி மாத்திரம் தோணியிலே உடன் இருந்த காரணத்தினல் பல வகைப்பட்ட விஷயங்களைப் பற்றி அவரோடு கலந்து பேசுவதற்குச் சிஷ்யருக்கு வசதி ஏற்பட்டது. சிஷ்யர் சமீபத்தில் எழுதிய '**ஸ்ரீ ராமகிருஷ்ண பத்த மான்மியம்**' என்னும் பாடலைப்பற்றிப் பேசும்பொழுது சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''நீ உன் பாடலில் குறிப்பிட்டவர்கள் ஸ்ரீராமகிருஷ்ணருடைய அந்தரங்க சிஷ்யர்களென்பது உனக்கு எப்படித் தெரியும்?'' என்றார்.

சிஷ்: ஐய, நான் பல ஆண்டுகளாக ஸ்ரீராமகிருஷ்ணருடைய துறவறச் சிஷ்யர்களோடும், இல்லறச் சிஷ்யர்களோடும் பழகியிருக்கிறேன்; நான் குறிப்பிட்டவர்கள் எல்லாரும் ஸ்ரீராம

கிருஷ்ணருடைய பத்தர்கள் என்பதை அவர்களிடமிருந்து கேள் விப்பட்டேன்.

சுவா: ஆம்; அவர்களெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணருடைய பத்தர் களே. ஆனால், எல்லாப் பத்தர்களும் அந்தரங்க சிஷ்யர்கள் என் னும் வகுப்பைச் சேர்ந்தவர்களல்லர். காசிப்பூர் நந்த வனத்தில் இருக்கும் பொழுது ஸ்ரீராமகிருஷ்ணர் எங்களைநோக்கி, ''இவர்கள் எல்லாம் என் அந்தரங்க சிஷ்யர் அல்லரென்பதை உலகமாதா எனக்குக் காட்டினாள்,'' என்றார். அன்று, ஆடவர் பெண்டிராகிய இரு வகைப் பத்தர்களையும் பற்றி ஸ்ரீராமகிருஷ்ணர் அவ்வாறு கூறி னார். பின்பும் ஸ்ரீராமகிருஷ்ணர், தம் பத்தர்களுக்குள்ளே ஏற்றத் தாழ்ச்சியாகப் பல படிகள் இருப்பதை எடுத்துக் காட்டினார்.

சுவாமிஜி இல்வாழ்வாருடைய வாழ்க்கைக்கும் சந்நியாசிக ளுடைய வாழ்க்கைக்கும் உள்ள பெரிய வேறுபாட்டினைப்பற்றி நீண்ட நேரம் தெளிவாக விளக்கினார்.

சுவா: பொன்னாசை பெண்ணாசை வழியிலே நின்று கொண்டு, அதே காலத்திலே ஸ்ரீராமகிருஷ்ணரைச் செவ்வையாக அறிந்துகொள்ளுவதென்றால், அது முடியும் காரியமா? அது எப் பொழுதாவது கைகூடுமா? அத்தகைய மொழிகளிலே நம்பிக்கை வைக்கவேண்டா; ஸ்ரீராமகிருஷ்ணருடைய பத்தருள்ளே பலர் தங்களை ஈசுவர கோடிகள் என்றும், அந்தரங்க சிஷ்யர்கள் என்றும் சொல்லுகிறார்கள். அவருடைய தியாகத்தையும் வைராக்கியத்தை யும் நினைக்க முடியாதவர்கள், அவருக்கு அந்தரங்க சிஷ்யர் என்று சொல்லிக்கொள்வது நன்றாயிருக்கின்றது! இந்த வார்த்தைகளை யெல்லாம் உதறித் தள்ளிவிடு. அவர் தியாகிகளுக்கு அரசராயிருந் தார். அவருடைய அனுக்கிரகத்தைப் பெற்றோர் யாரேனும் பெண் ணாசை, பொன்னாசை முதலிய நுகர்ச்சிகளில் வாழ்நாள் கழிக்க முடியுமா?

சிஷ்: அப்படியிருந்தால், தக்ஷிணேஸ்வரத்துக்கு அவரிடம் வந்தவர்கள் அவர் பத்தர்கள் அல்லவா?

சுவா: யார் அப்படிச் சொன்னார்? ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்த ஒவ்வொருவரும் ஆன்மிக வாழ்க்கையிலே உயர்வடைந்தவர், உயர்வடைகின்றவர், மேலும் உயர்வடைபவர். முந்திய கல்பத் திலே பூரண நிலையை அடைந்த ரிஷிகள், மனித உடலம் எடுத்து அவதார புருஷர்களோடு உலகத்திலே பிறக்கிறார்களென ஸ்ரீராம கிருஷ்ணர் சொன்னதுண்டு. அவர்கள் ஆண்டவனுக்குத் தோழர் கள். ஆண்டவன் அவர்கள் மூலமாகத் தொழில் செய்து தனது கருமத்தைப் பரப்புகிறான். பிறர்பொருட்டுத் தம்மைத் துறந்து இந்திரிய இன்பங்களை எல்லாம் அருவருப்போடு நீக்கிவிட்டு, உல குக்கு உபகாரமாக மக்களின் நலத்தைக் கோரி யாவர் வாழ்க்கை நடந்துகின்றனரோ, அத்தகையோர் மாத்திரமே அவதார புருஷ

ருக்குத் தோழராய் இருக்கக் கூடியவர் என்னும் உண்மையை அறிந்துகொள்ளுவாயாக. இயேசுநாதருடைய சிஷ்யர்கள் எல்லோரும் துறவிகள். சங்கரர், ராமாநுஜர், ஸ்ரீசைதன்யர், புத்தர் என்றினோருடைய கருணையை நேரிற்பெற்றவர்கள் எல்லாம் அனைத்தையும் துறந்த சந்நியாசிகள். இத்தகைய சான்றோர்களைக் கொண்ட சிஷ்ய பரம்பரையினாலேதான் பிரம்ம வித்தை உலகிற் பரவுகின்றது. பெண்ணாசை, பொன்னாசை இவற்றிற்கு அடிமையாகிய மனிதன் மற்றொருவனுக்கு விடுதலையைத் தந்தான் என்றும், கடவுளை அடையும் நெறியைக் காட்டினானென்றும் நீ எங்கேயாவது கேள்விப்பட்டதுண்டா? தான் விடுதலை அடையாதவன், பிறரை விடுவிப்பது எவ்வாறு? எல்லாக் காலங்களிலும், எல்லா நாடுகளிலும் சந்நியாசிகளே சமய போதகர்களாயிருந்தார்கள். வேதம், வேதாந்தம், இதிகாசம், புராணம் என்னுமிவற்றில் இந்த உண்மையை எங்கும் காணலாம். முன்பு நடந்தது போலவே இப்பொழுதும் நடக்கப் போகின்றது. சர்வ சமய சமரஸத்தைக் காட்டிய ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஆற்றல் வாய்ந்த சந்நியாசி சிஷ்யர்கள், மக்களுக்கு ஞானாசிரியர்களாக எவ்விடத்தும் மதிக்கப்படுவார்கள். பிறருடைய மொழிகள் பொருளில்லா வெற்றொலிபோல வீணாய்ப்போம். இந்தத் திருமடத்திலிருக்கிற உண்மைத் தியாகிகளாகிய சந்நியாசிகள் தருமத்தைப் பாதுகாப்பதற்கும் பரப்புவதற்கும் உரிய நிலையங்களாவார்கள். அறிந்துகொண்டாயா?

சிஷ்: ஸ்ரீராமகிருஷ்ணருடைய இல்லறச் சிஷ்யர்கள் அவரைப்பற்றிப் பல்வேறு வகையாகப் போதிக்கின்றார்களே! அவர்கள் சொல்வன உண்மை அல்லா?

சுவா: முற்றிலும் பொய்யென்று சொல்வதற்கில்லை. ஆனால், ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி அவர்கள் கூறுவனவெல்லாம் ஒரு சார்பு பற்றிய உண்மைகளே. தங்களுடைய ஆற்றலுக்குத் தக்கபடி ஸ்ரீராமகிருஷ்ணரைக் குறித்துத் தாங்கள் அறிந்துகொண்டதை அவர்கள் பேசுகிறார்கள். அப்படிச் செய்வது குற்றமாகாது. ஆனால், இந்தப் பத்தர்களுள் யாரேனும் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றித் தாம் அறிந்துகொண்டது முழு உண்மை என்று எண்ணினால், அது வீண் எண்ணமாகும். சிலர், ஸ்ரீராமகிருஷ்ணரைக் கௌல மதத்தவர், தாந்திரிகர் என்பர்; வேறு சிலர் நாரதீய பத்தியைப் போதிக்கும்பொருட்டு ஸ்ரீசைதன்யரே உலகில் அவதரித்தார் என்பர். இன்னும் சிலர், அவர் அவதார புருஷரென்று சொல்வதும் சாதனை செய்தாரென்பதும் ஒன்றினுக்கொன்று முரண்பாடாகுமென்பர். இன்னும் சிலர், அவர் சந்நியாசம் பெற்றது, அவருடைய போதனைகளுக்குப் பொருத்தமில்லாதது எனக் கருதுவர். அந்நாள் தோன்றிய எத்தனையோ அவதாரங்கள் ஒருங்கு திரண்டு உருவெடுத்தாலனைய அவர் இத்தகையர் என்பதை வாழ்க்கை முழுவ

தையும் தவத்திலே கழித்த நாங்கள்கூடச் சிறிதேனும் உணர்ந்து கொள்ளாதிருக்கிறோம். அவரைப்பற்றிப் பேசும் பொழுது ஆலோசனையோடு பேசவேண்டியிருக்கிறது. ஒவ்வொருவருடைய ஆற்றல் எவ்வளவிருக்கிறதோ, அவ்வளவுக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் தம்முடைய எண்ணங்களால் அன்னவரை நிறைவிப்பார். அவருடைய ஆன்மிக வாழ்க்கையாகிய நிறைந்த கடலிலிருந்து ஒரு திவலையைப் பெற்றாலும், அதனால் மக்கள் தேவர்கள் ஆவார்கள். எவ்விடத்திலும் பரந்த எண்ணங்களின் சமரசத்தை உலக சரித்திரத்திலே மறுபடியும் நாம் காணப் போவதில்லை. ஸ்ரீராமகிருஷ்ணராய் அவதரித்தவர் இன்னார் என்பதை இதிலிருந்தாவது உணர்ந்துகொள்வாயாக. அவர் தம் துறவற மாணவர்களுக்குப் போதிக்கும் பொழுது தமது ஆசனத்திலிருந்து எழுந்து யாராவது இல் வாழ்வார் அவ்வழியாக வருகின்றனரோ என்று பார்ப்பார்; வரவில்லையெனக் கண்ட பின்பு, துறவின் மகத்துவத்தைப்பற்றியும் தவத்தைப் பற்றியும் ஆர்வத்தோடு பேசுவார். அத்தகைய வைராக்கியத்தின் வலிமையினாலே நாங்கள் உலகத்தைத் துறந்து உலகப் பொருள்களில் அருவருப்புடையவர்களானோம்.

சிஷ்: இல் வாழ்வார்க்கும் துறவிகளுக்கும் இடையே அவர் அவ்வளவு வேறுபாடு காட்டினார்!

சுவா: இந்த விஷயத்தைப்பற்றி இல் வாழ்வாராகிய சிஷ்யரையே கேட்டுப்பார். உலக வாழ்க்கையின் இன்பங்கள் யாவற்றையும் துறந்து, மலையிலும் காட்டிலும் புண்ணிய நீர்த்துறைகளிலும் ஆச்சிரமங்களிலும் காலங்கழித்து, தவம் புரிந்து, கடவுளையடைய முயலுகின்ற ஸ்ரீராமகிருஷ்ணருடைய புதல்வர்களா, அன்றேல், அவரை நினைவு கூர்ந்து அவருடைய திருநாமத்தைப் புகழ்தலை மேற்கொண்டும், உலகத் தளைகளினின்றும் மயக்கத்தினின்றும் எழும்ப முடியாமல் இருக்கின்ற அவருடைய ஏனைய சிஷ்யர்களா, யார் பெரியவர் என்பதை நீயே நினைத்துப்பார். மக்கள் கூட்டத்தினரை ஆன்ம சொரூபமாக நினைத்து, அவர்களுக்குச் சேவை செய்வதை மேற்கொண்டு, இளமை தொடங்கிப் பிரம்மசரியம் காத்துத் தியாகம் வைராக்கியம் என்னும் இவற்றின் வடிவமாய்விளங்குகின்ற துறவோர் பெரியவரா, அன்றேல், பூவின்மேலே ஒரு கணத்திலும், மலக்குவியலின்மேலே மறு கணத்திலும் உட்கார்ந்திருக்கின்ற ஈயைப் போல வாழ்கின்றவர் பெரியவரா? நீயே சிந்தித்து முடிவு செய்துகொள்.

சிஷ்: ஆனால், ஐய, அவருடைய அருளைப் பெற்றவர்களுக்கு இவ்வுலகம் எம்மாத்திரம்? அவர்கள் இல் வாழ்க்கையில் வாழ்தலும், துறவறம் பெற்றுக்கொள்ளுதலும் ஒன்றே என்று எனக்குத் தோன்றுகிறது.

சுவா: உண்மையில் அவருடைய அருளைப் பெற்றுக்கொண்ட

வர்களது சிந்தனையானது உலகத்தை அடுத்திருக்க மாட்டாது. பெண்ணாசை பொன்னாசை இவற்றினின்று விடுபட்டிருப்பதே அவருடைய அருளைப் பெற்றதற்கு அறிகுறியாகும். ஒருவனுடைய வாழ்க்கையிலே அது எய்தப் பெறுவிடின், அவன் உண்மையில் அவருடைய அருளைப் பெற்றுக்கொள்ளவில்லையென்பதை அறிதல் வேண்டும்.

இந்த உரையாடல் முடிந்தது. சிஷ்யர் மற்றொரு விஷயத்தைத் தொடங்கி, ''ஐய, அயல் நாடுகளிலே தேவரீர் செய்த முயற்சிகளின் விளைவு என்ன?'' என்றார்.

சுவா: செய்த வேலையின் ஒரு சிறு அளவு மாத்திரம் இப்பொழுது வெளிப்பட்டுத் தோன்றும். நாளடைவிலே ஸ்ரீராமகிருஷ்ணருடைய சமரசக் கொள்கைகளை உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளும்; இப்பொழுது தொடக்கம் ஆகியிருக்கின்றது. இந்த வெள்ளத்திற்கு முன் எல்லாம் ஓடி மறைந்துவிடும்.

சிஷ்: தயை செய்து அடியேனுக்கு ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றி இன்னும் பல விஷயங்களைச் சொல்லி அருள வேண்டும். தேவரீருடைய திருவாக்கினின்று அவற்றைக் கேட்க நான் பெரிதும் விரும்புகிறேன்.

சுவா: எப்பொழுதும் அவரைப் பற்றித்தானே கேள்விப்பட்டுக்கொண்டிருக்கிறாய்? இன்னும் என்ன? அவரே அவருக்கு நிகர். அவருக்கு நிகர் மற்றொருவர் உண்டா?

சிஷ்: அவரைக் காணாத எங்களுக்குப் போம் வழி எது?

சுவா: அவருடைய திருவருளை நேரிலே பெற்ற சாதுக்களினுடைய கூட்டுறவை நீ பெற்றிருக்கின்றாய். அப்படி இருக்கும்பொழுது அவரைக் காணவில்லை என்று எப்படிச் சொல்லலாம்? அவர் தம் துறவறச் சிஷ்யர்களுக்குள்ளே உறைகிறார். அவர்களுக்குத் தொண்டு செய்வாயானால், நாளடைவிலே அவர் உனது இதயத்திலே வெளிப்பட்டுத் தோற்றுவார். நீ யாவற்றையும் உணர்ந்துகொள்ளுவாய்.

சிஷ்: ஐய, அவருடைய அருளைப் பெற்ற பிறரைக் குறித்து எவ்வளவோ சொல்லுகிறீர்; தேவரீரைக் குறித்து அவர் என்ன சொன்னாரென்பதைப்பற்றி ஒரு பொழுதும் ஒன்றும் சொல்லவில்லையே!

சுவா: என்னைக் குறித்து என்ன சொல்லுவேன்? நான் அவருடைய பூதங்களுள் ஒன்றாயிருக்க வேண்டும். அவர் முன்னிலையில் அவரைப்பற்றிக் குறைவாகப் பேசுவேன். அதைக் கேட்டு அவர் நகைப்பார்.

இதைச் சொல்லும் பொழுது சுவாமிஜியினுடைய முகம் அசைவற்றுத் தோன்றியது; தம்மை மறந்தே ஆற்றை நோக்கிச் சிறிது நேரம் பேசாதிருந்தார். அந்தியும் வந்தது. தோணியும் திரு

மடத்தை அடைந்தது. ''வாழ்க்கையாம் மாலைப் பொழுதில் இந்தச் சேயை அவள் சொந்த வீட்டிற்கு அழைத்துச்செல்,'' என்னும் பாட்டினைச் சுவாமிஜி மெல்லப் பாடினார்.

பாட்டு முடிந்ததும், சுவாமிஜி சிஷ்யரை நோக்கி, ''கிழக்கு வங்காளமாகிய உங்கள் ஊர்ப்பக்கத்திலே இனிய குரல் உடையோர் பிறப்பதில்லை; கங்கை நீரைக் குடித்தாலன்றி, இனிய குரலினைப் பெறுதல் இயலாது,'' என்றார்.

தோணிக் கூலியைக் கொடுத்த பின்னர், சுவாமிஜி தோணியினின்றும் இறங்கிப்போய்த் திருமடத்தின் மேற்குத் திண்ணையிலே இருந்தார். அவருடைய வனப்பு வாய்ந்த மேனியும் காவி உடையும் கண்ணுக்கினிய தோற்றமளித்தன.

(46)

[இடம்: பேலூர்த் திருமடம். காலம்: 1902-ஆம் ஆண்டு.]

இன்று ஆஷாட மாதம் முதல் தேதி. சிஷ்யர் மாலைக் காலத்துக்குச் சற்று முன்பாக பாலி என்னும் இடத்திலிருந்து திருமடத்துக்கு வந்தார்; தமது உத்தியோக உடையை மாற்றுவதற்கு நேரங்கிடையாமையால், அந்த உடையோடேயே வந்தார்; சுவாமிஜியினுடைய அடிகளில் உடல் முழுதும் தரையிற் படியும்படி வணக்கஞ்செய்து அவருடைய உடல் நலத்தைப்பற்றி வினவினார். சுவாமிஜி, 'நலம் நன்று,' என விடை பகர்ந்து சிஷ்யர் உடுத்திருக்கின்ற உடையைப் பார்த்து, ''நீ காற்சட்டை மேற்சட்டை அணிந்திருக்கிறாய். ஏன் கழுத்துப்பட்டை (காலர்) அணிந்து கொள்ளவில்லை?'' என்று சொல்லிச் சுவாமி சாரதானந்தரை நோக்கி, ''நாளை என் பெட்டியிலிருந்து இவருக்கு இரண்டு கழுத்துப்பட்டைகள் எடுத்துக் கொடும்,'' என்றார். சுவாமி சாரதானந்தரும் அதற்கிசைந்தார்.

சிஷ்யர் உத்தியோக உடையை மாற்றிவிட்டுச் சுவாமிஜியின் முன்னிலையில் வந்ததும், சுவாமிஜி அவரை நோக்கி, ''சுதேச உடையையும், உணவையும், வாழ்க்கை முறையையும் விடுவதனால் ஒருவன் தேசியத்தை இழந்துவிடுகிறான். ஒருவன் எல்லாரிடமிருந்தும் கற்றுக்கொள்ளலாம். ஆனால், எந்தக் கல்வி தேசியத்துக்கு எதிராய் இருக்கின்றதோ, எது உயர்நிலையை அடைவதற்குத் துணை புரிகிறதில்லையோ, அத்தகைய கல்வி தாழ்ச்சிக்கு ஏதுவாகும்.

சிஷ்: ஐய, மேல் உத்தியோகத்தினராகிய ஐரோப்பியர்கள் ஏற்றுக்கொள்ளாத உடையோடு உத்தியோக நிலையத்துக்கு ஒருவன் எப்படிப் போகலாம்?

சுவா: அதனை யாரும் தடுக்கவில்லை. உன்னுடைய உத்தி யோகக் கடமைக்காக, அதற்கு வேண்டிய உடையோடு உத்தியோக நிலையத்திற்குப் போ. ஆனால், வீட்டிற்குத் திரும்பி வந்ததும் அரை உடை, மேலுடை என்னும் இவற்றை அணிந்து, பூரணமான வங்காளி பாபுவாய்த் திகழ வேண்டும். அறிந்துகொண்டாயா?

சிஷ்: ஆம், ஐயா.

சுவா: ஐரோப்பிய ஷர்ட்டை மாத்திரம் அணிந்துகொண்டு வீடுவீடாகப் போகிறீர்கள். மேலை நாட்டிலே அங்ஙனம் செய்தால், அது பொருத்தமில்லாததாகக் கருதப்படும். ஷர்ட்டின் மேலே மேலங்கியாகிய 'கோட்டு' ஒன்று அணிந்தாலன்றி, நன்மக்களுடைய வீட்டிலே நீ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாய். உடை விஷயத்திலே நீங்கள் கற்றிருக்கிற பொருத்தமில்லாத முறையைக் கண்டு நகைக்க வேண்டியிருக்கிறது. இக்காலத்துச் சிறுவர்களும் வாலிபர்களும் அணிகின்ற உடை இந்திய உடையுமன்று; மேலை நாட்டு உடையுமன்று; இரண்டும் சேர்ந்த ஒரு வகைக் கலப்பு உடை.

இவ்வண்ணம் பேசிய பின்னர், சுவாமிஜி எழுந்து கங்கைக் கரையிலே நடந்துகொண்டிருந்தார். சிஷ்யர் சமய சாதனையைப் பற்றிச் சுவாமிஜியினிடம் ஒரு வினாவைக் கேட்பதற்கு ஆலோசித்துக்கொண்டு நின்றார்.

சுவா: என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய்? அதை வாய்விட்டுச் சொல்.

சிஷ்யர் பெரிதும் நாணுற்றுச் சொல்லுவார்: "ஐய, மிகவும் குறுகிய நேரத்திலே மனம் அமைதி நிலையடையவும், விரைந்து நான் தியானத்தில் ஆழ்ந்துவிடவும் செய்யத் தக்க ஒரு முறையைத் தேவரீர் எனக்குக் கற்பித்தால், அது எனக்கு மிகவும் நலம் பயக்கும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். உலகச் செய்கைகளில் மூழ்கியிருந்த காரணத்தால், சமய சாதனை செய்யுங்காலத்திலே மனத்தைத் தியானத்தில் நிலைப்படுத்துதல் கஷ்டமாகக் காணப்படுகிறது."

சிஷ்யருடைய பணிவையும் சிரத்தையையும் சுவாமிஜி பார்த்து, அவரை அன்போடு நோக்கி, "சிறிது நேரங்கழித்து நான் தனித்திருக்கும்பொழுது மேன்மாடிக்கு வா; அதைப்பற்றி நான் உனக்குச் சொல்லுகிறேன்," என்றார்.

சிறிது நேரங்கழித்துச் சிஷ்யர் வந்து சுவாமிஜி மேற்கு நோக்கித் தியானத்திலிருப்பதைக் கண்டார். அவர் முகத்தில் ஓர் அற்புதமான அழகு காணப்பட்டது. உடல் முழுவதும் அசைவற்று இருந்தது. சிஷ்யர் சுவாமிஜியினுடைய திருவுருவத்தைப் பார்த்து வியப்பினால் பேச்சற்று, அருகில் நின்றார். நீண்ட நேரம் நின்றும் சுவாமிஜி அசைவுக்குரிய எவ்வித அடையாளமும் இல்

லாது இருப்பதை நோக்கிச் சமீபத்திலே அமைதியாய் இருந்தார். அரை மணி நேரங்கழித்து வெளியுணர்வுக்குரிய அடையாளங்கள் சில சுவாமிஜியினிடத்துக் காணப்பட்டன. கூப்பியிருந்த கரங்கள் மெல்ல அசைந்தன. சில நிமிஷங்களிலே சுவாமிஜி கண்ணை விழித்துச் சிஷ்யரை நோக்கி, ''எப்பொழுது வந்தாய் ?'' என்ருர்.

சிஷ்: சிறிது முன்னேதான் வந்தேன்.

சுவா: நல்லது, ஒரு குவளைத் தண்ணீர் கொண்டுவா.

சிஷ்யர் விரைந்து ஒரு குவளைத் தண்ணீர் கொண்டு வந்தார். சுவாமிஜி சிறிது நீர் குடித்துவிட்டுக் குவளையை உரியவிடத்தில் வைக்கும்படி சிஷ்யருக்குச் சொன்னர். சிஷ்யர் வைத்துவிட்டுச் சுவாமிஜிக்குச் சமீபத்தில் வந்திருந்தார்.

சுவா: இன்று நான் மிக ஆழ்ந்த தியானத்திலிருந்தேன்.

சிஷ்: ஐய, என் மனமும் தியானத்தில் ஆழ்ந்தும்படி தயை செய்து கற்பித்தருள வேண்டும்.

சுவா: முன்பு எல்லா முறைகளையும் உனக்குக் கற்பித்திருக் கிறேன். முறைப்படி ஒவ்வொரு நாளும் தியானம் செய். நாள் அடைவிலே எல்லாம் கைகூடும். எவ்வகையாகிய சாதனை உனது மனத்துக்குப் பொருத்தமாகத் தோற்றுகிறதென்பதைச் சொல்.

சிஷ்: ஐய, தேவரீர் சொல்லியபடி தினமும் பயில்கிறேன்; ஆனுலும், ஆழ்ந்த தியானம் பெறுவதில்லை. தியானத்தைப் பயில் வது எனக்குப் பயனற்றதென நான் சில வேளை எண்ணுவதுண்டு. அதில் அனுகூலம் கிட்டாதென்று எண்ணுகிறேன். ஆதலால், இப்பொழுது போல, நித்தியமாக, தேவரீருடைய முன்னிலையிலே இருப்பதை விரும்புகிறேன்.

சுவா: இவையெல்லாம் மனத்தின் வலிமையின்மையால் நிகழ் வன. நித்தியமாக உன்னுள்ளே இருக்கின்ற ஆன்மாவிடத்தே ஆழ்ந்து இருக்கும்படி எப்பொழுதும் முயல்வாயாக. ஒரு முறை யாவது ஆன்ம தரிசனம் பெறுவாயாயின், எல்லாவற்றையும் பெறு வாய்; பிறப்பென்னும் தளைகள் எல்லாம் அற்றுப்போம்.

சிஷ்: அத்தகைய நிலையை யான் அடையும்படி தேவரீர் எனக்கு அருள வேண்டும். இன்று தனித்து வரச் சொன்னீர். அப் படியே வந்திருக்கிறேன். ஏதாவது ஒரு வழியில் என்னுடைய மனத்தை நிலைப்படுத்த வேண்டும்.

சுவா: நேரம் இருக்கும் பொழுதெல்லாம் தியானிப்பாயாக. மனம் ஒரு முறை சுழுமுனை மார்க்கத்தை அடைந்துவிடுமாயின் எல்லாம் நன்ருகும். அதன் பின்பு நீ ஒன்றும் அதிகம் செய்ய வேண்டுவதில்லை.

சிஷ்: தேவரீர் பல வகையாக என்னைத் தைரியப்படுத்துகின் றீர். நான் உண்மையைக் காணப் பெறுவேனே ? உண்மை ஞானத்தை அடைந்து மோட்சத்தை அடைவேனே ?

சுவா: ஆம், திண்ணமாகப் புழுமுதல் பிரம்மதேவன் வரை எல்லோரும் மோட்சமடைய, நீ மாத்திரம் அடையாதிருக்கப் போகின்றாயா? இவை எல்லாம் உன் மனத்தின் வலிமையின்மையால் எழுந்தவை. இத்தகைய விஷயங்களை ஒரு பொழுதும் நினைக்காதே. சிரத்தை, வீரியம் இவற்றோடு கூடியிரு. ஆன்ம ஞானத்தை அடை. பிறருடைய நலத்துக்காக உனது ஆவியைத் தியாகஞ் செய். இது நான் விரும்புவது; இதுவே என் ஆசீர்வாதம்.

உணவுப் பொழுதைக் குறிக்கும் மணி அடித்தது; உணவு அருந்தப் போகும்படி சுவாமிஜி சிஷ்யருக்குக் கட்டளையிட்டார். சிஷ்யர் சுவாமிஜியினுடைய அடிகளில் வீழ்ந்து ஆசீர்வதிக்கும்படி வேண்டினார். சுவாமிஜி தமது கரத்தைச் சிஷ்யரது தலையின்மேல் வைத்து ஆசீர்வதித்து, ''எனது ஆசீர்வாதம் உனக்குப் பயன் தருவதாயின், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தமது திருவருளை உனக்குக் கொடுப்பாராக. இதுவே என் ஆசீர்வாதம். இதனினும் வேறான உயர்ந்த ஆசீர்வாதத்தை நான் அறியேன்,'' என்றார்.

உணவருந்திய பிறகு சிஷ்யர் மேன்மாடிக்குப் போகவில்லை. அன்றிரவே சுவாமிஜி உரிய நேரத்தில் தூங்கினார். மறுநாட்காலை, சிஷ்யர் சில தொழில் முறை காரணமாகக் கல்கத்தாவுக்குத் திரும்பிப் போகவேண்டி இருந்தமையினால், மேன்மாடிக்குச் சுவாமிஜியினிடம் வந்தார்.

சுவா: நீ பொழுதோடு உடனே போகிறாயா?

சிஷ்: ஆம், ஐயா.

சுவா: அடுத்த ஞாயிற்றுக்கிழமை மீண்டும் வருவாய் அல்லவா?

சிஷ்: ஆம், நிச்சயமாக வருவேன்.

சுவா: நல்லது; அதோ ஒரு தோணி வருகிறது.

சிஷ்யர் சுவாமிஜியினிடம் விடைபெற்றுக்கொண்டார். தமது இஷ்ட தேவதையாகிய சுவாமிஜியை மானிட உடம்பிலே காணும் கடைசி முறை இது என்பதை அவர் அறியவில்லை. சுவாமிஜி அன் போடும் அவரை நோக்கி, ''ஞாயிற்றுக்கிழமை வா,'' எனக் கூறி விடை கொடுத்தனர். சிஷ்யரும் ''ஆம்; வருகிறேன்,'' என்று சொல்லி மேன்மாடியிலிருந்து கீழிறங்கினார்; தோணிக்காரன் அழைத்தமையினாலே விரைந்து வந்து தோணியிலேறும் பொழுது, சுவாமிஜி மேன்மாடியிலே உலவிக்கொண்டிருப்பதைக் கண்டு வணங்கிவிட்டுத் தோணியிலேறினார்.

இதற்கு ஏழாம் நாள், சுவாமிஜி இவ்வுலக வாழ்க்கையினின்று நீங்கினார். இப்படி நிகழப்போவதைப் பற்றிச் சிஷ்யர் அறியவில்லை. சுவாமிஜி உலக வாழ்வை நீத்ததற்கு இரண்டாம் நாள், சிஷ்யர் அச்செய்தியைக் கேள்வியுற்றுத் திருமடத்துக்கு வந்தார். சுவாமிஜியினுடைய திருமேனியைக் காணும் பாக்கியம் அவருக்குக் கிடைக்கவில்லை.

II

ஸ்ரீ பிரியநாத சிங்கர்

(1)

சம்பாஷணையிலும், சங்கீதம் முதலாகிய பலர் ஒன்று கூடிச் செய்கின்ற பிற கருமங்களிலும் நாம் மிகவும் அடக்கமில்லாம லிருக்கிறோம். ஒவ்வொருவனும் தன்னை முன்னணியில் நிறுத்த முயலுகிறான். புகைவண்டி நிலையங்களிலும், கப்பல் துறைமுகங் களிலும், ஒருவரையொருவர் இடித்துக்கொண்டு நிற்பது இதற்கு இன்னுமோர் உதாரணமாகும். இந்த விஷயமாகச் சுவாமிஜி யின் நண்பர் ஒருவர் ஒரு நாள் திருமடத்திலே சுவாமிஜியோடு உரையாடினார். சுவாமிஜி பின் வருமாறு கூறுவாராயினார்: ''உன் மகன் படிப்பில் ஊக்கமில்லாதிருப்பின், அவனை ராஜசபைக்கு அனுப்பு'' என்று நம்முள்ளே ஒரு பழைய முதுமொழி இருக்கிறது. சபை என்பது சாதாரண மக்களுடைய வீட்டில் நடக்கும் கூட்ட மன்று; சபை என்பது ராஜசபையே. வங்காளத்திலே வேந்தர்கள் வாழ்ந்து வந்த காலத்தில் அவர்கள் காலையிலும் மாலையிலும் சபை கூட்டுவது வழக்கம். காலைப் பொழுதிலே அரசியல் விஷயமான பல காரியங்களையும் ஆராய்வார்கள். அந்தக் காலத்தில் செய்தித் தாள்கள் இல்லை. ஆதலால், அரசன் தன் நகரத்திலுள்ள பெரு மக்களோடு உரையாடி மக்களைப்பற்றியும், அரசியலைப் பற்றியும், அறியவேண்டிய விஷயங்களை அறிந்துகொள்வான். இந்தக் கூட்டங் களுக்குக் குறித்த பெருமக்கள் எல்லோரும் கட்டாயம் வரவேண் டும். வராவிட்டால், 'ஏன் வரவில்லை?' என்று அரசன் விசாரிப் பான். இத்தகைய சபைகளே நமது நாட்டில் மாத்திரமன்றி, ஏனைய நாடுகளிலும் நாகரிக நிலையங்களாய் இருந்தன. இக்காலத் திலும் இந்தியாவின் மேல் பாகங்களில்—சிறப்பாக ராஜபுதனத்தில் —இத்தகைய பழைய சபைகள் கூட்டப்படுகின்றன. இந்த விஷ யத்தில் அந்த நாடுகள் வங்காளத்தைவிடச் சிறப்புடையன.''

வினு: மஹராஜ், அங்ஙனமாயின், நமக்கென்று சொந்த அரசரில்லாத குறையினாலே நம் மக்கள் தங்களுடைய நல்லொழுக் கத்தை இழந்துவிட்டார்களா?

சுவா: தன்னல விருப்பத்தை அடிப்படையாகக் கொண்ட இழிநிலை இது. ஒரு கப்பலில் ஏறும்போது 'அம்மான், உன் அரிய தோல் பத்திரம்!' என்னும் கிராமியப் பழமொழியைச் சிலர் கைக் கொள்ளுகின்றனர். இசையிலும் வேறு ஆடல்களிலும் தங்களது திறமையைக் காட்ட முயலுவது அவர்கள் மனநிலையைப் புலப் படுத்தும். தன்னல மறுப்பிலே சிறிது பயின்றாலன்றி, இது போக

மாட்டாது. தம் மக்களுக்கு நல்லொழுக்கத்தையேனும் பயிற்றி வைக்காத பெற்றோரை இப்பழி சாரும். தன்னல மறுப்பே நாகரிகத்துக்கு ஆதாரமானது.

பெற்றோருடைய அளவு கடந்த கட்டுப்பாட்டினால் நம் சிறுவர்களுக்கு வளர்ச்சி எய்தும் வசதி ஏற்படுவதில்லை. பெற்றோர், சங்கீதம் பாடுவதை முறை கேடான காரியம் என்று எண்ணுகின்றனர். மகனோ, நல்ல சங்கீதத்தைக் கேட்டவுடனே அதைக் கற்க வேண்டுமென்று நினைத்து, வாலிபர் கூட்டத்தை நாடுகிறான். மேலும், புகை குடிப்பது பாவம் என்கிறார்கள். ஆகையால், இளைஞர்கள் வீட்டு வேலைக்காரனோடு கலந்து மறைவாக இப்பழக்கத்தைக் கைக்கொள்ளுகிறார்கள். ஒவ்வோர் இடத்தும் எண்ணிறந்த விருப்பங்கள் நிறைந்திருக்கின்றன. இவற்றை நிறைவேறச் செய்வதற்குத் தக்க மார்க்கங்கள் வேண்டும். நமது நாட்டில் அதற்கு இடமில்லை. இப்பொழுது உள்ள நிலையைத் திருத்த வேண்டுமாயின், பெற்றோரைப் புதிய முறையில் பயிற்ற வேண்டும். இது தான் நமது நிலை. நாகரிகத்தில் நாம் உயர்வாக விருத்தி எய்தவில்லை. அப்படி இருந்தும், நமது கல்வி கற்ற பாபுக்கள் அரசியற் கருமங்களைத் தம் கையிலே கொடுத்துவிடும்படி பிரித்தானியரைக் கேட்கின்றனர். இது எனக்கு அழுகையையும் நகையையும் உண்டு பண்ணுகின்றது. தன்னைத்தானே அடக்கிக் கீழ்ப்படிந்து தொண்டு செய்வதாகிய வீரவாழ்க்கை எங்கே போய்விட்டது? போர்க்குச் செல்லும் வீரன் தன்னைத் தியாகம் செய்கிறானேயன்றி, தன்னலத்தைக் கருதுகிறான் அல்லன். பிறருடைய இதயத்தின் மீதும், வாழ்வின் மீதும் ஆணை செலுத்த வேண்டும் எனில், முதலிலே கட்டளைக்கு இணங்கி முன்னேறிச் சென்று தனது உயிரைக் கொடுக்கத் தயாராயிருக்க வேண்டும்; முதலிலே தன்னைத் தியாகம் பண்ணவேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய தொண்டர் ஒருவர் தாம் எழுதிய ஒரு நூலிலே ஸ்ரீராமகிருஷ்ணரை அவதார புருஷராக மதிக்காதவர் மீது சில பழிமொழிகளைச் சுமத்தி எழுதியிருந்தார். அங்ஙனம் எழுதியவரைச் சுவாமிஜி தம் முன் அழைத்து ஆத்திரத்தோடு பின் வருமாறு சொன்னார்:

''மற்றவர்களை அவ்வண்ணம் நிந்தித்து எழுதுதற்கு உமக்கு என்ன உரிமை உண்டு? உம் ஆண்டவனிடத்திலே அவர்கள் நம்பிக்கை வைக்காவிட்டால் என்ன? நாம் ஒரு சமயத்தைப் படைத்திருக்கிறோமா? இராமகிருஷ்ணரை வழிபடாதவர்களை நம் பகைவர் என்று கருதுவதற்கு நாம் என்ன, இராமகிருஷ்ண மதத்தவர்களா? உம் அபிமான புத்தியினாலே அவரைத் தாழ்த்திச் சிறுமைப்படுத்திவிட்டீர். உம் பகவான் கடவுளாயிருந்தால், அவரை யாவர் எப்பேர் கொண்டழைத்தாலும் அவை எல்லாம் அவருக்குப்

பூசனையேயாகும்.—மற்றவர்களை நிந்திப்பதற்கு நீர் யார்? மற்றவர்களை அவமதித்தால், உம் சொல்லுக்கு அவர்கள் செவி சாய்ப்பார் என்று நினைக்கின்றீரா? எவ்வளவு மடமை! உம்மைத் தியாகம் பண்ணினால் அன்றி மற்றவர்களுடைய இதயத்தை நீர் வெல்ல முடியாது. அவர்கள் ஏன் உம் சொல்லைக் கேட்கவேண்டும்?''

சிறிது பொழுதில் சுவாமிஜி ஆறுதலான நிலையிலிருந்து கவலையோடு பின் வருமாறு கூறினார்:

''என் அரிய நண்பரே, வீரத்தனம் இல்லாதவன் ஆண்டவனிடத்துச் சிரத்தையும் சரணாகதியும் கொள்ள முடியுமா? ஒருவனுடைய இதயத்திலிருந்து பொறாமையும் பகையும் கழியவேண்டுமெனின், அவன் உண்மையான வீரனாக வேண்டும். இவற்றிலிருந்து நீங்கினாலன்றி உண்மை நாகரிகம் எப்படி எய்தும்? இந்த நாட்டிலே ஆண்மையோடு கூடிய வீரத்தை எவ்விடத்தும் காணக்கூடாமலிருக்கிறது. பல இடத்திலும் தேடினேன்; ஒரே ஓர் உதாரணத்தைக் கண்டேன்.''

வினா: சுவாமிஜி, அதை எங்குக் கண்டீர்கள்?

சுவா: கிரீஷ் சந்திரரிடத்தில் மாத்திரம் உண்மைச் சரணாகதியைக் கண்டேன். ஆண்டவனுடைய தொண்டனுக்குரிய உண்மை ஆர்வம் அவரிடத்தில் காணப்பட்டது. அவர் எப்பொழுதும் தம்மைத் தியாகம் பண்ண ஆயத்தமாயிருந்ததாலன்றோ, ஸ்ரீராமகிருஷ்ணர் அவருடைய பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டார்? அவரைப் போல் மற்றொருவரை நான் கண்டதில்லை. சரணாகதி என்னும் பாடத்தை நான் அவரிடத்தில் பயின்றுகொண்டேன்.

இப்படிக் கூறியபிறகு சுவாமிஜி அவரைத் துதித்தற்பொருட்டுத் தம் கைகளைத் தம் சென்னிமேல் தூக்கினார்.

(2)

சுவாமிஜி இரண்டாம் முறை இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப்போவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவர் தம் நண்பர் ஒருவரைப் பார்க்கக் கல்க்த்தாவுக்குப் போய்த் திரும்பி வரும்பொழுது பாக்பஜாரிலே பலராம் பாபுவினுடைய வீட்டிலே சில நிமிஷம் தங்கவேண்டியிருந்தது. திருமடத்துக்குத் தம்மோடு செல்வதற்கு மற்றொரு நண்பரை அழைத்து வரும்படி ஓர் ஆளை அனுப்பினார். நண்பர் வந்ததும் அவருக்கும் சுவாமிஜிக்கும் இடையே பின் வரும் சம்பாஷணை நிகழ்ந்தது:

சுவா: இன்று மிக விசித்திரமான ஒரு காரியம் நேர்ந்தது. நான் ஒரு நண்பருடைய வீட்டுக்குப் போயிருந்தேன். அவர் ஓர் ஓவியம் எழுதி வைத்திருந்தார். குருக்ஷேத்திரத்திலே போர்க்களத்திலே இரதத்தின்மீது அமர்ந்து கையிலே குதிரையின் கடி

வாள வார்களைப் பிடித்துக்கொண்டிருக்கிற ஸ்ரீகிருஷ்ணர் அருச்சுனனை நோக்கிக் கீதையை உபதேசிக்கின்ற வண்ணமாக அந்தப் படம் எழுதப்பட்டிருந்தது. அப்படத்தை எனக்குக் காட்டி நான் அதைப்பற்றி என்ன நினைக்கிறேன் என அந்த நண்பர் கேட்டார். 'ஓரளவுக்குக் குற்றமில்லை,' என்றேன். படத்திலுள்ள வழுக்களைப் பற்றி எனது கருத்தைச் சொல்ல வேண்டுமென்று அவர் வருந்திக் கேட்டபடியால், நான் மறு மொழியாக, ''படத்திலே எனது மனத்துக்குப் பிடித்தது யாதொன்றுமில்லை; முதலிலே ஸ்ரீகிருஷ்ணர் காலத்திலே இருந்த இரதம் இக்காலத்துக் கோயில் சிகரம் போன்ற இரதம் அன்று. மேலும், ஸ்ரீகிருஷ்ணருடைய உருவத்திலே சரியான மெய்ப்பாடு தோன்றவில்லை,'' என்றேன்.

வினு: கோயிற்சிகரம் போன்ற இரதம் அக்காலத்தில் வழங்கப் படவில்லையா?

சுவா: புத்தர் காலந்தொட்டு நமது நாட்டிலே யாவற்றிலும் பெரிய நிலை குலைவு உண்டு என்பதை நீ அறியாயா? கோயிற்சிகரம் போன்ற இரதங்களில் அரசர்கள் ஒரு பொழுதும் போர்க்களத்துக்குச் செல்லவில்லை. பழைய இரதங்களைப்போன்ற இரதங்கள் இற்றை நாள் வரையும் ராஜபுதனத்தில் இருக்கின்றன. கிரேக்க தேசத்துப் புராணக் கதைகளிலே எழுதப்பட்டிருக்கின்ற இரதங்களை நீ பார்த்ததுண்டா? அவற்றுக்கு இரண்டு சக்கரங்கள் உண்டு. ஏறும்பொழுது பின் புறமாக ஏறவேண்டும். அத்தகைய இரதங்கள் நம்மிடத்திலிருந்தன. முக்கியமான அமிசங்களை அகற்றிவிட்டு ஒரு படத்தை எழுதுவதில் உள்ள நன்மை என்ன? செவ்வனே கற்று ஆராய்ந்து குறித்த காலத்துக்கு உரிய பொருள்களை இருந்த மாதிரியே எடுத்துக் காட்டினுல், சரித்திர சம்பந்தமான படம் உயர் தரத்ததாகக் கொள்ளப்படும். உண்மையைச் சித்திரிக்க வேண்டும். அல்லாவிடில், படத்துக்கு மதிப்பில்லை. இந்நாட்களில் சித்திரம் கற்கப் போகின்ற மாணவர் பலர் பாடசாலையில் சித்தி பெருதவராய் ஒன்றுக்கும் உதவாதவரென வீட்டிலுள்ளவர்களால் விலக்கப்பட்டவராவர். இவர்கள் சிறப்புற்ற ஓவியத்தைத் தீட்டுவார்களென எதிர்பார்க்கலாமா? ஒரு நல்ல நாடகத்தை எழுதுவதற்கு எவ்வளவு ஆற்றல் வேண்டுமோ, அவ்வளவு ஆற்றல் ஒரு நல்ல ஓவியத்தை எழுதுவதற்கும் வேண்டும்.

வினு: குறித்த படத்திலே ஸ்ரீகிருஷ்ணருடைய வடிவத்தை எவ்வாறு சித்திரிக்க வேண்டும்?

சுவா: கீதையே உருவெடுத்தாலனைய ஸ்ரீகிருஷ்ணருடைய படத்தைச் சித்திரிக்கும் பொழுது கீதையினுடைய சிறந்த கருத்து அவருடைய வடிவத்திலே மிளிரும்படி எழுதவேண்டும். மனச்சோர்வினுலும், கோழைத்தனத்தினுலும் உயிர் சாம்புகின்ற அருச்சுன

னுக்கு அறநெறியைப் போதிக்கின்ற உருவம் அந்த அறநெறியின் வடிவமாகும்.

இங்ஙனம் கூறிச் சுவாமிஜி ஸ்ரீகிருஷ்ணருடைய நிலையைத் தம்மிடத்தே காட்டுவாராய்ப் பின் வருமாறு கூறினார்:

''இதோ பார்! குதிரையின் கடிவாளவார்களை இப்படிப் பிடிக்க வேண்டும்; வலிந்திழுத்துப் பிடித்திருப்பதினாலே குதிரைகள் பின்னங்காலில் மாத்திரம் நிற்கின்றன. முன்னங்கால்கள் காற்றோடு போரிடுவது போல அசைய, வாய்கள் திறந்த வண்ணம் இருக்கின்றன. இதனால், ஸ்ரீகிருஷ்ணருடைய வடிவத்திலே வினைமாட்சியோடு கூடிய தோற்றமானது காணப்படும். திசையனைத்தும் புகழ்படைத்த நண்பன், வில்லையும் அம்பறாத் தூணியையும் எறிந்துவிட்டு, இரு சேனைகளுக்கும் நடுவிலே நின்ற இரதத்தின்மீது கோழை நெஞ்சனைப்போலத் தேரிலே சாய்ந்து கிடக்கிறான். ஒரு கையிலே சாட்டையைப் பிடித்திருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணர் மற்றக் கையினாலே கடிவாளவார்களை இழுத்துக்கொண்டு பேரன்பினோடும் இரக்கத்தினோடும் ஒளி விடுகின்ற சிறு குழந்தையின் முகம் போன்ற முகத்தினை அருச்சுனன் பக்கமாகத் திருப்பி, ஆறுதலோடு கூடிய மாசற்ற பார்வையோடு தம் அரிய நண்பனுக்குக் கீதையின் உண்மையை எடுத்து இயம்புகின்றார். இத்தகைய படம் கீதாசாரியரைப்பற்றி என்ன எண்ணத்தைத் தருகின்றது என்பதைச் சொல்லுவாயாக.''

நண்பர்: உறுதியோடும் அடக்கத்தோடும் கூடிய வினைமாட்சியைக் காட்டுகிறது.

சுவா: ஆம், அதுவே! உடல் முழுவதிலும் தொழில் செய்தல் நிறைந்திருக்கின்றது. முகத்திலோ, நீல ஆகாயத்தைப்போல ஆழ்ந்த அமைதியும் நிலை கலங்காமையும் காணப்படுகின்றன. கீதைக்கு நடுக் கருத்தாகப் பொருந்தியிருக்கின்ற கொள்கையும் இதுவே; எல்லாக் கருமங்களிலும் அமைதியாகவும் உறுதியாகவும் நிலைப்பெற்றிருந்து, உடலும் மனமும் ஆவியும் ஆண்டவனுடைய திருவடிகளை அடைந்து நிற்கச் செய்வது.

கர்மண் யகர்மய: பஸ்யேத் அகர்மணிச கர்மய:
ஸ புத்திமான் மனுஷ்யேஷு ஸயுக்த: க்ருத்ஸ்ந கர்மக்ருத்

—கீதை, 4: 18

[''செயல் செய்யும்பொழுது மனத்தை அமைதி நிலையில் வைத்திருப்பவனும், புறத்தே வெளிப்பட்டுத் தோன்றுகின்ற செயல் ஒன்றேனும் செய்யாதிருக்கும் நிலையில் பிரம்மத்தைத் தியானிக்கின்ற இடையறாத செயலினைச் செய்துகொண்டிருப்பவனும் ஆகிய பேரறிஞனே யோகியெனப்படுவான். அவனே செயலிலும் தீரனாவான்.'']

இந்தக் கணத்திலே தோணியை ஏற்பாடு செய்யப் போயிருந்தவர் திரும்பி வந்து அது ஆயத்தமாயிருக்கிறதென்று சொல்ல, சுவாமிஜி தம் நண்பரை நோக்கி, ''வா; இப்பொழுது மடத்துக்குப் போவோம்; நீ என்னோடு போவதாக வீட்டிலே சொல்லிவிட்டு வந்திருக்கிறாய் என்றெண்ணுகிறேன்,'' என்றார்.

தோணி ஏற வழி நடந்து செல்லும்பொழுதே இருவரும் தொடர்ந்து உரையாடிக்கொண்டு போயினர்.

சுவா: வேலை எல்லையற்ற வேலை; பயன் கருதாத வேலை; உள்ளமும் ஆவியும் ஆண்டவனுடைய திருவடித் தாமரைகளிலே அசைவற்றிருப்பது.—இந்த எண்ணத்தை எல்லோருக்கும் போதிக்க வேண்டும்.

விஞ: இது கருமயோகமல்லவா ?

சுவா: ஆம், இது கருமயோகந்தான்—ஆனால், சமய சாதனை இன்றி இத்தகைய கருமயோகத்தை உன்னால் செய்ய முடியாது. நால்வகை யோகத்தையும் சமரசப்படுத்த வேண்டும்—அல்லாவிட்டால், இதயத்தை ஆண்டவனிடத்திலே மாறாது வைத்திருப்பது எங்ஙனம் கைகூடும் ?

விஞ: வேதத்திற் குறிப்பிட்ட பாகங்களையும், ஏனைய சமயச் சடங்குகளையும் செய்வதுதான் நற்கருமமாகுமென்றும், ஏனைய தொழில்களைப் பயனற்றவையென்றும் கீதை போதிக்கிறதென்பது பொதுவான அபிப்பிராயம் அல்லவா ?

சுவா: நல்லது; ஆனால், எல்லாவற்றையும் தழுவியே பேச வேண்டும். நீ விடும் ஒவ்வொரு மூச்சுக்கும், நினைக்கும் ஒவ்வொரு நினைவுக்கும் மற்றக் கருமங்களுக்கும் யார் பொறுப்பாளி? நீயல்லவா ?

நண்பர்: 'ஆம்' என்றும், 'இல்லை' என்றும் சொல்லலாம். இதனைத் தெளிவாகச் சொல்ல என்னால் முடியவில்லை. மனிதன் கருவி; பகவான் கருத்தா; ஆண்டவனுடைய சித்தத்தினால் வழி நடத்தப்படும் பொழுது நான் என் கருமங்களுக்குப் பொறுப்பாளியல்ல.

சுவா: மிகவுயர்ந்த நிலையிலிருந்துதான் அப்படிச் சொல்லுதல் கூடும். தொழில் செய்வதனாலே மனம் தூய்மை அடைந்து, எல்லா வேலைகளையும் ஆண்டவனே செய்விக்கிறான் என அறியும் பொழுது அப்படிப் பேசும் உரிமை உனக்கு உண்டு. அல்லாவிட்டால் அனைத்தும் வீண் பேச்சே ?

விஞ: எல்லாக் கருமங்களையும் ஆண்டவனே செய்கிறான் என்று தருக்க முறையிலே தீர்மானித்திருந்தால், அது பொருத்தமாகாதா ?

சுவா: அவ்வகையான நிச்சயம் வந்தால், அது பொருத்தமாயிருக்கலாம். ஆனால், அது ஒரு கணத்தில் அழிந்துவிடும். அதன்

பின் நிலைபெற்றிராது. நீ நாள்தோறும் நடத்திவருகின்ற வாழ்க்கையிலே நீதான் கருத்தா என்னும் அகங்கார எண்ணம் செறிந்திருக்கிறதா அன்று என்பதை நன்றாகச் சிந்தித்துப் பார். ஆண்டவனே உன்னைக்கொண்டு வேலை செய்விக்கிறான் என்பதை நீ எவ்வளவு நேரம் நினைத்திருக்கிறாய்? ஆனால், மீண்டும் மீண்டும் உள்ளத்தினுள்ளே இவ்வண்ணம் துருவி ஆராய்ந்தால் 'நான்' என்னும் எண்ணம் மறைந்துபோம். அதனிடத்தில் ஆண்டவன் நிலைபெற்றிருப்பான். அப்பொழுது ஆண்டவனே உள்ளிருந்து செயல்களை எல்லாம் செய்விக்கிறான் என்று தருக்க முறையில் நீ கூறுதல் கூடும். ஆனால், என் நண்பனே, 'நான்' என்னும் எண்ணம் உன்னுடைய சிந்தை முழுவதையும் நிறைத்திருக்கும் பொழுது ஆண்டவன் வந்து உறைய இடம் எங்கே? இத்தகைய நிலையில் ஆண்டவன் உன்னிடம் தோன்றாமலிருக்கிறான்.

வினா: தீங்கான இயல்பையும் எனக்குத் தந்தவன் அவன் தானே?

சுவா: இல்லை; ஒரு பொழுதும் இல்லை. அங்ஙனம் நினைப்பது பெரிய தேவ நிந்தையாகும். உன்னை அவன் தீய வழியிற் செலுத்தவில்லை. நுகர்ச்சிகளின்மேலுள்ள விருப்பத்தினாலே நீயே தீமையைப் படைத்துக்கொள்ளுகிறாய். எல்லாவற்றையும் ஆண்டவனே செய்விக்கிறான் என்று சொல்லிக்கொண்டு, பிழை புரிதலிலே நிலைபெற்றிருப்பவன் நாசமடைகின்றான். ஒருவன் தன்னைத் தானே வஞ்சிப்பதற்குப் பிறப்பிடம் இதுவேயாகும். ஒரு நற்கருமத்தைச் செய்து முடித்த பின்னர் ஒரு வகை உள்ளக் கிளர்ச்சி இருப்பதை நீ உணர்ந்ததில்லையா? நன்மை செய்வதற்கு உரிய பெருமையை நீ உன்னைச் சார்ந்ததென்று கொள்ளுகிறாய்.—இது மனித இயற்கை. ஒருவன் நற்கிரியைகளுக்கு உரிய பெருமையைத் தான் ஏற்றுக்கொண்டு, தீமைக்குரிய குற்றத்தை ஆண்டவன் மேலே சுமத்துவது எவ்வளவு பொருந்தாக் கொள்கை! இது மிகக் கெடுதியான நிலை—கீதையையும் வேதாந்தத்தையும் செவ்வையாக உணர்ந்துகொள்ளாமையினால் ஏற்படுவது. இந்த எண்ணத்தை அகற்றிவிடுக. நன்மை அனைத்தும் ஆண்டவனாலே ஆகிறதென்றும், தீச்செயல்களுக்கு நீயே பொறுப்பாளி என்றும் கொள்ளுவது பொருத்தமாகும். இதனால், பத்தி சிரத்தை உண்டாகும். ஆண்டவனுடைய அருள் இதனால் வெளிப்பட்டுத் தோன்றும். உன்னை யாரும் படைக்கவில்லை.. நீயே உன்னைப் படைத்துக்கொண்டாய். இப்படி அறிவது விவேகம்; இது வேதாந்தம். ஆயினும், மெய்யுணர்வை அடைவதற்கு முன்பு ஒருவன் இதனை உணர்ந்துகொள்ள இயலுவதில்லை. ஆதலாலே, சாதகன் துவைத நிலையிலே ஆரம்பிக்க வேண்டும். நன்மை எல்லாம் ஆண்டவனால் செய்யப்படுகின்றன என்றும், தீமைக்குத் தானே பொறுப்பாளி என்றும் கொள்ள

வேண்டும். சித்தத்தைத் தூய்மைப்படுத்துவதற்கு இதுவே எளிதான நெறி. வைணவரிடையே துவைத மார்க்கம் வலியுறுதலைக் காணலாம். அத்வைத எண்ணங்களை முதலிலே கொள்ளுவது கடினம். துவைத நிலை படிப்படியாக அத்வைத உணர்ச்சியைத் தரும்.

உளமும் உரையும் முரண்பட்டிருந்தால் அது எப்பொழுதும் கெடுதியைத் தரும். தன்னைத்தானே வஞ்சிக்காதிருந்தால், அஃதாவது, ஒருவன் தீயசெயல்களும் ஆண்டவனுடைய ஏவுதலினாலேயே நடக்கின்றன என்று உண்மையாகவே எண்ணினால், அவன் இழிந்த செய்கைகளிலே நிலைபெற்றிக்கமாட்டான் என்பதை முற்றிலும் நம்புவாயாக. மனத்தின் அழுக்கனைத்தும் விரைவிலே அழிந்து போகின்றன. சமய நூல்களை எழுதிய பழைய ஆசிரியர்கள் இதனை நன்றாக அறிந்திருந்தார்கள். பௌத்தர்களின் இன்னல்களினால் வைதிகக் கிரியைகள் இரகசியமாகச் செய்யப்பட்ட காலத் தொடக்கத்திலேதான் தாந்திரிக வழிபாடு உற்பத்தியாகியதென நான் நினைக்கின்றேன். ஒரே தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்குக் கிரியைகளைச் செய்யும் வசதி அக்காலத்து மக்களுக்கு இருக்கவில்லை. ஆதலாலே, களிமண்ணினால் உருவத்தைச் செய்து இரவிலே வழிபட்டு எல்லாக் கிரியைகளையும் முடித்துக்கொண்டு, ஒரு வகை அடையாளமும் விடாமல் உருவத்தையும் கங்கையில் எறிந்துவிடுவார்கள். இரவில் நடக்கும் பூஜை ஒவ்வொரு வீட்டிலும் நடைபெற்றது. அக்காலத்து மக்களுடைய மனநிலை பல நுகர்ச்சிப் பொருள்களின்மீது தாவிச் சென்றுகொண்டிருந்தது. 'வீட்டுக்கு வருவதற்குக் கொல்லைப்புறத்தாலும் வழியுண்டு,' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லுவது போல, அக்காலத்துச் சமயாசாரியர்கள் அக்காலத்து மக்களுடைய மனநிலையை அறிந்து தீய சிந்தையினாலே ஒரு சமயக் கிரியையும் செய்யாதிருந்தோருக்கு நல்வழிப்படுவதற்குரிய ஒரு மார்க்கத்தினையும் அமைத்தார்கள். இதற்காகவே நூதனமான தாந்திரிகக் கிரியைகள் அமைக்கப்பட்டன.

வினா: அவர்கள் தீய கருமங்களை நல்லன என்று எண்ணிக்கொண்டு செய்து வந்தார்கள். இதனால் அவர்களுடைய தீமை நீங்கியதெப்படி?

சுவா: ஆண்டவனை அடைதல் கருதி அவற்றைச் செய்தார்கள்; ஆதலாலே, தங்களுடைய ஒழுக்கத்துக்கு வேறுபட்ட ஒரு மார்க்கத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

வினா: இது உள்ளபடி முடிவது உண்டா?

சுவா: நோக்கம் சரியாயிருக்க வேண்டும். அப்படி இருந்தால், எது அவர்களை நற்பயன் அடையாவண்ணம் தடுக்கும்?

வினா: அத்தகைய மார்க்கத்தினாலே அநேகர் கள்ளுண்ணல்,

இறைச்சி புசித்தல் முதலிய பல வலைகளிலே சிக்கிக்கொள்ளுகிறார்கள்.

சுவா: இதற்காகவே ஸ்ரீராமகிருஷ்ணர் திருவவதாரஞ் செய்தார். அந்த வகையாகத் தந்திரத்தைப் பயில்கிற காலம் போய்விட்டது. அவரும் தந்திரத்தைப் பயின்றார். ஆனால், அந்த முறையிலன்று. மது அருந்த வேண்டுமென்னும் விதியுள்ளவிடத்து ஒரு துளியை மாத்திரம் தொட்டு நெற்றியில் வைத்துக்கொள்ளுவார்; தாந்திரிக முறையான வழிபாடு வழுக்கும் தரையை நிகர்த்தது. இந்த மாகாணத்திலே தந்திரம் போதிய அளவுக்கு இருந்துவிட்டது. இனி நாம் அதற்கு அப்பாற் செல்லவேண்டும்; வேதங்களைப் படிக்க வேண்டும்; நால் வகை யோகங்களுக்கும் சமரசம் காண வேண்டும்; புலன்களை அடக்க வேண்டும்.

வினா: நால்வகை யோகங்களுக்கும் சமரசம் என்பதனால் நீங்கள் கருதுவது என்ன ?

சுவா: நித்தியாநித்திய வஸ்து விவேகம், வைராக்கியம், பத்தி, கருமம் ஆகியவைதாம் யோக சாதனைகளாகும். இவற்றோடு பெண்களிடத்து வணக்கமாக நடந்துகொள்ளுதலும் வேண்டும்.

வினா: பெண்களிடத்து வணக்கமாக நடந்துகொள்ளுதல் எப்படி ?

சுவா: அவர்கள் உலக அன்னையின் உருவங்கள். உலக அன்னையின் உண்மையான வழிபாடு தொடங்கும் பொழுதுதான் இந்தியாவுக்கு நன்மை ஏற்படும். ஒவ்வொரு மனிதனும் உலக அன்னையின் பலிபீடத்திலே தன்னை ஒரு பலியாகக் கருதித் தன்னை அர்ப்பணம் செய்தல் வேண்டும்.

வினா: இளைஞராயிருக்கும் பொழுது தேவரீரை நோக்கி யாராவது மணம் செய்துகொள்ளும்படி சொன்னால் அதற்கு மறுமொழியாக, ''நான் செய்யமாட்டேன்; நான் எத்தன்மையனாக வருவேன் என்பதைப் பின்பு காணுங்கள்,'' என்று சொல்வதுண்டு. தேவரீருடைய வார்த்தைகள் இப்பொழுது நிறைவேறி இருக்கின்றன.

சுவா: ஆம், என்னருமைச் சகோதரனே, நான் உணவின்றி இருந்தேன்; கடினமாக வேலை செய்தேன். ஆ ! எவ்வளவு அபாரமான வேலை ! இன்று அமெரிக்கர்கள் எனக்கு இந்த நேர்த்தியான கட்டிலை அன்பின் மேலீட்டினாலே தந்திருக்கிறார்கள். எனக்கு உண்பதற்கும் சிறிது உண்டு. ஆனால், ஐயோ ! உடல் நுகர்ச்சிகளைச் சிறிதேனும் பெறுவதற்கு எனக்கு விதியில்லை—மெத்தையிற் படுத்தால், எனக்குநோய் அதிகரிக்கின்றது. மூச்சு விட இயலாத மாதிரி இருக்கின்றது; ஆறுதலுக்காக நிலத்திலே இறங்கிப் படுக்க வேண்டியிருக்கிறது.

(3)

எங்கள் வீடு சுவாமிஜியினுடைய வீட்டுக்கு அருகிலிருந்தது. அங்கு அவருடன் நானும் இளம்பிராயத்தில் விளையாடுவதுண்டு. இளமைதொட்டு நான் அவர்மீது தனிப்பட்ட அன்புடையவனுயிருந்தேன். அவர் ஒரு பெரிய மனிதராவார் என்னும் உண்மையான நம்பிக்கை எனக்கு எப்பொழுதுமிருந்தது. அவர் துறவு பூண்ட நாளில் உயர்வும், பெருமையும் அடையத்தக்க வாழ்வு வீணுய்ப் போயிற்றே என்றெண்ணினேன்.

பின்னுளில், அவர் அமெரிக்காவுக்குப் போயிருந்த காலத்தில் சிக்காகோப் பல்சமய மன்றத்திலும் பிறவிடங்களிலும் செய்த சொற்பொழிவுகளைப் பற்றிப் பத்திரிகைகளிற் படித்தறிந்தேன். நெருப்பைத் துணியால் மறைத்தல் இயலுமோ? சிறு தீ, பெருஞ் சுவாலையாயிற்று; அரும்பும், பல ஆண்டுகளுக்குப் பிறகு நறு மலராய் மலர்ந்தது.

அதன்பின் சுவாமிஜி இந்தியாவுக்கு வந்துவிட்டாரென்றும், சென்னையிற் சிறந்த சொற்பொழிவுகள் செய்கிருரென்றும் அறிந்தேன். அவற்றைப் படித்துப் பார்த்து இந்து மதத்தில் நிறைந்திருக்கிற உயர் தனிக் கொள்கைகளைக் கண்டு மிகவும் வியந்தேன். அக்கொள்கைகளை மிகத் தெளிவாக விளக்கிய சுவாமிகளுடைய சொல்வன்மையை நோக்கி வியப்பு எய்தினேன். 'ஆ! என்ன ஆற்றல்! இவர் என்ன தேவரா, அன்றேல் மனிதர்தாமா' என்றெண்ணினேன்.

சுவாமிஜி கல்கத்தாவுக்கு வந்த போது நிறைந்த குதூகலமாயிருந்தது. காசிப்பூர்க் கங்கைக் கரையிற் சிலருடைய பூஞ்சோலை வீட்டுக்கு நாங்களெல்லோரும் போயிருந்தோம். சில நாட்கள் கழிந்த பின், ராஜா ராதாகாந்த தேவருடைய வீட்டிலே மங்கள வாழ்த்துப் பத்திரம் படிப்பதற்காக ஒருங்கு திரண்ட திரளான மக்களுக்குக் 'கல்கத்தாச்சிறுவர்' உள்ளத்துக்குக் கிளர்ச்சிதரும் உயர்ந்த உபந்நியாசஞ் செய்தார். அவருடைய சொல் வன்மையை முதன்முதலாகக் கேட்ட கல்கத்தா மக்கள் அதிசயித்துப் பேருவகைக் கடலில் ஆழ்ந்தார்கள். இவையெல்லாம் யாவருமறிந்த விஷயம்.

சுவாமிஜி கல்கத்தாவுக்கு வந்த நாட்களில் அவரை ஒரு நாளைக்குத் தனித்துக் காணவேண்டுமென்றும் பிள்ளைப் பருவத்திற் கலந்து பேசியது போலக் கலந்து பேசவேண்டுமென்றும் விரும்பினேன். ஆனுல், இடைவிடாமல் வருவாரும் போவாருமாகப் பல திறப்பட்ட மக்கள் நிறைந்திருந்தமையால், வசதி ஏற்படவில்லை. பல நாட்களாகக் காத்திருந்த பின் ஒரு நாள் கங்கைக் கரையிலுள்ள தோட்டத்திற் சந்திக்கும் பேறு கிடைத்தது. இளமையில் தமது விளையாட்

டுத் தோழனோடு உரையாடிய வண்ணமே இப்பொழுதும் உரையாடி னர். சிறிது நேரத்துக்குள் ஒரு தூதன் வந்து, யாரோ அழைத்து வரச் சொன்னதாகச் சொன்னான். அவனை நோக்கி, "மகனே, சற்று நேரம் என்னை இங்கிருக்கவிடு. இவர் என் பாலிய நண்பர்; இவரோடு சிறிது நேரம் பேசவும், சுத்தக் காற்று வீசுகிற இவ்விடத் தில் நிற்கவும் விரும்புகிறேன். வந்தவர்களை உபசரித்து, இன்சொற் கூறி, ஆசனமளித்து, தாம்பூலம் முதலியன கொடுத்துச் சற்றுப் பொறுத்திருக்கும்படி சொல்," என்றனர். அவன் போன பின்னர், நான் சுவாமிஜியைப் பார்த்து, "சுவாமிஜி, நீங்கள் சாதுவாயிற்றே! பஞ்சம் நிறைந்த இத்தேசத்தில் உங்கள் வரவேற்பு உபசாரத்துக் காகப் பொருள் சேர்க்கப்பட்டதே! உபசாரத்தை வெறுத்து அந்த பொருளைப் பஞ்சநிதிக்குக் கொடுத்துவிடும்படி நீங்கள் சொல்லி யிருக்கலாகாதா? ஏன் அப்படிச் செய்யவில்லை?" என்றேன்.

சுவா: ஏனெனில், என்னைச் சார்பாகக் கொண்டு ஊரில் ஒரு பெருங்கிளர்ச்சி உண்டாக வேண்டுமென்று விரும்பினேன். இப் படிப்பட்ட கிளர்ச்சிகள் மூலமாக மக்கள் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண ருடைய திருப்பெயரைக் கேட்கவும் அவருடைய தொண்டினைச் செய் வதில் ஆர்வமுறவும் வழி ஏற்படுகின்றதல்லவா? அவரைப்பற்றி அறிவதற்கு மக்களுடைய உள்ளத்தில் எவ்வளவு ஆவலுண்டா யிருக்கிறது பார்த்தாயா? இது முதலாகப் பகவான் உலகுக்கு வந்த நோக்கத்தை மக்கள் ஆராய்ந்தறிவார்கள். அதனால், நாட்டுக்கு மிக்க நன்மையுண்டாகும். உலகை நன்னிலைப்படுத்துவதற்காக வந்த அவரை அறியாதிருக்கும் வரையில் மக்களுக்கு எங்ஙனம் நன் மையுண்டாகும்?

ஸ்ரீராமகிருஷ்ண பகவான் உண்மையில் யார் என்பதை மக்கள் அறிந்துகொள்வார்களாயின், எல்லா நற்குணங்களும் பொருந்திய ஆண்மக்களாவார்கள். தைரியம் பொருந்திய உண்மை ஆடவர் இருக்கிற நாட்டில் பஞ்சமும் தரித்திரமும் ஒரு போதும் ஏற்படா. இவ்வாறு சிந்தித்தமையினாற்றான் என்னைச் சார்பாகக் கொண்டு கல்கத்தாவில் ஒரு கிளர்ச்சி உண்டாக வேண்டுமென்று விரும்பினேன்; அல்லாவிடில், இத் தனைஆடம்பரங்கள் எதற்காக? நான் முன்னாளில் உன் வீட்டில் உன்னோடு கூடி விளையாடிய காலத் திலிருந்ததைப் போலவேதான் இப்பொழுதும் இருக்கிறேன். ஏன்? என்னிடத்தில் ஏதாவது வேறுபாடு தோன்றுகிறதா? சொல்.

"வேறுபாடு இல்லை என்று என்னுடைய வாய் சொல்லிய தெனினும், உள்ளமோ, நீர் இப்பொழுது தெய்வத் தன்மை பொருந்தியிருக்கிறீர் என்று உரைக்கின்றது."

சுவாமிஜி மேலுஞ்சொல்லுவார்: "பஞ்சம் நமது நாட்டில் நீங்காப் பிணியாகக் குடிகொண்டிருக்கிறதே! இப்படிப் பிறநாட்டி லிருக்கிறதா? இல்லை. ஏனெனில், பிற நாடுகளில் மனிதர்கள் இருக்

கிறார்கள்; நமது நாட்டிலோ, மனிதர் தமது மனிதத் தன்மையை இழந்து கட்டை போல ஆய்விட்டார்கள். மக்கள் முதலில் ஸ்ரீராம கிருஷ்ண தேவருடைய துறவினையுந் தமக்கென வாழாத் தன்மையினையும் அறிந்துகொள்ளட்டும். அப்படியறிந்துகொண்ட பின், நாட்டிலுள்ள கேட்டினை ஒழிக்கத் தாங்களே முயலுவார்கள். இந்த வழியிலும் நான் சில முயற்சி செய்ய எண்ணியிருக்கிறேன். அதை நீ நாள் செல்லச் செல்லக் கண்டறிவாய்.

நான்: நல்லது. பகவானுடைய பெயர் விளங்கப் பல சொற்பொழிவுகளை ஆற்றப் போகிறீர்களென்று எண்ணுகிறேன்.

சுவா: என்ன மூடத்தனம்! அப்படி ஒரு காரியமுமில்லை. பகவானுடைய பெயர் விளங்க, வேண்டிய முயற்சி செய்திருக்கிறேன். செய்யாமல் விட்டதொன்றுமில்லை. பிரசங்கங்களால் இந்த நாட்டில் என்ன பயன் விளையப் போகிறது! கல்வி கற்றவர்கள் வந்து கேட்டு 'நன்றாயிருக்கின்றது!' என்று ஆரவாரம் செய்துகொண்டு போவார்கள்; வீடு போய்ச் சேர்ந்ததும், உணவோடு அறிவுரையும் மறைந்து போய்விடும். அவ்வளவுதான்! துருப்பிடித்திருக்கிற இரும்புத்துண்டைச் சம்மட்டி கொண்டடித்தால் ஆவதென்ன? வீணில் துண்டு துண்டாய்ச் சிதறிவிடும். முதலிற் பழுக்கக் காய்ச்ச வேண்டும்; பின்பு எந்தப் பக்கத்துக்கு வளைக்கவேண்டுமோ அந்தப் பக்கத்துக்கு வளைத்துக்கொள்ளலாம். ஆர்வம் நிறைந்த சிறந்த மாதிரியாக ஒரு வாழ்வைக் கண்டாலல்லது நமது நாடு நல்வழிக்கு வாராது. தமக்குரிய அனைத்தையுந் துறந்து, தமதுயிரை நாட்டின் நன்மைக்காகக் கொடுக்கத் தயாராயுள்ள இளைஞர் சிலர் முன்வரவேண்டும். அவர்களைத் திருத்தி நல்ல வழியில் வைத்த பின்பு உண்மையான முன்னேற்றம் உண்டாகும்.

நான்: அன்புள்ள சுவாமிஜி, நம் நாட்டிலுள்ளவர்கள், தங்களுடைய மத உண்மையை அறியாமல், கிறித்தவம், முகம்மதியம் முதலிய வேறு சமயங்களைத் தழுவிவிடுகிறார்களே! அவர்களுக்கு உதவி செய்யாமல், நீங்கள் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய இடங்களுக்குப்போய் இந்து சமயப் பிரசங்கஞ் செய்ததேனோ என்னுஞ் சந்தேகம் என்னுள்ளத்தைக் குழப்புகின்றது!

சுவா: ஆராய்ந்து பார். இப்பொழுது நமது நாடு நிலை பிறழ்ந்திருக்கிறது. உண்மையான சமயானுஷ்டானஞ் செய்கிறதற்கு நம்முடைய நாட்டு மக்களிடத்து வலிமையிருக்கிறதா? தாங்கள் சத்துவகுணம் மேலிட்டவர்கள் என்று வாயாற் சொல்லுகிற பெருமைதான் அவர்களிடம் குடிகொண்டிருக்கிறது. உண்மையிற் சத்துவ குணமுடையவர்களாயிருந்த காலமுமுண்டு; இப்பொழுதோ, மிகத்தாழ்ந்த நிலையிலிருக்கிறார்கள். சத்துவ நிலையிலிருந்து விழுபவர்கள், தலைகீழாகச் சென்று, தாமச நிலையையே அடைவார்கள். தன் முன்னால் நடக்கிற கொடுஞ்செய்கைகளையும்

ஒருவர் மற்றொருவருக்குச் செய்யுந் தீமைகளையும் பார்த்துக் கொண்டு, கதவை அடைத்துக் கண்ணை மூடி, மூலையிலிருந்து, 'ஹரி ஹரி' என்கிறவன் சத்துவகுணம் படைத்தவன் என்று சொல்லப்படுவானா? ஒரு போதும் இல்லை. அவன் பேரிருளாகிய தாமச குணத்தினால் மூடப்பட்டவன்; சிற்றின்பங்களின்மேலுள்ள ஆசை சிறிதேனுந் தணியாத மக்களுக்குத் துறவின்மேல் விருப்பம் எங்ஙனம் உண்டாகும்? ஆதலால், மக்கள் உண்ணவும், உடுக்கவும், சற்று இன்பம் நுகரவும் வேண்டிய பொருளைப் பெறுதற்குரிய வழி வகைகளைக் காட்டி வைப்போம். பிறகு படிப்படியாக வைராக்கியமுண்டாகி, உண்மைச் சமய நெறியில் நிற்குந் திறமுண்டாகும். இங்கிலாந்து அமெரிக்கா நாட்டு மக்களைப் பார். அவர்கள் எவ்வளவு இராஜச குணம் படைத்தவர்களாயிருக்கிறார்கள்! உலக இன்பங்களை அனுபவித்துத் தேக்குண்டவர்களாயிருக்கிறார்கள்! அங்ஙனமன்றியும் நம்முடைய பௌராணிக மதத்தைப் போலவே குருட்டு நம்பிக்கையும் மூடக் கொள்கையுமுள்ள கிறித்தவ மதம் இருக்கின்றது. கல்வி, கலை இவற்றின் வளர்ச்சியால் மேலைநாட்டவர்கள் அமைதி அடையமாட்டார்கள். அவர்களுடைய இக்கால நிலையிலே ஒரு படி ஏறச் செய்வதால் சத்துவ குணத்தை எய்துவார்கள். அஃதன்றியும், வெள்ளைத் தோலுள்ளவர்கள் வந்து உங்களுக்கு உங்கள் சமயத்தைப் போதிக்கும் போது, நீங்கள் செவி கொடுத்துக் கேட்பீர்கள்; கந்தை உடுத்திருக்கிற துறவிகளுடைய வார்த்தைகளைக் கேட்பீர்களா?

நான்: ஆம், மஹராஜ். ஸ்ரீ என். கோஷும் அப்படித்தான் சொல்லுகிறார்.

சுவா: என்னுடைய மேலைநாட்டுச் சிஷ்யர்கள் தக்கபடி அனுஷ்டானஞ் செய்து அநுபூதிமான்களாகிக் கூட்டங்கூட்டமாய் இங்கு வந்து, உங்களைப் பார்த்து, ''என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? உங்களுடைய சிரத்தை எங்கே போயிற்று? உங்களுடைய கர்மானுஷ்டானங்கள், பழக்க வழக்கங்கள், நல்லொழுக்கம் முதலியவற்றையும், உங்கள் சமய நெறியையும், மிக உயர்வானவையென நாங்கள்கூடக் கருதுகிறோமே!'' என்று சொல்லும்போது உங்களுள் பெரியோராயிருப்போரெல்லாம்போய் அவர்களுடைய மொழிகளைக் கேட்பார்கள்; அதனால், பெருநன்மை உண்டாகும். அங்ஙனமாயினும், அவர்கள் உங்களுக்குச் சமயநெறி கற்பிக்கிற குருமார்கள் ஆகமாட்டார்கள். பௌதிக சாத்திரம், தொழிற்கல்வி முதலியவற்றுக்கு அவர்கள் குருமார்கள் ஆவார்கள். உலகத்துக்குச் சமயநெறி புகட்டுகிற குருவின் தன்மை எப்பொழுதும் இந்தியாவுக்கே உரியதாகும்.

நான்: சுவாமிஜி, அஃதெங்ஙனமாகும்? மேலைநாட்டார் எங்களை வெறுத்து நோக்குகிற தன்மையைப் பார்க்கும் பொழுது, அவர்கள்

சுயநலங்கருதாது எங்களுக்கு நன்மை செய்வார்களென்று எண்ணச் சிறிதும் இடமில்லை.

சுவா: அவர்கள் நம்மை வெறுப்பதற்குப் பல நியாயங்கள் உண்டு. முதலிலே நாம் தோல்வியுற்ற இனத்தாராயிருக்கிறோம். இனி நம்மவர்களைப் போலப் பல்லிளித்து இரக்கிற சாதியார் பிறர் எவருமிலர். தாழ்ந்த சாதியார் என்று கருதப்படுகிற பெரும்பாலார், உயர்ந்த வகுப்பாரிடம் உதையும் அடியும்பட்டுத் தம் வலியிழந்து ஆண்மை குன்றி ஏழை நெஞ்சு படைத்தவராயினர். இனிச் சற்று உயர்வென்று கருதப்படுபவர்களோ, சிறிது ஆங்கில மொழியைக் கற்றுவிட்டுக் குமாஸ்தா வேலைக்காக விண்ணப்ப இதழ்களும் கையுமாகத் திரிகிறார்கள். இருபது முப்பது ரூபாய் மாத வரும்படியுள்ள ஒரு குமாஸ்தா வேலை கிடைப்பதானால் எத்தனை பி.ஏ.க்களும், எம்.ஏ.க்களும் விண்ணப்பப் பத்திரத்தோடு வெளி வருகிறார்கள்! ஐயோ! அந்தப் பத்திரங்களிலுள்ள வரிகளின் இழிவோ என்றால் சொல்லவொண்ணாது. "ஐயா, எனக்கு உண்பதற்கு ஒன்றுமில்லை; என் மனைவியும் குழந்தைகளும் பட்டினியாய்க் கிடக்கிறார்கள்; கருணை கூர்ந்து ஒரு வேலை தந்தருள வேண்டுமென்று தாழ்மையாய் மன்றாடுகிறேன். தேவரீர் கருணை கூராவிட்டால், நாங்கள் பட்டினியால் இறந்துவிடுவோம்!" என்று இப்படிப் பல்லை இளித்துப் பிழைப்புப்பெற்று மானத்தைக் காற்றில் தூற்றிவிட்டு அடிமைத் தொழில் செய்வார்கள். இனிச் சிறிது உயர் படிப்பாளர்களோ, சங்கங்கள் கூட்டி, "ஐயோ! இந்தியா நாளுக்கு நாள் அழிந்து போகிறது! ஆங்கிலேயப் பிரபுக்களே, எங்கள் நாட்டவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங் கொடுங்கள்; பஞ்சத்தை நீக்குங்கள்," என்று உரத்து ஓலமிடுகிறார்கள். எங்குப் பார்த்தாலும் 'கொடுங்கள், கொடுங்கள், ஆங்கிலேயர்களே, மேலும் மேலும் கொடுங்கள்,' என்ற ஓலமே கேட்கிறது. ஐயோ! அவர்கள் உங்களுக்கு இன்னுங் கொடுக்க வேண்டுவதென்ன? புகை வண்டி, தந்தி, தபால்—இவற்றைத் தரவில்லையா? தீவர்த்திக் கொள்ளைக்காரர்களை ஒழித்து நாட்டினைச் சீர்படுத்தவில்லையா? பௌதிக சாத்திரக் கல்வியைத் தரவில்லையா? இன்னும் அவர்கள் தரவேண்டுவதென்ன? கலப்பற்ற தன்னல மறுப்போடு யாராவது கொடுத்துக்கொண்டே இருப்பதுண்டா? அவர்கள் இத்தனை நன்மைகளை நல்கியிருக்கின்றார்களே! அவர்களுக்கு நீங்களென்ன கொடுத்திருக்கிறீர்கள்?

நான்: எங்களிடம் கொடுப்பதற்கு என்ன இருக்கிறது மகராஜ்? நாங்கள் வரிப் பணம் கொடுத்து வருகிறோமே?

சுவா: நீங்களா கொடுக்கிறீர்கள்? நாட்டை ஒழுங்காக வைத்திருப்பதற்காக உங்களை நெருக்கி அவர்கள் வரிப்பணம் வாங்குகிறார்கள். உங்களுக்கு அவர்கள் இத்தனை நன்மை செய்ததற்குக்

கைம்மாருக நீங்கள் என்ன அளித்தீர்கள்? உள்ளபடி சொல், பார்ப்போம். உங்களிடமுங் கொடுப்பதற்கேற்றதும் அவர்களிட மில்லாததுமான எந்தப் பொருளிருக்கிறது? உங்களிற் சிலர் இங்கி லாந்துக்குப் போகிறீர்கள்; அதுவுங் கல்வி இரப்பதற்காகவே செல்லுகின்றீர்கள். ஒரு சிலர் இங்கிலாந்துக்குப் போய்ச் சொற் பொழிவுகள் செய்து மேலைநாட்டாருடைய சமயநெறி சிறந்ததென்று சொல்லிவிட்டு வருகிறார்கள். உங்களுடைய அறிவின் தன்மையை என்னென்று இயம்புவது! அவர்களுக்குக் கொடுப்பதற்கு உங்க ளிடம் ஒன்றுமில்லையா? ஏன் இல்லை? இருக்கிறது. விலைமதிக்க ஒண்ணாத அரும்பெரும்பொருளாகிய சமய நெறியும், தத்துவ ஞானமும் உங்களிடமிருக்கின்றன. உலக சரித்திரத்தை ஆராய்ந்து பார்ப்பாயாயின், உலகிலுள்ள உயர்தனிக் கொள்கைகளனைத்தும் இந்தியாவில் பிறந்து வேறிடங்கட்குப் பரவினவென்றறிவாய். தொன்று தொட்டு இந்தத் தேசம் மனித இனத்தினருக்குப் பெறற் கரும் பொருளாகிய உண்மை ஞானத்தை வழங்கி வந்தது. உங்களு டைய சநாதன தருமத்தை ஆழ்ந்து ஆராய்வதற்கும் வேதாந்த ஞானத்தையும், உயர்தனிக் கொள்கைகளையும் பெற்றுக்கொள் வதற்கும் ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். நீங்கள் அவர்களிடம் பெறுகிற நன்மைகளுக்குக் கைம்மாருக விலை மதிக்க ஒண்ணாத அந்த இரத்தினங்களை அவர்களுக்குக் கொடுங்கள். எங்கள் சாதியாருக்குள்ள இழிவான பெயரை நீக்கு வதற்காகவே, இறைவன் என்னை மேற்றிசைக்கு அனுப்பினான். விண்ணப்பம் செய்து இரப்பதற்காக இங்கிலாந்துக்குப் போவது தகாது. அவர்கள் எப்பொழுதுங் கொடுத்துக்கொண்டிருக்க வேண் டிய அவசியமென்ன? கையை நீட்டி இடையறாது, ''தாருங்கள் தாருங்கள்'' என்று கேட்டுக்கொண்டிருப்பது எவ்வளவு வெட்கங் கெட்ட செய்கை! அது முறையாகாது. வாங்குவது போலக் கொடுப்பதுஞ் செய்யவேண்டும். இந்த விதியைக் கைக்கொண்டு ஒழுகாதவர்கள் உய்யமாட்டார்கள். நாமும் கொடுக்க வேண்டும். இதற்காகவே நான் அமெரிக்காவுக்குப் போனேன். சமய நெறியை அறிந்துகொள்வதற்கு மேலைநாட்டார் மிகவும் ஆவலுள்ளவர்களா யிருக்கிறார்கள். என்னைப் போன்ற ஆயிரம் பேருக்கு அங்குப் போதிய வேலையிருக்கிறது. நீண்ட காலமாக அவர்கள் உங்க ளுக்குக் கொடுத்துக்கொண்டே வருகிறார்கள். இப்பொழுது உங்க ளுக்குள்ள பெறற்கரும்பொருளாகிய சமயநெறியை அவர்களோடு பங்கிட்டுக்கொள்வதற்குக் காலம் வந்துவிட்டது. அங்ஙனம் செய் வீர்களாயின், அவர்கள் பத்தி சிரத்தை மேலிட்டு உங்கள்மேல் அன்பு பாராட்டுவார்கள்; நீங்கள் கேளாமலே, உங்கட்குப் பல நன்மைகளைச் செய்வார்கள். அவர்கள் ஆண்மையுள்ளவர்கள்; ஆதலால், செய்நன்றி மறவார்கள்.

நான்: சுவாமிஜி, உங்களுடைய மேலைநாட்டுப் பிரசங்கங்களில் நமது அறிவுக் கூர்மையிலும் நற்குணங்களிலுமுள்ள சிறப்பிலக்கணங்களை எடுத்து அடிக்கடி மிக்க திறமையுடன் காட்டியிருக்கின்றீர்கள்; மேலும், நமது மனப்பூர்வமான சமயப்பற்றினைப் பல தக்க சான்றுகளுடன் காட்டியிருக்கின்றீர்கள். ஆனால், இப்போது நாம் எல்லோரும் தாமச மயமாய் இருக்கின்றோம் எனக் கூறுகின்றீர்கள்; மறு கணத்தில் நம்மை ரிஷிகளால் அளிக்கப்பட்ட சநாதன தருமத்தினை உலகுக்கு உணர்த்தும் ஆசாரியர்களாகப் புகழ்கின்றீர்கள். இது எப்படிப் பொருந்தும் ?

சுவா: நான் நாடு நாடாகச் சென்று மக்கள் முன்னால் நம் குறைபாடுகளை எடுத்துப் பேச வேண்டுமென்பது உனது கருத்தா ? உங்களை ஒரு தனி நாடாகக் காட்டும் சிறப்புக் குணங்களை நிலை நிறுத்துவதை நான் மேற்கொள்ள வேண்டாவா ? ஒருவர் குற்றங்குறைகளை அவர் முன்னால் சினேகபாவத்துடன் எடுத்துக் காட்டி அவற்றை அவர் ஒப்புக்கொள்ளும் வண்ணம் செய்வதனால் தம்மைத் தாமே திருத்திக்கொள்வதும்—அவருடைய நற்குணங்களைப் பிறர் முன்பு புகழ்ந்து பேசுவதும் என்றும் நன்மையைப் பயக்கும். தீய ஒழுக்கமுள்ள ஒருவனை நல்லவன் என அடிக்கடி அவன் முன்பு சொல்வதனால் நாளடைவில் அவன் நல்லவனாகிறான் என்றும், நல்ல நடையுடையவனைக் கெட்டவன் எனப் பன்முறை சொல்வதனால் அவன் கெட்டவனாகிறான் என்றும் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவதுண்டு. மேலைத்தேசத்து மக்கள் முன்னால் அவர்கள் குறைபாடுகளைப் பல முறை எடுத்துக் கூறியிருக்கின்றேன். நான் மேலைத் தேசத்துக்கு விஜயம் செய்யுமுன் தமது நாட்டிலிருந்து அங்குச் சென்ற அனைவரும் அந்நாட்டாருடைய நற்குணங்களைப் பெரிதும் பாராட்டிப் புகழ்மாலை சூட்டுவதும், நமது நாட்டவரது இழிவினை அவர்கள்முன் இரைந்து பேசுவதுமாய் இருந்தார்கள் என்பதை ஞாபகப்படுத்திக்கொள். எனவே, அவர்கள் நம்மைப் பகைக்கக் கற்றுக்கொண்டதில் வியப்பில்லை. இதனைக் கருத்துட்கொண்டு நம் நற்குணங்களையும் அவர்கள் தீய குணங்களையும், இன்று உங்கள் குறைகளையும் அவர்களுடைய நற்குணங்களையும் உனக்குக்கூறுவது போல, அவர்கள் முன்னிலையில் பேசியுள்ளேன். நீங்கள் எவ்வளவு தாமச குணமுடையவர்களாய் இன்று காணப்பட்டாலும், நம் பூர்விக ரிஷிகளின் குணத்தில் ஒரு சிறிதளவாயினும், அது வெளிப்பூச்சாய் இருப்பினும்-உங்களிடம் சந்தேகமின்றி யிருக்கிறதென்பது உண்மையே. ஆனால், ஒருவர் பக்குவமடைவதன் முன் தம்மை மதகுரவர் எனத் தாமே பட்டம் சூட்டிக்கொண்டு மேலைத் தேசம் சென்று பிரசாரம் செய்தலை மேற்கொள்ள வேண்டுமென்பதில்லை. முதன்முதலாக ஒருவர் ஏகாந்தத்திலிருந்து தம் மதானுஷ்டானங்களைச் செவ்வனே நடத்தி, உருப்படுத்தியாக

வேண்டும்; தியாகத்தினையும் பிரம்மசரிய விரதத்தினையும் இடையருது பேணிப் பூரணநிலை எய்த வேண்டும். தாமச குணம் உங்களிடம் புகுந்துள்ளது. அதனுல் என்ன? தாமசத்தினை ஓட்டக் கூடாதா? ஒரு கணப்போதில் இதனைச் செய்யலாம்! தாமசத்தினை அடியோடு களையவே ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்தார்.

நான்: சுவாமிஜி, உங்களைப் போல ஆவதற்கு எவரால் இயலும்?

சுவா: நான் மாண்ட பின் என்னைப்போன்ற விவேகானந்தர்கள் இல்லாமற்போவார்கள் என்று நினைக்கின்ருயா? சற்று நேரத்திற்கு முன்பு இங்கு வந்து என் முன்னிலையில் இசைக்கருவிகளுடன் பாடிய அவ்விளைஞர் கூட்டத்தினை, மயக்கப் பொருளை அருந்துபவரென்றும் மதிப்பிழந்த சிறுவர்கள் என்றும் நீ வெறுக்கினும், இறைவனது திருவுள்ளமிருப்பின், அவர்களுள் ஒவ்வொருவரும் விவேகானந்தராக வரக்கூடும்! உலகு வேண்டியிருந்தால் விவேகானந்தர்களுக்குக் குறைவிராது—கோடிக் கணக்கான விவேகானந்தர்கள் தோன்றக்கூடும். எங்கிருந்து தோன்றுவர் என்பதை எவர்தாம் அறிய வல்லார்! என்னுல் செய்யப்பெற்ற வேலையானது விவேகானந்தனுல் ஆனதன்று—இறைவனது செயலேயாகும்! கவர்னர் ஜெனரல் வேலையிலிருந்து இளைப்பாறியதும், வேருெருவரை அவரிடத்தில் அமர்த்த ஏக சக்கரவர்த்தி முயலுவார். எவ்வளவு தாமச குணம் சூழப்பெற்ருலும், நீ இறைவன்பால் இதயபூர்வமாக இறைஞ்சிச் சரணடைவாயானுல், மூடிய இருளானது அகன்று போகும். உலக வருத்தத்தினை அகற்ற வைத்தியநாதர் தோன்றிய இக்காலமே மிகவும் உகந்த காலம். அவரது திருநாமத்தினை நாவினுல் நவின்றுகொண்டு, வேலையில் அமர்வாயானுல், எல்லாவற்றையும் உன்னைக்கொண்டு அவர் செய்து முடிப்பார். தாமச குணமே, மிகவும் மேலான சத்துவமாகப் பரிணமிக்கும்!

நான்: நீங்கள் எது கூறினும், உங்கள் வார்த்தைக்குச் செவி சாய்ப்பது என்னுல் கூடியதொன்றன்று. நாவின் செல்வி அருளால் நீங்கள் தத்துவ சாத்திர உண்மைகளை உரைத்தது போல வேறு எவர்தான் செய்ய வல்லார்?

சுவா: உனக்குத் தெரியாது! அவ்வாற்றல் யாவருக்கும் அமையக்கூடும். நைஷ்டிக பிரம்மசாரி விரதத்தினைப் பன்னீராண்டு இறைவனை அடைவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து காத்த ஒருவருக்கு அவ்வாற்றலுண்டாகும். அவ்விரதத்தினை யான் அனுஷ்டித்துள்ளேன். அதனுல், எனது புத்தியை மறைத்திருந்த திரை நீக்கப்பெற்றது போன்றுள்ளேன். இது காரணமாக நுண்ணிய பொருளையுடைய தத்துவ சாத்திர உண்மையினை எடுத்துப் பேசுவதற்கு நான் அதிகம் எண்ணவேண்டுவதில்லை; பயிலவேண்டுவதுமில்லை. நாளைய தினம் நான் பிரசங்கம் செய்வதாக வைத்துக்

கொள்வோம்; இன்றிரவே நான் பேசவேண்டியனவெல்லாம் என் கண் முன்பே படமெழுதியது போல வந்து தோன்றும்; மறுநாள், நான் கண்டனவற்றை எனது பிரசங்கத்தில் சொற்களால் விரித்து உரைப்பேன். எனவே, அதை எனக்கே உரிய ஆற்றல் அன்று என்பதை நீர் இப்போது உணரக்கூடும். பன்னீராண்டு இடைவிடாது நைஷ்டிக பிரம்மசரிய விரதத்தினைக் காத்த எவரும் அதனை எய்தல் கூடும். அங்ஙனம் நீயும் செய்ய வல்லையேல், உனக்கும் அது கைகூடும். 'இந்தத் தன்மை உள்ளவர்களே அதனை அடைவர்; பிறர் அடையார்,' என நம் சாத்திரங்கள் கூறவில்லை!

நான்: சுவாமிஜி, உங்களுக்கு ஞாபகமிருக்கலாம்: ஒரு நாள் நீங்கள் சந்நியாச ஆச்சிரமத்தில் புகு முன்னர்—வீட்டில் நாமிருவரும் சென்றிருந்த போது சமாதியின் மருமத்தை எனக்கு எடுத்துரைக்க முயன்றீர்கள். நீங்கள் கூறியதை மறுத்துக் கலியுகத்தில் சமாதி எய்துவது கைகூடுவதன்று என யான் உரைக்க, 'நீ சமாதியினைக்காண விரும்புகின்றனையா, அல்லது அதனை அடைய விரும்புகின்றனையா?' என நீங்கள் இடித்துக் கேட்டதுண்டு. நீங்கள் இதனைக் கூறி முடிப்பதன் முன் அறிமுகமில்லாத ஒருவர் அங்கு வரவே, நாம் அப்பேச்சினை மேற்கொண்டு பேசாதொழிந்தோம்.

சுவா: ஆம், எனக்கு ஞாபகமுண்டு.

நான் பின்னொரு முறை, சமாதி எய்தலை அவர் அருளால் வேண்டி வற்புறுத்திய போது, அவர் சொன்னதாவது: "நண்ப, பல்லாண்டுகளாக இடைவிடாது சொற்பொழிவாற்றியதும் கடுமையான வேலையினைச் செய்ததும் காரணமாக என்னிடத்து ரஜோ குணம் அதிகம் மேலோங்கியிருக்கின்றது. எனவே, அவ்வாற்றல் இப்போது மூடுண்டு மறைந்திருக்கின்றது. எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு இமயமலைச் சாரலுக்குச் சென்று ஏகாந்தமான இடத்திலிருந்து சில காலம் தியானம் புரிவேனாயின், அவ்வாற்றல் என்னுள்ளிலிருந்து மறுபடியும் எழும்," என்றார்.

(4)

பழைய நினைவுகள் — பிராணாயாமம் — பிறர் எண்ணங்களை அறிந்து சொல்லல் — பழம்பிறப்புணர்ச்சி

இரண்டொரு நாள் கழித்துச் சுவாமிஜியைத் தரிசிக்க வேண்டுமென்னும் நோக்கமாக நான் வீட்டிலிருந்து புறப்பட்டு வரும்பொழுது சுவாமிஜியினிடமிருந்து பிராணாயாமத்தைப் பற்றிய சில சந்தேகங்களைத் தெளிந்துகொள்ள வேண்டுமென்னும் விருப்பத்தினையுடைய நண்பர் இருவர் வரக்கண்டேன். தேவாலயத்தையாவது சன்னியாசிகளையாவது தரிசிக்கப் போகும்பொழுது வெறுங்

கையோடே போதல் முறையன்று என்பதை உணர்ந்து சில பழங்களையும் இனிப்புத் தின்பண்டங்களையும் எடுத்துக்கொண்டு போய்ச் சுவாமிஜியினுடைய திருமுன்னிலையை அடைந்து சமர்ப்பித்தோம். சுவாமிஜி அவற்றைத் தம்முடைய திருக்கரங்களில் எடுத்து, சிரத்தின்மேல் உயர்த்தி, நாங்கள் வணங்குமுன்பு தாமே தமது சிரத்தை வணங்கினார். என்னோடு வந்த நண்பர் இருவருள் ஒருவர் சுவாமிஜியினுடைய ஒருசாலை மாணாக்கராயிருந்தார். சுவாமிஜி உடனே அவரைத் தெரிந்துகொண்டு அவருடைய நலத்தை விசாரித்தார். பின்பு அனைவரையும் தம் சமீபத்தில் இருக்கும்படி கட்டளையிட்டார். சுவாமிஜியைத் தரிசிக்க வந்தோர் பின்னும் பலர் இருந்தனர். ஒரு கனவான் வினவிய சில வினாக்களுக்கு விடை பகர்ந்த பின்னர், சுவாமிஜி பிராணாயாமத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். முதலிலே மானத சத்திகளிலிருந்து தூலப்பொருள்கள் தோற்றும் வகையை இக்கால விஞ்ஞான சாத்திரத்துக்கேற்ப விளக்கி, அதன் பின் பிராணாயாமம் என்பதை விளக்கினார். சுவாமிஜி எழுதிய நூலாகிய **ராஜயோகத்தை** நாங்கள் மூவரும் மிகுந்த கவனமாகக் கற்றிருந்தோமெனினும், அன்று அவர் பிராணாயாமத்தைப் பற்றிக் கூறிய விஷயங்களை நோக்கும்பொழுது புத்தகத்தில் எழுதப்பட்ட பொருளைவிட எத்தனையோ மடங்கு அதிகமான விஷயங்கள் சுவாமிஜியினுடைய சிந்தையில் உள்ளன என்பதைக் கண்டோம். அஃதன்றியும், அவர் உண்மையை உணர்ந்தவர் என்பதையும் அறிந்துகொண்டோம். ஏன் எனில், சாத்திர உணர்ச்சியினால் மாத்திரம் அத்தனை தெளிவாகவும் விரிவாகவும் மிக நுண்ணிய பொருள்களையும் ஆராய்ந்து விளக்குவது இயலுமா?

பிற்பகல் மூன்றரை மணி முதல் மாலை ஏழரை மணி வரையில் பிராணாயாமத்தைப் பற்றிய சம்பாஷணை நடந்துகொண்டிருந்தது. கூட்டங்கலைந்து திரும்பி வரும்பொழுது என்னுடைய நண்பர்கள் என்னை நோக்கி, 'உங்களுடைய உள்ளத்திலிருந்த வினாக்களைச் சுவாமிஜி எங்ஙனம் அறிந்தார்? நீங்கள் அவற்றை அவருக்குத் தெரிவித்தீர்களா?' என என்னைக் கேட்டார்கள்.

இது நடந்த சில நாட்களுக்குப் பின்பு பாக்பஜாரிலே காலஞ்சென்ற **பிரியநாத்முகர்ஜி** வீட்டிலே நான் சுவாமிஜியை மறுபடியும் சந்தித்தேன். அப்பொழுது சுவாமி பிரம்மானந்தரும், சுவாமி யோகானந்தரும், கிரீஷ் சந்திர கோஷரும், அதுல் பாபுவும், இன்னும் இரண்டொரு நண்பரும் அங்கே கூடியிருந்தனர். நான் சுவாமிஜியை நோக்கி, ''முன்னாள் நான் தேவரீரைக் காண வந்தபொழுது என்னோடு வந்த நண்பரிருவரும் தேவரீரெழுதிய ராஜயோகம் என்னும் நூலைப்படித்து, அது வழியாகத் தங்கள் மனத்தில் எழுந்த சில சந்தேகங்களைத் தெளிந்துகொள்ளும் நோக்கத்துடன் வந்தார்கள். அன்று அவர்கள் அவ்வினாக்களை வினவுதற்கு முன்

னரே தேவரீர் அவர்கள் கருதிய வினக்களுக்கெல்லாம் விடை பகர்ந்ததைக் கண்டு மிகுந்த ஆச்சரியமுற்று, யான் அவ்வினக்களைத் தேவரீருக்கு முன்னுடித் தெரிவித்தேனேவென என்னைக் கேட்டார்கள் !'' என்றேன். அதற்குச் சுவாமிஜி மறு மொழியாக, ''நான் மேலைத் தேசத்திலிருக்கும் பொழுதும் இப்படிப் பல முறை நிகழ்வதுண்டு. தங்களுடைய மனத்திலிருந்த கேள்விகளை நான் அறிந்துகொண்டது எவ்வாறென மக்கள் வினவுவதுண்டு. இந்த வல்லமை ஸ்ரீராமகிருஷ்ண பகவானுக்கு எப்பொழுதும் உரியதாயிருந்தது; எனக்கு முன்பிருந்ததைப் போல இப்பொழுது அதிகமாயில்லை,'' என்றார். இந்தச் சமயத்தில் அதுல் பாபு சுவாமிஜியை நோக்கி, ''ராஜ யோகம் என்னும் நூலிலே ஒருவர் தமது பழம்பிறப்புகளை அறிந்துகொள்ளலாமென்று எழுதியிருக்கக் கண்டேன். தேவரீருடைய பழம்பிறப்புத் தேவரீருக்குத் தெரியுமா ?'' என்றார்.

சுவா: ஆம்; அறிவேன்.

அதுல் பாபு: அறிந்ததை எங்களுக்குத் தெரிவிப்பதில் யாதேனும் தடையுண்டா ?

சுவா: நான் அவற்றை அறியக் கூடும்; அறிவேன். ஆயினும், அதைப்பற்றிய விவரங்களைச் சொல்ல எனக்குப் பிரியமில்லை.

(5)

கீழைத்தேச மேலைதேச சங்கீத கலா சாத்திரம்

1898-ஆம் வருடம், ஜூலை மாதத்திலே பேலூரில் **நீலாம்பர முகர்ஜி**யின் நந்தவனத்தின் நடுவில் திகழ்ந்த திருமடத்திலே சுவாமிஜியும் சிஷ்யர்களும் தியானத்திலிருந்து, அதன் முடிவில் அங்குள்ள அறைகளுள் ஒன்றில் வந்தமர்ந்தார்கள். மழை பொழிந்து குளிர் காற்று வீசினமையால், சுவாமிஜி கதவைத் தாழிட்டு உட்கார்ந்து தம்பூர் வாத்தியத்தோடு பாட ஆரம்பித்தார். பாட்டு முடிந்ததும் சங்கீதத்தைப் பற்றி ஒரு நீண்ட சம்பாஷணை நடந்தது. மேலைத் தேச சங்கீத முறை எப்படிப்பட்டதென்று ஸ்ரீசிவானந்த சுவாமிகள் வினவினார்கள்.

சுவாமிஜி: ஆ ! அது மிகவும் நல்லது ! நம் சங்கீத முறையில் நாம் உணர்ந்துகொள்ளாத இன்னிசை இயைபின் நிறைவுகள் பல மேலைத் தேசத்து முறையில் உண்டு. பயிற்றப்படாத செவிகளுக்கு அவை இனிமையாகத் தோற்றுவதில்லை. ஆதலாலேதான் பாடகர்கள் நரிகள்போல ஊளையிடுகிறார்கள் என்று நாம் நினைப்பது. முதலில் நானும் அத்தகைய எண்ணமுடையவனுயிருந்

தேன். ஆனாலும், மேலைத்தேச முறையைச் சாவதானமாகவும் நுணுக்கமாகவும் ஆராயத் தொடங்கிய பின்னர், நான் அதைத் தெளிவு பெற அறிந்து வியப்பில் மெய்ம்மறந்து போனேன்! ஒவ்வொரு கலை ஞானமும் இம்மாதிரியே. சிறப்புற முடிந்த ஒரு சித்திரத்தைக் கண்டு அதனுடைய அழகு எவ்விடத்து அமைந்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுதல் எல்லோருக்கும் இயலுவதில்லை. கண் பயிற்றப்பட்டிருந்தால்தான் சித்திரத்தின் நுணுக்கங்களை அறிந்துகொள்ளுதல் கூடும். நம்மிடத்திலுள்ள உண்மையான சங்கீதம் கீர்த்தனத்திலும் துருபதத்திலுந்தான் அமைந்திருக்கிறது. மற்றவை, இஸ்லாமிய முறைகளைப் பின்பற்றிச் சிதைந்து போயின. நாசியிலிருந்தெழும் அநுகரண ஓசையோடு குதித்துக் குதித்து ஒரு கரத்திலிருந்து பின்னல் போல மற்றொரு கரத்திற்குப் பாய்கிற 'தப்பா'ப் பாடல் வரிசைகள் சங்கீத முறையில் மிகச் சிறந்தனவென்று எண்ணுகிறாயா? அன்று. ஒவ்வொரு சுரத்துக்கும் பூரண விளக்கம் கொடுத்தாலன்றி, இசை நிறைவற்றுச் சீர் கெட்டுப்போம். சித்திரம் வரையும் பொழுது இயற்கைத் தோற்றத்திலிருந்து வேறுபடாத நிலையில் கலைப் பண்போடு உருவங்களை அமைக்கலாம். அதனால் உருவாகின்றது நலனுடையதாகவே இருக்கும். அவ்வண்ணமே சங்கீதத்திலும் கலைப் பண்போடு ஒன்றுபட்டு நிற்பதனால் எழும் இசை, செவிக்கு இன்பமே பயக்கும். முகம்மதியர் இந்தியாவுக்கு வந்த பின்னர்தான் நம் இராகங்களையும் இராகினிகளையும் கற்றுக் கொண்டார்கள். ஆயினும், தங்களுடைய 'தப்பா'ப் பாடல் முறைகளை ஒன்று சேர்த்து அமைத்தமையால் இசை மரபு சீர் கெட்டுப்போயிற்று.

வினா: ஏன் மகராஜ்? தப்பாப் பாடலை விரும்பாதவர் யார்?

சுவா: சிள் வண்டின் இசையும் சிலருடைய காதுக்கு இனிமையாகத்தானிருக்கும். சந்தால் சாதியார் தம்முடைய சங்கீதம் பிறவற்றைவிடச் சிறந்ததென்று எண்ணுகின்றனர். மிகுந்த விரைவோடு ஒரு சுரம் மற்றொன்றினைத் தொடர்ந்து வரும்பொழுது இன்னிசை அழிவதோடு வல்லோசையும் பிறக்கின்றது. சத்த சுரங்களின் வரிசையிலிருந்தன்றோ இராகங்களும் இராகினிகளும் பிறக்கின்றன? அங்ஙனமிருப்ப, 'தப்பா' முறையில் ஒரு சுரவரிசை முற்றிலும் நீக்கப்பட்ட குரலை எழுப்பிப் பயனின்றி அசைந்து ஒரு புது இராகத்தை அநுகரணம் பண்ணுவதாயின், பாடலுக்குரிய இராகம் கலப்பின்றி எவ்வாறு தோற்றும்? மேலும், செவிக்கினிமை பயக்குமென்று எண்ணிச் சுருக்கமான சுரங்களை ஒன்றன் பின் ஒன்று விரைந்து தொடரப் பண்ணுவதால், சங்கீதத்தின் கவிதை இயல்பு அழிந்து போகின்றது. பாட்டினால் கருதப்படுகிற உயர்ந்த

எண்ணங்களை வெளிப்படுத்தும்படி இசையமைத்துப் பாடுகிற வழக்கம், 'தப்பா' முறை வந்த நாள் தொடங்கி நமது நாட்டி னின்று அகன்று போயிற்று. நாடக அரங்குகளில் வரு கின்ற திருத்தங்களினால் அது இந்நாட்களில் சிறிது திருத்தமுறுகிற தாயினும் இராக இராகினியைப் பற்றிய கவனிப்புக் காற்றாய் மறைந்துவிட்டது. துருபத முறையாகப் பாடப் பயின்றவர்களுக் குத் 'தப்பா' முறையைக் கேட்பது செவிக்குத்துன்பம் தருவதாகும். நமது சங்கீத சாத்திரத்திலுள்ள ஆரோகண அவரோகண முறை கள் மிகச் சிறந்தன. பிரான்ஸ் தேசத்தார் இதை முதலிலே கண் டறிந்து தம்முடைய சங்கீத முறையில் இதைச் சேர்த்தனர். இப் பொழுது ஐரோப்பா முழுமையுமே இந்த முறைகளைப் பயின்று கொண்டது.

விஞ: மகராஜ், ஐரோப்பியருடைய இராகங்களிலே முக்கிய மாக வீரரசம் தோற்றுகிறது. நமது இராக முறைகளில் அதனைக் காண்பது அருமையாயிருக்கின்றது.

சுவா: அப்படியன்று. நம்முடைய முறையிலும் அது உண்டு. வீரரசமுள்ள இராகங்களுக்கு இன்னிசை இயைபு (Harmony) மிகுதியும் வேண்டப்படுவது. இது நமது சங்கீத முறையில் இல்லாதிருப்பதனால், வீரரசம் தோற்றுவது குறைவு. நமது சங்கீத சாத்திரம் நாளடைவில் திருத்தமடைந்துகொண்டே வந் தது. முகம்மதியர் வந்து நாட்டைக் கைப்பற்றிய காலத்தில் சங் கீதமென்னும் தருவின் வளர்ச்சியும் குறைந்துவிட்டது. மேலைத் தேசத்தாருடைய சங்கீத முறை மிகவும் திருத்தமடைந்துவிட்டது. அவர்கள் முறையில் வீரரசமும் உண்டு; கருணை ரசமுமுண்டு. சுரைக்குடுகையினால் செய்யப்பட்ட நமது பழைய இசைக் கருவிகள் ஏற்றமடையாமலிருக்கின்றன.

விஞ: வீரரசம் பாலிக்கும் இராகங்களும் இராகினிகளும் எவையென்பதை அறிய விரும்புகிறேன்.

சுவா: எந்த இராகத்தையும் இன்னிசை (Harmony) இயை போடு அமைத்துக் கருவியையும் தகுதியாகச் சுதிகூட்டினால், வீர ரசம் பிறக்கும். சில இராகினிகளையும் அவ்வாறு செய்தல் கூடும்.

இரவு உணவு அருந்தும் வேளையாயினமையால் பேச்சு அவ் வளவோடு முடிந்தது. உணவு உண்ட பின்னர், கல்கத்தாவி லிருந்து வந்த விருந்தினர்கள் இராப்பொழுது மடத்திலே தங்கு வதற்கு ஏற்ற வசதிகள் எவ்வண்ணம் அமைந்திருக்கின்றன என் பதை விசாரித்த பின்னர், சுவாமிஜியும் படுக்கச் சென்றார்.

(6)

புதிய மடம் கட்டி இரு ஆண்டுகளுக்குப் பின் சுவாமிகள் யாவரும் மடத்தில் வதியும்போது ஒருநாட்காலை குரு மூர்த்தியாகிய சுவாமிஜியைத் தரிசிப்பதற்கு வந்தேன். சுவாமிஜி புன்னகை புரிந்து, உடல்நலம் முதலியவற்றை விசாரித்தபின்னர், ''இன்றைய பொழுதை இவ்விடத்திற் கழிக்கலாமல்லவா ?'' என்றார். ''மகிழ்ச்சியோடு'' என்று மறுமொழி பகர்ந்தேன். பின்னர்ச் சில பல விஷயங்களைப் பற்றிப் பேசிய பின் நான் சுவாமிஜியை நோக்கி, ''மகராஜ், நம்முடைய சிறுவர்கட்குக் கல்வி பயிற்றுவதைப்பற்றி உங்களுடைய எண்ணம் என்ன ?'' என்றேன்.

சுவா: சிஷ்யர்கள் குருவோடு வசிப்பதே முறை.

வினு: எவ்வாறு ?

சுவா: முன்னாளிற்போல; ஆயினும், முந்தியகலைகளோடு மேலை நாட்டுப் பௌதிக சாத்திரங்களையுங் கற்பிக்க வேண்டும். இரண்டும் வேண்டுவனவே.

வினு: இப்பொழுதுள்ள பல்கலைக் கழக முறையிலுள்ள பிழை என்ன ?

சுவா: முற்றிலும் பிழையே. இக்காலத்துப் பல்கலைக் கழகம் குமாஸ்தா உத்தியோகத்துக்கு வேண்டிய ஆட்களை உற்பத்தி செய்கிற இயந்திரம் போன்றிருக்கிறது. அவ்வளவோடு நின்றுவிட்டாலும் குற்றமில்லை. இக்காலத்து முறையினால் மனிதர் சிரத்தையும் விசுவாசமுமற்றவராகின்றனர்; கீதை இடைச்செருகலென்றும், வேதமந்திரங்கள்இடையர் பாட்டுகளென்றும்சொல்லத்தொடங்கி விட்டனர்; இந்தியாவுக்கு வெளியேயுள்ள நாடுகளைப்பற்றியும், அங்குள்ள மக்களைப் பற்றியும் விரிவாக அறிய விரும்புகின்றனர்; தம்முடைய மூதாதையர்கள் இன்னார் என்பதை ஏழு தலைமுறை வரையுமாவது சொல்ல அறியார். பதினான்கு தலை முறையைப் பற்றிப் பேசுவானேன் ?

வினு: இதனால் ஏற்பட்ட குற்றமென்ன ? மூதாதையர்களுடைய பெயரை அறியாமலிருப்பதால் என்ன குறை நேரும் ?

சுவா: அவ்வாறு நினைக்க வேண்டா. பழமையில்லாத சாதிக்கு உலகில் ஒன்றுமில்லை. ''நான் உயர்குடிப் பிறந்தவன்,'' என்று சொல்லும் நம்பிக்கையும் பெருமிதமுமுடையவன் ஒரு போதும் தீய ஒழுக்கத்திற்புகான்; அவனுடைய தன்னம்பிக்கை அவனது ஒழுக்கத்தை வழிப்படுத்தும்; தவறி நடப்பதை விட இறப்பது நலமென்னும் எண்ணம் அவனுக்கு உண்டாகும். அது போலவே, ஒரு நாட்டின் பண்டைய சரித்திரம் அதன் மக்களைப் பண்டைய நெறியில் நிற்கச் செய்கிறது; அவர்கள் தங்களைப்பற்றிக் கீழாக எண்ணமாட்டார்கள். நமக்கு ஒரு சரித்திரம் இல்லை என்று

நீ சொல்லுதல் கூடும். உன்னைப்போல நினைக்கிறவருக்கு இல்லாமலிருக்கலாம். பல்கலைக் கழக மாணவர்களும், மேலைநாட்டிற்கு சென்றுவந்தவர்களும் ஐரோப்பிய உடைநடையைக்கைக்கொண்டு, 'எங்களிடம் ஒரு திருத்தமுமில்லை; நாங்கள் பட்டிக்காட்டார்கள்,'' என்று சொல்லுவார்கள். நமது நாட்டுச் சரித்திரம் ஐரோப்பியரது நாட்டுச் சரித்திரத்தைப் போன்றதன்று என்பது மெய்யே. அதனுலென்ன ? நாம் அரிசிச் சோறு உண்கிறோம்; ஆங்கிலேயர் அதை உண்பதில்லை; ஆகையால், அவர்களெல்லாம் பட்டினியினுல் வருந்தி இறந்துவிடப் போகிறார்களா ? தங்கள் சொந்த தேசத்தில் உண்டாக்கிக்கொள்ளக் கூடியனவும், தங்கள் உடம்புக்குப் பொருத்தமுள்ளனவுமான உணவுப்பொருள்களையுண்டு அவர்கள் உயிர் வாழ்கிறார்கள். அது போலவே எங்களுடைய சரித்திரமும் எங்களுக்குப் பொருத்தமானது. கண்ணை மூடிக்கொண்டு, ''எங்களுக்குப் பூர்விக சரித்திரமில்லையே !'' என்று அழுதால், சரித்திரம் உண்டாய்விடுமா ? கண்ணுள்ளவர்கள் அழகான ஒரு பூர்வ சரித்திரத்தைக் காண்கிறார்கள்; அங்ஙனம் கண்டதனுலுற்ற பலன் காரணமாக இந்தச் சாதி இன்னும் நிலைத்திருக்கிறது. ஆயினும், அந்தச் சரித்திரத்தை இன்னும் ஆராய்ந்தெழுத வேண்டும். மேலைத் தேசத்துக் கல்வியினுலேற்பட்ட மனப்பான்மைக்கேற்ப விஷயங்களைப் புது முறையிலே காட்ட வேண்டும்.

வினு: அதை எங்ஙனஞ் செய்தல் கூடும் ?

சுவா: அது இப்பொழுது எடுத்துப் பேசுவதற்கு மிகவும் விரிந்த விஷயம். பழமையான குருகுல வாசம் முதலியவற்றால் முன்னிருந்த நிலையையடைய முயலுதல் வேண்டும். மேலைநாட்டுப் பௌதிக சாத்திர உணர்ச்சி, வேதாந்த ஞானம், பிரம்மசரியம், சிரத்தை, தன்னம்பிக்கை ஆகிய இவையெல்லாம் வேண்டத்தகுவன. கழுதைகளைக் குதிரைகள் ஆக்க முடியுமோ ?

வினு: ஈற்றிற்சொன்ன குறிப்பினுல் நீங்கள் கருதுவதென்ன ?

சுவா: ஆராய்ந்து பார்ப்பாயாயின், ஒருவர் மற்றொருவருக்குப் படிப்பித்தல் இயலாத காரியம் என்பதை உணர்வாய். பாடங் கற்பிப்பதாகக் கருதியே பெருந்தீங்கு விளைவித்து எல்லாவற்றையும் ஆசிரியன் குலைத்துவிடுகிறான். வேதாந்த ஞானத்தின்படி, மனிதனிடத்தில்—சிறுவனிடத்திலுங்கூட—அறிவு முழுதும் அமைந்திருக்கிறது. அது வெளிப்படுவதற்கு உதவி செய்தலே ஆசிரியனுடைய தொழில். சிறுவர்கள் தங்களுடைய கை, கால், கண், செவி முதலியவற்றைத் தக்கவாறு உபயோகிக்கும்படி அவர்களைப் பயிற்றிவிடுவோமாயின், அவர்கள் தங்கள் அறிவைத் தக்கவாறு செலுத்த அனைத்தும் எளிதாய்விடும். எல்லாவற்றுக்கும் மூல காரணமாயுள்ளது சமய அறிவு. சமய அறிவே சோறு; மற்றவை அனைத்துங் கறிகள்; கறிகளைத் தனியாக உண்போமாயின் வயிற்

றில் அஜீரணம் உண்டாகும்; சோற்றைத் தனித்து உண்டாலும் அவ்வாறேயாகும். சிறுவர்களைக் கிளிப்பிள்ளைகளாக்கிக் கண்ட பொருள்களையெல்லாம் அவர்களுடைய மூளைக்குள் திணித்துவிடுகிறார்கள். ஒரு வகையில் பார்க்குமிடத்து **லார்டு கர்சன்** என்ற அரசப்பிரதிநிதிக்கு நாம் நன்றி கூறவேண்டியிருக்கிறது. பல்கலைக்கழகக் கல்வியைத் திருத்தும் வகையினால் அவர் அதை ஒழித்துவிடுவார்போலத் தோற்றுகிறது. அங்ஙனஞ்செய்துவிடுதல் நல்லது. சற்று நேரத்துக்காவது இளைப்பாறும் நேரம் உண்டாகும். பட்டம் வாங்குவதற்கு எவ்வளவு ஆத்திரம்! சில தினங்கட்குள் ஆத்திரம் முழுதும் அகன்றுவிடுகிறது. அதற்குப் பிறகு அவர்கள் கற்றுக்கொள்வதென்ன? நம்முடைய சமய நெறி, பழக்க வழக்கம் இவைகள் உதவாதனவென்றும் மேலைநாட்டவருடைய கொள்கைகள் நல்லன என்றும் கற்றுக்கொள்ளுகிறார்கள்; இங்ஙனமெல்லாங் கற்றும் பசிப்பிணியை அகற்ற வழியறியார்கள். இத்தகைய உயர்ந்த கல்வி இருந்தாலென்ன, இல்லாமற் போனாலென்ன? ஏதாவது தொழிற் கல்வி பயின்று வாழ்க்கைக்கு வழி தேடிக்கொள்வது நல்லதாகும். அலைந்து திரிந்து குமாஸ்தா வேலைக்கு விண்ணப்பம் செய்வதனாற் பயனென்ன?

விஞ: ஆம்; மார்வாடிகள் புத்தியுள்ளவர்கள். அவர்கள் வியாபாரம் செய்வார்களேயன்றி, உத்தியோகத்தை நாடார்கள்.

சுவா: நீ அறியாமற் பேசுகிறாய். அவர்கள் நாட்டிற்கு நாசம் விளைக்கும் வழியில் இறங்கியிருக்கிறார்கள். தங்களுக்கு நயமான தொழில் இது என்பதை அவர்களறியார்கள். தொழிலபிவிருத்தியைக் கருதுகிற நீங்கள், அவர்களிலுஞ் சிறந்தவர்கள். மார்வாடிகள் தங்கள் வியாபாரத்தை விட்டுச் சிற்றளவான நயத்தைப் பெறுகிற பணத்தைத் தக்க வழியிற் செலவிட்டுச் சில தொழிற் சாலைகளை நடத்தினால் நாட்டுக்கும் நன்மையுண்டாகும்; அவர்களுக்கும் மிகுந்த இலாபம் வரும். இப்பொழுது அவர்கள் செய்கிற வியாபாரத்தினால் அவர்களுக்குச் சிறிய இலாபமும், ஐரோப்பியருக்குப் பெரு லாபமும் ஏற்படுகின்றன. காபூலிகளே சேவகத்தை ஒரு போதும் விரும்பாதவர்கள். சுயேச்சை விருப்பம் அவர்களுடைய எலும்பிலுங்கூட நிறைந்திருக்கிறது. சேவகம் செய்யும்படி அவர்கட்குச் சொல்வாயாயின், பிறகு நடப்பதின்னதென்பதை நீயே அறிந்துகொள்வாய்.

விஞ: நல்லது மகராஜ், உயர்தரக் கல்வியை அகற்றிவிட்டால் இத்தேசத்து மனிதர் பழமை போல மூடர்களாகிவிடுவார்கள் அல்லவா?

சுவா: என்ன மடமை! சிங்கஞ் சிறுத்து எப்போதாவது நரியானதுண்டா? மிகுந்த பழங்காலந் தொட்டு, உலகம் முழுவதற்கும் அறிவாகிய உணவினைக் கொடுத்து வந்த இந்த நாட்டிற்

பிறந்த மக்கள், கர்சன் பிரபுவினுடைய உயர்தரக் கல்வி இல்லா விடில் மூடர்களாய்விடுதல் கூடுமா ?

வினா: ஆனல், ஆங்கிலேயர் வருவதற்கு முன் இந்த நாடு இருந்த நிலைமைக்கும் இப்போதிருக்கும் நிலைமைக்கும் இடையி லுள்ள ஏற்றத் தாழ்வை ஆராய்ந்து பாருங்கள்.

சுவா: என்ன, சடப்பொருட்சாத்திரக் கல்வியும் சாதாரண வாழ்க்கைக்கு உபயோகமான பொருள்களை இயந்திரங்களாற் செய் யப் பயில்வதும் உயர்தரக்கல்வி என்றெண்ணுகிருயா ? வாழ்க்கை யின் நோக்கம் இது என ஆராய்ந்தறிவதே உயர்தரக் கல்வியின் பய ஞகும். இக்கால நாகரிகமுள்ள தேசங்களிலிருக்கும் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்வதும் இந்தப் பயனைக்கருதியே. இது நம் தேசத்து அறிஞர்களால் பல்லாயிர வருடங்கட்கு முன்பே ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டது.

வினா: வேதாந்தமும் மறைந்து போகும் நிலையிலிருந்த தன்றே ?

சுவா: இருந்திருக்கலாம். ஒவ்வொரு காலத்தில் வேதாந்த ஞானம் குறைவதுண்டு; அக்காலங்களில் இறைவன் மானிட சரீ ரத்தோடு அவதரித்துத் தருமத்துக்குப் புத்துயிரையும் புது வலிமை யையுங் கொடுக்க, அது பின்னுஞ் சில காலத்துக்குத் தடுக்கொணு வலிமையோடு பரவும். அவ்வாருகிய காலம் இப்பொழுது ஏற்பட் டிருக்கிறது.

வினா: மகராஜ், ஒரு விண்ணப்பம்: இந்தியா உலகின் ஏனைய பாகங்களுக்குக் கலை ஞானத்தை மிகுதியாகக் கொடுத்திருக் கிறதென்று சொல்லுவதற்கு ஏதாவது ஆதாரமுண்டா ?

சுவா: உலக சரித்திரமே அதற்குச் சான்ருகும். ஆன்ம உணர்ச்சியைத் தரும் உண்மைகளும், உலகிலுள்ள பல்வேறு கலை நூல்களின் ஆதார உண்மைகளும் முதன்முதல் இந்தியாவிலேயே தோன்றின என்பதை ஆராய்ச்சி முறையினல் நிலை நிறுத்துதல் கூடும்.

அன்பினேடும் ஆர்வத்தினேடும் சுவாமி இந்த விஷயத்தை விரித்துப் பேசினர். உடல் நலக் குறைவினுலும், வேனிற்கால வெப்பத்தினுலும் நீர் வேட்கை மிக, அடிக்கடி நீர் பருகிக் கொண்டிருந்த சுவாமிஜி, என்னைப் பார்த்து, ''அன்புள்ள சிங்கி, தயை செய்து பனிக்கட்டியில் குளிர்ந்திருக்கிற நல்ல சுத்தமான தண்ணீர் சிறிது கொண்டுவா; நீ கேட்கிற கேள்விகளுக்கெல் லாம் மறுமொழி சொல்லுகிறேன்,'' என்ருர். நீர் பருகிய பின் மீட்டுஞ் சொல்லுவார்:

'' செய்ய வேண்டுவதெதுவெனில், நம்முடைய கலைகள் யாவை யும், அவற்ருேடு ஆங்கில மொழியையும், மேலைத்தேச பௌதிக சாத்திரங்களையும், அந்நியருடைய கட்டுப்பாட்டைத் தவிர்த்து, நாமாகவே நம்முடைய சிறுவருக்குக் கற்பிக்க வேண்டும். மேலும்,

பல துறையாய் தொழிற்கல்விகளுங் கற்பிக்க வேண்டும். மக்கள் உத்தியோகந் தேடுவதையொழித்துக் கைத்தொழிலை விருத்தி பண்ணித் தம்முடைய செலவுக்கு வேண்டிய பொருளையும் வருங்காலத்துக்கு உதவியாகச் சேமித்து வைக்கவேண்டிய பொருளையும் தேடிக் கொள்ளத் தக்கவர்களாக வேண்டும்.''

விஞ: பழைய முறையான வடமொழிப் பள்ளிக்கூடங்களைப் பற்றி முன்னொருநாள் குறிப்பிட்டீர்கள்; அவ்விஷயத்தைத் தெரிவிக்க வேண்டும்.

சுவா: உபநிடதங்களிலுள்ள கதைகளைப் படித்ததில்லையா? அவற்றிலொன்று சொல்லுகிறேன்; கேள்: **சத்தியகாமன்,** குருவினிடம் போய், பிரம்மசரிய விரதத்தைக் கைக்கொண்டு ஒழுகுவதற்கு விரும்பினன். குரு அவனிடம் சில பசுக் கூட்டங்களை ஒப்படைத்து, காட்டுக்குப்போய் அவற்றை மேய்த்துப்பாதுகாக்கும்படி அனுப்பிவிட்டனர். பல மாதங்கள் கழிந்தன; பசுக்களின் தொகை இரட்டையாயினதைக் கண்ட சத்தியகாமன் குருவினிடம் திரும்புவதற்குச் சிந்தித்தான். திரும்பி வரும் வழியிற் காளைகளுள் ஒன்றும், அக்கினியும், வேறு சில விலங்குகளும் அவனுக்குப் பிரம்ம ஞானத்தை உணர்த்தின. மாணுக்கன் திரும்பி வந்ததும், குரு அவனுடைய முகத்தைப் பார்த்த மாத்திரத்தே, அவன் உயர்வான பிரம்மஞானத்தை அடைந்துவிட்டான் என்பதை அறிந்தார். இந்தக் கதையினுல் அறிந்துகொள்ள வேண்டிய உண்மையெதுவெனில், காடு வரை முதலிய தனியிடங்களில் இயற்கை வனப்பினேடு ஒன்றுபட்டிருப்பதனுல் உண்மைக் கல்வி விருத்தியடையுமென்பது; இயற்கையிலுள்ள பொருள்களைக் கவனிப்பதால் உண்மைக் கல்வி உண்டாவது; அப்படிச் செய்யாது, பண்டிதர்களுடைய திண்ணைப் பள்ளிக்கூடங்களை மாத்திரம் நம்பியிருப்பின், சிறுவர்கள் செய்ததைப் பார்த்துச் செய்யும் மனிதக் குரங்குகள் ஆவார்களேயன்றி தெளிவடையார்கள். இளம்பிராயந்தொட்டுச் சிறுவர்கள் சுடர்விடும் தீப்போல மாசற்ற ஒழுக்கமுள்ளவர்களோடு வாழவேண்டும். மிக உயர்ந்த போதனைக்கு ஓர் ஓவியம் அனையார் ஒருவரைத் தம்முன் நிறுத்திக்கொள்ள வேண்டும். பொய் சொல்லுவது பாவம் என்று புத்தகங்களில் படித்தல் மாத்திரம் போதாது. சுத்த பிரம்மசரியத்தை அனுஷ்டிக்கும்படி, ஒவ்வொரு சிறுவனையும் பயிற்றவேண்டும். அப்பொழுதுதான் நம்பிக்கை, சிரத்தை முதலிய நற்குணங்கள் உண்டாகும். இவையில்லாதவழி, பொய் பேசல் முதலிய பாவங்கள் பற்றுவது இயல்பேயாகும். நமது நாட்டில் உண்மைத் துறவுடைய பெரியோர்களே, தொன்றுதொட்டுக் கல்வி பயிற்றுந் தொழிலைச் செய்து வந்தார்கள். பின்னுளில் பண்டிதர்களுடைய திண்ணைப் பள்ளிக்கூடங்கள் வந்ததோடு, தேசத்துக்கு நாசகாலமும் வந்தது. துறவின் மிக்க தியாகிகள் கல்வி பயிற்றிய

நாட்களில் இந்தியா எல்லா வளப்பங்களோடும் பொருந்தியிருந்தது.

விஞ: மகராஜ், நீங்கள் கருதுவது என்னவென்பது விளங்கவில்லை. ஏனைய தேசங்களிற் சந்நியாசிகளில்லையே? ஆயினும், அத்தேசத்தவர்கள், அறிவு வன்மையினுல் இந்தியாவை அடக்கித் தங்கள் காலின்கீழ் வைத்து ஆண்டு வருகிருர்களே?

சுவா: நண்ப, வீண் கதை பேச வேண்டா. நான் சொல்வதைக் கேள்: பாரத மாதாவின் மக்களுக்குக் கல்வி பயிற்றுந் தொழில் முன்னுளிற்போலவே மீட்டுந் தியாகிகளுடைய கைக்கு வரும் வரையும் இந்தியா ஏனைய நாட்டாரின் செருப்பைத் தலையிற்ருங்கி அடிமைத் தொழில் செய்து நிற்கவேண்டுவதுதான். கல்வியறிவு இல்லாவிடினும், உண்மைத் துறவு நிறைந்திருந்த ஒரு சிறுவர், முதுமை வாய்ந்த பண்டிதர்கள் பலருக்கு மேலான மறுமொழி சொன்ன விஷயத்தை நீ கேள்விப்படவில்லையா? தக்ஷிணேசுவர ஆலயத்திலிருந்த விஷ்ணுமூர்த்தி சிலையினுடைய காலைக் கவனக் குறைவினுல் ஒரு பூசாரி உடைத்துவிட்டார். பண்டிதர் பலர் ஒருங்கு திரண்டு பல பழைய நூல்களையும், ஏட்டுச் சுவடிகளையும் ஆராய்ந்து, உடைந்த உருவத்தை வணங்குதல் கூடாதென்றும், ஒரு புதிய உருவம் நிறுவப்பட வேண்டுமென்றும் முடிவு செய்தார்கள். அதனுல், ஒரு பெருஞ்சந்தடி ஏற்பட்டது. ஈற்றில் அவர் ஸ்ரீராமகிருஷ்ணருடைய எண்ணத்தை விசாரித்தார்கள். மறுமொழியாக, ''புருஷன் காலொடிந்து நொண்டியாஞல் மனைவி அவனைத் தள்ளிவிடுவாளா?'' என்ருர். பண்டிதர் எல்லோரும் பேச்சற்று வாளா நின்றனர். அவர்களுடைய சாத்திர வியாக்கியானங்களெல்லாம் பறந்து போயின. ஸ்ரீராமகிருஷ்ணர் உலகுக்கு வந்ததும் புத்தகப் படிப்பினுற் சுகமில்லை என்று பல முறை சொன்னதும் எதற்காக? அவர் கொண்டுவந்த உயிர் ததும்பும் சத்தியை கல்வியிலும், நூலாராய்ச்சியிலும் திணிக்க வேண்டும்; அப்பொழுது தான் உண்மையான வளர்ச்சி உண்டாகும்.

விஞ: அங்ஙனம் சொல்லுவது எளிது; செய்து முடிப்பது அரிது என்று எண்ணுகிறேன்.

சுவா: செயலும் எளிதாயிருந்தாற் பகவான் வருதல் வேண்டுவதில்லையல்லவா? நாம் செய்ய வேண்டுவதென்னவெனில், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு கிராமத்திலும் மடங்களை நிறுவ வேண்டும். இந்தப் பணிக்கு உன்னுலியன்ற முயற்சி செய்க. கல்கத்தா நகரின் மத்தியிலே ஒரு பெரிய மடந்தாபிக்க வேண்டும். நன்ருகக் கல்வி கற்ற சாது அதற்குத் தலைவராய் இருக்க வேண்டும். பௌதிக சாத்திரம், தத்துவ சாத்திரம், கலை நூல்கள் இவற்றில் தேர்ச்சியடைந்த சந்நியாசிகள் தாம் தாம் திறமை படைத்துள்ள விஷயம் எதுவோ, அதற்கு ஆசிரியராய் அமர்ந்து சிறுவர்க்குக் கல்வி பயிற்ற வேண்டும்.

விஞ: இவ்வண்ணம் தேர்ச்சி பெற்ற சாதுக்களை எங்குத் தேடிப் பிடிப்பது ?

சுவா: அவர்களை உண்டாக்க வேண்டுவதுதான். நாட்டுப் பற்றும் தன்னலங்கருதாத்துறவு நிறைந்த சிந்தையுமுள்ள இளைஞர் சிலர் முன் வருவாராயின், யாவும் ஆகும். எந்த விஷயத்தையும் தியாகிகள் எளிதில் கற்றுக்கொள்வார்கள்.

சிறிது நேரம் மௌனமாயிருந்து சுவாமிஜி மீட்டுஞ் சொல்லு வார்: ''சிங்கி, நமது நாட்டுக்குச் செய்ய வேண்டிய தொண்டு அதிகமிருக்கிறது. இந்த வேலையைச் செய்து முடிக்க உன்னையும் என்னையும் போல ஆயிரக் கணக்கான பேர்கள் வேண்டும். ஆ! நமது நாட்டின் துன்ப நிலையை என்னென்று சொல்லுவது! உன்னல் இயன்றதைச் செய்யமாட்டாயா ? நம் சிறுவர்கள் வாசிப் பதற்குத் தகுதியான பாட புத்தகமில்லையே !

விஞ: ஏன் ஐயா, **ஈசுவர சந்திர வித்தியாசாகரர்** எழுதிய புத்தகங்கள் இருக்கின்றனவே ?

இதனைக் கேட்டதும் சுவாமி புன்னகை புரிந்து, ''ஆம், இருக் கின்றன. அவைகளில் 'ஈசுவர நிராகார சைதந்ய சுவரூப:— கடவுள் உருவமற்றவர், அறிவே உருவமானவர்,' என்றும், 'துபால் அதிசுபோத் பாலக்—துபால் மிகவும் நல்ல புத்தியுள்ள பையன்' என்றும் எழுதப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் உதவா. நாட்டு மொழியிலும் ஆங்கிலத்திலும் மிகவும் எளிய நடையில், மகாபாரதம், இராமாயணம், உபநிடதங்கள் இவற்றிலுள்ள சிறு கதைக ளடங்கிய சில புத்தகங்களை எழுதி, அவற்றை நம் சிறுவர்களுக்குப் படிக்கக் கொடுக்கவேண்டும்.

இப்பொழுது மணி பதினொன்றடித்தது. வானத்தில் மேகங்கள் திரண்டன; மழை பெய்யும் அடையாளமாகக் குளிர் காற்றும் வீசிற்று. மழை வரப்போகின்ற அடையாளத்தைக் கண்டு, சுவாமிஜி மனம் மகிழ்ந்து, என்னைப்பார்த்து, ''வா, சிங்கி, கங்கைக் கரையில் சிறிது நேரம் உலாவுவோம்,'' என்றனர். சுவாமிஜி நடந்து செல்லும்போது, காளிதாச மகா கவியினுடைய மேக தூதத்திலிருந்து பல சுலோகங்களைப் பாடிக்கொண்டே சென்ருர்; அவருடைய உள்ளமோ, மாருமல் இந்தியாவினுடைய நன்மையையே கருதிக்கொண்டிருந்தது.

சுவா: சிங்கி, நீ ஒரு காரியஞ் செய்யமாட்டாயா ? சில காலத் துக்கு நம்முடைய இளைஞர்களுடைய திருமணத்தை நிறுத்தி வைக்கமாட்டாயா ?

விஞ: மகராஜ், நாம் எப்படி அந்த விஷயத்தை நினைக்கக் கூடும் ? முதியோர் பல வழியாலும் திருமணங்களை வளர்க்கப் பார்க்கின்றனரே ?

சுவா: வருத்தப்பட வேண்டா; கால வெள்ளத்தை எவர் தாம்

தடுக்க முடியும் ? அவர்களுடைய முயற்சியெல்லாம் வெற்று ஆரவா
ரமே. திருமணங்கள் எவ்வளவுக்கெவ்வளவு எண்ணிக்கையில்
குறைவாக நடக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு நாட்டிற்கு
நன்மையுண்டு. பரீட்சையில் தேறுவதற்கு எவ்வளவு ஆத்திரம் !
அது முடிய, மணமும் நேர்ந்துவிடுகிறது. ஓர் இளைஞனையாவது
நாட்டுத்தொண்டுக்கும் சமயத் தொண்டுக்கும் விடுவதாகத்
தோன்றவில்லை. ஆண்டுதோறும் இப்படித்தான் நிகழ்கின்றது.

சிறுது நேரம் மௌனமாயிருந்து பின்னுஞ் சொல்லுவார்:
''பரீட்சையில் தேறினவர்களாயும், மணமாகாதவர்களாயுமுள்ள
இளைஞர்கள் அகப்படுவார்களாயின், அவர்களை ஜப்பானுக்கு
அனுப்பித் தொழிற்கல்வி பயிற்றுவிக்க வேண்டிய ஏற்பாடுகள்
செய்வேன். அவர்கள் திரும்பி வந்து, தாங்கள் கற்ற கல்வியை
இந்தியாவுக்காகக் பயன்படுத்துவார்களாயின், எவ்வளவு நன்மை
யுண்டாகும் !

விஞ: ஏன் மகராஜ், இங்கிலாந்துக்குப் போவதைவிட ஜப்பா
னுக்குப் போவது நல்லதா ?

சுவா: ஆம், மிகவும் நல்லது. நம்மவருட் பொருளும் கல்வி
யறிவுமுள்ளவர்கள் ஒரு முறை ஜப்பானுக்குப் போவார்களானல்,
அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டுப் பல விஷயங்களை அறிந்து
கொள்வார்கள்.

விஞ: அது எங்ஙனம் ?

சுவா: ஜப்பானியர் பிறர் அறிவினைச் செரிக்கச் செய்து
தம்மதாக்கி வைத்திருக்கின்றனர்; இங்குள்ள விதமான அஜீரண
நிலை அங்கில்லை. ஐரோப்பியரிடமிருந்து பெறவேண்டுவனவெல்
லாம் பெற்றிருக்கிறார்கள்; அங்ஙனமாயினும், ஐரோப்பியராக மாறி
விடாமல், இன்னும் ஜப்பானியராகவே இருக்கிறார்கள். இத்
தேசத்திலோ, ஐரோப்பியரைப் பின்பற்றுகிற பைத்தியம் கொள்ளை
நோய் போல எங்கும் பரந்திருக்கிறது.

விஞ: மகராஜ், நான் சில ஜப்பானியச் சித்திரங்களைக் கண்
டேன்; அவை மிகவும் சிறந்தனவெனக் கருதுகிறேன். பிறர்
தொழிலைப் பார்த்தெழுதாமல், தமக்குரிய சொந்த ஞானத்தினல்
அவ்வூர் ஓவியர்கள் சித்திரமெழுதுவதாக அச்சித்திரங்களே புலப்
படுத்துகின்றன.

சுவா: ஆம், உண்மைதான். அவர்கள் தங்கள் ஓவிய நூல்
வன்மையினலேதான் பெரிய சாதியாராக மதிக்கப்படுகிறார்கள்.
அவர்களும் நம்மைப்போல ஆசியாக் கண்டத்தவர்கள். நாம் நமது
உரிமையனைத்தையும் இழந்துவிட்டோமெனினும், எஞ்சியிருக்கும்
பாகமும் பிறராற் பெருமதிப்பைப் பெறுதற்குரியது. ஆசியா
நாட்டவரின் மனம் சித்திரம் நிறைந்தது. அழகில்லாத பொருளை
அவர்கள் வழங்குவதில்லை. சமயாநுஷ்டானத்திலும் சீரும் அழ

கும் செறிந்துள்ளன. விசேஷ தினங்களில் மாவினுற் சிறப்புறக் கோலமிடக்கூடிய பெண்கள் நம்மவரால் மதிக்கப்படுகின்ருர்கள் அல்லவா ?

வினு: ஆங்கிலேயருடைய ஓவிய முறையும் மதிக்கப்படத் தக்கதல்லவா ?

சுவா: நீ எவ்வளவு பெரிய மூடனுயிருக்கிருய் ! உன்னை மாத் திரங் குறை கூறுவதனுல் ஆவதென்ன ? சாதாரணமாக நாம் எல்லோரும் இந்தத் தவருன எண்ணமுடையவர்களாய்த்தானே இருக்கிறேம் ? ஆ ! நமது நாடு கெட்ட கேட்டை என்னென்பேன் ! மக்கள் தம்மிடத்துள்ள பொன்னைப் பித்தளையாக மதிப்பதும், அன் னியர்களுடைய பித்தளையைப் பொன்னென மதிப்பதும் மேற் றிசைக் கல்வியின் பயனுக விளைந்த விந்தை என்போமா ? ஐரோப் பியர் ஆசியாவிற்கு வந்த நாள் முதல், வனப்பின் வகையை யறிந்து தமது வாழ்வில் சீரும் அழகும் செறிவுறச் செய்ய முயன்று வருகி ருர்களென்பதை இனியாகிலும் அறிந்துகொள்.

நான்: மகராஜ், நீங்கள் இப்படிச் சொல்லுவதை மற்றவர்கள் கேள்வியுற்ருல் நீங்கள் குறையை மாத்திரமே நோக்குகிறீர்கள் என நினைப்பார்கள்.

சுவா: அப்படி நினைப்பது இயல்புதான். தம்மைச் சூழ இருப்பனவற்றைக் கூர்ந்து நோக்காமல் ஒரே போக்காய்ப் போய்க் கொண்டிருப்பவர்கள் வேறெவ்வாறு நினைப்பார்கள் ? என் கண் ணுல் நான் காண்பதுபோல, உங்களனைவருக்கும் காட்ட எவ்வளவு விரும்புகிறேன் ! மேலை நாட்டாருடைய கட்டடங்களைக் கவனித்துப் பார். அவை எவ்வளவு மொட்டையாய்க் கருத்தில்லாதனவா யிருக்கின்றன ! அதோ இருக்கிற அரசாங்கக் கட்டடங்களைப் பார். அவற்றின் புறப்பக்கத்தைப் பார்ப்பதனுல் அவை இன்ன பொருள் பற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லுதல் கூடுமா ? இல்லை; இனி அவர்களுடைய உடையைப் பார். சுருக்கம் விழாது நிமிர்ந்திருக்கிற மேற்சட்டைகளும் காற்சட்டை களும் உடம்போடு ஒட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்தால், அழகற் றதாய்த் தோன்றுகிறதல்லவா ? அதில் என்ன அழகு இருக்கிறது ? நம்முடைய தேசத்தைச் சுற்றிப் பார். நம் வீடு வாயில்கள் எவ்வளவு அழகும் அமைவும் பொருந்தியிருக்கின்றன ! அவர்கள் தண்ணீர் குடிக்கிற கண்ணுடிப் பாத்திரத்தையும், நம்முடைய செம்பையும் ஒப்பிட்டுப் பார். இரண்டிலும் எது அழகா னது ? நமது நாட்டுக் குடியானவர்களுடைய வீடுகளைப் பார்த்த தில்லையா ?

நான்: ஆம்: பார்த்திருக்கிறேன்.

சுவா: என்ன பார்த்தாய் ?

இன்னது சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. ஆனுல்,

''அவர்கள் வீடு வாயில்கள் நன்றாய்ச் சுத்தம் செய்யப்பட்டு, சாணத்தினால் நன்றாய்த் தினமும் மெழுகப்பட்டு அழகாயிருக்கின்றன,'' என்று பதில் உரைத்தேன்.

சுவா: அவர்கள் நெல்லினைச் சேமித்து வைத்திருக்கிற களஞ்சியங்களைப் பார்த்தாயா? அவை எவ்வளவு அழகு செறிந்திருக்கின்றன! மண் சுவர்களிலுங்கூட எவ்வளவு சித்திர வேலைப்பாடு செய்திருப்பார்கள்! மேலை நாட்டிலுள்ள சாதாரண மக்களின் வாழ்க்கையைக் காண்பாயாயின், மாறுபாட்டை உணர்வாய். அவர்கள் பயனைக் கவனிப்பார்களேயன்றி, சிறப்பைக் கவனியார்கள். மேலை நாட்டான் எப்பொருளிலும் பயனைத் தேடுவான்; நாம் சீரும் சிறப்புந் தேடுவோம். மேற்றிசைக் கல்வி பரந்ததனால் நம்முடைய அழகிய செம்புகள் புறக்கணிக்கப்பட்டு, பூச்சுக் கோப்பைகள் நம்முடைய வீடுகளிலும் உலாவத் தொடங்கிவிட்டன. நகைக்கிடமான நாமும், அவர்கள் கொள்கைகளை நமது வாழ்க்கையில் நடமாடும்படி விட்டுவிட்டோம். பயனும் அழகும் ஒருங்கு சேருமாறு நடந்துகொள்வதே நாம் வேண்டுவது. ஜப்பான் மிகு விரைவில் இவ்வுண்மையை அறிந்து அனுட்டித்தமையினாற்றான் மேனிலையை அடைந்துவிட்டது. இனிமேல் ஜப்பானியர்கள் மேலை நாட்டாருக்கு விரைவில் பாடஞ்சொல்லி வைப்பார்கள்.

வினா: மகராஜ், உலகில் எந்தச் சாதியார் மிகவும் அழகான உடையணிந்துகொள்கின்றனர்?

சுவா: ஆரியரே மிகவும் அழகான உடையணிந்துகொள்கின்றனர். இது ஐரோப்பியருக்கும் சம்மதமே. நம்மவருடைய உடை எவ்வளவு அழகாகக் கொய்சகங்களோடு மடிந்து தொங்கும் இயல்பினது! பிற தேசத்தாருடைய உடை, ஆரியருடைய உடையைப் பின்பற்றியதே. அதனாலேதான் அத்தேசத்தில் அரசருடைகள், மற்றையோர் உடை வகையிலிருந்து வேறுபட்டிருக்கின்றன. சிங்கி, நீ ஐரோப்பிய உள்ளங்கிகளை அணிவதைத் தவிர்த்துவிடுக.

வினா: ஏன் மகராஜ்?

சுவா: ஏனெனில், உள்ளங்கிகளை (ஷர்ட்டு) ஐரோப்பியர் உள்ளே அணிந்துகொள்வார்கள். அவற்றைப் புறத்தே அணிவது அவர்களுக்கு நகையை விளைவிக்கும். வங்க தேசத்தார் உடையைப்பற்றி ஒரு சிறிதுங் கவனியாது, முன்னோர் வழக்கமில்லாதவர்கள் போல எதையும் எந்த மாதிரியாவது அணிந்துகொள்ளுகிறார்கள். இஃது எவ்வளவு மதியீனம்! கீழோர் தொட்ட உணவினை உண்டால் சாதி விலக்கு உண்டாகும் என்னும் விதியினைப் போல, மரபு நெறி தவறிய உடையினை அணிபவர்களையும் விலக்கி வைக்க ஒரு விதி வேண்டும். நமது சொந்த உடையை நாம் ஏன் அணிந்து கொள்ளக் கூடாது? ஐரோப்பியருடைய உள்ளங்கியையும், மேற்சட்டையையும் அணிய வேண்டிய அவசியமென்ன?

இத்தருணத்தில் மழை பெய்யத் தொடங்கியது. உணவு வேளையைக் குறிக்கும் மணியடிக்கப்பட, நாங்களிருவரும், மற்றவர்களும் உணவு அருந்தும்பொருட்டு உணவுச் சாலைக்குப் போனோம். உணவருந்தும் பொழுது சுவாமி என்னைப் பார்த்து, ''குறைந்த அளவாக உண்ண வேண்டும். அவ்வாறு உண்ணுகிற உணவு உடலுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களுஞ் செறிந்ததாயிருக்க வேண்டும். விலாப்புடைக்க அரிசிச் சோற்றை உண்பது சோம்பல் அனைத்துக்குங் காரணம். ஜப்பானியர் அரிசிச் சோற்றையும் பருப்பையும் தினம் இரண்டு அல்லது மூன்று வேளை உண்பார்கள். மிகுந்த உடல் வலிவுள்ளவர்களும் சிற்றளவாகவே உண்பார்கள். உண்கிற வேளை பலவாயிருக்கலாம். பொருளுள்ளவர்கள் தினம் ஒரு வேளையாவது மாமிசம் உண்பார்கள். நாமோ, தினம் இரண்டு முறை தொண்டைக்கு வரும் வரை அரிசிச் சோற்றை நிறைய உண்டுவிடுகிறோம். உள்ள சத்தி முழுவதும் அவ்வளவு சோற்றையும் செரிப்பதிலேயே கழிந்துவிடுகிறது,'' என்றார்.

வினா: வறியோராகிய வங்கதேசத்தவர் மாமிசம் (போன்ற விலை மிக்க உணவுகளை) உண்ணுதல் இயலுமா?

சுவா: ஏன் இயலாது? சிறிதளவாக உண்ணலாம். வறுமைக்கெல்லாங் காரணம் சோம்பற்குணமே. குடும்பப் பாதுகாப்பின்பொருட்டு உழைக்கிற மக்களுள் ஒருவன் இறந்துவிட்டான், அல்லது அவனுடைய சம்பளங் குறைக்கப்பட்டது என்று வைத்துக்கொள்வோம். அந்தக் குடும்பத்தார் என்ன செய்கிறார்கள்? குழந்தைகளுக்குக் கொடுக்கிற பசுவின் பாலை அளவிற்குறைக்கிறார்கள்; அல்லது தங்களுடைய ஒரு வேளை உணவைக்குறைத்து இரவில் அரிசிப் பொரியை உண்டு காலம் கழித்துவிடுகிறார்கள்.

வினா: அவர்கள் வேறென்ன செய்ய இயலும்?

சுவா: என்ன செய்யவேண்டுமெனில், இயன்ற அளவு முயன்று சிறிது கூடுதலாக உழைத்து, உணவைச் சுருக்காமல் தக்கவாறு நடந்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்யச் சோம்பேறித்தனம் விடுவதில்லை. கடைத்தெருவிற்போய் ஊர்க்கதை பேசி வம்பளந்து அருமையான நேரத்தையெல்லாம் வீணிற்போக்கடிப்பதே நம்மவருடைய கொள்கையாயிற்று. ஐயோ! இவர்கள் பாழாக்குகிற நேரத்தைப் பயன்படுத்தப் பயின்றுகொண்டார்களாயின், எவ்வளவு நன்மையுண்டாகும்!

(7)

கல்கத்தாவில் பலராம் பாபு வீட்டில் சுவாமிஜி வாசம் பண்ணிய நாளில் ஒரு நாள், நான் அவரைப் பார்க்கப் போயிருந்தேன். ஜப்பானையும் அமெரிக்காவையும் பற்றி நீண்டநேரம் பேசிக்கொண்

டிருந்த பின்பு, நான் அவரை நோக்கி, ''சுவாமிஜி, மேலைத் தேசங்களில் உங்களுக்கு எத்தனை சிஷ்யர்கள் இருக்கிறார்கள் ?'' என்று கேட்டேன்.

சுவா: பலர் இருக்கின்றனர்.

வினு: இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் பேர் இருப்பரா ?

சுவா: அதற்கும் அதிகம் இருக்கலாம்.

வினு: அவர்கள் எல்லோருக்கும் நீங்கள் மந்திரோபதேசம் செய்திருக்கிறீர்களா ?

சுவா: ஆம்.

வினு: பிரணவத்தோடு மந்திரம் உச்சரிக்கும்படி அவர்களுக்கு உத்தரவு செய்திருக்கிறீர்களா ?

சுவா: ஆம்.

வினு: மகராஜ், அப்படிப்பட்ட உத்தரவை நீங்கள் எங்ஙனம் செய்யலாம் ? பிராம்மணரல்லாதார்—முக்கியமாகச் சூத்திரர்—பிரணவம் உச்சரிக்கக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறதே ! அஃதன்றியும், மேலைத் தேசத்தார் சூத்திரர்களுமல்லர்—மிலேச்சராயிற்றே !

சுவா: என்னிடம் ஞானோபதேசம் பெற்ற மேலைநாட்டுச் சிஷ்யர்கள் பிராம்மணரல்லர் என்பதை நீ எப்படிச் சொல்லுதல் கூடும் ?

வினு: இந்தியாவுக்குப் புறம்பே யவன நாட்டிலும் மிலேச்ச நாட்டிலும் பிராம்மணர் உண்டா ?

சுவா: என்னுடைய சிஷ்யர் எல்லாரும் பிராம்மணர். பிராம்மணரல்லாதார் பிரணவம் உச்சரித்தல் தகாதென்பதை முற்றிலும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், பிராம்மணனுடைய புத்திரன் தவறாமல் பிராம்மணன் ஆவானோ என்றால், ஆதலுங்கூடும், ஆகாமற் போதலுங்கூடும். பாக்பஜார் தெருவில் அகோர சக்கரவர்த்தியின் மருமகனைப்பற்றிக் கேள்விப்படவில்லையா ? அவன் தோட்டியாய்மாறிஅந்தச் சாதிக்குரிய தொழில் செய்துகொண்டிருந்தானே! அவன் பிராம்மணனுடைய புத்திரனா, அல்லவா ? பிராம்மணச்சாதி வேறு; பிராம்மணத் தன்மைவேறு. இந்தியாவிற் பிராம்மணச்சாதியிற் பிறந்தவனைப் பிராம்மணனென்று கொள்ளுகிற வழக்கமுண்டு; மேலைத் தேசத்திற் பிராம்மணத் தன்மையுடையவனையே பிராம்மணன் என்று கருதுவார்கள். சாத்துவிகம், ராஜசம், தாமசம் ஆகிய முக்குணங்களிருப்பதுபோலவே பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், நான்காம் வருணத்தான் என்று ஒருவனைப் பகுத்துக் காட்டுகிற குணங்களுமிருக்கின்றன. பிராம்மணத் தன்மையும் க்ஷத்திரியத் தன்மையும் இந்நாட்டினின்று அகன்று போகின்றன. மேலைத் தேசத்தவர்கள் இப்பொழுது க்ஷத்திரியத் தன்மையை அடைந்திருக்கின்றார்கள். இன்னும் ஒரு படியிற் பிராம்மணத் தன்

மையை அடைவார்கள். அந்நிலைக்கேற்றவாறு தங்களைச் சீர்படுத்திக்கொண்டவர்கள் அங்கு இருக்கிறார்கள்.

வினு: அப்படியானால், நீங்கள் சாத்துவிக நிலையை அடைந்தவர்களைப் பிராம்மணர் என்கிறீர்களா ?

சுவா: ஆம், அப்படியே. சாத்துவிகம், ராஜசம், தாமசம் என்ற குணங்கள் மூன்றும் ஒவ்வொரு மனிதனிடத்தும் ஏற்றத் தாழ்ச்சியாக அமைந்திருப்பது போல, பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, நான்காம் வருணத் தன்மையாகிய நான்கும் ஒவ்வொரு மனிதனிடத்தும் ஏற்றமாகவோ குறைவாகவோ இருக்கின்றன. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு குணம் மேற்பட்டுத் தோற்றும். உதாரணமாக, ஒரு மனிதன் சம்பளத்துக்கு ஊழியஞ் செய்யும் போது நான்காம் வருணத் தன்மையிலிருக்கிறான்; பொருள் கருதிச் சுயமான வியாபார முயற்சி செய்யும்போது அவன் வைசியனாகிறான்; துஷ்ட நிக்கிரகம் பண்ணப் போர் புரியும் போது க்ஷத்திரியத் தன்மையைக் காட்டுகிறான். இறைவரைப் பற்றித் தியானித்து அவரைப்பற்றிச் சம்பாஷிப்பதிலே காலங் கழிக்கும்போது அவன் பிராம்மணன் ஆகிறான். இயல்பாகவே ஒருவன் ஒரு சாதியிலிருந்து இன்னொரு சாதிக்கு மாறிக்கொள்ளுதல் கூடும். அல்லாவிட்டால், விசுவாமித்திரர் பிராம்மணரானதும் பரசுராமர் க்ஷத்திரியரானதும் எப்படி ?

வினு: நீங்கள் சொல்வது நியாயமாகத் தோற்றுகிறது. ஆனால், எங்களுடைய பண்டிதர்களும் குல குருக்களும் ஏன் இவ்வாறு சொல்லவில்லை ?

சுவா: அதுதான் இந்நாட்டிலுள்ள ஒரு பெருந்தீமை. இது நிற்க.

அதன்மேல் சுவாமிஜி மேலைத் தேசத்தார் எவ்விஷயத்தையும் விடாப்பிடியாகச் செய்கிற குணத்தை வியந்து கூறிச் சமயானுட்டானத்திலும் அவர்கள் இந்தக் குணத்தைக் காட்டுகிறார்கள் என்று சொன்னார்.

நான்: உண்மைதான் மகராஜ் ! மேலை நாட்டார் சமயானுட்டானம் செய்யத் தொடங்கினால் அவர்களுடைய சித்தசத்தி பிராண சத்தி முதலியன அதிவிரைவில் பெருகுகின்றன என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். சில நாட்களுக்கு முன்பு மேலைத் தேசத்துச் சிஷ்யனொருவன் எழுதிய காகிதத்தைச் சாரதானந்த சுவாமி காட்டினார். நான்கு மாதங்கள் மாத்திரம் சாதனை செய்ததனால் எவ்வளவோ சத்திகள் உண்டாய்விட்டதாக அக்காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

சுவா: பார்த்தாயா ! இதனால் மேலை நாட்டினில் பிராம்மணர் உண்டோ இல்லையோ என்பதை உணர்ந்துகொள்ளலாம். இங்கே பிராம்மணர் உண்டுதான். ஆனால், அவர்களுடைய கொடுங்கோன்

மையினால் நாட்டைப் பாழ்படுத்துகிறார்கள். அவர்களிடமுள்ள பிராம்மணத் தன்மையும் சிறிது சிறிதாக அகன்று போகிறது. குரு சிஷ்யனுக்கு மந்திரோபதேசம் செய்வதுண்டு; ஆனால், அது இந்த நாட்டில் ஒரு வியாபாரமாய்விட்டது. இனி, குருவுக்கும் சிஷ்யனுக்கும் இடையிலுள்ள சம்பந்தமும் ஆச்சரியமானது. குருவினுடைய வீட்டிற் சாப்பாட்டுக்கு ஒன்றுமில்லை என்று வைத்துக்கொள்வோம்; அவருடைய மனைவி அவரை அணுகி, ''பகல் முழுக்கச் சொக்கட்டானடிக்கொண்டிருந்தால் பசி தீர்ந்துவிடுமா? உம்முடைய சிஷ்யரிடம் ஒருமுறை போய் வாரும்'' என்று சொல்ல, அதற்குப் பிராம்மணர், ''நாளைக் காலையிலே எனக்கு நினைப்பூட்டி வை. நம் சிஷ்யன் ஒருவனுக்கு லாபம் வந்திருக்கிறதாம்; நான் அவனிடம் பல நாளாகப் போகவுமில்லை,'' என்று கூறுகிறார். இதுதான் வங்காளத்தில் உங்கள் குல குருக்களுடைய நிலைமை. மேலை நாட்டில் குருவின் தன்மை அவ்வளவு கெட்டுப்போகவில்லை. அது உங்கள் நிலையைவிட நல்லது.

III

சுரேந்திர நாத சேன்

(1)

[1898-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 22-ஆம் தேதி, சனிக்கிழமை.]

அதிகாலையில் நான் சுவாமிஜியைப் பார்க்கப்போனேன். இந் நாளில் அவர் கல்கத்தாவில் இராமகாந்தவசு வீதியிலுள்ள ஐம்பத்தேழாம் இலக்கமுடைய பலராம் பாபு வீட்டில் உறைந்து வந்தார். உள்ளறை நிறையப் பத்தர்கள் அவருடைய திரு வாக்கைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சுவாமிஜி அவர்களைப் பார்த்து, ''சிரத்தை வேண்டும்; சுய நம்பிக்கை வேண்டும். பலமே உயிர்; பலவீனமே மரணம். 'சாவில்லாததாய்ப் பந்தங்களோடு தொடர்பில்லாததாய், இயல்பாகவே பரிசுத்தமாய் இருக்கிற ஆன்மாவே நாம். ஆதலால், நாம் பாவச் செயல் புரிதல் கூடுமா? ஒரு போதுங்கூடாது,' என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். அத்தகைய நம்பிக்கை நம்மை ஆண் தன்மைபொருந்திய மனிதராக்கும்; தேவர்களுமாக்கும். இவ்வாறுகிய சிரத்தையை மறந்தமையினுலே தான் நாடு வீணுகப் பாழ்பட்டுப்போயிற்று,'' என்று மொழிந்தார்.

அப்பொழுது நான், ''அப்படியாயின், இந்தச் சிரத்தையை நாம் எவ்வாறு இழந்தோம்?'' என்று வினவினேன்.

சுவா: இளம்பருவந்தொட்டு நாம் கற்றதெல்லாம் பிழையான கல்வி. நாம் ஒன்றுக்கும் பயனில்லாதவர்களென்றுதான் படித்திருக்கிறோம். நம்முடைய தேசத்தில் அறிவிற் பெரியவர்களும் வீரர்களும் பிறந்தார்களென்பதை நமக்கு ஒருவரும்சொல்லி வைக்கவில்லை. பலத்தைத் தரும் உண்மையொன்றும் நமக்குக் கற்பிக்கப்படவில்லை. கைகால் முதலிய அவயவங்களை உபயோகித்துத் தொழில் செய்யவும் நம்மைப் பயிற்றுவிக்கவில்லை. ஆங்கிலேயர்களின் முன்னோர்களைப் பற்றிய விஷயங்களைப் பயின்றோம். நம்முடைய முன்னோர்களைப் பற்றிச் சொல்லுவாரின்றியிருந்தோம். பலவீனத்திலேயே பயிற்றப்பட்டோம். பிறர் ஆட்சிக்குட்பட்டு வாழ்தலினுல் நாம் பலவீனர்களென்றும் நாமாகவே ஒன்றுஞ் செய்யத் தகாதவர்களென்றும் நினைத்துவிட்டோம். இப்படியிருக்கும்பொழுது சிரத்தை எங்ஙனம் நிலைபெற்றிருக்கும்? மனத் திடமும் சுய நம்பிக்கையுமுடையவர்களாக நாம் மீட்டும் சிரத்தையுள்ளவர்களாக வேண்டும். அப்பொழுதுதான் நமது தேச நன்மைக்கு நாம் செய்ய வேண்டிய தொண்டெல்லாம் நாமே செய்வோம்.

வினு: இஃதெங்ஙனமாகும்? மக்கட்சமுதாயத்திலுள்ள அளவிறந்த துன்பங்களுக்கெல்லாம் சிரத்தை எவ்வாறு நிவர்த்தியைத் தரும்? நாட்டில் எவ்வளவு துன்பங்களிருக்கின்றன! இவற்றையெல்லாம் அகற்றுவதற்காகவே இந்திய காங்கிரஸ் மகாசபை முதலிய தேசிய சபைகள், கூட்டங்கூடி, பிரித்தானிய ராஜ்யத்தாருக்குத் தாழ்மையான விண்ணப்பம் செய்கின்றனவே! நம்முடைய குறைகளைத் தெரியப்படுத்த இதைவிட நல்ல வழி எது? இந்த விஷயத்தில் சிரத்தையினுல் ஆவதென்ன?

சுவா: குறை உங்களுடையதா அல்லது அரசாங்கத்தினரைச் சார்ந்ததா? உங்களுடையதாயின், அவர்களேன் தலையிட்டுக்கொள்ளுகிறுர்கள்? உங்கள் குறையை நீங்களே அகற்றிக்கொள்ள வேண்டும்.

வினு: குடி மக்களாகிய எங்களுடைய கஷ்டங்களை நீக்குதல் அரசாளுபவர்களுடைய கடமையல்லவா? ஏதாவது வேண்டுமாயின் அரசரைவிட வேறு யாரைக் கேட்கலாம்?

சுவா: இரப்போனுக்குக் குறை என்றும் அகலாது. நீங்கள் கேட்பதையெல்லாம் அரசாங்கத்தினர் அளித்துவிட்டதாக வைத்துக்கொள்வோம். பெற்ற நன்மையைப் பேணி நடத்த மனிதர் வேண்டுமல்லவா? ஆதலால், முதலிலே ஆண் தன்மை பொருந்திய மனிதரை ஆக்கிவைப்போம். ஆண் தன்மை வேண்டும்; அதுவும் சிரத்தையினுலேதான் ஆகும்.

வினு: ஆனுல் ஐய, பெரும்பாலோர் இப்படி நினைக்கவில்லையே?

சுவா: நீ பெரும்பாலாரென்று சொல்வது மூடரையும் மந்த புத்தியரையுமே. தம்மறிவு கொண்டு சிந்திப்பவர் எவ்விடத்தும் அற்பத் தொகையினர்தாம். ஆயினும், எல்லா விஷயங்களிலும் இவர்களே தலைமை வகித்துக் காரியம் நடத்திவைப்பார்கள். இவர்களே பெரும்பாலாரை வழி நடத்திவைப்பார்கள். அது நன்று. ஏனெனில், இவர்களைப் பின்பற்றி நடப்பதனுல், எல்லாக் காரியங்களும் செவ்வனே நடந்தேறும். 'யாருக்கும் பணிந்து நடக்கமாட்டோம்!' என்று தலை நிமிர்ந்து திரிபவர் மூடர். அவர்கள் தங்களது மூடயோசனையைக் கொண்டு நடந்து தங்களைத் தாங்களே பாழாக்கிக்கொள்ளுகிறுர்கள். மக்கட்சமுதாயத் திருத்தத்தைப்பற்றி வாய்ப்பேச்சு அதிகமாகப் பேசுகிறீர்கள். ஆனுல், என்ன செய்கிறீர்கள்? திருத்தமென்பதனுல் நீங்கள் கருதுவது விதவா விவாகம், பெண்களுக்குச் சுயேச்சை முதலியன அல்லவா? பின்னும் இந்தத் திருத்தங்களும் ஒரு சில சாதியாருக்குள்ளேயே நடத்திக்கொண்டு வருகிறீர்கள். இந்த விதமான திருத்தங்களாற் சிலருக்கு நன்மை உண்டாகும். நாடு முழுவதுக்கும் என்ன பயனுண்டாகப் போகிறது? இந்த விதத் திருத்தங்கள் திருத்தங்களா, அல்லது சுயநலக் கொள்கைகளா? எப்படியாவது ஒரு சாரார்

தமது வீட்டைச் சுத்தமாக்கி வைத்துக்கொண்டு மற்றவர்களை வர வரக் கெட்டுப்போக விடுகிறதா?

வினு: அப்படியாயின், மக்கட்சமுதாயத் திருத்தம் வேண்டா என்பதோ சுவாமிகளுடைய கருத்து?

சுவா: யார் அப்படிச் சொன்னவர்கள்? திருத்தம் வேண்டுவதுதான். நீங்கள் திருத்தம் திருத்தம் என்று சொல்பவையெல்லாம் ஏழை மக்கட்குப் பயனற்றவை. நீங்கள் ஆரவாரம் செய்கிறகைம்பெண்மணம் முதலியன அவர்களுக்குள்ளே இப்பொழுதும் இருக்கின்றன. ஆதலால், நீங்கள் சொல்லுகிற திருத்தங்களை அவர்கள் திருத்தங்களாகக் கருதமாட்டார்கள். சிரத்தைக் குறைவினுலேயே நமக்குள் எல்லா வகையான தீமைகளும் விளைந்திருக்கின்றன. நோயினுடைய அடி வேரைக் களைதலன்றோ சிறந்தது! அஃதன்றி, அதை அடக்கி வைப்பதனுற் பயனென்ன? பல விதத் திருத்தங்கள் வேண்டும்; வேண்டாவென்று சொல்வது பேதைமை. இந்தியாவிற் கலப்பு மணம் வேண்டுமென்பதற்குப் பல காரணங்களிருக்கின்றன. மிக நெருங்கிய மணத்தினுலே மக்கள் சமுதாயத்தில் நாடோறும் பலங்குன்றிப் போகின்றது.

அன்றைய தினம் சூரிய கிரகணமாதலால், இதுகாறும் பேசிக்கொண்டிருந்தவர் சுவாமியை வணங்கிவிட்டுக் கங்கையில் நீராடப் போவதாகவும் பின்னெருதினம் வருவதாகவுஞ் சொல்லிப் போய் விட்டார்.

(2)

[1898-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 23-ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை.]

இன்று சாயங்காலம் பாக்பஜாரில் பலராம் பாபு வீட்டில் இராமகிருஷ்ண சபையின் வாராந்தரக் கூட்டம் கூடுகிற நேரம். துரியானந்த சுவாமியும், யோகானந்த சுவாமியும், பிரேமானந்த சுவாமியும், பிறரும் மடத்திலிருந்து வந்திருந்தனர். சுவாமிஜி கிழக்குப் பக்கத்துச் சாலையிலிருந்தார். அப்பக்கமும் வடக்குத் தெற்குச் சாலைகளும் மக்களால் நிறைவுற்றிருந்தன. சுவாமி பட்டணத்திலிருக்கிற நாட்களிலெல்லாம் இவ்வண்ணமே மக்கள் திரளாய் வந்திருப்பார்கள்.

கூட்டத்திலிருந்த மக்களுள் பலர் சுவாமிஜி இன்னிசையோடு பாடுவாரென்பதை அறிந்து கேட்பதற்கு விருப்புற்றனர். அப்பொழுது மகேந்திர மஹாசயருக்குச் சமீபத்தில் இருந்த சிலர் அவரைப் பார்த்துச் சுவாமிஜியைப் பாடும்படி கேட்கச் சொன்ஞர்கள். அவர்கள் தங்களுக்குள்ளே பேசிக்கொள்வதைக் குறிப்பினுலறிந்த சுவாமிஜி, மஹாசயரைப் பார்த்து, ''மஹாசயரே, உங்களுக்குள்ளே என்ன, பேசிக்கொள்ளுகிறீர்கள்? வெளியாகச்

'சொல்லுங்கள்,'' என்றார். அப்பொழுது மஹாசயரவர்கள் விண்ணப்பித்துக்கொள்ளச் சுவாமிஜியும் உடன்பட்டுக் கேட்போருள்ளத்தைக் கவரும் தமது குரலினால், ''அன்பினோடுள்ளத்தில் சாமளை அன்னையை ஆதரித்தே இருத்தி,'' என்னும் பாடலைப் பாடினார். யாழிசை போன்று இனிமை பயந்த பாடல் முடிந்ததும் சுவாமிஜி மஹாசயரைப் பார்த்து, ''திருத்தியடைந்தீர்களா? இனிப் பாடல் வேண்டா. பாட்டின் ஆனந்தத்தினால் பரவசப்பட்டு விடுவேன். அஃதன்றியும், மேலை நாட்டில் பல முறை பிரசங்கஞ் செய்த காரணத்தினால், குரலுங் கெட்டுப்போயிற்று,'' என்றார். பின்னர்ச் சுவாமிஜி அங்கிருந்த மாணவ பிரம்மசாரியொருவரைப் பார்த்து, முத்தி நிலையைப் பற்றிப் பிரசங்கஞ் செய்யச் சொன்னார். அந்த பிரம்மசாரியினுடைய பிரசங்கம் முடிந்ததும், வேறு சிலரும் பிரசங்கம் செய்தனர். பிரசங்க விஷயத்தில் வாதம் நிகழ்த்தும்படி சொல்லி ஒரு கிருகஸ்த சிஷ்யரை ஆரம்பித்துப் பேசும்படி சுவாமிஜி ஆஞ்ஞாபித்தார். எழுந்து பேசிய அந்தச் சிஷ்யர், அத்வைதத்தையும் ஞானத்தையும் உயர்த்திப் பேசி, துவைதத்தையும் பத்தியையும் இழித்துப் பேசினமையால், சபையிலிருந்த வேறொருவர் மறுத்துப் பேசலானார். இருவரும் நீண்ட நேரம் சொற்போர் புரிவதைப் பார்த்த சுவாமிஜி, பின் வருமாறு சொல்லி இரு பாலாரையும் வாய் அமர்த்தினார்:

''வாதம் நிகழ்த்தும் பொழுது எதற்காக ஆத்திரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்துக்கொள்ளுகிறீர்கள்? கேளுங்கள்: 'உண்மை ஞானமும் உண்மைப் பத்தியும் ஒன்றேயாம்,' என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதுண்டு. பத்தி மார்க்கத்தின்படி கடவுளைப் பூரண அன்பின் வடிவமாகக் கொள்ளல் வேண்டும். இறைவன் அன்பின் வடிவமாய் இருத்தலால், 'ஐய, நின்பால் அன்புடையேன்,' என்று சொல்வதுகூடப் பொருந்தாத வாக்கியமாகும். அவனிலும் வேறாக அன்பென்பது ஒன்றுண்டா? உன்னுள்ளத்திலெழுகிற அன்பே அவன். உள்ளத்தைக் கவர்கிற அனைத்திலும் அவனைக் காணுதல் கூடும். சோரன் களவாடுவதும், விலைமகள் தனது உடலை விற்பதும், தாய் குழந்தையை நேசிப்பதும், யாதேனுமொரு வகை அன்பு பற்றியல்லவா? இந்த அன்பினிலெல்லாம் இறைவனைக் காணுதல் கூடும். அண்டங்கள் ஒன்றையொன்று கவர்கின்றன. ஆங்கும் அவனைக் காணுதல் கூடும். இனி இறைவன் எங்கு இருக்கிறானென்றறிவதே ஞானமார்க்கத்தின் கொள்கையாகும்; இதுவே பத்திமார்க்க ஞானமார்க்க சமரசமாகும். பாவ சமாதியில் மெய்ப்பொருட்காட்சி கண்ட பின்னர்த்தான் இறைவனுக்கும் அன்பனுக்குமுள்ள பேதம் நீங்குகிறது. பத்தியோக நூல்களில் இறைவனைத் தியானிப்பதற்கு ஐந்து முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. கடவுளோடு அபேதமாய் இருப்பதாகச்

சிந்திக்கிற ஆறுவது முறையொன்றுமுண்டு. ஆதலால், பத்திமான் பத்திமானுயிருப்பதோடு அபேதக் காட்சியுடைய அத்வைதியாயும் இருத்தல் கூடும். மாயையினுடைய வலையினுள்ளிருக்கும் வரையும் பேதக் காட்சியும் நிலைத்திருக்கும். தேசகால நிமித்தமோ நாம ரூபமாய்த் தோற்றுவதோ இங்கு மாயை எனப்படுவது. இந்தமாயை யைக் கடந்த பின்னர், ஒன்றுயிருக்கிற தன்மை புலப்படும். அந்த நிலையில் அத்வைதமுமில்லை, துவைதமுமில்லை; யாவும் ஒன்றுய் விடுகின்றன. ஆரம்ப அநுஷ்டானத்திற்றுன் பத்தி மார்க்கமும் ஞானமார்க்கமும் வேறுபாடுடையனவாகத் தோற்றுகின்றன. ஒரு சாரர் கடவுளைப் புறத்தே காண்கின்றனர்; மற்றொரு சாரார் அகத்தே காண்கின்றனர்; பரபத்தி என்னும் மற்றொரு படியிருப்ப தாக ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதுண்டு. அத்துவித நிலையில் ஸ்திரப்பட்டு முத்தியடைந்த பின்பும் இறைவன்பால் அன்பு செலுத் துவதே அது. 'முத்தி நிலையடைந்த பின்னர் எதற்காகப் பத்தி செலுத்த வேண்டும்?' என்று கேட்டால், ஜீவன் முத்தர்கள் விதி யனைத்தையும் கடந்தவர்களாதலால், அவர்களிடம் இந்தக் கேள் வியையுங் கேட்கக் கூடாதென்போம். முத்தராயினோர் சிலர், பத்திச் சுவையை அனுபவிப்பதற்காக அதனை முற்றிலும் விடாம லிருப்பதுண்டு.

வினு: கடவுள் குழந்தையினிடம் தாய் காட்டுகிற அன்பி லிருப்பது கூடுமாயினும், சோரர், விலைமகள் இவர்களுடைய உள் ளத்திலுள்ள அன்பிலும் இருக்கிறாரென்று சொல்லுதல் கூடுமோ? அங்ஙனமாயின், உலகத்திலுள்ள நன்மையைப் போலவே தீமைக் குங் கடவுள் உத்தரவாதியாவாரன்றோ?

சுவா: எல்லா வகை அன்பிலும் கடவுள் இயல்பாக அமைந் திருக்கிறாரென்னும் உண்மை மேலான மெய்யுணர்வெய்திய பின் னர்த்தோற்றும். ஒருவன் அந்த மேனிலையை அடைந்த பின்பன்றி இவ்வுண்மையை அனுபவத்தில் நிச்சயித்தல் கூடாது.

வினு: அங்ஙனமாயின், கடவுள் தீமையிலுமிருக்கிறாரென்னும் உண்மையை ஒத்துக்கொள்ளுதல் வேண்டுமோ?

சுவா: ஆராய்ந்து பார்ப்பாயானல், நன்மை தீமை என்பன, வழங்குவதற்கு உபயோகமான சொற்களாயிருப்பினும், ஒரு போதில் தீமையென்று சொன்ன பொருள், மற்றொரு போதில் நன் மையாயிருத்தலுங் கூடுமென்றறிக. உதாரணமாக, அதோ இருக்கிற விளக்கினை எடுத்துக்கொள்வோம். இதனுடைய ஒளியினுல் பொருள்களைப் பார்ப்பதற்கும் பல வகைப்பட்ட தொழில் செய்வ தற்கும் நன்மை ஏற்பட்டிருக்கிறதனுல், விளக்கினை நல்லதென் கிறோம்; அதே விளக்கில் விரலை வைத்தால் தீமை உண்டாகிறது. ஆதலால், ஒரு பொருள் நன்மையாவதும் தீமையாவதும் அதனை வழங்கும் முறையைப் பொறுத்திருக்கிறது. இங்ஙனமே பிறவும்.

பொதுவாகச் சொல்லுமிடத்து மனத்தையும் உடலையும் தக்கவாறு உபயோகிப்பது நன்மையாமென்றும், கெடுத்துக்கொள்வது தீமையாமென்றுஞ் சொல்லுதல் கூடும்.

பல கேள்விகளுக்குச் சுவாமிஜி விடை சொல்லிக்கொண்டிருக்கும்போது சபையிலிருந்த ஒருவர், "அண்ட கோளகையிலுள்ள உலகங்கள் ஒன்றினையொன்று கவர்கின்ற கவர்ச்சியில் இறைவனிருக்கிறனென்று சொல்வது உண்மையல்லாவிடினும், கவி நயம் நிறைந்தது," என்று சொன்னார்.

சுவா: அப்படியல்ல ஐயா, அந்த உண்மை மெய்யுணர்வடைந்தவனுக்குப் புலப்படுவது; இது கவிதையில் பிறக்கும் வெறுங்கற்பனையன்று.

இந்தக் குறிப்பினை விரித்துச் சுவாமிஜி பேசிக்கொண்டு போகும்பொழுது, சடமும் சித்தும் வேறல்லவென்றும், ஒரு பொருளே இரு வேறு வகையாய்த் தோற்றுகிறதென்றும், புறத்தேயுள்ள பிரபஞ்சத்திலும் அகத்தேயுள்ள பிரபஞ்சத்திலும் தோற்றுகிற வல்லமையெல்லாம் ஒரே சத்தியின் பரிணமங்களாமென்றும், சித்துப் பொருள் சிற்றளவாகத் தோற்றுமிடத்தை நாம் சடமென்றுசொல்லுகிறோமென்றும், எந்த நிலைமையிலும் எந்தக்காலத்திலும் பூரணமான சடப்பொருள் என்று சொல்லத்தக்க பொருளைக் காண்டலரிதென்றும், புறத்தேயுள்ள பிரபஞ்சத்தில் தோன்றுகிற உலகக் கவர்ச்சிச் சத்தியே உயர்நிலையில் அன்பின் கவர்ச்சியாகத் தோற்றுகிறதென்றும் அவர் கருதினதாக அறிந்துகொண்டேன்.

வினா: அங்ஙனமாயின், மனிதர்க்கிடையில் வேறுபாடிருப்பானேன்? தமக்குரிய கருவிகளை மனிதர் பிழையான வழியிற் செல்ல விடுவானேன்?

சுவா: இவ்வித வேறுபாடுகள் கருமத்தின் பயனாக ஏற்படுகின்றன. ஒருவனுடைய கருமத்துக்கு அவனே பொறுப்புள்ளவனாதலால், புலன்கள் தம் வழிச் செல்லாதடக்கிச் சரியான பாதையைப் பற்றி நடப்பதற்குரிய சாதனம் ஒவ்வொரு மனிதன் கையிலுமிருக்கிறது.

வினா: இவையெல்லாம் முன்வினைப் பயனென்பதை ஒத்துக்கொண்டாலும், இவற்றிற்கு ஓர் ஆரம்பம் இருக்க வேண்டுமே? ஆரம்பத்திற் கடவுள் மனிதரை நல்லவர்களாகவும் தீயவர்களாகவும் படைப்பானேன்?

சுவா: சிருஷ்டிக்கு ஆரம்பமுண்டென்று எங்ஙனஞ் சொல்லுவீர்? சிருஷ்டி அநாதியானது என்றே வேதங்கள் சொல்கின்றன. இறைவன் என்று உளனோ, அன்று முதல் சிருஷ்டியுமுண்டு.

வினா: நல்லது சுவாமி, இந்த மாயையென்பது ஏன் இங்கு இருக்கிறது? இது எங்கிருந்து வந்தது?

சுவா: கடவுளைப்பற்றிய நிலையில் 'ஏன்'? என்று கேட்பது

தவறு. குறைவு, குற்றம் உள்ள இடத்திலன்றே விசாரணையுண்டு? அகண்டமாய்ப் பரிபூரணமாய் இருக்கிற அவரைப்பற்றி என்ன கேள்வி இருக்கிறது? மாயை எங்கிருந்து வந்ததென்பது என்றுற் கேட்கக்கூடாத கேள்வியாயிருக்கிறது. நானும் நீயும் அனைவரும் தேசகால நிமித்தமாகிய மாயைக்குள்ளிருக்கிறோம். அங்ஙனம் இருந்துகொண்டு மாயை எங்ஙனம் ஆயிற்று என்று மாயைக்கு அப்பாற்பட்டதைக் கேட்டல் எவ்வாறமையும்?

வேறு பல வினுக்களுங் கேட்கப்பட்டன. இவற்றிலிருந்து மேலைத்தேச தத்துவ சாத்திரிகளாகிய **மில், ஹமில்டன், ஹெர்பட்டு, ஸ்பென்ஸர்** முதலியவர்களைப் பற்றி விசாரணை எழுந்தது, எல்லாவற்றுக்கும் சுவாமிஜி தக்க விடையளித்தார். மேலைத்தேசத் தத்துவ ஞானத்தில் சுவாமிஜிக்குள்ள ஆழமான ஆராய்ச்சியும், கேட்ட கேள்விகளுக்கெல்லாம் உடனே பதில் சொல்லுகிற தீவிர புத்தியும் யாவரையும் பிரமிக்கச் செய்தன.

பல விஷயங்களையும் பற்றிப் பேசியான பின் கூட்டமுங் கலைந்தது.

(3)

ஒரு வருணத்து உட்பிரிவுகளுக்குள்ளே கலப்பு விவாகம்—பாலிய விவாகத்துக்கு மறுதலை—இந்தியாவிற்கு வேண்டிய கல்வி முறை—பிரம்மசரியம்,

[1898-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 24ம் நாள், திங்கட்கிழமை.]

சென்ற சனிக்கிழமை சுவாமிஜியினிடத்தில் பல வினுக்களை வினவிய கனவான் இன்றும் வந்திருந்தார். அவர் கலப்பு விவாகத்தைப் பற்றிய விசாரணையை மீட்டும் தொடங்கி, "பல்வேறு நாட்டாரிடையே கலப்பு விவாகத்தை ஏற்படுத்தும் மார்க்கம் எது?" என்று கேட்டார்.

சுவா: வேற்று மதத்தைப் பின்பற்றும் அயல் நாட்டாரோடு கலப்புவிவாகம் நடத்தவேண்டுமென்பது எனது கருத்தன்று. இக் கால நிலையின்படி அப்படிநடத்தல் ஜனசமூகத்தின் கட்டுக்குலைந்து பல வகைத் தீமைகள் ஏற்படுவதற்கு ஏதுவாகும் என்பது உண்மையே. ஒரே சமயத்தை அனுட்டிக்கின்ற மக்களிடையே கலப்பு விவாகம் ஏற்பட வேண்டுமென்பதே எனது கொள்கை.

வினு: அதுவும் பல வகை அல்லலுக்குக் காரணமாகுமன்றோ? உதாரணமாக, எனக்கு வங்காள நாட்டிற் பிறந்து வளர்ந்த ஒரு மகளிருக்கிறதாக வைத்துக்கொள்வோம். அவளை மஹாராஷ்டிர தேசத்தானே, சென்னைப்பட்டினத்தானே இளைஞனொருவனுக்குமணமுடித்துக்கொடுப்பதாக வைத்துக்கொள்வோம்.

அந்தப் பெண் தன் நாயகனுடைய மொழியை அறிந்துகொள்ள மாட்டாள். அவனும் அவளுடைய மொழியை அறிந்துகொள்ள மாட்டான். இருவருடைய பழக்க வழக்கங்களிலும் ஒழுக்க முறையிலும் வேறுபாடுகள் எத்தனையோ இருக்கின்றன. இங்ஙனம் கலப்பு மணமான சதிபதிகளிடையே ஏற்படக்கூடிய கலக்கங்கள் இவை போல்வன பலவுள. மக்கட் சமுதாயத்திலே பலவித மாறுட்டங்கள் ஏற்படக்கூடும்.

சுவா: இத்தகைய கலப்பு விவாகங்கள் நடக்கக்கூடிய காலம் மிக நெருங்கி வருகிறது. ஆயினும், சடுதியாக அவற்றைத் தொடங்குவது அறிவுள்ள செயலாகாது. தடை குறைந்த வழியாகச் செல்வது காரிய சித்திக்குரிய முறைகளில் ஒன்றாகும். ஆதலால், முதலிலே ஒருவருடைய ஜாதியின் உட்பிரிவுகளுள்ளே மணங்கள் நடந்து வரட்டும். உதாரணமாக, வங்காளநாட்டு காயஸ்த ஜாதியாரை எடுத்துக்கொள்வோம். அவர்களுள்ளே உத்தரராார்கி, தக்ஷிண ராார்கி, வங்கஜ என்னும் பல பிரிவுகளுண்டு. இப்பிரிவினர் தம்முள்ளே சம்பந்தஞ் செய்துகொள்வதில்லை. உத்தரராார்கிக்கும் தக்ஷிணராார்கிக்கும் இடையே கலப்பு விவாகம் நடக்கட்டும். அது இப்பொழுது முடியாததாயின், தக்ஷிணராார்கிக்கும் வங்கஜருக்குமிடையே கலப்பு மணம் நடக்கட்டும். இம்மாதிரி உள்ளதை வளர்த்துக் கைக்கொள்ளக் கூடியதைக் கைக்கொள்வதே முறை. முற்றிலும் உடைத்துக் கட்டவேண்டுமென்பது மக்கட்சமுதாயச் சீர்திருத்தத்தின் கருத்தன்று.

விஞ: நல்லது; தேவரீர் சொல்லுகிறபடியே ஆகட்டும். ஆனால், இதனால் விளையக்கூடிய நன்மை என்ன?

சுவா: நம்முடைய மக்கட்சமுதாயத்தில் பல நூற்றாண்டுகளாக ஒரே ஜாதியின் ஒரே உட்பிரிவினுள்ளே மணம் முடித்துக்கொள்ளுகிற வழக்கம் நடந்துவந்தமையினாலே நெருங்கிய பந்துக்களிடையே மணம் நடந்தேறுவதையும் இதனால் நம்முடைய மக்கள் உடல் வலிமையிற் குறைவடைந்து பல நோய் துன்பங்களுக்கு இடமாகின்றார்களென்பதையுங் கண்கூடாகக் காணலாமே? வேற்று உதிரம் வந்து சாராது ஒரு சிறு வட்டாரத்தினுள்ளே மீட்டும் மீட்டும் மணமுடிப்பதனால் அத்தகைய மணத்தின் பயனாகப் பிறக்கிற குழந்தைகள் தந்தையருடைய நோயோடு பிறக்கிறார்கள். நோய்கிருமிகளை எதிர்த்து வெல்லுவதற்கு அவர்களுடைய இரத்தத்திற் சத்தியில்லை. இக்காலத்திலுள்ள நோய்களினின்றும் அவற்றின் காரியமாகிய பல வகைத் துன்பங்களினின்றும் நம்முடைய மக்களைக் காப்பாற்ற வேண்டுமாயின், மணமுடிக்கும் எல்லை விரிவடைய வேண்டுமென்பது வெளிப்படை.

விஞ: இளம்பிராய மணத்தைப் பற்றித் தேவரீருடைய கருத்து யாது என அறிய விரும்புகிறேன்.

சுவா: வங்காளநாட்டில் கல்வியறிவுள்ள வகுப்பார்களிடையே ஆண் மக்களுக்கு இளமையிலேயே மணமுடித்து வைக்கும் வழக்கம் படிப்படியாகக் குறைந்து வருகின்றது. பெண் மக்களும் முன்னேவிட இரண்டொரு வயது ஏறிய பின்புதான் மணமுடித்துக் கொடுக்கப்படுகிருர்கள். இது பொருளின்மையின் நெருக்கத்தினுல் ஏற்பட்டது. எக்காரணத்தினுலாயினுமாகுக. சிறுமியர்களே மண முடித்துக் கொடுக்கிற வயது இன்னும் உயர்த்தப்பட வேண்டும். இந்த விஷயத்தில் தந்தைதான் என்ன செய்வான்? பாவம், சிறுமி சிறிது வளர்ந்துவிட்டால், தாய் முதற்கொண்டு இனபந்துக்கள் அயலாராயுள்ள பெண்களெல்லோரும் விரைவில் மணமுடித்து வைக்கவேண்டுமென்று நெருக்கத் தொடங்குவார்கள். மண வினையை நிறைவேற்றும் வரையும் தந்தையை அமைதியாயிருக்க விடமாட்டார்கள். மேலும், இந்த விஷயத்தில் உங்களுடைய போலிச் சமயவாதிகளைப் பற்றிச் சொல்வதைவிடச் சொல்லாமல் விடுவது நல்லது. இந்நாட்களில் இவர்கள் சொற்களுக்குச் செவி சாய்ப்பார் யாருமில்லை. ஆயினும், இப்போலிகள் தாமே தம்மைத் தலைவராக எண்ணி வெளிப்பட்டுவிடுகிருர்கள். சட்டசபையார் பன்னிரண்டு வயதுக்குக் குறைந்த பெண்ணை மணம் முடித்துக் கொள்பவனுக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்னும் கருத் தடங்கிய உளப்பாட்டுவயது மசோதாவைக் (Age of Consent Bill) கொண்டுவர, அதைக் கண்ட உங்கள் சமயத்துப் போலித்தலைவர் கள், 'ஐயோ! எங்கள் சமயம் மாய்ந்துபோய்விட்டதே!' என்று கூச்சலிட்டு அந்த மசோதாவைத் தடுத்து நின்ருர்கள். பன்னி ரண்டு பதின்மூன்று வயதுச் சிறுமியைக் கருப்பவதியாக்குதல் இவர்களுடைய சமய முடிவு போலும்! இதைக் கண்ட அரசாங்கத் தினர், 'ஐயோ! பாவம்! இவர்களுடைய சமயந்தான் இருந்தவா றென்னே! இத்தகைய மக்கள் அரசியற் சீர்திருத்தங்கள் கேட்பதும் கலகமிடுவதும் நகைப்புக் கிடமாகும்,' என்றெண்ணுகிருர்கள்.

வின: அப்படியாயின், தேவரீருடைய கருத்துப்படி ஆடவரும் பெண்மக்களும் வயது ஏறிய பின் மணம் முடித்துக்கொள்ளுதல் முறையா?

சுவா: ஆம், அப்படியே. அதனேடு நல்ல கல்வியும் புகட் டப்பட வேண்டும். அல்லாவிட்டால், ஒழுக்கப் பிழைகள் ஏற்படு தலுங் கூடும். கல்வியென்ருல் இக்காலத்தில் நடந்து வரும் கல்வி முறையென்பது எனது கருத்தன்று. வீண் ஏட்டுக்கல்வியினுல் எய்தும் பயனில்லை. நல்லொழுக்கமும் மனவலிமையும் விரிந்த அறிவும் வாய்க்கப்பெற்று, கற்றவனுக்குச் சுயேச்சையைக் கொடுக் கத் தக்ககல்வியே கல்வி.

வின: நம்முடைய பெண்களைப் பல வகையாக நாம் திருத்த மடையச் செய்ய வேண்டும் அல்லவா?

சுவா: முறையான கல்வியைக் கற்பிப்போமாயின், தங்க
ளுக்கு வேண்டிய திருத்தங்களைப் பெண்கள் தாங்களே செய்து
கொள்வார்கள். இதுவரையும் ஏழைமைத்தனத்திலும் அடிமைத்
தனத்திலும் பெண்கள் பயிற்றப்பட்டுவந்தமையால், துன்பமோ
தீங்கோ அணுகி வரும்பொழுது கண்ணீரை ஆறுகப்பெருக்கி அழு
வது மாத்திரந்தான் அவர்களறிந்த விஷயம். பிற நற்குணங்க
ளோடு வீரத்தையும் தைரியத்தையும் பெண்கள் அடையவேண்டும்.
தற்காப்புக்குரிய முறைகளையும் அவர்கள் பயின்றுகொள்ளுதல்
வேண்டும். ஜான்ஸி தேசத்து இராணியினுடைய செய்கை
எவ்வளவு சிறப்புடையது !

விஞ: தேவரீர் சொல்லுகிறது முற்றிலும் புதிய முறையாயிருக்
கிறது. இவ்வண்ணம் நம் பெண் மக்களைப் பயிற்றுவதாயின்,
அது மிகவும் நீண்டகாலத்து முயற்சியாகும் என்று அஞ்சுகிறேன்.

சுவா: எப்படியாயினும் நாம் இயன்றதைச் செய்யவேண்டும்.
பெண் மக்களைப் படிப்பிப்பது மாத்திரமன்றி, நமக்கே நாம்
பாடஞ்சொல்லி வைக்கவேண்டும். மக்களைப் பெறுவதனுல் மாத்
திரம் ஒருவன் தந்தையென்றெண்ணப்பட மாட்டான். எத்த
னையோ பெரிய பொறுப்புகளை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
பெண்களுடைய கல்வி முறையிற் சில திருத்தங்களை ஆரம்பிப்ப
தாயின், நம் நாட்டுப் பெண் மக்களுக்குப் பிறப்புரிமையாய்
உள்ளதும் அவர்களால் எளிதில் உணர்ந்துகொள்ளப்படுவதும்
ஆகிய கற்பொழுக்கத்தை முதலிலே வேரூன்றச் செய்து எல்லா
வற்றையும்விடக் கற்பே சிறந்தது என்னும் சிறந்த எண்
ணத்தை அவர்கள் மனத்தில் உண்மையாக நிலைபெறச் செய்ய
வேண்டும். இதனுல், அவர்கள் இல் வாழ்க்கையிலிருப்பினும், மண
முடியாது வாழினும், வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் நிறைந்த
தைரியம் படைத்தவர்களாய், கற்பொழுக்கத்தினை இழப்பதினும்
உயிரினை இழந்துவிடச் சித்தமுள்ளவர்களாக வேண்டும். மனத்
துக்கொண்ட உயர்ந்த நோக்கத்துக்காக உயிரையும் கொடுப்ப
தற்குச் சித்தமாயிருப்பது குறைந்த தைரியமாகுமா ? இக்கால
நிலையை நோக்குமிடத்துப் பெண்மக்களுட் சிலர் நைஷ்டிக பிரம்ம
சரிய ஒழுக்கத்தில் நிற்க வேண்டும்; பண்டுதொட்டுத் தமக்கு
உரிமையாய் உள்ள கற்பொழுக்கத்தினுலே மனவலி படைத்தவ
ராய் வாழ்நாள் முழுவதும் முற்றும் கன்னி கழியாத தூய நோன்
பினை நோற்பது அவசியமென்பது புலப்படுகின்றது; அதனேடு
கூட, தமக்கும் பிறர்க்கும் பயன்படக்கூடிய பல வகைக் கலைகளை
அன்னுர் கற்கவேண்டும். கல்வியின் பயனை அறிவதனுல் அவர்கள்
கற்கவேண்டுவனவற்றை ஆர்வத்தோடும் உவகையோடும் எளிதில்
கற்பார்கள். நம்முடைய தாய் நாட்டின் முன்னேற்றத்துக்காக
இந்தியத்தாயின் மக்களுட் சிலராவது பரிசுத்த இதயமுடையபிரம்ம

சாரிகளாகவும் பிரம்மசாரிணிகளாகவும் வாழ்வது இன்றியமையாதது.

வினு: தாய் நாட்டினுடைய நன்மை இத்தகையோரால் யாங்ஙனம் ஆகும்?

சுவா: அவர்களுடைய நடத்தையின் நன்மாதிரியாலும் முயற்சியினுலும் தேசத்தில் உயர்ந்த நோக்கங்கள் நிலைபெற, எண்ணத்திலும் செய்கையிலும் ஒரு வகை உயர்வு உண்டாகும் என்பதற்கு ஐயமில்லை. இப்பொழுது உள்ள நிலை என்ன? ஒன்பது பத்து வயது நிறைந்த சிறுமியை எப்படியாவது மணமுடித்துத் தொலைத்துவிட வேண்டும்; அவளுக்குப் பதின்மூன்ருவது வயதில் ஒரு குழந்தை பிறந்துவிடுமாயின், அக்குடும்பத்தில் உள்ளவர்களுக்கே பெரிய மகிழ்ச்சி ஏற்படுகிறது. இப்படிப்பட்ட எண்ணங்கள் மாறுபட்டாற்ருன் முன்னுளிலிருந்த சிரத்தையானது தமது சாதியார்க்கு மீண்டும் வந்து எய்துதல் இயல்வதாகும். நாம் முன்பு காட்டியபடி பிரம்மசரிய ஒழுக்கத்தில் நிற்பவர்களுக்கு எத்துணைப் பெரியதாகிய சுயநம்பிக்கையும் திடசித்தமும் வந்து எய்தும்! அவர்கள் பெரிய நன்மைக்கு நிலைக்களமாவார்கள்.

இப்படிச் சுவாமிஜி கூற, வினக்களையெல்லாம் வினவியவர், உள்ளம் உவந்து சுவாமிஜியை வணங்கி, விடைபெற்றுக்கொண்டார். அவருக்குச் சுவாமிஜி, "பின்பும் பல முறை வரலாம்," என்று கூறினர். அதைக் கேட்ட அந்தக் கனவான், சுவாமிஜியை நோக்கி, "தேவரீருடைய திருவாக்கினின்று முன்பொருபோதும் பிறிதோரிடத்தும் கேட்டறியாத பல புது உண்மைகளை அறிந்து மிகுந்த நன்மையை அடைந்தேன்! ஆதலால், மீண்டும் வர விரும்புகிறேன்," என்று கூறி, விடை பெற்றுக்கொண்டு ஏகினர். உணவு வேளைக்கு நேரமாயினமையின், நானும் வீடு நோக்கிச் சென்றேன்.

(4)

மதுரபாவம் — பிரேமை — நாமகீர்த்தனம் — அதனுல் விளையும் கெடுதி — ஞானத்தினுல் எல்லைப் படுத்தப்பட்ட பத்தி — ஒரு நூதனமான சொப்பனம்.

[1898-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 24-ஆம் நாள், திங்கட்கிழமை.]

அன்று பின்னேரம் மறுபடியும் நான் சுவாமிஜியின் திருமுன் வந்தேன்; அவரைச் சூழத் திரளான மக்கள் கூடியிருக்கக் கண்டேன். ஸ்ரீசைதன்னிய தேவருடைய பரம்பரையிலுள்ளோரிடத்தில் வழக்கமாக மதுரபாவம்—அதாவது ஆண்டவனை நாயக...

...ம் முறை—அப்பொழுது நடந்

சம்பாஷணையின் விஷயமாயிருந்தது. சுவாமிஜியினுடைய திரு வாக்கிலிருந்து இடையிடையே வெளி வந்த நகைக்குறிப்பு மொழி கள் சூழ்ந்திருந்தோரை நகைக்கப் பண்ணின. அங்கிருந்த ஒருவர் அப்பொழுது, ''மஹா பிரபுவாகிய ஸ்ரீசைதன்னியருடைய செயல் களிற் பரிகசிப்புக்கு இடமானவை எவை? அவர் பெரிய ஆன்ம ஞானியென்று நீங்கள் எண்ணவில்லையா? அவருடைய செய்கை ஒவ்வொன்றும் மக்கட் சமுதாயத்தின் நன்மைக்காகவே செய்யப் பட்டது அன்றோ?'' என்று கேட்டார்.

சுவா: யாரையா அது? உமக்குப் பரிகாசமாகத்தான் தோற் றுகிறது. ஸ்ரீசைதன்னியருடைய உயர்ந்த துறவு நிலையை அடை வதற்காக நான் வாழ்நாள் முழுவதும் எவ்வளவு அல்லலுற்றேன் என்பதையும், அந்த உயர்ந்த கொள்கையை மக்களிடையே பரப்புவதற்கு எவ்வளவு முயல்கிறேன் என்பதையும் நீர்அறிவீரா? ஸ்ரீசைதன்னியர் கடுந்தவங்களைப் புரிந்த மகா துறவியார். பெண்க ளோடும் சிற்றின்ப போகங்களோடும் அவருக்கு ஒரு வகைத் தொடர்பும் இருந்ததில்லை. ஆனால், பிற்காலங்களில் அவருடைய சிஷ்யர்கள் தங்களுடைய கோஷ்டியில் பெண்களையும் சேர்த்து அவருடைய திருநாமத்திலே வகை முறை தப்பி மாதரோடு கலந்து எல்லாவற்றையும் பெரும்பிழையாக்கிவிட்டார்கள். பகவான் ஸ்ரீசைதன்னியர் தம்முடைய வாழ்விலே விரித்துணர்த்திய அன்பு மார்க்கமானதுசிறிதேனும்காமத்தொடர்புஇல்லாதது; அத்தகைய உயர்ந்த நிலை சாதாரண மக்களுக்கு உரியதாவது அருமை. பிற் காலத்தில் வந்த வைணவக் குரவர்கள் பகவானுடைய வாழ்வி லுள்ள துறவு நிலையை வற்புறுத்திப் போதிப்பதை விடுத்து அவரு டைய மதுரபாவக் கொள்கையைச் சாதாரண மக்களுக்குள்ளே போதிப்பதில் தங்கள் மனவூக்கம் முழுவதையும் செலுத்தினார்கள். அந்த உயர்ந்த கொள்கையை, அந்தத் தெய்விக அன்பின் மகத்து வத்தை, சாதாரண மக்கள் உளங்கொண்டு தம்முடையனவாக்கிக் கொள்ள மாட்டாமையால், அதை ஓர் ஆடவனுக்கும் பெண்ணுக் கும் இடையிலுள்ள உடலின் தொடர்பாக நினைத்து இழிவடைந் தார்கள்.

வினா: ஸ்ரீசைதன்னியதேவர் ஆண்டவனாகிய ஹரியினுடைய திருநாமத்தைச் சண்டாளர்களுக்கும் உபதேசிக்கவில்லையா? ஆத லால், சாதாரண மக்களுக்கு அவருடைய போதனைகள் உரிமை யாகமாட்டாவா?

சுவா: நான் அவருடைய போதனையைப்பற்றி இப்பொழுது பேசவில்லை. அவர் அல்லும் பகலும் தம்மை மறந்து ஸ்ரீராதா பிராட்டியாருடைய நிலையில் நின்று ஆண்டவனிடத்தில் அன்பு பாராட்டிய 'ராதா பிரேமை' என்னும் மிக உயர்ந்த அன்பு நிலையைப்பற்றியே இப்பொழுது பேசினேன்.

வினு: அந்த நிலையை எல்லோருக்கும் உள்ள பொதுப் பொருள் ஆக்குதல் கூடாதா?

சுவா: அப்படிச் செய்வதனுல் என்ன பயன் விளையும் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமாயின், நம்முடைய சமூகத்தாரின் இக்கால நிலையை ஊன்றி ஆலோசித்துப் பாரும். மதுரபாவ அன்பு மார்க்கத்தைப் பரவப் போதித்தமையினுலே நம்முடைய மக்கள் ஆண்மையை இழந்து பெண் தன்மை படைத்த இனத்தார் ஆகிவிட்டார்கள். ஒரிஸாத் தேசம் முழுமையும் வீரியமற்ற கோழை மக்கள் வசிக்கும் நாடாகிவிட்டது; ராதா பிரேமையைச் சென்ற நானூறு வருடங்களாக எல்லாருக்கும் போதித்த காரணத்தினுல், வங்காள நாடு ஆண் தன்மையின் ஏறக்குறைய முற்றிலுமிழக்கும் நிலைமைக்கு வந்துவிட்டது. மக்கள் அழுது ஓலமிடுவதில் திறமை வாய்ந்தவர்களாய்விட்டார்கள். அதுவே அவர்களது மக்கட்சமுதாய இயல்பாய்விட்டது. நாட்டு மக்களின் எண்ணங்களுக்கும் கொள்கைகளுக்கும் நிச்சயமான அடையாளமாகிய கவிதையை ஆராய்ந்து பாருங்கள். சென்ற நான்கு நூற்ருண்டுகளாக வங்காள மொழிக் கவிகள் அழுது ஓலமிடுவதையே கருத்தாகக் கொண்டிருக்கின்ருர்கள். உண்மையான வீரச்சுவை ததும்பும் பாட்டுகள் இந் நாட்களில் வங்காளத்தில் தோன்றவில்லை.

வினு: அப்படியாயின், மேலாகிய பிரேமைக்கு உரியவர் யாவர்?

சுவா: மனத்திலே எள்ளளவாவது காம விருப்பம் இருக்குமாயின், உண்மையான பிரேமைக்கு அத்தகைய இதயத்தில் இடமில்லை. தியாக புருஷர்களாயும் மகா வீரர்களாயும் உள்ள ஆண் மக்களே அந்தத் தெய்விக அன்பு மார்க்கத்திற்கு உரியவர்களாவார்கள். மிக உன்னதமாகிய மதுரபாவக் கொள்கையைச் சாதாரண மக்கள் அனுஷ்டிக்க நினைப்பார்களாகில், அது அவர்களுடைய இதயத்திலே தனது உலக நிழலாகிய காம விருப்பத்தை எழுப்பிவிடும். தன்னை ஆண்டவனுடைய நாயகியாகப் பாவனை பண்ணுகிற சாதாரண மனிதன் சுத்த இதயமில்லாதவனுயின், அங்ஙனம் தியானிக்கும் பொழுது தன் நாயகியை நினைத்துக் கொண்டிருப்பான்—இதனுலேற்படும் பயன் எத்தன்மையதென்பது வெளிப்படை.

வினு: அப்படியாயின், ஆண்டவனை ஆன்ம நாயகனுகவும் தன்னைப் பிரிய நாயகியாகவும் பாவனை பண்ணி வழிபடுகிற மதுர பாவக் கொள்கை இல்லறத்திலிருப்போருக்கு ஒரு பொழுதும் சாத்தியமாகாதா?

சுவா: சாதாரண இல்லறத்தவருக்கு அது சாத்தியமாகாது என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இவ்விதிக்கு விலக்காயுள்ளவரும் சிலர் உளர். மற்றைய மார்க்கங்களைவிட இந்த

நுணுக்கமான பாதையில் நாம் ஏன் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்? ஆண்டவனை வழிபடுவதற்கு இந்த மதுரபாவத்தை யொழிந்த வேறு மார்க்கங்களில்லையா? மற்றைய நான்கு மார்க்கங்களையும் பின் பற்றி இதயபூர்வமாக ஆண்டவனுடைய திருநாமத்தை மனத்தில் பதிக்கலாகாதா? முதலில் இதயம் தெளிவடையட்டும். ஏனையவெல்லாம் அதன் பின்பு வந்து எய்தற்பாலனவே. உள்ளத்தில் காமவிச்சை இருக்கும் வரையில் பிரேமை வந்தெய்தாது என்பதை நிச்சயமாகவே அறிந்துகொள்வீராக. முதலிலே ஐம்புல இச்சைகளை முற்றிலும் களைந்துவிடுவதற்கு ஏன் முயலக் கூடாது? இல்லறத்தாராகிய உமக்கு அது சாத்தியப்படாதென்று நீர் நினைக்கிறீர் போலும்! அங்ஙனம் நினைப்பது வீணெண்ணம். ஒருவன் இல்லற வாழ்க்கையில் இருப்பதென்றால் வாழ்நாள் முழுவதும் காமவிச்சையிலே அழுந்திக் கிடப்பதென்பது கருத்தாகுமா? அஃதன்றியும், மதுரபாவத்தை அனுட்டிக்கும் பொருட்டு ஆடவனொருவன் தன்னை ஒரு பெண்ணாகப் பாவிப்பது எவ்வளவு தகுதியில்லாத செயல் என்பதை நினைத்துப்பாரும்.

வினு: சுவாமிஜி, தேவரீருடைய வாக்கு முற்றிலும் உண்மையே. கூட்டமாகக் கூடி ஆண்டவனுடைய திருநாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவது ஆன்மார்த்தத்திற்குச் சிறந்த துணையாயும் மனத்துக்கு இன்பம் விளைப்பதாயும் இருக்கிறது. நம்முடைய சாத்திரங்களும் அவ்வாறே கூறியிருக்கின்றன. ஸ்ரீசைதன்னியதேவரும் மக்களுக்கு அப்படியே உபதேசித்தார். கோல் (மத்தளம்) ஆனது அடிக்கப்படும் பொழுது இதயம் மகிழ்ச்சியினால் விம்ம, மனம் குதூகலமடைய, நர்த்தனம் செய்ய வேண்டும் என்று எண்ணம் தானாகவே பிறக்கின்றது.

சுவா: முற்றிலும் சரி; ஆயினும், கீர்த்தனமென்பது நடனமென்று மாத்திரம் எண்ணிவிடாதீர். எவ்வகையாகவாயினும், ஆண்டவனுடைய மகிமையைப் பாடுவதே கீர்த்தனத்தின் கருத்து. வைணவர்களுக்குள்ளே வழக்கமாய் இருக்கின்ற நிர்த்தனமும் மெய்ப்பாடுகளை அசைத்து எழுப்பிவிடும் முறைகளும் ஒருசார் நன்மை விளைப்பன என்பதையும், பலருடைய உள்ளத்தையும் கவர்வன என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஆயினும், அவற்றின்வழிச் செல்வதனால் விளையும் தீங்குகளும் பலவுள. அவற்றினின்று உம்மை நீர் காத்துக்கொள்ள வேண்டும். உள்ளக் கிளர்ச்சியின் பின் வருகிற மனச்சோர்வானது தீமைக்கு இடமானது. கண்களிலிருந்து நீர் சொரிய, மதுவுண்டாரது நிலைமையைப் போன்று தலையானது சுழல, மனவுணர்ச்சிகள் எவ்வளவு உச்ச நிலைக்கு எழுப்பப்படுகின்றனவோ சங்கீர்த்தன முடிவில் அவ்வளவு தாழ்வான நிலைக்கு இறங்கிவிடுகின்றன. கடலிலிருந்து அலையானது எவ்வளவு உயர எழுகின்றதோ, அதற்குச் சமமாகிய

சத்தியோடு அவ்வளவு கீழே விழுகின்றது. மனச்சோர்வாகிய எதிர்த்தாக்கினின்று தப்புவது அரிது; விவேகமில்லாத இடத்து அத்தகைய எதிர்த்தாக்கலானது காமம் சீற்றமுதலான கீழ்மைக் குணங்களை எழுப்பிவிடும். இவ்விஷயத்தை நான் அமெரிக்காவிலும் கண்டேன். எத்தனையோ பல கோயிலுக்குப் போய், பத்தியோடு ஜபம் செய்து, மனவுணர்வோடு பாடிப் பிரசங்கத்தைக் கேட்கும் பொழுது கண்ணீரும் விடுவார்கள். கோயிலிலிருந்து திரும்பி வரும் பொழுது மனத்திலுண்டாகிய எதிர்த்தாக்கினாலே காமாதிகளுக்கு அடிமையாகிவிடுவார்கள்.

வினா: அப்படியாயின், நாங்கள் தவறுவண்ணம் ஸ்ரீசைதன்னியர் உரைத்த வாக்கியங்களுள் எவையெவை கொள்ளத்தக்கன என்பதைத் தேவரீர் எங்களுக்கு எடுத்துக் காட்டியருள வேண்டும்.

சுவா: ஞானத்தோடியைந்த பத்தியினாலே ஆண்டவனை வழிபடுவீர்களாக. பத்தியோடு எப்பொழுதும் விவேகம் சேர்ந்திருக்கட்டும். இஃதன்றியும், ஸ்ரீசைதன்னியருடைய மாசகன்ற இதயத்தையும் எல்லா உயிர்களின்மேலுள்ள கருணையையும் தெய்வத்திடத்துவைத்த அடங்காத அன்பினையும் உங்களுடையதாக்கிக் கொண்டு அவருடைய துறவு நிலையை உங்கள் வாழ்க்கையின் நோக்கமாக்குவீர்களாக.

இது வரையும் வினாக்களை வினவிய அக்கனவான் இரு கரங்களையும் கூப்பிச் சுவாமிஜியைப் பணிந்து, "அடியேனை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது தேவரீருடைய மொழிகளினுண்மை எனக்குப் புலப்படுகின்றது. முதலிலே தேவரீருடைய மொழிகளைக் கேட்டதும் வைணவருக்குரிய மதுரபாவ சாதனையைத் தேவரீர் பரிகசிப்பதாக நினைத்து வருத்தமுற்றேன்," என்றார்.

சுவா: (நகை முகத்தோடு) நல்லது; பார்த்தீரா! குற்றங் காண்பதென்றால் தெய்வத்தின்மீதாவது தெய்வ நிலையை அடைந்த பெரியோர்கள் மீதாவது குற்றங் காணவேண்டும். என்னை நிந்தித்தால் நான் உம்மைக் கோபிக்கக்கூடும்; உம்மை நான் நிந்தித்தால் நீர் என்னைக் கோபிக்கக்கூடும் அல்லவா? தெய்வமும் தெய்வ நிலையை அடைந்த பெரியாரும் ஒரு பொழுதும் தீமைக்குத் தீமை செய்ய மாட்டார்கள்.

கனவான் சுவாமிஜியின் அடிகளை வணங்கிவிட்டுப் போய்விட்டார். சுவாமிஜி கல்கத்தாவில் உறைந்த நாட்களில் தினந்தோறும் பெரிய கூட்டம் கூடுவது வழக்கம் என்று முன்னமே கூறினேன். அதிகாலையிலிருந்து இரவு எட்டொன்பது மணி வரையில் இடையறாது மக்கள் அவரை வந்து காண்பார்கள். இதனால், சுவாமிஜியினுடைய உணவு வேளைகள் தவறிப் போவது வழக்கம். இப்படி நிகழா வண்ணம் குறித்த மணி நேரங்களில் மாத்திரம் காண

வருவோரைச் சந்திக்கும்படி சுவாமிக்குப் பலர் கூறினர். ஆயினும், பிறர் நலத்துக்காக எதுவும் செய்வதற்கு எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கின்ற அன்பு நிறைந்த இதயத்தையுடைய சுவாமிஜி, மக்களுடைய மனத்தில் ஆன்மிக விஷயங்களில் ஏற்பட்டிருக்கும் பெருந்தாகத்தை நோக்கி, தம்முடைய அசௌகரியத்தை கருதாது மேற்குறித்த கேள்விக்கு இயைந்திலர். ''அந்த மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுத் தங்களுடைய வீடுகளிலிருந்து இங்கு வருகிறார்கள்? நான் அவர்களோடு சில வார்த்தைகள் பேசாது என்னுடைய உடல் நலத்தைப் பேணிக்கொண்டிருப்பது முறையாகுமா?'' என்பது சுவாமிஜியினுடைய பதிலாயிருந்தது.

ஏறக்குறையப் பிற்பகல் நான்கு மணியளவில் பொதுச் சம்பாஷணை முடிய, கூடியிருந்த பெரும்பாலார் கலைந்து போயினர். ஒரு சிலர் மாத்திரம் எஞ்சியிருக்க, இங்கிலாந்தைப் பற்றியும், அமெரிக்காவைப் பற்றியும், பிற விஷயங்களைப் பற்றியும் சுவாமிஜி பேசிக்கொண்டிருந்தார். அந்தச் சம்பாஷணையின் நடுவில் அவர் சொல்லியதாவது:

''இங்கிலாந்திலிருந்து திரும்பி வரும் பொழுது நான் ஒரு நூதனமான கனவு கண்டேன்: எங்கள் கப்பல் மத்தியதரைக் கடலில் சென்றுகொண்டிருந்தது. கண்வளர்ந்துகொண்டிருந்த என் முன்னே மிகுந்த வயதேறப்பெற்ற இருடி போன்ற தோற்றத்தையுடைய ஒரு மகான் நிற்கக் கண்டேன். அவர் என்னை நோக்கி, 'நீர் வந்து எம்மை எம் பண்டை நிலையில் வைக்க வேண்டும்; நான் இந்திய மகரிஷிகளின் வழி வந்த **தேரபுத்தர்** என்னும் பழைய சங்கத்தைச் சேர்ந்தவன்; நாங்கள் போதித்த உண்மைகளும், உயர்ந்த கொள்கைகளும் இயேசு என்பவரால் போதிக்கப்பட்டவையெனக் கிறிஸ்தவர்கள் மாறுபாடாக வெளிப்படுத்திவிட்டார்கள்; இயேசுவென்னும் பெயருடைய ஒருவர் பிறக்கவுமில்லை. இந்த இடத்தை வெட்டிப் பரிசோதித்தால் யான் கூறுகின்ற உண்மைக்கு ஆதாரமாகப்படும்,' என்றார். 'நீர் சொல்லுகிற சாஸனங்களும் சான்றுகளும் எந்த இடத்தை வெட்டிச் சோதித்தால் அகப்படும்?' என்று நான் வினவினேன். அந்த நரைத்த தலையுடைய பெரியார், துருக்கித் தேசத்துக்கு அணித்தான ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி, 'அதோ பாரும்!' என்றார். நான் உடனே விழித்தெழுந்து கப்பலின் மேல் தட்டுக்குச் சென்று மாலுமித் தலைவரை நோக்கி, 'கப்பல் இப்பொழுது எவ்விடத்துக்கு அணித்தாயிருக்கிறது?' என்றேன். அதற்கவர், 'அதோ பாருங்கள்! துருக்கியின் கிரீட்டு (Crete) தீவம் நேரே தோற்றுகிறது,' என்றார்.''

இது ஒரு கனவு மாத்திரமோ, அல்லது இக்காட்சியில் ஏதேனும் உண்மையுண்டோ? யார் அறிவார்?

IV

சுரேந்திர நாத தாஸ் குப்தா

ஒரு நாள் கல்லூரி மாணவர்களாகிய இளநண்பர் சிலரும் நானும் சுவாமி விவேகானந்தரைப் பார்க்கப் பேலூர் மடத்துக்குப் போய், ஆங்கு அவரைச் சூழ்ந்திருந்து பல விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தோம். நாங்கள் என்ன கேள்வி கேட்கிறோமோ, அவர் அதற்குத் தக்க விடையைத் தாமதமின்றி அளிக்கும் பேராற்றலைப் பார்த்து வியந்துகொண்டிருந்தோம். அவர் எங்களைச் சட்டென்று பார்த்து, ''நீங்கள் எல்லாரும் ஐரோப்பிய மதத்தத்துவ நூலின் முடிபுகள் பலவற்றையும், நாடு, மக்கட்சமுதாயங்களைப் பற்றிய புதிய உண்மைகள் பலவற்றையுங் கற்றிருக்கிறீர்கள்; வாழ்வில் மிக மேலான உண்மை எதுவென்பதைச் சொல்லுவீர்களா ?'' என்றார்.

நாங்கள் ஆலோசிக்கலானோம்; அவர் கருத்தென்ன என்பது எங்களுக்குப் புலப்படவில்லை. ஒருவரும் மறுமொழி சொல்லாமலிருப்பதைப் பார்த்து, அவர் உயிர்க்குறுதி பயக்கும் உரையிற் சொல்வாரானார்: ''இதோ பாருங்கள்: நாமெல்லோரும் மரணமடைவோம்! இந்த உண்மையை என்றும் மனத்தில் வைத்திருப்பீர்களாயின், அற்பத்தனம் மனத்தினின்று அகலும், செயல் உருவாகும். உள்ளத்திலும் உடலிலும் உற்சாகமுண்டாகும். உங்களண்டை வந்தவர்களும் அப்படி வந்ததனால் தாங்கள் நன்மையை அடைந்ததாகக் கருதுவார்கள்.''

அதன்மேல் எனக்கும் அவருக்குமிடையில் பின் வரும் சம்வாதம் நிகழ்ந்தது.

நான்: ஆனால், சுவாமிஜி, மரணத்தைப்பற்றி நினைப்பதனால் ஆன்மவலிமை குன்றி மனத்திற் சோகமுண்டாகாதா ?

சுவா: ஆம்; முதலிலே மனமுடைந்து சோகமுண்டாகும். இப்படிச் சில நாட்கள் சென்ற பின்னர் இதயத்தில் புது வலிமை உண்டாகும். மரணத்தைப் பற்றி நினைப்பதே புது வாழ்வின் தொடக்கமாகும். 'எல்லாம் மாயையே' என்னும் பழமொழியின் உண்மை புலப்பட, விசாரமுண்டாகும். சில நாட்கள், சில மாதங்கள், சில ஆண்டுகள் செல்லட்டும். சிங்கத்தின் வலியையொத்த வலியுண்டாவதை உணர்வாய்; உனது அற்பச் சத்தி அபாரச் சத்தியாக மாறிவிட்டதைக் காண்பாய். மரணத்தைப் பற்றி எப்பொழுதுந் தியானஞ் செய்க. நான் சொன்ன சொற்களுள் ஒவ்வொன்றின் உண்மையையும் அனுபவத்திற் கண்டுணர்வாய். இன்னும் நான் சொல்ல வேண்டுவதென்ன ?

இத்தருணத்தில் என் நண்பரொருவர் மெதுவாகச் சுவாமிஜி யைப் புகழ்ந்துகொண்டிருந்தார்.

சுவா: என்னை நீர் ஏன் புகழ வேண்டும்? இவ்வுலகத்திற் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் பயனற்றன. அவை ஊஞ்சல்போல மனிதனை இங்குமங்கும் அலைப்பன; புகழ்ச்சியையும் இகழ்ச்சியை யும் வேண்டுமான அளவுக்குச் சுமந்தேன்; இவற்றை நினைத்து என்ன பயன்? இவ்விரண்டையும் பற்றிச் சிந்தியாது ஒவ்வொரு வரும் தத்தம் கடமையைச் செய்யட்டும். வாழ்வின் அந்திப்பொழு தில் எனக்கும் உமக்கும் மற்றவருக்கும் உள்ள புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றேயாகும். நாம் இங்குக் கருமம் முடிப்பதற்காக வந்திருக்கிறோம்; ஆண்டவன் அழைப்பு வந்தால், எல்லாவற்றை யும் விட்டுவிட்டுப் போக வேண்டுவதுதான்.

நான்: நாங்கள் எவ்வளவு அற்பப் பிராணிகள், சுவாமி!

சுவா: நீர் சொல்வது உண்மையே. எத்தனையோ கோடிக் கணக்கான ஞாயிறு மண்டலங்களைத் தன்னுள் அடக்கிய அகண்ட மான இவ்வண்டத்தின் விரிவை நினைத்துப் பார். இவையெல் லாம் நினைக்க முடியாத ஒரு பெருஞ்சத்தியினுற் கவரப்பட்டுச் சொல் லும் மனமும் கடந்த ஒரு பொருளின் திருவடித் தாமரைகளில் தொடப்போவன போன்றிருக்கின்றனவே! இவ்வகண்டத்தோடு ஒப்பிடும்போது நாம் எம்மாத்திரம்? தீமையிலும் அற்பத்தனத் திலும் இறங்க இடமெங்கே? அழுக்காற்றினுலும் பக்ஷ பாதத்தினுலும் பெறுவதென்ன? நான் சொல்லுகிற புத்திமதி யைக் கேளுங்கள். கல்லூரியிலிருந்து வீட்டுக்கு வந்ததும் பிறர்க் குதவி செய்யும் முயற்சியில் இறங்குங்கள். களஞ்சியம் நிறையப் பொன் வைத்திருப்பதைவிட, அதுவே உங்களுக்குமேலான இன்பத் தைத் தரும். சேவை செய்துகொண்டு போவீர்களாயின், ஞான மார்க்கத்திலும் முன்னேற்றமடைவீர்கள்.

நான்: ஆனுல், சுவாமிஜி, எங்களை வறுமை பீடித்திருக்கிறதே?

சுவா: வறுமை என்னும் எண்ணத்தை விட்டுவிடுங்கள். 'கோச்சு வண்டியுங் குதிரை இரண்டுமில்லை; வேலைக்காரர் பல ரில்லை,' என்று வருந்துகிறீர்களா? அதனுலென்ன? நீங்கள் அல் லும் பகலும் பிறர்க்காக உழைப்பீர்களாயின், உங்களால் எது தான் ஆகாது? உங்கள் கண் முன்பாகத் தூய வாழ்வின் மறுகரை தோன்றும்; மரணத்திரை அகன்றுவிடும். என்றும் அழியாத அமரநாட்டைப் பெறுவீர்கள்.

நான்: அன்பே உருவாகிய சுவாமிஜி, உங்கள் முன்னிலையி லிருந்து இந்த உயிர்க்குதவி பயக்கும் மொழிகளைக் கேட்டது எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகின்றது!

சுவா: இத்தனை வருஷமாக நான் பரதகண்டத்திற் புரிந்த யாத்திரையில் எத்தனையோ பெரியவர்களைக் கண்டிருக்கிறேன்.

அன்பு நிறைந்த உள்ளத்தினராகிய அவர்களுடைய அடிகளைத் தொழுவதால் என்னுள்ளே அபாரச் சத்தி நிறையக் கண்டேன். இந்த வலிமை பற்றுக்கோடாகச் சில வார்த்தைகள் சொன்னேனே யன்றி, என்னளவில், நான் பெரியவனென்றெண்ணுதீர்கள்.

நான்: ஆனுல், சுவாமிஜி, நீங்கள் கடவுளைக் கண்டு அடைந்தவர்கள் என நாங்கள் கருதுகிறேம்.

அப்படிச் சொன்ன மாத்திரத்தே அவருடைய கண்களில் நீர் ததும்ப, அன்புநிறைந்த உள்ளத்தோடு மெல்லப் பேசுவாராயினுர்: (அந்தத் தோற்றம் இன்றும் என் கண்களுள் நிற்கின்றது.) அப்பொழுது சுவாமிஜி சொன்னதாவது: ''எந்தத் திருவடித் தாமரையானது ஞானிகளால் தேடப்படுகிற ஞானத்தின் முடியா யிருக்கிறதோ, எந்தக் கமலபாதமானது அன்பர்களால் வேண்டப்படுகிற அன்பின் நிலைக்களனுய் இருக்கின்றதோ, அந்தக் கமல பாதத்தையொழியப் பிறிதெப்பொருளை நாடி நாமெல்லாம் எங்கு அடைக்கலம் புக இயலும்!'' சற்றுத் தாமதித்துப் பின்னும் சொல்வார்: ''அன்பர்களே, உலகத்திலுள்ள மாந்தர்களின் பேதைமை இருந்தவாறென்னே! இவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டு வாழ்நாளைக் கழிக்கிறுர்களே! இப்படி எத்தனை காலம் நடக்கும்? இவர்கள் வாழ்வின் அந்திப்பொழுதில் ஜகந்மாதாவை நினைத்துப் பேரின்ப வீடு நோக்கிப் போகவேண்டியவர்கள் அல்லவா?''

V

வரலாறு கண்ட வஞ்சம்

(1)

(ரயிட்டின் மனைவியார்)

1893-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதத்தின் இறுதியில் அனிஸ் கூவாம் என்ற சிற்றூரிலுள்ள பேராசிரியர் ஜே. எச். ரயிட்டின் வீட்டில் சுவாமிஜி தங்கினார்; நியூ இங்கிலாந்திலுள்ள அமைதி நிலவுங் கிராமத்தில் யாவரும் பெருவியப்பில் ஆழும் வண்ணம் காட்சி அளித்தார்.

இவரைப் பற்றி அவ்வூரார் பல விதமாகச் சிந்திக்கத் தொடங்கி விட்டனர். ''இந்தச் சான்றோர் யார்? மிக்க பொலிவுடன் திகழ்கின்ற இவர் யார்?'' என்ற சிந்தனை அலைகளில் அவர்கள் மூழ்கி விட்டார்கள்.

இவர் இந்தியாவிலிருந்து வந்த ஓர் அந்தணராய் இருக்கவேண்டுமென்று முதலில் அவ்வூரார் தீர்மானித்தனர்; ஆனால், இவருடைய நடை உடை பாவனைகள், தாம் கொண்ட கருத்துக்கேற்றவாறு அமையவில்லையே என்று ஐயமுற்றனர்; இந்த ஐயத்தை அகற்றிக் கொள்ள விரும்பினர். மாலை உணவு அருந்திய பிறகு, அனைவரும் ஒரு முகமாக வியப்பில் ஆழ்த்தக்கூடிய இப்பெரியாரின் பேச்சைக் கேட்க அந்த இல்லத்தில் புகுந்தனர்.

''இப்பொழுதுதான்—நேற்றுத்தான்—நானூறு ஆண்டுகள் கூடக்கழிந்திராது'' என்று யாழொத்த இன்னிசைக் குரலில் சுவாமிஜி பேசத் தொடங்கினார்: ''இதற்குள் நலிவுறுத்தும் எத்தனையோ கொடிய தீச்செயல்களின் வரலாறுகள் முளைத்துவிட்டன! பொறுமையோடு இன்னல்களை ஏற்ற மக்களின் எத்தனையோ செய்திகளும் எழுந்துவிட்டன! இதற்கொரு நியாயமும் தீர்ப்பும் கிடைக்காமற் போகுமா? இந்த ஆங்கிலேயர்களைப் பற்றி என்னென்று இயம்புவது! சிறிது காலத்திற்கு முன்புதான் இவர்கள் காட்டாளாயிருந்தார்கள். இவர்களுடைய மாதர்களின் உடல்கள்மீது கிருமிகள் ஊர்ந்தன! மிகுந்த அருவருப்பை அளிக்கக்கூடிய நாற்றத்தை மறைப்பதற்காக அவர்கள் நறுமணங்களைப் பூசிக்கொண்டார்கள்! இதைவிடக் கோரமான காட்சியுண்டோ? இப்பொழுதுந்தான் என்ன? விலங்கின் வாழ்விலிருந்து இவர்கள் உயர்ந்ததாகத் தெரியவில்லை,'' என்றார் சுவாமிஜி.

''இதென்ன பிதற்றல்! குறைந்த அளவு ஐந்நூறாண்டுகளுக்கு முன்பு நடந்த விஷயமன்றோ இது?'' என்று தூற்றப்பட்ட ஒருவன் உரைத்தான்.

'' 'இப்பொழுதுதான் ' என்றே சொன்னேன். மனிதனின் பழமையை உற்று நோக்கும்போது, சில ஆண்டுகள் எம்மாத்திரம் ! அவர்கள் காட்டுமிராண்டிகளே,'' என்று மிகவும் அமைதியாய்—அறிவுச் சுடர் மிளிருங் குரலில் மொழிந்தார் சுவாமிஜி.

சற்று நேரம் கழித்து, விரைவாயும் உணர்ச்சி ததும்புங் குரலிலும் பின் வருமாறு இயம்பினர்: ''பயங்கரமான கொடுங்குளிரும் பசிப்பிணியும் வடநாட்டவர்களை விலங்குகளாகச் செய்துவிட்டன. கொன்று வாழ்வதைத்தான் அவர்கள் சிந்தித்தார்கள். அவர்களுடைய சமயநெறி எங்கே போய் மறைந்ததோ, யான் அறியேன்; புனிதமான ஆண்டவன் பெயரை முணுமுணுக்கின்ருர்கள்; எல்லோரையும் சகோதரர்கள் போல நேசிப்பதாக நவில்கின்ருர்கள். கிறித்தவ மதம் மூலமாகவா அவர்கள் நாகரிகத்தைப் பரப்புகின்ருர்கள் ? இல்லை. அவர்களது வெம்பசியே அவர்கள் நர்கரிகமுள்ளவர்களாய்த் திகழ்வதற்குத் துணை புரிகின்றது; அவர்கள் வழிபடும் தெய்வமன்று. 'அன்பு' என்ற பேச்சு அவர்களின் உதடுகளின் மீது நடமாடும்; ஆனல், அவர்கள் உள்ளமோ, தீமைகள்—எல்லாவிதமான கொடுஞ்செயல்கள்—இவற்றைத் தவிர வேறு அறியாது ! 'என் அண்ணே, நான் உன்னை நேசிக்கிறேன்; உன்பால் நான் அன்பு காட்டுகின்றேன்,' என்று சொல்லிக்கொண்டே கழுத்தை அறுத்துவிடுவார்கள் ! அவர்களுடைய கைகளோ, செங்குருதிதோய்ந்தகைகளாய்த் தோன்றும் !''

அவர் குரல் மெல்ல ஒலித்தது; பிறகு அவருடைய வனப்பு வாய்ந்த இன்னிசைக் குரலில் மணியின் ஆழ்ந்த நாதம் கேட்டது. '' 'ஆண்டவன் கடுந்தண்டனை அவர்களுக்கு வரும் ! நான் பழிக்குப் பழி வாங்கப் போகின்றேன் ! அவர்களுக்கு அழிவு காலம் நெருங்கி விட்டது !' என்று ஆண்டவன் முழங்கினனன்ருே ? கிறித்துவ மக்களாகிய உங்களுடைய தொகை எவ்வளவு ? மூன்றில் ஒரு பங்குகூட இல்லை ! சீன மக்களைப் பாருங்கள்: கோடிக்கணக்காயிருக்கின்ருர்கள். அவர்கள் மூலமாக ஆண்டவன் தன் வஞ்சம் தீர்ப்பான்...... ஹூணர்கள் மீண்டும் படையெடுப்பார்கள் !'' என்று சற்றுச் சிரிப்பை அடக்கியே சுவாமிஜி உரைத்தார்.

''அவர்களுடைய படை வெள்ளம் எங்கும் பொங்கி, ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பாய்ந்து, எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு போய்விடும்; அடையாளத்திற்கு ஒரு கல்லும் எஞ்சி நில்லாது என்பது திண்ணம். ஆடவர், பெண்டிர், குழந்தைகள் எல்லாம் மடிந்து போவார்கள்; மீண்டும் இருண்ட காலம் ஆட்சி புரியும்.''

சுவாமிஜியின் குரலில் துயரும் இரக்கமும் தோன்றின. தீர்க்கதரிசி என்ற சுதியில் சென்றுகொண்டிருந்த பேச்சை மாற்றிக்

கொண்டு சற்று விளையாட்டான முறையில், ''நானா இதைப் பற்றி கவலை கொள்ளப்போகின்றேன்!'' என்று திடீரென்று கூறினார்.

''இந்த வையகம் முன்னேறும் என்பதில் சந்தேகமில்லை; ஆனால், ஆண்டவன் வெஞ்சினம் விரைவில் வந்தே தீரும்!'' என்றார்.

''விரைவிலா!'' என்று எல்லோரும் வினவினர்.

''இது வருவதற்கு ஓராயிரம் ஆண்டாகும்,'' என்று சுவாமிஜி பதில் அளித்தார்.

''இப்பொழுது இல்லையே! இப்பொழுது தலைமீது விழுந்து விடாதே!'' என்று ஒரு பெருஞ்சுமை மனத்தை விட்டகன்றது போல மூச்சு விட்டனர் அனைவரும்.

பின்னும் சுவாமிஜி தொடர்ந்து பேசலுற்றார்: ''ஆண்டவன் வஞ்சம் தீர்ப்பான். இந்த வஞ்சத்தை நீங்கள் சமய நெறியில் உணராமலிருக்கலாம்; அரசியலில் அறியாமலிருக்கலாம்; ஆனால், வரலாற்று நூலில் கண்டே தீர்வீர்கள்; சரித்திரத்தில் இது நடந்து கொண்டுதான் இருக்கிறது; இது வரத்தான் வரும்; மக்களைச் செக்கிலிட்டு ஆட்டித் துன்புறுத்திய நீங்கள் இன்னல் உறுவீர்கள். இந்திய நாட்டில் நாங்களும் ஆண்டவனுடைய வெஞ்சினத்தை நுகர்கின்றோம். பணம் ஈட்டுதற்பொருட்டு அவர்கள் ஏழை மக்களை வாட்டி வதைத்தார்கள். துன்பக்குரலை அவர்கள் கேட்டார்களில்லை. பசிப்பிணியால் 'சோறு! சோறு!' என்று ஓலமிட்டபொழுது, செல்வத்தில் திளைக்கின்றவர்கள் தங்கம் வெள்ளிப் பாத்திரங்களில் உண வருந்தினார்கள். இப்படி அடாது புரிந்த காரணத்தால், முகமதியர்கள் நாட்டிற் புகுந்து அவர்களை வெட்டி வீழ்த்தினார்கள்; கொன்றே அவர்களை வென்றார்கள். இந்திய நாடு, பல ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் தோல்வியுற்று அல்லற்பட்டது. இறுதியில், ஆங்கிலேயரும் நாட்டில் புகுந்தனர்! இத்தனைக் கொடும் படையெடுப்புகளில் ஆங்கிலேயரின் படையெடுப்புதான் மிகுந்த இன்னல்களை விளைவித்தது! எங்கும் பரந்து விரிவாய் நோக்குங்கள். இந்துக்கள் நமக்கு என்ன நல்கியிருக்கின்றார்கள்? அவர்கள் நமக்கு அளித்தவை கோயில்களே; முகமதியர்கள் ஈந்த செல்வம் யாது? அவர்கள் நமக்குத் தந்தவை வனப்பு வாய்ந்த அரண்மனைகளாகும்; 'ஆங்கிலேயர் நமக்குக் கொடுத்த வளம் யாது?' என்று ஒருவர் வினவலாம்; அவர்கள் நமக்கு விட்டுப்போன செல்வம், குன்றுகள் போலத் தோன்றும் உடைந்த சாராயக் குப்பிகளே.

''என் நாட்டின் மக்கள் மீது ஆண்டவன் அருள் சொரியவில்லை; அவர்கள் ஏழை மக்களுக்கு இரக்கங் காட்டவில்லையே! அவர்களுடைய இரக்கமற்ற தீச்செயல்கள் ஏழை மக்களை மிகவும் சிறுமைப்படுத்திவிட்டன. அவர்களுடைய உதவி தேவையாயிருக்கிற பொழுது அவர்களால் ஒன்றுஞ் செய்வதற்கில்லை. அவ்வளவு

வலியற்ற நிலையில் அவர்கள் இருந்தார்கள். ஆண்டவன் வஞ்சந் தீர்ப்பான் என்ற உண்மையில் மனிதன் நம்பிக்கை வைக்காம லிருக்கலாம்; ஆனால், சரிதத்தில் மீண்டும் மீண்டும் காட்சி அளிக் கின்ற வஞ்சத்தை இவனால் மறுக்க இயலுமா? ஆங்கிலேயருக்கும் இந்நிலை வரத்தான் போகின்றது. நம்முடைய கழுத்தின் மீது குதிக்காலை வைத்து நம்மை நசுக்குகின்றார்கள்; தங்களுடைய இன்பநுகர்ச்சியின்பொருட்டுக் கடைசிக் குருதித்திவலை வரையில் நம்மை அட்டையைப் போலச் சுவைத்து உறிஞ்சுகின்றார்கள்.

''கோடிக்கணக்கான பணத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு போய் விட்டனர்! ஊர் ஊராக—மாவட்டம் மாவட்டமாக—எங்கள் மக்கள் பசிப்பிணியால் வாடி வருந்த, இவர்கள் தகாத தீச் செயல்களைப் புரியலாமோ? சீனர்கள் இத்தகைய தீயோர்கள் மீது வஞ்சந் தீர்ப்பார்கள்; சீனர்கள் வெகுண்டு எழுந்து, அவர்களை ஆழ்கடலில் பிடித்துத் தள்ளி மாய்த்தாலும், அது நியாயத்தைத் தவிரப் பிறிதன்று. இத்தகைய நியாயத்தை அவர்கள் பெறுதற் குரியவர்களே.''

தாம் கூற வேண்டியதைக் கூறிவிட்டுச் சுவாமிஜி வாளாயிருந் தார். பொருளற்ற ஒரு சலசலப்பு அவரைச் சுற்றி எழுந்தது. அதை அவர் கேட்டுக்கொண்டிருந்தார்; ஆனால், அதை அவர் பொருட்படுத்தவில்லை போலும்! சில சமயம் அவருடைய பார்வை வீட்டுக்கூரை மேல் விரையும்; மெல்லிய குரலில் 'சிவ சிவ' என்று உச்சரிப்பார்.

சுவாமிஜியின் உணர்ச்சி வெள்ள வேகத்தால் தாக்குண்ட அச்சிறு கூட்டம் பெரு மனக்குழப்பத்தோடு பிறகு கலைந்தது. உணர்ச்சி வெள்ளமும், வஞ்சம் தீர்க்கும் அவர் வெஞ்சினமும் அமைதி நிலவும் அவர் மனத்தின் மேற்பரப்பின் கீழே ஓடும் எரி மலைத் தீக்குழம்புகள் போலும்?

அவர் சில நாட்கள் தங்கினார் (பார்க்கப்போனால் அவை வாரத் தின் இறுதி நாட்களேயாகும்.) எப்பொழுதுமே அவருடைய பேச்சுக்கள் ஓவிய மனைய உதாரணங்களும் அழகு வாய்ந்த புராணக் கதைகளும் செறிவுற்றிருக்கும்.

சுவாமிஜி அழகான ஒரு கதை சொன்னார்: ''பல இன்னல் களுக்காளான கணவனை ஒரு மனைவி நிந்தித்துப் பேசினாள். 'பிறர் வெற்றிகரமாக வாழ்க்கை நடத்துகின்றனர். நீங்களோ வாழ்க்கை யில் தோல்விகளைத் தவிரப் பிறிதொன்றும் அறியவில்லை. பல ஆண்டுகளாக நீங்கள் வழிபட்ட தெய்வம் உங்களுக்கு என்ன செய்தது? இப்பொழுதுதான் உங்களுக்கு அது புரிந்தது போலும்! என்று இடித்துக் கூறினாள்.

''நான் அறத்தை விலை கூறும் சமய வணிகனா? அதோ அந்த மலையைப் பார்! அது எனக்கு என்ன புரிகின்றது? நான்தான்

அதற்கென்ன செய்துவிட்டேன்? ஆனால் அதனிடம் நான் அன்பு செலுத்துகின்றேன். வனப்பை வழுத்தும் இயல்போடு நான் பிறந்து விட்டேன். அதைப்போல ஆண்டவன்பால் எனதன்பு விரைகின்றது,'' என்றார்.

பின்பு, சுவாமிஜி ஒரு துறவியருக்கு ஒரு பொருளை நல்க விழைந்த ஒரு வேந்தனைப்பற்றிய கதையைச் சொன்னார்: ''துறவி யார் ஒருவர் தமக்கு யாதொன்றும் வேண்டா என்று மறுத்தும், மன்னன் அவரைத் தன்னோடு வரும்படி இறைஞ்சினான். அரண் மனையை நண்ணியதும் வேந்தன் இறைவனை வழிபட்டதை அவர் உற்றுக் கவனித்தார். அத்துறவியார் செல்வத்திற்காகவும், அதி காரத்திற்காகவும், நீண்ட ஆயுளுக்காகவும் அவன் ஆண்டவனை வணங்கியது கண்டு, விரித்த பாயைச் சுருட்டிக்கொண்டு வெளியே போகப் புறப்பட்டார். தியானத்திலிருந்து எழுந்த மன்னன், கண்களைத் திறந்து நோக்கினான். துறவியார் எழுந்து போவதைக் கண்ணுற்ற அவன், 'ஏன் நீங்கள் என்னிடமிருந்து ஒன்றையும் பெறாது போகின்றீர்கள?' என்று கேட்டான். 'இரப்போனிடம் இரத்தல் அழகல்லவே!' என்று அத்துறவியார் பதிலளித்தாராம்.''

''கிறித்தவ சமயம் உலகத்தைக் காப்பாற்றவந்த அருள்சக்தி,'' என்று ஒருவர் குறிப்பிட்ட பொழுது சுவாமிஜி தம்முடைய பரந்த கருவிழிகள் மலர, ''அச்சமயத்திற்கு உலகத்தைக் காப்பாற்றும் சக்தி இருக்குமானால், அது ஏன் எதியோப்பியர்களையும் அபிசீனியர் களையும் உய்விக்கவில்லை?'' என்றார்.

''துறவியிடம் அவர்கள் ஒன்றும் செய்வதற்கியலாது,'' என்ற சொற்றொடர்தான் அடிக்கடி சுவாமிஜியின் உதடுகளில் தவழும்.

சுவாமிஜி, ஆங்கில அரசாங்கத்தார் தம்மைப் பிடித்துச் சுட்டுக் கொன்றாலும் நலமாயிருக்கும் என்ற தம் பெருவிருப்பத்தைச் சில வேளைகளில் வெளியிட்டிருக்கிறார். தம்முடைய மரணம் அவர்க ளுடைய அழிவாம் சவப்பெட்டியை மூடி அறைவதற்கு இறுதி ஆணியாக இருக்கக்கூடுமென்று தம் வெண்பற்கள் சற்று இலக அவர் இயம்புவார். மேலும், அவருடைய மரணச் செய்தி நாடு முழுதும் காட்டுத் தீயைப்போலப் பரவும்.

''இந்திய நாட்டுக் கலகத்தில் தானே படைகளை நடத்திச் சென்ற பயங்கர வடிவுள்ள இராணிதான் நான் போற்றும் வீரப் பெண்மணியாவாள். பண்டைய கலகக்காரர்கள் கரந்து வாழ்தற் பொருட்டுப் போலித் துறவு பூண்டார்கள். இத்தகைய போலிச் சந்நியாசிகள் கொண்ட கருத்துக்கள் பேரச்சத்தை விளைவிக்கக் கூடியவைகளே. அப்போலிச் சந்நியாசிகளிடையே ஓர் உத்தம வீரன் திகழ்ந்தான். அவன் கலகத்தில் தன் நான்கு மைந்தர்களை இழந்தவன்; இறந்துபோன தன் மைந்தரைப் பற்றிச் சற்றும் மனக்கலக்கமின்றிப் பேசுவான். ஆனால், மாண்ட இராணியைப்

பற்றிக் கூறும்பொழுதெல்லாம் கண்களிலிருந்து நீர், அருவியெனப் பாய அவன் அழுது புலம்புவான். 'அந்தப் பெண்மணி தேவியே தான்' என்று மொழிவான். தோல்வியுற்ற அவளோ, தன் வாளின் மீதே பாய்ந்து உயிர் நீத்தாள். அவள் ஒரு போர் வீரன் போல மாய்ந்தாள். இந்தியக் கலகத்தைப் பற்றி ஒரே சுதியில் கேட்டு, அது வேறு விதமாக இருக்க முடியாது என்று நம்பியிருக்கின்றவர்களுக்கு வேறு சுதியில் பேசப்படும்பொழுது அது வியப்பையே உண்டாக்கும். இந்துவாய்ப் பிறந்தவன் பெண் வதை செய்ய மாட்டானன்றோ ?'' என்று சுவாமிஜி கூறினுர்.

(2)

சமயம், நாகரிகம், அற்புதங்கள்.

[இது, 'அப்பீல் அவலாஞ்சி'யிலிருந்து எடுக்கப்பட்டது. 21-1-1894.]

ஸாலட்டு அக்காடெமியின் கூட்டத்தில் சுவாமிஜி அமர்ந்திருக்கின்ருர். அவர் மெம்பிஸ் என்னும் ஊரில் தங்கிய பொழுது அதையே அவர் தமக்கு உறைவிடமாகக் கொண்டார். கூட்டத்தில் பேச்சு நடக்கின்றது. சுவாமிஜி, ''நான் ஒரு துறவி; கோயிற்பூசாரி அல்லேன்; என் நாட்டில் நானிருக்கும் பொழுது கிராமம் கிராமமாய், நகரம் நகரமாய்ப் பிரயாணஞ் செய்வேன்; மக்கட்கு உபதேசம் புரிந்துகொண்டே போவேன்; அவர்களே உணவளித்து என்னைக் காப்பாற்றுவார்கள்; பணத்தைக் கையால் தொடவும் எனக்கு அதிகாரமில்லை,'' என்ருர். ஒரு கேள்விக்குப் பதிலாகத் தம் சுய சரிதத்தைப்பற்றி அவர் பின்வருமாறு மொழிந்தார்:

''நான் வங்காளத்திற் பிறந்தேன்; துறவியானேன்; மனமுவந்தே பிரம்மசாரியானேன். நான் பிறந்தவுடனே என் ஜாதகத்தை என் தந்தையார் குறித்து வைத்தார். அதைப்பற்றி என்னிடம் சொல்ல அவர் விரும்பவில்லை. சில ஆண்டுகள் கழிந்தபிறகு, நான் என் ஊருக்குச் சென்றேன். அதற்குள் என் தந்தையார் இறந்துவிட்டார். என் தாயாரின் கைவசமிருந்த பெட்டியையும் சில பத்திரங்களையும் நான் காண நேர்ந்தது. நான் உலகமெல்லாம் சுற்றித் திரியும் துறவியாய்த் திகழ்வேன் என்பது ஜாதகத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.''

சுவாமிஜி குரலில் ஓர் இரக்கக் குறிப்புத் தொனித்தது. இதைக் கேள்வியுற்ற சிறு கூட்டத்திடையே மெல்லிய அனுதாபக் குரல் எழுந்தது. **கானந்தா**[1] சுருட்டுச் சாம்பரைத் தள்ளி உதறிவிட்டு, ஒரு கணம் அமைதியாய் வீற்றிருந்தார்.

---

[1] விவேகானந்தரைக் ' கானந்தா ' மன்றுதான் அமெரிக்க நாட்டு நிருபர்கள் வழங்குவது வழக்கம்.

''உங்கள் சமயமொன்றையே நீங்கள் உரிமையாகக் கொள்ளு கின்றீர்கள். அதுதான் உண்மையான சமயமென்று கருதினுல், நாகரிகத்தில் மற்றைய நாடுகள் உயர்ந்தது போல ஏன் உங்கள் நாடு முன்னேறவில்லை? உலகத்திலுள்ள நாட்டவர்களுக்குள்ளே அது உங்களை ஏன் உயர்த்தவில்லை?'' என்று யாரோ ஒருவர் சுவாமிஜியை வினவினுர்.

''அது, சமய வட்டத்தைச் சேர்ந்ததன்று,'' என்று அவர் சிந்தனை முகத்தில் தவழச் செப்பினுர். ''இவ்வையகத்தில் எங்கள் நாட்டு மக்கள் மிகவும் ஒழுக்கமுள்ளவர்கள். இந்தத் துறையில் அவர்கள் மற்றைய இனத்தவர்களுக்குக் கீழ்ப்பட்டவரல்லர். அவர்கள் பிறருடைய உரிமைகளைக் காப்பாற்றுவதில் கருத்து உள்ளவர்கள். வாயில்லா விலங்கினங்களுக்குரிய உரிமைகளையும் அவர்கள் புறக்கணிக்க மாட்டார்கள். அவர்கள் உண்டி அருந்திக் களித்து வாழும் உலகாயத இன மக்களைச் சார்ந்தவரல்ல. ஒரு நாட்டின் அல்லது நாட்டு மக்களின் சிந்தனையையோ, தெய்விக ஆவேசத்தையோ எந்தச் சமயமும் வளர்த்ததாகத் தெரியவில்லை. உண்மையை உரைக்குமிடத்து, உலக வரலாற்றில் எந்த அரும் பெருஞ்செயலும் சமயம் குறுக்கிடாமல் நிறைவேறினதாகத் தெரியவில்லை. நீங்கள் பெருமை பாராட்டுகின்ற சமயங்கூட இந்த உண்மைக்கு விலக்கன்று. உங்கள் டார்வின்கள் (Darwins), உங்கள் மில்கள் (Mills), உங்கள் ஹியூம்கள் (Humes), யாவரும் உங்களுடைய பாதிரிகளின் மதிப்பைப் பெறவில்லை. இந்நிலையில் இக் காரணங்கொண்டு ஏன் என் சமயத்தை நீங்கள் இகழ வேண்டும்?''

''ஆன்மிகத் துறையிலும் உலகியல் துறையிலும் மனித இனத்தை உயர்த்தாத சமயத்திற்கு ஒரு துரும்புக் களிக்கும் மதிப்புக்கூட நான் அளிக்கமாட்டேன். நீங்கள் கூறுவதில் உண்மை இருக்கிறதாகத் தெரியவில்லை. அதை ஏற்க என்னுல் இயலாது. எங்கள் சமயம் புரிந்த செயல்களைப் பாருங்கள்: அது கல்லூரிகளை நிறுவியிருக்கிறது; மருத்துவச்சாலைகள் அமைத்திருக்கிறது; சீர் குலைந்தவர்களை உயர்த்தியிருக்கிறது; கீழினத்தாரை உன்னத நிலையை அடையும்படி செய்திருக்கிறது. தன்னைப் பின்பற்றுபவர்களை நல்வாழ்வு வாழும்படி தூண்டியிருக்கிறது,'' என்று அந்தக் கூட்டத்திலிருந்தவன் முழங்கினுன்.

''நீங்கள் மொழிந்தது ஓரளவு உண்மைதான்,'' என்று சுவாமிஜி சற்றுங் கலங்காமல் அமைதியாய் விடை அளித்தார். ''ஆனுல், இவை யாவும் கிறித்தவ சமயத்தின் நேர் விளைவென்பது காட்டப்படவில்லை. மேற்றிசையில் இவை யாவும் விளைவதற்கு வேறு பல காரணங்களும் உண்டல்லவா?'

''சமயச் சிந்தனை மனிதனது ஆன்மிக இயல்பை உயர்த்த வேண்டும். விஞ்ஞானம், கலை, கல்வி, தத்துவ விசாரம் இவை

யாவும் தக்கபடி செயல்புரிய மக்கட்சமுதாயத்தில் இடமுண்டு. ஆனால், இவை யாவற்றையும் சேர்த்து ஒன்றாகக் கருதினால் அதற்குள்ள தனிச் சிறப்பு மாய்ந்துவிடும். இறுதியில் சமய நெறியிலிருந்து ஆன்மிகத் தன்மையையும் நீங்கள் விலக்கி விடுவீர்கள். அமெரிக்க நாட்டைச் சார்ந்த நீங்கள், எதைத் தொழுகின்றீர்கள்? 'டாலர்' தான் நீங்கள் வணங்கும் தெய்வம். பணத்தைத் திரட்டுகிற உங்கள் பைத்தியக்காரச் சுரவேகத்தில் ஆன்மிகத் தன்மையை மறந்துவிடுகின்றீர்கள். உலகாயத வாழ்வு வாழ்கின்ற நாட்டவர்களாய் நீங்கள் மாறிவிடுவீர்கள். எங்கும் தலை விரித்தாடுகின்ற இந்தப் பணத்தாசை, உங்கள் பாதிரிமார்களை மாசுறச் செய்கின்றது. நீங்கள் வழிபடுகின்ற ஆலயங்களிலும் இத்தீய ஆசை புகுந்து அவற்றின் தூய்மையை அகற்றிவிட்டது. எங்கள் நாட்டிலே நான் சொல்லக்கூடியவர்கள் வாழ்ந்த ஞான வாழ்க்கைகளை நடத்திய ஒருவரை உங்கள் வரலாற்று நூலிலிருந்து எனக்குக் காட்டுங்கள்; நான் விரித்துரைப்பேன். 'ஏ மரணமே, என் உடன்பிறந்தோனே, நான் மனமுவந்து உன்னை வரவேற்கின்றேன்,' என்று மரணம் வருங்கால் மொழியக்கூடியவர்கள் எங்கே உள்ளனர்? 'பெர்ரிஸ்' சக்கரங்களை அமைப்பதற்கும் 'ஈவெல்' கோபுரங்களை எழுப்புவதற்கும் உங்கள் சமயம் துணி புரியும்; ஆனால், அது உங்கள் அகவுயிர் வளர்ச்சிக்கு உதவிபுரிகின்றதா? என்று சுவாமிஜி திருவாய் மலர்ந்தருளினார்.

அந்தத் துறவியார் மிக்க ஆர்வத்துடன் பேசினார். 'கணீ' ரென்று ஒத்த அளவோடு ஒலிக்கின்ற அவருடைய செறிந்த இனிய குரல், அந்த அறையில் சூழ்கின்ற இருளின்மீது மெல்ல மிதந்து வந்தது. அந்தக் குரலில் துயரமும் நிந்தனையும் குழைந்து எழுந்தன. ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வரலாற்றில் இடம் பெற்ற நாட்டிலிருந்து வந்த அச்சான்றோர், 19-ஆம் நூற்றாண்டில் திகழ்கின்ற அமெரிக்க நாட்டின் நாகரிகத்தைக் குறை கூறினார். அவர் அருளிய உரைகளில் அறிவரிய மாபெரு வியப்பை உண்டு பண்ணக்கூடிய ஓர் அமிசத்தைக் கேட்டோர் கண்டனர்.

''நீங்கள் ஞான வாழ்வை நாடுகின்ற காரணத்தால் இம்மையை மறந்துவிட்டீர்கள். உங்கள் சமயக் கொள்கை நீங்கள் நல்வாழ்வு வாழ உதவவில்லையே!'' என்று அங்குள்ளவருள் ஒருவன் சொன்னான். ''மரணத்தை இன்பமாக ஏற்க அது உதவுகின்றது'' என்றார் துறவியார். ''இம்மை வாழ்வு எங்களுக்கு உறுதி'' என்ற மறுமொழி கிடைத்தது.

''உங்களுக்கு ஒன்றிலும் உறுதி இல்லை'', என்று மறுப்பு வந்தது. ''சமயத்தின் நோக்கம் இம்மையையும் கவனித்து, மறுமைக்கும் வழிகாட்ட வேண்டுவது. அது மரணத்தை ஏற்க ஒருவனை ஆயத்தம் செய்யவேண்டும்,'' என்றார்.

''உண்மைதான் அது,'' என்று அந்த இந்திய நாட்டுத் துறவியார் சட்டென்று மொழிந்தார். ''நாங்கள் அதைப்பெறவே முயலகிறோம். இந்து மதம் ஞான வளர்ச்சியை எழுப்பும் ஆர்வத்தை மிளிரும்படி செய்தது; ஆனால், வழிபடுவோர்களிடத்தே உலக வாழ்வைப் புறக்கணிக்கும்படி தூண்டிவிட்டது. மேலை நாடு இதற்கு நேர்மாறாகக் காட்சி அளிக்கின்றது. குடதிசை போற்றும் இம்மையின் இயல்பையும், குணதிசை ஏற்கும் மறுமையின் நோக்கத்தையும் நயம்படப்பிணைத்தால், அருஞ்செயல் புரியலாம்! இந்தப் பெருமுயற்சியில் இந்து சமயம், தன் தனித்தன்மையைப் பெரிதும் இழத்தல் கூடும்.''

''நீங்கள் நினைக்கிற முறையில் செயல் நிகழுமாயின், இந்து சமுதாயத்தின் அமைப்பே முற்றிலும் மாறிவிடாதா?''

''ஆம்; மாறக்கூடும்; ஆனால், இந்து சமயத்தின் யாதொரு சிதைவும் தோன்றாது.''

இந்துக்களின் தெய்வ வழிபாட்டைப் பற்றிப் பேச்சு எழுந்தது. விவேகானந்தர் இப்பொருளைப் பற்றிச் சுவைத்து நுகரக்கூடிய செய்தியைக் கூறினார். இந்திய நாட்டில் அஞ்ஞேயவாதிகளும் (agnostics), நாத்திகர்களும் இருக்கின்றார்கள். இத்தகையோர்கள் எந்த நாட்டிலேதான் இல்லை? எங்குந்தான் இருக்கின்றார்கள். ''பிரம்மத்தை நாடக் கூடியவர்களுடைய முக்கிய நோக்கம் அனுபூதிச் செல்வத்தை அடைவதே; நம்பிக்கை தேவையன்று. பிரம்மஞான சபையின் மதத்தைப் பற்றி விவேகானந்தர் யாதொன்றும் அறிந்தாரில்லை. இத்தகைய மதம், தாம் கொண்ட சமயக் கொள்கையின் ஓர் அமிசமுமன்று. ஆனால், அதை ஆக்கிக் கொள்ள இயலும் பிளாவட்ஸ்கி அம்மையாரைத் தாம்நேரில் கண்டதில்லை என்று அவர் இயம்பினார். அவர் அமெரிக்க நாட்டுப் பிரம்மஞான சபையைச் சார்ந்த கர்னல் ஆல்காட்டு அவர்களைச் சந்தித்திருக்கிறார். அன்னி பெசண்டு அம்மையாரை அவர் அறிவார்.

இந்தியாவில் நடமாடுகின்ற பக்கிரிகள், கீர்த்தி வாய்ந்த கழைக்கூத்தாடிகள், கண்கட்டு வித்தை செய்பவர்கள், மந்திர வாதிகள்—இவர்களுடைய அருஞ்செயல்கள் இவர்கள் புகழை உலகமெங்கு முரசடித்திருக்கின்றன. இவை சம்பந்தமாகத் தம் பார்வை வட்டத்திற்குள் மிதந்து வந்த சில நிகழ்ச்சி வரலாறுகளைக் குறிப்பிட்டார். இவை நம்பத்தகாதனவாய் இருந்தன.

இந்தச் சால வித்தைகளைப்பற்றி உசாவிய பொழுது சுவாமிஜி கூறலுற்றார்: ''ஐந்து மாதத்திற்கு முன்பு—அதாவது, நான் என் நாட்டை விட்டு இந்த நாட்டிற்கு வருவதற்கு ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு முன்பு நான் இருபத்தைந்து பேர்களைக் கொண்ட ஒரு யாத்திரிகர் கூட்டத்திற்குப் போக நேர்ந்தது. உள் நாட்டிலுள்ள ஒரு நகரத்தில் யாத்திரிகர்கள் சிலகாலம் தங்கினார்கள். ஊர்

ஊராய்த் திரியும் மந்திரவாதிகளுக்குள்ளே மிகவும் வியப்பை உண்டுபண்ணக்கூடிய அற்புதச் செயல்களைப் புரியும் ஒரு மந்திர வாதியைப் பற்றிக் கேள்விப்பட்டேன்; எதை நாம் விழை கின்றோமோ அதைக் கொண்டுவர முடியும் என்று அவன் கூறினன். அவன் வேண்டுகோளுக்கிணங்க, அரைக் கோவணந் தவிர வேறு உடையின்றி நாங்கள் அவனை நிறுத்திவிட்டோம்; அறையின் ஒரு மூலையில் நிற்கும்படி ஏற்பாடு செய்தோம். என்னு டைய பிரயாண விரிப்பை அவனுக்கு நல்கி, அவன் காட்ட வாக் களித்திருந்த வித்தைகளைப் புரியும்படி கேட்டோம்; நாங்கள் எவற்றை விரும்புகின்றோம் என்று அவன் வினவினன். கலிபோர்னி யாத் திராட்சைக் கொத்து ஒன்று வேண்டும் என்று நான் கூறி னேன். அந்த விரிப்பின் அடியிலிருந்து கண்ணிமைப் பொழுதில் அவன் அதைக் கொணர்ந்துவிட்டான். ஆரஞ்சுப் பழங்கள் முதலி யனவும் வந்தன. சுடச்சுட அரிசிச் சோறும் பெருந்தட்டுகளில் வந்தது.''

இந்தப் பேச்சைத் தொடர்ந்தே மேலும் சுவாமிஜி கூறுவாராய், ''ஐந்தறிவோடு நின்றுவிடவில்லை. ஆறும் அறிவும் உண்டு,'' என் ருர். தொலைத் தூரத்து நினைவைச் செலுத்தலில் தமக்கு நம்பிக்கை உண்டென்று அவர் கூறினர். எப்படி இந்த நிகழ்ச்சிகள் ஏற்படக் கூடும் என்ற விஷயத்திற்குக் காரணங் காட்ட அவர் முயலவில்லை. ஆனல், இவை மிகுந்த வியப்பைத் தரக்கூடியவை என்று மட்டும் அவர் இயம்பினர்.

உருவ வழிபாட்டைப்பற்றிப் பேச்சு எழுந்தது. ஆண்டவன் வடிவாக வைத்து வணங்குகின்ற வரையில் உருவ வழிபாட்டிற்குத் தம் மதத்தில் இடமுண்டு என்று அவர் உரைத்தார்.

''நீங்கள் எதை வழிபடுகின்றீர்கள்? கடவுளைப் பற்றிய உங் கள் கருத்து என்ன?'' என்ருர் சுவாமிஜி. 'ஆவி' என்று அமைதி யாய் ஒரு மாது கூறினள்.

'' 'ஆவி' என்பது என்ன? புராட்டஸ்டண்டு வழிபாட்டைச் சார்ந்த கிறித்தவர்கள் கிறித்தவ வேதத்தில் கூறப்பட்டிருப்பதை அப்படியே போற்றி வணங்குகின்ருர்களா, அவற்றைத் தாண்டி நிற்கிற ஒன்றைத் தொழுகின்ருர்களா? நாங்கள் திருவுருவாயிலா கக் கடவுளைத் தொழுகின்றோம்,'' என்று சுவாமிஜி கூறினர்.

''அப்படியானல், புற வழிபாட்டிலிருந்து அக வழிபாட்டிற்குச் செல்கின்றீர்களா?'' என்று பேச்சை உற்றுக் கேட்டுக்கொண்டி ருந்த ஒரு செல்வர் வினவினர். ''ஆம். அதுதான்,'' என்று அவர்க்கு நன்றி செலுத்துபவர் போலக் கூறினர் சுவாமிஜி. அவர் இந்தச் சுதியில் பேசிக்கொண்டே போனர். ஆனல், பேச்சை முடிக்குந் தருணம் வந்துவிட்டது. வேறு இடத்தில் அவர் சொற் பொழிவு நடத்தும் நேரமும் நெருங்கிற்று.

(3)

சமய சமரசம்

['டெட்ராய்ட்டு பிரீ பிரஸ்', 14–2–1894]

சுவாமிஜி உயரமானவருமல்லர்; குட்டையானவருமல்லர்; அவருடைய நாட்டு மக்களைப் போலச் சற்று மாநிறமுள்ளவர்; அமைதியான இயல்புள்ளவர். அவர் நடையில் ஒரு விதத் தீர்மானத்தைப் பார்க்கலாம். அவரது ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு சலனமும், ஒவ்வொரு சைகையும் மிக உயர்ந்த மரியாதையைக் காட்டும். அவருடைய வடிவப் பொலிவில் நமது உள்ளத்தைக் கவரக் கூடிய சிறந்த அமிசம் அவர் கண்களே. அவற்றில் ஒரு பேரொளி மிளிரக் காண்போம். பேச்சு, இயற்கையாய்ச் சமய ஆராய்ச்சியில் மிதந்து ஓடிற்று. அப்பொழுது, மிகவும் கவனிக்க வேண்டிய சில கருத்துகளைச் சுவாமிஜி குறிப்பிட்டார்.

''சமயத்திற்கும், கொள்கைக்கும் உள்ள வேறுபாட்டை நான் விளக்குகின்றேன்: சமயம் எல்லாக் கொள்கைகளையும் தழுவி நிற்கின்றது. ஒரே எல்லையை நாடக் கூடிய முயற்சிகளை அவற்றில் சமயம் உணர்கின்றது. ஒன்றோடொன்று பூசலிட்டுப் போர் புரியும் தன்மையை உடையது கொள்கையேயாகும். பல்வேறு மக்களிடையே பலவிதக் கொள்கைகள் திகழக் காண்கின்றோம். பொதுமக்கட்சமுதாயத்திற்கேற்றவாறே கொள்கையும் அமைகின்றது. மக்களுக்கு எவை தேவையோ, அவற்றை அது நல்குகின்றது. அறிவுத் துறையிலுஞ்சரி, ஆன்மிகத் துறையிலுஞ்சரி, உலகியல் துறையிலுஞ்சரி, இவ்வையகம் வேறுபட்ட எண்ணிறந்த இயல்புகளோடு காட்சி அளிக்கின்றது. ஒரே விழுமிய நல்லற நியதியின் உவமையில் மக்கள் தங்களுக்கு மிகவும் ஏற்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு, அதைப் பின்பற்றுகின்றார்கள். சமயம் இவற்றையெல்லாம் புறக்கணியாமல் ஏற்றுக்கொள்கின்றது. இவற்றின் அடியில் ஒரே தத்துவ அருவி பாய்கின்றதன்றோ? பல பாதைகள் வாயிலாக நாம் ஒரே எல்லையை நண்ணுகின்றோமல்லவா? நான் செல்லும் பாதை மேலைநாட்டு நண்பர்களின் இயல்புக்கேற்றவாறு அமையாதென்பது திண்ணம். அதைப் போலவே, என் இயல்புகளுக்கேற்றவாறு—நான் கண்ட வேதாந்தத் தத்துவத்திற்கேற்றவாறு—அவர்கள் பின் பற்றும் நெறி அமையாதன்றோ? நான் இந்து சமயத்தைச் சார்ந்தவன். இது புத்தமதக் கொள்கையன்று. இது இந்து சமயத்தின் கிளைகளிலொன்று. சமயப் பிரசாரத்தில் நான் திளைக்கின்றதில்லை. எங்களுடைய சமயத் தத்துவங்களைப் பிறர் மீது நாங்கள் சுமத்த மாட்டோம். எங்கள் மதத்தின் அடிப்படையான தத்துவங்கள் இத்தகைய பிரசாரத்தைத்

தடுக்கின்றன. நீங்கள் அனுப்பி வைக்கிற சமயப் பிரசாரகர்களைப் பற்றி நாங்கள் எவ்விதமான பகைச் சொற்களையும் இயம்புவதில்லை. இப்பாரின் மூலை முடுக்குகளிலும் அது ஊடுருவிப் பாய்வதை நாங்கள் உள்ளம் உவந்து ஏற்கின்றோம். பலர் எங்களை நாடி வருகின்றனர். ஆனால், அவர்களை நண்ண நாங்கள் முயலுவதில்லை. எங்கள் சிந்தனைப் பாதைக்கு வரும்படி நாங்கள் பிறரை வற்புறுத்துகிறதில்லை. எங்களுடைய முயற்சிகளின்றியே, எங்கள் மதம் பல வடிவுகளையடைந்து எங்கும் பரவக் காண்கின்றோம். கிறித்தவ சமய நெறி, பிரம்மஞான சபையாரின் கொள்கை, எட்வின் ஆர்நால்டு கண்ட ஆசிய சோதித் தத்துவம் முதலியன இந்து சமயத்தின் வடிவங்களே. எங்கள் சமயம் மற்றைய சமயங்களைவிட மிக்க தொன்மை வாய்ந்தது; கிறித்தவரின் கொள்கையைக்காட்டிலும் பழமையானது. கிறித்தவ மதத்தை நான் ஒரு கொள்கையென்றே கருதுகிறேன். அதில் முரண்பாட்டு அமிசங்கள் தோன்றுவதால், அதைச் சமயம் என்று கருதுவதற்கிடமில்லை. மேலும், கிறித்தவ மதம் இந்து மதத்திலிருந்து தளிர்த்த ஒரு தளிரே தவிர, பிறிதன்று. கழிவிரக்கம், ஆசாரியரிடம் தம் குற்றங்களை ஒப்புக்கொண்டு அவற்றிற்காக உள்ளம் சாம்பி வருந்துதல், ஞானிகளைப் போற்றுதல்—இவை போன்ற செயல்கள் இந்து சமயத்திலிருந்து கத்தோலிக்க சமயத்தில் புகுந்துவிட்டன. இவ்விரு சமயங்களின் ஒற்றுமைகளையும், கத்தோலிக்க சமயத்திற்கு மூலமாயிருக்கிறது இந்து மதந்தான் என்னும் உண்மையையும் ஒரு கத்தோலிக்க குரு தக்கபடி உணர்ந்து, சான்றுகள் கொண்டு தம் புத்தகம் வாயிலாக வெளியிட்டார். அக்காரணத்தால் அவர் தம் உயர்ந்த பதவியை இழக்க நேர்ந்தது.''

''உங்கள் சமயத் துறையிலும் அஞ்ஞேயவாதிகள் இருக்கின்றார்களா?'' என்ற வினாப் பிறந்தது.

சுவாமிஜி, ''ஆம், இருக்கின்றார்கள். எதையும் ஐயுறும் தத்துவ அறிஞர்களும் இருக்கின்றார்கள். சமயத்தில் நம்பிக்கையில்லாதவர்களும் உண்டு. புத்தரை நாங்கள் ஒரு ஞானியாராகத்தான் கருதுகின்றோம். அவரைப் பின் பற்றியவர்களுள் ஒருவன் 'கடவுள் இருக்கிறாரா?' என்று அவரைக் கேட்டான். 'கடவுளா! கடவுளைப்பற்றி உங்களுக்கு எப்பொழுதாவது நான் அறிவுறுத்தியிருக்கிறேனா? நல்லவர்களாயிருங்கள்; நல்லதைச் செய்யுங்கள் என்றுதானே உங்களுக்கு நான் உபதேசஞ் செய்தேன்?' என்று அவர் மறுமொழி கூறினார். ஐயுறும் தத்துவ அறிஞர் பலர் உண்டு. இயற்கையிலும் மனிதனின் இறுதியான பூரணத்திலும் வேரூன்றிய ஒழுக்கம் பெறும் நெறியில் அவர்களுக்கு நம்பிக்கை உண்டு. உலக மக்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைகளனைத்தும் வருங்காலத்தில் உதயமாகப் போகிற அகண்டாகார ஆன்மாவை அடையச் செய்யும் பெருமுயற்சிகளேயாகும்,'' என்றார்.

''சமயப் பிரசாரஞ் செய்வதை உங்களுடைய சமயம் சற்று இழிவாக நினைக்கின்றதா ?''

இதற்குப் பதில் அளிப்பதன்பொருட்டுக் கீழ்த்திசையிலிருந்து வந்த ஞானியார், நூலின் இதழ்களைச் சற்றுப் புரட்டிக்கொண் டிருந்தார். சிறந்த பல சாசனங்களுள் ஒன்றைக் குறிப்பிட்டு, ''கி. பி. 200-ஆம் ஆண்டில் இந்தச் சாசனம் எழுதப்பட்டது. நீங்கள் எழுப்பிய கேள்விக்கு இதுவே தக்க பதிலாக இருக்கும்,'' என்று உணர்ச்சிக்கேற்றவாறு தெளிவான இன்னிசைக் குரலில் அதைப் படித்தார்:

''தெய்வங்களும் உவக்கும் வேந்தர் பையாதசி (பிரியதரிசி) என்பவர் எல்லா வகுப்பினரையும், துறவிகளையும், இல்லறத்தார் களையும் கௌரவிக்கின்றார்; நன்கொடைகளாலும் ஈகைகளாலும் அவர்களை இன்புறச் செய்கின்றார். இவற்றைக்காட்டிலும் அவர் போற்றுவது நற்குணங்களை வளரச்செய்யும் முயற்சியேயாகும். வகுப்புக்களுக்கேற்றவாறு முக்கியமான குணங்கள் மாறுகின்ற நிலையைப் பார்க்கின்றோம். ஆனால், எல்லாவற்றிற்கும் அடிப்படை யான தத்துவம் ஒன்றுண்டு. அது யாதெனில், பேச்சிலும் ஒழுக் கத்திலும் அமைதி தோய்ந்த ஒருமிதமே. தாங்கள் கொண்ட கொள்கையை உயர்த்தி மற்றவர்களுடையதை இகழ்ந்து பேசுவது அழகன்று. சந்தர்ப்பம் வரும்பொழுதெல்லாம் அதற்குரிய மரியா தையை அளித்தல் வேண்டும். இப்படி முயலுவதாலேதான் ஒரு வன் தன்னுடைய கொள்கையைச் சிறப்பிக்க இயலும். இதுவே மற்றவர்களுடைய கொள்கைக்கும் தொண்டு புரிந்ததாகும். ஆனால், வேறு விதமாக அவன் நடப்பானாகில், தன் கொள்கை யைப் போற்றுபவனாகக் கருதப்பட மாட்டான். அபிமானத்தால் தன்னுடைய கொள்கையின் புகழைப் பரப்புதற்பொருட்டுப் பிறர் கொள்கைகளைச் சிறுமைப்படுத்துவது—தன் கொள்கையைத் தானே வலியத் தாக்கினதை ஒக்கும். ஆதலால், சமய சமரசந் தான் போற்றுதற்குரியது. பொறுமையோடு பிறருடைய கொள்கை களையும் ஒவ்வொருவரும் அன்புணர்ச்சியோடு கருதுதல் வேண்டும். இந்த நோக்கத்தோடுதான் இந்தச் சாசனம் பொறிக்கப்பட்டிருக் கிறது. எந்நிலையில் இருந்தாலுஞ் சரி; ஒழுக்கச் சம்பந்தமான முக்கியக் கொள்கைகளை எல்லோரும் போற்ற வேண்டும்; மற் றைய சமயிகளின் கொள்கைகளையும் போற்ற வேண்டும். ஒருவ ரோடொருவர் மிகவும் மரியாதையுடன்நடப்பதுதான் சிறப்பாகும். இந்தப் பெருநோக்கோடுதான் சமயத்தைக் காப்பாற்றுபவர்களும், பரிசீலனை செய்பவர்களும் நிலையங்களில் வேறு தொழிலாற்றுபவர் களும் தத்தம் பணியாற்ற வேண்டும்.''

சுவாமிஜி, மனத்தில் ஆழ்ந்து பதியக்கூடிய இந்தப் பகுதி யைப் படித்த பிறகு, மீண்டும் கூறலுற்றார்:

''இந்தச் சாசனத்தைப் பொறித்த அந்த அறிவு வாய்ந்த வேந்தர், போரில் திளைக்கக்கூடாது என்ற சாசனத்தையும் அமைத்திருக்கிறார். உலகமெங்கும் பரவியிருக்கின்ற மிகச் சிறந்த ஓர் ஒழுக்க நெறிக்குப் போரின் கொடுமைகள் சற்றும் பொருந்தா. இந்தக் காரணத்தால், இந்திய நாடு உலக முன்னேற்றத்தில் இன்னல் உற்றது. விலங்காற்றலும், இரத்த வெறியும் மற்றைய நாடுகளை முன்னணியில் நிறுத்திவிடுகின்றன. இத்தகைய விலங்கின் உணர்ச்சித் தோற்றங்களை இந்தியா,—'தீயவை' என எதிர்த்தது. 'போராட்டத்தில் வலியுள்ளவைகளே எஞ்சி நிற்கும்,' என்ற நியதி, ஒரு நாட்டிற்கும் உண்டு, தனித்த மனிதனுக்கும் உண்டென்பது உண்மையேயன்றோ? இந்த நியதிக்கேற்றவாறு இவ்வையகத்தில் இம்மைத் துறையில் பல நாடுகளுக்குக் கீழ்ப்பட்ட நிலைக்கு இந்தியா வந்துவிட்டது.''

''மேலை நாட்டில் 19-ஆம் நூற்றாண்டில் எழுந்த தேவைகளுக்கு ஈடு கொடுப்பதன்பொருட்டுப் பேரூக்கமும் ஆற்றலும் இன்றியமையாதனவாய் இருக்கின்றன. இப்படிக் கடும்போர்களில் திளைக்கின்ற மேலை நாடுகளில் அமைதி நிலவும் இந்திய நாட்டின் ஆன்மிக இயல்பைப் புகுத்துவது முடியாத அருஞ்செயலா?'' என்று ஒருவர் வினவினார்.

ஒளிவீசும் விவேகானந்தரின் கண்கள் சுடர்விட்டு மின்னின. அவர் முகத்தில் புன்முறுவல் பூத்தது. ''சிங்க ஏற்றின் சத்தியையும், ஆட்டுக்குட்டியின் அமைதியையும் ஒருங்கேற்றுக் காட்சியளிக்கும்படி செய்தால் நன்றாயிராதா?'' என்று அவர் கேட்டார். மீண்டும் தொடர்ந்து மொழியலானார்:

''வருங்காலத்தில் கீழ்த்திசையும் மேற்றிசையும் கூடிக் குலாவும். அந்தச் சேர்க்கையில் வியப்பைத் தரும் பெருவிளைவுகள் தோன்றும். மேலை நாட்டில் காணப்படுகிற ஒரு நிலை அவர்களுடைய உயர்ந்த பண்பாட்டை உணர்த்துகின்றது. அவர்கள் பெண்கள்பால்காட்டுகிறமரியாதை—அவர்களோடு மிக்கபரிவோடு நடந்துகொள்ளுகிற முறை—இவ்விரண்டும் போற்றுதற்குரியவை.''

இறக்குந்தறுவாயில் புத்தர்பிரான் பகர்ந்த அறிவுரையை இந்த அறிஞர் மீண்டும் இயம்புகின்றார்: ''உய்யும் வகையை நீங்களே தேடிக்கொள்ளுங்கள். நான் என்ன உதவியை உங்களுக்குப் புரியக்கூடும்? ஒருவரும் உங்களை உய்விக்க முடியாது. 'தன் கையே தனக்குதவி,' என்பதை மறந்துவிடாதீர்கள். பூசலிடுவது அழகன்று. சமரசமும் அன்புமே உங்கள் குறிக்கோளாக அமையட்டும்.''

கொள்கைகளுக்குள் இடையறாது குற்றங்காணும் தீச்செயலில் திளைக்கின்ற ஒருவனைப் பற்றிச் சமீபத்தில் சுவாமிஜி ஒரு கதை சொன்னார்; அது பின் வருவது:

''ஒரு தவளை ஒரு கிணற்றில் பல நாள் உறைந்து வந்தது. அங்கேயே பிறந்து அங்கேயே வளர்ந்தது எனினும், அது ஒரு சிறிய தவளையே. அது தன் கண்களை இழந்துவிட்டதா இல்லையா என்று கூறப் பரிணாமவாதிகள் அங்கில்லை. ஒவ்வொரு நாளும் அது நீரைச் சுத்தம் செய்தது. ஆங்குள்ள புழுக்களையும் விஷக் கிருமிகளையும் அது அகற்றிவிட்டது. நுண்ணுயிர் நூலோர்களுக் குங்கூட அதன் சுறுசுறுப்பும் ஆர்வமும் இல்லையென்று இயம்ப லாம். நாளடைவில் அது சற்றுக் கொழுத்து வழுவழுப்பாய் என் னைப் போலக் காட்சி அளித்தது. ஒரு நாள் கடலிலிருந்த ஒரு தவளை வந்து அந்தக் கிணற்றில் விழுந்துவிட்டது. 'நீ எங்கிருந்து வருகின்றாய்?' என்று கிணற்றுத் தவளை அதைப் பார்த்துக் கேட் டது. அது, 'நான் கடலிலிருந்து வருகின்றேன்,' என்றது. 'கடலா? அது இவ்வளவு பெரிதாயிருக்குமா?' என்று கூறிக் கொண்டே கிணற்றின் ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்திற்குத் தாவிற்று, கிணற்றுத் தவளை. 'நண்பா, பரந்த பெருங்கடலோடு நீ உன் சிறிய கிணற்றை எப்படி ஒப்பிட்டுப் பார்க்க முடியும்?' என்றது கடற்றவளை. 'உன்னுடைய கடல் இதைப் போல விரிந்து கிடக்குமா?' என்று மீண்டும் ஒரு முறை தாவிக் குதித்தது கிணற் றுத் தவளை. 'நான் உறையுங் கடலோடு நீ உன் கிணற்றை ஒப்பிட முயல்கின்றாயே! இஃதென்ன பேதமை!' என்றது கடல் மண்டூ கம். ''எனது கிணற்றைவிட வேறொன்று பெரிதாயிருக்க முடியாது! இந்தத் தவளை பொய் கூறுகின்றது. இதை அடித்துத் துரத்து,'' என்று அது மற்றொரு தவளைக்குக் கட்டளை இட்டது. எப்பொழு துமே உலகில் இத்தகைய சழக்குத்தான் காட்சியளிக்கிறது.

''நான் ஓர் இந்து. நான் ஒரு கிணற்றில் இருந்துகொண்டு இந்த வையக முழுவதும் இக்கிணறென்று கருதுகின்றேன். கிறித் தவன் தன் சமயமாம் கிணற்றில் இருந்துகொண்டு அதுதான் முழு உலகம் என்று நினைக்கிறான். முகமதியனும் அவன் மதமாம் கிணற்றில் உறைந்துகொண்டு அதுதான் விரிந்த பார் என்று மொழிகின்றான். அமெரிக்க நாடு இத்தகைய குறுகிய சமயச் சுவர்களைத் தகர்த்து எறிகின்ற முயற்சியில் ஈடுபடத் தொடங்கி யிருக்கிறது. அதற்கென் மனமார்ந்த வந்தனம் உரித்தாகுக! இந்த நன்முயற்சி உருவாக ஆண்டவன் அருள்புரிவானாக!''

(4)

நெறி பிறழ்ந்த மங்கையர்

['டெட்ராய்ட்டு டிரிபியூன்,' 17—3—1894.]

"இப்புவியில் மிக மிகப் பண்டைய தொழில் பரத்தையர் தொழிலாகும். இந்தத் தொழிலை நடத்தி வருங் கூட்டத்தைச் சார்ந்தவள் 'லால்யன்' என்ற விலைமகள். 'லிவித்து' என்பவள் இவளுக்குக் கொள்ளுப்பாட்டியாவாள். இந்நிகழ்ச்சிகள் யாவும் 'ஏவாள்' (Eve) என்பவள் உலகத்தில் உதயமாவதற்கு முன்பு தோன்றியவை என்பதை எவரும் உணர்வர். மேலை நாட்டினர் இந்தத் தொழிலைப் பற்றிக் கொடுமையாய் நிந்தித்துப் பேசுவர்; இதைப்பற்றி நீண்ட சொற்பொழிவுகளை எழுதிப் படிப்பர்; இளைஞரிடையே இவற்றைப் பரப்புவர். இளைஞர்கள் தங்கள் தூய ஒழுக்க நெறியிலிருந்து வழுவா வண்ணம் இப்படிச் செய்தனர் போலும்! கீழ்த் திசையில் இந்தத் தொழில் தாயிலிருந்து மகளுக்குப் பரம்பரையாக வருகின்ற காரணத்தால், இதைப்பற்றி எழுதுவாருமில்லை; இதைப் பொருட்படுத்துவாருமில்லை.''

(ருடியார்டு கிப்ளிங்)

மேலே குறிப்பிடப்பட்ட வரிகளை முன்னுரையாகக் கொண்ட இக்கதை இந்தியாவில் எழுதப்பட்டது. இவை யாவும் ருடியார்டு கிப்ளிங்கினுல் உரைக்கப்பட்டவை. இந்தியாவைப் பற்றி நாங்கள் தீர்மானமாகக் கற்றுக்கொண்டவை இவற்றிலிருந்தே என்றியம்பலாம். எங்கள் குடியானவர்களுக்குப் போட்டியாகத் தானியங்களை அவர்கள் விளைக்கின்ருர்கள். நாள் முழுவதும் தொழில் செய்தாலும், அவர்களுக்குக் கிடைப்பது இரண்டு சதவீதமேயாகும். மிகப்புனிதமாகக் கருதப்படும் கங்கையில் தம் குழந்தைகளைத் தாய்மார் எறிந்து விடுகின்றனர். இது போன்ற விஷயங்களை நாங்கள் நன்கு அறிந்தோமில்லை.

தாய்மார் முதலைகளுக்குத் தம் குழந்தைகளை இரையாக்குகின்றனர் என்று கட்டுக்கதையை விவேகானந்தர் இங்கு வந்தது முதற்கொண்டு தகர்த்துக்கொண்டே வந்தார். ருடியார்டு கிப்ளிங்யைப்பற்றித் தாம் இந்தியாவில் இருக்கிற வரையில் இவர் கேள்விப்பட்டதே இல்லையாம். அவரைப் பற்றித் தெரிந்துகொண்டது மேலை நாட்டின் எல்லையில் அடி வைத்த பிறகேயாம்.

''இன்பத்தையும் படிப்பினையையும் நல்கக் கூடிய இக்கதையோ, இத்தொழிலை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டது என்பது உண்மையே. ஆனுல், இதைப் பற்றிப் பேசுவது எங்கள் நாட்டுப் பண்பாட்டிற்குத் தக்கதன்று.

''இந்திய நாட்டில் இத்தகைய பொருள்களைத் துருவி ஆராய்

கிற வழக்கமில்லை. திருவிழந்த அந்தப் பாக்கியமில்லாப் பெண்டிர்களைப் பற்றி ஒருவரும் பேசவும் மாட்டார். நெறியிலிருந்து தவறிவிட்டாள் என்று ஒரு பெண் கண்டு பிடிக்கப்பட்டாளாயின், அவள் புறக்கணிக்கப்பட்டுச் சாதியிலிருந்து துரத்தப்படுவாள். பிறகு அவளோடு கலந்து ஒருவரும் உரையாடவும் மாட்டார். அவள் புகுந்த வீட்டிலுள்ள விரிப்புகளை மாசறக் கழுவுவார்கள்; அவள் மூச்சுப் படிந்த சுவர்களும் வெள்ளையடிக்கப்படும். அவளோடு எத்தகைய தொடர்பும் நேரிடா வண்ணம் விழித்திருப்பார்கள். இந்து சமுதாயத்தில் நெறி பிறழ்ந்த பெண்களில்லை. இந்த நாட்டைப்போல அங்கில்லை. உங்கள் சமுதாயத்தில் நெறி தப்பிய பெண்டிர், கற்பு நெறியில் ஊன்றிய நங்கைமாரோடு சேர்ந்து உறைகின்றனர். அமெரிக்க நாட்டில் எவர் நல்லவர், எவர் கெட்டவர் என்று சொல்லுவதற்கியலாது. இந்தியாவில் ஒரு பெண் கற்பு நெறியிலிருந்து சற்று நழுவினாலும், அவளும், அவள் பிள்ளைகளும், பெண்களும் எல்லோராலும் சாதியைவிட்டு அடித்துத் துரத்தப்படுவார்கள். இது மிகவும் பயங்கரமான நிலைதான் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்; ஆனால், இதனால் சமுதாயம் மாசற்றதாய்த் திகழ்கின்றது.''

''இனி, ஆடவர்களைப் பற்றிச் சற்றுக் கூற வேண்டும். இதே நியதிதான் அவர்களுக்கும் உரியதா? நெறி தப்பிய அவர்களைச் சமுதாயம் விலக்கிவிடுமா?'' என்ற வினா எழுந்தது.

''ஆடவர்கள் சம்பந்தப்பட்ட வரையில் வேறுவிதமாய்த்தான் இருக்கிறது. ஆனால், அவருடைய தீச்செயல் வெளிப்படுமாயின், நெறி பிறழ்ந்த மாதர்களுக்கு நேரிடும் கடுந்தண்டனை அவர்களுக்கும் அளிக்கப்படும். ஆடவர் எங்கும் திரிகின்றனர்; ஊரூராய்ச் சுற்றுகின்றனர். அவர்கள் புரிகின்ற குற்றத்தை எளிதில் கண்டுபிடிக்க முடியாது. மாதர்களோ, வீட்டில் அடைபட்டுக் கிடக்கின்றார்கள். சற்றுப் பிறழ்ந்தாலும், அவர்களுடைய குற்றம் வெளிப்பட்டுவிடும். அவர்களுக்கு யாதோர் உதவியும் நல்கப்படமாட்டாது. ஒரு சமயத்தில் தகப்பன் தன் பெண்ணைத் துறக்க நேரிடும்; மற்றொரு சமயத்தில் கணவன் மனைவியை அகற்றும்படியான நிலை வந்துவிடும். அவர்கள் இப்படிச் செய்யத் தவறினால், சமுதாயம் அவர்களையே புறக்கணித்து நாட்டைவிட்டு அப்புறப்படுத்திவிடும். இந்நாட்டின் நிலை வேறு. இந்நாட்டில் நடக்கிறது போல அங்கே அவர்களே வெளியே சென்று வேறு மக்களோடு உறவாட முடியாது. இந்நிலை மிகக் கோரமான நிலைதான். ஆனால், இந்த நிலையில் சமுதாயத்தின் புனிதத் தன்மையின்மீது மாசு படராதன்றோ?

''உங்கள் நாடு புரியும் மிகப் பெரிய பாவம் கற்பைச் சிதைப்பதே என்று நான் கருதுகின்றேன். அத்தகைய இன்ப நுகர்ச்சியில்

உங்கள் நாடு திளைக்கின்றது ஒருதலை. ஆடையின்பொருட்டுத் தம் கற்பையும் வாணிபஞ் செய்துவிடுவர் உங்கள் நாட்டு வனிதையர்.''

லாலனைப்பற்றி ருடியார்டு கிப்ளிங் பேசுகிறார்; அவள் நடத்தும் பரத்தைத் தொழிலைப் பற்றிக் குறிக்கின்றார்:

''கீழ்த் திசையில் லாலன் தொழிலைச் சார்ந்தவர்களுக்குக் கணவன்மார்கள் உண்டு. லாலன் தாலி கட்டினது ஓர் இலந்தை மரத்திற்குத்தான். அவள் தாய் தாலி கட்டினது ஓர் அத்திமரமாகும். அத்தாய் தன் பெண் தாலி கட்டும் மணத்திற்குப் பதினாயிரம் ரூபாய் செலவு செய்தாள். அவள் கோயிலைச் சார்ந்த நாற்பது புரோகிதர்கள் அந்த மணத்திற்கு வாழ்த்துக் கூறினார்கள். ஏழை மக்களின்பொருட்டு ஐயாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. அதுதான் அந்நாட்டின் மரபாகும்.''

''இந்திய நாட்டில் கற்பு நெறியிலிருந்து தவறித் தன் கணவனுக்கு மாறாக ஒரு பெண் நடந்தால், அவள் தன்னுடைய சாதியை இழக்க நேரிடும். ஆனால், மக்கள் சமூகத்திற்குரிய உரிமைகளையும் சமயத்திற்குரிய உரிமைகளையும் அவள் இழப்பதில்லை. அவளுக்குச் சொத்துரிமை உண்டு. கோயில் குளங்களுக்குப் போகும் உரிமையும் உண்டு. தன்னைப் போலச் சாதியை விட்டுத் தள்ளப்படுபவர்களைத் தான் மணம் புரிந்துகொள்ளலாம். ஆதலால், பொதுவாக அவர்கள் ஒரு மரத்திற்கோ, அல்லது ஒரு வாளுக்கோ 'தாலி' கட்டுவது வழக்கம். இத்தகைய மாதர்கள் பெருஞ்செல்வம் படைத்தவர்களாயிருக்கலாம்; தான தர்மங்களும் புரிவார்கள்; ஆனால், இழந்த சாதி உரிமைகளைப் பெற இயலாது. உள் நாட்டு நகரங்களில் பழைய வழக்கங்கள் இன்னும் மாறவில்லை. விலை மாதர் எவ்வளவு செல்வமுடையவரேனும், குதிரை வண்டியில் போக முடியாது; எருது பூட்டிய வண்டிகளில் செல்லலாம். விலைமகள், தனிப்பட்ட உடைகளையே அணிய வேண்டும். பார்த்தவுடன் 'விலை மகள்' என்று சொல்லக்கூடிய அடையாளம் அவளிடத்திலிருக்க வேண்டுமன்றோ? இத்தகைய பரத்தையர் எங்கும் கூட்டம் கூட்டமாய்ப் போய்க்கொண்டே தானிருப்பார்கள். ஆனால், அவர்களோடு ஒருவரும் உரையாட மாட்டார். அவர்கள் நகரங்களில் உறைகின்றார்கள். அவர்களில் பெரும்பாலோர் யூதர் வகுப்பினராவர். நகரங்களில் அவர்களுக்கென்று அமைக்கப்பட்ட விலைமகள் விடுதிகளுண்டு. இவ்விஷயத்தை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் தனித்து வாழ்கின்றார்கள். எவ்வளவு இன்னல் மலிந்த வாழ்வை அவர்கள் நடத்தின போதிலும், அவர்கள் கிறித்தவக் காமுகர்களை ஏற்கமாட்டார்கள். இது, தனிச் சிறப்பு வாய்ந்த விஷயமே. அவர்களோடு சேர்ந்து உண்டியும் அருந்தார்கள்; அவர்களை நெருங்கித் தொடவும் மாட்டார்கள். 'எல்லாவற்றையும் வாரி விழுங்கும் அநாகரிகக் கபந்தர்கள்,' என்றே கிறித்தவர்களை அவர்கள் வழங்கு

கின்றுர்கள். எவையும் அருந்துகின்ற காரணத்தால் இவர்கட்கு இந்தப் பெயர் வந்தது போலும்! இந்தியாவில் நாங்கள் சொல்லத் தகாத ஒரு நோயைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? அதுதான் 'பரங்கிப்புண்' ஆகும். இந்த வியாதியாகிய சரக்கை இந்திய நாட்டிற்கு ஏற்றுமதி செய்தவர்கள் கிறித்தவர்களே.''

''அமெரிக்க நாட்டில் நெறி பிறழ்ந்த மாதர்களைப் பற்றிய பிரச்சினை எழுந்திருக்கிறது. அதைப்போல இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவில் ஏதேனும் ஒரு முயற்சி உண்டா?'' என்று ஒருவர் வினவினுர்.

''இந்தியாவில் இது குறித்து எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. நெறிபிறழ்ந்த பெண்களை உய்யும் வண்ணம் செய்வதற்கேற்ற பெருந்துறை, சமூகப்பெண் தொண்டர்களுக்கு முன் பரந்து நிற்கின்றது. ஆனுல், அவர்கள் ஒன்றும் புரியவில்லை. ஓர் இனத்தார் மட்டும் இந்தத் துறையில் இறங்கியிருக்கின்றனர். பெரும்பாலார், கற்பிழந்த மாதர்களை உயர்நிலைக்குக் கொணர முயல்கின்றனர். இது சமயநெறியைப் பற்றிய கூட்டமாகும். இதைச் சார்ந்தவர் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் நெறி தவறினவர்களே! இந்தக் கூட்டம், சாதியில் நம்பிக்கை வைக்கிறதில்லை. சாதியைப் பற்றிக் கவனியாது, எங்கும் இக்கூட்டம் திரிகின்றது. சில கோயில்களில் சாதித் தளையும் வரம்பும் இல்லை! உதாரணமாக, பூரி ஜகந்நாதத்தில் தீண்டாமை இல்லை. அவ்வூரில் நுழைகின்ற எவனும் சாதி உரிமையைப் பாராட்டுகிறதில்லை. அங்கேயிருக்கிற பொழுது அவன் சாதியை மறக்கின்றுன்; அது ஒரு 'புனித பூமி' யாதலால், அங்குள்ள ஒவ்வொரு பொருளும் தூய்மையுடையதே. ஒருவன் அந்த ஊரை விட்டு வெளியேறினதும், தன் சாதிக்குரிய சின்னங்களை மேற்கொள்ளுகிறுன். சம்பிரதாயங்கள் யாவும் உலகியலைப் பற்றியவைகளே.

''சில சாதிகளில் தோன்றியவர்களின் நடத்தை விசித்திரமாகக் காட்சி அளிக்கும். அவர்கள் பிறர் சமைத்த உணவுகளையும் அருந்தார்கள்; தாங்களே சமைத்து உண்பார்கள். தங்கள் சாதிக்குப் புறம்பாயுள்ளவர்களைத் தொடவும் மாட்டார்கள். ஆனுல், நகரத்தில் எல்லோரும் சேர்ந்து உறைகின்றனர். இந்த வைணவக் கூட்டம் தன்னுடைய கூட்டத்தை ஒவ்வொருவரும் சேரும்படி செய்ய முயல்கின்றது; இமயமலைக்குச் சென்று அங்குள்ள நாகரிகமற்ற மனிதர்களைத் திருத்த அரும்பாடு படுகின்றது. இந்தியாவில் காட்டாட்கள் இருப்பதை நீங்கள் அறிந்திருக்கமாட்டீர்கள். அவர்கள் உறைவிடம் இமயமலையின் அடிவாரமே.''

''ஒருத்தி கற்பிழந்தவள் என்பதை விளம்பரஞ் செய்ய ஏதாவது ஒரு சடங்குண்டா? அல்லது சமுதாயம் ஒரு சட்டம் வகுத்திருக்கிறதா?'' என்ற கேள்வியை ஒருவர் எழுப்பினுர்.

''அப்படி ஒன்றும் சட்டதிட்டமில்லை. வழக்கத்தை ஒட்டித் தான் எல்லாம் நடக்கின்றன. சில சமயங்களில் ஏதோ ஒரு சடங் கிருக்கும்; மற்றும் சில சமயங்களில் அந்தச் சடங்கும் இருக்கிற தில்லை. அவர்களைப் புலையர்களாகச் செய்துவிடுகின்றனர். ஒருத்திமீது சந்தேகம் எழுமாயின், எல்லோரும் சேர்ந்து விசாரணை நடத்துவார்கள். அவள் நெறி பிறழ்ந்துவிட்டாள் என்று தீர் மானிக்கப்படுமாயின், அவளுடைய இனத்தாருக்குச் செய்தி அனுப் பப்படும். அவளும் சாதியை விட்டு அகற்றப்படுவாள். ஆனல், இதை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: இந்தப் பிரச் சினைக்கு இது மருந்தாகாது. இப்படித் தீர்ப்பளிக்கும் பழக்கம் ஒரு கோரமான பழக்கந்தான். இஃது எதற்கும் இணங்காத பழக்கமே! இந்தப் பிரச்சினையை நீங்கள்தான் எப்படித் தீர்க்கப்போகின்றீர் கள்? இது, பயங்கரமான விஷயந்தான். மேலை நாட்டில் தோன்றக் கூடிய பெருங்குற்றம், நெறி பிறழ்தலே.''

முற்றும்

நிருபரொடு பேசியவை

(INTERVIEWS)

---

(1)

அற்புதங்கள்

[இது, 1894-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 15-ஆம் தேதியன்று 'மெம்பிஸ் கம்மர்ஷியல்' என்னும் பத்திரிகையில் வெளி வந்தது.]

"அமெரிக்க நாட்டைக் குறித்து உங்கள் மனத்திற் பதிந்த எண்ணங்கள் யாவை?'' என்று இப்பத்திரிகை நிருபர் சுவாமிஜியை உசாவ, அவர் அருள்கின்றார்:

''அந்நாட்டைப் பற்றி நான் நல்ல எண்ணங்கள் கொண்டிருக்கிறேன். குறிப்பிட்டுக் கூறுமிடத்து, அந்நாட்டுப் பெண்டிர் சிறந்தவரென எனக்குப் புலப்பட்டனர். அந்நாட்டின் வறுமையின்மையே முக்கியமாக என் உள்ளத்தைக் கவர்ந்தது.''

பிறகு, பேச்சு சமய ஆராய்ச்சியில் திரும்பிற்று. ''பல் சமயப் பெருமன்றத்தால், உலகத்திற்குப் பெருநன்மை விளைந்திருக்கிறது; அது மக்களின் எண்ணங்களை விரிவுறச் செய்திருக்கிறது,'' என்று சுவாமிஜி தம் கருத்தை வெளியிட்டார்.

''உங்கள் மதத்தினர் பொதுவாகக் கொண்ட கருத்துப்படி கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவருக்கு அவர் இறந்த பின் எத்தகைய கதி காத்திருக்கும்?'' என்று நிருபர் வினவினார்.

''நல்ல ஒழுக்கமுள்ளவர்களாயின், அவர்களுக்கு நற்கதியுண்டு என்று நாங்கள் நம்புகின்றோம். கடவுள் இல்லை என்று வாதித்தாலும், ஒருவன் நன்னெறியைப் பின்பற்றி நிற்பானாயின், அவன் உய்யத்தான் வேண்டும். இதுதான் எங்கள் சமயமாகும். எல்லாச் சமயங்களும் நற்பாதைகளே; ஆனால், சமயிகள் தங்களிடையே பிணக்குகளை எழுப்பாமலிருத்தல் வேண்டும்,'' என்று சுவாமிஜி திருவாய் மலர்ந்தருளினார்.

''கண்கட்டு வித்தை, வாயுத்தம்பம், கும்பகம் இவை போன்ற செயல்களைச் சுற்றி இந்தியாவில் எழுந்த விசித்திரமான கதைகளில் ஏதாவது உண்மை உண்டா?'' என்று சுவாமிஜியைக் கேட்ட பொழுது அவர் அதற்குப் பின் வருமாறு பதிலளித்தார்:

''அற்புதங்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை; ஆனால், வியப்பைத் தரக்கூடியவற்றை இயற்கையின் சட்டதிட்டங்கள்

இயங்குவதற்கேற்ப ஒருவன் புரிதல் கூடும். இப்பொருள்கள் சம்பந்தமான விரிவான பல நூல்கள் இந்திய நாட்டில் இருக்கின்றன. மக்கள் அவற்றைத் துருவி ஆராய்ந்திருக்கின்றார்கள்.

''வருங்காலமுணர்தல், பிறர் எண்ணங்களை அறிதல் இவற்றை மிக நயம்பட ஹடயோகிகள் பயின்றிருக்கின்றார்கள். வாயுத்தம்பத்தைப்பற்றி உங்களுக்கு ஒன்று சொல்ல விழைகின்றேன்: பூமியின் ஈர்ப்புச் சத்தியை மீறி மனவலியால் விண்ணில் எழுந்த ஒருவனையும் நான் கண்டதில்லை. ஆனால், பலர் இத்துறையில் முயலுவதை நான் அறிவேன். சிலர் இப்பொருள் சம்பந்தமான நூல்களைப் பயின்று பயின்று, இச்செயலை நிறைவேற்றுவதில் பல ஆண்டுகளைக் கழித்திருக்கின்றனர். சிலர் இத்தகைய முயற்சிகளில் ஊன் வாட உழைத்துத் துரும்பாய்ப் போயிருக்கின்றனர் என்பதும் உண்மையே. வயிற்றிலே விரலை வைத்தால் அது முதுகெலும்பையும் தொடும்படி அவர்கள் அவ்வளவு மெலிந்து போயிருக்கின்றார்கள்.

''சில ஹடயோகிகள் நீண்ட காலம் உயிர் வாழ்கின்றார்கள்.''

பிறகு கும்பகத்தைப் பற்றிய பேச்சில் இறங்கினார்கள். கம்மர்ஷியல் பத்திரிகை நிருபருக்கு இந்து சந்நியாசியார் கூறியது இங்கு நோக்குதற்குரியது:

ஒரு குகைக்குள் ஒரு மனிதன் புகுந்தான். கள்ளக் கதவு கொண்டு அவனை உள்ளே அடைத்துவிட்டனர். அவன் உணவின்றிப் பல ஆண்டுகள் உயிரோடு இருந்தான். அத்தகைய மனிதனைப் தாம் பார்த்திருப்பதாக அவர் மொழிந்தார். இப்படி உறுதியாகச் சாற்றக் கேட்ட மக்களிடையே இதைப் பற்றித் தீவிரமாய் ஆராய வேண்டுமென்ற பரபரப்பு எழுந்தது. இந்த நிகழ்ச்சியின் உண்மையைப் பற்றித் தமக்குச் சிறிதும் ஐயம் இல்லை என்று விவேகானந்தர் மொழிந்தார்.

கும்பகத்தில் உயிரின் வளர்ச்சி சில காலம் தடைப்படுவதைத் தவிரப் பிறிதில்லை. ஒரு மனிதன் புதைக்கப்பட்டான். அவன் கல்லறை மீதும் பயிர் பச்சைகள் தோன்றிவிட்டன. பல நாட்களுக்குப் பிறகு, கல்லறையைப் பிரித்துப் பார்க்கையில் அவன் உயிரோடிருந்தான். இத்தகைய சம்பவம் இந்தியாவில் நடந்தது. இது முற்றிலும் உண்மையில் வேரூன்றியதே. மாரி காலத்தில் மூச்சொடுக்கி உறங்கும் விலங்குகளிலிருந்து கும்பக முறையை இவர்கள் கற்றிருக்கக் கூடும் என்று தாம் கருதுவதாகச் சுவாமிஜி மொழிந்தார்.

விசும்பில் கயிற்றை எறிந்து அது வாயிலாக மேலெழும்பிக் கண்ணுக்குத் தெரியாமல் சேணில் மறைகின்ற அற்புதச் செயலைப் புரியக்கூடும் என்று ஆசிரியர் சிலர் வாதிக்கின்றனர். அத்தகைய செயலைத் தாம் பார்த்ததில்லை என்று சுவாமிஜி இயம்பினர்.

நிருபர், சுவாமிஜியைக் கண்டு பேசிக்கொண்டிருக்கும் பொழுது, 'சுவாமிஜி இம்மாதிரியான விசித்திரச் செயல்களைப் புரியக்கூடுமா ? அவர் உயிரோடு புதைக்கப்பட்டிருக்கிறாரா ? சந்நியாச ஆச்சிரமத்தில் சேர்வதற்கு இது ஓர் அமிசமாகுமா ?' எனறெல்லாம் யாரோ ஒருவர் சொன்னதாக ஒரு பெண்மணி அவரை உசாவினாள்.

இக்கேள்விகளுக்கு 'இல்லை' என்ற பதிலேதான் சுவாமிஜியிடமிருந்து எழுந்தது.

''இந்த அற்புதச் செயல்களுக்கும் சமய நெறிக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது ? இவை மனிதனைத் தூய்மைப்படுத்துமா ? கிறித்தவர்களின் வேத புத்தகமான பைபிளில் குறிக்கப்பட்ட சாத்தான் மிகுந்த வலிமையுள்ளவன்தான்; ஆனால், அவன் ஆண்டவனிடமிருந்து முற்றிலும் வேறுபடுகின்றான். ஆண்டவனிடத்தில் திகழும் தூய ஒளி அவனிடத்தில் இல்லை,'' என்றார் சுவாமிஜி.

ஹடயோகத்தைப் பற்றிக் கூறும்பொழுது இயேசுநாதரின் வாழ்க்கைச் சம்பவம் ஒன்று மட்டும் தமக்கு நினைவுக்கு வருகிறதென்றார். ''சிஷ்யர்களுக்கு ஹடயோகிகள் தீட்சை கொடுக்கும்பொழுது நாற்பது நாட்களுக்குத் தனித்து அவர்கள் வாழவேண்டுமென்று உபதேசம் செய்தார்கள். இது தற்செயலாய் நிகழ்ந்த ஓர் இசைவாயிருக்கலாம்.''

(2)

இலண்டன் மாநகரில் ஓர் இந்து யோகியார்

['வெஸ்ட்மின்ஸ்டர் கெஜட்டு,' 23-10-1895]

''அண்மையில் பல ஆண்டுகளாக இந்திய நாட்டு வேதாந்தத் தத்துவம் பலர் உள்ளங்களைக் கவரத் தொடங்கிவிட்டது. அதன் ஆழ்ந்த கவர்ச்சியை நாம் மறக்க முடியாது. ஆனால், இது வரையில் அதற்கு விளக்கங் கூறியவர்கள் மேற்றிசைப் பண்பாட்டிலும், கருத்திலும், பயிற்சியிலும் தாலாட்டப்பட்டவர்கள் ஆவார்கள். அக்காரணத்தால் அதன் ஆழ்ந்த மர்மங்களை உள்ளவாறு அறிவதற்கு இயலாமற் போயிற்று. அதனைச் சிறிதளவு அறிந்தவரும் ஒரு சிலரேயாவர். மொழி நூலாராய்ச்சியாளர்களுடைய நலனைக் கருதிச் செய்யப்பட்ட சுவையற்ற—கடினமான—மொழிபெயர்ப்புகளிலிருந்து கீழ்த்திசை மரபில் ஊறியவர்களுக்கு, நன்கு புலனாகின்ற அந்த வாலறிவைப் பெற எங்களுக்குத் தைரியமுமில்லை, நேர்முகமாக ஊடுருவிச் செல்லும் நுண்ணிய அறிவுமில்லை.

''ஆனால், ஆர்வமும், துருவி அறியும் அவாவும் உந்த மேற்றிசை நாட்டுக்கு மிகவும் புதியவரான ஒருவரை—வேதாந்தத்திற்கு விளக்கம் கூறும் ஒருவரை—கண்டு பேச நான் விரைந்தேன். இவர்தாம் விவேகானந்தர் என்னும் யோகியார். இவர், துறவிகளாலும் யோகிகளாலும் பல நூற்றுண்டுகளாக 'ஒரான்' வழியாக அளிக்கப்பட்ட தத்துவத்தை மேலே நாட்டிற்குத் தைரியமாக எடுத்துரைக்க வந்திருக்கிறுர். இவர் இந்நோக்கத்துடன் பிரின்ஸெஸ் ஹாலில் (Princes' Hall) நேற்றிரவு ஒரு சொற்பொழிவு ஆற்றினர்,'' என்று ஒரு நிருபர் வரைகின்றுர்.

விவேகானந்தர் உள்ளத்தைக் கவரக் கூடிய தோற்றப் பொலிவு வாய்ந்தவர்; அன்பும் அமைதியும் ததும்பும் அவயவங்களை உடையவர். அவர் தலையில் திகழும் கறுப்புத் தலைப்பாகை, பாதிரிகளணியும் தொப்பியை நினைவூட்டும்.

''உங்களுக்கு அளிக்கப்பட்ட பெயர் ஏதாவது பொருள் பற்றி வந்ததா ?'' என்று அவரை நான் உசாவினேன். சுவாமிஜி கூற லாற்றுர்:

''என்னைச் 'சுவாமி விவேகானந்தா' என்று வழங்குவார்கள். முதற்சொல் ஒரு சந்நியாசியைச் சித்தரிக்கும். உலகத்தைத் துறந்தவனே சந்நியாசியாவன். மற்றொரு சொல்லோ, என்பட்டப் பெயரைக் குறிக்கும். நான் துறவியான பொழுது நான் ஏற்ற பட்டம் இதுவே. துறவிகள் இத்தகைய பட்டங்களைச் சூட்டிக்கொள்வார்கள். 'பகுத்தறிவில் பிறக்கின்ற ஆனந்தம்' என்பதுதான் இச்சொற்றொடருக்குப் பொருளாகும்.''

''சாதாரணமாய் அமைகின்ற இவ்வுலகியலைத் துறக்க உங்களை எது தூண்டிற்று ?'' என்று நான் வினவினேன்.

''என்னுடைய குழவிப்பருவத்திலிருந்தே எனக்குச் சமயத்திலும் வேதாந்தத்திலும் ஆழ்ந்த பற்றுண்டு. மனிதன் விரைந்து நாடக்கூடிய ஒரு பெரிய இலட்சியம் துறவுதான் என்று எங்கள் நூல்கள் முழங்குகின்றன. என்னுடைய சிறந்த குருநாதரான இராமகிருஷ்ண பரமஹம்ஸரை நான் சந்தித்ததே என்னுடைய இறுதித் தீர்மானமாகிய தெய்வச் சுடரொளியைத் தூண்டிவிட்டது. அவர் வகுத்து நடந்த பாதையில் நானும் செல்ல முனைந்தேன். அவரிடத்திலேதான் என்னுடைய உயரிய இலட்சியம் உருவாகக் கண்டேன்.''

''நீங்கள் பரப்ப வந்த சமயத்தை அவர் நிறுவினுரா ?''

''அப்படி ஒன்றும் அவர் செய்யவில்லை. பிடிவாதமான மூடக் கொள்கைகளாம் வேலிகளையும், மதப்பிளவுகளாம் சுவர்களையும் இடித்துத் தள்ளவே தம் வாழ்நாள் முழுவதையும் அவர் கழித்தார். அவர் ஒரு மதத்தையும் நிறுவவில்லை; அதற்கு மாறுகவே நடந்து கொண்டார். கருத்தின் முழுச் சுதந்தரத்தைத் தாபிக்கவே அவர் முயன்றுர். அவர் ஒரு தலைசிறந்த யோகியார் ஆவர்.''

''நீங்கள் இந்த நாட்டு ஏதாவதொரு ஸ்தாபனத்தையோ சமயக் கிளையையோ சார்ந்தவர்களா? பிரம்ம ஞான சபையையோ அல்லது கிறித்தவ விஞ்ஞானியர் கூட்டத்தையோ நீங்கள் பின் பற்றுகின்றீர்களா?'' என்று நான் கேட்டேன்.

''நான் ஒன்றையுஞ் சார்ந்தவனல்லன்,'' என்று அழுத்தம் திருத்தமான குரலில் சுவாமிஜி பதிலளித்தார்.

குழந்தையின் முகம் மலர்வதுபோல அவர் வதனமும் அலர்ந்தது. கள்ளங் கபடமற்ற உண்மை ஒளியில் தோய்ந்த முகமாய் அது காட்சியளித்தது.

''எங்கள் முன்னோர்களுடைய நூல்களுக்கு நான் காணும் விளக்கமே நான் கூறும் அறிவுரையாகும். நான் காணும் விளக்கங்கூட என் குருநாதர் இவற்றிற்குத் தந்த ஞானதீபந்தான். நான் சொல்லுவதே தெய்வக் கட்டளையென நான் உரிமை பாராட்டவில்லை. செறிந்த அறிவுக்கு என் அறிவுரை ஓர் உணவாக்கப் படுமாயின், அறிவு மிக்க சான்றோர்களால் இது ஏற்கப்படுமாயின், அதுவே நான் அடையும் பரிசாகும்.

''பத்தி யோகத்தையோ, ஞானயோகத்தையோ அல்லது கருமயோகத்தையோதான் எல்லாச் சமயங்களும் போதிப்பதற்குப் பொருளாக அமைத்துக்கொண்டிருக்கின்றன. அருவ வேதாந்தத் தத்துவ சாத்திரம் எல்லா முறைகளையும் தழுவி நிற்கின்றது. இதைத்தான் நான் கற்பிக்கின்றேன். அவரவர் தத்தம் அறிவுக்கேற்றவாறு இதை உருவாக்கிக்கொள்ளலாம். அவரவர் அனுபவங்களுக்கேற்றவாறு அவரவர் நடந்துகொள்ளட்டும். நூல்களைப்பற்றி நான் குறிப்பிடும்பொழுது அந்நூல்கள் நீங்கள் பெறக்கூடியவையே என்று கருதுங்கள். அவற்றை ஒவ்வொருவரும் தனித்தே படித்துக்கொள்ளலாம்.

''கரந்து நின்று புலனுக்குத் தோன்றுகின்ற கருவிகள் மூலம் பேசுகின்ற தெய்வங்களின் அதிகாரத்தைப் பெற்றவன் நானல்லன். மறைந்து நிற்கின்ற புத்தகங்களிலிருந்தோ, கையெழுத்துப் பிரதிகளிலிருந்தோ நான் என் படிப்பைப் பெற்றேன் என்ற உரிமையையும் நான் பாராட்டவில்லை.

''நான் மர்மங்களை வெளியிடுவதைக் கூறிக்கொள்ளும் இரகசிய ஸ்தாபனங்களின் தத்துவத்தை விளக்கஞ் செய்கிறவனுமல்லேன். நான் இத்தகைய குழுக்களிலிருந்து நன்மை பிறவாது என்ற உண்மையில் நம்பிக்கையுள்ளவன். உண்மை நிலைத்து நிற்க வேறு சார்பு வேண்டுவதில்லை. அதற்கு உதவியாய்த் திகழ்வது அதுவேயாகும். அது பகல் வெளிச்சத்திலும் தன்னொளிகொண்டு அஞ்சாமற் காட்சி அளிக்கும்,'' என்றார் சுவாமிஜி.

''சுவாமிஜி, ஆனால் நீங்கள் ஒரு நிலையத்தையும் நிறுவப் போகிறதில்லையா?'' என்று நான் குறிப்பாகக் கேட்டேன்.

''இல்லே; நானென்றும் நிறுவப்போகிறதில்லே. எல்லோருக்கும் பொதுவாய் ஒவ்வோர் உள்ளத்திலும் கரந்து நிற்கின்ற அந்தப் பரம்பொருளான ஆன்மாவைப் பற்றித்தான் எடுத்துரைக்கப் போகின்றேன்.

''அந்தப் பரமான்மாவை அறிந்து அந்தப் பேரொளியில் நிற்கின்ற சிலர் இந்நாளிலேயே இந்தப் பிரபஞ்சத்தை முற்றிலும் மாற்றக்கூடும். இப்படித்தான் முன்னுளிலும் ஒரு சான்ருேர் புரிந்திருக்கிருர்,'' என்ருர் சுவாமிஜி.

''சுவாமிஜி என்னும் பெயர் கீழைநாட்டைச் சுட்டுகின்றதே! இந்தியாவிலிருந்து இப்பொழுதுதான் நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்களா?'' என்று நான் வினவினேன்.

''இல்லே. 1893-ஆம் ஆண்டு சிக்காகோவில் கூட்டப்பட்ட பல் சமயப் பெருமன்றத்திற்கு இந்து தேசத்தின் சார்பில் நான் போயிருந்தேன். அது முதற்கொண்டு அமெரிக்க நாட்டில் சொற்பொழிவுகள் ஆற்றிக்கொண்டே நான் திரிந்தேன். என்னுடைய சொற்பொழிவுகளைக் கேட்க வந்த அமெரிக்க நாட்டு மக்கள், அவற்றில் மிகவும் ஆர்வம் காட்டினுர்கள்; அவற்றை அன்போடு பாராட்டும் நண்பர்களாயும் திகழ்ந்தார்கள். என்னுடைய உபதேசம் அங்கே வேரூன்றிய காரணத்தால், நான் மீண்டும் விரைவில் அங்கே போகத்தான் வேண்டும்,'' என்ருர் சுவாமிஜி.

''சுவாமிஜி, மேலே நாட்டுச் சமயங்களைப்பற்றி நீங்கள் கொண்ட கருத்து யாதோ?'' என்றேன் நான்.

''இந்த வையகத்தில் எழக்கூடிய எந்தச் சமயத்திற்கும் ஆதாரமாயிருக்கக்கூடிய ஒரு தத்துவத்தைத்தான் நான் விளக்கப் போகின்றேன். எல்லாவற்றையும் அன்போடு ஆதரிப்பதுதான் என் நோக்கமாகும். என்னுடைய உபதேசம் ஒன்றிற்கும் பகையுமன்று, முரண்பாடுடையதுமன்று. தனித்த மனிதன்பால் நான் என் கவனத்தைச் செலுத்துகிறேன். அவனை நான் ஆற்றலுள்ளவனுகச் செய்யப்போகிறேன். அவன் தெய்வத்தன்மை வாய்ந்தவன் என்பதை அவனுக்கு உணர்த்துவேன். தங்களுக்கு உள்ளேயுள்ள தெய்வ நிலேயை உணரும்படி மனிதர்களைக் கூவி அழைக்கப் போகின்றேன். அறிவு விழித்த நிலேயிலோ, விழிக்காத நிலேயிலோ, இதுதான் எம்மதமுங் கண்ட இலட்சியமாகும்.''

''இந்த நாட்டில் எத்தகைய உருவையடையும் உங்கள் செயல்கள்?'' என்று நான் வினவினேன்.

''நான் குறிப்பிட்ட உபதேசங்களைக்கொண்டு தனிப்பட்ட மனிதர்களின் உள்ளங்களை மாற்றுவதுதான் என் நோக்கமாகும். அவர்களையும் தங்கள் முறைகளில் அறிவுறுத்தும்படி நான் தூண்டுவேன். அவர்கள் விருப்பத்தின்படி சற்று மாற்றி அமைத்துக் கொள்ளட்டும். வெற்று மூடக்கொள்கைகளை நான் அவர்கட்குக்

கற்பிக்கவில்லை. இறுதியில் உண்மை வெற்றி அடையாமற் போகாது. நான் செயல் புரியும் கருவி இரண்டொரு நண்பர்கள் கையிலேதான் இருக்கின்றது. அக்டோபர் மாதம், 22-ஆம் தேதி மாலை ஆறரை மணிக்குப் பிக்காடிலியிலுள்ள பிரின்ஸெஸ் ஹாலில் ஓர் ஆங்கிலேயக் கூட்டத்தின் முன் நான் ஒரு சொற்பொழி வாற்றும்படி ஏற்பாடு செய்திருக்கின்றனர். இந்தச் செய்தியை விளம்பரமும் செய்திருக்கின்றனர். என்னுடைய தத்துவத்திற்குத் திறவுகோலாகத் திகழும் 'ஆன்ம ஞானம்' என்னும் பொருளே நான் எடுத்துக்கொண்ட விஷயமாகும். பிறகு இந்தத் துறையில் எப்படிப் பாதை விரியுமோ, அதைப் பின்பற்றிச் செல்ல ஆயத்த மாயிருக்கிறேன். அவரவர் விருந்தினர்களை ஏற்கும் அறைகளில் கூட்டப்படும் கூட்டங்களுக்கும் போவேன். எங்கும் போகத் தீர்மானித்துள்ளேன். இப்பொருள் பற்றி வரும் கடிதங்களுக்கும் பதில் எழுதுவேன்; அல்லது மனிதர்களுடன் தனித்தும் இதைத் துருவி ஆராய்வேன்; 'பணம், பணம்!' என்று பேய் பிடித்துத் திரியும் இந்த யுகத்தில் பணத்தைக் கருதி எந்தச் செயலையும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை என்று நான் உங்கட்குத் துணிந்து மொழிவேன்,'' என்றார் சுவாமிஜி.

நான் தனிமுறையில் எதையும் ஆராய்கின்ற சான்றோர்களுள் மிகவும் சிறப்புவாய்ந்த இந்தச் சான்றோரைத் தரிசிக்கும் பாக்கியம் வாய்க்கப் பெற்றேன். பிறகு இவரிடமிருந்து விடையுங் கொண் டேன்.

(3)

இந்தியாவின் ஞானப்பணி

[இது, 1896-ஆம் ஆண்டில் லண்டன் 'சண்டே டைம்ஸில்' வெளி வந்தது.]

பல வளஞ்சுரக்கும் கடற்கரை சூழ்ந்த இந்திய நாட்டிற்குச் சமயப் பிரசாரகர்களை அவர்கள் அனுப்புகிற செய்தியை ஆங்கிலே யர்கள் அறிவார்கள்.

'உலகத்தில் சென்று ஆண்டவன் நற்செய்தியை எங்கும் பரப்புவீராக!' என்று அவர்கள் பணித்த கட்டளையைப் பிரசாரகர் கள் முற்றிலும் நிறைவேற்றுகின்றார்கள். **இயேசுநாதர்** உபதேசத் தைப் பரப்பும் பணியில் எந்தப் பிரிட்டிஷ் இயேசுநாதர் சங்கமும் பின் வாங்கினதாகத் தெரியவில்லை. இந்தியாவும் இங்கிலாந்திற்குச் சமயப் பிரசாரகர்களை அனுப்புகின்றது என்ற விஷயத்தை மக்கள் அதிகமாக அறிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

தற்செயலாய் — தற்செயலாய் என்ற சொற்றொடரை வழங்க அனுமதி தருவீராயின், 63-ஆம் நம்பர் செயிண்ட் ஜார்ஜ் ரோடு, எஸ். டபிள்யூ என்ற தெருவிலுள்ள ஓர் இல்லத்தில் தாற்காலிகமாக அமர்ந்திருந்த சுவாமி விவேகானந்தரை நான் சந்திக்க நேர்ந்தது. அவர் இங்கிலாந்திற்கு வந்த விஷயத்தைப்பற்றியும் அவர் ஆற்றப்போகும் செயலின் இயல்பைப் பற்றியும் ஆராய்கின்ற விஷயத்தில் அவருக்கு யாதோர் ஆட்சேபமும் இல்லையெனத் தேர்ந்தேன். அவரை அங்கு நான் நாடினேன். என்னுடைய வேண்டுகோளுக்கு அவர் இணங்கிப் பேசினதில் ஒரு வியப்பைக் கண்டேன். இந்த வியப்போடு நாங்கள் பேச்சைத் தொடங்கினோம்.

''அமெரிக்காவில் என்னைக்கண்டு பேசுகிறவர்களோடு நான் பழகுவது எனக்கு வழக்கமாய்விட்டது. இப்படிப் பழகுவது எங்கள் நாட்டின் முறையன்று. அதனால், வேறு நாடுகளில் காணப்படும் முறைகளைக் கையாளக்கூடாது என்பது எனது கருத்தன்று. எதை நான் விரும்புகின்றேனோ, அதைப் பரப்பவே நான் விழைகின்றேன். உலகப் பல் சமயப் பெருமன்றம் 1893-ஆம் ஆண்டு சிக்காகோவில் கூடிற்று. இந்து சமயச் சார்பாக நான் அந்த மன்றத்திற்குப் போயிருந்தேன். மைசூர் நாட்டு மன்னரும் மற்றைய நண்பர்களும் என்னை அங்கே அனுப்பினார்கள். அமெரிக்க நாட்டில் எனக்கு வெற்றி கிடைத்தது என்றே சொல்லலாம். அந்த வெற்றிக்குரிய உரிமை எனக்கு உண்டென்றே உரைப்பேன். சிக்காகோவையன்றி வேறு அமெரிக்க நாட்டு நகரங்களிலிருந்தும் எனக்குப் பல அழைப்பிதழ்கள் வந்தன. அங்கே நீண்ட காலம் தங்கினேன். போன வேனிற்காலத்தில் நான் இங்கே வந்ததைத் தவிர ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் அங்கே கழிந்தன. இந்தக் கோடையில் நான் மீண்டும் இங்கே வந்திருக்கிறேன். அமெரிக்க நாட்டின் நாகரிகம் மிகச் சிறந்தது என்பதே என் கருத்தாகும். புதிய கருத்துகளை ஏற்றுக்கொள்ளுகிற உள்ளம் அமெரிக்கரிடத்தில் இருக்கக் காண்கின்றேன். ஒன்று புதிது என்ற காரணத்தால் அவர்கள் அதைத் தள்ளமாட்டார்கள்; அதற்குரிய குணங்களை ஆராய்வார்கள். அதன் ஏற்றத்தாழ்வு அதன் குணங்களையும் குற்றங்களையுமே சாரும்,'' என்றார் சுவாமிஜி.

''ஆனால், இங்கிலாந்து சம்பந்தப்பட்ட வரையில் வேறுவிதமாயிருக்கிறதென்பதைச் சொல்லாமலே சுட்டுகின்றீர்களா?'' என்றேன் நான்.

''ஆம்; உண்மையே. இங்கிலாந்தின் நாகரிகம் மிக்க பழமை வாய்ந்தது. அந்தக் காரணத்தால் பல நூற்றாண்டுகளாக அதை மாசுறுத்துங் குப்பை கூளங்கள் அதன்மீது படரத் தொடங்கிவிட்டன.

''காய்தல் உவத்தல் என்ற இயல்பு உங்களிடத்தில் நிரம்ப இருக்கப் பார்க்கின்றேன். கருத்து உலகத்தில் திரிகிற பொழுது இதை மனத்தில் வைத்தே உங்களோடு பழகவேண்டியிருக்கிறது. மேலும், உங்களோடு உசாவும்பொழுது அதைத் தகர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது,'' என்றார் சுவாமிஜி.

''அப்படித்தான் அவர்கள் சொல்லுகின்றார்கள். அதிருக்கட்டும்; அமெரிக்காவிலுள்ள புதியதொரு மடத்தைப் போலவோ, அல்லது ஒரு புதிய சமயத்தைப் போலவோ, நீங்கள் ஒன்றும் நிறுவப்போகிறதில்லை என்று கேள்விப்படுகின்றேன். அது உண்மைதானா?'' என்றேன் நான்.

''ஆமாம்; அது உண்மையே; நிலையங்களைப் பெருக்குவது எங்களுடைய கொள்கைகளுக்கு முரண்பாடாகும். உண்மையைக் கூறுமிடத்து, நிலையங்களுக்குக் குறைவில்லை. ஸ்தாபனங்கள் எழுமாயின், அவற்றைக் கவனிக்க மனிதர்கள் தேவை. துறவறம் பெற்றவர்களுக்கு ஆன்ம ஞானத்தை நாடுவதே குறிக்கோளாகும். உலகப் பதவி, சொத்து, சுதந்திரம், புகழ்—இவையனைத்தையும் அவர்கள் நீத்தவர்கள். ஸ்தாபன அலுவல்களில் தலையிட அவர்களால் இயலாது. மேலும், இத்தகைய அலுவல் பிறர் கையிலிருக்கிறது,'' என்றார் சுவாமிஜி.

''உங்களுடைய சமயப் பிரசாரம் சமயங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதுதானோ?'' என்றேன் நான்.

''எல்லாச் சமயங்களின் சாரத்தையும் திரட்டிச் சக்கையையும் கோதினையும் அகற்றுவதே குறிக்கோள் என்று சொன்னால், அது தான் நான் கொண்ட கருத்தை உள்ளவாறு புலப்படுத்தும். எது ஓர் உண்மையான அடிப்படையோ, அதை வலியுறுத்தி உரைக்க வேண்டும். முற்றத் துறந்த இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் சீடன் யான். அவருடைய அறிவுரைகளும் சத்தியமுமே என்னை ஆட்கொண்டுவிட்டன,'' என்றார் சுவாமிஜி.

இந்தத் துறவறச் சான்றோர் பிற சமயங்களைக் குறை கூறும் இயல்பினரல்லர்; அவற்றிலுள்ள குணங்களையே நாடுவார்; அவற்றை வாழ்க்கையில் எப்படி உருவாக்கலாம் என்பதையும் அறிவுறுத்துவார்; போராடுதல், பகைக் கண்ணோடு பார்த்தல் இவை யாவும் இவர் கண்ட தத்துவத்திற்கு முரணாகும்.

'உலகத்தை ஆட்டுவது அன்பு நெறியாகும்' என்ற உண்மை மீது இவர் தத்துவம் நிறுவப்பட்டிருக்கிறது.

''இந்து மதம் சமய வெறிகொண்டு பிற மதத்தினரை வாட்டினதில்லை என்பது நீங்கள் அறிந்த விஷயமே. எல்லாச் சமயத்தவர்களும் அன்போடும் அமைதியோடும் சேர்ந்து உறையும் நாடாய்த் திகழ்கின்றது இந்தியா! முகமதியர்களோடு கொலையும் உயிர்வதையும் சேர்ந்து பின் தொடர்ந்து வந்தன. அவர்கள்

வருகிற வரையில் நாட்டில் அமைதி நிலவியது. சமணர்கள் கடவுளின் இருப்பில் நம்பிக்கையற்றவர்கள்; அப்படி ஒரு நம்பிக்கை வைப்பதும் ஒரு வித மயக்கம் என்று மொழிபவர்கள். அவர்களை எங்கள் மதம் வதைக்கவில்லை; பொறுமையையே மேற்கொண்டது. இன்னும் சமணர்கள் எங்கள் நாட்டில் இருக்கின்றார்கள். 'இந்த அமைதியில் வேரூன்றிய பொறுமைதான், உண்மையான ஆற்றல்,' என்பதற்குத் தக்க ஒரு சான்றாய் நிற்கின்றது இந்தியா. தாக்குதல், துணித்தல், போராடுதல்—இவை யாவும் பல வீனமே.

''தால்ஸ்தாய் கண்ட கொள்கை போலவே இது நன்கு ஒலிக்கின்றது. தனித்த மனிதர்கள் இதைப் பின்பற்றலாம். ஆனால், இந்த விஷயத்திலும் எனக்கு நம்பிக்கையில்லை. மற்ற நாடுகள் இதைச் செயற்படுத்த இயலுமோ? எல்லா நாடுகளுக்கும் இக் கொள்கை பொருந்தும். இந்தியாவின் கருமம், அதன் தலை விதி, அது அடிக்கடி பிறரிடம் தோல்வியுறுகின்றது. ஆனால், வெற்றி பெற்றவர்கள்மீதும் அது ஆணை செலுத்துகின்றது. முகமதியர்கள் மீதும் அது வெற்றி கொண்டுவிட்டது.

''அறிவு மிக்க முகமதியர் சூபிகளாய்த் திகழ்கின்றனர். இந்துக்களிடமிருந்து அவர்களைப் பிரிக்க இயலாது. அவர்கள் அப்படி ஒன்றிப்போயிருக்கிறார்கள். இந்து சமயக் கருத்து அவர்களது மதத்தில் ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது. எங்களிடமிருந்து கற்றுக் கொண்டிருக்கிற நிலைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள்.

''பெரும்புகழ் வாய்ந்த முகலாய சக்கரவர்த்தியாரான அக்பரை ஓர் இந்துவென்றே இயம்பலாம். இங்கிலாந்தின் மீதும் முறையே நாங்கள் வெற்றி கொள்வோம். இன்று அந்நாட்டிற்கு ஆயுத பலம் இருக்கின்றது; ஆனால், அது கருத்துலகில் ஒன்றுக்கும் உதவாமல் பயனற்றுதான் கிடக்கும். இந்து சமயக் கருத்தைப்பற்றி ஷோப்பனேர் கூறியதை நீங்கள் அறிவீர்கள். 'இருண்ட காலம் என்று சொல்லப்படுகின்ற இடைக்காலத்திற்குப் பிறகு கிரீக்கு இலத்தீன் மொழிகள் மறு மலர்ச்சி பெற்றபொழுது ஐரோப்பாக் கண்டத்திற் குறிப்பிடத்தக்க எத்தகைய கிளர்ச்சி எழுந்ததோ, அத்தகைய கிளர்ச்சியும் இந்து சமயக் கருத்து அங்கு ஆட்சி புரிகின்ற பொழுது தோன்றும்,' என்று அவர் முன்னமே உரைத்தாரன்றோ?'' என்றார் சுவாமிஜி.

''இடையிலே குறுக்கிட்டுப் பேசுவதை மன்னிக்கவேண்டும்! அதனுடைய சின்னங்கள் பல இருப்பதாகவே தெரியவில்லையே!'' என்றேன் நான்.

''தெரியாமலிருக்கலாம்,'' என்று சுவாமிஜி சிந்தனையில் ஆழ்ந்தவராய்ப் பதில் கூறினார். ''பழைய மறுமலர்ச்சிக் காலம் அவரிடத்தில் தோன்றியும், அதன் சின்னங்களைப் பலர் அறிய

வில்லையென்று நான் துணிவுடன் சொல்லுவேன்! காலத்தின் அறி குறிகளை உணரக் கூடியவர்களே ஒரு பெருங்கிளர்ச்சியின் இயல்பை அறியக்கூடும். கீழ்த்திசை நூலாராய்ச்சித் துறையில் அண்மையிலேற்பட்ட சிறந்த முன்னேற்றத்தைப் பார்க்கிறோம். இப்பொழுது புலவர் சிலரிடையே அது திகழ்கின்றது. அவர்கள் ஆற்றிய தொண்டை நோக்கினால், சுவையற்று, எளிதில் புரிந்து கொள்ள இயலாதபடி இருக்கிற நிலையைத்தான் அது சுட்டும். ஆனால், மெல்ல மெல்ல அறிவொளி உதயமாகாமற் போகாது.

''எதிர்காலத்தில் அதுதான் வெற்றி மாலை சூடப்போகின்றது. எனினும், அது தன் சமயக் கருத்துக்களைப் பரப்பப் பிரசாரகர்களை இன்னும் அனுப்பவில்லை. உலகம் அதன் அடிக்கீழ் வருகிற வரையில் அது காத்திருக்குமென நான் கருதுகிறேன்.

''முன்னொரு காலத்தில் இந்தியா பிரசாரத்தொண்டில் மிகுந்த ஆற்றல் பெற்றிருந்தது. இங்கிலாந்து கிறித்தவ சமயத்தைப் தழுவுவதற்குப் பற்பல ஆண்டுகளுக்கு முன்னரே ஆசியாக் கண்டம் தன் கொள்கையை ஏற்கும்பொருட்டுச் சமயப் பணியாளர் பலரைப் புத்த பிரான் அனுப்பினார். கருத்துலகம் அதன்பால் திருப்பப்பட்டது. நாம் அத்தகைய தொண்டில் இப்பொழுதுதான் இறங்கியிருக்கின்றோம். எச்சமயத்தின் சிறப்பான வடிவத்தையும் ஏற்றுக்கொள்ளாத மக்கள் தொகை வளர்ந்துகொண்டே வருகின்றது. இத்தகைய கிளர்ச்சி, படித்தவர்கள் கூட்டத்தில் தோன்றத் தொடங்கிவிட்டது. அண்மையில் அமெரிக்காவில் குடித்தொகைக் கணக்கெடுத்த பொழுது தாம் எந்தச் சமய வழிபாட்டையும் சார்ந்ததாகப் பலர் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டனர். ஒரே உண்மையின் பல்வேறு தோற்றங்களே சமயங்களாகும். சமயங்கள் முன்னேறுகின்றன, அல்லது அழிகின்றன. அவை ஒரே உண்மையின் கதிர்களே. மாறுபட்ட உள்ளங்கள் விரும்பும் வடிவந் தானே அதன் தோற்றம்?

''நான் எடுத்துக்கொண்ட பொருளைத் தொடர்கின்றேன். எது நடு நாயகமாய் உள்ள உண்மை?

''அது உன்னிடத்தே உறைகின்ற ஆன்மாவே. எவ்வளவு சிறுமையை அடைந்த போதிலும் ஒருவன் அந்த ஆன்மாவின் வடிவேயாவன். அந்த ஆன்மா மூடப்பட்டிருக்கிறது; நமது பார்வையிலிருந்து கரந்து நிற்கிறது. இந்துக்களின் உள் நாட்டுக் கலகத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் என் நினைவிற்கு வருகிறது; பல ஆண்டுகளாக மௌன விரதம் பூண்ட ஒரு துறவியார், ஒரு முகமதியனால் குத்தப்பட்டார். கொலைகாரனைப் பிடித்தவர்கள் துறவியாரிடம் இழுத்துச் சென்றார்கள்; 'சுவாமிகளே, உண்மையைக் கூறுங்கள். நாங்கள் இவனுக்கு மரணதண்டனை விதிப்போம்,' என்று உரக்கக் கூறினார்கள். பல்லாண்டு மௌன விரதம் பூண்ட துறவியார்,

மூச்சு அகலுமுன் வாய் திறந்துரைத்த மொழிகள் இவை: 'என் அருமை மக்களே, நீங்கள் உண்மையை உணரத் தவறிவிட்டீர்கள். அந்த மனிதரும் கடவுளே யாவர்.'

''எல்லாவற்றிற்கும் பின்னே இருப்பது ஒன்றே என்னும் படிப்பினை சிறப்புடையதாகும். அதனைக் கடவுளென்றுவது கூறுங்கள்; அன்பென்றுவது அறையுங்கள்; ஆன்மா என்றுவது சாற்றுங்கள்; அல்லா என்றுவது அறையுங்கள்; ஜிஹோவா என்றுவது செப்புங்கள். அவை யாவும் ஒரே தத்துவமே. மிக்க கீழ்த்தரமான விலங்கு முதல் மிகவுயர்ந்த சான்றோர் வரையுள்ள அனைத்துயிரும் இயங்கச் செய்வது அதுவே. பல தொளைகளையுடைய பனி உறைந்த மாகடலைச் சித்திரித்துப் பாருங்கள். ஒவ்வொரு தொளையும் ஓர் ஆன்மாவாகவோ, அல்லது மனிதனுகவோ கருதுங்கள். அவனுடைய அறிவுக்கு ஏற்றவாறு அவன் விடுதலை அடைந்திருக்கின்றான். அவன் இப் பனிக்கட்டியைத் தகர்த்துத் தள்ள முயல்கின்றான்'', எனக் கூறினார் சுவாமிஜி.

''கீழ்த்திசை ஞானத்திற்கும் மேற்றிசை ஞானத்திற்குமிடையே நான் ஒரு வேறுபாட்டைக் காண்கின்றேன். துறவாலும், மனத்தைக் குவியச் செய்வதாலும், இவை போலும் பிற செயல்களாலும் எல்லாம் நிறைந்த சான்றோர்களைப் படைப்பதே உங்கள் நோக்கமாய் இருக்கிறது. சமுதாயத்தை உயர்த்தி முதிர்ந்த ஒரு நிலைக்குக் கொண்டு வருவதையே மேலை நாடுகள் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. ஆதலால், அரசியல், சமுதாயம் ஆகிய இவற்றின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நாங்கள் பாடு படுகின்றோம். எங்களுடைய நாகரிகத்தின் அழிவின்மை மக்கள் நலத்தைச் சார்ந்தன்றோ இருக்கின்றது ?'' என்றேன் நான்.

''சமுதாயமாயிருக்கட்டும், அரசியலாயிருக்கட்டும்—எல்லா அமைப்புகளுக்கும் அடிப்படையாய் உள்ளது மனிதனுடைய நற்குணமேயாகும்,'' என மிக்க ஆர்வத்துடன் உரைத்தார் சுவாமிஜி.

'' 'பாராளுமன்றம் இதை வகுத்தது; அதை வகுத்தது,' என்னும் காரணத்தால் ஒரு நாட்டை நல்லதென்றோ சீர்குலைந்ததென்றோ சொல்லுதற்கில்லை. அது உயர்ந்திருக்கக் காரணம், அதில் வாழ்கின்ற சான்றோர்களே. நான் சீன நாட்டிற்குச் சென்றிருந்தேன். எல்லா நாடுகளைக்காட்டிலும் நாம் வியக்கத்தக்க ஸ்தாபனம் அதற்கு உண்டு. இப்பொழுது சீன நாடோ, கலைந்த சந்தைக் கூட்டம் போலக் காட்சி அளிக்கின்றது. ஏனெனில், பண்டைக் காலத்தில் அமைக்கப்பட்ட ஸ்தாபனத்தைப் பின்பற்றி ஒழுங்காக நடக்கும் ஆற்றல் அதன் மக்களிடத்தே இல்லை. எப்பொருளின் மூலத்தையும் துருவி ஆராய்வது சமயமே. அது தக்க சமயமாய் அமையுமாயின், எல்லாம் ஒழுங்குடன் செல்லும்,'' என்றார் சுவாமிஜி.

''நீங்கள் கூறுவது சற்று விளங்காதது போல ஒலிக்கின்றது. நடக்கின்ற வாழ்க்கைக்கு அது நெடுந்தூரத்தில் உள்ளது போலத் தோன்றுகின்றது. 'ஆன்மா, ஒவ்வொன்றிலும் கலந்து நிற்கின்றது,' என்கிறார்கள். எப்பொழுதும் அதன் உதவியை நாடிக் கொண்டே இருக்க முடியுமா?'' என்றேன் நான்.

''ஒரே முடிபைக் கருதியே பெரும்பாலும் மக்கள் செயலாற்றுகின்றார்கள்; ஆனால், உண்மையை அறியத் தவறுகின்றார்கள். சட்டம், அரசாங்கம், அரசியல்—இவை யாவும் பலவிதத் தோற்றங்களே. சட்ட திட்டங்களையும் கடந்து நிற்கின்ற ஒரு பெரிய இலட்சியமுண்டு. இடையே 'சந்நியாசி' என்னும் சொல்லுக்கு விளக்கந்தர விரும்புகின்றேன். தெய்வ நெறிக்காக உலக முறை கடந்தவனே சந்நியாசி எனப்படுவன். அவனை 'இறை சாரும் பாழ் நெறியான்,' என்றும் கூறலாம். ஆனால், அச்சொல்லை வழங்குகிறவன்பால் மக்கள் ஐயுறுதல் கூடும். மாபெருஞ்சான்றோர்கள், இதே அறிவுரையைத்தான் வழங்குகின்றார்கள். எல்லாவற்றிற்கும் அடிப்படையாயுள்ளது சட்டமன்று; ஒழுக்கமும் உள்ளத் தூய்மையுமே உண்மையான ஆற்றலாகும் என்பதை இயேசு நாதர் கண்டார். 'கீழை நாடு ஞான வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொள்ளுகின்றது; மேலை நாடோ, சமுதாயத்தின் முதிர்ச்சியை நாடுகின்றது,' என்று கூறுகின்றீர்கள். ஆனால், புறத்தோற்றமான ஆன்மா, மெய்யான ஆன்மா—இவற்றின் இயல்புகளை நீங்கள் மறக்கவில்லை என்று நான் கருதுகின்றேன்,'' என்றார் சுவாமிஜி.

''நாங்கள் புறத்தோற்றத்தை நாடுகின்றோம். நீங்களோ, மெய்யான ஆன்மாவை நாடுகின்றீர்கள் என்பதை நாங்கள் ஊகிக்கும்படி செய்கின்றீர்களா?'' என்றேன் நான்.

''தன் முதிர்ச்சியை அடையப் பல நிலைகளில் நின்று அது முயல்கின்றது. முதன்முதலாக, அது தூலத்தைப் பின்பற்றுகின்றது; படிப்படியாகச் சூட்சுமங்களின்பாற் செல்கின்றது. எல்லோரும் நம் சகோதரர்கள் என்னும் தன்மையை எப்படி நாம் அடைகின்றோம் என்பதைப் பார்ப்போம்: இந்தச் சகோதரத் தன்மையை ஒரு சிறு குழுவிலே உணர்ந்துகொள்கிறோம்; பிறருக்கு இணங்காது தனக்கென்றே வாழ்கின்ற குறுகிய இரக்கமற்ற ஒரு கூட்டத்திலே தான் இந்தத் தன்மையை முதலிலே பார்க்கிறோம். ஆனால், படிப்படியாக மிகவும் விரிவான நிலையை அடைகின்றோம். பிறகு பண்பு பற்றிய கருத்துலகத்தில் திரிகின்றோம்,'' என்றார் சுவாமிஜி.

''நாங்கள் பாராட்டுகின்ற பல குழுக்கள் இறந்துவிடும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? பிரெஞ்சுக்காரர்கள் எங்களைப் பற்றிக் கூறியதை நீங்கள் அறிவீர்கள் என்று நினைக்கின்றேன். ஆங்கில நாடு பல குழுக்களையுடைய நாடுதான்; ஆனால், அக்குழுக்களுள் ஒரே மணந்தான் வீசும்,'' என்றேன் நான்.

''ஆனல், அவை மறைந்துவிடும் என்பது திண்ணம். சாரமற்றவற்றின்மீது அவை எழுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றின் உயிர் நாடி அழியாது நிற்கும். ஆனல், அதுகூட இன்னொரு சமய இயக்கத்தில் பாய்ந்து கரைந்துவிடக்கூடும். நீங்கள் இந்த முழு மொழியை அறிவீர்கள்: ஏதோ ஒரு சமய நெறியிற் பிறப்பது நலந்தான்; ஆனல், அதுவே நிலையென்று அதற்காக மரிப்பது அழகன்று,'' என்முர் சுவாமிஜி.

''உங்கள் பணி இந்நாட்டில் எப்படி முன்னேறி வருகின்றது என்பதைப்பற்றி நீங்கள் சொல்லக்கூடுமா ?'' என்றேன் நான்.

''நான் முன்பு குறிப்பிட்ட காரணங்களால், எனது பணி மெல்ல மெல்லத்தான் முன்னேறுகின்றது. அடிப்படைத் தத்துவங்களைப் பற்றியும் மூலங்களைப் பற்றியும் ஆராய்கிற நிலையில் விரைவில் ஒன்றையும் ஆற்ற முடியாதுதான். ஏதாவது ஒரு முறையில் இக்கருத்துகள் பரவத்தான் போகின்றன என்பதை நான் உணர்த்த வேண்டுவதில்லை. அவற்றை உள்ளவாறு பகுத்தறியக்கூடிய தருணம் வந்திருக்கக் கூடும்,'' என்முர் சுவாமிஜி.

''இப்பணி எப்படி உருவாகும் ?'' என்று நான் கேட்டதற்கு விளக்கம் தருகின்ற சுவாமிஜியின் மொழியை நான் உற்றுக் கேட்டேன். பண்டைய பல பொருள்களைப் போலவே இந்த உபதேசமும் பரிசையும் பணத்தையும் எதிர்பார்த்துப் புரியப்பட்டதன்று. இதைத் தழுவி உளமுவந்து தாமே யாதொரு தூண்டுதலுமில்லாமல் பணி செய்ய முன்வரும் உத்தமர்களின் பெருமுயற்சிகளையே இது சார்ந்து நிற்கிறது.

சுவாமிஜி கீழை நாட்டு உடையில் மிகவும் கவின் பெறக் காட்சியளிக்கின்முர். இவருடைய எளிமை, இதயத்திலிருந்து வருகிற இவருடைய தூய இயல்பு—இவற்றில் சாதாரண மக்கள் கருதக்கூடிய துறவறத்தின் தன்மை நிழல்கூட ஆடவில்லை. இவருடைய ஆங்கில மொழியின் தனிச் சொல்லாட்சியும், பேச்சின் வன்மையும் இவரது தோற்றப் பொலிவிற்கு ஒரு தனியழகை ஊட்டுகின்றன. பதவி, சொத்து, புகழ்—இவற்றை அகற்றிவிடுவதே துறவறமாகும். ஆன்மிக ஞானத்தை நாடும் இடையருத முயற்சியும் இதன் தன்மையேயாகும்.

(4)

இந்தியாவும் இங்கிலாந்தும்

[இது, 'இந்தியா—இலண்டன்' என்னும் பத்திரிகையில் 1896-ஆம் ஆண்டு வெளியானது.]

இலண்டனுக்குரிய பருவ காலத்தில் சுவாமி விவேகானந்தர் திரளான மக்களுக்குப் போதித்தும் சொற்பொழிவாற்றியும் வந்

தார். இவருடைய கொள்கையும் தத்துவங்களும் அவர்களுடைய
உள்ளங்களைக் கவர்ந்தன.

இடையருது பிரான்சு நாட்டார் நடத்திவரும் சிறிய பணியைத்
தவிர, பெரும்பான்மையான சமயப் பணியின் முழு உரிமையும்
ஆங்கிலேயரிடமே இருந்து வருகிறது என்று ஆங்கிலேயர் பலர்
கருதுகின்றனர். சவுத் பெல்கிரேலியா என்னும் இடந்தான் சுவாமி
ஜிக்குத் தாற்காலிக இடமாயிருந்தது. இந்தியா எவ்விதமான உப
தேசத்தை அளிக்கக்கூடுமெனத் தெரிந்துகொள்ள நான் அங்குச்
சென்றேன். சுடான் முதலிய இடங்களுக்கு அனுப்பப்பட்ட படை
யெடுப்புகள் மூலமாக ஏற்பட்ட செலவுக் கணக்கைத் தீர்ப்பதுபற்றி
யும், நீதி வழங்குதலும் நிருவாகமும் ஒருவரிடமே இணைந்திருத்
தலைப் பற்றியும், ஆட்சி புரியும் நாட்டிற்காக ஏற்படும் செலவுகளைப்
பற்றியும் இந்தியர் செய்த ஆட்சேபணைகளைத் தவிர, வேறு என்ன
செய்தியை இந்தியா இங்கிலாந்திற்கு அனுப்ப இயலும் என்பதை
விசாரிக்கும் நோக்கத்துடன் அவரை நான் நாடினேன்.

''இந்திய நாடு சமயப் பிரசாரகர்களை அனுப்புவதில் யாதொரு
புதுமையும் இல்லை. புத்த மதம் குழவிப் பருவத்திலிருந்த பொழுது
—சுற்றிலுமுள்ள நாடுகளுக்கு அளிக்கக்கூடிய உபதேசம் அதனி
டம் இருந்த பொழுது—அசோக சக்கரவர்த்தி ஆட்சியிலிருந்த இந்
தியா சமயத்தொண்டர் பலரை அனுப்பிற்று.

'' 'ஏன் அது தன் பிரசாரத்தை நிறுத்திவிட்டது? ஏன் அது
மீண்டும் அந்தத் துறையில் இறங்கியிருக்கிறது?' என்று ஒருவர்
வினவலாமன்றோ?

''அது சுயநலத்தால் தன் பிரசாரத்தை நிறுத்திவிட்டது; நாடு
களாயினும், தனிமனிதராயினும், கருத்துப் பரிமாறுதல் மூலமாகத்
தான் உய்ய இயலும் என்னும் தத்துவத்தை மறந்துவிட்டது. அது
உலகிற்குச் செய்யும் பணி ஒரே பணிதான். ஆன்மிக விஷயமே
அதன் குறிக்கோளாகும். பல யுகங்களாக அது ஆட்சி புரியும்
உலகம், உள் நோக்கும் கருத்துலகமேயாகும். சூட்சுமத்தை அறி
தல், தத்துவம், தருக்கம்—இவைகளே அதற்குரிய மண்டலமாகும்.
உண்மையைக் கூறுமிடத்து, இங்கிலாந்து இந்தியாவிற்குச் செய்த
பணியின் விளைவே நான் இங்கிலாந்திற்கு ஆற்றும் பணியாகும்.
அது நம்மை வென்று ஆட்சி புரிகின்றது. அதன் நன்மைக்காகவும்
நம்முடைய நன்மைக்காகவும் விஞ்ஞானம் தந்த அறிவை அது
பயன்படுத்திக் கொள்ளப் போகிறது. இந்திய நாடு உலகத்திற்கு
அளித்த வளத்தைக் குறிக்கும்பொழுது சொல்லாட்சியில் எழுகின்ற
வடமொழி மரபும் ஆங்கில மரபும் என் நினைவிற்கு வருகின்றன.
ஒருவன் இறப்பதைக் குறிக்கும் சொற்றொடர் இதுவே: 'அவன்
தன் ஆவியை விட்டுவிட்டான்,' என்று கூறுகின்றீர்கள். நாங்
களோ, 'அவன் உடலை விட்டுவிட்டான்,' என்கிறோம். இதனல்,

நீங்கள் உடலைத்தான் சிறந்ததாகக் கருதுகின்றீர்கள். நீங்கள் 'ஆன்மாவைத்தான் உடல் உடைமையாகக் கொள்ளுகின்றது,' என்னும் கருத்துடையீர்கள் போலும்! நாங்களோ, 'மனிதனே ஆன்மா; அவன் உடலே அவனது உடைமை,' என்று கூறுகின்றோம். இவை யாவும் மேற்பரப்பில் வீசும் குறுகிய அலைகளே. ஆனால், இவை உங்கள் நாட்டுக் கருத்துப் பண்பாட்டை உணர்த்துகின்றன. இருள் மண்டிய இடைக்காலத்தின் முடிவில் கிரீக்கு இலத்தீன் மறுமலர்ச்சிக் காலம் ஐரோப்பாவில் எவ்வண்ணம் சிறந்து திகழ்ந்ததோ, அவ்வண்ணமே இந்திய நாட்டுத் தத்துவத்தின் சத்தி பரவும் என்று ஷோப்பனேர் வருங்காலச் செய்தியை உரைத்ததை உங்களுக்கு நினைவூட்டுகின்றேன். கீழை நாட்டுக் கலையாராய்ச்சி தழைத்தோங்கத் தொடங்கிவிட்டது. உண்மையை நாடுவோன் முன்னர் ஒரு புதிய கருத்துலகம் விரியத் தொடங்குவதைப் பார்க்கிறோம்,'' என்றார் சுவாமிஜி.

''வெற்றி கொண்டவர்களை இறுதியில் இந்தியா வெற்றி கொள்ளப் போகின்றதா?'' என்றேன் நான்.

''ஆம்; கருத்துலகத்திலேதான். முகமதியர்கள் வாள் வலி கொண்டு எப்படி வெற்றி கொண்டார்களோ, அப்படியே இங்கிலாந்தும் ஆயுத பலத்தால் வெற்றிகொள்ளப் பார்க்கின்றது. வாள் வலி என்பது உலகியலைச் சுட்டும். ஆனால், அக்பர் பெருந்தகையைப் பெரும்பாலும் இந்துவென்றே இயம்ப வேண்டும். கல்வியிற் சிறந்த முகமதியர்கள் சூபிக்கொள்கையைச் சார்ந்தவர்கள். அவர்களை இந்துக்களிலிருந்து பிரிக்க இயலாது. அவர்கள் மாட்டிறைச்சியை உண்பதில்லை. அவர்களுடைய பழக்க வழக்கங்கள், எங்களுடைய பழக்க வழக்கங்களை ஒத்திருக்கின்றன. அவர்களுடைய கருத்தின் மீது எங்களுடைய கருத்துச் சாயம் நன்றாய் ஏறிவிட்டது,'' என்றார் சுவாமிஜி.

''உங்களை ஆளுகின்ற அதிகாரிக்கும் இதே கதி என்பதை முன்னோக்கியே உணர்கின்றீர்களா? ஆனால், அவன் இப்பிடிப்பிலிருந்து சேய்மையில் நிற்கின்றானா?'' என்றேன் நான்.

''இல்லை; நீங்கள் கருதுகிறது போல அவன் அவ்வளவு தூரத்தில் இல்லை. சமயக் கருத்துலகில் இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் பெரும்பான்மை ஒற்றுமை உண்டு. பிற சமயங்களைத் தழுவி நிற்கும் மக்கட்சமுதாயங்களிடையேயும் இத்தகைய ஒற்றுமைகளிருப்பதை ஒருவன் உணரக்கூடும். ஆளுகின்ற ஆங்கிலேயனுக்கோ, தொழிற்செய்யும் ஆங்கிலேயனுக்கோ, இந்தியாவின் இலக்கியத்தைப் பற்றி ஓரளவு அறிவு ஏற்படுமாயின், ஒருவரை ஒருவர் அன்போடு உணர்கின்ற தன்மை ஏற்பட்டுவிடுகிறது. இத்தன்மை இடையறாது விரிந்துகொண்டே போகின்றது. அவர்கள் தனித்து நிற்பதற்குக் காரணம் அறியாமையே என்று கூறுதல்

மிகையாகாது. சில சமயங்களில் அவர்கள் இகழ்ச்சிக் குறிப்போடு பார்க்கின்ற இயல்பிற்கும் இதுவேதான் காரணமாகின்றது,'' என்றார் சுவாமிஜி.

''ஆம்; அது அறிவின்மையின் ஆழத்தைத்தான் சுட்டுகின்றது. சமயப்பணி செய்தற்பொருட்டு இங்கிலாந்திற்கு வராமல் நீங்கள் அமெரிக்க நாட்டிற்கு ஏன் சென்றீர்கள்?'' என்றேன் நான்.

''இது தற்செயலாய் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியேயாகும். உலகத் திருவிழாக் காலத்தில் சிக்காகோவில் பல் சமயப் பெருமன்றத்தை நிறுவினார்கள். இங்கிலாந்தில் அது அமைக்கப்பட்டிருந்தால் அழகாயிருந்திருக்கும். இந்துக்களின் சார்பில் என்னை மைசூர் மன்னரும் வேறு நண்பர் சிலரும் அனுப்பினர். இங்கு இலண்டன் மாநகரில் நான் சொற்பொழிவு புரிய வந்த கடந்த முதிர்வேனிற்காலமும் இந்த முதிர்வேனிற்காலமும் தவிர, மூன்று ஆண்டுகள் நான் அமெரிக்காவிலேயே தங்கினேன். அமெரிக்க நாட்டு மக்கள் மிக உயர்ந்தவர்கள். அவர்களுடைய எதிர் காலம் சிறப்புற்றிருக்கும். அவர்களைக் கண்டு நான் வியப்படைகின்றேன்! அவர்களிடையே நான் உகக்கும் நண்பர் பற்பலர் இருக்கக் கண்டேன். ஆங்கிலேயர்களிடையே தோன்றக்கூடிய அவ்வளவு வெறுப்பும் விருப்பும் அமெரிக்க மக்களிடத்தில் இல்லையென்றுதான் இயம்ப வேண்டும். புதிய கருத்தை அளந்து ஆராயும் இயல்பு அவர்களிடத்தில் இருக்கின்றது. அவர்கள் ஒன்று புதியதாயிருந்தாலும் அதைத் துருவி நோக்குவார்கள். அவர்கள் மிகுதியாக விருந்தோம்பும் இயல்பு வாய்க்கப் பெற்றவர்கள். நம்பிக்கை கொள்வ தற்குரிய இதழ்களைக் காட்டிக் காலத்தை வீணே கழிக்க வேண்டுவதில்லை. அவர்கள் நம்மை எளிதில் நம்பிவிடுவார்கள். நான் ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்குச் சென்றதுபோல, நீங்களும் நண்பர்களிடையே சொற்பொழிவாற்றிக்கொண்டே செல்லலாம். போஸ்தன், பிலடெல்பியா, பால்டிமோர், நியூயார்க்கு, வாஷிங்டன் டெ.ஸ் மாய்ன்ஸ், மெம்பிஸ் முதலிய பல இடங்களுக்கு நான் சென்றிருக்கிறேன்,'' என்றார் சுவாமிஜி.

''ஒவ்வோரிடத்திலும் உங்களுக்குச் சீடர்கள் ஏற்பட்டார்களா?'' என்று நான் வினவினேன்.

''ஆம், சீடர்களே ஏற்பட்டார்கள்; ஸ்தாபனங்கள் அல்ல. ஸ்தாபனங்களை நிறுவுவது என் தொண்டன்று. உண்மையைக் கூறுமிடத்து, இத்தகைய ஸ்தாபனங்களுக்குக் குறைவில்லை. இவற்றைப் பரிபாலிக்க மக்கள் தேவை. அதிகாரம், பொருள், செல்வாக்கு— இவற்றை மக்கள் நாடுகின்றார்கள்; அடிக்கடி ஆட்சிக்காகப் போராடுகின்றார்கள்?'' என்றார் சுவாமிஜி.

''சில சொற்களிலே உங்களுடைய சமயசாரத்தை வடிகட்டிக் கூற முடியுமா ? சமய ஒப்பு நோக்குதலை நீங்கள் கற்பிக்கப்போகின்றீர்களா ?'' என நான் வினவினேன்.

''நான் கூறப்போவது உண்மையிலே சமயத்தின் தத்துவமாகும்; அதன் புறத்தோற்றங்களுக்கு அடியிலிருக்கும் வித்தாகும். சமய அமைப்புக்களில் சாரமுள்ள பகுதிகளும் சாரமற்ற பகுதிகளும் உண்டு. சாரமற்றதைக் களைந்து எறிந்துவிட்டோமானால், எல்லாச் சமயங்களுக்கும் ஆதாரமாயுள்ளதே எஞ்சி நிற்கும். அது தான் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாய் உள்ளது. அதைத்தான் 'கடவுள்' என்று கூறுகின்றோம்; 'அல்லா' என்ற அறைகின்றோம்; 'ஜிஹோவா' என்று செப்புகின்றோம்; 'ஆன்மா' என்று மொழிகின்றோம்; 'அன்பு' என்று உரைக்கின்றோம். மிக இழிவான தோற்றத்திலிருந்து மனிதனிடையே காணப்படுகிற மிக உயர்ந்த தோற்றங்கள் வரையில் திகழ்கின்ற எல்லாவற்றையும், ஒன்றுயிருக்கும் அப்பொருள் இயங்கும்படி செய்கின்றது. இந்த ஒற்றுமையைத்தான் நாங்கள் வலியுறுத்திப் பேசப்போகின்றோம். ஆனால், மேலை நாட்டில் சாரமற்றதை வலியுறுத்திப் பேசக்கூடும். இப்புறத்தோற்றத்திற்கு எல்லோரையும் இணங்கும்படி செய்வதற்கு ஒருவர் ஒருவரோடு போராடி வெட்டி மடிவர். ஆண்டவன்பால் தோன்றும் அன்பும், மக்கள்பால் மலரும் அன்புந்தான் சாரமான பொருள்களாகும். சுருங்கக் கூறுமிடத்து இந்நிலையில் இவர்கள் இப்படி நடந்துகொள்வது வியப்பல்லவா ?'' என்றுர் சுவாமிஜி.

''ஓர் இந்தியன் தன் கொள்கைக்காக மற்றொருவனை வதைக்கமாட்டானன்றோ ?'' என்றேன் நான்.

''அவன் இதுவரையில் அவ்வாறு செய்யவில்லை. மனித இனங்களுக்குள்ளே எல்லாவற்றையும் சகிக்கும் தன்மை அவனிடத்திலே தான் மிகுதியாய் இருக்கின்றது. 'ஓர் இந்தியன் ஆழ்ந்த சமயப் பற்றுள்ளவன். கடவுளிடத்தில் நம்பிக்கை இல்லாதவர்களை அவன் வதைத்திருக்கக் கூடும்,' என்று எண்ணவுங்கூடும். சமணர் கடவுளிடம் நம்பிக்கை வைப்பதை ஒரு மயக்கம் என்று கருதுகின்றனர். ஆனால், ஒரு சமணனும் வதைக்கப்படவில்லை. மதவெறி பிடித்து முதன்முதல் இந்தியாவிலே வாளேந்தியவர்கள் முகமதியர்களே,'' என்றுர் சுவாமிஜி.

''இங்கே ஓராயிரம் சமயக் கிளைகளைப் பார்க்கின்றோம். ஒற்றுமைக் கொள்கை இங்கிலாந்தில் எவ்வாறு முன்னேற்றமடைய முடியும் ?'' என்றேன் நான்.

''சுதந்திரமும் அறிவும் வளர வளர, இவை மெல்ல மெல்ல மறைந்துவிடும். இவை யாவும் சாரமற்றவைமீது நிறுவப்பட்டிருக்கின்றன. இயற்கையில் இவை நீடித்து நில்லா. சமயக்கிளைகள் ஆற்ற வேண்டிய அலுவல் முடிந்து போய்விட்டது. அது சிறிய

குழுவைச் சார்ந்தவர்கள் கண்ட முறையில் அமைக்கப்பட்ட குறு கிய சகோதரத் தன்மையாகும். நாளடைவில் அனைத்தையும் தழுவக்கூடிய சகோதரத் தன்மையை அடைகின்றோம். அப் பொழுது தனி மனிதரைச் சேரவிடாது பிரிக்கின்ற சுவர்களை நாம் தகர்த்தெறிந்துவிடுவோம். இங்கிலாந்தில் சமயப்பணி வளர்ந்து தான் செல்கின்றது. அது கனிய வேண்டிய தக்க காலம் இன்னும் வரவில்லை. இக்காலத்திலுள்ள சாதிப்பிளவு இந்தியாவின் முன் னேற்றத்திற்குத் தடுப்புச் சுவராய்க் குறுக்கே நிற்கின்றது. அது மனத்தைக் குறுகச் செய்கிறது; அதற்கு வரப்பு எழுப்புகின்றது; பிளவை உண்டாக்குகின்றது. ஆனால், கருத்து முன்னேற்றத்திற்கு முன் அச்சுவர் இடிந்து நொறுங்கிப் போய்விடும்,'' என்றார் சுவாமிஜி.

''ஆனால், ஆங்கிலேயர் சிலர், சாதி அமைப்புப் பொதுவாக நன்மை பயக்கும் என்று கருதுகின்றனர். அவர்கள் இந்தியாவின் மீது பரிவு காட்டுவதில் பின் வாங்கியவர்கள் அல்லர்; அதன் வர லாறு சம்பந்தப்பட்ட வரையில் அஞ்ஞானத்தில் ஆழ்ந்தவர்களு மல்லர். ஒருவன் ஐரோப்பியருடைய நடையுடை பாவனைகளை மிக எளிதில் ஏற்றுக்கொள்ளக் கூடும். எங்கள் இலட்சியங்களையெல் லாம் நீங்கள் லோகாயதம் என்று பழிக்கின்றீர்களே!'' என்றேன் நான்.

''அது உண்மைதான். இந்தியாவை இங்கிலாந்தோடு பிணைப் பதை எந்த அறிவுள்ள மனிதனும் தனது குறிக்கோளாகக் கொள்ள மாட்டான். உடலென்பது அதிற்கரந்து நிற்கின்ற சிந்தையின் வடிவேயாகும். அரசியலும் நாட்டுக் கருத்தின் உருவமெனப்படும். இந்திய நாட்டின் உருவமும் பல நூற்றாண்டுகளாய் வந்த கருத்து களிலிருந்து எழுந்ததே. அக்காரணத்தால், இந்தியாவை ஐரோப் பியப் பண்பாட்டைக் கொண்டு உருவாக்கப் புகுவது இயலாத செய லாகும். மேலும், அது அறிவற்ற செயலாகவும் கருதப்படும். முன் னேற்றத்தின் அமிசங்கள் எப்பொழுதும் இந்தியாவில் சுறுசுறுப்பாக இயங்கின என்பது உண்மையே. அமைதியான ஓர் அரசாங்கம் இருக்கிற பொழுதெல்லாம் அவை நிமிர்ந்து நின்றன. உபநிஷத் துக் காலம் முதற்கொண்டு இது வரையில் பெரும்பாலும் எங்களு டைய சமயாசாரியர்கள் சாதிச்சுவர்களை இடித்துத் தள்ளவே விரும்பியிருக்கின்றார்கள். அவர்கள் தகர்க்கப் பார்த்தது, ஆதியில் ஏற்பட்ட வருணச்சிரமம் அன்று. அவர்கள் அகற்ற விழைந்தது அழுகிக் கெட்டுப்போனதொன்றே. இப்பொழுதிருக்கிற சாதி அமைப்பில் ஏதாவது ஒரு நன்மை ஒட்டிக்கொண்டிருக்குமாயின், அது தொடக்கத்திலிருந்து சாதி அமைப்பைச் சார்ந்ததே. இந்த ஆச்சிரம அமைப்பு மிகவும் போற்றிப் பாராட்டத்தக்க சமுதாயத் தாபனமே. வருணச்சிரமத்தைப் பண்டைய நிலைக்குக் கொண்டு

வர புத்த பிரான் முயன்ருர். இந்தியா அஞ்ஞானத்திலிருந்து விழித்தெழுகிற ஒவ்வொரு காலத்திலும் இதைத் தகர்க்கும் முயற்சிகள் இருந்தே வந்தன. காரண காரியமாகத் தொடர்ந்து வந்திருக்கிற எங்கள் இந்திய நாட்டை எங்களுக்கு உதவி புரிகின்ற அன்னியக் கருத்துக்களைக் கொண்டே அமைப்பது எப்பொழுதுந்தான் திகழும். அவற்றைக்கொண்டே அதைச் சாதித்துவிட முடியாது. ஆன்ம வளர்ச்சி, அதன் வேரிலிருந்துதான் வரவேண்டும். எங்களுக்குரிய விடுதலையை நாங்களே வகுத்துக்கொள்ளக் கூடிய உதவியைத்தான் இங்கிலாந்து புரியக்கூடும். கழுத்தில் கையை வைத்து அன்னியர் நம்மை ஆட்டிவைக்கிற நிலையில் நிகழக்கூடிய எந்த முன்னேற்றமும் என் கருத்தின்படி பயனற்றதே. அடிமைத் தொழில் ஆற்றுகிற எந்தச் சிறந்த அலுவலும் இழிவைத்தான் அடையும்,'' என்ருர் சுவாமிஜி.

''இந்து தேசக் காங்கிரசைப் பற்றி நீங்கள் கவனம் செலுத்தினது உண்டா ?'' என்றேன் நான்.

''மிகுதியாய்க் கவனம் செலுத்தியதாக நான் உரிமை பாராட்ட இயலாது. எனது பணியோ, வேறு துறையிலிருக்கிறது. ஆனுல், அந்த இயக்கம் மிகவும் முக்கியமானதுதான். அதன் வெற்றிக்காக உள்ளம் உவந்து ஆசி கூறுகின்றேன். இந்தியாவின் பல இனத்தாரிடையே ஒரு நாடு உருவாகின்றது. ஐரோப்பாக் கண்டத்திலிருக்கிற பற்பல இனத்தவர்களைவிட, இந்தியாவிலுள்ள பற்பல இனத்தவர்கள் குறைவில்லை எனச் சில சமயங்களில் நான் சிந்திப்பதுண்டு. இந்திய வாணிபத்தைக் கைப்பற்ற ஐரோப்பா போராடிற்று. உலக நாகரிகத் துறையில் இது ஒரு மாபெருநாடகம் ஆடிற்று என்பது உண்மையே. இந்த வாணிபத்தைக் கைப்பற்றும் விஷயமே உலக மக்கள் வரலாற்றில் ஒரு புது நெறித் தொடக்கமென்று மொழியலாம். டச்சுக்காரர், போர்ச்சுகீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர்—இவர்கள் முறையே அதற்காகப் போராடினுர்கள். வெனிஸ் வணிகர்கள் கீழை நாட்டில் பெருநஷ்டமடைந்தார்கள். ஆனுல், அமெரிக்க நாடு கண்டுபிடிக்கப்பட்டது; வெனிஸ் வணிகர்கள் தங்கள் கீழ்த்திசை நஷ்ட ஈட்டைச் செய்மையிலுள்ள மேற்றிசையில் கண்டார்கள். நஷ்டஈடும் அமெரிக்க நாடு கண்டுபிடிக்கப்பட்டதைச் சாரும்,'' என்ருர் சுவாமிஜி.

''அந்தத் தேசிய இயக்கம் எதில் வந்து முடியும் ?'' என்றேன் நான்.

''அந்த இயக்கம் இந்தியாவில் ஒற்றுமையை விளைத்துவிடும். நான் கூறுகின்ற குடியரசுக் கருத்துகளை அது எய்தும். பண்பட்ட எவரோ சிலரிடமே அறிவு தனி உரிமையாய் நின்றுவிடக்கூடாது; உயர்ந்த இனத்தாரிடமிருந்து தாழ்ந்த இனத்தாரிடமும் பரவ வேண்டும். கல்வி மக்களிடையே வந்துகொண்டிருக்கிறது. கட்

டாயக் கல்வியும் தொடர்ந்து வரும். தொழில் புரியக்கூடிய மக்க
ளின் மாபெருஞ்சக்தியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.
துயின்று கிடக்கின்ற இந்திய நாட்டுச் சத்திகளோ, மிக மிகப் பெரி
யனவே. அவற்றைத் தட்டி எழுப்ப வேண்டும்,'' என்ருர் சுவாமிஜி.

''மிகுதியான இராணுவ பலம் இல்லாமல், எந்த நாடேனும்,
எப்பொழுதேனும் சிறப்புற்றிருந்ததுண்டோ ?'' என்றேன் நான்.

''ஆம்,'' என்று சற்றுந் தடங்கலின்றிக் கூறினர் சுவாமிஜி;
''சீன நாடு அப்படி யிருந்தது. சீன, ஜப்பான் ஆகிய நாடுகளில்
நான் பிரயாணம் செய்திருக்கிறேன். இப்பொழுது சீன நாடு
கலைந்த சந்தைக்கூட்டம் போலக் காட்சியளிக்கின்றது. சீன நாடு
ஓங்கி வளமுற்றிருந்த போது எந்நாடும் இது வரையில் கண்டறியாத
—நான் மிகவும்போற்றக்கூடிய—ஸ்தாபனம் அதனிடம் திகழ்ந்தது.
பற்பல நூற்ருண்டுகளுக்கு முன்னமே நாம் நவீனம் என்று கருதக்
கூடிய உபாயங்களும் முறைகளும் சீனர்களால் பின்பற்றப்பட்டிருந்
தன. சான்ருகப் போட்டிப் பரீட்சையை நோக்குங்கள்,'' என்ருர்.

''அந்நாடு இப்படிக் கட்டுக் குலைவதற்குக் காரணம் என்
னவோ ?'' என்றேன் நான்.

''தன் ஸ்தாபனத்தைப் பரிபாலிக்கக் கூடிய சான்ருேர்களை அது
படைக்க இயலவில்லை. 'பாராளு மன்றம் வகுத்த சட்டத்தை வைத்
துக்கொண்டு மக்களை நல்லவர்கள் ஆகச் செய்ய முடியாது,' என்
னும் முதுமொழியைக் கேட்டிருப்பீர்கள். இந்த முதுமொழியின்
உண்மையை உங்களுக்கு முன்பே சீனர் அறிந்திருக்கின்றனர்.
அந்தக் காரணத்தால், அரசியலைக்காட்டிலும் சமயந்தான் முக்கிய
மானது. சமயம் வேர் வரையிற்சென்று எதையும் ஆராய்கின்
றது. ஒழுக்கத்தின் சாரத்தைத் தன் ஆராய்ச்சிக்குப் பொருளாக
அது கருதுகின்றது,'' என்ருர் சுவாமிஜி.

''நீங்கள் குறிப்பிடுகிற விழிப்பை இந்தியா உணர்கின்றதா ?''
என்றேன் நான்.

''முற்றிலும் உணர்கின்றது. முக்கியமாக, இவ்விழிப்பைக்
காங்கிரஸ் இயக்கத்தில் உலகம் உணர்கின்றது; சமுதாயச் சீர்
திருத்தத் துறையிலும் அது காண்கின்றது. அமைதியாய்க் கண்
ணுக்குப் புலனுகாமல் செயலாற்றி வந்தாலும், சமயத் துறையிலும்
உண்மையான விழிப்பு இருக்கத்தான் இருக்கிறது,'' என்ருர்
சுவாமிஜி.

''மேலை நாடும் கீழை நாடும் ஒன்றுக்கொன்று மாருன இலட்சி
யங்களை உடையன. ஒன்று, சமுதாயத்தைப் பழுத்த நிலைக்குக்
கொண்டுவர முயல்கின்றது. இத்தகைய அலுவல்களில் நாங்கள்
ஆர்வத்துடன் எங்கள் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கும்
பொழுது, கீழை நாட்டவர்களான நீங்கள், உலகத்திற்குப் புறம்
பான சிந்தனைகளில் ஆழ்ந்திருக்கின்றீர்கள். சூடானில் உள்ள

இந்திய நாட்டுப் படையின் ஊதியத்தைப் பற்றிப் பாராளுமன்றம் விவாதம் செய்துகொண்டிருக்கின்றது. அரசாங்கத்தின் நியாய மற்ற தீர்ப்பை எதிர்த்துப் பிற்போக்கான பத்திரிகைக் கூட்டத்தின் போற்றுதலுக்குரிய ஒரு சாரார் கூச்சலிட்டனர். இந்தியாவிலும் இந்தக் காரியம் கவனம் செலுத்தத் தக்கதன்று என்று நீங்கள் கருதுகின்றீர்களா?'' என்றேன் நான்.

பிற்போக்கான பத்திரிகைகளிலிருந்து மேற்கோளாகக் காட்டப் பட்ட பத்திரிகளேயுடைய பத்திரிகையை வாங்கிப் பார்வையிட்ட படியே சுவாமிஜி, ''நீங்கள் கூறுவது முற்றிலும் தவறு. இந்தப் பொருள் சம்பந்தப்பட்ட வரையில் இயற்கையாயுள்ள என் பரிவெல் லாம் என் நாட்டைத்தான் சார்ந்து நிற்கும். வடமொழியிலுள்ள ஒரு முதுமொழி என் நினைவிற்கு வருகிறது: இது யானை விற்ற பிறகு அங்குசத்திற்குப் போராடுகிற கதையாயிருக்கிறது. இந்தியா எப்பொழுதுந்தான் கொடுத்துக்கொண்டேயிருக்கிறதே! அரசியல் வாதிகளுடைய சண்டைகளும் சச்சரவுகளும் மிகவும் விசித்திரமா யிருக்கின்றன! அரசியலிற் சமய நெறியைப் புகுத்துவதற்குப் பற் பல ஊழிகளாகிவிடும்,'' என்றார் சுவாமிஜி.

''எப்படியிருந்தாலும் விரைவில் முயலத்தானே வேண்டும்?'' என்றேன் நான்.

''எல்லாவற்றிற்கும் இதயமாய்த் திகழும் இந்த மாபெரு லண் டன் நகரில் ஒரு நல்ல கருத்தை வேரூன்றச் செய்வது ஒருவர்க்கு அழகாகும். புவியில் இயங்கும் இயந்திரங்களுள் இந்த அரசியல் இயந்திரம் மிகச் சிறந்ததே. இது செயலாற்றுவதை நான் அடிக் கடி கவனிக்கிறேன். தன் சத்தியாலும் பழுத்த அமைப்பாலும், மிக நுண்ணிய நிலையையும் இது நண்ணுகிறது. இதன் ஓட்டத்தி லும் இது பகிர்ந்து தருகின்ற இயல்பிலும் காணக்கூடிய ஓர் அமைப்பு நமது வியப்பைத் தூண்டும். எவ்வளவு பெரிய சாம்ராச் சியம் இது! எவ்வளவு மாபெருஞ்செயல் இதன் செயல்! இவற்றை நாம் உணரும்படி இது உதவுகிறது. இவற்றோடு கருத்தையும் இது பரவச் செய்கின்றது. இயந்திரமாகிய இதயத்தில் நாம் சில கருத்துக்களைத் தூவுவது நல்லது. இவை மிகவும் சேய்மையிலுள்ள எந்தப் பகுதிக்கும் பரவக்கூடும்,'' என்றார் சுவாமிஜி.

சுவாமிஜி ஒரு தனித் தோற்றம் உடையவர்: உயரமும் பரும னும் பெற்றவர். அவர் அணிந்த கீழை நாட்டு உடையால், அவ ரது சிறந்த சாயல் பொலிவுற்றுத் திகழ்ந்தது. அவரது தனிப் படி வம் (Personality) நமது உள்ளத்தைக் கவரும். பிறவியால் அவர் ஒரு வங்காளி; கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. பட்டம் பெற்றவர்; மிகுந்த சொற்செல்வம் உடையவர். சொல்லுக்குச் சற்றுந் தயங்காமலும், யாதொரு குறிப்பும் இல்லாமலும் ஒன்றரை மணி நேரம் வரையில் அவரால் பேச இயலும்.

(5)

இங்கிலாந்திற்கு இந்திய நாட்டுச் சமயத் தொண்டர் பணி

[இது இலண்டனிலுள்ள 'எக்கோ' என்னும் பத்திரிகையில், 1896-ஆம் ஆண்டு வெளிவந்தது.]

தம் நாட்டில் சுவாமிஜி ஒரு மரத்தடியிலோ, ஒரு கோயிலின் சுற்றுப்புறத்திலோ உறைவார் என்று நான் கருதுவதுண்டு. அவர் மழித்த தலையுடன் தோன்றுவார்; தம் நாட்டிற்குரிய உடையிலே திகழ்வார் என்றெல்லாம் நான் அனுமானிப்பேன். இலண்டன் மாநகரில் அவ்வண்ணம் ஒன்றும் நிகழவில்லை. மற்றவர்களைப் போலவே அவர் ஓரிடத்தில் உறைந்தனர்; நீண்ட காவி உடையைத் தவிர, மற்றவர்களைப் போலவேதான் காட்சியளித்தார்.

''இலண்டன் மாநகரில் தெருச் சுற்றும் சோம்பேறிகள் நான் தலைப்பாகையோடு செல்லும் கோலத்தை விரும்பவில்லை போலும்!'' என்று சுவாமிஜி புன்முறுவல் பூத்துப் புகன்றார்; ''அவர்கள் என்னைப் பற்றிப் புரிந்த குறிப்புகள் மீண்டும் உரைக்கத் தக்கவை அல்ல'', என்று மொழிந்தார்.

அந்த இந்து யோகியாரைத் தம் பெயரை மெதுவாக உச்சரிக்கும்படி நான் முதன்முதல் வேண்டிக்கொண்டேன்; ''இக்காலத்தில் சாரமற்றதை மக்கள் அழுத்திப் பேசுவதாக நீங்கள் நினைக்கின்றீர்களா ?'' என்று நான் கேட்டேன்.

''நாகரிகமற்ற நாடுகளிலுஞ் சரி, நாகரிகமுள்ள மக்களுள் உள்ளம் சற்றுப் பண்படாத பகுதியினருள்ளும் சரி, இப்படித்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். படித்தவர்களிடத்திலும் செல்வர்களிடத்திலும் விஷயங்கள் வேறு விதத்திற் காட்சியளிக்கக் கூடும் என்னும் எண்ணத்தினால் உமது கேள்வி பிறந்திருக்கக் கூடும். ஆம்; உண்மையே. செல்வர்கள் செல்வமளிக்கும் இன்ப நுகர்ச்சியில் ஆழ்ந்து வருகின்றார்கள்; அதை வளர்க்கும் பேராசை பிடித்துத் திரிகின்றார்கள். அவர்களும் சற்றும் அமைதியின்றித் திரியும் மக்களும் சமயத்தை வீண் பிதற்றலென்றும், அழுகிப் போன குப்பை கூளமென்றும் ஒதுக்கித் தள்ளிவிடுகின்றார்கள். இதில் ஒளி மறைவு இல்லை. அவர்கள் உண்மையிலேயே அப்படிக் கருதுகின்றார்கள். சமயமாக இப்பொழுது உலவுகின்றவை நாட்டுப் பற்றும், ஊர் வாய்க்கு அஞ்சி நடிக்கின்ற செயலுமே. மணம் புரிவதற்காகவோ, அல்லது ஒருவரைப் புதைப்பதற்காகவோ மக்கள் மாதா கோவிலுக்குச் செல்கின்றார்கள்,'' என்றார் சுவாமிஜி.

''உங்கள் உபதேசம் மக்களை அடிக்கடி கோயிலுக்குப் போகும்படி ஊக்குமோ ?'' என்றேன் நான்.

''அப்படி ஒன்றும் நான் நினைக்கவில்லை. சடங்குகளிலும் பிடிவாதமான மூடக் கொள்கையிலும் எனக்கு யாதொரு தொடர்பும் இல்லை. சமயமே எல்லாமாய்த் திகழ்கின்றது என்பதைக் காட்டுவதே என் பணியாகும். சமயம் எல்லாவற்றிலும் உறைந்து நிற்கின்றது. இங்கிலாந்திலுள்ள சமய அமைப்பைப் பற்றி என்ன இயம்புவது! சமவுடைமை அரசியலோ, அல்லது ஏதோ ஒரு குடியரசோ—எந்தப் பெயரையாவது இட்டு வழங்குங்கள்—ஏதோ ஒன்று நடமாடும் என்பதை ஒவ்வொன்றும் சுட்டுகின்றது. இம்மைத் தேவைகளைப் பெற்று இன்புறுதல், குறைந்த நேர வேலை ஏற்பாடு, நலிதலின்மை, போரின்மை ஆகிய இவற்றையே மக்கள் விரும்புகிறார்கள். மனித நன்மைமீதும் சமய நெறியின்மீதும் நிறுவப்படாத இந்த நாகரிகம் என்ன நாகரிகம்! வேறு எந்த நாடுகளிலேதான் இது நீடித்திருக்கக் கூடும்? சமயந்தான் எந்தப் பொருளையும் மூலத்தின் வரையிற் சென்று ஆராய்கின்றது. சமய நெறி தக்கவாறு அமையுமாயின், எல்லாம் ஒழுங்காகக் காட்சியளிக்கும்,'' என்றார் சுவாமிஜி.

''சமயத்தின் சாரமான தத்துவப் பகுதியை மக்களின் மனத்தில் நுழைப்பது கடினமாயிற்றே! அவர்களுடைய வாழ்க்கையின் நடத்தைக்கும் எண்ணங்களுக்கும் வெகுதொலையில் அல்லவா அது திகழ்கின்றது?'' என்றேன் நான்.

''எல்லாச் சமயங்களிலும் சின்னஞ்சிறு உண்மையிலிருந்து நாம் பேருண்மைக்குப் போகின்றோம்; பிழையிலிருந்து உண்மைக்குப் போகவில்லை. எல்லாப் படைப்புகளுக்கும் ஒரே தத்துவந்தான் அடிப்படையாய் உள்ளது. 'உள்ளது ஒன்றே; ஞானிகள் விள்ளுவன பலவாகும்'. சிறிய உண்மையிலிருந்து பேருண்மைக்கு ஒருவன் முன்னேறுகின்றான் என்பதைத்தான் நான் குறிப்பிடுகின்றேன். மிக இழிவாகக் கருதக்கூடிய சமயங்களும் பேருண்மையின் கெடுதலான திரிபேயாகும். அவன் சிறிது சிறிதாக உணர்கின்றான். பேய் வழிபாடும் என்றும் மாறாத நித்தியப் பொருளின் விகாரமான வழிபாடே தவிர, வேறன்று. மற்றச் சமயத் தோற்றங்களிலும் அந்தப் பேருண்மையின் சாயை, மிகுதியாகவோ குறைவாகவோ படியும். எந்தச் சமய அமைப்பிலும் உண்மையின் முழுத் தோற்றத்தையும் பார்க்க இயலாது,'' என்றார் சுவாமிஜி.

''நீங்கள் இங்கிலாந்துக்கு வந்து பரப்பக் கருதிய சமயம் உங்களால் புதிதாய் அமைக்கப்பட்டதா?'' என்றேன் நான்.

''உண்மையில் இல்லை. இந்தியாவில் தோன்றிய மிகப் பெரியவரான ஒரு ஞானியாரின் சீடன் நான். அவர் நாம் கற்றவர் என்று கூறக்கூடியவரின் கூட்டத்தைச் சார்ந்தவரல்லர். எங்களிடையேயும் கல்வியிற் சிறந்த ஞானிகளுண்டு. ஆனால், அவரோ, மிக்க தூய்மை வாய்ந்த ஒரு பத்தர்; வேதாந்தத் தத்துவத்தின்

சாரத்தில் தோய்ந்து, அதைப் பருகியவர். வேதாந்தம் என்று நான் இயம்பும் பொழுது அதை ஏன் நாம் சமயமென்று கருதக் கூடாதென்று நினைப்பேன். உண்மையைக் கூறுமிடத்து அவ்விரண்டும் ஒன்றே. அண்மையில் வெளியான **'பத்தொன்பதாம் நூற்றாண்டு'** (Nineteenth Century) என்ற பத்திரிகையின் இதழ் ஒன்றில் பேராசிரியரான **மாக்ஸ்முல்லர்** என்பவர், என் குருநாதரைப்பற்றி எழுதியிருக்கிறார். அவர் 1836-ஆம் ஆண்டு, ஹூகிளி மாகாணத்தில் அவதரித்து, 1886-ஆம் ஆண்டு மறைந்தார். **கேசப் சந்திரஸென்** முதலியோர்களின் வாழ்க்கையில் அவர் மாபெரு மாறுதலை உண்டாக்கினார்; உடலையும் உள்ளத்தையும் அடக்குவதால் ஆன்மிகவுலகத்தின் மிகவும் அற்புதத் தெய்வக் காட்சியை உணர்ந்தார். குழந்தையைப் போன்ற மென்மையும், ஆழ்ந்த பணிவும், சிறப்பு வாய்ந்த இன்சொல்லும் அவர் திருமுகத்தில் தாண்டவமாடின. அத்திருமுகத்தைக் கண்டு உருகாதார் ஒருவரும் இலர்,'' என்றார் சுவாமிஜி.

''உங்கள் உபதேசம் வேதங்களிலிருந்து திரட்டப்பட்டதோ?'' என்றேன் நான்.

''ஆம்; வேதாந்தம் என்பது வேதங்களின் முடிவே. இது, உபநிஷத்துகள் என்று கூறப்படுகின்ற மூன்றாம் பகுதியாகும். இதில் பழுத்து விளங்கும் கருத்துகள் அடங்கியிருக்கின்றன. முன் பகுதியில் இதன் தளிர்களைப் பார்க்கின்றோம். வேதங்களின் மிகப் பழைய பகுதியை **'சங்கிதை'** என்று சாற்றுவர். இது வழக்கிறந்த வடமொழியிலிருக்கிறது. மிகவும் தொன்மை வாய்ந்த எக்ஞநிருத்தம் மூலந்தான் இதன் பொருளை அறிய இயலும்,'' என்றார் சுவாமிஜி.

''நாங்கள் எங்களிடமிருந்து இந்தியா மிகுதியாகக் கற்றுக் கொள்ளவேண்டியிருக்கும் என்னும் கருத்துள்ளவர்களாய் இருந்தோமே! அது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்! இந்தியாவிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய விஷயத்தைப் பற்றிச் சாதாரண மனிதனுக்கு ஒன்றுமே தெரியாதென்றே கூறிவிடலாம்,'' என்றேன் நான்.

''அப்படித்தான் இருக்கும். இந்தியாவிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டிய விஷயம் நிரம்ப உண்டென்பதும், அதன் படிப்பினை எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்பதும் கற்றோர் உலகம் நன்கு அறிந்தவைகளே. மாக்ஸ்முல்லர், மோனியர் வில்லியம்ஸ், சர் வில்லியம் ஹண்டர், கீழை நாட்டுக் கலை வல்லுநர்களான ஜெர்மானியர்கள் ஆகிய இவர்கள் இந்து வேதாந்த சாத்திரத்தைப் புறக்கணிப்பதை நீங்கள் காணமாட்டீர்கள்,'' என்றார் சுவாமிஜி.

விக்டோரியா தெருவில் 39-ஆம் எண்ணுள்ள மாளிகையில் சுவாமிஜி சொற்பொழிவு ஆற்றுகிறார். அதற்கு அனைவரும் தயக்க

மின்றிப் போகலாம். பண்டைக் கிறித்தவ போதகர்கள் காலத்தில் இருந்தது போன்று, இந்தப் புதிய போதனைக்கு விலையுமில்லை. இந்த இந்திய சமயத் தொண்டர் மிக்க சிறப்பு வாய்ந்த உடலமைப்பைப் பெற்றவர். இவருடைய ஆங்கில மொழி ஆட்சியைச் சித்தரிப்ப தென்றால், அது மாசு மறுவற்றது என்றுதான் இயம்பவேண்டும்.

[ஸி.எஸ்.பி.]

(6)

சுவாமி விவேகானந்தரோடு மதுரையில்

[இது 1897-ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், சென்னை 'இந்து' பத்திரிகையில் வெளி வந்தது.]

வினா: 'இந்தப் பிரபஞ்சம் பொய்,' என்னும் வாதத்தைப் பின் வரும் வகைகளால் அறிந்துகொள்ள இயலும்: (1) காலங் கடந்த அகண்டத்தைக் கருதுங்கால் அழிந்துபோகின்ற நாம நியமங்களின் காலப் பரிணமம் ஒன்றுமே இல்லையென்று இயம்பலாம். (2) இரண்டு ஊழிகளுக்கிடையே—அதாவது, பிரபஞ்சம் தோன்றி மறைவதற்கிடையே—காணப்படும் கால அளவை, அநாதியாயுள்ள அகண்டத்தோடு ஒப்பிடுங்கால், அது ஒன்றுமே இல்லை என்பதை உணரக்கூடும். (3) நம் அறிவின் ஒரு கோணத்தில் இப்பொழுது நின்று தோற்றத்திற்கு உண்மை போலக் காட்சியளித்தாலும், இறுதியில் 'இப்பிரபஞ்சம் பொய்,' என்பது முடிவாகும். இப்பியில் வெள்ளியைக் காண்பது போலவும், பழுதையில் பாம்பைக் காண் பது போலவும் மனத்தின் ஒரு நிலையில் இவை யாவும் காட்சியளிக் கும். ஆனால், இவை கற்பிதமே. (4) மலடி வயிற்று மகன் போல, முயற்கொம்பு போல இவை யாவும் கற்பிதமே.

அத்துவித வேதாந்தத்தில் எழுகின்ற மாயா வாதத்திற்கு மேலே கூறப்பட்டவைகளுள் எந்த முறையில் நாம் பொருள் கொள்ளலாம்?

விடை: அத்துவிதக் கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் பல நெறிகளைச் சார்ந்தவர்களாய் இருக்கின்றார்கள். ஒவ்வொரு வரும் ஒவ்வொரு விதமாக விண்டு பொருள் கொள்ளுகின்றனர். மூன்றாவதாகச் சுட்டப்பட்டதைத்தான் சங்கரர் தாம் கண்ட வாத மாகக் கருதுகின்றனர். இந்த அறிவு நிலையில் பொதுவாகப் பிர பஞ்சம் உண்மை போலப் படும்; ஆனால், அறிவு முதிர முதிர, ஓங்க ஓங்க, இவ்வடிவம் மறைந்து போய்விடும். அடி மரம் உன் முன் நிற்கக் காண்கின்றாய். அது ஒரு பேயே என்னும் மயக்கம் உனக்கு உண்டாகின்றது. பேய் என்ற கருத்து அப்பொழுது ஓர் உண்மையான கருத்துதான். ஏனெனில், பேயைப் பார்த்தால்

எந்த உணர்ச்சி ஏற்படுகின்றதோ, அதே உணர்ச்சியைத்தான் உன் மனம் கொள்ளுகின்றது. அது மரத்தின் அடிக்கட்டை என்னும் ஞானம் உதயமாகின்றபோது பேய் என்ற எண்ணமும் போய்விடும். அடி மரம் என்ற கருத்தும் பேய் என்ற கருத்தும் சேர்ந்து இரா. ஒன்று ஆட்சி புரியுங்கால், மற்றென்றிற்கு அங்கு இடமில்லை.

வினா: நான்காவதாகச் சுட்டப்பட்டது சங்கரரின் சில நூல்களில் இடம் பெறவில்லையா ?

விடை: இல்லை. இது வேறு சிலர் புரிந்த செயலாகும். சங்கரரது கொள்கையைத் தக்கவாறு அறிந்து கொள்ளாமல், அதை அவர் நெடுந்தூரம் கொண்டுபோய் விட்டனர். நான்காவதாகக் குறிப்பிட்டது இத்தகையோருடைய வகையாகும். முதல் இரண்டால் சுட்டப்பட்டவை, அத்துவித வேதாந்தத்தைப் பின் பற்றுகிற சிலருடைய விளக்கங்களாகும்.

வினா: பிரபஞ்சம் இப்படி உண்மைபோலத் தோன்றுவதற்குக் காரணமென்ன ?

விடை: நீங்கள் அடி மரத்தைப் பேயென மயங்கினதற்குக் காரணம் யாதோ ? பிரபஞ்சம் எப்பொழுதும் ஒன்றுய்த்தான் திகழ்கின்றது; ஆனுல், உங்களுடைய மனமோ, பற்பல விசித்திரமான நிலைகளை அதன்பால் எழுப்பிவிடுகின்றது.

வினா: 'வேதங்கள் தொடக்கமற்றவை; இறவாதவை,' என்றெல்லாம் சொல்லப்படுகின்றனவே ! அதன் உண்மை யாது ? அது வேத மந்திரங்களைக் குறிக்கின்றதா ? அல்லது அவற்றில் அடங்கியிருக்கும் உண்மைகளைச் சுட்டுகின்றதா ? அவற்றிலுள்ள உண்மையைக் குறிக்கும் நிலையில் தருக்கம், இடக்கணிதம், இரசாயனம் இவற்றில் உள்ள உண்மைகளையும் அவ்வண்ணமே கருத இடமுண்டன்றோ ? அவைகளும் தொடக்கமற்றவை; இறவாதவை. அவற்றிலும் எந்நாளும் நிலையாயுள்ள உண்மைகள் காணப்படுகின்றனவே !

விடை: வேதங்களில் உள்ள தெய்வ உண்மைகள் எப்படி எப்பொழுதும் மாருதவையாய், அழிவற்றவையாய்க் காட்சியளிக்கின்றனவோ, அப்படியே வேதங்களும் அழிவற்றவை என்று கருதின காலமும் உண்டு. பிறகு, வேத மந்திரத்தைப் பொருள் விளங்கக் கூறுவதே சிறந்ததெனக் கருதப்பட்டது. மந்திரங்களைத் தெய்வப் பிறவிகள் என்று போற்றினர்கள். இன்னுஞ் சற்றுப் பிற்காலத்தில் சில மந்திரங்களின் பொருளைத் துருவி ஆராயுமிடத்து அவற்றிற்குத் தெய்வ மூலம் இருக்க முடியாதென்பது தோன்றிற்று. விலங்குகளை வதைத்தல் போன்ற தூய்மையற்ற தீச்செயல்களை அவை மக்கட்கு உபதேசம் செய்கின்றன. மேலும், எள்ளி நகையாடக்கூடிய கதைகளையும் நாம் வேதங்களிற் காண்கின்றேம். 'வேதங்கள்

'தொடக்கமற்றவை; அழிவற்றவை,' என்று கூறுவதன் கருத்து இது தான். மனிதனுக்கு அதைத் தெரிவிக்கிற நியதியோ, அல்லது உண்மையோ, எப்பொழுதும் உள்ளது; என்றும் மாறாதது. தருக்கம், இடக்கணிதம், இரசாயனம்—இவை யாவும் ஒரு முறையில் வேதங்களைப் போலவே தொடக்கம் அற்றவை; அழிவற்றவை. வேதங்களிற் காணப்படாத உண்மையோ, நியதியோ இல்லை. அவற்றில் ஆராய்ச்சி செய்யப்படாத ஏதாவது ஒன்றைக் காட்டும் படி நான் உங்களைக் கேட்கின்றேன்.

வினா: அத்துவித முறைப்படி 'முத்தி' என்பது என்ன? வேறு விதமாகக் கூறுமிடத்து அது உணர்வுள்ள நிலைதானா? அத்துவிதம் கண்ட முத்திக்கும் புத்த நிருவாணத்திற்கும் உள்ள வேறுபாடு யாது?

விடை: முத்தியில் உணர்வு நிலையுண்டு. அதனை 'அதீத உணர்வு நிலை' என்கிறோம். இப்போதுள்ள உமது உணர்வு நிலையிலிருந்து அது வேறுபட்டது. முத்தியில் உணர்வில்லை என்பது தருக்க அறிவுக்கு முரண்பட்டதாகும். ஒளியைப் போன்றே உணர்வும், மந்தம், நடுத்தரம், தீவிரம் என மூவகைப்படும். சலனம் மிகமிக விரைவாயிருக்கும் பொழுது அதன் ஒளி நம் கண்கள் கூசும்படியான ஒளியாய்த் திகழும். மங்கின் வெளிச்சம் எப்படிப் பயனற்றதோ, அப்படியே மிகச் செறிந்த கதிரொளியும் பயனற்றதாய்ப் போய்விடும். பௌத்தர்கள் எப்படி வாதித்தாலும் அவர்கள் கண்ட நிருவாணத்திலும் மூன்று வகையான உணர்வு நிலைகள் திகழாமலில்லை. உடன்பாட்டு முறையிலே நாம் முத்திக்கு இலக்கணம் வகுக்கின்றோம்; அவர்கள் எதிர்மறை முறையிலே அதற்கு இலக்கணம் கூறுகின்றார்கள்.

வினா: உருவமற்ற அகண்டமாயுள்ள பிரம்மம் உலகப் படைப்பாகத் தோன்றும்பொருட்டு ஒரு வடிவை எடுப்பானேன்?

விடை: தருக்க முறையிற் கருதுமிடத்து இந்தக் கேள்வி மிக மிக முரணான கேள்வியாகும். பிரம்மமோ, வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதது. தேசம், காலம், காரண காரிய முறை—இவற்றின் ஆட்சிக்கு அப்பாலுள்ள ஒன்றை மனித மனம் கருதவும் இயலாது. தேசம், காலம், காரண காரியம்—இம்மூன்று வட்டங்களிலேதான் தருக்கத்திற்கும் ஆராய்ச்சிக்கும் இடம் உண்டு. இந்நிலையில் சிந்தையின் செயல்களுக்கு அப்பால் உள்ள ஒன்றைப் பற்றி வினவி ஆராய்வது பயனற்ற முயற்சியாய்ப் போய்விடும்.

வினா: கரந்துள்ள கருத்துகளைப் புராணங்களிற் புகுத்துகிற முயற்சிகளை இங்குமங்கும் பார்க்கிறோம். இவை உவமை வாயிலாக விளக்கப்பட்டிருக்கின்றன. புராணங்களில் வரலாற்று உண்மை இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பது கூறப்படுகின்றது. கற்பனைப் பாத்திரங்கள் மூலம் உயர்ந்த இலட்சியங்கள் உருப்பெற்றி

ருக்கலாம் அல்லவா? உதாரணமாக, விஷ்ணு புராணம், இராமா
யணம், பாரதம் இவற்றை நோக்குவோம். இவற்றில் வரலாற்று
உண்மை நிலவுகின்றதா, இவை தத்துவங்கள் உவமைக் கதைகள்
வாயிலாக விளக்கப்பட்டனவா? மக்கள் ஒழுங்காக நடப்பதன்
பொருட்டு அமைக்கப்பட்ட உயர்ந்த இலட்சியங்களின் உருவங்
களா, அல்லது **ஹோமர்** என்பவர் சோதித்தது போல வெறும்
பெருங்காப்பியங்களா?

விடை: ஏதோ ஒரு வரலாற்றின் உண்மையே புராணத்தின்
கருவாகும். உயர்ந்த கருத்துகளைப் பல வடிவங்களில் மக்களுக்
குக் கற்பிப்பதே புராணங்களின் நோக்கமாகும். வரலாற்று
உண்மை அவற்றில் இல்லாமற் போனாலும் அவை உயர்ந்த தத்து
வங்களைக் கற்பிப்பதால் அவற்றைப் பிரமாண நூல்களாகக் கருது
கிறோம். உதாரணமாக, இராமாயணத்தைப் பார்ப்போம். நமது
ஒழுக்கத்தை அமைக்கிற முறையில் ஆராய்வோம். இந்நிலையில்
இராமனைப் போன்ற ஒருவன் வாழ்ந்திருக்க வேண்டிய அவசிய
மில்லை. இராமாயணமும் பாரதமும் கண்ட நியதியின் வான்
சிறப்பு இராமனையும் கிருஷ்ணனையும் போன்ற சான்றோனைச்
சார்ந்து நிற்கவேண்டுவதில்லை. இத்தகைய பெரியோர்கள் இல்லை
என்றே சாதிக்கக்கூடும். ஆனால், அவை உயர்ந்த கருத்துக்களை
மனித இனத்தின் முன் நிறுத்துவதால், அவற்றைச் சிறந்த பிரமா
ணங்களாகக் கருதக்கூடும். எங்களுடைய தத்துவமோ தன் உண்
மையை நிலை நாட்டுதற்பொருட்டு எந்தச் சான்றோனையும் பற்றி
நிற்க வேண்டுவதில்லை. கிருஷ்ணன், உலகத்திற்குப் புதியதாய்
ஒன்றைப் படைத்துப் போதித்துவிடவில்லை; வேதங்களில் இல்லாத
ஒன்றைத் தான் கண்டதாக இராமாயணம் கூற முன் வரவில்லை.
இயேசுநாதரில்லாமல் கிறித்துவ சமயமும், மகமதுநபி இல்லாமல்
முகமதிய மதமும் புத்த பிரான் இல்லாமல் பௌத்தமும் நிலையா
என்ற உண்மையை இங்குக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. இந்து
மதமோ, எந்த மனிதனையும் சாராது தனித்து நிற்கும். எந்தப்
புராணமானாலும் சரி, அதில் உள்ள தத்துவத்தின் இயல்பைக்கருது
தற்பொருட்டு, அதிற் சித்தரிக்கப்பட்ட பாத்திரங்கள் உண்மை
யான பாத்திரங்களா அல்லது கற்பனைப் பாத்திரங்களா என்பதைப்
பற்றி ஆராய வேண்டுவதில்லை. மனித இனத்திற்குப் போதிப்பதே
புராணங்களின் குறிக்கோளாகும். இவற்றை அமைத்த ஞானிகள்
சில வரலாற்றுப் பாத்திரங்களைக் கண்டுபிடிப்பதற்கான உபாயங்
களையும் நாடியிருக்கின்றார்கள். தம் விருப்பத்திற் கேற்றவாறு
உயர்ந்த நற்குணங்களையோ, அல்லது தாழ்ந்த கெட்ட குணங்
களையோ அவற்றின்மீது சுமத்தியிருக்கிறார்கள். மனித இனம்
தக்கவாறு நடந்துகொள்ளுதற்பொருட்டு ஒழுக்க விதிகளையும்
விதித்தார்கள். இராமாயணத்திற்குறிப்பிட்டபடி உண்மையிலேயே

பத்துத் தலைகளையுடைய அரக்கன் வாழ்ந்திருக்க வேண்டுமென்பது அவசியமா? தசமுகன் ஓர் உண்மைப் பாத்திரமோ, அல்லது கற்பனைப் பாத்திரமோ என்னும் இவ்வினவைச் சற்றுத் தள்ளி வைத்துவிட்டு, நாம் படித்துத் தெரிந்துகொள்ளுதற்குரிய ஏதோ ஓர் உண்மைக்கு உருக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றே கருதவேண்டும். இன்றுங்கூடச் சற்று உள்ளம் கவர்கிற கவினுடன் கிருஷ்ணனைச் சித்தரிக்க இயலும். அந்தச் சித்திரங்கூட நீங்கள் கொண்ட குறிக்கோளின் உயர்வைச் சார்ந்தே நிற்கும். புராணத்தில் அடங்கியிருக்கிற பெருஞ்சிறப்பு வாய்ந்த தத்துவம் நம்முன் நிற்கிறது.

வினா: தன் முன் பிறப்புகளின் நிகழ்ச்சிகளை மிக்க திறமை வாய்ந்த ஒருவன் நினைவிற்குக் கொண்டுவர முடியுமா? முன் பிறப்பில் தனக்குக் கிடைத்த உடல் சம்பந்தமான மூளை—தன் அனுபவங்களின் பதிவுகளால் நிரப்பப்பட்ட மூளை—இப்பொழுது இல்லையே! இப்பிறப்பில் வேறொரு புதிய உடல் சம்பந்தமான மூளையை அன்றோ அவன் பெற்றிருக்கிறான்? இப்பொழுது இல்லாத ஒரு கருவியால் முன்பு அடையப்பட்டிருக்கிற பதிவுகளை இப்பொழுதுள்ள மூளை அடைய இயலுமோ?

சுவாமிஜி: 'மிக்க திறமை வாய்ந்தவன்' என்று சொல்லுகிறீர்களே, அதன் பொருள் யாதோ?

நிருபர்: கரந்துள்ள தனக்கு இயல்பான சத்திகளை விரியச் செய்கிறவனே மிக்க திறமை வாய்ந்தவன்.

சுவா: கரந்துள்ள சத்திகள் எப்படி விரிவடையும் என்பது எனக்கு விளங்கவில்லை. நீங்கள் கருதுகிறதை நான் அறிகிறேன். வழங்கப்படும் சொற்றொடர்கள் ஏற்றவையாய், சரியானவையாய் அமைதல் வேண்டும். 'கரந்து நின்ற சத்திகள் வெளிப்பட்டன,' என்று கூறலாம். கரந்து நின்ற தங்களுடைய இயல்பிற்குரிய சத்திகளைப் புலப்படுத்தக் கூடியவர்களுக்குத் தங்களுடைய முற்பிறவிச் சம்பவங்களை நினைவிற்குக் கொண்டுவர இயலும். ஏனெனில், இப்பொழுது அமைக்கப்பட்ட மூளை, இறந்த பின்னும் இருக்கக்கூடிய நுண்ணிய உடலின் (சூக்கும சரீரத்தின்) விதையைப் பெற்றிருக்கிறது.

வினா: அன்னியரைத் தன் மதத்திற் சேர்ப்பதற்கு இந்து மதத்தின் இயல்பு இடம் கொடுக்கிறதா? தத்துவத்திற்கு விளக்கம் தருகின்ற ஒரு சண்டாளனுக்கு ஓர் அந்தணன் செவி சாய்க்கலாமா?

விடை: பிற சமயத்தோரது மதத்தை ஏற்றுக்கொள்ளுவதற்குரிய முயற்சிக்கு இந்து மதம் இடந் தருகின்றது. ஒரு சூத்திரனாயினும் சரி, அல்லது ஒரு சண்டாளனாயினும் சரி, ஓர் அந்தணனுக்குத் தத்துவ விளக்கம் அளிக்கலாம். எந்தச் சாதியைச் சேர்ந்தாலென்ன, எந்தக் கொள்கையை உடையவனாயிருந்தாலென்ன?

மிகத் தாழ்ந்த ஒருவனிடமிருந்து உண்மையை அறிந்துகொள்ள லாம்.

இதை ஆதாரம் காட்டி விளக்குவதற்காகச் சுவாமிஜி மிகவும் பிரமாணம் வாய்ந்த வடமொழித் தொடர்களை மேற்கோளாகக் காட்டினார்.

நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பச் சுவாமிஜி வழக்கறிஞர் நிலையத் திற்கு விசயஞ்செய்யவேண்டிய காலம் நெருங்கிவிட்டபடியால், பேச்சும் முடிந்தது. சுவாமிஜி அங்கிருந்த பெரியோர்களிடமிருந்து விடை பெற்று வழக்கறிஞர் விடுதிக்குச் சென்றார்.

(7)

வெளி நாடும் உள் நாட்டுப் பிரச்சினைகளும்

[இது 1897-ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், சென்னை 'இந்து' பத்திரிகையில் வெளியானது.]

செங்கற்பட்டு இருப்புப்பாதை நிலையத்தில் எங்கள் நிருபர் சுவாமி விவேகானந்தரைப் புகை வண்டியிற் சந்தித்து அவ ரைத் தொடர்ந்தே சென்னைக்குப் பிரயாணமானார். பின் வருவது அச்சந்திப்பின் விவரமாகும்.

''சுவாமிஜி, உங்களை அமெரிக்காவிற்குச் செல்லத் தூண்டியது எது?''

''இது கடினமான கேள்விதான். இதற்குச் சுருக்கமாக விடை யளிப்பது இயலாது; அரை குறையாகத்தான் விடையளிக்க இய லும். நான் இந்திய நாடு முழுவதும் சுற்றித் திரிந்தேன்; அதனால், அயல் நாடுகளுக்கும் செல்ல விழைந்தேன்; பழைய கீழ்த்திசை வழியாக அமெரிக்க நாட்டிற்குச் சென்றேன்.''

''ஜப்பான் நாட்டில் என்ன கண்டீர்கள்? அதன் முன் னேற்றச் சுவடுகளை நம் இந்திய நாடு பின்பற்ற வாய்ப்புண்டோ?''

''இல்லை. முப்பது கோடி மக்களும் சேர்ந்து ஒரு தேசமாய் உருவாகிற வரையில் இது நடவாத செயல். ஜப்பானியர்களைப் போல நாட்டுப் பற்று உள்ளவர்களும் கலைப்பண்பு உள்ளவர்களு மான மக்கள் இனத்தை உலகம் கண்டதில்லை. ஜப்பானியர்களைப் பற்றித் தனிப்பட்ட ஓர் அமிசத்தைக் குறிப்பிடலாம். ஐரோப்பா விலும் சரி, வேறெங்கேயும் சரி, அழுக்கும் அழகுக் கலையும் ஒன்றையடுத்து ஒன்று இருப்பதைக் காண்கிறோம். ஜப்பானிய ரிடத்திலோ, முருகுக் கலையும் முழுத் துப்புரவும் இணைந்தே உள் ளன. நம்முடைய ஒவ்வோர் இளைஞனும் தன் வாழ்நாளில் ஒரு முறையேனும் சென்று ஜப்பானைப் பார்க்கவேண்டும் என்பதே

எனது ஆவல். அங்கே போவது மிக மிக எளிது. இந்து நாட்டைச் சேர்ந்த ஒவ்வொன்றையும் ஜப்பானியர் சிறப்புடையதெனக் கருதுகின்றனர்; இந்தியா ஒரு புண்ணிய பூமி என்பதை நம்புகின்றனர். இலங்கையில் நீங்கள் காண்கிற புத்த சமயத்திற்கு நேர்மாறாக ஜப்பானிய புத்த சமயம் அமைந்திருக்கிறது. வேதாந்தத் தத்துவத்தைப் போலவே அது திகழ்கின்றது. அது ஜப்பானில், உளதெனக் கூறும் ஆத்திக வாதமாய்த் திகழ்கின்றது; இலங்கையில் இலதெனக் கூறும் நாத்திக வாதமாய்க் காணப்படுகிறது.''

''ஜப்பான் மிகு விரைவில் உயர்ந்த நிலையை அடைந்ததன் மர்மம் யாது?''

''அதற்குக் காரணம், ஜப்பானியர்கள் தங்களிடம் வைத்துள்ள நம்பிக்கையும் நாட்டுப் பற்றுமேயாகும். தங்கள் நாட்டுக்காக எதையும் தியாகம் செய்பவர்களையும், முழுதும் உண்மையுள்ளவர்களையும் நீங்கள் பெறுவீர்களாயின்—இத்தகைய பெரியோர்கள் உங்களிடையே தோன்றுவார்களாயின்—ஒவ்வோர் அமிசத்திலும் இந்தியா சிறப்புற்றோங்கும். மக்களே நாட்டை உருவாக்குகின்றார்கள். வெற்று நாட்டில் என்ன இருக்கிறது? ஜப்பானியரின் சமுதாய ஒழுக்கத்தினையும் அரசியல் ஒழுக்கத்தினையும் நீங்கள் பின்பற்றுவீர்களாயின், அவர்களைப் போல நீங்களும் சிறப்புற்றிருக்கலாம். நாட்டின்பொருட்டு எதையும் தியாகம் செய்ய அவர்கள் ஆயத்தமாய் இருக்கின்றார்கள்; ஆதலால், உயர்ந்த தேசத்தவர்களாய் இருக்கின்றார்கள். நீங்கள் அப்படி இல்லை—உங்களால் இருக்கவும் இயலாது. நீங்கள் உங்கள் குடும்பங்களுக்காகவும், உங்கள் உடைமைகளுக்காகவும் எல்லாவற்றையும் தியாகம் செய்கின்றீர்கள்.''

''ஜப்பானைப் போலவே இந்தியாவும் அமைய வேண்டும் என்பது உங்கள் விருப்பமா?''

''நிச்சயமாக இல்லை. இந்திய நாடு எப்படி இருக்கின்றதோ, அப்படியேதான் தொடர்ந்து இருக்க வேண்டும். ஜப்பானைப் போல—உண்மையைக் கூறுமிடத்து-மற்றைய நாட்டைப் போல எப்படி இந்திய நாடு அமைய முடியும்? ஒவ்வொரு நாட்டிற்கும் இசைக்கு இருப்பது போல ஓர் ஆதாரச் சுருதி உண்டு; முக்கியமான ஒரு நடுப் பொருள் உண்டு; அதைச் சுற்றியே மற்றெல்லாம் இயங்கும். ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு முக்கியமான பொருள் உண்டு; அதைத் தவிர, மற்ற எதுவும் துணையாய் நிற்பதேயாகும். இந்தியாவின் முக்கியப் பொருள் சமயமே. சமுதாயச் சீர்திருத்தமும், இதைப் போன்ற எதுவும், துணைக் கருவியே. ஆதலால், இந்தியா ஜப்பானாக மாற முடியாது. 'உள்ளம் குழைந்து உருகுமானால், கருத்து அருவி பாயும்,' என்பர். இந்தியாவின் இதயமும் குழைந்து கசியுமானால், ஆன்மிக ஞான வெள்ளம் பெருக்கெடுத்தோடும். இந்

தியா இந்தியாவாகத்தான் இருக்கும். அதன் இயல்பு மாருது. இந்தியாவின் வெறுஞ்சூழ்நிலேயும் ஆறுதலே அளிக்கின்றது. இங்கே நான் இடையருது வேலே செய்கின்றேன். வேலேயின் இடையிலும் எனக்கு ஓய்வு கிடைக்கின்றது. ஆன்மிகத் துறையில் எழும் அலுவலிலேதான் நாம் இந்தியாவில் அமைதி பெற முடியும். உங்களுடைய தொழில் உலக சம்பந்தமானதாயிருக்குமாயின், நீங்கள் நீரிழிவு வியாதியால் இறந்துபோய்விடுவீர்கள்.''

''ஜப்பானேப்பற்றி இவ்வளவு போதும். அமெரிக்காவைப் பற்றிய உங்கள் அனுபவம் யாது?''

''தொடக்கத்திலிருந்து இதுவரையில் அது ஒரு நல்ல அனுபவமே. பாதிரிமார்களேயும் மடத்துக் கன்னிப் பெண்களேயும் தவிர, அமெரிக்க நாட்டு மக்கள் மிகவும் விருந்து ஓம்புகின்ருர்கள். அவர்கள் அன்பு நிறைந்த உள்ளமுடையவர்கள்; வள்ளல் தன்மை வாய்ந்தவர்கள்; நல்ல இயல்புள்ளவர்கள்.''

''சுவாமிஜி, மடத்துக் கன்னிப்பெண்கள் என்று சொல்லுகின்றீர்களே அவர்கள் யார்?''

''கணவனேயடையத் தன்னுல் இயன்ற அளவு முயலும் ஒருத்தி, கடற்கரைமீதுள்ள நவ நாகரிகம் வாய்ந்த நிலேயங்களுக்கெல்லாம் போகின்ருள்; ஓர் ஆடவனேத் தன் வலேயில் சிக்கவைக்கக்கூடிய எல்லா விதமான தந்திரங்களேயும் புரிந்து பார்க்கின்ருள். தன் முயற்சிகளில் வெற்றி காணுத அவள், அமெரிக்காவில் வழங்கப்படுவது போல, கிழந்தட்டின கன்னிப்பெண்ணுய்க் காட்சியளிக்கின்ருள்; பின்னர் மடத்திற் சேர்ந்துவிடுகின்ருள். இப்படிச் சேர்ந்த சிலர் மிகுந்த மதப்பற்றுள்ளவராய் விளங்குகின்றனர். இம்மடத்துப் பெண்களேப் போலப் பயங்கரமான சமய வெறி பிடித்தவர்களேக் காண இயலாது. இவர்கள் அங்குள்ள பாதிரிகளின் கைகளிற் சிக்கி ஆடுகின்ருர்கள். இவர்களும் பாதிரிகளும் சேர்ந்து, வையகத்தை ஒரு நரகமாக்குகின்ருர்கள்; சமயத்தைக் குழப்புகின்ருர்கள். இவர்களேத் தவிர, மற்ற அமெரிக்க நாட்டு மக்கள் மிகவும் நல்லவர்களே. அவர்கள் என்னிடம் அன்பு பாராட்டினர்கள். அவர்களே நானும் பெரிதும் நேசிக்கின்றேன். நானும் அவர்களேப் போன்ற ஒருவன் என்பதை உணர்ந்தேன்.''

''பல்சமயப் பெருமன்றத்தைப்பற்றி நீங்கள் கொண்ட கருத்து யாது?''

''புறச்சமயக் கண் காட்சியாக அமைதற்பொருட்டே அந்தப் பல்சமயப் பெருமன்றம் கூட்டப்பட்டது என்று எனக்குத் தோன்றுகின்றது. புறச் சமயத்தவர் கைதான் ஓங்கி நின்றது. ஆனுல், பார்வைக்குக் கிறித்தவ சமயக் காட்சிபோலத் தோன்றச் செய்தனர். கிறித்தவர்களின் கருத்துக் கோணத்திலிருந்து பார்த்தால், இது அவர்களுக்குத் தோல்வியென்றே கூறவேண்டும்.

ஏனெனில், பாரிஸ் நகரில் இதைப்போன்ற மன்றம் ஒன்று கூட்ட வேண்டும் என்ற பேச்சு எழும்பொழுது பல்சமயப் பெருமன்றத் தைக் கூட்டிய ரோமன் கத்தோலிக்கர்களே இதை எதிர்த்துப் பேசு கின்றுர்கள். சிக்காகோவில் கூட்டப்பட்ட மன்றம் இந்தியாவுக் கும் இந்திய நாட்டுக் கருத்திற்கும் ஒரு மாபெரும் வெற்றியை அளித் தது என்றுதான் கூறவேண்டும். பொங்கி எழும் வேதாந்தக் கட லுக்கு அது துணை புரிந்தது. அக்கடல் வெள்ளம் உலகெலாம் சூழ் கின்றது. மதவெறி பிடித்த பாதிரிகளையும் கன்னிமாடப் பெண் களையும் தவிர, மற்றைய அமெரிக்க நாட்டு மக்கள் இம் மன் றத்தின் விளைவுகளைக் கருதிப் பேருவகை கொள்ளுகின்றுர்கள்.''

''உங்களுடைய சமயப் பிரசாரம் பரவுவதற்கு எந்த விதமான நிலையை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் ?''

''எல்லா விதமான நிலையையுந்தான் எதிர்பார்க்கிறேன். பல ஆண்டுகள் கழிவதற்கு முன்னமே ஆங்கிலேயருள் பெரும்பாலார் வேதாந்திகளாய்த் திகழ்ந்துவிடுவர். அமெரிக்க நாட்டைக்காட் டிலும் இந்த விதமான நிலையை இங்கிலாந்தில் காண இயலும். அமெரிக்க நாட்டு மக்கள் எதையும் ஆடம்பரமான காட்சியாக அமைத்துவிடுகின்றுர்கள் என்பதை நீங்கள் உணர்வீர்கள். இத் தகைய படாடோபத்தை ஆங்கிலேயரிடத்திலே ஒருவன் காண இயலாது. வேதாந்தத்தை உணராத கிறித்தவர்கள்கூடத் தங்க ளது புதிய கோட்பாட்டை அறிந்துகொள்ள இயலாது. எல்லாச் சமயங்களுக்கும் அறிவு விளக்கம் தருவது வேதாந்தமே. வேதாந் தம் இல்லாமற்போயின், ஒவ்வொரு சமயமும் மூட நம்பிக்கை யாய்விடக்கூடும். அதன் துணையால் எதுவும் ஒரு சமயமாக அமைதல் கூடும்.''

''ஆங்கிலேயரின் இயல்பில் எது உங்களுக்குத் தனிச் சிறப்பு வாய்ந்த அமிசமாகத் தோற்றுகின்றது ?''

''ஓர் ஆங்கிலேயன் ஏதேனும் ஒன்றை நம்புவாளுயின், அதைச் செயற்படுத்த முயல்கிருன். செயற்படுத்தும் துறையில் அவனுக்கு அளவு கடந்த ஊக்கம் இருக்கிறது. இந்தத் துறையில் உலகில் ஓர் ஆங்கிலேயனுக்கோ, அல்லது ஓர் ஆங்கிலேய மங் கைக்கோ இணையில்லை. இந்தக் காரணத்தால் அவர்களிடத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஜான் புல்லின் அறிவு சற்றுக் கட்டையான அறிவுதான். அவனை எளிதில் நம் வழிக்குக் கொண்டு வர முடியாது. அடித்தடித்து ஒரு கருத்தை அவன் புத்தியிற் புகும் படி செய்யவேண்டும். புகுந்துவிட்டால், அது அவனை விட்டு அகலாது. பாதிரியானுலும் சரி, வேறு எவரானுலும் சரி, என்னைப் பற்றி எதிராக இங்கிலாந்தில் ஒன்றும் கூறவில்லை; அவதூருன ஒன்றை இயம்ப முயலவில்லை. எனக்கு உற்ற நண்பர் யாவரும் இங்கிலாந்து சமய மடத்தைச் சார்ந்தவரே. இதை உணர்ந்ததும்

நான் பெருவியப்பில் ஆழ்ந்தேன்! இங்கிலாந்தில் இந்தப் பாதிரிமார் மிக உயர்ந்த வகுப்புகளிலிருந்து வந்தவர் அல்லர். இங்கிருப்பது போலவே அங்கும் வகுப்பு மிகத் தீவிரமான உணர்ச்சி உடையதே. ஆங்கில மடத்தைச் சார்ந்த பாதிரிகள் கனவான் வகுப்பினர்களே. அவர்கள் உங்களோடு கருத்தில் வேறுபடலாம்: ஆனால், அது அவர்கள் உங்களோடு நண்பர்களாயிருக்க யாதொரு தடையாயும்இராது. என்னுடைய நாட்டுமக்களுக்கு ஓர் உபதேசம் செய்ய விரும்புகின்றேன். வெவ்விய வசை மொழியில் திளைக்கின்ற பாதிரிகளை நான் நன்கு உணர்ந்துவிட்டேன். ஆதலால், அவர்களைப் பொருட்படுத்த வேண்டா. அமெரிக்கர்கள் கூறுகிறதற்கு இணங்க நாங்கள் அவர்களை அளந்துவிட்டோம். அவர்களைப் புறக்கணித்து நிற்பதே அவர்களுக்கு நாம் காட்டும் முறையாகும்.''

''அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளின் சமுதாயச் சீர்திருத்தங்களின் இயக்கங்களைப் பற்றி, சுவாமிஜி எனக்கு அறிவுறுத்த வேண்டும்.''

''ஆம்; அவற்றைப் பற்றி நான் விளக்குகின்றேன். எல்லாச் சமுதாயப் புரட்சிக்காரர்களோ, அவர்களுடைய தலைவர்களோ, பொதுவுடைமைத் தத்துவங்களுக்கோ, அல்லது சமவுடைமைத் தத்துவங்களுக்கோ, ஆன்மிக ஆதாரத்தைத் தான் காண முயல்கின்றார்கள். ஆன்மிக ஆதாரம் வேதாந்தத்திலேதான் வேரூன்றி நிற்கின்றது. என்னுடைய சொற்பொழிவுகளைக் கேட்ட பல தலைவர்கள், தங்கள் சமுதாயப் புதிய அமைப்பிற்கு வேதாந்தந்தான் அடிப்படையாய் இருக்க வேண்டுமென்று சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.''

''இந்தியப் பொதுமக்களைப் பற்றி நீங்கள் கொண்டுள்ள கருத்துகள் யாவை?''

''அந்தோ! நாம் மிகப் பயங்கரமான வறுமையுற்றிருக்கிறோம்! இம்மையைப் பற்றிய விஷயம் எதையுமே நம்முடைய பொது மக்கள் உணரவில்லை. அறியாமைதான் அவர்களைச் சூழ்ந்து நிற்கின்றது. நம்முடைய பொது மக்கள் மிகவும் நல்லவர்கள். ஏனெனில், இங்கே வறுமை ஒரு குற்றமாகக் கருதப்படுகிறதில்லை. அவர்கள் சீறி எழும் இயல்புடையர் அல்லர். எனது உடை காரணமாக—அமெரிக்காவிலுஞ் சரி, இங்கிலாந்திலுஞ் சரி—பல முறை மக்கள் கூச்சலிட்டு என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். ஒரு தனிப்பட்ட உடையை அணிந்துகொண்டதற்காக இந்தியாவில் மக்கள் ஒருவனைச் சூழ்ந்துகொண்டார்கள் என்னும் சம்பவத்தை நான் கேட்டறியேன். பெரும்பாலும் எல்லாவிதத்திலும் நம்பொது மக்கள், ஐரோப்பியப் பொது மக்களைவிட நாகரிகம் வாய்ந்தவர்களே.''

''பொது மக்களின் முன்னேற்றத்திற்கு நீங்கள் என்ன வகுக்கக் கருதுகின்றீர்கள் ?''

''அவர்களுக்கு இம்மைக்குரிய கல்வியை அளிக்க வேண்டும். முன்னோர்கள் நிறுவியவைகளைப் பின்பற்ற வேண்டும். எல்லாக் குறிக்கோள்களையும் பொது மக்களிடையே படிப்படியாகப் பரப்பி அவர்களை மெல்ல மெல்ல உயர்த்துவீர்களாக. அவர்களைச் சம நிலைக்குக் கொண்டு வாருங்கள். இம்மைக்குரிய அறிவைச் சமய மூலமாக அளிப்பீர்களாக.''

''சுவாமிஜி, இத்தகைய செயல் மிக எளிதில் நிறைவேறுதல் கூடுமோ ?''

''இதைப் படிப்படியாகத்தான் நிறைவேற்ற வேண்டும். தன்னலம் கருதாது தியாகம் செய்யும் போதுமான இளைஞர்கள் என்னோடு சேர்ந்து உழைப்பார்கள் என்று நம்புகிறேன். அப்பொழுது இச்செயல் நாளையே நிறைவேறும். புரிகின்ற செயலில் எழும் ஆர்வத்தையும் தியாகத்தையும் பொறுத்தது அது நிறைவேறுவது.''

''இந்த இழிவான நிலை பண்டைய கருமத்தால் வந்தது என்று கொண்டால், இதிலிருந்து அவர்கள் எப்படி வெளியேறக் கூடும்? உன்னிப் பாருங்கள்.''

சுவாமிஜி உடனே பதில் அளித்தார். ''கருமம் என்பது மனித சுதந்தரத்தை இடையறுது நாட்டுகின்றது. நம்முடைய கருமத்தால் நாம் நம்மைத் தாழ்த்திக்கொண்டால், நம்மை அதன் மூலம் உயர்த்திக்கொள்ளும் ஆற்றலும் நம்மிடம் இருக்கின்றது. மேலும், பொது மக்கள் தங்களுடைய கருமத்தால் தங்களை முற்றிலும் தாழ்த்திக்கொண்டுவிடவில்லை. அவர்கள் தொழில் புரிவதற்குத் தக்க சூழ்நிலைகளை அமைத்துத் தரவேண்டும். சாதிகளை ஒன்ருக்க நான் திட்டம் வகுக்கவில்லை. சாதி அமைப்பு வேண்டுவதுதான். அதைப் பின் பற்றுவதே அழகாகும். கோடியில் ஒருவர்கூடச் சாதி என்பது என்ன என்பதை அறியவில்லை. இவ்வுலகில் சாதி இல்லாத நாடே இல்லை. இந்தியாவில் சாதியிலிருந்து சாதியில்லாத நிலையை அடைகின்ருேம். அந்தத் தத்துவத்தின் மீதுதான் சாதியும் அமைக்கப்பட்டிருக்கிறது. மனித இனத்தின் குறிக்கோள் அந்தணனுவதே. இந்தியாவில் நம்முடைய திட்டம் ஒவ்வொருவனையும் அந்தணன் ஆக்குவதே. நீங்கள் இந்திய வரலாற்றைப் படிப்பீர்களானுல், கீழ்ச்சாதியார்களை மேற்சாதியார்கள் ஆக்க வேண்டிச் செய்த முயற்சிகளை அறிவீர்கள். எல்லோரும் அந்தணர் ஆகின்ற வரையில் இத்தகைய முயற்சிகள் நிகழ்ந்தேதீரும். இதுதான் எனது திட்டம். ஒருவரையும் கீழ் நிலைக்குக் கொண்டுவாராது, அவர்களை முன்னேறச் செய்வது நமது கடனுகும். இந்தக் கைங்கரியத்தைப் பெரும்பாலும் அந்தணர்களே புரிதல் வேண்டும். ஒவ்வொரு மரபுத்

தாபனமும் மற்றவர்களை உயர்த்துகிற முறையில் தனக்கே சவக்குழி தோண்டிக்கொள்ள வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு சாதித்தளைகளை அறுக்கின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு எல்லோருக்கும் நலன் உண்டாகும். காலம் தாழ்த்தல் கூடாது. ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் இருக்கிற வகுப்பைக்காட்டிலும், நம் சாதிப்பிரிவு சாலச் சிறந்ததே. ஆனால், அதை முற்றிலும் நல்லது என்று சொல்ல நான் முன் வரவில்லை. சாதித் தருமம் இல்லாதுபோயின் உங்கள் நிலை யாதாயிருக்குமோ! சாதிப் பிரிவு இல்லாத இடத்தில் உங்கள் படிப்பும் மற்றைய சிறப்புக்களும் எவ்வண்ணம் இருந்திருக்கக் கூடும்? உன்னிப்பாருங்கள். சாதிப்பிரிவு இல்லாமல் இருந்தால், ஐரோப்பியர்கள் கற்றறிந்துகொள்வதற்கு ஒன்றுமே எஞ்சியிராது என்பது திண்ணம்; முகமதியர்கள் எல்லாவற்றையும் அழித்துத் துகளாக்கியிருப்பார்கள். இந்து சமயம் எங்கே அசைவற்று நிற்கிறது? அது எப்பொழுதும் அசைந்துகொண்டேதான் இருக்கிறது. பிற நாட்டுப் படையெழுச்சிகள் நிகழ்கின்ற காலத்தில் அதன் இயக்கம் மெதுவாய்த்தான் இருக்கும்; பிற்காலங்களில் விரைவாய்ப் போகும். என்னுடைய நாட்டு மக்களுக்கு இதைத்தான் இயம்புகின்றேன். அவர்கள்மீது நான் குறை கூறவில்லை. நான் அவர்களுடைய பண்டைக் காலத்தை உற்று நோக்குகின்றேன். அந்தச் சூழ்நிலையில் எந்த நாடும் அத்தகைய புகழ் வாய்ந்த செயலைப் புரிந்திருக்க முடியாதுதான். நல்ல செயலாற்றியிருக்கின்றார்கள் என்றே அவர்களிடம் நான் கூறுகிறேன். ஆனால், இன்னும் சிறப்பாகச் செயலாற்றும்படி வேண்டுகிறேன்.''

''சுவாமிஜி, சாதிக்கும் அதன் சடங்குகளுக்கும் உள்ள தொடர்பைப்பற்றி நீங்கள் கொண்ட கருத்துகள் யாவை?''

''சாதி இடையறாது மாறிக்கொண்டேதான் இருக்கும். சடங்குகளும் உருவங்களும் மாறத்தான் செய்யும். ஒன்றன் மெய்ப்பொருள் தத்துவம் மாறவோ மறாது. வேதங்களிலேதான் நாம் சமய ஆராய்ச்சி செய்யவேண்டும். வேதங்களைத் தவிர, மற்ற எந்த நூலும் மாறும். எக்காலத்திற்கும் பிரமாணமாயுள்ளது வேதமே. மற்றைய நூல்களுள் ஒவ்வொன்றும் அந்தந்தக் காலத்திற்குப் பிரமாணமாய்த் திகழும். இதற்குச் சான்றாக, ஒரு ஸ்மிருதி ஒரு காலத்தில் ஆதிக்கம் பெறலாம். மற்றொரு காலத்தில் வேறொன்று ஆட்சி செலுத்தும். சில தீர்க்க தரிசிகள் கீழ்ச்சாதியர்களை முன்னேற்றுவதற்காகத் தொண்டாற்றினார்கள். மத்துவரைப் போன்ற சான்றோர் சிலர், வேதத்தைப் படிக்கும் உரிமையைப் பெண்டிருக்கும் அளித்தனர். சாதி போகக்கூடாது. அதைக் காலத்திற்கேற்றவாறு அமைத்துக்கொள்ள வேண்டும். பழைய அமைப்பிலேயே பல்லாயிரக்கணக்கான அமைப்புக்களுக்குரிய உயிர்த்துடிப்பைக் காண்பது நலமாகும்.

சாதியை அழிக்க விரும்புவது கலப்பற்ற முழு அறிவீனமாகும். பழையதன் பரிணமிப்பே புதிய முறையாகும்.''

''இந்துக்களுக்குச் சமுதாயச் சீர்திருத்தம் வேண்டுவதில்லையா?''

''சமுதாயச் சீர்திருத்தம் மிகவும் தேவையானதுதான். சில காலங்களிற் சான்றோர் சிலர் முன்னேற்றத்திற்குரிய புதிய கருத்துகளை விரியச் செய்வர். வேந்தர்கள் சட்டத்திற்குரிய அதிகாரத்தை அவற்றிற்கு அளிப்பார்கள். இவ்வண்ணமே இந்தியாவில் சமுதாயச் சீர்திருத்தங்கள் பண்டைக் காலத்தில் அமைக்கப்பட்டன. இக்காலத்தில் முன்னேற்றமான சீர்திருத்தங்களை நிறுவுவதற்கு அத்தகைய அதிகாரத்தை வகுக்க வேண்டும். வேந்தர்கள் மறையவே அதிகாரம் மக்களிடையே தங்கி நிகழ்கின்றது. ஆதலால், மக்கள் தமக்குரிய தேவைகளைக் கற்று உணர்கிற வரையில்—தம் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறமையைப் பெறுகின்ற வரையில்—நாம் காத்தே தீரவேண்டும். சிறு பகுதியரின் கொடுங்கோல் ஆட்சியைப் போல வேறு கொடுமையை இப்புவியில் பார்க்க இயலாது. இலட்சியச் சீர்திருத்தங்களின்மீது நம் சத்திகளைச் சிதற விடாமல், தீமையின் வேரை நாம் கூர்ந்து ஆராய்தல் வேண்டும். அன்றேல், நம் இலட்சியச் சீர்திருத்தங்கள் உருவாகா. நாம் ஒரு சட்ட சபையை அமைத்து, மக்களுக்குக் கல்வி கற்பித்து, அவர்களை அறிஞர்களாக்க வேண்டும். இது நடவாத வரையில் இலட்சியங்கள் இலட்சியங்களாக்வே நின்றுவிடும். பொருள்களின் இப்புதிய அமைப்புத் திட்டம், மக்கள் உய்யும் வகையாகும். இந்த உய்யும் வகை மக்களாலேதான் எய்துதல் கூடும். முன்பெல்லாம் வேந்தர்களாலே நடைபெற்றபடியால், முக்கியமாக இந்தியாவில் இது செயற்பட நீண்ட காலமாகும்.''

''இந்து சமுதாயம் ஐரோப்பியச் சமுதாயச் சட்டங்களை வெற்றிகரமாக ஏற்க இயலும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?''

''அது முடியாது. அப்படியே முற்றிலும் ஏற்க முடியாது. கிரேக்கரின் மனப் பண்பாடும், அதைக் குறிக்கின்ற ஐரோப்பியரின் புறவூக்கமும், இந்துக்களின் ஆன்மிக வாழ்வும்—இவை யாவும் ஒருங்கே சேர்ந்து அமையப் பெறுமாயின், அதுவே இந்தியாவுக்கு ஓர் இலட்சியச் சமுதாயமாகும். சான்ருக, சத்திகளைச் சிதற விடுதல், அடிக்கடி வீணன சோம்பற்பிதற்றல்களில் திளைத்தல் ஆகிய இவைகளை அகற்றி, ஆங்கிலேயரிடமிருந்து தலைவர்களுக்குத் தயங்காது பணிந்து நிற்றல், வெல்லுவதற்கரிய விடாமுயற்சி, அழுக்காறு இன்மை, இறவாத தன்னம்பிக்கை—இத்தகைய குணங்களைப் பெறுவதுதான் இற்றியமையாதது. ஓர் ஆங்கிலேயன் தொண்டிற்காக ஒரு தலைவனைத் தேர்ந்துவிட்டால், எந்த இன்னல்கள் நேரிட்டாலும் அதனையே பின்பற்றி ஒழுகுவான். இங்கே—இந்

தியாவில்—ஒவ்வொருவனும் தலைவனாயிருக்க முயல்கின்றான்; பின்பற்றி ஒழுகுவதற்கு ஒருவருமில்லை. அதிகாரம் செலுத்துவதற்கு முன், கீழ்ப்படிந்து நடத்தலை ஒவ்வொருவனும் கற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய அழுக்காறுகளுக்கோ, அளவில்லை. மனிதனது முக்கியத்திற்கு ஏற்றவாறு அவனது அழுக்காறும் வளர்கின்றது. அழுக்காறு அகலாத வரையில்—தலைவர்களுக் குக் கீழ்ப்படிந்துநடக்காத வரையில்—அதிகாரம் செலுத்தும் ஸ்தாபனத்திற்கு இடமில்லை; ஒன்றும் செய்வதற்கு இயலாத குழப்பமடைந்த சந்தைக் கூட்டம் போல நாம் ஆகக்கூடும்; எண்ணியெண்ணி வாளா இருக்க நேரிடும். ஐரோப்பாவிடமிருந்து இயற்கைப் புறச்சத்தியின்மீது வெற்றி கொள்ளும் முறையைக் கற்க வேண்டும். இந்தியாவிலிருந்து அகத்தின்மீது ஆணை செலுத்தும் தன்மையை ஐரோப்பியர் அடைவது நலமாகும். அந்நிலையில் 'இந்துக்கள், ஐரோப்பியர்கள்' என்ற பிரிவு அற்றுப்போம். அகத்தையும் புறத்தையும் வென்ற இலட்சிய மனித இனந்தான் மலர்ந்து தோன்றும். நாம் மனித இனத்தின் ஒரு பாகத்தைப் பேணி வளர்த்தோம்; அவர்கள் மற்றொன்றை வளர்த்தார்கள். இவ்விரண்டின் சேர்க்கைதான் தேவையாகும். எம் சமயக் குழுவினரின் கொள்கை சுதந்திரமே. அச்சொல், உடற்சுதந்திரம், உளச் சுதந்திரம், ஆன்மிகச் சுதந்திரம் ஆகிய இவ்வனைத்தையும் சுட்டும்.''

''சுவாமிஜி, சமயத்திற்கும் சடங்கிற்கும் எத்தகைய தொடர்புண்டு?''

''சமயப் பள்ளியின் பாலர் வகுப்பே சடங்காகும். இப்பொழுதிருக்கின்ற உலக நிலைக்குச் சடங்குகள் இன்றியமையாதவை. புதிய புதிய சடங்கை மக்களுக்குப் படைத்துத் தருவது நலமாகும். இக்கைங்கரியத்தில் அறிஞர் குழு ஒன்று ஈடுபடவேண்டும். பழைய சடங்குகளை அகற்றிப் புதிய சடங்குகளை நிறுவ வேண்டும்.''

''சடங்குகளை அகற்ற வேண்டுவதன் சார்பாகப் பேசுகின்றீர்களா?''

''இல்லை. எனது குறிக்கோள் ஆக்கலே; அழித்தலன்று. இருக்கின்ற சடங்குகளை வைத்துக்கொண்டு, அவற்றிலிருந்தே புதிய சடங்குகளை விரியும்படி செய்வதே அழகாகும். ஒவ்வொன்றிலும் வளர்வதற்குரிய எல்லையற்ற சத்தி இருக்கிறது. ஓர் அணுவோ, அகிலப் பிரபஞ்சத்தின் சத்தியைத் தன்னுள்ளே அடக்கித் திகழ்கின்றது. இந்து இன வரலாற்றில் நீண்ட காலமாக மக்கள் அழிக்கிற செயலில் இறங்கினதாகப் புலப்படவில்லை. ஆக்கல் தொழிலைத்தான் அவர்கள் மேற்கொண்டார்கள். ஒரு வகுப்பு அழிக்க முயன்றது. அவ்வகுப்பினர் நாட்டை விட்டுத் துரத்தப்பட்டனர். அவர் தாம் பௌத்தர். சங்கரர், இராமானுசர், மத்துவர், சைதன்னியர்—இவர்களைப் போன்ற சீர்திருத்தக் கூட்டத்தை நாம் பெற்றோம்.

இவர்கள் அனைவரும் தலை சிறந்த சீர்திருத்தக்காரர்களே; ஆக்கல் தொழிலில் இறங்கியவர்களே; தத்தம் காலங்களுக்கு இயைந்தபடி ஒவ்வொன்றை அமைத்தார்கள். இதுதான் நாங்கள் கண்ட தனிப் பட்ட முறையாகும். நவீனச் சீர்திருத்தக்காரர்கள், ஐரோப்பியர் கள் கண்ட அழிக்கும் சீர்திருத்த முறைகளை ஆள்கின்றார்கள். இவை எவர்க்கும் நற்பயனை அளிக்கமாட்டா; அளித்ததுமில்லை. பெரும்பாலும் படைக்கும் தொழிலில் ஈடுபட்ட நவீனச் சீர்திருத்த காரர் ஒருவர் இருந்தார். அவர்தாம் ராஜா ராம் மோகன் ராய் என் பவர். வேதாந்த இலட்சியங்களை உருவாக்குகின்ற திசையில் இந்து இனம் முன்னேறிக்கொண்டே செல்கின்றது. நல்ல காலத்திற் கிடையிலும் சரி, பொல்லாக் காலத்திற்கு இடையிலும் சரி, இந்திய வாழ்க்கை வரலாறு முழுதுமே வேதாந்த இலட்சியத்தை உருவாக் குகின்ற போராட்டமாகவே மிளிர்கின்றது. எங்கேயாவது வேதாந்த இலட்சியத்தைப் புறக்கணித்து எழுகின்ற சீர்திருத்த வகுப்பாயிருந்தாலும் சரி, சமயமாயிருந்தாலும் சரி, அது இடிந்து நொறுங்கிப் பொடிப்பொடியாய்விடும்.''

''நீங்கள் புரியும் செயல் நிரல் யாது?''

''என் திட்டத்தை நிறைவேற்றச் சென்னையில் ஒரு ஸ்தாபனத் தையும், மற்றொன்றைக் கல்கத்தாவிலும் நிறுவ விழைகின்றேன். சுருங்கக் கூறுமிடத்து, அடிகளாயிருக்கட்டும், அல்லது பாவச் செயல் புரிந்தவனாயிருக்கட்டும்; ஞானியாயிருக்கட்டும், அல்லது அறிவிலியாயிருக்கட்டும்; பிராம்மணனாயிருக்கட்டும் அல்லது பறை யனாயிருக்கட்டும்—எல்லோருடைய நடைமுறை வாழ்க்கையின் ஒவ் வொரு நாளிலும் வேதாந்த இலட்சியங்களைப் புகுத்த வேண்டும்.''

எங்கள் நிருபர் இந்திய அரசியல் சம்பந்தமான பிரச்சினை களைச் சுவாமிஜியிடம் எழுப்பினார். சுவாமிஜி பதில் சொல்ல முயல் வதற்கு முன்பே புகை வண்டி எழும்பூர் இருப்புப்பாதை நிலையத் திற்கு ஒரே மூச்சில் வந்துவிட்டது. அவசரம் அவசரமாய்ச் சுவாமிஜியிடமிருந்து வந்த குறிப்பு இதுதான்: அவர் இந்திய நாட் டின் அரசியற் சிக்கல்களையும் ஐரோப்பிய அரசியற் பிரச்சினைகளை யும் தாம் மிகவும் வெறுப்பதாகக் கூறினார். அவரைக் கண்டு பேசியது இவ்வண்ணம் முடிந்தது.

(8)

மேலை நாட்டிற்கு முதன்முதல் ஓர் இந்தியச் சந்நியாசியார் புரிந்த ஞானப் பணியும், இந்தியாவுக்குப் புத்துயிரளிக்க அவர் கண்ட திட்டமும்.

[இது, 1898-ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், சென்னை 'டைம்ஸ்' பத்திரிகையில் வெளி வந்தது.]

சில வாரங்களாகச் சென்னையம்பதி மக்கள் உலகப் புகழ்படைத்த இந்து சந்நியாசியாரான சுவாமி விவேகானந்தரின் வரவை மிக்க ஆர்வத்துடன் எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள். இப்பொழுது அவர் பெயர் ஒவ்வொருவருடைய உதடுகளின்மீதும் தவழ்ந்துகொண்டிருக்கின்றது. பள்ளியில்—கல்லூரியில்—உயர் நீதி மன்றத்தில்—கடற்கரையில்—தெருக்களில்—சென்னைக் கடை வீதிகளில்—விஷயங்களைத் துருவி ஆராயும் அவாவுடைய பல்லாயிரக் கணக்கான மக்கள் நின்றுகொண்டு, "சுவாமிகள் எப்பொழுது வரப்போகிறார்கள்?" என்று உசாவிக்கொண்டேயிருப்பதைப் பார்க்கலாம். பல்கலைக் கழகப் பரீட்சைக்காக வந்த மாணவர்கள், சுவாமிஜியைக் காணத் தங்கிவிட்டார்கள். பெற்றோர்கள் உடனே திரும்பி வரும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டும், சாப்பாட்டுக் கணக்கு அதிகரித்தும், அவர்கள் வாளா இருந்தார்கள். இன்னஞ்சில நாட்களில் சுவாமிஜி, அவர்கள் நடுவில் திகழ்ந்து நிற்பார். இந்த மாகாணத்தில் வேறு இடங்களில் அவருக்குச் சிறப்பான வரவேற்புகள் கிடைத்தன. அவருக்காக இங்குப் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்து சமுதாயத்தின் செலவைக் கொண்டு வெற்றிக்கு அறிகுறியான 'கமான்கள்' திகழும் நகர நன் மாளிகையில் இந்தத் தீர்க்கதரிசியை எழுந்தருளப் பண்ண வேண்டும். மாட்சிமை தங்கிய நீதி மன்றத்து நியாயாதிபதி சுப்பிரமணிய ஐயர் போன்ற பிரபலமான நகரப் பிரபுக்கள் இந்த இயக்கத்தில் ஆர்வம் காட்டுகின்றார்கள். இவற்றைக்கொண்டு சுவாமிகள் மாபெரு வரவேற்பைப் பெறுவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்று இயம்பலாம். சுவாமிஜியின் மிகச்சிறந்த ஆற்றல்களைச் சென்னைதான் முதன்முதல் உணர்ந்து அவரைச் சிக்காகோவுக்கு ஆயத்தப்படுத்தி அனுப்பிற்று; தாய் நாட்டின் பெருமையை உயர்த்துவதற்காக அருஞ்செயல் ஆற்றியவரும், சந்தேகத்திற்குச் சற்றும் இடமில்லாது சிறப்புற்றவருமான அப்பெரியாரை வரவேற்கும் கௌரவத்தைப் பெற்றிருக்கிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சுவாமிஜி இங்கு வந்திருந்த பொழுது பெரும்பாலும் அவரை யாரும் அறியாதபடி மறைந்தேயிருந்தார் என்றே சொல்ல வேண்டும். சாந்தோமில் ஒருவருக்கும்

புலனுகாது ஒரு பங்களாவில் இரண்டு மாதங்களாய்ச் சமயப் பொருள்களைப் பற்றித் தன்னந்தனியே சம்பாஷணைகளை நடத்தி வந்தார்; ஆர்வத்துடன் கேட்போர் அனைவருக்கும் போதித்து வந்தார். கற்றறிந்த இளைஞர் சிலர் தம் கூர்ந்த பார்வையால் அந்தச் சான்றோரிடம் ஏதோ ஒரு சத்தி இருப்பதாக உணர்ந்தனர்; இச்சத்தி மற்றவர்களைக்காட்டிலும் அவரை உயர்த்துமென்றும், அவரை மக்களுக்குத் தலைவராகச் சிறப்பிக்குமென்றும் எதிர்கால நிகழ்ச்சியை உணர்த்தினர். இத்தகைய இளைஞர்கள் நெறி தப்பிய உற்சாகமுடையவர்கள் என்றும், புத்துயிர் விழைந்து பகற் கனவு காண்பவர்கள் என்றும் வெறுக்கப்பட்டார்கள். இப்பொழுது அவரைச் சுவாமி என்னும் பெயரால் இளைஞர் வழங்குகின்றனர். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அடைந்த சிறந்த புகழோடு வருகின்ற சுவாமிஜியைக் காண்பதில் இளைஞர்களுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. சுவாமிஜியின் முக்கியப்பணி ஆன்மிகமே. ஆன்மிக நெறிக்கே தாயகமாய்த் திகழ்கின்ற இந்தியாவுக்குச் சிறந்த வருங்கால வாழ்வு உண்டு என்று சுவாமிஜி திடமாய் நம்புகிருர். தாம் மிகவும் உயர்ந்ததெனக் கருதிய வேதாந்தத்தின் உண்மைகளை மேலை நாடு போற்றிப் பாராட்டும் என்னும் நன்னம்பிக்கை அவருக்கு உண்டு. "உதவி புரிவாயாக; பூசல் செய்யாதே; எதையும் ஏற்றுக்கொள்; அழித்தலை நாடாதே; ஒற்றுமையையும் அமைதியையும் மேற்கொள்வாயாக; கலகத்தை எழுப்பாதே !"—இவைகளே அவருடைய குறிக்கோளாகும்.

மற்றச் சமயங்களைப் பின்பற்றுகிறவர் அவரிடத்தில் கருத்து வேற்றுமைகளைக் கொண்டாலும், இந்துக்களிடம் திகழ்கின்ற நன்மையைக் காணுதற்பொருட்டு மேலை நாட்டவர்களின் கண்களைத் திறந்து வைக்கக்கூடிய அவருடைய சீரிய நற்பணியை எவரேனும் துணிந்து மறுக்க இயலுமா? சமயங்களிடையே அமைதி எழும்பும் என்று தாம் கருதுகின்ற உபதேசத்தைப் பரப்ப முதன்முதலாகக் கடல் கடந்து சென்ற இந்து சந்நியாசியாரென்று அவர் எப்பொழுதும் நினைந்து போற்றப்படுவார். மேற்றிசையில் அவர் ஆற்றிய பணியின் வெற்றிச் செய்தியை அவர் வாயிலாகவே அறிதற் பொருட்டு எங்களுடைய பத்திரிகை நிருபர் அவரைக் கண்டு பேசினுர். சுவாமிஜி எங்களுடைய நிருபரை மிக்க மரியாதையுடன் வரவேற்று, தம் பக்கத்திலிருந்த நாற்காலியில் அமரச்செய்தார். சுவாமிஜி காவியுடை அணிந்திருந்தார்; முகத்தில் அமைதி நிலவ, பெருந்தன்மையோடு திகழ்ந்தார். அவரை வினவிய எந்த வினவிற்கும் விடை கூறும் முறையில் அவர் காட்சியளித்தார். எங்களுடைய நிருபர் சுருக்கெழுத்திற் பதிவு செய்யப்பட்ட சுவாமிகளின் உரைகளை இங்கு அப்படியே அளித்திருக்கிருேம்:

''சுவாமிஜி, உங்களுடைய கடந்த வாலிப வாழ்க்கையின் குறிப்புக்களைப்பற்றி நான் தெரிந்துகொள்ளலாமா ?'' என்று எங்கள் நிருபர் கேட்டார்.

''நான் கல்கத்தாவில் பள்ளி மாணவனாயிருக்கும்பொழுதே, சமய உணர்ச்சி உள்ளவனாயிருந்தேன். என் வாழ்க்கையில் அந்த நாளிலும்-நான் எதையும் துருவி ஆராயும் இயல்புள்ளவனாய் இருந்தேன். வெற்றுப் பேச்சுகள் எனக்கு ஆறுதல் அளிக்கமாட்டா. பிறகு நான் இராமகிருஷ்ண பரமஹம்ஸரைச் சந்தித்து, அவரோடு நெடுங்காலம் உறைந்தேன். அவர் பொன்னடிக் கீழ் அமர்ந்து நான் கற்றேன். என் தந்தையார் மாண்ட பிறகு ஊர் ஊராய்த் திரிவதில் காலம் கழித்தேன். கல்கத்தாவில் ஒரு சிறிய மடம் என்னால் நிறுவப்பட்டது. பிரயாணம் செய்துகொண்டிருக்கும்பொழுது நான் சென்னைக்கு வர நேர்ந்தது. மைசூர் மன்னரும் இராமநாதபுரத்து அரசரும் எனக்கு உதவி புரிந்தனர்.''

''மேலை நாடுகளுக்குச் சென்று இந்து சமயப் பணியை ஆற்ற உங்களை ஊக்கியது யாது ?''

''நான் அனுபவம் அடைய விழைந்தேன். நம் நாடு சீர் குலைந்ததற்குக் காரணம் நாம் மற்ற நாடுகளோடு கலந்து உறவாடாததே. இது ஒன்றே அதற்குக் காரணமாகும். நாம் அனைவரும் கிணற்றுத் தவளைகள்.''

''மேலை நாடுகளில் மிகுதியாகப் பிரயாணம் செய்திருக்கிறீர்களோ ?''

''ஐரோப்பாவில் பற்பல இடங்களுக்குப் போயிருக்கின்றேன். ஜெர்மனி, பிரான்ஸ் நாடுகளும் நான் கண்ட நாடுகளைச் சேரும். ஆனால், இங்கிலாந்தும் அமெரிக்காவும் நான் செயலாற்றும் முக்கியமான வட்டாரங்கள் ஆகும். நம் இந்திய நாட்டிலிருந்து சென்றவர்களே நம்நாட்டு மக்கள்மீது பகைக்கண் கொண்டு பார்ப்பதால், நான் நெருக்கடியான நிலையில் இருக்கக் கண்டேன். நம் இந்திய நாடு, ஒழுக்கத்திலும் சரி, சமய உணர்ச்சியிலும் சரி, மிக மிகச் சிறந்தது. இந்துக்களை மற்ற நாட்டவர்களோடு ஒப்பிடுதலே ஒரு நிந்தனையாகும். முதலில் என்னைப் பலர் பழித்தனர்; மோசக்காரன் என்று மொழிந்தனர்; அந்தப்புரம் நிரம்ப எனக்கு மனைவிமார்கள் உண்டென்றும், நான் ஒரு படையில் பாதிக் குழந்தைகளைப் பெற்றிருக்கின்றேன் என்றும் பொய்ப் பிரசாரம் செய்தனர். இத்தகைய மாபெரும் பொய்களைப் புனைத்துரைத்தார்கள். சமயத்தின் பெயரால் எதையும் பாதிரிமார்கள் செய்யத் துணிவார்கள் என்னும் அனுபவம் என் கண்களை நன்கு திறந்துவிட்டது. இங்கிலாந்தில் சமயப் பிரசாரகர் இருக்கிற இடம் தெரியவில்லை. ஒருவரும் என்னோடு வாதாட வரவில்லை. திரு. இலண்டு என்பவர் அமெரிக்காவுக்குச் சென்று, என்னைப் பற்றிப் புறங்கூறினார்.

ஆனல், மக்கள் அவர் பேச்சைக் கேட்கவில்லை; என்னை மிகவும் விரும்பினர்கள். நான் இங்கிலாந்திற்குத் திரும்பியதும் சமயப் பிரசாரகன் என்மீது பாய்வான் என்று எண்ணினேன். ஆனல், உண்மை அவர்கள் வாயை மூடும்படி செய்துவிட்டது. நம்முடைய நாட்டிலுள்ள சாதியைவிட இங்கிலாந்தின் சமுதாயப் பதவி முறை சற்றுத் தீவிரமானதென்றே சாற்றவேண்டும். ஆங்கில மடத்தைச் சார்ந்தவர் அனைவரும் பெருந்தன்மை வாய்ந்தவர். பெரும்பான்மையரான பாதிரிகளை அப்படிச் சொல்வதற்கில்லை. அவர்கள் என்னிடத்தில் மிகுந்த பரிவு காட்டினர்கள். ஆங்கில மடத்தைச் சார்ந்த சுமார் முப்பது பாதிரிமார்கள், சமயச்சர்ச்சைகளில் எல்லா அமிசங்களிலும் முற்றிலும் என் கருத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஆங்கிலப் பாதிரிகள் என் கருத்திற்கு முரண்பட்டவர்களாய் இருந்தாலும், அவர்கள் என்னைப் பற்றிப் புறங்கூறவில்லை; மறைவிலிருந்து என்னைத் தாக்கவுமில்லை. உயர்ந்த சாதியிலிருந்தும், பரம்பரையாயுள்ள பண்பாட்டிலிருந்தும் நாமடைந்த நன்மை இதுதான்.''

''இங்கிலாந்தைவிட அமெரிக்காவில் பெருந்தொகையான மக்கள் எனக்குப் பரிவு காட்டினர்கள். கீழினப் பாதிரிகள் கூறிய கொடிய வசை மொழியே நான் எடுத்துக்கொண்ட செயல் வெற்றிகரமாய் முடியத் துணை செய்தது. இந்திய நாட்டு மக்கள் எனக்குப் பிரயாணச் செலவுக்கு மட்டுந்தான் பொருள் உதவினர்கள். அதுவும் செலவழிந்துவிட்டது. என்னிடம் பணமில்லை. இங்கு எவ்வண்ணமோ, அவ்வண்ணமே நான் அங்கும் தனிப்பட்ட மாணவர்களின் தானம் பெற்றே வாழ நேர்ந்தது. அமெரிக்கர் மிகவும் விருந்தோம்பும் இயல்பினர். அமெரிக்காவின் மக்கள் தொகுதியில் மூன்றில் ஒரு பகுதியினர் கிறித்தவரே. மற்றவர்களுக்குச் சமயம் என்பது இல்லை. அதாவது, அவர்கள் ஒரு சமய வகுப்பையும் சார்ந்தவர்கள் அல்லர். ஆனல், அவர்களிடையே மிகச் சிறந்த ஆன்மிக வாழ்வு வாழ்கின்ற மக்கள் உண்டு. இங்கிலாந்தில் சமயத்தொண்டு செவ்வனே திகழ்கின்றது. நாளை நான் மரிப்பதாயிருந்து, சந்நியாசிகளை இனி அங்கு அனுப்ப இயலாவிட்டாலும், அந்தப் பணியை ஆங்கிலேயர்கள் நடத்திக்கொண்டுதான் இருப்பார்கள். ஆங்கிலேயர் மிகவும் நல்ல இயல்புள்ளவர். குழவிப் பருவம் தொடங்கியே தன்னுடைய உணர்ச்சிகளை அடக்கி வைத்துக்கொள்ளும்படி அவன் கற்பிக்கப்படுகிருன். ஆனல், அவன் சற்று மந்தபுத்தியுள்ளவன். ஒரு பிரெஞ்சுக்காரனைப் போலவோ, ஓர் அமெரிக்கனைப் போலவோ ஒன்றை விரைவில் அறிந்துகொள்ள அவனல் இயலாது. அவன் எதையும் செய்யும் திறமை வாய்ந்தவன். அமெரிக்க நாட்டு மக்கள், மனப் பண்பாட்டில் இன்னும் இளம்பருவத்திலேதான் இருக்கின்ருர்கள். துறவின் சிறப்பை அவர்களால் உணர இயலாது.

அவர்கள் பல ஆண்டுகளாகப் பெருஞ்செல்வத்திலும் மிகுந்த இன்ப நுகர்ச்சியிலும் திளைத்து வருகின்றார்கள். அங்குப் பலர் துறவுக்குத் தகுதியுள்ளவராய் இருக்கின்றனர். யான் இங்கிலாந்தில் சொற்பொழிவுப் பணியில் இறங்கியபொழுது, இருபதுபேரோ, முப்பது பேரோ அமைந்த ஓர் அவைதான் இருந்தது. நான் அமெரிக்காவிலிருந்து திரும்பி வரும்பொழுது ஓராயிர மக்கள் என் பேச்சைக் கேட்க வந்தார்கள்.

''அமெரிக்காவில் இதைவிடப் பெரிய குழாம் திரண்டு வரும். ஏனெனில், அமெரிக்காவில் நான் மூன்று ஆண்டுகள் கழித்திருக்கிறேன். இங்கிலாந்தில் ஒரு சந்நியாசியும் அமெரிக்காவில் ஒரு சந்நியாசியும் எனக்கு இருக்கின்றனர். மற்ற நாடுகளுக்கும் சந்நியாசிகளை அனுப்ப யான் விழைகின்றேன்.

''ஆங்கிலேயர்கள் மாபெருஞ்செயல்புரியும் ஆற்றல் வாய்ந்தவர்கள். அவர்களுக்கு ஏதாவது ஒரு கருத்தை அறிவித்தல், சாலும்; அக்கருத்துச் செயற்படாமல் வீணாகாதென்பது திண்ணம். ஆனால், அக்கருத்தை மட்டும் அவர்கள் உணரவேண்டும். உங்கள் வேதாந்தம் முழுவதும் சமையலறை வேதாந்தமாய் விளங்குகிறது. 'இதைத் தொடாதே! அதைத் தொடாதே!' என்னும் தத்துவங்கள் இப்பொழுது இந்தியாவில் இருக்கிற சமயமாகும். இத்தகைய தத்துவத்தை ஆங்கில மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நம்முடைய முன்னோர்களின் உயர்ந்த கருத்துகள், அவர்கள் கண்டுபிடித்த உயர்ந்த தத்துவங்கள்—இவற்றை எந்த நாடும் போற்றிப் பின்பற்றும். கிறித்தவ வேத புத்தகத்தில் நான் வேதாந்தத்தைக் காண்பதாக ஆங்கில மடத்தைச் சார்ந்த மிகச் சிறந்த அறிஞர்கள் என்னிடம் கூறியிருக்கின்றார்கள். இப்பொழுது உள்ள இந்து சமயம் மிக இழிவான நிலையில் இருக்கிறது. ஆனால், இப்பொழுது எழுதப்படுகிற தத்துவ நூலில் வேதாந்தத்தின் அமிசம் இடம் பெறாமல் இல்லை. ஹெர்பர்ட்டு ஸ்பென்ஸர் நூல்களிலும் அது காட்சியளிக்கின்றது. இது அத்துவிதம் பேசுகின்ற யுகமாகும். அதைப் பற்றித்தான் ஒவ்வொருவனும் பேசுகின்றான். ஐரோப்பாக் கண்டத்திலேதான் ஏதாவது தனிப்பட்ட ஒன்றைக் கண்டுபிடிக்க மக்கள் முயல்கின்றார்கள். ஐரோப்பியர்கள் இந்துக்களை இகழ்கின்றார்கள்; ஆனால், அதே மூச்சில் இந்துக்கள் தந்த பேருண்மைகளை வாரி விழுங்குகின்றார்கள். பேராசிரியர் மாக்ஸ்முல்லர் பழுத்த ஒரு வேதாந்தி; வேதாந்தத் துறையில் மிகச் சிறப்பான தொண்டாற்றியிருக்கிறார். அவருக்கு மறு பிறப்பில் நம்பிக்கை உண்டு.''

''நீங்கள் இந்தியாவுக்குப் புத்துயிர் அளிக்கும் முறையில் என்ன செயல் ஆற்றக் கருதியுள்ளீர்கள்?''

''நம் நாடு இழைத்த பெரும்பாவம் பொது மக்களைப் புறக்கணித்ததே. நமது வீழ்ச்சிக்கு அதுவும் ஒரு காரணமாகும்.

பொது மக்கள் நயம்படக் கல்வி பெற்று அறிவுள்ள மக்களாய்த் திகழ வேண்டும்; உண்டியளிக்கப்பட்டுப் பரிபாலிக்கப்பட வேண்டும். நம்முடைய கல்விக்காக அவர்கள் வரிகளைத் தருகின்றார்கள். நம்முடைய கோவில்களை அவர்களே கட்டுகின்றார்கள். அவர்களுக்குக் கிடைத்த கைம்மாறு அடியும் உதையுமே. செயல் முறையில் அவர்கள் பெரும்பாலும் நம் அடிமைகளே. இந்தியாவிற்குப் புத்துயிர் அளிக்க நாம் கருதினல், அவர்கள் முன்னேற்றத்திற்காக நாம் பாடுபடவேண்டும். இளைஞர்களைப் பிரசாரகர்களாகப் பயிற்றுவதற்குச் சென்னையில் ஒரு முக்கியமான ஸ்தாபனத்தையும், கல்கத்தாவில் மற்றொரு முக்கியமான ஸ்தாபனத்தையும் நிறுவ வேண்டும். கல்கத்தாவில் அதை நிறுவுவதற்கு வேண்டிய பொருள் வசதிகள் இருக்கின்றன. என் தொண்டிற்கு வேண்டிய பொருளை ஆங்கிலேய மக்கள் தேடித் தருவார்கள். இந்த நவீன இளைஞர் தலைமுறையிலேதான் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்தத் தலைமுறையிலிருந்துதான் தொண்டர்கள் தோன்றுவார்கள். அவர்கள் இந்த முழுப்பிரச்சினையையும் சிங்கவேறு போலத் தீர்ப்பார்கள். எனது கருத்தை வகுத்துவிட்டேன்; அதற்காக என் உடலாவியையும் அர்ப்பணம் செய்திருக்கிறேன். இதில் நான் வெற்றி காணாத நிலையில், என்னைவிடத் திறமை வாய்ந்த ஒருவர் தோன்றி இதைச் செயற்படுத்துவார். போராடினதே எனக்குப்போதுமானது. பொது மக்களுக்கு உரிய உரிமைகளை அளிப்பதே முதற் பிரச்சினையாகும். உலகங் கண்ட சமயங்களுள்ளே உங்கள் சமயம் பெருஞ்சிறப்பு வாய்ந்தது. ஆனல், பொது மக்களுக்கு நீங்கள் அளிப்பது பயனற்ற வெறும்பதரே. இடையருது பொங்கி வழிகின்ற தீஞ்சுவை நீரைப் பருகுகின்றீர்கள். அவர்களுக்கு நீங்கள் நல்குவதோ, சாக்கடை நீரேயாகும். சென்னைப் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவனே, கீழ்ச் சாதியைச் சார்ந்த ஒருவனைத் தொட மெய்கூசுவான்; ஆனல் உன் படிப்புக்கு வேண்டிய பணத்தை அவனிடமிருந்து பெற ஆயத்தமாய் இருப்பாய். இம்மைக்கும் ஆன்மிக வாழ்க்கைக்கும் உரியனவற்றை நம்முடைய பொது மக்களுக்கு நல்குதற்பொருட்டுச் சமயத் தொண்டர்களுக்குப் பயிற்சி அளித்தல் வேண்டும். இதைக் கருதியே முதன்முதலாக அந்த இரு ஸ்தாபனங்களையும் நிறுவ விரும்புகின்றேன். ஒரு வட்டத்தினின்று மற்றொரு வட்டத்திற்கும் அவர்கள் இதைப் பரப்பிக்கொண்டே செல்வார்கள். இறுதியில் இந்தியா முழுவதும் இது பரவிவிடும். ஒருவன் கடவுளிடம் நம்பிக்கை வைப்பதைக்காட்டிலும் சிறந்ததாகக் கருதக் கூடியது தன்னம்பிக்கையேயாகும். நமக்கு நேர்கின்ற இன்னல் இதுதான்: நாளடைவில் நம்மைப்பற்றிய நம்பிக்கையையே நாம் இழந்துவிடுகின்றோம். சீர்திருத்தக்காரர்களுக்கு நான் விடுக்கும் அறைகூவல் இதுவேயாகும். இவர்களைவிட வைதிகர்களுக்கோ, தங்களிடத்தில்

நம்பிக்கையும் ஆற்றலும் மிகுதியாய் இருக்கின்றன. ஆனால், அவர்
கள் முறை சற்றுப் பண்பாடில்லாததாய் இருக்கக் கூடும். நம் சீர்
திருத்தக்காரர்களோ, ஐரோப்பியர் வலையிற்சிக்கி அவருடைய
வீண் பெருமையை வளர்ப்பதற்குக் கருவிகளாய் அமைகின்றார்கள்.
மற்ற நாடுகளின் பொது மக்களை நோக்குமிடத்து, நம்முடைய மக்
களைத் தெய்வங்களென்றே கூறவேண்டும். இந்த ஒரு நாட்டிலே
தான் வறுமை குற்றமாகக் கருதப்படுவதில்லை. அவர்கள் மதி நலத்
தோடு உடல் வனப்பும் வாய்க்கப் பெற்றவர்கள். அவர்களை நாம்
இடையறாது வெறுத்தது காரணமாக அவர்கள் தங்களைப் பற்றிய
நம்பிக்கையையே இழந்துவிட்டார்கள். அவர்கள் தங்களைப் பிறவி
யிலேயே அடிமைகள் என்று கருதுகிறார்கள். அவர்களுக்குரிய உரி
மைகளை அளித்துவிடுங்கள். அவர்கள் தங்கள் உரிமைகளைச்
சார்ந்தே நிற்கட்டும். இப்படியிருக்கிற தன்மைதான் அமெரிக்க
நாட்டு நாகரிகத்தின் புகழுக்குக் காரணமாகும். உடல் கூனி,
பசியால் வாடி, கையில் ஒரு சிறிய கோலையும் ஒரு துணி மூட்டை
யையும் தாங்கிக் கப்பலிலிருந்து இறங்கி வரும் அயர்லாந்து மனி
தனைக் கவனியுங்கள். சில மாதங்கள் அமெரிக்க நாட்டில் கழித்த
அவன், நிமிர்ந்து அச்சமின்றி நடக்கின்றதை ஒப்பிட்டுப் பாருங்
கள். தான் அடிமையாயிருந்த ஒரு நாட்டிலிருந்து தன்னை ஒரு
சகோதரன் என்று பாவிக்கும் ஒரு நாட்டிற்கு அவன் வருகிறான்.

" 'எல்லாம் வல்ல ஆன்மா அழிவற்றது; அகண்டமாய் உள்
ளது,' என்னும் உண்மையை நம்புக. ஆசானோடு இணக்கம்
வேண்டும்; அதுதான் கல்வியைப் பற்றி நான் கொண்ட கருத்
தாகும். குருவின் இல்லத்தில் மாணவன் வாழ வேண்டும். ஆசா
னோடு இணக்கம் இல்லாத ஒன்றைக் கல்வியென்று இயம்புவதற்
கில்லை. உங்களுடைய பல்கலைக் கழகங்களை உற்று நோக்குங்கள்.
அவை ஐம்பது ஆண்டுகளாய் இருந்து வருகின்றன. ஆனால், அவை
என்ன ஆற்றியிருக்கின்றன? தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு மேதா
வியை அவை படைத்துத் தரவில்லை. அவை பரீட்சிக்கும் குழுவே
தவிர, வேறல்ல. பொது நன்மையைக் கருதித் தியாகம் புரிய
வேண்டும் என்னும் எண்ணம் நமது நாட்டில் வளரவில்லை."

"பெஸண்டு அம்மையாரைப் பற்றியும் பிரம்மஞான சபையைப்
பற்றியும் நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?"

"பெஸண்டு அம்மையார் நற்குணம் வாய்ந்தவரே. இலண்டன்
நகரிலுள்ள அவரது சபையில் நான் சொற்பொழிவாற்றியிருக்கி
றேன். அந்த அம்மையாரைப் பற்றி நேர்முகமாக நான் ஒன்றும்
அறியேன். நம்முடைய சமயத்தைப் பற்றிய அவரது அறிவு மிக
மிகச் சிறிதேயாகும். ஏனெனில், அதை முற்றிலும் ஆராய அவ
ருக்குப் போதுமான நேரம் இல்லை. அவர் வாய்மையுடையவர் என்
பதை அவரை மிக மிகப் பகைக்கின்றவர்களும் ஏற்பார்கள். அவர்

இங்கிலாந்திலேயே சிறப்பு வாய்ந்த சொல் வன்மையுடையவர் என்று கருதப்படுகின்றார். அவர் துறவியார். எனக்கு மகாத்துமாக் களிடத்திலும், குத்ஹூமி போன்றவர்களிடத்திலும் நம்பிக்கை இல்லை. பிரம்மஞான சபையாரோடு உள்ள தொடர்பை அவர் அறுத்து எறிவாராக; தம்மையே தாம் சார்ந்து நின்றே, தாம் தக்க தென்று கருதுகின்ற ஒன்றைப் பிரசாரம் செய்வாராக!''

சமுதாயச் சீர்திருத்தங்களைப் பற்றிப் பேசுகின்ற சுவாமிஜி, கைம்பெண் மணத்தைப் பற்றிப் பின் வருமாறு கூறலுற்றார்:

''கைம்பெண்கள் பெறுகின்ற கணவர்களின் தொகையைப் பொறுத்ததே ஒரு நாட்டின் நிலை என்பதை இனித்தான் நான் காணப்போகின்றேன்.''

சுவாமிஜியைக் கண்டு பேசப் பலர் கீழே காத்திருந்தனர். இதை உணர்ந்த பத்திரிகை நிருபர், தாம் அவருக்குத் தந்த பெருந் தொந்தரையைப் பொறுத்தருளும்படி வேண்டிக்கொண்டு அவரிடம் விடை பெற்றார்.

சிவியர், அவர் மனைவியார், **டீ. ஜி. ஹாரிசன்** கொழும்பிலிருந்து வந்த புத்த மதத்தைச் சார்ந்த ஒரு செல்வர், **ஜெ. ஜே. குட்வின்** என்னும் இவர்களே அவரைப் பின் தொடர்ந்தவர்களென்று குறிக் கலாம் என நான் கருதுகின்றேன். இமயமலையில் வாழ்தற் பொருட்டுச் சிவியரும் அவர் மனைவியாரும் அவருடன் போய்க் கொண்டேயிருக்கின்றனர். இந்தியாவிலே தங்க விரும்பும் மேற் றிசைச் சிஷ்யர்களுக்கு ஓர் இல்லம் வகுக்க அவர்கள் விழை கின்றார்கள். இருபதாண்டுகளாகச் சிவியரும் அவர் மனைவியாரும் குறிப்பிட்ட ஒரு சமயத்தைப் பின்பற்றவில்லை. அவர்களுக்குப் போதிக்கப்பட்ட ஒரு சமயத்திலும் அவர்கள் ஆறுதல் காணவில்லை. சுவாமிஜி தொடர்ந்து ஆற்றி வந்த சொற்பொழிவுகளைக் கேட்ட பிறகே அவர்களுடைய இதயவுணர்ச்சிக்கும், மன அறிவுக்கும் ஆறுதல் அளிக்கக்கூடிய சமயத்தைக் கண்டதாக அவர்கள் மொழிந் தார்கள். அது முதற்கொண்டே சுவிட்ஸர்லாந்து, ஜெர்மனி, இத்தாலி, இந்தியா முதலிய நாடுகள் வழியாகவே சுவாமிஜியோடு அவர்கள் பிரயாணஞ் செய்தார்கள். பதினன்கு மாதங்களுக்கு முன்பே நியூயார்க்கில் சுவாமிஜியை முதன்முதலிற் சந்திக்க ஓர் ஆங்கிலேயப் பத்திரிகாசிரியரான **குட்வின்** என்பவர் சுவாமிஜிக்குச் சிஷ்யரானர். அவர் பத்திரிகை தொழிலையே துறந்து சுவாமிஜி யின் கைங்கரியத்தில் ஈடுபட்டார். சுவாமிஜியினுடைய சொற் பொழிவுகளைச் சுருக்கெழுத்திற் பதிவு செய்துகொண்டார். அவர் எல்லா வகையிலும் உண்மையான சிஷ்யரென்றே உரைக்க வேண் டும். சுவாமிஜி மறைகின்ற வரையில் அவருடன் சேர்ந்து வாழ்வது தான் அவரது ஆவலாகும்.

(9)

நாட்டியல் அஸ்திவாரத்தின்மீது இந்துமத மறுமலர்ச்சி

[இது 1898-ஆம் ஆண்டு, செப்டம்பர்த் திங்கள், 'பிரபுத்த பாரதா'வில் வெளி வந்தது.]

பிரபுத்த பாரதாவின் நிருபர் ஒருவர் அண்மையில் சுவாமிஜியைக் கண்டு பேசினர். அவர், ''சுவாமிஜி, உங்கள் இயக்கத்தின் சிறப்பான அமிசம் யாது?'' என்று வினவினர்.

''போராடுதலே,'' என்று சுவாமிஜி உடனே பதில் அளித்தார்.

''சமய முறையிற் போராடுதல் என்பதுதான் அதன் பொருள். மற்ற இனத்தவரும் மற்ற வகுப்பினரும் ஆன்மிகத்தை இந்திய நாடு முழுவதும் பரப்பியிருக்கின்றனர். புத்தபிரான் அவதரித்த அந்நாள் முதற்கொண்டு முதன்முதலாக எல்லைகளைக் கடந்து வையகமுழுவதும் சமயப்பணி ஆர்வமாகிய வெள்ளத்தைப் பெருக்க முயன்றவர்கள் நாங்களே,'' என்று விளக்கினர்.

''இந்திய நாடு சம்பந்தப்பட்ட இயக்கத்தின் செயல் எத்தகையதாயிருக்க வேண்டுமென்று நீங்கள் கருதுகின்றீர்கள்?''

''இந்து மதத்தின் அடிப்படையான தத்துவத்தைக் கண்டு பிடித்து அதை உணர்தற்பொருட்டு நாட்டு அறிவைத் தட்டி எழுப்ப வேண்டும். இப்பொழுது 'இந்து' என்னும் சொல் இந்திய நாட்டிலுள்ள மூன்று வகுப்புகளைத் தழுவி நிற்கின்றது. வைதிகக் குழுவினர், முகமதிய ஆட்சிப் பகுதியில் தோன்றிய சீர்திருத்தக்காரர், நவீன காலச் சீர்திருத்தக் குழுவினர் என்னும் மூன்று இனங்களைக் குறிக்கலாம். வடதிசையில் உள்ள இந்துக்களும், தென்திசையில் உள்ள இந்துக்களும் மாட்டிறைச்சி உண்ணுதலாகாதென்னும் ஓர் அமிசத்தில் ஒத்திருக்கின்றார்கள்.''

''வேதங்களின்பால் வைக்கக்கூடிய பொதுவான அன்பில் இல்லையா?''

''முற்றிலும் இல்லை. இந்த ஆர்வத்தைத்தான் நாம் மீண்டும் எழுப்ப வேண்டும். புத்தபிரான் புரிந்த செயலை இந்தியா இன்னும் தனதாக்கிக்கொள்ளவில்லை. அவரது மந்திரக் குரலால் இந்தியா மயங்கிக் கிடந்தது; ஆனால், உயிர்த்தெழவில்லை.''

''நவீன இந்தியாவில் எந்த அமிசத்தில் புத்த சமயத்தின் சிறப்பைக் காண்கின்றீர்கள்?''

''அது கண்கூடாயிற்றே! மேலும், அது எல்லாவற்றையும் ஆழ்த்தக்கூடிய வலிமையுள்ளதாயும் இருக்கிறது. ஒன்றையும் இந்தியா இழந்துவிடுவதில்லை என்பதை அறிவீர்கள். அதன் எலும்போடு எலும்பாய், தசையோடு தசையாய் ஒன்றாவதற்குக் காலங் கழியவேண்டியிருக்கிறது. விலங்கைப் பலியிடும் வேள்விக்குப் புத்த

பிரான் கொடுத்த அடியினின்றும் இந்தியா மீண்டும் கிளம்பவில்லை, புத்த பிரான், 'பசுவைக் கொல்லாதீர்கள்,' என்று பணித்தார். ஆகையால், பசுவைக் கொல்லுதல் நம்மால் ஒரு பொழுதும் இயலாத செயலாய்விட்டது.''

''சுவாமிஜி, மூன்று வகுப்புகளில் எந்த வகுப்போடு நீங்கள் ஒன்றிப்போகப் போகின்றீர்கள் ?''

''எல்லாவற்றோடுந்தான். நாம் வைதிக இந்துக்கள்,'' என்று சுவாமிஜி மொழிந்தார். ஆனால், உடனே மிகுந்த ஆர்வத்துடனும் அழுத்தம் திருத்தமாகவும் உரைத்தார்: '''அதைத் தொடாதே!' 'இதைத் தொடாதே!' என்று கூறுபவர்களோடு நாம் சற்றும் இணைந்திருத்தல் இயலாது. இவ்வழக்கம் இந்து மதத்தைச் சார்ந்ததன்று. இத்தகையதொன்று நம் நூல்களிற் காணப்படவில்லை. இது அவைதிக மூட நம்பிக்கையாகும். இது உட்புகுந்து நாட்டின் வலிமையை நலிவுறுத்திக்கொண்டே வந்திருக்கிறது.''

''நீங்கள் விரும்புவதே நாட்டின் வலிமையாகுமோ ?''

''ஆம்; அது திண்ணம். ஆரிய நாடுகளுள் நம்நாடு ஏன் பின் வாங்கும்? கடலனைய மிகத்தாழ்ந்த நிலையிலிருப்பதற்குக் காரணம் காண இயலுமா? அறிவில் இந்தியா கீழ்ப்பட்டதா? திறத்திலே கீழ்ப்பட்டதா? இந்தியாவின் கலையைப் பாருங்கள்! அதன் கணித சாத்திரத்தைக் கவனியுங்கள்! அதன் தத்துவத்தை நோக்குங்கள்! நோக்கியும் அது கீழ்நிலையிலிருக்கிறது என்று கூற இயலுமா? இந்தியா தன் மந்திர மயக்கத்தை உதறித் தள்ளிவிட்டு, நெடுந் துயிலிலிருந்து விழித்தெழுந்து, நாடுகளின் வரிசைப் படிகளில் தனக்குரிய உண்மையான இடத்தைப் பெறவேண்டும்.''

''இந்தியா தனது ஆழ்ந்த ஆன்மிக வழ்வை அடைந்து தானே இருக்கிறது? அதை உலகியலில் பரபரப்புடன் இயங்கச் செய்தால், அது தனது சிறந்த ஆன்மிகச் செல்வத்தை இழந்து விடக்கூடும் என்னும் அச்சம் உங்களுக்கு எழவில்லையா ?''

''சிறிதும் எழவில்லை. அதன் பண்டை வரலாறு அதன் ஞான வாழ்வை வளரச் செய்தது; மேலை நாட்டாரின் புறவாழ்வு செழித்தது. முன்பு இவ்விரண்டிற்கும் முரண்பாடிருந்தது. இவ்விரண்டும் இணையக்கூடிய காலம் நண்ணிவிட்டது. இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஆன்மிக ஆழங்களைக் கண்டவர்; ஆனால், புறவாழ்வில் அவரைப் போன்ற தீவிரமுடையவர் ஒருவரும் இலர். உங்கள் வாழ்வு கடலனைய ஆழத்தைப் பெறட்டும்; ஆனால், அது விண்ணைப்போல விரிவடையட்டும்.''

மீண்டும் சுவாமிஜி பேசலுற்றார்: ''புற வாழ்வின் நிலைகள் நமது ஆற்றலுக்கு வரம்பு கட்டி அதை முடமாக்கும் போதுதான் நமது அகவுயிர் மிகத் தீவிரமாய் வளர்கின்றது. இது ஓர் ஆச்சரியமான செயலன்றோ? இது தற்செயலாக நிகழக்கூடியது. இவற்

றிற்கு முக்கியமான தொடர்புண்டு என இயம்புதற்கில்லை. இந்தியா வில் நம்மை நாம் ஒழுங்குபடுத்திக்கொண்டோமானால், உலகம் ஒழுங்குபட்டுவிடும். ஏனெனில், நாம் அனைவரும் ஒன்றல்லவா?''

''சுவாமிஜி, உங்கள் இறுதிக் குறிப்புகள் மற்றொரு கேள்வியை எழுப்புகின்றன: இந்துமத மறுமலர்ச்சியில் இராமகிருஷ்ணருக்கு எம்முறையிற் பங்குண்டு?''

''இதை வரையறுத்துச் சொல்ல என்னால் இயலாது. நான் தனிப்பட்ட சான்றோர்களின் இயல்பைப் பற்றிப் பிரசாரம் செய்ய வில்லை. இந்தப் பெரிய அனுபூதிமான் ஆர்வந்தான் எனக்குத் துணை யாய் இருக்கிறது. இத்தகைய மனப்பாங்கில் எவ்வளவு வரையிற் கலந்துக்கொள்ளக் கூடும் என்பதை அவரவர்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு உயர்ந்த ஞான ஆவேசமாய் இருந்த போதிலும், ஒரு வாய்க்கால் வழியாக இது உலகத்திற்கு வடிகட்டி வருவதில்லை. ஒவ்வொரு தலைமுறைக்கும் புதிய புதிய ஞான ஆவே சம் வேண்டும். நாமனைவரும் கடவுளர் அல்லவா?''

''நல்லது; உங்களை மற்றொன்று கேட்க விரும்புகிறேன்: உங் கள் நாட்டு மக்களைப் பொறுத்தமட்டில் உள்ள இயக்கத்தின் நோக் கத்தைப் பற்றியும் அதன் செயலைப்பற்றியும் சொன்னீர்கள். இவ் வண்ணமே எல்லாச் செயல் முறைகளையும் தழுவக்கூடிய ஒன்றை வகுக்க இயலுமா?''

''எங்கள் முறையை மிக எளிதிற் சித்திரிக்கலாம்: நம் நாட்டு வாழ்வை மீண்டும் நிலை நாட்டுவதே நமது கடமை. புத்தர், துற வைப் பற்றிப் பிரசாரம் செய்தார். இந்தியா அதைக் கேட்டது. ஆனால், ஆறு நூற்றாண்டுகளிலேயே அது மிக்க உயர்வை அடைந்து விட்டது. துறவிலேதான் அதன் மர்மம் திகழ்கின்றது. துறவும் தொண்டுமே நாட்டின் இலட்சியங்களாகும். இந்தத் துறையில் இந்தியாவை மிக்க ஆர்வத்துடன் இறங்கச் செய்தால், மற்றவற் றைப் பற்றிக் கவலைப்பட வேண்டுவதில்லை. இந்த நாட்டில் ஆன் மிகக் கொடியை எவ்வளவு தூக்கி உயர்த்துதலும் தகும். அது தான் இதன் உய்விடமாகும்.''

(10)

இந்தியப் பெண்டிரின் பண்டைய, நிகழ்கால, எதிர்கால வாழ்க்கை

[இது 1898-ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள், 'பிரபுத்த பாரதா'வில் வெளியானது.]

ஒரு ஞாயிற்றுக்கிழமைக் காலையில், இமயமலையின் வனப்பு வாய்ந்த ஒரு பள்ளத்தாக்கிலேதான் நான் என் பத்திரிகைத் தலைவரின் கட்டளையைக் கடைசியாக நிறைவேற்ற முடிந்தது. நமது நாட்டு நங்கையரின் நிலையைப்பற்றியும், எதிர்காலப் பேற்

றைப்பற்றியும் சுவாமிஜி கொண்ட கருத்துகளை அறிய அவரை நண்ணினேன். நான் எனது நோக்கத்தைக் கூறியதும், ''நாம் சிறிது நேரம் உலவி வரலாம்,'' என்றார் சுவாமிஜி. உடனே நாங்கள் உலகத்தில் கண்கவர் காட்சிகள் சிலவற்றிடையே உலவினோம்.

ஒளி நிறைந்து, நிழலோங்கு வழிகளினூடே நாங்கள் சென்றோம். அமைதி நிலவும் கிராமங்களையும், துள்ளி விளையாடும் குழந்தைகளையும், பொன் வண்ண வயல்களையும் கடந்து சென்றோம். ஓரிடத்தில் உயர்மரங்கள் வானளாவ வளர்ந்திருந்தன. மழைக் காலச் சேமிப்பிற்காகக் கொண்டையில் இறகணிந்தாற்போன்று தினத்தாளை அரிந்து எடுத்துச் செல்லக் கையில் அரிவாளுடன் குடியானவ மகளிர் சிலர் குனிந்து நின்றனர். அப்பொழுது நாங்கள் சென்ற சாலை ஆப்பிள் தோட்டம் ஒன்றினூடே விரிந்தது. அங்கு, மரங்களின் அடியிலே, செக்கச் செவேலென்று பழக்குவியல்கள், இரக வாரியாகப் பிரிக்கப்படுவதற்காகக் குவிக்கப்பட்டிருந்தன. மீண்டும் நாங்கள் திறந்த வெளியில் நின்றோம். வானவெளியில் வெண்முகிற்படலத்தின்மீது பேரெழிலுடன் ஓங்கி நின்ற பனிப்படலங்களை நோக்கினோம். இறுதியில் என் அன்புத் துணைவர் அமைதியைக் கலைத்து இயம்பலானார்:

''பெண்மை பற்றிய இலட்சியம், ஆரியர், செமேந்தியர் இருவரிடத்திலும் எப்பொழுதும் ஒன்றோடொன்று முரண்பட்டே இருந்து வருகிறது. பெண்களின் முன்னிலை பத்தி நெறிக்குப் பகையானது என்று செமேந்தியர்களால் கருதப்பட்டு வருகிறது. பெண், சமயச் சார்பான செயல் எதையும் செய்தல் கூடாது. உணவிற்காக ஒரு பறவையைக்கூடக் கொல்லுதல் கூடாது. ஆனால், ஆரியர் கருத்தின்படியோ, இல்லாள் இல்லாமல் ஒருவன் ஒரு மதச் சடங்கையும் செய்தல் ஒண்ணாது!''

சுவாமிகள் சற்றும் எதிர்பாராத வகையில் எடுத்தியம்பிய சொற்களைக் கேட்டு நான் திகைத்து, ''ஆயின், சுவாமிஜி, இந்து மதம் சமயமன்றோ?'' என்று வினவினேன்.

அவர் அமைதியாக விடை அருளினர்: ''நவீன இந்து மதம் பெரும்பாலும் பௌராணிக மதமே. அதாவது, புத்த சமயத்திற்கு பின் தோன்றியது. ஔபாசனம், வேத காரியம் இவற்றை ஆற்றும் போது ஒருவன் மனைவி தவறாமல் அவனருகில் இருத்தல் வேண்டும். ஆனால், அவள் சாளக்கிராமங்களைத் தொடலாகாது. ஏனெனில், சாளக்கிராம வழிபாடு நடைமுறையில் வந்தது பௌராணிக காலத்தின் பிற்பகுதியிலேயாகும் என்று **தயானந்த சரஸ்வதி** சுட்டிக் காட்டியுள்ளார்.''

''ஆனால், நம்மிடையே ஆடவர் பெண்டிர் சமமின்மை நிலவுவதற்குக் காரணம் புத்த மதத்தின் சீரிய சத்தியே என்று நீங்கள் கருதுகின்றீர்களா?'' என்று நான் உசாவினேன்.

''உயர்வு தாழ்வு நிலவும் இடத்தில் உண்மையில் அதுவே காரணமாகும். ஆனால், திடீரென்று புகுந்த ஐரோப்பியப் பரிசீலனையினாலும், அதனால் நம்மிடையே விளைந்த (நமக்கும் அவர்க்கும் உள்ள) வேறுபாட்டைப் பற்றிய உணர்ச்சியாலும் நம் பெண் மணிகள் தாழ்ந்தவர்கள் என்னும் கருத்திற்கு நாம் எளிதே இசைவு கூற இடந்தரலாகாது. பல நூற்றாண்டுகளாகச் சூழ்நிலை பெண்ணினத்திற்குத் தேவையாய் உள்ள பாதுகாப்பை நம்மீது சுமத்தி வந்துள்ளது.''

''சுவாமிஜி, அப்படியானால், நம்மிடையே இருக்கும் பெண்களின் இப்போதைய நிலையில் நீங்கள் மனப்பூர்வமாகத் திருத்தியடைகிறீர்களா?'' என்றேன் நான்.

''ஒரு போதும் திருத்தியடையவில்லை. அவர்களுக்குக் கல்வி கற்பித்தலாகிய காரியம் வரைதான் நமக்குத் தலையிடும் உரிமை உண்டு. மங்கையர் தம் பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக்கொள்ளும் நிலையில் வைக்கப்பட வேண்டும். இப்பணியை அவர்களுக்காக ஒருவரும் செய்ய இயலாது; செய்யவும் கூடாது. அதை நிறைவேற்றிக்கொள்வதில் நம் இந்தியப் பெண்டிர் உலகில் மற்ற எவரையும் போலத் திறமையுடையவரேயாவர்,'' என்றார் சுவாமிஜி.

''புத்த மதத்தால் விளைந்த தீய சத்தி என்றீர்களே, அதற்குக் காரணம் யாது?'' என்றேன் நான்.

சுவாமிஜி, ''அம்மதம் குன்றிய நிலையிலேதான் தீமை விளைந்தது. ஒவ்வோர் இயக்கமும் தனக்கே உரிய ஏதோ ஒரு சிறப்பியல்பினால் வெற்றி பெறும். அது வீழ்ச்சியுறும்போதோ, பெருமைக்குரிய அதே அமிசம், அதன் தாழ்வுக்கு முக்கியமான காரணமாகிறது. புத்தபிரான்—மாந்தருள் ஓர் ஏந்தல்—வியத்தகு நிருமாணச் சத்தி பெற்றவர். இம்முறையாலே அவர் தம்மை உலகமே பின்பற்றுமாறு செய்தார். ஆனால், இம்மதம் துறவு வாழ்க்கை நிலையை அடிப்படையாகக் கொண்ட மதம். ஆகையால், இதில் துறவுக் கோலத்தையே பெருமை செய்யும் ஒரு தீய விளைவு ஏற்பட்டுவிட்டது. மடங்களில் துறவிகள்ஒருகூட்டமாய்க் கலந்துவாழும் வழியை முதன்முதல் ஏற்படுத்தியவர் புத்தரே. ஆனால், அச்சங்கத்தில் பெண்டிர்க்கு ஆடவரைக்காட்டிலும் தாழ்ந்த நிலையைத் தாராமலிருக்க அவரால்இயலவில்லை. மடத்துத்தலைவியர் எவ்வளவு சிறப்புற்றவரேனும், சங்கத் தலைவர் சிலரது அனுமதியின்றி, இன்றியமையாத எந்தப் பணியையும் ஆற்ற இயலாதவராய் இருந்தனர். இவ்வேற்பாடு தாற்காலிமாகப் புத்தசமயத்திற்கு உறுதியளித்ததாயினும், அதன் நீண்ட கால விளைவுகள் குறை கூறத்தக்கனவேயாகும்,'' என்று கூறினார்.

''ஆனால், வேதங்களில் துறவுநிலை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதே!'' என்றேன் நான்.

''துறவு நிலை வேதங்களில் ஒப்புக்கொள்ளப்பட்டுதான் இருக்கிறது; ஆனுல், ஆடவர் பெண்டிர்க்கிடையே வேற்றுமை கற்பியாமலே கூறப்பட்டுள்ளது. ஜனக மகாராஜரின் அவைக்கண் யாஞ்ஞவல்கியர் கேள்வி கேட்கப்பட்டவிதம் உங்களுக்குநினைவிருக்கிறதா? அவரைக் கேள்வி கேட்டவருள் முதன்மையானவள் வாசக்னவி என்பவள்; வாதில் வல்லவள். 'பிரம்மவாதின்' என்னும் பெயர் அக்காலத்தில் பிரசித்தமானது. 'திறம் படைத்த வில்லாளியின் கையில் உள்ள ஒளி வீசும் கணைகளை ஒத்தவை என் கேள்விகள்,' என்ருள் அவள். அங்கு அவளது பெண் பிறவியைப் பற்றிய கேள்வியே எழவில்லை. வளந்திகழ் நம் பண்டைய குருகுலப் பல்கலைக் கழகங்களில் சிறுவர் சிறுமியரிடையே நிலவிய சமத்துவத்தைப் போலப் பூரணமானது வேறேதாவது உண்டா? நம் வடமொழி நாடகங்களுள் சாகுந்தலத்தைப் படித்தபிறகு **தென்னிசன்** படைத்த **'இளவரசி'** நமக்கு மொழிவதற்கு என்ன இருக்கிறதென்பதை ஆராய்ந்து பாருங்கள்,'' என்ருர் சுவாமிஜி.

''நம் பண்டைப் பெருமைகளைப் புலப்படுத்த நீங்கள் பின்பற்றும் வழி வியக்கத் தக்கது, சுவாமிஜி!'' என்றேன் நான்.

''ஒருகால், உலகின் இரு வேறு கூறுகளைக் கண்டதனுல் போலும்! சீதையைத் தோற்றுவித்த இனம்—சீதையைக் கனவில் மட்டும் கண்டதாகவே வைத்துக்கொள்ளினும்—உலகிலேயே தன்னிகரில்லாத நிலையில் பெண்மையின்மீது பத்தியுடையதாகும். மேலை நாட்டு மங்கையரின் சென்னியிலே இறுகச் சட்டத்தாற் கட்டப்பட்டுள்ள பல சுமைகளைச் சுமத்தினர். உண்மையாகவே நம்மிடம் குற்றங்களும் குணங்களும் இருப்பது போலவே, அவர்களிடமும் இருக்கின்றன. மென்மை, நேர்மை என்பனவற்றை அன்பு வெளிப்படுத்த வேண்டும் என்பதே உலகினர் அனைவருடைய முயற்சியுமாகும். ஒரு நாட்டுப் பழக்க வழக்கங்களே இக்குணங்களை வெளிப்படுத்தும் மிக நெருங்கிய வாயில்கள் என்பதை நாம் எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். குடும்ப வாழ்வில் நற்பண்புகளை நிலை நாட்டுவதைப் பற்றிய விஷயத்தில் இந்தியரின் முறைகள் மற்றவர்களுடைய முறைகளைவிடப் பல வழிகளில் மேம்பட்டவை என்று மொழிவதில் எனக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை,'' என்ருர் சுவாமிஜி.

''சுவாமிஜி, அப்படியாயின், நம் பெண்டிர்க்குப் பிரச்சினைகளே இல்லையா?''

''ஏன்? எத்தனையோ உள்ளனவே! தீவிரமானவை பல உள்ளன. எனினும் கல்வியென்னும் மந்திர மணிமொழியால் நீக்க முடியாத பிரச்சினையே இல்லை. உண்மையான கல்வியின் உருவத்தை நம்மவர்கள் இன்னும் வகுக்க முடியாதவர்களாய் இருக்கிருர்கள்.''

''அதற்கு நீங்கள் வகுக்கும் இலக்கணம் யாதோ?''

சுவாமிகள் புன்முறுவல் பூத்து, ''நான் எதற்கும் இலக்கணம் கூறுவதில்லை; ஆனால், அதை ஒருவாறு சித்திரிக்கலாம். உண்மையான கல்வி வெறுஞ்சொற்குவியல்களை எழுப்புவதன்று; மக்களின் ஆற்றலை வளரச் செய்வதே என்று ஒருவாறு அதற்கு இலக்கணம் கூறலாம். அன்றியும், மனிதனை நல்ல முறையில் திண்ணமாகவும் நேர்மையுடனும் எண்ணப் பயிற்றுவதே கல்வியாகும் என்று விளம்பலாம். எனவே, இந்திய நாட்டின் நலனுக்காக நாம் அச்சமற்ற வீராங்கனைகளைப் படைப்போம். **சங்கமித்திரை, லீலா, அகல்யா பாய், மீரா பாய்** முதலியவர்கள் விட்டுச் சென்ற வரன்முறையைப் போற்றிப் பின்பற்றக்கூடிய பெண்மணிகளை எழுப்புவோம். தன்னலங் கருதாத் தியாகிகளாய், தூய்மையுள்ளவர்களாய் இறைவன் திருவடியை நண்ணியதால் வரும் ஆற்றலைப் படைத்தவர்களாய் இருப்பவர்களாதலின், வீரர்களைப் பெறும் அன்னையர்களாயிருக்கத் தக்கவர்களை உண்டு பண்ணுவோம்.''

''சுவாமிஜி, அவ்வாறாயின், கல்வியளிப்பதில் சமயச் சார்பும் கலந்திருக்க வேண்டும் என்பது உங்கள் கருத்தா?''

''மதம் கல்வியின் உட்சாரம் என்று நான் கருதுகிறேன். என் கருத்துக்களையோ வேறொருவர் கருத்தையோ நான் கூற நினைத்ததாகக் கருத வேண்டா. மற்ற விஷயங்களைப் போலவே சிஷ்யையின் நிலையை அறிந்து, அதன்மேல் அவளுக்குச் சிறிதும் எதிர்ப்பு ஏற்படாத வகையில் அவள் விரும்பும் வண்ணமே முன்னேறும் திறமை பெறவைக்க வேண்டுமென்பது என் கருத்தாகும்.''

''மத அடிப்படையில் பிரம்மசரியத்திற்கு முக்கியத்துவம் தந்து, 'தாய்மை, வாழ்க்கைத் துணை' என்னும் உயர்ந்த இடங்களைத் தாங்கும் தாய், தாரம் இவர்களின் நிலையை அவற்றை அடையாத பிரம்மசாரிணிகளுக்கு அளிப்பது, பெண்ணினத்திற்குச் செய்யும் நேரடியான தீங்காகாதா?''

''மதம் பெண்களுக்குக் கன்னிமை காத்தல் உயர்வென்று கூறினால், அம்மதம் ஆடவர்களுக்கும் அதையே விதிக்கின்றது. இதை நீங்கள் நன்றாக நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். மேலும், உங்கள் கேள்வியே உங்கள் மனத்திலுள்ள குழப்ப நிலையைக் காட்டுகிறது. இந்து மதம் மனித ஆன்மாவுக்கு ஒரு கடமையை—ஒரேயொரு கடமையை—குறிப்பிடுகிறது. அது, நிலையா உலகத்தில் நிலையானதைத் தேடி அடைவதேயாகும். அதனை அடைய வேண்டிக் குறிப்பிட்ட வழி ஒன்றையே காட்டுவதற்கு எவனும் துணியான். மணம் அல்லது மணமின்மை, நன்மை அல்லது தீமை, அறிவுடைமை அல்லது அறியாமை—எதுவாயினும் சரி—அது எண்ணத்தின் இறுதிநிலைக்குக் கொண்டு சேர்ப்பதாயின், அதன் பயனை அளித்ததாகும். இக்கொள்கையிலேதான் இந்து

மதத்திற்கும் புத்த சமயத்திற்கும் பெருவேற்றுமை விரிந்து காணப்படுகிறது. வெளித் தோற்றங்களிலுள்ள நிலையாமையை உணர்த்த வழி காட்டுவதே புத்த மதத்தின் கொள்கை. பொதுப்படையாகக் கூறவேண்டுமானால், அதனை ஒரே வழியிலேதான் அடைய முடியும். மகாபாரதத்திற் கூறப்படும் இளயோகியின் கதையைச் சற்று ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்; அவன் தன் சீற்றத்தைக் காட்டி, தீவிர எண்ணத்தின் வலியால் ஒரு காகத்தையும் ஒரு கொக்கையும் எரித்து, தன் ஆன்ம வித்தைகளிற் பெருமிதங்கொண்டு திரிந்ததை அறியீர்களா ? பிறகு அவன் நகருட்சென்று நோய்வாய்ப்பட்ட தன் கணவனுக்குப் பணிவிடை செய்யும் ஒரு பத்தினியையும் பின்னர்த் தருமவியாதன் என்னும் கசாப்புக் கடைக்காரனையும் கண்டு, அவ்விருவரும் சாமானிய நெறியான கற்புடைமையையும் கடமையையும் காத்து உள்ளொளி பெற்றனர் என்பதை உணர்ந்தான். இதனை நீங்கள் அறியவில்லையா ?''

''அப்படியாயின், சுவாமிஜி, இந்நாட்டின் பெண்களுக்கு நீங்கள் அருளும் அறிவுரை யாது ?''

''இந்நாட்டின் பெண்களுக்கு என்று மட்டும் ஏன் கூறுகின்றீர்கள் ? நான் ஆடவர்களுக்கு எதைக் கூறுவேனோ, அதையே பெண்களுக்கும் கூறுகிறேன். பாரத நாட்டை நம்புக; பாரத நாட்டின் கோட்பாடுகளில் நம்பிக்கை வையுங்கள்; வலிமை பெற்றிருங்கள்; நம்பிக்கை கொள்க; எதற்கும் வெட்கப்பட வேண்டா. தாம் ஏற்றுக்கொள்வதற்கு ஒரு சிறிது உண்டெனினும், பிறர்க்கு வழங்குவதற்கு இந்தியரிடம் உலகில் எம்மக்களினத்தைக் காட்டிலும் அளவிறந்தன உண்டென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்க.''

(11)

இந்து மதத்தின் வரம்புகளைப்பற்றிய பொருள்

[இது 1899-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 'பிரபுத்த பாரதா'வில் வெளியானது.]

''பிற மதத்தினரை இந்து மதற்திற்சேர்க்கும் பிரச்சினையைப் பற்றிச் சுவாமி விவேகானந்தரை உசாவும்படி எனக்கு என் பத்திராதிபர் கட்டளையிட்டார். ஒரு நாள் மாலை ஒரு படகில்லத்தின் மேல் தளத்தில் எனக்கு அவ்வாய்ப்புக் கிடைத்தது,'' என்று எங்கள் நிருபர் எங்களுக்கு எழுதுகின்றார்.

இரவு சூழ்ந்துவிட்டது. இராமகிருஷ்ண மடத்தின் கரையருகிற் படகை நிறுத்தினோம். எனக்கு அருள் புரிவதற்குச் சுவாமிஜி கீழே இறங்கி வந்தார். இன்பமான பொழுது—களியூட்டும் இடம்

—தலைக்கு மேல் விசும்பில் விண் மீன்கள் மிளிர்கின்றன. எங்களைச் சூழ்ந்து கங்கை பரந்து பெருகிக்கொண்டிருக்கின்றது. மங்கிய ஒளி திகழ் கட்டடம் ஒன்று காட்சியளிக்கின்றது. பின்னணியில் பனை மரங்களும், ஓங்கி வளர்ந்த நிழல் தரும் தருக்களும் நிற்கின்றன.

" 'நம்முடைய இந்து மதத்திலிருந்து நீங்கினவர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ளலாமா?' என்னும் பொருள் பற்றிப் பேசுதற் பொருட்டே யான் உங்களைக் காண வந்தேன்," என்று நான் பேச்சைத் தொடங்கினேன்; "அவர்களைச் சேர்த்துக்கொள்வதுதான் உங்கள் கருத்தா?" என்ற பேச்சைத் தொடர்ந்தேன்.

"ஆம்; உண்மையிலேயே அவர்களைச் சேர்த்துக்கொள்ள இயலும்; சேர்த்தே தீரவேண்டும்," என்று கூறிச் சுவாமிஜி ஒரு கணப்பொழுது ஆழ்ந்த தீவிரமான சிந்தனையில் மூழ்கியிருந்தார்; பின்பு பேச்சைத் தொடர்ந்தார்: "இப்படிச் செய்யாமற்போனல், நாம் மக்கள் தொகையிற் குறைந்துகொண்டே போய்விடுவோம். முகமதியர்கள் நம் நாட்டிற்கு வந்ததும் நாம் அறுபது கோடி மக்களாய்த் திகழ்ந்தோம் என்பது கூறப்படுகின்றது. முகமதிய சரித்திராசிரியர்களுள் மிகவும் பழமை வாய்ந்தவரான **பிரிஷ்டா** என்பவர் கூறும் பிரமாணத்தைக் கொண்டு இவ்வாறு மொழிகின்றனர். இப்பொழுது அத்தொகை இருபது கோடிகளுக்கு இறங்கிவிட்டது. ஒருவன் இந்து மதத்தை விட்டு அகலுவானாயின், அந்த அளவில் நமது மக்கள் தொகுதியில் ஓர் எண் குறையத்தானே நேரும்? மேலும் நமக்கு எதிரிகளாகிய மக்கள் தொகுதியில் ஒருவன் அதிகமாய்விடுவானல்லவா? முகமதிய மதத்தையோ, அல்லது கிறித்தவ சமயத்தையோ தழுவிய பெரும்பாலாரான இந்தியர், வாளுக்கு அஞ்சியே முதன்முதல் சேர்ந்திருக்க வேண்டும். அல்லது இவர்களுடைய மரபில் தோன்றியவர்களாய் இருக்கவேண்டும். இவர்களை எந்த விதமான இன்னலுக்கும் ஆளாக்குவது நேர்மையன்று என்பது கண்கூடாகும். 'பிறவியிலேயே அன்னியர்களாய் இருப்பவர்களைப்பற்றி என்ன செய்யலாம்?' என்று நீங்கள் வினவலாம். கூட்டக் கணக்கான மக்கள் பண்டைக் காலத்திற் பிற மதத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த முறை இன்னம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. இப்படிக் கூறுவது பண்டைய உள் நாட்டு மக்களின் கூட்டங்களையும், புற நாடுகளையும், முகமதியர் படையெடுத்து நம்மை வெற்றி கொள்வதற்கு முன்பு தோன்றி நம்மைத் தோல்வியுறச் செய்தவர்களையும் சார்ந்து நிற்கும் என்பது எனது கருத்தாகும். புராணங்களிற் காணப்படுகிற தனி மூலங்கொண்ட சாதியார்களையும் இது சுட்டும். அவர்களும் அன்னியர்களாய் இருந்து பின்பு ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் என்றே நான் கருதுகிறேன். மனம் ஒப்பியே பிற சமயத்தைத் தழுவிப் பின்பு தாயக

மான தம் சமயக் கோயிலை நண்ணுகிறவர்களுக்குக் கழுவாய்ச் சடங்குகள் பொருத்தமுடையனவே என்பதில் யாதோர் ஐயமுமில்லை. காஷ்மீர், நேப்பாளம் முதலிய பிரதேசங்களிற் படையெடுப்பின் வெற்றி காரணமாகப் பிறர் மதங்களைத் தழுவினவர்களுக்கும், அல்லது நம்முடைய மதத்தைத் தழுவ விழைகின்றவர்களுக்கும் யாதொரு கழுவாய்ச் சடங்கையும் விதிக்கக்கூடாது.''

''சுவாமிஜி, இவர்கள் எந்தச் சாதியைச் சார்ந்தவர்களாயிருப்பார்கள்?'' என்று நான் துணிந்து கேட்டேன். ''ஏதாவது ஒரு சாதி இருக்கவேண்டுமே! இல்லாமற்போயின், இந்துமத உடலோடு ஒன்றிப் போகாதன்றோ? அவர்களுக்குரிய தக்க இடத்தை எங்கே நாம் நாடலாம்?''

''நம் மதத்தில் மீண்டும் சேருகிறவர்கள் தங்கள் சாதிகளைப் பெறுவார்கள். புதியவர்கள் தங்களுக்குரிய சாதிகளை அமைத்துக் கொள்வார்கள். வைணவத்தில் இம்முறை பின்பற்றப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு நினைவிருக்கும். அன்னியரும், பல சாதிகளிலிருந்து வந்தவர்களும் அதன் கொடிக்கீழ்த் தங்கி ஒரு தனி இனத்தவராய் அமைந்துவிட்டனர். அந்த இனம் மிகவும் போற்றுதற்கு உரியது. இராமானுசர் முதல் வங்காளத்துச் சைதன்னியர் வரையில் திகழ்ந்த பெரிய வைணவ ஆசாரியர்கள் இம்முறையையே ஆண்டிருக்கிறார்கள்.''

''புதியவர்களாய்ச் சேர்ந்தவர்கள் எங்கே மணம் புரிதல் கூடும்?''

''இப்பொழுது புரிகிறது போலவே அவர்களிடமே செய்து கொள்வார்கள்,'' என்று சுவாமிஜி அமைதியாய்ப் பதிலளித்தார்.

''அவர்கள் எப்பெயரை வைத்துக்கொள்வது?'' என்று வினவினேன்; ''இந்துப் பெயர்களைப் புனையாத அன்னியர்களும், வேறு மதத்தைத் தழுவிப் பின்னர் நம்மைச் சார்ந்தவர்களும் புதிய பெயர்களை வைத்தல்லவோ வழங்கப்பட வேண்டும்?'' என்றேன்.

''ஆம்; அது உண்மைதான். ஒரு பெயரிற் பெரும்பொருள் இருக்கத்தான் இருக்கிறது,'' என்று சிந்தனையில் ஆழ்ந்தபடியே சுவாமிஜி அருளினார்.

இந்த வினவைத் தொடர்ந்து அவர் மேலொன்றும் மொழியவில்லை. ஆனால், நான் வினவிய அடுத்த வினா, அவருக்கு வேகத்தைத் தூண்டிற்று.

''சுவாமிஜி, பல வடிவங்கள் வாய்ந்த இந்து மதத்தின் கொள்கையைப் புதியவர்களாய்ச் சேர்ந்தவர்களையே தேர்ந்துகொள்ளும்படி செய்வீர்களா, அல்லது அவர்களுக்கு நீங்கள் ஒரு சமய நெறியை வகுப்பீர்களா?'' என்று வினவினேன்.

''என்ன கேள்வி கேட்டீர்கள்? அவர்களே தான் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். அவரவர்களே தேர்ந்து, பின்பற்றாவிட்

டால், இந்து மதத்தின் உட்சாரம் குலைந்து போய்விடும். நம் சமய சாரம் நம் இச்சையின் சுதந்திரத்திலேதான் தங்கியுள்ளது.''

அவர் கூறியது மிக்க பொருட்செறிவு கொண்டது என்று நான் நினைத்தேன். நம் முன் நிற்கிற சான்றோர், உயிரோடிருக்கின்ற மற்றவர்களைக்காட்டிலும் பல ஆண்டுகள் ஆன்மிகத் துறையில் உழைத்திருக்கிறார். இந்து மதத்தின் பொதுவான அடிப்படைத் தத்துவத்தைப் பரிவோடு விஞ்ஞான முறையில் ஆராய்ந்து பார்த்தால், 'அவரவர் இச்சைப்படி' என்னும் தத்துவம் இவ்வையகத்தையே தழுவி நிற்கக்கூடிய அளவில் பெரியதாய்த் திகழும் என்று நான் நினைக்கிறேன்.

பேச்சோ, பல பொருள்களைப் பற்றி விரிந்தது. உள்ளம் குளிர, ''இனிது போய் வாருங்கள்,'' என்று கூறி, விளக்கைத் தூக்கிய வண்ணம் எங்களை வழியனுப்பிப் பிறகு மடத்திற்குள் சுவாமிஜி மறைந்துவிட்டார்.

பாதை அல்லாத பாதைகளையுடைய கங்கையாற்றில் பல வடிவங்களையுடைய சிறிய மரக்கலங்களுக்கிடையே படகூர்ந்து நாங்கள் இயன்ற அளவு இன்பமாய்க் கல்கத்தாவிலுள்ள எங்கள் இல்லங்களை அடைந்தோம்.

பௌத்தச் சார்புள்ள இந்தியா

[1900-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ம் தேதியன்று இரவு எட்டு மணியளவில் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள பாஸடேனு எனும் ஊரில் ஷேக்ஸ்பியர் கழகத்தில் பேசியது].

இன்றிரவு யாம் பேச எடுத்துக்கொண்டுள்ள பொருளாவது, பௌத்த பாரதம் என்பது. ஒருகால் உங்களில் கிட்டத் தட்ட அனைவருமே எட்வின் ஆர்னல்ட் என்பார் எழுதியுள்ள புத்த சரித்திரக் கவிதையைப் படித்திருப்பீர்கள். ஒருகால் உங்களிற் சிலர் இன்னும் அதிகமான பாண்டித்திய அக்கறையுடன் இப்பொருளுக்குள் புகுந்து சென்றிருப்பீர்கள்; ஏனெனில் இங்கிலிஷ், பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளிலே பௌத்த இலக்கியம் ஏராளமாக வெளியாகியுள்ளது. உரையாற்றுதற்கான பொருள்களுக்குள் பௌத்தமே அனைத்தினும் மிக்க இனிமை உள்ளதாகும்; ஏனெனில் முதன் முதலாகச் சரித்திர காலத்தே வெடித் தெழுந்த உலக சமயம் பௌத்தமே. பௌத்தம் தோன்று முன்னே இந்தியாவிலும் வேறிடங்களிலும் பெருஞ் சமயங்கள் இருந்து வந்துள்ளன. ஆனல் பேரளவிலோ சிறிய அளவிலோ அச்சமயங்கள் தத்தம் மக்களினங்களுக்குள்ளே அடங்கியவையாயின. பண்புடைய இந்துக்களோ பண்டைய யூதர்களோ பண்டைய பாரசீகர்களோ—இவர்களுள் ஒவ்வொருவரும் ஒரு பெரும் சமயத்தைப் பெற்றிருந்தனர். ஆனல் இந்தச் சமயங்கள், அதிகமாகவோ குறைவாகவோ ஓரினத்தைச் சார்ந்தனவாகவே இருந்தன. சமயம் என்பது துணிந்து உலகை வெல்லுதற்காக வெளியே புறப்பட்ட விசித்திர நிகழ்ச்சி, பௌத்தத்திலே தான் முதன் முதலாகத் தொடங்குகின்றது. அச்சமயத்தின் கொள்கைகளும், அது போதித்த உண்மைகளும், அது அளிக்க வேண்டியிருந்த செய்தியும் ஒருபுறமிருக்கட்டும்,—பௌத்த சமயத்தினிடம், உலகின்கண் ஏற்பட்ட மாபெரும் கிளர்ச்சிகளுள் ஒன்றினை அதிலே நேருக்கு நேரே காண்கிறோம். அச்சமயம் தோன்றிய சில நூற்றாண்டுகட்குள்ளே பாதுகையற்ற தலை மழித்த பௌத்தத் துறவிகள் அக்காலத்திலே மக்களுக்குத் தெரிந்திருந்த தான நாகரிக உலகமுழுவதிலுமே பரவி விட்டனர்; இன்னும் வெகுதொலைவரை புகுந்து, ஒருபுறத்தேயுள்ள லாப்லாந்து நாட்டினின்றும் மறுபுறத்தேயுள்ள பிலிப்பைன் தீவுகள் வரையிலும் சென்றனர். புத்தர் பிறந்து ஒரு சில நூற்றாண்டுகள் ஆகுமுன்னே அவர்கள் விரிவான பிரதேசத்திலே பரவி விட்டனர். மேலும் இந்தியாவிற்குள்ளே புத்தருடைய சமயம் ஒரு காலப் பகுதியிலே

மக்களுள் மூன்றில் இருபங்கு தொகையினரைக் கிட்டத்தட்ட விழுங்கியே விட்டதென்னலாம்.

ஒரு காலத்திலும் இந்தியா முழுவதும் பௌத்தத்தைச் சார்ந்ததாக இருந்ததில்லை. பௌத்தத்திற்குப் புறம்பே நின்றது பாரதம். கிறித்தவ சமயத்திற்கு யூதர்களிடை நேர்ந்த கதியே பௌத்தத்திற்கும் நேரலாயிற்று. யூதர்களிற் பெரும்பாலோர் கிறித்தவத்தினின்றும் விலகியே யிருந்து விட்டனர். எனவே பழைய இந்து சமயம் பௌத்தம் தோன்றிய பிறகும் தொடர்ந்து வாழ்ந்தது. ஆனுல் இரண்டு சமயங்களுக்கும் உள்ள ஒப்புமை இதோடு நின்று விடுகின்றது. யூத இனம் முழுவதையும் கிறித்தவம் தனக்குள் சேர்த்துக்கொள்ள முடியாது போனுலும், தானே நாட்டினைக் கைப்பற்றிக் கொண்டது. யூதர்களுடைய பழைய சமயம் பரவியிருந்த இடத்தினை வெகு சுருக்கமான காலத்திலே கிறித்தவம் வென்று விட்டது. பின்னர் அந்தப் பழைய யூத சமயம் சிதறடிக்கப்பட்டது. எனவே யூதர்களுடைய சமயம் உலகத்தின் பல்வேறு பகுதிகளிலே அங்குமிங்குமாகச் சிதறிய வாழ்வினத்தாகின்றது. ஆனுல் இந்தியாவிலோ பௌத்தம் என்கின்ற இந்த பிரம்மாண்டமான குழந்தை, காலப்போக்கிலே அதை ஈன்றெடுத்த தாயினுல் இணைத்துக் கொள்ளப்பட்டுவிட்டது. ஆகவே இன்று இந்தியா எங்கணுமே புத்தருடைய பெயரும் பெரும்பாலும் அறியப்படாத தொன்ருகவே இருக்கின்றது. பாரத வாசிகளிலே நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர்களைவிட அமெரிக்கர்களாகின்ற நீங்கள் புத்தரைப்பற்றி அதிகமாகத் தெரிந்துகொண்டிருக்கின்றவர்கள் ஆவீர்கள். மிக அதிகமானுல் இந்திய மக்கள் புத்தருடைய பெயரை மட்டுமே அறிவார்கள்—''ஓகோ, அவர் மகத்தான தீர்க்கதரிசி, இறைவனுடைய பேரவதாரம் என்பார்கள் அவர்கள்—அவ்வளவுதான்—அதற்குமேல் ஒன்றும் சொல்லார். இலங்கைத் தீவு புத்தருடையதாகவே உளது, இமயப் பிரதேசத்தின் சில பகுதிகளிலே இன்னமும் சில பௌத்தர்கள் உள்ளனர். இதற்குமேலாக இந்தியாவிலே பௌத்தர்கள் எவருமிலர். ஆனுல் ஆசியாவின் மற்றப் பகுதிகளிலெல்லாம் பௌத்தம் பரவியுள்ளது.

ஆயினும் எந்தச் சமயத்தையேனும் பின்பற்றுவோருள்ளே மிகப் பெருந்தொகையினரைப் பெற்றுள்ளது பௌத்தமேயாகும்; இன்னும் மற்ற சமயங்கள் எல்லாவற்றின் போதனைகளையும் பௌத்தமானது மறைமுகமாக மாற்றியமைத்துள்ளது. பௌத்தம் பேரளவிலே ஆசியா மைனர் நாட்டினூடே புகுந்தது. ஒரு காலம் நிகழ்ந்த போராட்டத்திலே, பௌத்தர்கள், கிறித்தவ மதப் பிற்காலப் பிரிவினர்—இவர்களில் எவர் மேலோங்கி நிற்பார் என்பது அறியப்படாததாயிற்று. நாஸ்டிக்ஸ் என்பாரும் ஆதி

கிறித்தவப் பிரிவினரும் ஏறக்குறைய பௌத்தச் சார்புடையவரா யினர். இவையாவும் அலெக்ஸாண்டிரியா என்ற அந்த ஆச்சரிய நகரத்திலே இணைந்து ஒன்ருயின; ரோமானியச் சட்டத்தின் கீழ் ஏற்பட்ட இணைப்பின் விளைவாகக் கிறித்தவம் வந்துற்றது. பௌத்தம் அதனது அரசியற் பகுதியிலும் சமூக இயற்பகுதியிலுமே அதனுடைய கொள்கைகளை விட அதிக இனிமை உடையதாகும்; அன்றியும் உலகை வெல்லும் மாபெரும் சமயத்திறன் முதன் முறை வெடித்தெழுந்த நிகழ்ச்சியாலும் அது இனிமையுடைய தாகும்.

இந்தப் பிரசங்கத்திலே நான் பெரும்பாலும் அக்கறைகொண் டுள்ளது, பௌத்தம் இந்தியாவை எவ்வாறு பாதித்தது என்பதி லேதான்; பௌத்தத்தையும் அதன் எழுச்சியையும் ஒரு சிறிது அறிந்துகொள்வதற்கு, இந்த மகா ஆசாரியார் பிறந்தபொழுது இந்தியா எவ்வாறு இருந்தது என்பதைப்பற்றிய கருத்துகள் சிலவற்றை நாம் பெறவேண்டும்.

ஏற்கனவே இந்தியாவிலே பெரியதொரு சமயம் ஒழுங்குபடுத்தி அமைக்கப்பெற்றதொரு சமய சாஸ்திரத்தோடு இருந்தது. அதை வேதங்கள் என்பர். இந்த வேதங்கள் ஓர் இலக்கியத் தொகுப்பாக இருந்தன, ஒரு நூலாக இல்லை. பைபிள் நூலிலே பழைய ஏற்பாடு எனும் பகுதியை நீங்கள் காண்பது போன்றே. பைபிள் என்பதோ பல்வேறு காலப்பகுதிகளைச் சேர்ந்த இலக்கியத்தொகு தியே யாகும்; பல்வேறு பேர்கள் அவற்றை எழுதியவர்கள்; இவ்வாறே பிறவும். அது ஒரு தொகுப்பு ஆகும். வேதங்களும் மிகப்பெரிய தொகுப்புதான். வேதங்களின் கிரந்தங்கள் யாவும் கண்டுபிடிக்கப்படுமானல்—அந்த கிரந்தங்கள் எல்லாவற்றையும் எவருமே கண்டதில்லை; இந்தியாவிலும் எவருமே அந்தப் புத்த கங்கள் அனைத்தையும் பார்த்ததில்லை—அந்த நூல்கள் யாவும் காணப்படுமாயின் அவற்றை இந்த அறை கொள்ளுமா என்பது எனக்குத் தெரியாது. அவை எல்லாம் ஒரு மாபெரும் இலக்கியத் தொகுதி யாகும். வேதங்களை அளித்தருளிய இறைவனிடமிருந்து பரம்பரையாக அவை கொண்டுவரப்பட்டுள்ளன. பின்னர் இந்தி யாவிலே வேதங்களை மிகப் பேரளவுக்கு சமயப்பிரமாணமாகக் கருத லாஞர். சமய நூல்களை வழிபடும் உங்களது வைதிக மரபைப் பற்றி, நீங்கள் குறை கூறுகின்றீர்கள். ஆனல் இந்துக்களுடைய கருத்தினை நீங்கள் பெறுவீர்களாயின் நீங்கள் எங்கு போவீர்களோ ! இறைவனிடத்திலிருந்து நேராக வந்துள்ள ஞானமே வேதங்க ளாகும் என்றும், வேதங்களின் மூலமே வேதங்களைக் கொண்டே பிரபஞ்சம் யாவையும் இறைவன் படைத்துள்ளான் என்றும், பிரபஞ்சம் யாவும் வேதத்தினிடம் இருப்பதாலேயே அது இருந்து வருகின்றது என்றும் இந்துக்கள் எண்ணுகின்றனர். பசு வெளியில்

இருப்பது ஏனெனில், பசு எனும் சொல் வேதங்களில் இருப்பதாலே யேயாம். மனிதன் வெளியில் இருப்பதன் காரணம், வேதத்தில் உள்ள மனிதன் எனும் சொல் இருத்தலே. ''ஆதியிலே வாக்கு இருந்தது, வாக்கு இறையிடத்து இருந்தது'' என்ற கூற்றினில் வெளியிடப்படுகின்ற கொள்கையின் தொடக்கத்தை இங்கு காண்கின்றோம். பின்னால் கிறித்தவர்கள் இதை விரித்துப் பெரிதாக்கி மேற்கண்ட கூற்றாக வெளியிட்டனர். இந்தக்கொள்கை இந்தியாவின் பழைய புராதனமான கொள்கையாகும். அதன் மீதுதான் வேதங்களின் முழுக்கருத்தும் நிலைத்து நிற்கின்றது. இன்னொன்று கவனியுங்கள். ஒவ்வொரு வாக்கும் இறையின் சக்தியேயாகும். வாக்கு என்பது பௌதிக நிலையிலே ஆகியுள்ள தோற்றமேயாம். வாக்கு என்பதே வேதங்கள்; சம்ஸ்கிருதமே தேவ பாஷை; இறைவன் ஒரு தடவை பேசினார், அவர் சம்ஸ் கிருதத்திலே பேசினார். எனவே சம்ஸ்கிருதம் தேவ பாஷை யாகும், மற்றெந்த பாஷையும் வெறும் மிருகங்களின் கூச்சலுக்கு மேலில்லை—என்று அவர்கள் கருதுகின்றனர். இதைக் குறிப் பிட்டுக்காட்டுதற்காக, அவர்கள் சம்ஸ்கிருதம் பேசாத ஒவ்வொரு வேற்று நாட்டினனையும் மிலேச்சன் என அழைக்கின்றனர். கிரேக்கரின் 'நாகரிகமற்றவன்', 'பார்பேரியன்' என்ற சொற் போன்றதேயாகும் இது. மற்றவர்களெல்லாம் வெறுமனே கத்து கின்றனர், மொழி பேசுகின்றவர் அல்லர் என்பதே. சம்ஸ் கிருதமே தேவ பாஷை என்பது அவர்கள் முடிபு.

ஒன்று—வேதங்கள் எவராலும் எழுதப்பட்டன அல்ல, அவை நித்தியமாக இறைவனுடன் கூடவே இருந்துவந்துள்ளன. இறை வன் அகண்டப் பொருள். அறிவும் அகண்டமானதுதான். இந்த அறிவின்மூலம் பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்படுகின்றது, அறநெறி பற்றிய அவர்கள் கருத்து இதுதான்: ஒரு பொருள் நல்லது ஆகுமானல், வேதம் அவ்வாறு விதித்திருப்பதால்தான். யாதுமே அந்த வேத புத்தகத்தின் எல்லைக்குட்பட்டதாகின்றது; அதற்குப் புறம்பாக எதுவுமே இருக்கமுடியாது. ஏனெனில் இறை ஞானம் யாதோ, அதைத்தாண்டி அப்பால் நாம் செல்லமுடியாதல்லவா? இதுவே இந்திய வைதிக மரபு. வேதங்களின் உத்தரபாகத்திலே அதிஉயர்ந்ததான ஞான போதனை உள்ளது. பூர்வ பாகத்திலே உள்ளது பண்படாத பகுதி. வேதங்களினின்றும் ஒரு பகுதியை நீங்கள் எடுத்துக் கூறி, ''இது நல்ல போதனை அல்லவே'' என்கின்றீர்கள். ஏன்? ''அதில் உள்ளது தெளிவானதொரு தீய ஆணையாகவன்றோ உள்ளது'' என்பீர்கள்—பைபிள் நூலிலே பழைய ஏற்பாடு என்னும் பகுதியில் நீங்கள் காண்பதும் இதுவே. பண்டைய நூல்கள் யாவற்றிலுமே பலபல விஷயங்கள், விசித்திரமான கருத்துகள் இருக்கின்றன; இந்த நம்முடைய

தற்காலத்திலே அவற்றை நாம் விரும்ப மாட்டோம். எனவே நீங்கள் ''இந்தக் கொள்கை கொஞ்சமும் நல்லதாக இல்லை, ஏன் என்னுடைய அறநெறியுணர்வினை அதிரச் செய்கிறது?'' என் பீர்கள். இந்துக்கள் கேட்பது இதுதான்: ''உன்னுடைய கருத்தை நீ எவ்வாறு பெற்றாய்? (வெறுமனே) உன்னுடைய சொந்தச் சிந்தனையினின்றும்தானே! அப்படியானால் போய்விடு வெளியே! கடவுளே அதை விதித்திருக்கின்றார் என்றால் அதை மறுக்க உனக்கு உரிமை ஏது? 'இதைச் செய்யாதே, இது அநீதியாகும்' என்றவாறு வேதங்கள் கூறும்பொழுது அதை மறுக்க உனக்கு உரிமையே இல்லை.'' நீங்கள் ஒரு இந்துவிடம் சென்று ''எங்களுடைய பைபிள் நூல் இவ்வாறு கூறவில்லையே'' என்று சொல்வீர்களாயின் அவன் இவ்வாறு பதிலுரைப்பான்: ''ஆகா, உங்கள் பைபிள் நூலா? அது சரித்திர காலத்தில் பிறந்த குழந்தையன்றோ! வேதங்களையன்றி வேறு பைபிள் ஒன்று இருக்கக்கூடுமா? வேறு சாஸ்திரம் ஒன்று இருக்கக் கூடுமா? ஞானம் எல்லாமுமே இறைவனிடத்து உள்ளது. அவர் இரண்டோ அதற்கு மேற்பட்டதோ ஆன பைபிள்கள் மூலம் தான் போதிக்கின்றார் என்பதா உங்களுடைய கருத்து? அவ ருடைய அறிவுதான் வேதங்களில் வெளியாகிவிட்டதே. அதை வெளியிட்ட அப்பொழுது, அவர் பிழை ஒன்று புரிந்தார் என்பதா நமது கருத்து? அதன் பின்னர் அவர் அதனினும் செம்மையான ஏதோ ஒன்றைச் செய்ய விரும்பியவராய் வேறு ஒரு நாட்டினருக்கு இன்னொரு பைபிள் நூலைப்போதித்தார் என்பதா உங்களது கருத்து? வேதங்களைப்போன்று பழைமையான வேறு ஒரு நூலை நீர் கொண்டுவந்து காட்டிவிட முடியாதே. வேதங்கள் அல்லாத மற்ற எதுவுமே, பிற்காலத்திலே அவற்றினின்றும் பார்த்து வரை யப் பட்டதுதான்'' இவ்வாறு கூறுவர் இந்துக்கள். உங்கள் கூற்றுக்கு அவர்கள் செவிமடுக்கவே மாட்டார்கள். ஆனால் கிறித்தவர் களோ ஹிந்துக்களிடம் பைபிள் நூலைக் கொண்டுவந்து அளிக்கின் றனர். ஹிந்துக்களோ, ''அது ஏமாற்று, கடவுள் ஒருபொழுதும் தவறுசெய்யார்'' என்பர்.

இதைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். இந்த வைதிக மரபு பயங்கரமானது. இந்து ஒருவனிடம் சென்று அவன் தன்னுடைய சமூகத்தைச் சீர்திருத்தவேண்டுமென்றும் இன்னின்னதைச் செய்யவேண்டுமென்றும் நீங்கள் கூறுவீர்களாயின், அவன் ''வேதங்களிலே அது உள்ளதா? ஆங்கு அவ்வாறு இல்லையானால் மாறவேண்டுமென்ற கவலை எனக்கு இல்லை. நீங்கள் காத்திருந்து பாருங்கள், இன்னமும் ஐந்நூறு ஆண்டுகளிலே அது நல்லதொன்றே என்பதைக் கண்டறிவீர்கள்'' என்று கேட்பான். நீங்கள் அவனிடம் சென்று ''உங்களிடம் உள்ள இந்த சமூக நிலையம்

சரியானதன்று'' என்று கூறுவீர்களாயின், ''அதை எவ்வாறு நீங்கள் கண்டீர்கள் ?'' என்று அவன் வினவுவான். பின் சொல்வான்: ''இந்த விஷயத்திலே எங்களுடைய சமூக நிலையங்களே சாலச் சிறந்தவையாம். ஐந்நூறு ஆண்டுகள் காத்திருங்கள்; உங்களுடைய சமூக நிலையங்கள் அழிவுறும். சோதனை யாதெனில் தகுதி மிக்கது நிலைத்து நிற்கும் என்பதே. நீங்கள் இப்போது வாழ்ந்து வருகின்றீர்கள். ஆனல் ஐந்நூறு ஆண்டுகள் தொடர்ந்தாற்போன்று வாழும் ஒரு சமுதாயம்கூட உலகின்கண் இல்லையே. ஆனல் இங்கு பாருங்கள்—நாங்களோ இக்காலமெல்லாம் நிலைத்து வந்திருக்கிறோம்'' இவ்வாறு சொல்வார்கள் இந்துக்கள். பயங்கரமான வைதிக மரபு! அந்தக் கடலை யான் கடந்து விட்டேன் என்பதற்காக ஆண்டவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

இந்தியாவின் வைதிக மரபு இத்தகையதே. இதைத்தவிர வேறு என்ன இருந்தது ? எல்லாமே பிரிவுபட்டுக் கிடந்தது. சமுதாயம் முழுவதுமே பிரிவுற்றிருந்தது. இன்று இருப்பதுபோலவே, ஆனல் அப்பொழுது இன்னமும் மிக அதிகக் கடுமையான வகையிலே ஜாதிகளாகப் பிரிவுற்றிருந்தது. இன்னென்று நாம் அறியக் கிடக்கின்றது. இங்கு மேலை நாட்டிலே இப்பொழுது ஜாதிகளை உண்டாக்குகின்ற ஒருமனப்போக்கு வழங்கி வருகின்றது. நானே கொள்கையைக் கைவிட்டவன்தான். யாவற்றையும் தகர்த்தவனே. என்னளவில் நான் ஜாதிப் பிரிவினையிலே நம்பிக்கையில்லாதவன். அதிலே வெகு நல்லவை உள்ளன. ஆனல் என்னைப்பற்றியவரை ஆண்டவன் எனக்கு உதவுவாராக. ஆண்டவன் துணை எனக்கு இருப்பின் ஜாதியைக் கொள்ளேன். ஜாதி என்பதற்கு யான் கொள்ளும் பொருள் நீங்கள் அறிகிறீர்கள். நீங்கள் யாவருமே அதை மிக இறுக்கமாக்க முயன்று வருகிறீர்கள். இந்துக்களுக்கு இது ஒரு பரம்பரைத் தொழிலே ஆகும். பண்டை நாளிலே இந்து வாழ்க்கையை இன்னமும் எளிதாகவும் அமைதியாகவும் ஆக்கவேண்டும் என்றான். யாவற்றையும் உயிர்ததும்ப ஆக்குவது எது ? போட்டிதான். பரம்பரையான தொழில் இதைக் சொல்வதாகும். ''நீர் ஒரு தச்சரா ? நிரம்ப சரி, உமது மகன் ஒரு தச்சனகவே இருக்க முடியும். நீர் யார் ? கொல்லரா ? கொல்லர் தொழில் ஒரு ஜாதியாகி விடுகின்றது. உம்முடைய குழந்தைகள் கொல்லர்களாகவே இருப்பர். அதே தொழிலின் எல்லைக்குள் புக மற்ற எவர்க்குமே நாங்கள் இடங்கொடோம். எனவே நீர் அமைதியாக அதிலே இருப்பீர். நீர் ராணுவத்தைச் சேர்ந்தவரா ? போர் புரிபவரா ? அதை ஒரு ஜாதியாக்கி விடுவோம். நீர் புரோகிதரா ? அதை ஒரு ஜாதியாக்கி விடுவோம். புரோகிதத் தொழில் பரம்பரையாக வருவதேயாம். இப்படியே யாவற்றையும் செய்து விடுவோம்.'' இது ஒரு

கடுமையான உயர்ந்த அதிகாரந்தான். அதிலே ஒரு சிறப்பான பகுதியுண்டு. அது யாதெனில், அது உண்மையிலே போட்டியை ஒழிப்பதுதான். இதுவே இந்த நாட்டினரை வாழ வைத்தது. மற்ற நாட்டினரோ மாண்டுபோயினர். ஆனால் ஜாதியிலே பெருந் தீங்கு ஒன்று உள்ளது. அது தனி மனிதத்தன்மையைத் தடுத்து விடுகின்றது. நான் தச்சனாகப் பிறந்தமையினால் தச்சனாகவே இருந்தாகவேண்டும். ஆனால் எனக்கோ அது பிடிக்காது. இவ்வாறெல்லாம் உள்ளது வேத நூல்களிலே. புத்தர் பிறக்கு முன்பு இருந்த நிலை இது. புத்தர் காலத்திற்கு முன்னிருந்தவாறே இந்தியாவைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கின்றேன். நீங்களோ இன்று சம உரிமை என்னும் கொள்கையைச் சோதனை செய்து வருகின்றீர்! அதனால் நல்லன விளையும். ஆனால் நெடுங்காலத் திற்குப்பின் மனித இனத்திற்குத் தீது செய்பவராவீர். சுதந்தரம் என்பதே உங்கள் குழுவின் கொள்கையாம். சுதந்தரராகுக. சுதந்தர உடல், சுதந்தர மனம், சுதந்தர உயிர்! என் வாழ் நாளெல்லாம் உணர்ந்து வந்துள்ளது இதுதான்; பந்தத்திற்குட் பட்டிருந்து நன்மை புரிவதைவிட சுதந்தரமாகத் தீமைபுரிதல் எனது பிரியம். [இங்கு கரகோஷம். வேறிடத்தும் அவ்வாறே].

மேனாட்டிலே இப்பொழுது மக்கள் வருந்தி வேண்டுகின்ற இந்த விஷயங்களை யெல்லாம் அங்கு இந்தியாவிலே பல யுகங்களுக்கு முன்னரே சாதித்து விட்டனர். நிலமானது அங்கு சமுதாயப் பொதுவுடமை யாக்கப்பட்டுள்ளது. இத்தகைய விஷயங்களெல் லாம் ஆயிரக்கணக்கில் அங்கு செய்யப்பட்டுள்ளன. குறுகிய போக்கினை ஆதாரமாகக் கொண்ட இந்த ஜாதிப் பிரிவினைமீது குறை கூறப்படுகின்றது. இந்திய மக்கள் அதிதீவிர சம உரிமை மனப்பான்மை கொண்டவர்கள். ஆனால் அந்த மனப்பான்மைக் கும் அப்பால் ஜீவனுடைய தனித்தன்மைச் செல்வமும் உள்ளது அங்கு. அதாவது இத்தனை விவரமான கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டும் அதற்குக் குறைவில்லை. மக்கள் எவ்வாறு உண்ண வேண்டும், பருக வேண்டும், உறங்க வேண்டும், மரிக்க வேண்டும் என்பதையும் பற்றி அவர்கள் விதி செய்துள்ளனர்! ஆங்கு எல் லாமுமே விதிக்கப்பட்டுப் போயுள்ளன. அதிகாலையினின்று தொடங்கி படுக்கப்போய்த் தூங்கும் வரை மக்கள் விதிகளையே, சட்டத்தையே பின்பற்றுகின்றனர். சட்டம், சட்டம், சட்டமே தான் எல்லாம். இந்த நிலைமையிலே அவர்கள் உயிர் வாழ்வதைப் பற்றி நீங்கள் வியப்புறுகின்றீர்கள் அல்லவா? சட்டம் இறந்து விட்டது. ஒரு நாட்டில் சட்டம் அதிகமாக இருந்தால் அதற்குக் கேடு அதிகம்தான் வந்துறும். ஆனால் தனித்தன்மை வேண்டு மாயின் நாங்கள் மலைப்பிரதேசங்களுக்குச் செல்வோம். ஆங்குச் சட்டமோ ஆட்சியோ இல்லை. சட்டம் அதிகரிக்கும் அளவுக்கு

காவற்படையும் சமவுடைமையும் அதிகரிக்கும்; அயோக்கியர்களும் பெருகுவர். கட்டுப்பாடு அங்கே பேரளவிற்கு இருக்கும். குழந்தை பிறந்ததும் தான் ஒரு அடிமையாகப் பிறந்ததை அறியும். முதலில் தன்னுடைய சாதிக்கு அடிமை, பின் தன் நாட்டுக்கு அடிமை. அடிமை, அடிமை, அடிமையே அவன். ஒவ்வொரு செயலிலும் அவன் அடிமை. பருகுவதும் உண்பதும் அடிமையாகவே. ஓர் ஒழுங்கு முறைப்படி அவன் உண்ண வேண்டும். முதற் கவளத்திற்கு இன்ன பிரார்த்தனை; இரண்டாவது கவளத்திற்கு இன்ன பிரார்த்தனை; பின்னர் நீர் பருகும்போது இன்ன பிரார்த்தனை என உள. இவைதச் சற்றே எண்ணிப் பாருங்கள். இம்முறையிலே ஒவ்வொரு நாளும் கழிந்து வருகின்றது. ஆனால் அவர்களோ சிந்தனையாளர்களாக இருந்தனர். இந்த ஏற்பாடு எல்லாம் உண்மையான சிறப்புக்கு வழி செய்யாது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். எனவே யாவருக்குமாக அவர்கள் வெளியேறும் வழியொன்றை விட்டுவைத்தனர். இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் இவ்வுலகிற்காகவும் இவ்வுலகியல் வாழ்வுக்காகவுமேதான் என்பதை அவர்கள் இறுதியில் கண்டுணர்ந்தனர். நமக்குப் பணம் வேண்டாம், குழந்தைகள் வேண்டாம் என்ற மனப்பான்மை வந்த உடனே இவ்வுலகத்திலே நமக்கு அலுவல் ஏதும் இல்லாமற் போகின்றது. அப்போது முழுச் சுதந்தரத்துடன் நாம் வெளியேறி விடலாம்—இவ்வாறு வெளியேறியவர்கள் சன்னியாசிகள். அதாவது துறந்து விட்டவர்கள் எனப்பட்டனர். ஒருபொழுதும் அவர்கள் ஒரு சங்கமாக அமைத்துக்கொண்டதில்லை. இப்பொழுதும் அவ்வாறே; அவர்கள் சுதந்தரமான ஆடவரும் மகளிரும் ஆவர்; அவர்கள் மணம் புரிந்துகொள்வதோ சொத்துக்கள் வைத்துக்கொள்வதோ கிடையாது. சாத்திர விதிகள் அவர்களுக்கு இல்லை. வேதங்கள்கூட அவர்களைக் கட்டுப் படுத்தா. அவர்கள் வேதங்கட்கும் மேற் சென்றவர். எங்களது சமுதாய ஸ்தாபனங்களுக்கு எதிர்கோடியிலே இருப்பவர்கள். ஜாதிக்கு அதீதமானவர்கள். அவர்கள் அந்த அதீத நிலைவரை வளர்ந்து இந்த அற்ப விதிகளாலும் பொருள்களாலும் கட்டுண்டிருக்க முடியாத அளவுக்குப் பெரியவர்கள். இரு பொருள்களே அவர்க்குத் தேவையாம். சொத்து வைத்துக் கொள்ளக் கூடாது, மணம் செய்துகொள்ளக் கூடாது. மணம் புரிந்துகொண்டு இல்லறத்து அமர்ந்தோ, சொத்து வைத்துக்கொண்டோ வாழ்வாராயின், உடனே அவர்களைச் சாஸ்திர விதிகள் கட்டுப்படுத்தும். ஆனால் எவர் இவ்விரண்டினுள் எதையும் செய்வதில்லையோ அவர் சுதந்தரமாயிருப்பர். இத்தகையவர்கள் மக்களினத்தில் உயிர்த்தேவதைகளாயினர். எங்கள் நாட்டுப் பெரியவரான ஆடவரும் மகளிரும் நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேர் இவர்களிடையே தோன்றியவர்கள் ஆவர்.

ஒவ்வொரு நாட்டிலும் மெய்யான ஞானப் பெருமையின் பொருளாவது அளவுபடாத தனித்தன்மையே; அத்தகைய தனித் தன்மையை சமுதாய வாழ்வில் பெற இயலாது. அது கொந் தளித்துக் குமுறிச் சமுதாயத்தை உடைத்தெறிய விரும்புகின்றது. சமுதாயம் அதை அமுக்கிவைக்க விரும்புமாகில் அந்த ஆன்மா சமுதாயத்தைத் துண்டு துண்டாக உடைத்தெறிய விரும்பும். எனவே சமுதாயத்தார் எளிதான வழியை வகுத்துக் கொண்டனர். அவர்கள் கூறுவது; 'சரி, நீங்கள் சமுதாயத்தை விட்டே வெளி யேறி விட்டீர்களானுல் பின்னர் நீங்கள் விரும்பியவாறு எதையும் பிரசாரம் செய்யலாம், போதனை செய்யலாம். நாங்கள் எட்ட இருந்து கொண்டு உங்களை வழிபடுவோம்' என்பதுதான். ஆத லால் பேரளவிற்குத் தனித்தன்மை பெற்ற ஆடவர் மகளிர் இருந் தனர்; சமுதாயங்கள் யாவற்றிலும் அவர்களே மிக உயர்ந்த வர்கள் ஆயினர். இந்தத் துவராடை அணிந்த, மழித்த தலையின ரான துறவியர் ஒருவர் வரின், அரசனும் அவர் முன்னிலையில் அமர்ந்திருக்கத் துணியான். ஆனுல் அடுத்த அரை மணி நேரத்தில் இத்துறவியர் வறுமை மிகுந்த குடிகளில் ஒருவனது குடிசையின் வாயிலில் நின்று, ஒரு சிறிது உணவு பெற்று மகிழவும் செய்ய லாம். துறவி எல்லாத் தரத்தினருடனும் கலந்து பழகியாக வேண்டும். இன்று அவர் ஏழை மனிதனுடைய குடிசையிலே அவனுடன் படுத்துறங்குவார்; நாளை அவர் மன்னனுடைய சுந்தர மஞ்சத்திலே துயில்வார். ஒரு நாள் அவர் மன்னன் மாளிகையிலே பொன் தட்டுகளிலே உண்பார். மறு நாள் அவர் உணவேதுமின்றி மரத்தடியிற் படுத்துறங்குவார். இத்துறவிய ரிடம் சமுதாயத்தினர் மிக்க மரியாதை பாராட்டுகின்றனர். அவர்களிற் சிலரோ தங்களுடைய தனித்தன்மையைக் காட்டுவ தற்கென மக்களை மன அதிர்ச்சிக்கு உள்ளாக்கவும் முயல்வர். ஆனுல் நிறைவுள்ள தூய்மையையும் உடைமையின்மையையும் அவர்கள் விடாது பற்றி நிற்கும் வரை சமுதாய மக்கள் ஒரு பொழுதும் அதிர்ச்சியுருர்.

இத்துறவியர் தனித்தன்மை மிக்கவராதலின், எப்பொழுதுமே புதுக்கொள்கைகளையும் திட்டங்களையும் சோதித்தவண்ணம் இருப்பர். ஒவ்வொரு நாட்டுக்கும் அவர்கள் செல்லுவர். அவர்கள் புதிதாக எதையேனும் சிந்திக்க வேண்டியவராவர். பழைய தடங்களிலே ஓட இயலாதவர். மற்றவர்களெல்லோரும் நம்மைப் பழைய நெறியிலே ஓடுமாறு செய்யவே முயன்று வருபவர். அனைவரையும் ஒரே முறையிலே சிந்தனை செய்யுமாறு கட்டாயப் படுத்துவர். ஆனுல் மனிதருடைய பேதைமையிலும் மிகச் சிறப்பு வாய்ந்தது மனித இயல்பு. நமது பெருமை பலவீனத்திலும் மிக்கதாகும்; தீயனவற்றை விட நல்லன வலிமை மிகுந்தன

வாகும். ஒரே வகையிலே நினைக்குமாறு நம் யாவரையும் செய்வதில் அவர்கள் வெற்றியடைவதாகக் கொண்டாலும் நாம் நின்ற நிலையிலே இருப்போம் என்றால்—இனி ஒன்றையும் நினைக்க இயலாதவராவோம், இறந்தவராவோம்.

இங்கே எமது சமுதாயம் உயிர்ச்சக்தியைக் கிட்டத்தட்ட இழந்ததாயும், அதிலுள்ள மக்கள் சாத்திர விதியெனும் இரும்புச் சங்கிலிகளால் அமுக்கி வைக்கப்பட்டவராயும் உள்ள நிலை இருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் உதவவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆங்கே மக்கள் பேரளவிற்கு விதிகளுக்கு அடங்கி ஆண்டனர். மூச்சு விடுவதும், முகம் கை கழுவுதலும், பல் துலக்குதலும், பிறவும் இன்னின்னவாறு நிகழவேண்டும் என்பதற்குரிய விதிகள் சாகும் நேரம்வரை இருந்தன. இத்தனை விதிகளுக்கும் அப்பாலானது துறவியின் வியத்தகு தனித்தன்மை. இந்த வலிவு மிகுந்த தனித்தன்மை கொண்ட ஆடவர் மகளிரிடையே தினமும் ஒரு புதிய மதப் பிரிவு எழலாயிற்று. அவர்கள் எவ்வாறு தனித்து நின்றனர் என்பது பற்றிப் பண்டைய ஸம்ஸ்கிருத நூல்கள் கூறுகின்றன. வெகு விநோதமான, பழங்கால, முதிர்வயதான நங்கை யொருத்தி எப்பொழுதும் ஏதாவது புதிதான ஒன்றைப் பேசுவாள்; சில வேளைகளில் மாந்தர் அவளைக் குறைகூறியதும் உண்டு; எனினும் எப்பொழுதும் மக்கள் அவளிடம் அஞ்சி அமைதியாகக் கீழ்ப்படிந்து ஒழுகினர்; பண்டைய நாளிலே இத்தகைய மாண்பு மிக்க ஆடவர், மகளிர் இருந்தனர்.

இவ்வளவு அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த இச்சமுதாயத்திலே அதிகாரம் புரோகிதரிடத்தே இருந்து வந்தது. சமுதாய இயல்முறையிலே அனைத்தினும் உயர்ந்த ஜாதி புரோகிதருடையதே. அது ஒரு தொழில் ஆனமையால் வேறு மொழி அறியாது அப்பெயரையே வழங்குகிறேன். இந்த அமெரிக்க நாட்டிலே வழங்கும் பொருளில் அன்று. ஏனெனில் எம் நாட்டுப் புரோகிதர் சமயமோ தர்சனமோ போதிக்கின்றவர் ஆகார். சாத்திரங்களில் விதிக்கப்பட்டுள்ளனவான இந்தக் கட்டுப்பாடுகளின் நுட்பங்களையெல்லாம் கண்டு புரிவதே அவரது தொழிலாகும். இந்த விதிகளைப் பின்பற்றுவதிலே உதவிபுரிகின்றவர் புரோகிதர் ஆகின்றார். நமக்குத் திருமணம் செய்விக்கின்றவர்; நம்முடைய அந்திமக் கிரியைகளிலே கலந்து பிரார்த்தனை ஆற்ற வருகின்றனர். ஆணுக்கோ, பெண்ணுக்கோ ஆற்றப்படுகின்ற சடங்குகள் யாவற்றுக்கும், புரோகிதர் கூட இருந்தாக வேண்டும். சமுதாய வாழ்விலே இலட்சியமாவது மணவாழ்வே. ஒவ்வொருவரும் மணம் புரிந்து கொள்ள வேண்டும். அதுவே சாஸ்திர விதி. திருமணம் ஆகாமல், எந்தச் சமயச் சடங்கையும் ஒருவன் ஆற்றுவது முடியாது. மணம் ஆகாதவன் அரை மனிதனேயாவான். சடங்குகளை ஆற்றுவதற்கு

அவனுக்கு அதிகாரம் கிடையாது. புரோகிதருமே திருமணம் புரிந்துகொண்டாலன்றித் தொழிலாற்ற முடியாது. சமுதாயத்திற்கு அரைமனிதன் தகுதியற்றவன்.

இவ்வாறு புரோகிதர்களுடைய அதிகாரமானது மிகப்பெரும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. எங்கள் நாட்டின் சாஸ்திர கர்த்தாக்கள் புரோகிதருக்கு இத்தகைய கௌரவத்தை அளிப்பதையே தம்முடைய பொதுக் கொள்கையாகக் கொண்டிருந்தனர். பணம் சம்பாதிப்பதினின்றும் புரோகிதர்களைத் தடுக்கும் சமஉடைமைத் திட்டத்தை—இப்பொழுது நீங்கள் சோதிக்க முயலும் அதே திட்டத்தை—அவர்களும் கைக்கொண்டிருந்தனர். இதன் நோக்கம் யாது? சமுதாய மதிப்பே. ஒன்றை மனத்திற் கொள்ளுங்கள்—எல்லா நாடுகளிலேயும் புரோகிதரே சமுதாய ஏற்றப்படி வரிசையிலே மிக உயர்ந்தவர் ஆகின்றனர். எனவே இந்தியாவிலே மிக ஏழைப் பிராம்மணன் ஒருவன் அந்த நாட்டின் மிக உயர்ந்த மன்னவனிலும் பிறப்பால் உயர்ந்தவன் ஆகின்றான். இந்தியாவிலே புரோகிதனே மதிப்புள்ளவனாகின்றான்; ஆனால் அவன் செல்வவானாக சாஸ்திரம் ஒரு பொழுதும் அனுமதிப்பதில்லை. சாஸ்திர விதி அவனை வறுமை நிலையிலே அழுத்தி வைக்கின்றது. ஆனால் மதிப்பை மட்டும் அவனுக்கு அளிக்கின்றது. அவன் செய்யக்கூடாத காரியங்கள் ஆயிரக் கணக்கானவையாகும். சமுதாய ஏற்றப்படியிலே ஒருவனது ஜாதி உயருமளவிற்கு அவன் அநுபவிக்கக் கூடிய போகங்கள் சுருக்கப் படுகின்றன. ஜாதி உயர உயர, அதைச் சேர்ந்தவனின் உணவு வகைகளின் எண்ணிக்கையும் அளவும், அவனுக்குரிய தொழில் வாய்ப்புகளும் குறைக்கப்படுகின்றன. அவனது வாழ்க்கை இடையறாது வரும் கஷ்டங்களின் தொகுதியாக மட்டுமே ஆகிவிடும்; அதற்கு மேலாக இராது. உண்பதிலும், பருகுவதிலும் ஒவ்வொன்றிலும் ஓயாத கட்டுப்பாடாகவே அமையும். கீழ் ஜாதியினர் ஏற்கும் தண்டனைகளுக்கும் பத்து மடங்கு அதிகமாக உயர் ஜாதியினர் ஏற்க வேண்டும். கீழ் ஜாதியினன் பொய் பேசின் அபராதம் ஒரு 'டாலர்' என்றால் பொய்பேசும் பிராம்மணனுக்கு அபராதம் நூறு டாலர்களாகும். முன்னவனினும் அவன் நன்கு அறிந்தவன் அன்றோ?

தொடக்க நிலையிலே இது பெருஞ்சிறப்புள்ள அமைப்பேயாயிற்று. பிற்பாடு, இந்தப் புரோகிதர் அதிகாரம் யாவற்றையும் தம் கையிலே வைத்துக்கொள்ளத் தொடங்கிய காலம் வந்தது; முடிவில் வறுமையே தமது அதிகாரத்தின் ரகசியம் என்பதை மறக்கலாயினர். சமுதாயம் அவர்களுக்கு உணவும் உடையும் அளித்து வந்ததன் காரணம், அவர்கள் கற்றும், சிந்தித்தும், போதித்தும் வரவேண்டும் என்பதே. ஆனால் அதற்கு மாறாக

அவர்கள் சமுதாயத்தின் செல்வத்தினைப் பறித்துக் கொள்ளத் தம் கரங்களை நீட்டத் தொடங்கினர். நீங்கள் கூறுகிறபடி அவர்கள் 'பணம் பறிப்பவர்' ஆயினர். அனைத்தையும் மறக்கலானார்.

இரண்டாவது, அரசராகிய க்ஷத்திரியரது ஜாதி. உண்மையான அதிகாரம் அவர்கள் கையில் இருந்தது. அம்மட்டோ, எப் பெரும் சிந்தனையாளர்களை நல்கியவர் அந்த ஜாதியரே, பிராம் மணரல்லர். இது விநோதமானதொரு விஷயம்தான். எங்களுடைய சிறந்த தீர்க்கதரிசிகள் அனைவரும் கிட்டத்தட்ட ஒரு விலக்கும் இல்லாதவாறு அரச ஜாதியைச் சேர்ந்தவர்களே. பெரியாராகிய கிருஷ்ணரும், இராமரும், எங்கள் தத்துவஞானியர் அனைவரும்—அநேகமாக அனைவரும்—அரியாசனத்து அமர்ந்தவரே; பின்னர் தியாகத்தைப் போதித்த ஞானியர் அனைவரும் அம்மரபிலே தோன்றினர். அரியாசனத்தினின்றே 'தியாகம் செய்' என்ற குரல் எழுந்தது. இந்தச் க்ஷத்திரியரே தாம் மக்களுடைய மன்னராயினர். அவர்களே தத்துவஞானியராகவும் இருந்தனர். உபநிஷத்துக்களிலே பேசுகின்றவர்களும் அவர்களே. அறிவிலும் சிந்தனையிலும் அவர்களே புரோகிதர்களைவிடச் சிறந்தவரானார். அவர்களே மிக வல்லமை பெற்றிருந்தனர், அவர்கள் ஆளும் மன்னராயினர். எனினும் புரோகிதர்கள், அதிகாரத்தையெல்லாம் கைப்பற்றிக்கொண்டு அரசர்மீது கொடுங்கோல் செலுத்த முயன்றனர். இவ்வாறு புரோகிதரும், மன்னரும் ஆகிய இரு ஜாதியினருக்கும் அரசியல் துறையிலே போட்டி நிகழ்ந்து கொண்டேயிருந்தது.

இன்னுமொரு நிகழ்ச்சியும் ஆங்கு உளது. நான் ஆற்றிய முதல் நாள் சொற்பொழிவைக் கேட்க வந்தவர்களுக்கு ஏற்கனவே ஒரு விஷயம் தெரிந்திருக்கும். இந்தியாவிலே ஆரியர், ஆரியரல்லாதார் என இரு பெரும் இனங்கள் உள்ளன. ஆரிய இனத்தில் மூன்று வர்ணங்கள் உள்ளன. ஆனால் எஞ்சிய அனைவரும் 'சூத்திரர்' என்ற ஒரு பெயர் கொண்டே அழைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு வர்ணம் இல்லை. அவர்கள் ஆரியரல்லாதவர்கள். இந்தியாவிற்கு வெளியிலிருந்து பல மக்கள் வந்தனர். அவர்கள் சூத்திரர்கள் எனப்பட்ட அந்நாட்டு ஆதிவாசிகளை இங்கு கண்டனர். அது எவ்வாறிருப்பினும் அனாரியர்களாகிய இந்தப் பெருங்கூட்டத்தினரும், அவர்களிடையே இருந்த கலப்புண்ட மக்களும் படிப்படியாக நாகரிகமுற்று விட்டனர். பின்னர் ஆரியர்கள் பெற்றிருந்த அதே உரிமையைத் தாங்களும் பெறுவதற்கு அவர்கள் திட்டம் வகுக்கலாயினர். ஆரியர்களுடைய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் புக முயன்றனர்; ஆரியர்களது பூணூலைத் தரிக்க விரும்பினர்; ஆரியர்கள் இயற்றிய அதே

சடங்குகளைத் தாங்களும் புரிய விரும்பினர். சமயத்துறையிலும், அரசியல் துறையிலும் ஆரியர்களுக்குச் சமமான உரிமைகளைப் பெறவும் விரும்பினர். ஆனால் பிராம்மணப் புரோகிதர் அத்தகைய உரிமைகளைப் பெறுதற்கு பெரிய எதிர்ப்பாளாராயினர். ஒவ்வொரு நாட்டிலும் புரோகிதருடைய இயல்பு இதுவே என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் இயல்பாகவே உள்ளதை மாற்ற விரும்பாதவராவர். அவர்களுடைய தொழில் ஒரு வியாபாரமாக இருக்கும் வரை அது அவ்வாறு இருந்தாக வேண்டும். உள்ளதை மாறவிடாமல் இருப்பதே அவர்களுக்கு அநுகூலமாகும். ஆகவே ஆரியர்களுடைய வட்டத்திற்குப் புறம்பே எழுந்த இந்த எதிர் முணுமுணுப்பு வெள்ளத்தைப் புரோகிதர்கள் தம் முழுபலத்தோடும் தடுக்க முயன்று வந்தனர். ஆரியர்களின் வட்டத்தினுள்ளும் சமயத்துறையிலே ஒரு பெரும் கிளர்ச்சி இருந்து வந்தது. க்ஷத்திரிய வர்ணத்தினரே பெரும்பாலும் அதற்குத் தலைமை தாங்கி நடத்தி வந்தனர்.

ஜைன சமயத்தினர் ஏற்கனவே இருந்து வந்தனர்; இன்றும் இந்தியாவிலே அவர்கள் உள்ள முறையைப் பாதுகாக்கும் குழுவினராயுள்ளனர். அது ஒரு மிகப்பழைமையான மதப்பிரிவாகும். இந்துக்களின் சமய நூலான வேதங்களின் பிரமாணத் தன்மையை அவர்கள் மறுத்தனர். அவர்கள் தாமே சில புத்தகங்களை எழுதிக்கொண்டு, ''எங்களுடைய நூல்கள்மட்டுமே ஆதிநூல்களாகும்; இப்பொழுது வேதங்கள் என்ற பெயருடன் உலவுகின்றவை மக்களை ஏமாற்றுதற்காக பிராம்மணர்களால் வரையப்பட்டவையாகும்'' என்றனர். அவர்களும் இந்துக்களைப் போன்றே ஒரு திட்டம் வகுத்தனர். வேதங்கள் பற்றி இந்துக்கள் சொல்லுகின்றவற்றை எதிர்த்து வாதிப்பது எளிதன்று. ஜைனர்களும் தங்களுடைய நூல்களின் மூலமே உலகம் படைக்கப்பட்டுள்ளது என்று சாதித்தனர். அவை மக்களுக்கு எளிதில் விளங்கக்கூடிய பாஷையில் எழுதப்பட்டன. அப்பொழுதே சமஸ்கிருத பாஷை பேசும் பாஷையாக இல்லாமற் போயிருந்தது. தற்கால இத்தாலிய மொழிக்கும் லத்தீனுக்கும் உள்ள சம்பந்தமே சமஸ்கிருதத்திற்கும் அக்காலத்திய பேச்சு மொழிக்கும் இருந்தது. ஜைனர்கள் தம்முடைய நூல்களை எல்லாம் பாலி பாஷையிலே எழுதினர். ''உங்கள் நூல்கள் பாலி பாஷையிலன்றோ எழுதப்பட்டுள்ளன?'' என்று பிராம்மணன் ஒருவன் கூறுவானாகில், அவர்கள் ''ஸம்ஸ்கிருதம் மரித்துப் போனவர்களுடைய மொழியாயிற்றே'' என்று பதில் உரைப்பர்.

தாம் பின்பற்றிய முறைகளிலும் நடத்தைகளிலும் ஜைனர்கள் மாறுபட்டவர்களாக இருந்தனர். இந்து சாஸ்திரங்கள் ஆகிய வேதங்கள் பலப்பலவான விஷயங்கள் ஒன்று சேர்ந்து

குவிந்த ஒரு பெரும் தொகுப்பு ஆகும்—இதை நீங்கள் அறிய வேண்டும். அவ்விஷயங்களிற் சில பக்குவமாகாத தன்மையன வாகும். ஆனால் அவற்றுக்குமப்பால் உள்ளது சமயத்தை மட்டும் போதிக்கின்ற பகுதியாகும். இந்தப் பல்வேறு சமயப் பிரிவினர் அனைவருமே வேதங்களினுடைய அந்த அத்தியாத்துமப் பகுதியைத் தான் போதிப்பதாகச் சொல்லிக்கொண்டனர். பண்டைய வேதங்களிலே மூன்று படிகள் உள்ளன. முதலில் வருவது கர்மம், இரண்டாவதாக உள்ளது உபாசனை, மூன்றாவது ஞானம். கர்மத்தினாலும் உபாசனையாலும் ஒரு மனிதன் தன்னைத் தூய்மைப் படுத்திக்கொண்டதும், இறைவன் அம்மனிதனிடத்துத் தோன்றுகின்றான். இறைவன் ஏற்கனவே தன்னுள் இருப்பதை அவன் உணர்ந்தவனாகின்றான். அவனுடைய மனம் தூயதாயிருப்பதால் அவன் மட்டுமே கடவுளைக் காணக் கூடியவனாக இருக்கின்றான். எனவே கர்மத்தாலும் உபாசனையாலும் மனம் தூய்மையுறும் என்பதாகின்றது. அவ்வளவேதான். ஏற்கனவே முக்தி நம் மிடத்து உள்ளது. நாம் அதனை அறியாதவராகின்றோம். எனவே கர்மம், உபாசனை, ஞானம் ஆகியவை மூன்று படிகள் ஆகின்றன. கர்மம் என்னும்போது பிறர்க்கு நன்மை புரிவது குறிக்கப்படுகின்றது. இது நல்லதுதான். ஆனால் பிராம்மணர்களுக்கோ பெரும்பாலும் கர்மம் என்பது விரிவான முறையில் ஆற்றப் படுகின்ற சடங்குகளைச் செய்வதையே குறிப்பதாகின்றது.—பசுக் களைக் கொல்லுதல், ஆடுகளைக் கொல்லுதல், எல்லாவிதமான மிருகங்களையும் கொல்லுதல் என்பதையே குறிப்பதாகின்றது. இந்த மிருகங்களை அப்படியே உயிரோடு எடுத்துத் தீக்குள்ளே போடுவது போன்றதெல்லாம் ஆகின்றது. ஜைனர்களோ, ''இது ஒரு கர்மமே ஆகாது; ஏனென்றால் பிறர்க்கு இம்சை செய்வது ஒருபொழுதும் நற்கருமமே ஆகாது'' என்றனர். இன்னமும் கூறினர் அவர்கள்: ''உங்களுடைய வேதங்கள் பொய்யான வேதங்கள் என்பதையும், புரோகிதர்களால் ஆக்கப்பட்டன என் பதையும், இதுவே ருசுப்படுத்தும். எந்த நல்ல புத்தகமும் மிருகங்களைக் கொன்று கொண்டிருக்கவும், அம்மாதிரியான காரி யங்களைச் செய்து கொண்டிருக்கவும் உத்தரவிடும் என்று நீங்கள் கொள்ளுகின்றீர்கள்? அவ்வாறு நம்புகிறீர்களா? எனவே வேதங்களில் காணப்படுகின்ற இம்மிருகக் கொலையும் பிறவும் பிராம்மணர்களால் வரையப்பட்டனவேயாம். ஏனெனில் இவற் றின் மூலம் அவர்கள் மட்டுமே பயனுறுகின்றனர். பணத்தைப் பெற்று இடுப்பில் செருகிக் கொண்டு வீட்டுக்குப் போகின்றவர் புரோகிதர் மட்டுமேயல்லவா? இவையெல்லாம் புரோகிதரது தந்திரமேயாம்.''

ஈசுவரன் என்ற ஒருவர் இருக்கவே முடியாது என்பது ஜைனர்களுடைய கொள்கைகளுள் ஒன்றாகும். ''புரோகிதரே ஈசுவரன் என்ற ஒருவரைக் கற்பனை செய்து உண்டுபண்ணியுள்ளனர். மக்கள் ஈசுவரன் என்ற ஒருவரிடம் நம்பிக்கை கொண்டு புரோகிதருக்குப் பணம் தரட்டுமே என்ற நோக்கத்துடன் அவர்கள் இவ்வாறு செய்துள்ளனர். இதுவெல்லாம் அர்த்தமற்ற வெறும் பேதைமை! ஈசுவரன் என்ற பொருளே கிடையாது; இயற்கை என்பது உளது, ஜீவர்கள் உள்ளனர், அவ்வளவேதான். ஜீவர்கள் எப்படியோ இந்த வாழ்வுக்குள் வந்து சிக்கிக் கொண்டனர். உடல் என்று நீங்கள் கூறுகின்ற ஒரு மனிதப் போர்வையை அவர்கள் தம்மைச் சுற்றிப் போர்த்திக் கொண்டுள்ளனர். எனவே நற்பணி புரிவீர்களாக'' என்கின்றனர் ஜைனர்கள். சடப்பொருளானது எதுவுமே இழிவானது என்றதொரு கொள்கை அதினின்று இயல்பாகவே எழுந்தது. ஜைனர்களே முதன்முதலாகத் தவநெறியைப் போதித்தவர்கள் ஆவர். அசுத்தம் காரணமாகவே வந்த பயனே இந்த உடல் என்பது ஆயின், இந்த உடல் இழிவானதொன்றுதானே? ஒரு மனிதன் கொஞ்சகாலம் ஒற்றைக்காலில் நின்று கொண்டிருந்தானாகில்—அது மிகச் சரியானதொன்றுதான், அது ஒரு தக்க தண்டனைதான், என்பர் அவர்கள். சுவரின் மீது ஒருவன் படீர் என்று தலையை மோதிக் கொண்டானாகில், ''இதற்காகக் களிப்புறுவாயாக, இது ஒரு வெகு நல்ல தண்டனையாகும்'' என்பர் அவர்கள். பிரான்ஸில் சங்கத்தை நிறுவிய பெரியார்களுள் ஒரு சிலர் (அவர்களுள் மஹான் பிரான்ஸிஸ் ஒருவர்) யாரோ ஒருவரைச் சந்திப்பதற்காக ஓரிடத்திற்குச் சென்று கொண்டிருந்தனர். பிரான்ஸிஸ் முனிவருடன்கூட அவருடைய தோழர்களுள் ஒருவர் சென்று கொண்டிருந்தார். தாங்கள் காண நினைத்தவர் தம்மையெல்லாம் வரவேற்பரோ மாட்டாரோ என்றும், ஒருவேளை அவர் தம்மைப் பாராது வெளியேறச் சொல்லலாம் என்றும் பேசத் தொடங்கினர். அப்பொழுது பிரான்ஸிஸ் முனிவர், ''சோதரரே, அது போதியதாகாது; ஆனால் நாம் அங்கு சென்று கதவைத்தட்டியதும், அம்மனிதர் வெளியே வந்து நம்மை விரட்டுவாராகில், அதுவும் போதியதாகாது. ஆனால், அவர் நம்மையெல்லாம் கட்டிவைக்க உத்தரவிட்டு சாட்டையடி கொடுப்பாராகில், அதுவும் போதியதாகாது. பின்னர் அவர் நம்முடைய கை கால்களைச் சேர்த்துக்கட்டி ஒவ்வொரு மயிர்த்துவாரத்தினின்றும் உதிரம் வரும்வரை சாட்டையால் அடித்து, எறிந்து விடுவாராகில்—அதுவே நமக்குப் போதியதாகும்''— என்று கூறினர்.

இவை போன்ற தவநெறிக் கருத்துகள் அக்காலத்தில் வழங்கி வந்தன. ஜைனர்களே முதன்முதலாகத் தவநெறி பற்றியவர்.

ஆனால் அவர்கள் மகத்தான பணியும் கொஞ்சம் புரிந்தனர். ''எவருக்கும் கேடு செய்யாதீர். அனைவருக்கும் இயன்றவரை நன்மை புரியுங்கள். இதுவே அறம் யாவும்; நீதி யாவும்; செய்ய வேண்டியதும் அதுவேதான். மற்றவை யாவும் பேதைமையே. பிராம்மணர்கள் அவற்றைப் படைத்து வைத்தனர். அதை யெல்லாம் வீசி எறியுங்கள்''—என்றனர் ஜைனர்கள். பின்னர் பணியாற்றத் தொடங்கினர். அந்த ஒரே தத்துவத்தை விரி வாக்கினர். அது அதியாச்சரியமானதோர் இலட்சியமாகும். நாம் நீதி, அறம் என்பதெல்லாம், அஹிம்சை நலம்புரிதல் என்ற பெரும் தத்துவத்தினின்றும் விரிந்து வருபவையே.

ஜைன மதம் தோன்றியது புத்தருடைய காலத்திற்குக் குறைந் தது ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னராகும்; புத்தரே ஏசுகிறிஸ்துவுக்கு ஐந்நூற்றைம்பது ஆண்டுகட்டு முன் இருந்தவர். விலங்கினம் முழு வதையும் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கின்றனர். மிகத் தாழ்ந்த ஊறு எனும் புலனுடைய ஓரறிவுயிர்; ஊறு சுவையாகிய இரு புலன்களைப் பெற்ற ஈரறிவுயிர்; ஊறு சுவை ஓசை எனும் முப் புலனுடை மூவறிவுயிர்; ஊறு சுவை ஓசை ஒளி என்னும் நாற்புலன் பெற்ற நாலறிவுயிர்; அதற்கு அடுத்தது ஐம்புலன் களும் பெற்ற ஐயறிவுயிராகும். ஓரறிவு, ஈரறிவுயிர்கள் சாதா ரணக் கண்களுக்குப் புலனாகா; அவை நீரிலே எங்கும் உள்ளன; இவற்றைத்—தாழ்ந்த உயிரினங்களைக்-கொல்லுவது மிகப் பயங் கரமானதாகும். இந்த நுண்ணுயிரியல் தற்கால உலகில் சென்ற இருபது ஆண்டுகட்கு முன்புதான் தோன்றியது; ஆதலின் உலகில் தோன்றிவரும் அதைப்பற்றி அதற்குமுன் எவரும் அறிந் திலர். அனைத்திலும் கீழ்த்தர விலங்குகளுக்கு ஸ்பரிச உணர்ச்சி ஒன்றே உளது, வேறு ஒன்றும் இல்லை என்றனர் அவர்கள். அதற்கு அடுத்த உயர்படி விலங்கும் கண்ணுக்குப் புலனாகாததே. நீரைக் கொதிக்கவைத்தால் இவ்வுயிர்களெல்லாம் கொல்லப்படு கின்றன என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். எனவே இத் துறவியர் நீர்வேட்கையால் இறப்பதானாலும், நீரைப் பருகி அவ் வுயிர்களை ஒருபொழுதும் கொல்லமாட்டார்கள். ஆனால் துறவி யொருவர் உமது வீட்டு வாயிலில் வந்து நின்று, நீவிர் அவருக்குக் கொதிக்கவைத்த நீர் சிறிது அளிப்பீராகில் அந்த உயிர்களைக் கொன்ற பாவம் உம்மையே சாரும். நன்மையைத் துறவி பெறுவார். அவர்கள் இவ்வாறு இக்கருத்துகளைக் கேலியாகும் அளவுக்குக் கொண்டு செல்லுகின்றனர். உதாரணமாக, ஒருவன் குளிப்பானாகில் உடலைத் தேய்த்துக் கொள்ளும்பொழுது பல நுண்ணுயிர்களைக் கொல்ல வேண்டிவரும். ஆதலால் அவன் ஒருபோதும் குளிப்பதில்லை. தன்னையே அவன் மாய்த்துக் கொள்ளு கின்றான். அது சரியே என்கின்றான். அவனுக்கு வாழ்வு ஒரு

பொருட்டாவதில்லை. தான் கொல்லப்பட்டும் பிற உயிரைக் காப்பாற்றுவான்.

இவ்வாறு இருந்தனர் ஜைனர். வேறு பல முனிவர் கூட்டங்களும் இருந்தன. ஒரு புறம் இவ்வாறு நிகழ, மறுபுறம் புரோகிதருக்கும் க்ஷத்திரிய மன்னருக்கும் இடையே அரசியல் துறையில் பொருமை இருந்து வந்தது. இன்னும் இந்தப் பலவேறு அதிருப்தியுற்ற மதப்பிரிவுகள் எங்கும் கிளம்பிக்கொண்டே யிருந்தன. இதனினும் பெரிய பிரச்னையும் இருந்து வந்தது. பெரிய தொகையினரான மக்கள் ஆரியர்களைப்போலவே தமக்கும் சம உரிமைகள் வேண்டுமெனக் கோரி வந்தனர்; இயற்கையின் ஜீவநதி தமக்கருகில் வெள்ளமெனப் பெருகி ஓடியபோதும், ஒரு துளி நீரும் பருக உரிமையற்றவராய் மரித்து வந்தனர்.

பின்னர் அந்த மாபுருடரான புத்தர் பிறந்தார். உங்களிற் பலருக்கு அவரைப்பற்றியும், அவருடைய வாழ்க்கையைப் பற்றியும் தெரியும். எந்த மாபுருடராயிருப்பினும் அவரோடு பொதுவாகவே வியப்புறு நிகழ்ச்சிகளும் கட்டுக்கதைகளும் பிணைக்கப்படுகின்றனவெனினும், புத்தர் பிரான், உலகின்கண்ணுள்ள மதாசாரியர்களுள் முதலாவதான சரித்திர புருஷரே. இரு மதாசாரிய புருஷர்களே பெரிதும் சரித்திரகால புருஷர் என்பதற்குச் சான்று மிகுந்தவர்களாக உள்ளனர். ஒருவர் மிகப் பழைய புத்தர். மற்றொருவர் முகம்மது நபி. இவ்வாறு குறிப்பது ஏன் என்றால் நண்பர்களும் பகைவர்களும் ஆகிய இருவரும், இவர்களைப் பற்றியவரை, கருத்து இசைவுள்ளவர். ஆதலால் அத்தகைய புருடர் இருந்தனர் என்பதில் நமக்கு முழு உறுதியே. மற்ற ஆசாரிய புருடரைப் பற்றியோ என்றால் சீடர்கள் கூறுவதையே நாம் சரியென்று கொள்ள வேண்டியதாகிறது, அதற்கு மேலில்லை. இந்து சமய ஆசாரியராகிய எங்கள் கிருஷ்ணரோ பேரளவிற்குப் புராண புருடராயுள்ளார். அவருடைய வாழ்க்கையிற் பெரும் பகுதியை, அவரைப்பற்றிய ஒவ்வொன்றையுமே, அவருடைய சீடர்களே வரைந்துள்ளனர்; புத்தரைப் பற்றி நமக்குத் தெரிவதுபோன்று மற்ற பல மதாசாரியர்களைப் பற்றி அவ்வளவு தெளிவாகத் தெரிவதில்லை. அவர் சம்பந்தப்பட்டவரை நண்பர்களும், பகைவர்களும் அவரைப்பற்றி வரைந்துள்ளனராதலின், அத்தகைய சரித்திரகால புருடர் இருந்தார் என்பது நமக்கு உறுதியாகிறது. இவ்வுலகின்கண் மகான் ஒருவர்மீது குவிக்கப்படும் கட்டுக் கதைகளையும், அற்புதங்களைப் பற்றிய அறிக்கைகளையும் பிற கதைகளையும் ஆராய்ந்து பார்ப்போமாயின் உள்ளே மறைந்திருக்கும் சாரமான ஒன்றினைக் காண்போம். அவருடைய வரலாறு முழுவதிலும் அவர் தமக்கென ஒருபோதும் ஒன்றையும் செய்தவர் அல்லர். இது எவ்வாறு

நமக்குத் தெரிய வருகின்றது என்பீரேல், ஒரு மனிதனைப் பற்றிய கதைகளைக் கட்டும் பொழுது அம்மனிதனுடைய பொதுவான குணத்தின் நிறம் அக் கட்டுக் கதைகளில் படிந்திருக்கும். புத்தரைப்பற்றிய கட்டுக் கதைகளில் ஒன்றுகூட அவர் மீது எந்த துர்க்குணத்தையோ, ஒழுக்கக் கேட்டையோ சுமத்த முயன்றதில்லை. அவருடைய விரோதிகளின் வரலாறுகளும் அவர்க்கு அனுகூலமாகவேயுள்ளன.

புத்தர் பிறந்த பொழுது அவரது தூய்மையின் மிகுதியால், எட்ட நின்று அவரது முகத்தைக் கண்டவரும் சமயக் கிரியைகளை விட்டுவிட்டுத் துறவு பூண்டு உய்வு பெற்றனர். ஆகவே தேவர்கள் கூட்டம் கூடிப் பேசினர்; ''நலம் அழிந்தோம்'' என்றனர். ஏனெனில் வேதக்கிரியைகளைக் கொண்டே தேவர்களிற் பலர் உயிர்வாழ்ந்து வந்தனர்; அந்த யாகங்கள் தேவர்களைப் போய்ச் சேர்கின்றன. ஆனால் இப்பொழுதோ அவை யாவும் மறைந்தன. தேவர்கள் பசியால் வாடி மரித்த வண்ணமாயிருந்தனர். அதன் காரணம் அவர்களுக்கிருந்த வலிமை குன்றிவிட்டதென்பதே. எனவே அந்த தேவர்கள், ''நாம் எவ்வாறாயினும் இம் மனிதரை அடக்கிவிடவேண்டும். நாம் வாழவொண்ணா அளவிற்கு அவர் தூயர்'' என்று கூறினர். பின்னர் அந்த தேவர்கள் புத்தரிடம் வந்து ''ஐயனே, உம்மிடம் ஒன்று வேண்ட வந்துள்ளோம். பெரியதொரு யாகத்தைச் செய்து முடிக்க நாங்கள் விரும்புகின்றோம். அதற்குப் பெரியதொரு தீ மூட்ட உத்தேசித்துள்ளோம். தீயை மூட்டுவதற்கான தூயதொரு தலத்தை உலகெலாம் நாங்கள் தேடி வந்தோம். இப்பொழுதே கண்டுபிடித்தோம். தாங்கள் கீழே படுத்துக்கொண்டீர்களாயின் உங்கள் மார்பின் மீது நாங்கள் அந்தப் பெருந்தீயை மூட்டிக் கொள்ளுவோம்'' என்று தெரிவித்தனர். புத்தரும் ''அவ்வரம் தந்தேன், காரியத்தை மேல் நடத்துங்கள்'' என்றார். தேவர்கள் புத்தர் பிரானுடைய மார்பின் மீது உயர்ந்த ஜ்வாலையை எழுப்பினர். அவர் மரித்துவிட்டதாக அவர்கள் எண்ணினர்; ஆனால் அவரோ மரிக்கவில்லை. பின்னர் தேவர்கள் அங்குமிங்கும் சென்று ''நாம் அழிபட்டோம்'' என்று புலம்பினர். தேவர்கள் யாவரும் அதன் பின்னர் புத்தரைத் தாக்கலாயினர். அதுவும் பயன்படவில்லை. பின்னர் அடியினின்றும் குரல் ஒன்று எழுந்தது: ''இந்த வீணான முயற்சிகளை யெல்லாம் செய்வதேன்?'' என்று கேட்டது. ''புத்த தேவனே! யார் உம்மைக் காண்பாரோ அவர் தூய்மையுற்று உய்வடைந்து விடுகின்றனர். எவருமே இனி எம்மை வழிபட மாட்டார்'' என்று புகன்றனர் தேவர்கள். ''அவ்வாறாயின் உங்களுடைய முயற்சி வீணானதே. ஏனெனில் தூய்மையை ஒருகாலும் மாய்க்க முடியாது'' என்றது அக்குரல். இத்தகைய

கட்டுக் கதைகளை புத்தருடைய விரோதிகளே எழுதினர். ஆனாலும் இக்கதை முழுவதிலும் புத்தரிடம் உள்ள ஒரே குற்றமாவது அவர் அவ்வளவு பெருந் தூய்மையுற்ற போதகர் ஆனதே.

புத்த தேவருடைய கொள்கைகளைப்பற்றி உங்களிற் சிலருக்குக் கொஞ்சம் தெரியும். அஞ்ஞேய வாதிகள் என அழைக்கப்படும் தற்காலச் சிந்தையாளர்கள் பலர்க்கு அவருடைய கொள்கைகளே மனதிற்குப் பிடித்துள்ளன. மனித ஜாதியினரின் சகோதரத்துவத்தைப் போதித்த பெரும் பிரசாரகர் ஆவார் அவர். ''ஆரியரோ அனாரியரோ, ஜாதி பெற்றவரோ அற்றவரோ, ஒரு சமயப் பிரிவைச் சார்ந்தவரோ அல்லாதவரோ- சமயத்திற்கும் முத்திக்கும் சமமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. அனைவரும் உள்ளே வருக'' என்றார் புத்தர். ஆனால் மற்ற விஷயங்களைப் பொறுத்தமட்டில் அவர் பெரும் அஞ்ஞேயவாதியராகவே இருந்தார். ''செயல் முறையில் ஈடுபடுங்கள்'' என்றார் அவர். ஒரு நாள் ஐந்து இளைஞர்கள்—பிராம்மணராகப் பிறந்தவர்கள்—ஏதோ ஒரு கேள்வியைப் பற்றிச் சண்டையிட்டு, சத்தியத்திற்குப் பாதை எது என்று புத்தரை வினவுவதற்காக அவரை வந்தடைந்தனர். ''என்னுடைய இனத்தவர் இதைத்தான் போதிக்கின்றனர். ஆகவே இதுவே சத்தியத்திற்கான பாதையாகும்'' என்றார் ஒருவர். ''எனக்கு இவ்வாறு போதனை செய்யப்பட்டுள்ளது. ஆகவே இது ஒன்றே சத்தியத்திற்கான மார்க்கமாகும்'' என்றார். மற்ற ஒருவர். ''ஐயனே, எதுதான் சரியான மார்க்கமாகும் ?'' என்று அவர்கள் புத்தரை வினவினர். ''சரி, இதுதான் உண்மை. இதுவே தெய்வத்திற்கு இட்டுச் செல்கின்ற மார்க்கம் என்று உம்முடைய இனந்தவர் போதித்தனர் என்று கூறுகின்றீர்'' என வினவினார் புத்தர். ''ஆம்'' என்றார் ஒருவர். ''ஆனால் நீர் கடவுளைக் கண்டீரா ?'' என்று கேட்டார் புத்தர்.

''இல்லை, ஐயனே'' என்றார் அவர்.

''உம்முடைய தந்தை கண்டாரா ?'' என எழுந்தது அடுத்த கேள்வி.

''இல்லை, ஐயனே''—என்றே விடை வந்தது.

''உமது பாட்டனார் கண்டாரா ?''—என்று வினவினார் புத்தர்.

''இல்லை, ஐயனே'' என்ற அதே விடையே புகலப்பட்டது.

''அவருள் எவருமே கடவுளைக் காணவில்லைதானே ?'' என்றார் புத்தர்.

''இல்லை, எவரும் காணவே இல்லை'' என்ற விடையே வந்தது.

''சரி, அப்படியானால் உம்முடைய ஆசாரியர்களுடைய விஷயம் என்ன ? அவர்களுள்ளும் எவரும் கடவுளைக் காணவில்லைதானே ?'' என்றார் புத்தர். ''காணவில்லைதான்'' என்ற மறுமொழியே

வந்தது. இதே போன்று மற்றவரையும் கேட்டார் புத்தர். எவரும் கடவுளைக் கண்டதில்லை என்றே அவர்கள் யாவரும் சாதித்தனர்.

பின்னர் புத்தர் இவ்வாறு மொழிந்தனர்: ''சரி கேளுங்கள். ஒரு கிராமத்திற்கு இளைஞன் ஒருவன் அழுதுகொண்டும் ஓல மிட்டுக்கொண்டும், புலம்பிக் கொண்டும் வந்து சேர்ந்தான். 'ஆகா, நான் அவளை மிக மிகவன்றோ நேசிக்கின்றேன்!' என்றான். பின்னர் கிராமத்து மக்கள் ஆங்கு வந்து சேர்ந்தனர். அந்த இளைஞனோ தான் அவளை மிகமிக நேசிப்பதாக மட்டுமே கூறிக்கொண்டிருந்தான். ''நீ காதலிக்கும் அவள் யார்?'' என்றனர் கிராம மக்கள். ''எனக்குத் தெரியாதே'' என்றான் அவன். ''அவள் எங்கு வசிக்கின்றாள்?'' என்றனர் மக்கள். ''அது எனக்குத் தெரியாது'' என்றான் அவன். ஆனாலும் அவளை மிகமிக நேசிப்பதாகப் பகர்ந்தான். ''அவள் தோற்றம் எத் தகையது?'' என்றனர் மக்கள். ''அது எனக்குத் தெரியாது. ஆனாலும் அவளை யான் வெகுவாகக் காதலிக்கின்றேன்'' என்றான். அப்போது புத்தர் தம்முன் இருந்தவரை நோக்கி, ''இளைஞரே, கதையில் வரும் இந்த இளைஞனை என்னவென்று செப்புவீர்?'' என்றார். ''ஐயனே, இதைக் கேட்பானேன்? அவன் ஒரு மூடனே'' என்றார் வினவப்பட்ட இளைஞர். அவர்கள் யாவருமே இவ்வாறு சாற்றினர்: ''ஐயனே, இதைக் கேட்கவும் வேண்டுமா? அந்த இளைஞன் நிச்சயமாகவே ஒரு மூடன்தான். ஒரு பெண்ணைப் பற்றி இவ்வளவு அழுவதும், அது போன்றதெல்லாம் செய்வதும், அவளைத் தான் நேசிப்பதாகக் கூறுவதும்—இவையெல்லாம் மூடன் செயல்தானே, ஏனெனில் அவனோ அவளை ஒருபொழுதும் கண்டதே யில்லை. அத்தகைய ஒருத்தி இருக்கின்றாளா என்பதோ, வேறெதுவோ அவனுக்குத் தெரியாதே!'' என்றனர் அவர்கள். ''நீங்களும் அவனைப் போன்றவர்கள் அல்லவா? உங்களுடைய பிதாவோ பாட்டனாரோ இந்தக் கடவுளைக் கண்டதில்லை என்று நீங்கள் கூறுகின்றீர்கள். நீங்களோ, உங்கள் முன்னோர்களோ ஒருபொழுதும் அறியாத ஒரு பொருளைப்பற்றி இப்பொழுது நீங்கள் தர்க்கவாதம் புரிகின்றீர்கள். அதன் காரணமாக ஒருவர் கழுத்தை மற்றொருவர் அறுக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறீர்கள்'' என்றார் புத்தர்.

பின்னர் இளைஞர்கள் ''நாங்கள் என்னதான் செய்வது?'' என்று வினவினர். ''சரி, இப்பொழுது சொல்லுங்கள். கடவுள் எப்பொழுதாவது சினம் கொள்ளுகின்றார் என்று உங்களுடைய தந்தையர் எப்போதேனும் போதித்தனரா?'' எனக் கேட்டார் புத்தர். ''இல்லை, ஐயனே,'' என்றனர் இளைஞர்கள்.

''கடவுள் தீயவன் என்று உங்கள் தந்தையர் எப்பொழுதேனும் போதித்தனரா ?'' என்ருர் புத்தர். ''இல்லை, ஐயனே, ஆண்டவன் எப்பொழுதும் தூயவரே ஆவார்'' என்றனர் இளைஞர்கள்.

''சரி, இப்பொழுது பாருங்கள். நீங்கள் தூயராயும், நல்லோராயும், மற்றவையெல்லாமாகவும் இருப்பீர்களாயின் அந்த ஆண்டவனை நெருங்குவதற்கு உங்களுக்கு அதிக வாய்ப்பு இருக்குமென நீங்கள் கருதவில்லையா ? இதையெல்லாம் விவாதித்துக் கொண்டும், ஒருவர் கழுத்தை ஒருவர் அறுக்க முயன்று கொண்டும் இருப்பதை விட, அவ்வாறு நல்லோராக இருப்பதால் ஆண்டவனை நெருங்க அதிக வாய்ப்பு இருக்குமென்று நீங்கள் எண்ணவில்லையா ? ஆகவே தான் நான் கூறுகின்றேன்: தூயராகுங்கள்; நல்லோர் ஆகுங்கள்; தூயராக இருந்து யாவரையும் நேசிப்பீர்களாக''—என்ருர் புத்தர்.

புத்தர் பகர்ந்ததெல்லாம் அவ்வளவுதான்.

உயிர்களைக் கொல்லாமையும், உயிர்கட்கு இரக்கம் காட்டலும், என்ற கொள்கை புத்தர் பிறப்பதற்கு முன்னரே இருந்து வந்தது. ஆனுல் அவரிடத்துப் புதுமையாக இருந்தது ஜாதியை உடைத்தெறிந்ததுதான், அம்மாபெரும் இயக்கமே. இன்னுென்றும் அவரிடத்துப் புதுமையாக இருந்தது; தம்முடைய சீடருள்ளே நாற்பதின்மரை அவர் பொறுக்கியெடுத்து, ''நீங்கள் உலகெங்கும் செல்வீர்களாக. எல்லா இனத்தவருடனும் எல்லா நாட்டினருடனும் கலந்து பழகுவீர்களாக ! அனைவருடைய நலத்திற்காகவும் உத்தமமான தர்ம மார்க்கத்தைப் பிரசாரம் பண்ணுவீர்களாக !'' என்று கூறி அவர்களை உலகமுழுதும் அனுப்பிவைத்தார். ஆனுலும் இந்துக்கள் அவரைத் துன்பப் படுத்தவில்லை என்பது தெரிந்ததே. அவர் பழுத்த கிழ வயதினிலே உயிர் நீத்தார். தம்முடைய வாழ்நாள் முழுவதிலும் அவர் மிகுந்த உறுதியுடையராய் இருந்தார். அவர் பலவீனத்துக்கு ஒருபொழுதும் வசப்பட்டவரல்லர். அவருடைய கொள்கைகளிற் பலவற்றில் எனக்கு நம்பிக்கை இல்லை. அவற்றை நான் நம்புவதில்லைதான். இந்துக்களின் வேதாந்த தரிசினம் புத்தருடையதைவிட ஆழ்ந்த சிந்தனை மிக்கது, மிகச் சிறப்புற்றதொரு வாழ்க்கைத் தத்துவத்தை உடையது என்பது என் நம்பிக்கையாகும். புத்தருடைய திருப்பணி முறை எனக்குப் பிடித்துள்ளது. ஆனுல் அந்த மாபுருடரிடத்து எனக்கு மிக மிகப் பிடித்துள்ளது இதுதான்; மனிதகுலத்திற்கெனத் தோன்றியுள்ள ஆசாரியர் அனைவருள்ளும் இந்த மாபுருடர் ஒருவரே தம்முடைய மனத்தில் ஒருபொழுதும் அற்பக் குப்பையற்றவராய், நல்லறிவும் பலமும் வாய்ந்தவராய் இருந்தமையே. அவருடைய காலடியிலே பல அரசுகள் கிடந்தபொழுதும் மனந்திரியாதவரானுர்; ''மனிதர்க்குள்ளே யானும் ஒரு மனிதனே'' என்பதை நிலைநாட்டி வந்தார்.

ஆனுல் இந்துக்களோ யாரையேனும் வழிபடத் துடித்த வண்ணம் இருக்கின்றனர். நீங்கள் போதிய அளவு நீண்ட காலம் வாழ்வீர்களாயின் என் நாட்டு மக்களால் நான் வழிபடப்படுவதைக் காண்பீர்கள். அவர்களுக்கு எதையேனும் போதிப்பதற்கு நீங்கள் ஆங்கே செல்வீர்களானுல் நீங்கள் மரிக்கு முன் வழிபடப்படுவீர்கள். எப்பொழுதுமே அவர்கள் யாரையேனும் வழிபடுவதற்கு முயன்று கொண்டிருப்பர். அத்தகைய இனத்தவரிடையே வாழ்ந்துவந்த உலகப் புகழ்பெற்ற புத்தர் தாம் ஒரு மனிதரே என்று எப்பொழுதும் கூறிக்கொண்டே உயிர் நீத்தார். வேறெந்த மனிதனினும் தாம் எவ்வாற்ருலும் வேருனவர் என்ற ஒரு கூற்றினையேனும் அவரைப் புகழ்வோர் எவர்க்கும் அவரிடமிருந்து பெற இயலவில்லை.

புத்த தேவருடைய அந்த அந்திமச் சொற்கள் எப்பொழுதும் என்னுடைய உள்ளத்தினைப் பரவசப்படுத்தின. அவர் முதிர்ந்த வயதினராயும் நோயுற்றும் இறக்கும் தறுவாயில் இருந்த காலை யாவராலும் இகழப்படும் சண்டாளன் ஒருவன் அவரைச் சார்ந்தான். அவன் பிணம் தின்பான், செத்த பிராணிகளைத் தின்பவன். அவ்வினத்தாரை ஊருக்குள்ளே நுழைவதற்கும் இந்துக்கள் அனுமதிக்கமாட்டார். இத்தகையரில் ஒருவன் புத்தரை விருந்துக்கு அழைத்தான். அவரும் சீடர்களுடனே வந்தார். ஏழைச் சந்தன் எனும் அவன் இந்த மாகுரவரைச் சிறப்பான வகை எனத் தனக்குத் தோன்றிய முறையிலே வரவேற்க விரும்பினுன்; எனவே அவன் பன்றி இறைச்சியையும், ஏராளமான அரிசிச் சோற்றையும் அவருக்கென ஆக்கிவைத்தான். புத்தரும் அதனை நோக்கினுர். சீடர்கள் அந்த உணவைக் கண்டுத் தயங்கி நின்றனர். புத்த தேவரும் அவர்களிடம் ''சரி, இதை நீங்கள் புசியாதீர்கள்; இது உங்களுக்குக் கேடு விளைவிக்கும்'' என்று கூறினுர். ஆனுல் தாமோ அமைதியாகக் கீழமர்ந்து அதனை உண்டனர். சமத்துவ போதகரான அவர் (சண்டாளனுன) சந்தனுடைய உணவையும், பன்றி இறைச்சியையும்கூட உண்டு தீர வேண்டும்! எனவே அவர் அதனை மறுக்காது ஏற்றுக்கொண்டார்.

ஏற்கெனவே அவர் மரணத் தறுவாயில் இருந்தார். ''இந்த மரத்தினடியில் எனக்கென எதையேனும் கீழே விரியுங்கள். என் முடிவுகாலம் அண்டிவிட்டதென உணர்கின்றேன்'' என்ருர் அவர். அங்கேயே மரத்தடியில் சயனித்துக் கொண்டார். அவரால் நிமிர்ந்து உட்கார இயல வில்லை. அவர் செய்த முதல் காரியம் இவ்வாறு பகர்ந்ததே: ''அந்தச் சந்தனிடம் சென்று எனக்குப் பேருதவி புரிந்தவருளே அவனும் ஒருவன் என்பதை அவனிடம் கூறுங்கள். அவன் அளித்த உணவு காரணமாக நான் நிர்வாண நிலையில் அமையப் போகிறேன்.'' பின்னர் அவரிடம் உபதேசம்

பெறப் பலர் வந்தனர். சீடர் ஒருவர், ''புத்தருக்கு அருகே இப்பொழுது செல்லாதீர்கள். ததாகதர் உயிர் நீத்துக்கொண்டிருக்கின்ருர்'' என்ருர். இச் சொற்களைக் கேட்டதுமே புத்த தேவர், ''அவர்களை உள்ளே வரவிடுங்கள்'' எனப் பணித்தார். பின்னர் மீண்டும் வேருெருவர் வந்தனர். சீடர்கள் அவரை உள்ளே விட மறுத்தனர். ஆனல் மீண்டும் உள்ளே வருமாறு உத்தரவு வந்தது. பின்னர் மரணத்தறுவாயிலே புத்தர் பிரான் பகர்ந்தார்: ''ஆனந்தா! இதோ நான் உயிர் நீத்துக்கொண்டிருக்கிறேன். எனக்காக நீ அழாதே. என்னைப் பற்றிய சிந்தனையும் வேண்டாம். இதோ நான் போய் விடுவேன். நீ உய்வடைதற்குப் பாடுபடுக; ஒவ்வொருவரும் என்னைப் போன்றவரே; உங்களுள் யானும் ஒருவனன்றி வேறல்லேன். இன்றுள்ள எனது நிலை யானே முயன்று பெற்றதாகும். நீவிரும் உழைத்து எனது நிலையினைப் பெற முயல்வீராக!'' என்று உரைத்தார்.

புத்தருடைய பின்வரும் மொழிகள் நினைவிற் பதித்தற்குரியன: ''பழைமையான நூல் ஒன்றை ஆதாரமாகக் காட்டுவதனல் எதனையும் நம்பிவிடாதீர். இதை நம்பவேண்டும் என்று உங்கள் முன்னோர்கள் கூறியதை முன்னிட்டு எதனையும் நம்பி விடாதீர். உம்மைப் போன்றுள்ள ஏனையோர்கள் நம்புவதால் எதனையும் நம்பி விடாதீர். ஒவ்வொன்றையும் சோதித்துப் பார்ப்பீராக. முயன்று பார்ப்பீராக. பின்னரே அதனை நம்புவீராக. அது பலர்க்கும் நன்மை பயக்குமெனின் அனைவர்க்கும் அதனை அளிப்பீராக.'' இவற்றை மொழிந்தவாறே ததாகதர் உயிர் நீத்தார்.

அப்புருடருடைய புத்தித் தெளிவைப் பாருங்கள். தெய்வங்களைப் பற்றியோ, தேவதூதர்களைப் பற்றியோ, பேய் பிசாசுகளைப் பற்றியோ, வேறெவரைப் பற்றியோ பேச்சில்லை. அத்தகையது அறவே இல்லை. அவரிடம் உறுதி, தெளிவு, மூளையின் நுண்பகுதியொவ்வொன்றிலும் நிறைவுத் தன்மை, இறக்கும் சமயத்தும் மயக்கமில்லாமை—யாவும் கொண்டிருந்தார். அவருடைய கொள்கைகளிற் பலவற்றை நான் ஒப்புக் கொள்ளாதவன்; நீங்களும் அந்நிலையில் இருக்கலாம். ஆனல் என்னுடைய கருத்தோ—ஆகா, அந்த அவருடைய வீரியத்திலே ஒரு துளியேனும் எனக்கு இருந்தால் போதும். உலகம் இதுவரை கண்டுள்ள தத்துவ ஞானிகளுக்குள்ளே மிகத் தெளிந்த தத்துவ அறிஞரும் குருவுமாவார் அவர். கொடுமை மிக்க பிராமணர்களுடைய அதிகாரத்திற்கு அவர் ஒருபொழுதும் தலைவணங்கவில்லை. ஒரு நாளும் அவர் வளைந்து நின்ருரல்லர். நேர்மையுடன் எவ்விடத்தும் ஒரேமாதிரியாக இருந்தவர் அவர். துயருறுவோருடன் அவரும் கூடி அழுவார்; உதவுவார். பாடுவோருடன் பாடுவார். வலிமை மிகுந்தோருடன் தாமும் வலிமை மிகுந்து இருப்பார். எவ்விடத்தும் தெளிந்த புத்தியும் ஆற்றலும் வாய்ந்தவர்.

இவையெல்லாம் உண்மையெனினும் புத்த தேவருடைய கொள்கையை அறிய எனக்கு முடியவில்லை என்பதும் மெய்தான். மனிதனிடத்து ஆன்மா உண்டு என்பதை அவர் மறுத்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆன்மாவிற்கு இந்துக்கள் கொண்ட பொருளையே நான் கருதுகிறேன். இப்போது இந்துக்களாகிய நாங்கள் யாவரும் மனிதனிடத்து நிலையான ஒன்றுளது என்றும், அது மாறாத ஒன்று, நீடூழி காலமெல்லாம் வாழ்ந்து வருகிறது என்றும் நம்புகின்றோம். மனிதரிடத்து உள்ள அதனை ஆத்மா என்கிறோம். அது ஆதியும் அந்தமும் அற்றது. அதேபோன்று இயற்கையிலும் நிலையான ஒன்று உள்ளது என்றும், அது பிரம்மம் என்றும், அதுவும் ஆதியும் அந்தமுமில்லாதது என்றும் நம்புகின்றோம். புத்தரோ இவ்விரண்டையும் மறுத்தனர். நிலையான ஒன்று இருப்பதற்கு ருசு இல்லை என்றார். எல்லாம் மாறிய வண்ணம் இருக்கும் தொகுதியே; தொடர்ந்து மாறிவரும் நினைவுத் தொகுதியையே மனம் என்கின்றோம். ஒரு ஊர்வலத்தின் முன்னே தீவட்டியொன்று எடுத்துச் செல்லப்படுகின்றது. அது சுழற்றுப்படும்பொழுது தோற்றமாகின்ற வட்டம் ஒரு மயக்கமே யாகும். அன்றேல் ஒரு நதியை உதாரணமாக எடுத்துக் கொள்ளு வோம். நதி சென்று கொண்டேயுள்ளது. கணந்தோறும் புதிய தொரு நீர்த் தொகுதி பெருகுகின்றது. அங்ஙனமே இந்த வாழ்வும்; எல்லா உடலும் எல்லா மனமும் இவ்வாறேயாம்.

அது சரி, ஆனால் எனக்கோ அவருடைய கொள்கை விளங்குவ தில்லை—இந்துக்களாகிய நாங்கள் அதை ஒருபொழுதும் அறிந்து கொண்டதேயில்லை. ஆனால் அந்தக் கொள்கையின் பின்னுள்ள நோக்கத்தை அறிந்துகொள்ள என்னால் இயலுகின்றது. ஆகா, அந்த நோக்கம் மிகமிகப் பெரிய நோக்கமாகும்! இவ்வுலகத்தின் பெரும் சாபக்கேடாக உள்ளது சுயநலமே என்றும், நாம் சுய நலமுடையராதலே சாபக் கேடு என்றும், சுயநலத்துக்கான நோக்கமே இருப்பது கூடாது என்றும் அக்குரவர் கூறுகிறார். நாம் சென்று கொண்டேயிருக்கும் நதி போன்றவர்கள்—இடை யறாத ஒரு நிகழ்ச்சி ஆவோம். தெய்வம் வேண்டாம், ஆன்மா வேண்டாம், உங்களுடைய கால்களிலே ஊன்றி நின்று நலத்திற் காகவே நலம் புரிவீர்களாக—தண்டனைக்குப் பயந்தோ, யாதோ ஓர் உலகம் செல்லக் கருதியோ அன்றி விவேகத் தெளிவுடனும் (சுயநல) நோக்கமற்றும் நிற்பீர்களாக. நோக்கமாவது: நான் நலம்புரிய விரும்புகின்றேன், நலம் புரிவதே நலம் என்பதே. இது மிகமிகப் பெருமையுற்றது, மிகப் பெரியது. புத்தருடைய தத்துவக் கொள்கையை கொஞ்சமுங்கூட யான் ஆமோதிப்பதில்லை. ஆனால் அவருடைய அறவலிமையை நினைக்கும்பொழுது என் மனம் பொருமை யடைகின்றது. அவரைப்போன்று ஆற்றலும்

துணிவும் உடையராய் ஒரு மணி நேரமேனும் நிலைத்து நிற்க உங்களிலே எவர்க்கேனும் இயலுமா என்று உங்கள் உள்ளங்களையே கேட்டுப் பாருங்கள். அவ்வாறு ஐந்து நிமிடமேனும் என்னால் நிற்க இயலாது. அப்படிச் செய்ய முயன்றால் நான் ஒரு கோழையாகி ஆதரவை நாடுவேன். ஏனெனில் நான் ஒரு பலவீனன்—ஒரு கோழை. எனவே இந்த மகத்தான மாபுருடரை நினைக்கும் பொழுதே எனக்கு ஊக்கம் கிளர்கின்றது. அவருடைய வலிமையினை அணுக நமக்கு முடியாது. அந்த வலிமைக்கு ஒப்பான எதையும் நான் ஒரு பொழுதும் கண்டதில்லை. நாமெல்லோருமே கோழைகளாகப் பிறந்துள்ளோம். நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ளக் கூடுமானால் வேறெதைப்பற்றியும் நாம் கவலை கொள்வதில்லை. நமக்குள்ளே பேரளவிற்கு அச்சமும் சுயநல நோக்கமும் பொழுதெல்லாம் உள்ளன. சுயநலமே நம்மைக் கோழைகளாக்கி விடுகின்றது; நம்முடைய சுயநலமே அச்சத்திற்கும் கோழைதனத்திற்கும் பெருங்காரணமாகிறது. புத்தரோ உயர்நிலையிலே நின்றவராய், ''நலமே புரிவீர்; அதுவே நலம் ஆதலின், இனிக் கேள்விகள் வேண்டாம். கேட்டது போதும். ஒரு பொய்க்கதையாலோ, உண்மைக் கதையாலோ, மூடநம்பிக்கையாலோ, நலம் புரியுமாறு தூண்டப்பட்ட ஒருவன் சந்தர்ப்பம் வந்ததும் தீதினையே புரிவான்; நலத்திற்காகவே நலம் புரிபவனே நல்லவன் ஆவான். அதுவே அவனது குணச் சிறப்பு'' என்று கூறினர்.

''மனிதனிடம் எஞ்சியிருப்பது எது?'' என்று குரவரை வினவினர். ''எல்லாமேதான், எல்லாமேதான். ஆனால் மனிதனிடத்து என்னதான் உளது? உடல் அல்ல, ஆன்மா அல்ல, ஒழுக்கமே உளது. அதுவே எல்லாக் காலத்திற்கும் எஞ்சி நிற்கின்றது. மாய்ந்து மறைந்து போனவர்கள் அனைவரும், நமக்காகத் தங்களுடைய குணநலன்களை ஏனைய மனிதவர்க்கத்தின் நிலையான உடைமைகளாக விட்டுச் சென்றுள்ளனர்; அவர்களுடைய குண நலன்கள் தொழிலாற்றி வருகின்றன. புத்தர் பிரான், நாஸரத்தைச் சேர்ந்த இயேசுநாதர்—இவர்களைப்பற்றி என்ன சொல்வது? அவர்களுடைய குணநலன்களால் உலகம் நிரம்பியுள்ளது. இது ஒரு மாபெரும் கொள்கையன்றோ?

இதைவிட்டுச் சிறிது கீழே இறங்குவோம்—எடுத்துக்கொண்ட பொருளுக்கு நாம் இன்னும் வரவில்லை. (சிரிப்பு). இன்று மாலை பேச வேண்டியது கொஞ்சமன்று.

இனி அவர் இயற்றியதை என்ன என்பது! அவர் பணியாற்றிய முறை ஒழுங்கான அமைப்பை ஏற்படுத்துதலே. சங்க அமைப்புபற்றி இன்று நீங்கள் கொண்டுள்ள கருத்து அவரது குணநலனேயாம். தாம் ஏற்படுத்திய சமய சங்கத்தை அவர் நமக்கு விட்டுச்

சென்றார். துறவியரையெல்லாம் ஒன்று சேர்த்துச் சங்கம் அமைத்தார். தேர்வுச் சீட்டு மூலம் வாக்கெடுப்பது என்பதும், ஏசுநாதர் பிறப்புக்கு ஐந்நூற்று அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே அந்த அமைப்பில் இருந்தது. நுட்பமான அமைப்பு அது. புத்தர் விட்டுச் சென்ற சங்கம் மாபெருஞ் சக்தி வாய்ந்ததாயிற்று. அது இந்தியாவிலும் அதற்கு வெளியிலும் பெருத்ததொரு சமயப் பணியை ஆற்றி வந்தது. இதற்குப் பிறகு, முந்நூறு ஆண்டுகள் கழிந்த பின்னர், அதாவது ஏசுநாதர் காலத்திற்கு இருநூறு ஆண்டுகட்கு முன்பு, மாபெரும் சக்கரவர்த்தியான அசோகர் தோன்றினார். உங்களுடைய மேனாட்டுச் சரித்திர ஆசிரியர்கள் அவரை மாபெரும் மன்னருள்ளே மிக்க தெய்விகத் தன்மை பெற்றவர் எனச் சாற்றியுள்ளனர். அந்த மன்னர் முழு அளவிற்கு புத்தருடைய கொள்கைகளை ஏற்று மாறிவிட்டார். அவரது காலத்திலே அசோகரே மிகப் பெரிய சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தார். அவருடைய பாட்டனார் அலெக்ஸாண்டர்க்குச் சமகாலத்தவர். அலெக்ஸாண்டர் காலம் முதல் இந்தியா முன்னிலும் நெருங்கிய வகையிலே கிரீஸ் நாட்டுடன் இணக்கம் கொண்டதாயிற்று. இப்பொழுது ஒவ்வொரு நாளும் மத்திய ஆசியாவிலே ஏதேனும் ஒரு கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக இந்தியா புத்தரையும் அசோகரையும் பிறரையும் முற்றிலும் மறந்து விட்டது. அவரது காலத்திய தூண்களும், கோபுரங்களும் கம்பங்களும் இருக்கின்றன. ஆனால் அவற்றில் இருந்த பழைய எழுத்துக்களைப் படிக்கக் கூடியவர் எவருமே இல்லை. இவ்வெழுத்துக்களைப் படித்துக் காட்டும் எவருக்கும் இலட்சம் இலட்சமாகப் பொருள் தருவதாக முகலாயப் பேரரசர்களுள் சிலர் உறுதி கூறினர்; ஆனாலும் எவர்க்கும் இயலவில்லை. ஆனால் சென்ற முப்பது ஆண்டு காலத்திலே இவற்றையெல்லாம் படித்துப் பார்த்து விட்டனர். அவை யாவும் பாலி மொழியிலே வரையப்பட்டுள்ளன.

போரின் பயங்கரத் தன்மையையும் துயரையும் விவரித்து சாஸனத்தை வரைந்துள்ளார். இந்தப் போருக்குப் பிறகுதான் அவர் சமய நெறிக்கு மாறினார். பிறகு அவர் கூறியதாவது: ''இனி எனது சந்ததியாருளே எவருமே பிற இனத்தவரை வென்று புகழ் தேடலை நினைக்கவேண்டாம். புகழை விரும்பின் பிற இனத்தவர்களுக்கு அவர்கள் உதவிபுரியட்டும். விஞ்ஞான போதகர்களையும் சமய போதகர்களையும் அவர்கள் அங்கு அனுப்பட்டும். ''வாளால் பெறும் புகழ் புகழேயன்று.'' பின்னர் அவர் சமய போதகர்களை அலெக்ஸாண்ட்ரியா எனும் நகருக்கும் கூட அனுப்பியதை அறிகின்றோம். நாட்டின் அப்பகுதியிலெல்லாம் உடனே சில சமயப் பிரிவினர்—தேரபுத்திரர்கள்

எஸின் முதலானேர் எழுந்ததைக் கண்டு வியப்படைவர். இவர்கள் தீவிரத் தாவர உணவினராயும் பிறவும் ஆயினர். இன்னும் இப்பெருஞ் சக்கிரவர்த்தியான அசோகர் மனிதருக்கும் விலங்குகளுக்கும் மருத்துவச் சாலைகள் கட்டினுர். அவ்வாறு மருத்துவச் சாலைகள் கட்ட ஆணைகள் இடப்படுவதைச் சில சாஸனங்கள் குறிப்பிடுகின்றன. அதாவது, மிருகம் ஒன்றுக்கு வயதாகி விட்டதானல், யான் ஏழையாக இருந்து பாதுகாக்க இயலாதவனு யிருப்பின் தயை காட்டும் நோக்குடன் அதைச் சுட்டுக் கொன்று விடமாட்டேன். இந்த மருத்துவச் சாலைகள் பொதுமக்களுடைய தருமத்தால் நடைபெற்று வந்தன. கடற்கரையோரமாய் வியாபாரம் செய்து வந்த வர்த்தகர்கள் தாங்கள் விற்பனை செய்கின்ற ஒவ்வொரு குறித்த எடையுள்ள பொருளுக்கும் இவ்வளவு என்ற கணக்கில் வரி செலுத்தினர். இந்த வரிப் பணமெல்லாம் மருத்துவச்சாலைகளுக்கு அளிக்கப்பட்டது. எனவே மக்கள் எவரும் அதனல் பாதிக்கப்படுவதில்லை. ஒருவனிடம் ஒரு பசுவோ வேறு ஒரு மிருகமோ இருந்து, அவன் அதைவைத்துப் பாது காக்கப் பிரியப்படாவிடில் அவன் அதை மருத்துவச்சாலைக்கு அனுப்பிவிடுவான். அங்கே அதை வைத்துப் பராமரிப்பர். எலி, சுண்டெலி—எவற்றை அனுப்பிவைத்தாலும் அவர்கள் அவற் றைப் பராமரித்தனர். ஆனல் நம் பெண்டிர் சில சமயம் இவற்றைக் கொல்வதற்கு முயல்கின்றனர். இதை நீங்கள் அறிவீர் கள். பெண்டிர் இவ்விலங்குகளைக் காணப் பெருங்கூட்டமாகச் செல்கின்றனர், எல்லாவிதமான தின்பண்டங்களையும் கொணர் கின்றனர். பல சமயங்களிலே இந்த உணவே அவ்விலங்குகளைக் கொன்றுவிடுகின்றது. மனிதனைப் போலவே விலங்குகளும் அதே அளவு அரசாங்கப் பாதுகாப்பில் இருக்கவேண்டும் என்று கருதினுர் அசோகர். மிருகங்கள் கொல்லப்படுவதை ஏன் அனுமதிக்க வேண்டும்? அதற்குக் காரணம் ஒன்றுமில்லை. ஆனல் உண வுக்காக மிருகங்களைக் கொல்வதைத் தடுக்குமுன் மக்களுக்கு எல்லாவிதமான காய்கறிகளும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பர் அசோகர். எனவே அவர் ஆட்களை அனுப்பித்து எல்லா வகையான காய்கறிகளையும் சேகரித்து, அவற்றை இந்தியாவிலே பயிர் செய்தார். இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டவுடனே ஆணை ஒன்று பிறந்தது: ''இனி யாரேனும் ஒரு மிருகத்தை வதை செய்தால் அவன் தண்டிக்கப் படுவான்.'' அரசாங்கம் பிராணிகளையும் காப்பாற்றித் தீரவேண்டும். பசுவையோ ஆட்டையோ வேறு எந்த மிருகத்தையோ மனிதன் தன் உணவுக் கெனக் கொல்வதற்கு என்ன உரிமை உள்ளது?

இவ்வாறு இந்தியாவிலே பௌத்தம் ஒரு பெரிய அரசியல் வலிமையுள்ளதாகியது. எனினும் படிப்படியாக இத்தகைய பெருஞ்

சமயப் பிரசார வீரப்பணியும் சிதறுண்டு போயிற்று. ஆனால் சமயத்தைப் பிரசாரம் பண்ண அவர்கள் ஒரு பொழுதும் வாளை ஏந்தவில்லை என்பது அவர்கட்குப் பெருமை அளித்தது எனல் வேண்டும். பௌத்த சமயத்தைத் தவிர உலகத்திலே வேறு எச்சமயமும் இரத்தம் சிந்தாமல் ஓர் அடிகூட முன்னெடுத்து வைத்ததில்லை; மூளைச் சக்தியொன்றினால் மட்டுமே இலட்சக் கணக்கான மாந்தரைத் தன் கொள்கைக்கு மாற்ற வல்லதும்; அங்ஙனமே இல்லை—இல்லவே இல்லை. பிலிப்பைன்ஸ் நாட்டிலே நீங்களும் அதையே செய்யப் போகின்றீர். வாளைக்கொண்டு மக்களைச் சமயப் பற்றுடையவர்களாக்குவதே உங்கள் முறையும். உங்களுடைய பிரசாரகர்கள் செய்து வருவதும் அதுவே; மக்கள் சமயப் பற்றுடையவர்களாவதற்காக அவர்களை வென்று கொன்று விடுங்கள் என்பதுதான். ஆகா ! சமய போதனைக்கு இது ஓர் ஆச்சர்யமான வழிதான் !

இந்த மாபெரும் சக்கரவர்த்தி எவ்வாறு மதமாற்றம் அடைந் தார் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த மாமன்னர் தம் இளவயதில் அவ்வளவு நல்லவராக இல்லை. அவருக்கு ஒரு சோதரன் இருந்தான். இரு சோதரரும் சண்டையிட்டுக் கொண் டனர்; அசோகருடைய சோதரன் அவரைத் தோற்கடித்து விட்டான்: அசோகரும் பழிக்குப்பழி வாங்குவதற்காக அவனைக் கொல்ல விரும்பினார். அந்தச் சோதரன் ஒரு புத்த பிக்ஷுவிடம் தஞ்சம் புகுந்ததாக அசோகருக்குச் செய்தி வந்தது. எங்களுடைய துறவியர் மிகப் புனிதமானவர் என்றும், எவரும் அவரை அணுக மாட்டார் என்றும் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். ஆகவே அந்த பிக்ஷுவிடம் அசோக சக்கரவர்த்தியே வந்தார். "அந்த மனிதனை என்னிடம் தந்து விடுங்கள்" என்று அசோகர் கூறினார். அப்போது பிக்ஷு அவரிடம் "பழி தீர்ப்பது பொல்லாதது சினத்தை அன்பால் தீங்கற்றதாக்குக. சினத்தால் சினத்தைப் போக்க முடியாது. பகையைப் பகையால் ஒழிக்க முடியாது. அன்பால் சினத்தைக் கரைத்து விடுக. அன்பால் பகையை நீக்கி விடுக. அன்பரே, ஒரு தீங்கிற்காக இன்னொரு தீங்கைத் திருப்பி அளிப்பீராகில், அந்த முதல் தீங்கினை நீர் போக்கியவராக மாட்டீர்; ஆனால் உலகிலே இன்னுமொரு தீங்கினைக் கூட்டி வைக்கின்றீர்" என்றார். அசோக சக்கரவர்த்தியோ அவரைப் பார்த்து, "அதெல்லாம் சரிதான், பேதைத் துறவியே, நீர் அவர்க்காக உமது உயிரைத் துறக்க ஆயத்தமாயிருக்கின்றீரா ?" என்றார். துறவியோ, "ஆயத்தமே" என்று கூறிக்கொண்டு வெளியே வந்தார். சக்கரவர்த்தியும் வாளை உருவி பிக்ஷுவிடம் "சரி, தயாராக இரும்" என்றார். அவரைத் தாக்கும் தருணத்தில் மன்னன் அந்த பிக்ஷுவின் முகத்தைப் பார்த்தார். அவருடைய கண்கள் இமைக்கவும் இல்லை. அரசர் தமது செயலை நிறுத்தி

அவரைப் பார்த்து, ''துறவியே, இவ்வாறு இமை கொட்டாமல் இருக்க, வலிமையை நீர் எங்கு கற்றுக் கொண்டீர்?'' என வினவினர். துறவி மீண்டும் உபதேசித்தார். மன்னரும், ''இன்னமும் உபதேசம் செய்வீராக. நீர் கூறுவது எனக்குப் பிடித்தமாயுள்ளது'' என்ருர். அதற்கேற்ப அவர் புத்த மாகுரவருடைய கவர்ச்சிக்கு ஆட்படலானுர்.

பௌத்த சமயத்தில் மூன்று பொருள்கள் உள்ளன; அவை யாவன: புத்தர், தர்மம், ஸங்கம் என்பன. முதன் முதலில் அது எவ்வளவு எளிமையாய் இருந்தது. புத்தர் இறந்த சமயத்திலே, அவர் உயிர்நீத்தற்கு முன்பு ''உங்களுக்கு நாங்கள் என்ன செய்வோம்?'' என்று சீடர்கள் வினவினர். ''ஒன்றுமே வேண்டாம்'' என்ருர் புத்தர். ''உங்கள் ஞாபகமாக என்ன சின்னம் நாங்கள் எழுப்புவோம்?'' என்று வினவினர். ''நீங்கள் விரும்பினுல் சிறுமேடு ஒன்று அமையுங்கள். அன்றேல் ஒன்றுமே செய்யாமல் இருங்கள்'' என்ருர் புத்தர். ஆயினும் காலம் செல்லச் செல்ல மிகப்பெரிய ஆலயங்களும் சொத்துக்களும் எழலாயின. அக்காலத்திற்கு முன் விக்கிரக வழிபாட்டை எவரும் அறிந்திலர். விக்கிரகங்களை முதன் முதலில் உபயோகித்தவர் பௌத்தர்களே என்று யான் சொல்லுகின்றேன். முனிவர்கள் அனைவரும் உட்கார்ந்துகொண்டு பிரார்த்தனை புரிவது போன்ற விக்கிரகங்கள் உள்ளன. பௌத்த அமைப்பு வளர வளர, உபகரணங்கள் எல்லாமும் பெருகி வரலாயின. பின்னர் பௌத்த மடங்கள் செல்வம் மிகுந்தவை ஆயின. புத்த சமயம் சீர்குலைய உண்மைக் காரணம் இதுவே. துறவாசிரமம் ஒரு சிலருக்கு மிக நன்றேயாம். ஆனுல் அது பிரசாரம் செய்யப்பட்ட வகையின் விளைவாக, மனத்தின் எண்ணம் தோன்றியவுடனே ஒவ்வொரு ஆணுே பெண்ணுே வாழ்வினைத் துறப்பது வழக்கமாயிற்று. இந்தியாவில் எங்கும் மடங்கள் ஏற்பட்டன; சில மடங்களிலே ஓர் இலட்சம் துறவியர் இருந்தனர். சில வேளைகளிலே ஒரு கட்டடத்திலே இருபதினுயிரம் துறவியர் வாழ்ந்தனர். இவை மிகப் பெரிய பிரம்மாண்டமான கட்டடங்களாயின; அவை நாடெங்கும் பரந்து காணப்பட்டன. வித்யா பீடங்களும் அவை போன்ற பிறவும் இருந்தன என்பது உண்மைதான். ஆனுல் பிரஜா விருத்தி செய்வதற்கு, இனவிருத்தியைத் தொடர்ந்து செய்வதற்கு எஞ்சியிருந்தவர் யார்? பலவீனர்களே. பலமுள்ள திறன்மிகுந்த மனத்தினர் வெளியேறிவிட்டனர். அதனுல் நாடு சிதைவடையலாயிற்று.

இந்த ஆச்சர்யமான பௌத்த சங்கத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்லுகின்றேன். அது பெருமையுள்ளது. ஆனுல் கருத்து, கொள்கை என்பது ஒன்று, செயல்முறை என்பது வேறென்று. எதிர்க்காமையைப் பழகுதலும் பிறவும் கருத்தளவில் நல்லனவே;

ஆனல் நாம் அனைவரும் தெருவில்போய் நின்றுகொண்டு எதிர்க் காமையைப் பின்பற்றுவோமாயின் இந்த நகரத்திலே ஒன்றும் எஞ்சியிராமலே அழிந்து போகும். அதாவது, யான் கூறுவது இதுதான்: கருத்து முற்றும் மிகச் சரியானதுதான்; ஆனல் அதை அடையும் வகையைச் செயல்முறையிலே கண்டுபிடித்தவர் எவரும் இலராயினர்.

ஜாதியிலே இரத்தம் என்ற பொருள் அளவிலே ஏதோ ஒன்று இருக்கின்றது. அதே போன்று குல பாரம்பரியத்திலும் நிச்சய மாக உண்மை உள்ளது. இப்பொழுது நீங்கள் இதை அறிந்து கொள்ள முயலுங்கள். நீங்கள் ஏன் உங்கள் இரத்தத்தை நீக்ரோக்களுடைய இரத்தத்தோடும் அமெரிக்க இந்தியர்களுடைய இரத்தத்தோடும் கலப்பதில்லை? அவ்வாறு செய்ய இயற்கை உங்களை அனுமதியாது. நீங்கள் உணராமலே வேலை செய்து வரும் ஒன்று உங்கள் இனத்தைக் காப்பாற்றி வருகின்றது. இது போன்றதுதான் ஆரியருடைய ஜாதியும். ஒன்று நீங்கள் கவனிக்க வேண்டும். மற்றவர்கள் எமக்குச் சமமானவர் அல்லர் என்று யான் கூறவில்லை. அவர்களும் சம உரிமைகளையும் நலன்களையும் பெற்றுத் தீர வேண்டும். ஆனலும் சில இனங்கள் ஒன்ருே டொன்று கலக்குமாயின் அவை தாழ்ந்த நிலையடைகின்றன என் பது நமக்குத் தெரியும். ஆரியர், அனரியர் என்ற கடுமையான ஜாதிக் கட்டுப்பாடு இருந்தும்கூட ஓரளவுக்கு இடைச் சுவரானது தள்ளப்படலும் பிறநாட்டு இனத்தவர் கூட்டங்கள் தம் விசித்திர மான மூட நம்பிக்கைகளோடும் பழக்க வழக்கங்களோடும் உள்ளே நுழைந்தனர்; இதை எண்ணிப் பாருங்கள். துணி உடுத்தக் கூடப் போதிய பண்பாடு இல்லாதவர்கள், அழுகிய இறைச்சியைத் தின்கின்றவர்கள், இத்தகையவர்கள் உள்ளே புகுந்தனர். ஆனல் பின்பு அவர்கள் பூதவழிபாட்டுச் சின்னங்கள், நரபலி, மூட நம்பிக்கை, பைசாச வித்தை ஆகியவையும் தொடர்ந்து வந்தன. இவற்றையெல்லாம் மறைத்துவைத்து அவர்கள் சில ஆண்டுகள் நேர்த்தியாயிருந்தனர். பின்னர் இப்பழக்கங்களையெல்லாம் முன் னணிக்குக் கொண்டு வந்தனர். இதனல் இனம் முழுவதும் தாழ்வடையலாயிற்று. பின்னர் இந்தக் கலப்பு எற்பட்டது. கலக்க வொண்ணுத இனத்தவர்களோடு கலப்பு மணங்கள் நிகழலாயின. இனம் இதனல் தாழ்வடைந்தது. ஆயினும் நீண்டகால அளவிலே இதனல் நலமே ஏற்பட்டது. நீங்கள் நீக்ரோக்களுடனும் அமெரிக்க இந்தியர்களுடனும் கலந்துவிடுவீர்களானல் நிச்சயமாக உங்கள் நாகரிகம் தாழ்ந்து விடும். ஆனல் நூற்றுக்கணக்கான ஆண்டு கட்குப் பின்னர் இந்தக் கலப்பின் விளைவாக மீண்டும் ஒரு மாபெரும் இனம்—முன்னிலும் வலிமைமிக்க ஓரினம்—தோன்றும். ஆனல் தாற்காலிகமாக நீங்கள் வருந்தவேண்டியதாகும். இந்துக் களிடம் நம்பிக்கை உள்ளது. ஒரு புதுமையான நம்பிக்கை என

எண்ணுகின்றேன். அது சரியா என்பதை யான் அறியேன். அதற்குமாருக எதையும் காணவில்லை. அதை மறுக்க ஏது ஒன்றும் இல்லை. அந்த நம்பிக்கையாவது: ஆரியர் என்ற நாகரிக இனம் ஒன்றே இருந்தது என்பதே. ஆரியன் தனது இரத்தத்தை அளித்தாலன்றி மற்ற எந்த இனமும் நாகரிகம் அடையமுடியாது. போதனை எதுவும் பயன்படாது; ஆரியன் தனது இரத்தத்தை ஓர் இனத்தவர்க்கு அளித்து, அந்த இனத்தை நாகரிகமுற்றதாக்குகிருன். வெறும் போதனை பயன்படாது. உங்கள் நாட்டுக்கு ஆரியன் ஓர் உதாரணமாவான். உங்கள் இரத்தத்தை நீங்கள் நீக்ரோ இனத்தவர்களுக்கு அளித்து உதவு வீர்களா? அப்போதே நீக்ரோ மக்கள் உயர்தரப் பண்பாட்டைப் பெறுவர்.

இந்துக்களுக்கு ஜாதியில் பிரியம் உள்ளது. அந்த மூட நம்பிக் கையின் ஒரு சிறிது கறை என்னிடத்தும் இருக்கலாம். அதை யான் அறியேன். புத்தரது லட்சியத்தில் எனக்கு மிகுந்த பிரியம் உளது. அது மகத்தானதே! ஆனல் என்னைப் பொறுத்த வரையில் அந்த லட்சியத்தைச் செயல் முறைக்கு அவ்வளவு ஏற்றதென யான் எண்ணவில்லை. நாளடைவிலே இந்திய நாடு சீர்குலைந்ததற்குப் பெருங்காரணங்களுள் ஒன்று இதுவுமாகும். ஆனுலும் மிகப் பெரும் அளவிலே அனைவரும் கலந்து ஒன்ருயினர். பலப்பலவான வெவ்வேறு இனங்களெல்லாம் ஒன்ருய்க் கலந்து கொண்டிருக்கும் நிலையிலே—ஒரு மனிதன் உங்களைப்போன்று வெள்ளை நிறத்தவனுகவோ மஞ்சள்நிறத்தவனுகவோ இன்னெருவன் என்னைப் போன்று கருநிறத்தவனுகவோ இருக்க, வெள்ளை கருப்பு என்ற இருகோடிகளுக்குமிடையிலே—எல்லாவிதமான தரங்களைச் சார்ந்தவரும் இருக்க, ஒவ்வோர் இனத்தவரும் தத்தம் பழக்க வழக்கங்களை விடாது பற்றிக்கொண்டே யிருப்பின், நீண்டகாலப் போக்கிலே ஒரு கலப்பு ஏற்பட்டு அதன் விளைவாக நிச்சயமாக ஒரு மாபெரும் எழுச்சி வந்தே தீரும். ஆனல் தாற்காலிகமாக மாபெரும் மனிதன் உறக்க நிலையில் இருந்தாக வேண்டும். அத்தகைய கலப்பின் விளைவு இதுவே.

பௌத்த சமயம் இவ்வாறு கேடடைந்தபோது எதிர்வினை தடுத்தற்கரியதாயிற்று. உலகம் முழுவதிலும் ஒரு பொருளே உள்ளது; உலகம் ஒன்றேயாகும்; வேறுபாடு காட்சியின் விளைவே; அனைத்தும் ஒன்றே, இரண்டற்ற ஒன்றே, இது இந்தியரது கருத்தாகும். இந்தக் கொள்கை எப்பொழுதும் இந்தியாவில் இருந்துள்ளது. உலகாயதமும் ஐயவாதமும் அனைத்தையும் தகர்த்த பொழுதெல்லாம், அது முன்னணிக்குக் கொண்டுவரப் பட்டது. இந்தியாவிற்குள்ளே எல்லா நாட்டு அநாகரிகர்களையும் அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் புகுத்தினதின் மூலம் பௌத்த சமயம் நாட்டிலிருந்த எல்லாவற்றையும் தகர்த்தெறிந்த

போது, எதிர்வினை ஒன்று ஏற்படலாயிற்று. இளம் துறவியான சங்கராசாரியரே அந்த எதிர்வினைக்குத் தலைமை தாங்கினார். புதிய கொள்கைகளைப் பிரசாரம் செய்தும், புதுக் கருத்துக்களையே எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டும், புதிய சமயப் பிரிவுகளைப் படைத்தும் வருவதற்குப் பதிலாக, அவர் வேதங்களை மீண்டும் உயிர்ப்பித்தார். எனவே இக்கால இந்து சமயத்திலே பழைமையான இந்து சமயக் கலப்பு ஏற்பட, வேதாந்தியரே பின்னதைத் தலையெடுக்கச் செய்தனர். ஆனால், ஒருமுறை இருந்தது மீண்டும் உயிர்த்தெழுவதில்லை. ஆகவே இந்து சமயத்தின் கர்ம காண்ட கிரியைகள் பின்னர் உயிர் பெற்று ஏழாது போயின. நீங்கள் நான் கூறுவதைக் கேட்டு வியப்புறுவீர்கள்—பழைய கிரியைகளின் முறைப்படி மாட்டிறைச்சி உண்ணாதவன் நல்லதோர் இந்து ஆகான். சிற்சில சந்தர்ப்பங்களிலே அவன் காளை ஒன்றைப் பலியிட்டு அதனை உண்ண வேண்டியதாயிற்று. இப்பொழுதோ அது அருவருக்கத் தக்கதாகிறது. இந்தியாவிலே மக்கட்குள் எத்துணை வேறுபாடு இருப்பினும் இந்த மாட்டிறைச்சி உண்ணாமை என்ற ஒருவிஷயத்திலே ஒரே கருத்துடையவரே. பழைய யாகங்களும், பழைய தேவதைகளும் யாவும் மறைந்துவிட்டன. இக்கால இந்தியா வேதத்தின் ஞானகாண்டப் பகுதிக்கே உரியதாகிறது.

இந்தியாவிலே பௌத்தமே முதன் முதலான சமயப் பிரிவாயிற்று. பௌத்தர்களே முதன் முதலில் இவ்வாறு இயம்பினர்: ''எங்களுடையதே ஒரே நெறியாகும்; எங்களுடைய சங்கத்தில் நீங்கள் சேரும்வரை உங்களுக்கு உய்வில்லை.'' அவர்கள் தங்களுடையதே சரியான நெறி என்றனர். ஆனாலும் இந்துவின் இரத்தம் அவர்களிடத்து இருந்ததாலே பிற நாட்டவர்களைப் போன்ற கல்நெஞ்சம் படைத்த மத வெறியர்களாக இருக்க முடியவில்லை. ''உங்களுக்கும் முத்தி உண்டு; காலமெல்லாம் எவரும் தவறிய பாதையிலே செல்லமாட்டார்'' என்றனர் அவர்கள். இதற்கு மாறாக அவர்கள் கூறவேயில்லை. அவர்களிடம் மிகுதியாயிருந்த இந்து இரத்தம் அவர்களை இதற்கு மாறாகக் கூறவிடவில்லை. அவர்களுடைய இதயம் அவ்வளவு கல்லாக இல்லை. ஆனால் நீங்கள் அவர்களுடைய சமயத்தைச் சார்ந்தாக வேண்டும் என்றனர்.

ஆனால் இந்துக்களுடைய கருத்தின்படி யாரையும் ஒருவன் சாரவேண்டியதில்லை. நீவிர் எங்கிருந்தாலும் அங்கிருந்து தொடங்கி மையத்தை அடையலாகும். இது மிகவும் சரியானதே. இந்துமதம் இந்த நலனை உடையதாயிற்று. கொள்கைகளும் சித்தாந்தங்களும் பொருளற்றவை. உமது உண்மை நிலையே உம்மைப் பாதிப்பதாகும். இவ்வுலகம் கண்டுள்ள மிகமிகச் சிறந்த தத்துவ தரிசனங்களைப்பற்றிப் பேசிவரினும், உம்முடைய ஒழுக்கத்தால் நீர் ஒரு பேதையே ஆவீர் எனின், அவற்றால்

யாது பயனும் வாராது. நல்லொழுக்கம் உம்மிடம் அமையு மாயின் உமக்கு அதிக வாய்ப்பு உண்டு. இவ்வாறு இது இருத் தலின் வேதாந்தி எவனுக்காகவும் காத்திருக்கக் கூடியவனுகின் ருன். உள்ளது ஒன்றே, அது ஒன்றே உண்மை; அதுவே கடவுள், —என்று போதிக்கின்றது வேதாந்தம். கால தேச நிமித்தாதிகளே யெல்லாம் கடந்து நிற்பது அது. இறைவனுக்கு நாம் ஒருபோதும் இலக்கணம் வரையறுக்க இயலாது. அவர் அதீத சச்சிதானந்த மெய்ப் பொருள் என்பதைத் தவிர வேறெதும் அவரைப்பற்றிக் கூற முடியாது. அவர் ஒரே பொருள். யாவற்றுக்குமே அவர்தான் மெய்ப்பொருள். உம்மிடமும் என்னிடமும் சுவர் முதலிய எவ்விடமும் அவர்தான் மெய்ப்பொருள். நம்முடைய எல்லா அறிவும் சார்ந்திருப்பது அவரது அறிவையே. நம்முடைய ஆனந்தம் அவருடைய ஆனந்தத்தையே சார்ந்துள்ளது. அவரே மெய்ப்பொருள். இதை மனிதன் உணரும்போதே, அவன் ''ஒரே மெய்ப்பொருள் நானே. ஏனெனில் நானே அவன். என்னுள் உண்மையாவது அவனேயாம்'' என்பதை அறிகிருன். எனவே ஒருவன் முழுத் தூய்மையும் நன்மையும் பெற்றுத் தூலத்தன்மைக்கு அப்பாற் செல்வானுயின், அவன் இயேசுநாதர் கண்டவாறு ''யானும் என் தந்தையும் ஏகமேயாம்'' என்பதை அறிகின்ருன். எவருக்காகவும் காத்திருக்கும் பொறுமையுள்ளவன் வேதாந்தி. நீவிர் எந்நிலையில் இருப்பினும் ''நானும் என் தந்தையும் ஏகமே ஆவோம்'' என்பதே உயர்வற உயர்ந்த நிலை. இதை உணருங் கள். இந்நிலையை அடைதற்குப் பிரதிமைகள் உதவுமானுல் அவற்றை ஏற்போம். பெரியார் ஒருவரை வழிபடுவது உதவு மாயின் அவரை வழிபடுக. முகம்மது நபியை வழிபடுவது உமக்குத் துணைசெய்யுமாயின் அவரை வழிபடுக. சிரத்தை யொன்றே வேண்டுவது. உம்மிடம் சிரத்தையிருப்பின் நீர் இலட்சியத்தை அடைவது உறுதி என வேதாந்தம் உரைக்கின்றது. எஞ்சுவார் எவரும் இரார். உண்மை அனைத்தும் அடங்கப் பெற்றுள்ள உமது நெஞ்சம் பகுதிபகுதியாகத் தானே விரிய, இறுதியில் ''நானும் என் தந்தையும் ஏகமே'' என்பதை உணர்வீர். இது உண்மை. முக்தி என்பது யாது? இறைவனேடு வாழ்வதே. எங்கு? எவ்விடத்திலாயினும் சரி. இங்கே, இப்போதே. அகண்டமான காலத்தில் ஒரு கணம் வேறு எதையும் போன்றே நல்லதாகும். இது வேதங்களின் பழைய கொள்கையாகும். இது மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. பௌத் தம் இந்தியாவிலே மறைந்து வெளியேறிற்று. மக்களுடைய தயையிலும் நாட்டு விலங்குகள் முதலியவற்றிலும் பௌத்தம் தனது முத்திரையை விட்டுச் சென்றது. வேதாந்தம் இந்தியாவின் ஒரு கோடியினின்று மறுகோடிவரையிலும் மீண்டும் வென்று வருகின்றது.

பொருட்குறிப்பகராதி

அ

அகண்டானந்தர் 74, 244
அகலியா பாய் 383
அசோகர் 412
புத்தமதத்தைத் தழுவியது 413, 414
மிருகங்களுக்கு வைத்தியசாலை 414
அதிகாரம் :
புரோகிதரிடம் 395-96.
க்ஷத்திரியரிடம் 399
அதுல் பாபு 273
அநேக ஜன்ம 38
அப்யாசேநது கௌந்தேய வைராக்யேனச க்ருஹ்யதே (கீதை) 180
அபரோக்ஷானுபூதி 104
அமரநாத் 92
அயமாத்மா பிரம்ம 105
அயமேவ ஹி தே பந்தா 103
அருந்ததி 49
அலெக்ஸாண்டர் 412
அவதார புருஷர்கள் (இவர்களைப் பற்றிய விளக்கம்) 102
அவாங் மனஸ கோசரம் 83
அன்னி பெசண்டு 317
அணு வ்ருத்தி சப்தாத் 102
அனுமன் 218
அஷ்டவிம்சதி தத்துவம் 223
அஷ்டாத்தியாயி 99

ஆ

ஆசண்டாளப் பிரதிஹதராய 95
ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதாயச 57, 64, 113
ஆத்மானம் ரதினம் 83
ஆரியர் 399, 400
ஆஹார சுத்தௌ சத்வ சுத்தி 155

இ

இயேசுநாதர் 143, 335, 409, 410
இந்து மதத்தைப் பற்றி 394, 419
இரகு நந்தனர் 27, 223
இரகு வமிசம் 44
இராமகிருஷ்ண சங்கம் 32
இராமகிருஷ்ணர் :
அவதாரத்தின் உத்தேசம் 18, 95 191, 196, 255, 262, 270, 281.
அவதார புருஷரென பிரசாரம் செய்யாததேன்? 20, 25
அவரது நாமத்தின் கீழ் எல்லோரையும் ஒன்று கூட்டல் 232
ஆண்டவன் அருளைப் பெற்றவர் இங்கு வருவர் 37, 246
ஆலயத்தின் அமைப்பு பற்றி 190 191

இரண்டு வித சமாதியைக் காணல் 239
இராமரும், கிருஷ்ணரும் 35
உபதேசங்கள் : உண்மை மகன் 97 ; பெண்கள் உலக அன்னையின் அம்சம் 205 ; இயக்க, ஸ்திர நிலைகளைப் பற்றி 215 ; அதிகார பட்டயம் தேவை 221 ; மனிதரை புழுக்களாக மதித்தல் 236 ; கொல்லைப்புர வழியும் உண்டு 261 ; குழந்தைத் தன்மை 36 ; '' நான் '' ஐப் பற்றி 30 ; பயன் தன்மைக்கேற்ப வேறுபடும் 24
எல்லா நிறைவுகளையும் உடைய மனிதர் 35, 63, 229, 247, 248
ஒருவனுடைய ஆன்மீக வாழ்க்கையையும் நிலைகுலைக்க வில்லை 38
கதைகள் மூலம் நீதி புகட்டல் : சக்கிலியக் கூலிக்காரன் 129 ; பசுவைக் கொன்ற பாவம் 89, பஞ்சாங்கத்தைப் பிழிந்தால் தண்ணீர் வருமா ? 196, கிரீஷ் பாபுவின் பக்தி 53, 256.
கொள்கைகளை : பிரசாரித்தல் 242, 249 ; விசாரித்துத் தெளிதல் 54, 241.
சந்நியாசத்தைப் பற்றி 59 ; அதன் நோக்கமும் பெருமையும் 130, 131, 132
சமயச் சாதனைகளில் கருத்தற்றிருப்போரை இழித்துரைப்பார் 179 ;
சாதனை செய்த இடம் 22.
சித்திகளைப் பற்றி 69
தியாகத்தைப் பற்றி 233, 234
திருவுருவத்தை நிறுவல் (ராமகிருஷ்ணபுரம், ஹௌரா) 65
தெய்வ அருள் 227, 253
நாகமகாசயரைப் பற்றி 103, 148 244
பணித் திட்டத்தைப் பற்றி 32-34
பக்தர் 1, 22, 171, 202, 226, 245, 246, 247
பதினெட்டு வகை பத்தியின் பூரணத்துவம் 19
பிறந்த தின விழா 21, 23, 24, 71, 72, 73, 74, 225
புது மடத்தின் பிரதிஷ்டை 77-80
பெண்ணாசை, பொன்னாசைகளின் துறவைக் குறித்து 86, 139, 149, 150

பெருமை 34, 63, 77, 96, 141, 178, 226, 229, 235, 243, 264, 265, 273, 337
போதனு முறை மிகச் சிறப்பு வாய்ந்தது 132
மாக்ஸ் முல்லரின் அன்பு 49
இராமகிருஷ்ணனந்தர் 61, 234-35
இராமகிருஷ்ண பக்த மான்மியம் 245
இராமசந்திரர் 141, 142, 143
இராமானுசர் 82,155 247, 367
இளவரசி 382

ஈ

ஈசுவர சந்திர வித்தியாசாகர் 282
ஈசுவர நிராகார 282

உ

உத்திஷ்டத ஜாக்ரத பிராப்ய வரான் நிபோதத 84, 113
உத்போதன் 96, 129, 132

ஏ

ஏகமேவாத்வயம் பிரம்ம நேஹ நானஸ்தி கிஞ்சன 71
ஏகாக்கிரதா (கடவல்லி) 141
எட்வின் ஆர்னல்ட் 388

க்

க்ருகேஷு பஞ்சேந்திரிய நிக்ரகஸ் தப : 149
க்வ கதம் கேன வா நீதம் 214 (விவேக சூடாமணி)

க

கடோபநிஷத் (அதன் அழகு ; போதனை மனப்பாடம் பண்ணுதற் குரியது) 11,84
கர்மண் யகர்மய: பச்யேத் 258 (கீதை 4-18)
கர்னல் ஆல்காட்டு 317
கல்வியைப்பற்றி 109-112
கனு 45

கா

காம்யானும் கர்மணும் ந்யாஸம் ஸந்யாஸம் கவயோ விது: (கீதை) 58
கார்கி 45, 204
காலேனுத்மனி விந்ததி 12, 30, 226 239
காலோஹ்யயம் நிரவதிர் விபுலாச பிருத்வீ (பவபூதி) 161
காளிதாசன்—அளகாபுரியின் வர்ணனை, அதன்கண் திகழும் சுகானுபவங்கள் (மேக சந்தேசம்) 15, 44

கி

கிரிஹ்ய சூத்திரம் 27
கிரீஷ் சந்திர கோஷர் 22, 32, 38. 53-56, 151, 211, 256, 272
கிருஷ்ணன் 83, 137, 141-143, 185, 257, 258

கீ

கீத கோவிந்தம் (ஜய தேவர் இயற்றியது) 13
கீதை (பயனை விரும்பாமல் கருமம் செய்தல்) 164, 165, 183, 185

கு

குசலம் ராமராமேதி 73
குட்வின் (சுவாமியின் மேல்நாட்டுச் சீடர்) 11,376
குரு கோவிந்த சிங் (இவருடைய தியாகம், தவம், தைரியம், முயற்சி) 66.
குலம் பவித்ரம் ஜனனீ கிருதார்த்தா (நல்ல பிள்ளையைப் பெற்ற தாய் உயர்வடைதல்) 57

கே

கேசப் சந்திர ஸென் (குருநாதரின் அருள்) 353

கோ

கோபிலர் (கிரிஹ்ய சூத்திர ஆசிரியர், உபவீதம் நூலினுற் செய்யப்பட்டது என்ற குறிப்புக் காணப்படவில்லை) 27
கோஷ் 266

கௌ

கௌரங்கர் (சைதன்னியர்) 143

ச

சங்கமித்திரை 383
சங்கரர் 81, 83, 104 (அப்ரோக்ஷானுபூதி) 118 (பலவீனனுக்கும் பொருள்) 138, 145 155, 164 183, 195 197 (குணங்களைக் கடந்தவனுக்கு) 208 (கருமத்தைப்பற்றி) 247, 354 (மாயை பற்றிய விளக்கம்) 367, 418 (சங்கரர் சீர்திருத்தக்காரர்)
சத்த சத்திப்பிரகாசிகை (ஒரு நியாய நூல், சத்தங்களைப்பற்றிய விளக்கம்) 53
சதானந்தர் 55

சந்நியாச வாழ்க்கையின் தன்மை 395, 396.
சரேன் மதுகரீம் வ்ருத்தி 196
சன்ஞப்ய ஸன்ஞப் 126

சா

சாகுந்தலம் (வயம் தத்வான் வேஷாத்——நாக——மஹாசயருக்கு அனுப்பப்பட்ட வாக்கியம்) 2, 382
சாங்கிய தரிசனம் (பரிணும வாதம்) 114
சாந்தோக்கியம் (ஆஹார சுத்தி) 155
சாயனர் 48 (மாக்ஸ் முல்லராய் அவதாரம் செய்தல்) 49
சாரதா தேவியார் 199
சாரதானந்தர் 244
சாவித்திரி (இவளால் நாட்டிற்குப் பெருமை) 45

சி

சிஷ்யர் (அருளைக் குறித்து ஏதாவது விதி உண்டா?) 36
அவருக்கு சுவாமியின் அபயம் 2
ஆகார சுத்தியைப்பற்றி வினவுதல் 155
இந்தக் காலத்திற்குரிய வழிபாடு 142
இராமகிருஷ்ண பரம ஹம்ஸர் பரிபூரண பிரம்மமா? 34, 35
சடப் பொருளின் இலக்கணம் பற்றி உசாவுதல் 9
சந்நியாசம் பெருது பிரம்ம ஞானம் அடைதல் இயலாதா? 178, 179
சிரத்தை பெற ஆசீர்வாதம் வேண்டலும் அதற்குரிய பதிலும், 11, 12
தியானத்தைப் பற்றி உசாவுதல் 40, 41
திருவிழாக்களைப் பற்றியும் கொண்டாட்டங்களைப் பற்றியும் கேட்டல் 23, 24
நம் நாட்டின் நிலைமை பற்றி உசாவுதல் 134
நாடு இழிவானதற்குக் காரணம் யாதோ? 159
நான் என்பதைப் பற்றிய சர்ச்சை 29
பத்தி ஞான மார்க்கம் 138, 139
பூதங்களையும் பேய்களையும் கண்டதுண்டா? 94
பெண் கல்வியைப்பற்றி உசாவுதல் 43, 44
பெண்கள் பந்தத்திற்கு ஏதுவாயிருக்கிருர்கள் 200
பொது மக்களை எழுப்பும் முறை கேட்டல் 9
முப்புரி நூலை அணியும் வழக்கத்தைப் பற்றி 27
மேலை நாட்டவரின் ரஜோகுண மிகுதி பற்றிக் கேட்டல் 21—
ராஜயோகம் பத்தியோகம்—இவற்றைப் பற்றி உசாவுதல் 183,

சீ

சீதை—(அவளுடைய சிறப்பு) 382

சு

சுத்தானந்தர் (தியானத்தின் தன்மையைப் பற்றி உசாவுதல்) 28, 40
சுபோதானந்தர் 244
சுரேந்திரநாத் சென் 290

சூ

சூச்சுந்தரி வத காவியம் 211

செ

செயின்ட் ஆவெஸ்தா 26

சை

சைதன்னியர் 82, 247, 300, 301 304, 367

டா

டார்வின் 114 (பரிணும வாதம்) 114, 315

த

த்ருணுதபி 38
த்வமஸி பயஸா மர்ணவஇவ (சிவ மஹிம்ஞஸ்தவம்) 26
தத்ரகோ மோஹ : 29
தத்வமஸி 186
தயானந்த சரஸ்வதி 380
தரிசனி (பத்திரிகை ஆசிரியர் நரேந்திரநாத சேனர்) 2
தவத்தின் மகிமை 75, 76, 77

தி

திரிகுணுதீதர் 129, 131, 244

து

துரியானந்தர் 1, 244
துறவு 151

தெ

தென்னிசன் 436

தே

தேஹஸ்தோ அபி ந தேஹஸ்த : 186

ந

நகர்மணா நப்ரஜயா 57
நசிகேதஸ் (கடோபநிஷத்—அவனுடைய சிரத்தை) 11, 141
நரேந்திரநாத சேனர் 2
நரேந்திரபாபு (சுவாமியிடம் இங்கிலாந்தையும் அமெரிக்காவையும் பற்றி வினவல்) 3, 4, 5
நளினீ தள 113
நன்மை புரிவோன் 136-137
நஹி கல்யாண கிருத் (கீதை) 122

நா

நாகமஹாசயர் (விவேகானந்தர் அவரைப் புகழ்தல்) 2
(அவருக்கனுப்பித்த சுலோகம்) 2, 24, 34, 90, 91, 174, 175, 194
நாயமாத்மா 117, 129
நான்கு வகைச் சந்நியாசங்கள் 59
நான்யப் பந்தா 15, 48, 58, 123

நி

நிர்மலானந்தர் 176
நிவ்ருத்த ராகஸ்ய க்ருகம் தபோவனம் 149
நிரஞ்சனனந்தர் 24 199
நிர்விகல்ப சமாதி 19
நிவேதிதை 114

நை

நைஷாதர்க்கேண 129

ப

ப்ரக்ருத்யா பூராத் 114
பசு பரிபாலன சபை, அதன் பிரசாரகர் 5,6
பஞ்சதசி 104
பத்தொன்பதாம் ஆண்டு பத்திரிகை 353
பதஞ்சலி முனிவர் 114
பத்தி பதத்ரே 13
பண்டிதானும் 17
பரத்சந்திரர் 211
பரிணும வாதம் 114
பயாத் 98
பஹு ஜன ஹிதாய 81

பா

பாணினி 99
பாவசமாதி 19

பி

பித்யதே ஹ்ருதய க்ரந்தி: 12, 126
பிரகலாதன் 48
பிரம்ம வேத பிரம்மைவ 185
பிரம்மானந்தர் 132
பிரியநாதசிங்கர் 254
பிரியநாத் முகோபாத்யாயர் 1
பிரிஷ்டா 384
பிரேமானந்தர் 105

பு

புத்தர் : 60, 61, 62, 82, 83, 86, 143, 247, 257, 322 381 அஞ்ஞேய வாதி 406, அற்பக்குப்பையற்றவர் 408 ஆன்மாவை மறுத்தார் 410-411, இறுதிமொழி 411, ஐந்த இளைஞர்களுக்கு புத்தி புகட்டிய விதம் 406-408 கொள்கைகள் 406 சந்தர் உணவை உட்கொள்ள 409 சரித்திர புருஷர் 404-5. சுய நலமற்றவர் 411-12, தத்துவ 410-11, தேவர்கள் யாகத்திற் இடம் கேட்டல் 405 பெரு தூய்மையுற்றவர் 405-6, மரண தருவாய் 409-10.

பௌ

பௌத்த மதம் :
அதன் வீழ்ச்சிக்குக் காரணம் 41 418 சங்கத்தைப்பற்றி 409 மட லயங்கள் 416 மூன்று பொருள்க —புத்தர், தருமம், சங்கம் 416 வாளால் மதமாற்றம் செய்யப் வில்லை 416

பூ

பூய ஏவாபி வர்த்ததே 149

ம

மக்கட் சேவை 231, 232
மகாபாரதம் 60
மகாவீரர் 141, 142
மகேந்திரநாத குத்தர் 74
மத்துவர் 365, 367
மத்யே வாமன 83

மன்மதநாதர் 70
மனுதர்ம சாத்திரம் 60, 153, 159, 160
மஹேந்திர மஹாசயர் 292

மா

மாக்ஸ்முல்லர் 48, 50, 353
மாதாஜி 44, 45

மி

மிதாக்ஷரர் 159
மில் 296, 315
மிஸ் முல்லர் 15

மு

முக்தாபிமானி 98

மூ

மூகாஸ் வாதனவத் 55

மே

மேகநாத வதம் 212

மை

மைக்கேல் மதுசூதனன் 211

ய

யதஹரேவ 58, 150
யம் யம் லோகம் 42

யா

யாக்ஞவல்கர் 157, 160

யு

யுவைவ தர்மசீல 58

யோ

யோகானந்தர் 31, 32, 33, 34, 48 69

ர

ரதேச வாமனம் 83
ரநாத பாபு (ஓவியக்கலை) 186-190
ரயிட் ஜே. எச் 309

ரா

ராஜா ராதாகாந்த தேவர் 263

ரி

ரிஷீனும் புனராத் யானும் 165

ரு

ருட்யார்ட் கிப்ளிங் 324, 326

லீ

லீலாவதி 45

லோ

லோகவத்து 37 186

வ

வசிஷ்டர் 49
வேதம் 390-93

வி

விசுவாமித்திரர் 112
விஞ்ஞாதாரமரே 30
வித்யுத் (மேக சந்தேசம்) 14
விரோசனன் 4
விவிலிய நூல் 25
விவேக சூடாமணி : மா பைஷ்ட 2
விவேகானந்தர் :
அமெரிக்கப் பெண்கள் 87, 88
அருளைப் பற்றி 36
அனுமனை லட்சியமாகக் கொள்ளுதல் 218
ஆகார சுத்தி 155
ஆங்கில ஆட்சி 267
ஆங்கிலேயரும் அமெரிக்கரும் 3
ஆன்ம ஞானமும் முத்தியும் 13
ஆன்மிகச் செல்வம் 268
இந்துக்களின் கரும விசாரணை 7
இந்துக்களின் மயக்கம் விழிப்பு 9, 10
இயற்கையை எதிர்க்கும் அறிவுடைய பொருள் 9
இராமகிருஷ்ணர் இதயத்தைத் தொடல் 145
இராமகிருஷ்ணர் எல்லாச் சத்திகளையும் அளித்தல் 192,
இளம்பெண் மணம் 298
உடையைப்பற்றி 251
உணர்ச்சி ததும்பும் உள்ளம் 53
ஏழை மக்கள் 231-32
ஓவியக் கலையைப் பற்றிய சர்ச்சை 187—190
கடோபநிஷத்தைப் பற்றிப் பேசுதல் 11
கலப்பு மணத்தைப்பற்றி 296, 297

விவேகானந்தர் :
கிரீட்டு அருகே கண்ட கனவு 305
கீதாசாரியன் கண்ணன் இக்காலத்திற்குத் தேவை; வேணுகோபாலனல்ல 14, 15
கீழைத் தேசம்—மேலைத் தேசம்
சங்கீதம் 273, 274
சங்கரரைப்பற்றி 81
சத்தியை மாற்றல் (குருதேவர்) 192
சந்நியாசத்தின் மகிமை 169, 179
சந்நியாசம் விரும்பியவர் 56
சமய சாதனைகளை எறிந்துவிடுங்கள் 107
சமய போதனையால் விளையும் நன்மை 34
சமயம் 315
சமாதி நிலைபெற்றது 10
சரணாகதியைப் பற்றி 2
சாயனர் கொள்கை
தல் 50
சித்திகள் 68, 69
சித்திர விளக்கம்
சிறந்தவரெனல் 5
சுய சரிதம் 314
ஜப்பானியரைப்
ஜய தேவரைப்
துறவைப் பற்றி
துறவு பூண்டார்
237
நன்மை தீமைக்
தல் 294
நாகரிகத்திற்கு வி
நெறியிழந்த பெ
பல்கலைக்கழகத்
277
பிராம்மணர் என்ற சொல்லிற்கு விளக்கம் 287
பூதங்கள் பேய்கள் 94
பெண்கல்வி 44, 45, 46, 47, 200, 201, 202, 204, 205, 206

விவேகானந்தர் :
பெரியதோ றம் 55
வறுமையா டும் நாட்டிற்கு 106, 107.
வீர வாழ்வைப்பற்றிய செய்தி 88, 89

வீ

வீராணுமேவ 180

ஸ

ஸகஜம் கர்ம கௌந்தேய 111
ஸவிகல்ப சமாதி 239

ஸோ

ஹம் 99

ஹ

6

ஹி

ஹெ

பென்ஸர் 296

ஜ

ஜனக மன்னர் 198, 382
ஜாதியைப் பற்றி 392 ஜாதிக் கலப்பு 417-18 ஜாதியிலுள்ள தீங்கு 394
ஜைனர்களைப் பற்றி 400, கருத்து வேறுபாடு 401, 402; தவநெறி
03.